

கிறித்துவ வரலாற்றில்

மறைக்கப்பட்டனவும் மாற்றப்பட்டனவும்...

உலகளாவிய தாக்கமும்

உமரி
காசிவேலு

கிறித்துவ வரலாற்றில்

மறைக்கப்பட்டனவும் மாற்றப்பட்டனவும்...

உலகளாவிய தாக்கமும்

உமரி காசிவேலு

வர்ஷன் பிரசுரம்
33, ரெங்கன் தெரு,
தி. நகர், சென்னை – 600 017.
போன் : 24361141 / 24340599

lkm-F1

முதற் பதிப்பு : ஜனவரி 2015
இரண்டாம் பதிப்பு : ஜூலை 2015

© உரிமை : ஆசிரியருக்கு

ISBN 978-81-930624-1-8

விலை : ரூ.350/-

No part of this publication may be published or transmitted in any form without the written permission of the author.

Printed by : LKM Computer Printers, Chennai-17
Phone : 9940682929

சமர்ப்பணம்

இந்நூல் எனது தந்தையார், தூத்துக்குடி மாவட்டம் உமரிக்காடு **சத்திரியர் ஆ. சாமிநாடார்** (1899-1954), **தாயார் பாப்பாத்தி அம்மாள்** ஆகியோரை நினைவிற்கொண்டு வெளியிடப் படுகின்றது.

நன்றி

இந்நூல் சிறப்பாக வெளிவரத் திட்ட ஒருங்கிணைப்பாளராகவும் கிரியா ஊக்கியாகவும் செயல்பட்டு வரும் திருச்சி G.P. சீனிவாசனுக்கு உளமார்ந்த நன்றி. தங்களது கட்டுரைகளைக் கையாள அனுமதித்த சிவகாசி குருகுலத்தென்றல் டாக்டர் சிவசக்திபாலன் MBBS, DCCH, துணைநூல்கள் வழங்கி உதவிய தஞ்சாவூர் சைவப் பேரறிஞர் T.N. இராமச்சந்திரன்; ஆய்விற்கு உதவிய வரலாற்று அறிஞர் சென்னை கே.வி. ராமகிருஷ்ணாராவ்; கிரேக்க பைபிள் அறிஞர் தேவப்பிரியா சென்னை; தமிழ்ப் பைபிள் அறிஞர் அம்மாண்டிவிளை செண்பகப்பெருமாள்; அச்சுக்கு முந்தைய பிரதிகளைச் சரிபார்த்த தமிழ் அறிஞர் சந்தக்கவி ஸ்ரீரங்கம் இராமசாமி ஆகியோருக்கு எனது உளமார்ந்த நன்றி.

இப்புத்தகத்தின் உட்கருத்துக்கள் பல விவேகானந்த கேந்திரபிரகாசம் பத்திரிக்கை வால்யும் 35, பாகம் 1லிருந்து தழுவப்பட்டுள்ளது. இதிலுள்ள படங்கள் “Googleimages” எனும் வலைத்தளத்திலுருந்தும் “en.wikipedia” என்பதிலிருந்தும் எடுக்கப்பட்டுள்ளன.

உமரிக்காடு
தூத்துக்குடி மாவட்டம்

சா. காசிவேலு
செல் : 9894402545

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம்

காஞ்சிபுரம்

05.09.2014

பூஜ்யஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

வாழ்த்து

அன்றைய முனிவர்களும், ஆச்சாரியர்களும், மனிதர்கள் ஒற்றுமையாகவும், அமைதியாகவும், சுபிட்சமாக வாழ வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மார்க்கம்தான் பின்னாளில் "மதம்" என்று உறுமாறிவிட்டது. அதுவே பிற்காலத்தில் அரசியலாகவும் மாறி மனித சமுதாயத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தில் உமரி காசிவேலு அவர்கள் வரலாற்று ரீதியாக மதத்தினால் ஏற்பட்டுள்ள தீமைகளை உணரும் வண்ணம் அழகாக எழுதியிருக்கிறார். இதைப் படிக்கும் மக்கள் மனம் மாறி அமைதியடைய வேண்டும் என்று ஆசிர்வதிக்கிறேன்.

பூஜ்ய ஸ்வாமி தயானந்த சரஸ்வதி

ஆர்ஷ வித்யா குருகுலம்

ஆனை கட்டி
06.11.2014

ஆசியுரை

உமரி காசிவேலு செய்துள்ள “கிறித்துவ வரலாறு – மறைக்கப்பட்டனவும், மாற்றப்பட்டனவும்... உலகளாவிய தாக்கமும்" எனும் வரலாற்று தொகுப்பு ஏடு, சாதாரணமாக மக்கள் பலர் தெரிந்திடாத சரித்திர உண்மைகளை கோர்வையாக வெளிக்கொணர்ந்துள்ளது. இந்நூல் சமய ஒப்பாய்வுக்கும், மறு ஆய்விற்கும் அடித்தளம் அமைப்பதாகவம், மற்றும் படிப்போரின் சிந்தனையை தூண்டுவதாகவும், ஆக்கமிக்க புதிய சிந்தனைகளை தரவலல்லதாகவும் விளங்குகின்றது. இதனை படிப்போர் “சீர்தூக்கும் கோல்போல்" அமைந்து பொய் நெறிகளை புறக்கணித்து, செந்நெறியாம் மெய்நெறி உணர்ந்து நடந்திடுக.

ஓம் சாந்தி

உ

Siva Siva

SRI KASI MUTT

"Kailaimaamunivar" Sri-La-Sri Kasivasi
MUTHUKUMARASWAMI THAMBIRAN SWAMIGAL,
Head of Sri Kasi Mutt, Thiruppanandal - 612 504,
Thanjavur District, Tamil Nadu.

வாழ்த்துரை

2000 ஆண்டுகளில் இந்து சமயம், பல இடையூறுகளை எதிர்கொண்டுள்ளது. சமணமும் சாக்கியமும் மன்னர்களைத் தங்கள் கைக்குள் போட்டுக் கொண்டு இச்சமயத்தை அழிக்க முயன்றன. மன்னன் எவ்வழி அவ்வழியன்றோ, ஆயினும் இறைவன் திருவருளால், மூவர் முதலிகளாகிய ஞானசம்பந்தர், அப்பர் சுந்தரர் ஆகியோரைக் கொண்டு சைவம் மீண்டும் தழைத்தது. சமண சமயத்தின் செல்வாக்கால், மேல்தட்டு மக்கள், சைவஉணவு உண்ணும் பழக்கத்தை மேற்கொண்டனர். எனவே உணவுப் பழக்கத்தில், சமுதாயம் இருவேறு நிலைகளைப் பெற்றது.

கிறிஸ்துவ ஆதிக்கம், தாழ்த்தப்பட்ட / ஒடுக்கப் பட்டவர்களைக் குறிவைத்து, சேவை என்ற போர்வையில் மதமாற்றம் நிகழ்த்தத் துவங்கியது. கல்வி, சுகாதாரம், ஆகிய துறைகளில் அயல்நாட்டுப் பொருளாதாரப் பின்புலத்தில் கிடைத்த சில சலுகைகளில் மயங்கி பின்தங்கிய மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவினர்.

மதமாற்றம் மட்டுமே மனமாற்றத்தை ஏற்படுத்தாது. தாய், தாய்மொழி போலச் சமயமும் பிறப்பால் ஒருவருக்கு அமைவது. அதை மாற்றிக் கொள்வது என்பது கூடாத ஒன்று. குறிப்பாகக் கிறிஸ்துவர்கள் செய்யும் மதமாற்றம். நூற்றுக்கணக்கான பிரிவுகளைக் கொண்ட அவர்களது மதக்கருத்துக்களின்

உண்மை வரலாற்றை மறைத்தும், மாற்றியும் செய்யும் திட்டமிட்ட சதியினால் என்பது, 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற வள்ளுவத்தை உணர்ந்தவர்கட்குப் புலனாகும்.

இந்து மக்களிடம் ஒற்றுமையின்மையை ஏற்படுத்த இந்திய, சமய, சமுதாய, மொழி வரலாறுகள் திருத்தியும் மாற்றியும் எழுதப்பட்டுள்ள உண்மையை, இணைய தளம் போன்ற தொழில் நுட்ப வளர்ச்சி மூலம் ஆதாரங்களைத் திரட்டி நூலாகப் படைத்துள்ளார் அன்பர் உமரி காசிவேலு. இந்துக்களை விழிப்படையச் செய்ய, இன்றைய நிலையில் மிகவும் அவசியத் தேவையாக உள்ள இந்த நூலைப் படைக்கும் இவர்தம் முயற்சி பாராட்டத்தக்கது.

நூல்வெளியீட்டு விழாச் சிறந்திடவும், நூலாசிரியரின் சமய, சமுதாய உணர்வுகள் தொடர்ந்து மிளிர்ந்து, அதன்வழி நம்மக்கள் 'நெறி நின்று ஒழுகி' இன்புற்றிடவும் நம் செந்திற்பதி புரக்கும் செவ்வேட் பரமனின் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்

சிவ சிவ

பாராட்டுரை

''பாரதத்தின் உயிர்நாடி ஆன்மீகம்'' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஆன்மீகம் அழிந்தால் பாரதம் அழிந்துவிடும். ஆனால் அவ்வாறு நடைபெறாது. ஏனெனில் பாரதம் அழிந்தால் உலகே அழிந்துவிடும்.

'உலகில் சாந்தியையும், சமாதானத்தையும் எடுத்துக்கூற தகுதியுடைய நாடு பாரதம் மட்டுமே. எனவே பாரதம் அழிந்தால் உலகில் சாந்தியும், சமாதானமும் இன்றி உலகு அழியும் அபாயம் உள்ளது' என்பதை உணர்த்துகிறார் சுவாமி விவேகானந்தர்.

எந்த வடிவிலும், எந்தப் பெயரிலும் இறைவனை வழிபடலாம் என்ற மிகப்பெரிய சமரச, பரந்த கொள்கையை பாரதம்தான் போதிக்கிறது.

ஒரே உருவம், ஒரே வடிவம் என்ற மேற்கத்திய கொள்கை சண்டையையே உண்டுபண்ணும். இதை நாம் இன்று கண்கூடாகப் பார்க்கிறோம்.

முஸ்லீம் நாடுகளில் அவர்களில் ஒரு பிரிவினரே இன்னொரு பிரிவினரைக் குண்டு வீசிக் கொல்வது தினசரி செய்தியாகின்றது.

அதுபோன்றே கிறிஸ்தவ, முஸ்லீம் பயங்கரவாதம் பாலஸ்தீனம், இஸ்ரேல், ஆப்கான், சிரியா... என எங்கும் கலவரம், போர்....

ஒரு உருவம், ஒரு வடிவம்தான் இறைவனுக்கு என்பது இறைவனைச் சிறுமைப்படுத்துவது.

மேலும், நான் நம்பும் வடிவம், உருவம், கடவுள் கொள்கை மட்டுமே உண்மை என வெறி கொண்டலைவது சிறுபிள்ளைத்தனம்.

இத்தகைய போதனைகளோடு பாரதத்தில் புகுந்த மேற்கத்திய மதங்களாலேயே பாரதத்திற்குக் கேடு,

அமைதியின்மை. இதை நாம் உணர அம்மதங்களைக் குறித்த சரியான அறிவு நமக்குத் தேவை.

அதைப் பூர்த்தி செய்யும் வண்ணம் திரு. உமரி காசிவேலு அவர்கள் ''கிறிஸ்துவ வரலாற்றில் மறைக்கப்பட்டனவும், மாற்றப்பட்டனவும்... உலகளாவிய தாக்கமும்'' மூலம் பல உண்மைகளை உணர்த்த முயற்சிக்கிறார். இம்முயற்சி பாராட்டிற்குரியது.

மேலும் இதுபோன்ற பல நூல்கள் இவர் முயற்சியில் வெளிவரவும், இந்நூலை அனைவரும் வாங்கிப் படித்து உய்வடையவும் பரம்பொருள் பேருதவிபுரிய பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ குருமஹராஜ் பணியில்
சுவாமி சைதன்யானந்தர்

அணிந்துரை

உமரி காசிவேலு அவர்கள் தொகுத்தளித்துள்ள “கிறித்துவ வரலாற்றில் மறைக்கப்பட்டனவும், மாற்றப் பட்டனவும்... உலகளாவிய தாக்கமும்” எனும் நூலுக்குப் பாராட்டுரையான அணிந்துரை வழங்குவதற்குப் பெருமைப்படுகிறேன்.

தகுந்த நேரத்தில் வெளிவரும் நூலிது. உறங்கிக் கொண்டிருந்த இந்தியர்கள் விழிக்கத் தொடங்கியிருக்கும் நேரத்தில் வெளிவருவதால் முக்கியத்துவம் வாய்ந்தது.

வெளிநாட்டுப் பேரறிஞர்கள் விளக்கமாக, ஆதாரங்களுடன் எழுதிய நூல்களிலிருந்து சான்றுகளைத் திரட்டித் தொகுக்கப் பட்ட, சத்தியமான நூலிது மறுக்க முடியாத நூலிது.

குழப்பங்கள் நிறைந்த, பொய்கள் மிகுந்த, முரண்பட்ட, நீண்டகாலக் கிறித்துவ வரலாற்றைக், குழப்பமின்றித் தெளிவாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் தமிழில் எழுதப்பட்ட நூலிது.

அன்பைப் போதிக்கிறேன் என்று இடைவிடாமல் கூறி, உலகில் பெரும்பாலான நாடுகளிலுள்ள அப்பாவியான, நல்ல மனிதர்களின் அழிவுக்குக் காரணமான அன்பற்ற மதத்தைப் பற்றிய சம்மட்டியடியான சான்றுகளுடன் கூடிய நூலிது.

இத்தகைய தீவிர மதவாதிகளுக்குத் துணை போகும், தமிழகத்திலுள்ள சிலரின் முகத்தை வெளிக் காட்டிய நூலிது.

சான்றுகள் சில:

1. தாமஸ் எனும் யேசுநாதரின் சீடர் இந்தியாவிற்கு வந்து திருவள்ளுவரைத் தம் சீடராக்கினார் என்பது.

2. தாமஸ் கதையைக் கூறி மதமாற்றம் செய்திடத் திரைப்படம் தயாரிக்கும் முயற்சி. படத்திற்கான கிறித்துவ முறைப்படி பூஜை ஜூலை 3, 2008ல் கோலாகலமாக சாந்தோம் சர்ச்சில் நடைபெற்றது. அந்நிகழ்வில் அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும் பிரமுகர்கள் பலரும், கிறித்துவத்தின்

அருள்மகன் பீட்டர் அல்போன்ஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

3. ஒரு மதம்மாறிய கிறித்துவர் சமீபத்தில் “திருவள்ளுவர் ஒரு கிறித்துவரே” எனும் நூலை எழுதி வெளியிட்டார். இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியவர் அன்றைய தமிழக முதல்வர் கலைஞர். திருவள்ளுவரை, அவர் இறந்து 2000ம் ஆண்டிற்குப் பின்னர் மதம்மாற்றம் செய்துள்ளதைத், தமிழ் ஆர்வலர்கள் எவரும் எதிர்க்கவில்லை.

4. இந்துக்களைத் “திருடன்” எனக் கலைஞர் அவர்கள் சிலகாலத்திற்கு முன் நடைபெற்ற கிறித்தவ நிகழ்ச்சியின்போது குறிப்பிட்டார். அவ்வமயம் அந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பெருமக்களும், சமயகுருமார்களும் இக்கொடுமையான சொல்லுக்குத் தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை.

5. யேசு அழைக்கிறார் ஜெபக்கூட்டத்தின் நிறுவனர் தலைவர், சகோதரர் தினகரன் மரணமுற்றபோது மருத்துவ மனைக்குச் சென்று முதலில் மரியாதை செய்தவர் கலைஞர் அவர்களே!

6. தமிழக அரசியல்வாதிகள் பலர், இவ்வாறு கிறித்துவ சமயப் பேராயர்கள், குருக்கள் ஆகியோரிடம் கொண்டுள்ள மறைமுகத் தொடர்பு.

7. கிறித்தவ சமய மக்களிடம், தங்களின் கடவுள் பெயர் “யகோவா” என்பதை மறைத்து “வேதத்தில்” இல்லாத கர்த்தர் எனும் சொல்லை முன்னிறுத்தியுள்ளது. இவ்வாறான மறைத்தலும் கூட்டலும் வெளி 22:18,22:19–21 ஆகியவற்றில் தடை செய்யப்பட்டிருந்தும் அதனை மதிக்காமை.

8. மதத்தினைப் பரப்புவதற்காக மதுரைக்கு வந்த ராபர்ட்–டி–நொபிலி (1577–1656) போலியாக யசுர் வேதம் தயாரித்தமை. அவர் பிராமணர்களைப் போன்று கபட வேடம் பூண்டமை.

9. கத்தோலிக்கர்களுக்கும், புரட்டஸ்டன்ட் சமயத் திரைக்கும் மத்திய ஐரோப்பாவில் நடைபெற்ற 30 ஆண்டுபோர்.

இப்படிப்பட்ட பலப்பல நிகழ்வுகளைப் படம்பிடித்து தகுந்த ஆதாரங்களுடன் குறிப்பிட்டு உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளார் இந்நூலரிசிரியர். ஒவ்வொரு இந்து மட்டுமின்றி, சத்திய வேட்கை கொண்ட அனைத்து மதத்தினரும் வாங்கிப்படித்து உண்மையை அறிதலே இந்நூலைத் தொகுத்தளித்த ஆசிரியருக்கு நாம் செலுத்தும் பாராட்டாகும். பரம்பொருள் இவரை ஆசீர்வதிக்கட்டும். வாழ்க பல்லாண்டு.

உண்மையுள்ள,
சந்தக்கவி இராமசுவாமி,
ஸ்ரீ ரங்கம்

01.07.2014

நூல் ஆய்வுரை

"Extra ecclesiam nulla salus" – "கிறிஸ்தவ தேவாலயத்திற்கு வெளியே மோட்சம் கிடையாது" – என்பது புனித சைப்ரியன் வழுங்கியுள்ள கிறிஸ்துமதக் கோட்பாடு. கிறிஸ்துவை நம்பியவர்களுக்கு மட்டும்தான் சொர்க்கத்தில் இடமுண்டு எனும் மதவெறிக்கொள்கைப்படி கிறிஸ்து தோன்றுவதற்கு முன் தோன்றி மறைந்த மானிடர்களெல்லாம் நரகத்தைத் தான் அடைந்திருக்க வேண்டும்.

ஆரம்ப காலம் தொட்டே கிறிஸ்தவத் திருச்சபை ஆதிக்க வெறி கொண்டு ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளைக் கைப்பற்றிய பின் ஆசிய நாடுகளிலும் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்த உலக கிறிஸ்தவ தேவாலய மன்றம் (International Christian Council) மற்றும் சர்வதேச கிறிஸ்தவ மன்றம் (International Christian Council) முயன்று வருவது குறித்து "தேசம் உருவாக்கும் பணியில் கிறிஸ்தவப் பங்கெடுப்பு" (Chrisitan Participation in Nation-Building) எனும் நூலில் மூன்றாவது அத்தியாயம் "அரசியல் வாழ்வில் கிறிஸ்தவர்கள் பங்கு பெறல்" (Christian Participation in Political Life) எனும் தலைப்பில் கூறுவதாவது: "கிறிஸ்துவினுடைய வேதம் அதன் நோக்கத்தில் அரசியல் சார்பற்றதாக இருக்க முடியாது. மனித வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் யேசு கிறிஸ்துவின் அரசாட்சிப் பிரகடனமாகும் அது. அந்த அரசாட்சி இன்று நம்பிக்கையின் அடிப்படையில் முழங்கப்பட்டு பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. காலம் முடியும்பொழுது வெளிப்படையாகத் தோன்றும்."

"மேகாலயாவில் ஞானஸ்நான தேவாலயங்களின் வளர்ச்சி" (The Growth of Baptist Churches in Meghalaya) எனும் நூலில் பக்கம் 115ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: "மேகாலய அரசு கிறிஸ்துவ அலுவலர்களால் நடத்தப்படுகிறது. இது பாரதத்தில்

ஒரு தனிப்பெரும் சிறப்புரிமையாகும். காரோ மலையில் அண்மையில் ஏற்பட்டுள்ள அரசியல் நிகழ்ச்சிகள் இறைவனின் அரசை அங்கு ஏற்படுத்த இறைவனால் அளிக்கப்பட்ட பெரும் வாய்ப்பு ஆகும்.'' அமெரிக்கா, கனடா, பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற மேற்கத்திய வல்லரசுகளின் நேரடி ஆதிக்கத்தில் செயல்படும் உலக கிறிஸ்தவ தேவாலய மன்றம் மற்றும் சர்வதேச கிறிஸ்தவ மன்றத்தின் மேலே குறிப்பிடப் பட்டுள்ள கூற்றுகள் கிறிஸ்தவ சமயத்தின், குறிப்பாக கிறிஸ்தவத் திருச்சபையின் உண்மையான நோக்கங்களை வெளிக்காட்டு கின்றன.

“ஆசியாவின் நம்பிக்கை கிறிஸ்து'' (Christ-The Hope of Asia) எனும் நூலில் (பக்கம் 30–31) உலக கிறிஸ்தவ மன்றத்தின் ஆய்வு இலாகா 1952–ல் பாரதத்தில் லக்னோ நகரில் நடத்திய கிழக்கு ஆசியாவிற்கான உலகத் திருச்சபை ஆய்வு மகாநாட்டின் அறிக்கை தெளிவாக குறிப்பிடுகிறது: “சமூகத்தின் அமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்துவது அரசியல் நடவடிக்கைகள் மூலமாகத்தான் சாத்தியமாகும் என்பதை கிறிஸ்தவர்கள் ஏற்க வேண்டும். கிறிஸ்தவர்கள் அரசியல் மற்றும் சமூகத் துறைகளில் நுழைந்தால்தான் கிறிஸ்தவ தேவாலயம் அதன் தீர்க்கதரிசனப் பணியை ஆற்ற இயலும்."

கிறிஸ்தவத் திருச்சபையின் இந்த சூழ்ச்சியையும் இன்றைய சூழ்நிலையினையும் தெள்ளத் தெளிவாக புரிந்துகொள்ள சமயோசிதமாக வெளிவரும் ஒரு சிறப்பான நூல்தான் திருவாளர் உமரி காசிவேலு படைத்துள்ள “கிறிஸ்தவ வரலாற்றில் மறைக்கப்பட்டனவும் மாற்றப்பட்டனவும்... உலகளாவிய தாக்கமும்" எனும் சிறந்த ஆராய்ச்சி நூல்.

பத்து பகுதிகள் கொண்ட இந்த நூலில் கிறிஸ்தவ சமயத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் நோக்கம் முதலியவை குறித்து மட்டுமல்லாது விஞ்ஞானம் கூறும் உலகத்தோற்றத்திற்கு முரண்பட்ட கிறிஸ்தவக் கோட்பாடு பற்றி முதல் பகுதி அலசுகிறது. இரண்டாம் பகுதி உலகின் பல்வேறு நாகரிகங்களின்

வரலாறு, இந்து சமவெளி நாகரிகத்தின் தொன்மை மற்றும் அழியாத்தன்மை பற்றி ஆராய்கிறது. மூன்றாம் பகுதியில் யேசுக் கிறிஸ்துவை உருவகப்படுத்திய வரலாறு, கிறிஸ்தவ சமய நூல்களில் யேசு, கிறிஸ்தவ சமயத்தோற்றம், மற்றும் பல்வேறு நாடுகளில் கிறிஸ்துவ சமயம் பரவியது பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன. நான்காம் பகுதியில் கிறிஸ்தவக் கோட்பாடுகள், யேசுவின் பெயரில் நடைபெற்ற யுத்தங்கள், பெண் வேட்டை, தெய்வீக விசாரணை, அடிமை வியாபாரம், போப் ஆண்டவர், கிறிஸ்தவப் பிரிவுகள் மற்றும் முப்பது ஆண்டு போர் பற்றிய தகவல்கள் விளக்கப்பட்டுள்ளன. ஐந்தாம் பகுதி உலகளாவிய ஏகாதிபத்தியத்திற்கும் காலனியாதிக்கத்திற்கும் கிறிஸ்தவ சமயம் துணை போனது, மற்றும் சிவப்பிந்தியர்கள் மற்றும் பழங்குடியினரை பூண்டோடு அழித்த வரலாறு இடம் பெறுகிறது. இந்திய வரலாறு என்ற ஆறாம் பகுதியில் கிறிஸ்துவ வரலாற்று ஆசிரியர்கள் தொன்மையான இந்திய வரலாற்றை தங்களது காலனி ஆதிக்க வெறிக்கு ஏற்றவாறு திரித்து எழுதியது மற்றும் திராவிட மாயையை உருவாக்கியது பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

"அன்னியகுருமார்கள்–இந்தியா அடிமையாகுதல்" எனும் ஏழாவது பகுதியில் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிற்குள் நுழைந்த வெளிநாட்டுப் பாதிரிமார்கள் மற்றும் அறிஞர்கள் மதமாற்றம் மூலம் காலனி ஆதிக்கத்திற்கும் ஐரோப்பிய எதேச்சாதிகாரத்திற்கும் துணைசென்று இந்தியாவை அடிமைப்படுத்திய வரலாறு விரிவாக எழுதப்பட்டுள்ளது. புனித பிரான்சிஸ் சேவியர் வீரமாமுனிவர் மற்றும் புனித தோமஸ் போன்றவர்கள் ஹிந்து சமயம், கலாச்சாரம் மற்றும் கோயில்களை அழிக்க வழி செய்தது மனத்தை உருக்கும் விதத்தில் விவரித்துள்ளார்.

"இன்றைய இந்தியா" எனும் எட்டாவது பகுதியில் 19–ஆம் நூற்றாண்டுவரை இந்தியா, இந்தியாவின் இருண்டகாலம், மொழி மற்றும் சித்தாந்தங்களின் அடிப்படையில் இந்தியாவை பிளவு படுத்தல், ஆரிய திராவிட வாதம், பிராமணர் – பிராமணர்

அல்லாதார் வாதம், ஆகியவை மூலம் இந்தியாவை பிளவு படுத்தும் முயற்சிகள் விளக்கப்பட்டுள்ளன.

“பிரிவினை வாதம்" எனும் தலைப்பிலான ஒன்பதாவது பகுதியில் ஐரோப்பிய காலனி ஆதிக்க வெறியர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி, தமிழகத்தில் பிரிவினை இயக்கங்களை தோற்றுவித்து நாட்டை துண்டாடும் முயற்சியில் கிறிஸ்தவத் திருச்சபைகளின் பங்கு பற்றி விளக்கப்பட்டுள்ளது.

“நவீன கிறிஸ்தவம்" எனும் பத்தாவது பகுதியில், பாலீன் கிறிஸ்தவத்தின் கோட்பாடுகள், மற்றும் அதை பாரதத்தில் பரப்புவதற்கான பாதிரிமார்களின் முயற்சிகளை முறியடிக்க ஹிந்துக்கள் ஆற்றவேண்டிய கடமைகள் பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டால் அல்லது மொழி பெயர்க்கப்பட்டால் உலக அரங்கில் கிறிஸ்தவத்திற்கு சவால் விடும் சிறந்த நூலாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை. நூல் ஆசிரியர் அதற்கான முயற்சி மேற்கொள்வார் என்று நம்புகிறோம். உலகம் முழுவதும் இன்று சர்வ மத சகோதரத்துவம் மற்றும் ஆன்ம நேய ஒருமைப்பாடு கொள்கைகளை போதிக்கும் ஹிந்து வாழ்க்கை வழிமுறையை நோக்கி முன்னேறும் பொழுது செமிடிக் சமயங்களின் மதவெறிக்கொள்கைகளிலிருந்து மக்களை காப்பதற்கு இத்தகைய நூல்கள்தான் பெரிதும் துணைபுரியும்.

சாது பேராசிரியர் வே.ரங்கராஜன்
ஸ்தாபக அறங்காவலர்,
பாரதமாதா குருகுல ஆசிரமம்,
ஸ்ரீநிவாச நகர்,
பெங்களூர் – 560035.

17–11–2014

வாழ்த்துரை

T.N.R. இரமேஷ்
தலைவர், ஆலய வழிபடுவோர் சங்கம்
சென்னை – 600 090

ஆதாம், ஏவாள் காலத்தில், பாவம் என்றால் என்ன என்று தெரியாமலும், கீழ்ப்படிதல் என்றால் என்ன, மரணம் என்றால் என்ன என்று தெரியாமலும், தடைசெய்யப்பட்ட பழத்தை உண்ட ஒரு பாவச்செயலுக்காகப் புவியில் பிறந்தவர்கள் துன்பமும், நோயும் உற்று, சொற்பகாலமே வாழ்ந்து, யேசு என்ற ஒருவரை அறியாத காரணத்தினாலோ அல்லது அவரை நம்பாத காரணத்தினாலோ, முடிவில்லா காலம் நரகத்தில், தீயில் வாட்டப்படவேண்டும் என்பது கொடூரமான ஏற்பாடு அல்லவா?

இன்றும், எப்பொழுதும் உலகமாந்தர் யாவரும் அவர்தம் தாய்தந்தையாரின் மதத்தையே பின்பற்றுகின்றனர். இது இயல்பும் ஆகும். இவ்வாறு இருக்கையில் தங்களது மதத்தைப் பின்பற்றாத எவரும் நித்திய நரகத்திற்குச் செல்வது நிச்சயம் என்று கிறித்துவம் அறுதியிட்டுக் கூறுகின்றது. அவ்வாறாயின் எந்தக்கடவுள் உயிர்களைப் படைக்கின்றானோ, அவன் வேண்டுமென்றே வருடந்தோறும் கோடிக்கணக்கான மனிதர்களை – அவர்கள் முடிவில்லாத நரகத்தில் வீழ்ந்து வேதனைப்படவேண்டும் என்றே படைக்கின்றான் எனத்தெரிகின்றது. இதன் காரணம் பற்றியே அமெரிக்க பேரறிஞர் இங்கர்சால் "புதிய ஏற்பாடுகள்" முடிவில்லாத நரகம் என்னும் கோட்பாட்டினைப் பேசுவதால் அவைதாம் விவிலியத்தின் பழைய ஏற்பாடுகளை விடக்கொடியது என்று முழங்குகிறார்.

"தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும்" என்ற மகாகவி பாரதியாரின் கூற்றிற்குத் தெய்வம் உண்மையில் இருக்கின்றார், அவர் இல்லாமல் இல்லை என்று பலரும் பொருள் கொள்கின்றனர். "உண்மைதான் தெய்வம், சத்தியமே தெய்வம்"

எனப்பொருள் கொள்ளுதல் சாலச் சிறப்புடையது. கிறிஸ்துவம் அவ்வாறான உண்மை உடையதா என ஆய்வோம்.

விவிலியத்தின் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில்தான் முதலில் உருவாக்கப்பட்டு வரப்பெற்றது. சிலுவைக் கட்டை கிரேக்க மொழியில் ஸ்டாவ்ரோஸ், (Stauros) என வழங்கப் பெறும். இஃது ஓர் உயரமான, சற்று தடிமனான மரக்கட்டையன்றி வேறில்லை. கொடியவர்களையும், கொள்ளையர்களையும், அரசு இக்கட்டையில் அறைந்து தண்டனை செய்யும். தண்டனைக் குரியவனை; இக்கட்டையில் கைகள் தோளுக்கு உயரே, ஒன்றின் மீது ஒன்றைவைத்து ஆணி அறைந்து விடுவர். அதேபோன்று கால்களையும் ஒன்றன் மீது ஒன்றுவைத்து ஆணி அடித்துவிடுவர். அதன்பின்னர் தண்டிக்கப்பட்டவன் நேராகவோ அல்லது தலைகீழாகவோ இருக்கும் வண்ணம் அந்த ஒற்றைக் கட்டையை நட்டுவைத்து விடுவர். தண்டிக்கப்பட்டவன் சில நாட்களில் அந்த ஒற்றைக் கட்டையிலிருந்து இறந்துபடுவான். இந்தக் கட்டையின் குறுக்கே வேறு கட்டையோ மரமோ கிடையாது. T என்ற ஆங்கில எழுத்துப் போன்ற வடிவத்தில் அது கிடையாது. ஆயினும் ஷகத் எனும் எகிப்திய கடவுளின் கையில் உள்ளதுபோன்று சிலுவைக்குறி பொதுவருடம் நான்காம் நூற்றாண்டிற்குப் பிறகு பிரபலப்படுத்தப்பட்டுள்ளது. விரிக்கப்பட்ட கைகளுடன் யேசு சிலுவையில் அறையப்பட்டது ஒரு தவறான சித்தரிப்பு என்று இங்கிலாந்து நாட்டுப் பேராயர்கள் அறிந்து கொண்டு அஃது உண்மையான வடிவில் மாற்றியமைக்கப் படவேண்டும் என்று தீர்மானித்தனர். அப்படிச்செய்தால் கிறித்தவ மதம் ஆட்டம் கண்டுவிடும் என்று அதைப் பின்னர் கைவிட்டுவிட்டனர். உண்மை கைவிடப்பட்டது. (பார்க்கவும் Encylopaedia Britannica & Greek dictionaries)

பொதுவருடம் நான்காம் நூற்றாண்டில் ரோமானியப் பேரரசின் அதிகாரபூர்வ மதமாகக் கிறித்தவம் தலையெடுத்தது. அவ்வாறு ஆன பின்பும் ரோமானியர்கள் மித்ரா பண்டிகையை வழக்கம்போல் கொண்டாடி வந்தனர். இந்தவிழா ஒன்றினாலேயே

தங்கள் கிறித்தவ சமயம் வழக்கொழிந்துபோகும் என்று அஞ்சிய ரோமானியக் கிறித்தவ அரசு, டிசம்பர் 25ம் தேதியை யேசுவின் பிறந்ததினமாக அறிவித்து ரோமானியர்கள் கிறித்தவர்களாக மதம் மாறினாலும் இக்கொண்டாட்டத்தைக் கைவிடவேண்டிய தில்லை என ஏற்பாடு செய்தனர். இதுவே கிறித்துமஸின் உண்மை வரவாறு. டிசம்பர் 25ம் நாள் யேசு என்று ஒருவர் பிறந்திருக்கக்கூடிய வாய்ப்பு அரை சதவிகிதம் கூடக் கிடையாது என்பது கிறித்தவர்களுக்கே தெரியாமல் மறைக்கப்பட்ட உண்மை.

உமரி காசிவேலு எழுதியுள்ள “கிறித்தவ வரலாற்றில் மறைக்கப்பட்டனவும் மாற்றப்பட்டனவும்.. உலகளாவிய தாக்கமும்” என்ற அருமையான நூல் பல்வேறு காரணங் களுக்காக வரவேற்கப்படவேண்டிய ஒரு நூல். இதுவரை தமிழில் இவ்வளவு விரிவான விவிலிய ஆராய்ச்சி நூல் வந்ததில்லை. மிகப்பெரிய ஆராய்ச்சியினாலும், ஒருமுகப்படுத்திய செயல் திறனாலும் அவர் இந்தப் புத்தகத்தை யாத்துள்ளார். புத்தகத்தைப் படியுங்கள்! சிறிது படித்துவிட்டுச் சிந்தியுங்கள்! எப்படி மாபெரும் பொய் உண்மையென வேடமிட்டு நம்மிடையே வலம் வருகின்றது என்று தெரியுங்கள்! மற்றவர்க்கும் எடுத்துச்சொல்லுங்கள்!

நூல் ஆசிரியரைப் பற்றி

சாதாரண தமிழனுக்கு தெரியவேண்டியதை அவன் அறியாமல் இருக்க ஒரு தமிழ்பேசும் அறிவாளிகள் கூட்டமும், மதவாதிகள் கூட்டமும், பெரும் பணபலத்துடன் தமிழகத்தை சுற்றி வருகின்றன. ஓயாத பிரச்சார சத்தத்தினால் பாமரத் தமிழர்களின் சிந்தனைத் திறன் மழுங்கிவிட்டது. உண்மையாது, பொய்மையாது என வேற்றுமைப் படுத்திட முடியாமல் திணறுகின்றனர். அத்தகைய தமிழனுக்கு பயன்படுத்திட "இந்து சமுதாயமும் சமயமும் – மறைக்கப்பட்ட உண்மைகள்" எனும் ஓர் கையேட்டை 2010ம் ஆண்டில் உமரி காசிவேலு வெளி யிட்டுள்ளார். "கிறித்துவ வரலாற்றில் மறைக்கப்பட்டனவும், மாற்றப்பட்டனவும், உலகளாவிய தக்கமும்" என்பது அவரின் இரண்டாவது நூல். இதனை தவிர அவர் எண்ணற்ற சமய, சமுதாய வரலாற்று கட்டுரைகள் எழுதியுள்ளார். தூத்துக்குடி ராம் டிரஸ்ட்டின் நிர்வாக அறங்காவலராகவும், சென்னை திராவிட சான்றோர் பேரவை அமைப்பு செயலாளராகவும் செயல்பட்டு வருகின்றார்.

இந்நூல் அன்னாரின் 16 ஆண்டுகால ஆய்வின் முதிர்சியால் விளைந்தது. திராவிடன் என்றும், தமிழன் என்றும் பல்வேறு குழமங்களாக பிரிவினை செய்யப்பட்டு அமிழ்ந்து கிடக்கும் பாமர தமிழக மக்களிடம், சமய வரலாற்று உண்மைகளை கொண்டு சென்று அவர்களின் சிந்தனையில் புதிய உத்வேகத்தை காணவேண்டும் என்பதே உமரி காசிவேலு அவர்களின் தணியாத அவா!

இப்புத்தகம் தமிழ்மக்கள் ஒவ்வொருவரின் வீட்டிலும் இருக்க வேண்டும். இதனை திரும்ப திரும்ப படிக்கவேண்டும். அதன் மூலம் உண்மை வரலாற்று செய்திகள் இளம் தலைமுறை யினரையும் தொடர்ந்து சென்றடையச் செய்யவேண்டும்.

கடந்த 300 ஆண்டு காலத்தில் இவ்வகையில் வெளிவந்த நூல்களில் இது ஓர் தனியிடத்தை வகிப்பதாக அமைந்துள்ளது.

நல்வாழ்த்துக்களுடன்

திருச்சிராப்பள்ளி
05–11–2014

G.P. சீனிவாசன்,
பத்திரிக்கையாளர் &
புத்தக வெளியீட்டு ஆலோசகர்

நூலினை பற்றிய கருத்துக்கள்

புனிதர் பவுலுக்கு எதிர்ப்புத் தெரிவித்த "ஜெருசலேம் குழு" எனும் யூத வம்சாவழியினர் மீது "யேசுவைக் கொன்றவர்கள்" என பட்டம் சூட்டிக் கடந்த 2000 ஆண்டுகாலமாக அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரங்களும், அதற்கென உருவாக்கப்பட்ட தத்துவங்களும் படித்து உணரப்பட வேண்டியவை.

— ரவிகுமார்,
சமூக ஆர்வலர், திருச்சி

சொந்த விருப்பு வெறுப்புகளைத் தூக்கி மூலையில் வைத்துவிட்டுத் திறந்த மனதுடன் இந்நூலைப் படிப்பவர்களுக்கு உண்மை தெள்ளென விளங்கும்.

— இரா.சுப்பராயலு,
முந்நாளைய துணைபதிவாளர்
தமிழ் பல்கலை கழகம், தஞ்சாவூர்

இருண்ட வரலாற்றை நம்பி வாழும் சமயத்தினரும், வரலாற்றைத் திரிக்கும் மார்கிஸியவாதிகளும், எல்லாம் ஒன்றே என நம்பி ஏமாந்து கொண்டிருக்கும் பாமரர்களும் மற்றும் சமயகுருமார்கள் நடத்தும் பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்களும் அரசியல் கட்சியினரும், ஆக இதுபோன்ற பல்வேறு தரப்பு மக்களும் ஆழ்ந்து படிக்கவேண்டியநூல்.

— டாக்டர் J. விஸ்வநாதன்,
ஸ்ரீரங்கம்

கனியின் தன்மைகொண்டு மரத்தின் தன்மை அறியப்படுகிறது. கிறித்துவம், அதுபரவிய நிலப்பரப்பு முழுமையிலும் விட்டுச்சென்றுள்ள சமய, கலாச்சார எச்சங்கள் எந்தவகையிலும், அச்சமயத்திற்கு பெருமை சேர்ப்பதாக அமையவில்லை என்பதை இந்நூல் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளது.

—ஸ்ரீவில்லிபுத்தூர் S. ஜகந்நாதன்,
வேதவிற்பன்னர் — திருச்சி

அந்நிய மதகுருக்கள் தங்கள் மதத்தினைப் பரப்புவதற்காகக் கிறித்துவ வரலாற்றில் பன்னெடுங்காலமாக, பல உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பதிவு செய்துள்ளனர். அவற்றை ஆராய்ந்து பட்டியலிட்டு உங்களுடன் பகிர்ந்துள்ளார் ஆசிரியர்.

— ஹிந்து வாய்ஸ், மும்பை

''இன்றைய காலக்கட்டத்தில் பெரும் பொருட்செலவினாலும், முயற்சியினாலும் பரப்பப்படுவது கிறித்துவ சமயம். இச்சமயம் சார்ந்த வரலாற்று செய்திகளின் மறுபக்கத்தை இந்நூல் தந்துள்ளது. அனைவரும் அறியவேண்டிய உண்மைகளை கொண்டுள்ளது.''

– கே.வி. கிருஷ்ணசாமி,
தலைவர், இந்துஸ்தான் தேசிய கட்சி

''மக்கள் சக்தியின்மீது ஆதிக்கம் செலுத்த உருவாக்கப்பட்டது மத கோட்பாடுகள். அவ்வாறு ஆதிக்கம் செலுத்த துடிக்கும் கிறித்துவ சக்தியின் திரையை நீக்கி உண்மை முகத்தினை உலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டுகிறது இந்நூல். சரித்திரம் ஆதாரபூர்வமாக கோர்க்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது. அறியாமை அகல அனைவரும் இந்நூலைப் படிப்பது நல்லது.

– பா. மதுசூதனப்பெருமாள்
நிறுவன தலைவர்,
இந்து தேசிய காங்கிரஸ்

இப்புத்தகத்தின்மூலம் உலகளாவிய பல சரித்திர ஆராய்ச்சி யாளர்கள் கண்ட ''உண்மையான கிறித்துவத்தை'' தமிழக மக்கள் அனைவரும் அறிந்துகொள்ள செய்துள்ளார் ஆசிரியர் உமரி காசிவேலு.

இரண்டாயிரம் வருடங்களாக யேசுநாதரின் பெயரில் ''உண்டாக்கப்பட்ட கதைகளைக்'' கொண்டு உலகையே தவறான பாதையில் நடத்திவந்துள்ளது காணக் கிடைக்கின்றது. பைபிளின் வாசகங்களை வேதவாக்கியமாக எடுத்துக்கொண்டு உலகம் முழுவதும் பிறநாட்டுமக்களை கொன்று குவித்து/ஏமாற்றி, அவர்களின் மதம் மற்றும் வழிபடும் இடங்களை அழித்து கிறித்துவத்தை பறப்பியுள்ளதும் தெரியவருகின்றது.

அனைத்திற்கும் மேலாக கடந்த 1850 வருடங்களுக்கும் மேலாக இலட்சக்கணக்கான பெண்களை சூனியக்காரிகள் என்று எரித்துகொன்றதும் தெரிய வருகின்றது.

இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டே ''கிறித்துவம் என்ற ஒரு மதம் இவ்வுலகில் தோன்றாதிருந்தால், மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழும் மிகச் சிறந்தயிடமாக இப்புவிக்கோள் இருந்திருக்கும்'' என பல நாட்டின் அறிஞர்கள் கூறியுள்ளனர் போலும்.

– A. நடேசன்,
தலைவர்,
திராவிடச் சான்றோர் பேரவை
சென்னை

உள்ளே

திறப்பின் வாசல்.......................... 1

பகுதி 1 : தோற்றம் 3

பகுதி 2 : தொன்மை வரலாறு 23

பகுதி 3 : அறிந்ததும், அறியாததும் 63

பகுதி 4 : கிறித்துவ காப்பியம் 133

பகுதி 5 : ஏகாதிபத்தியமும் காலனியாதிக்கமும் 219

பகுதி 6 : இந்திய வரலாறு எழுதத் திட்டமிடல்..... 249

பகுதி 7 : அன்னிய மதகுருமார்கள் - இந்தியா அடிமையாதல்.......................... 295

பகுதி 8 : இன்றைய இந்தியா.......................... 353

பகுதி 9 : பிரிவினைவாதம் 397

பகுதி 10 : நவீன கிறித்துவம்.......................... 421

வரலாற்றில் நெருடல்கள் 467

எனது உரை 469

பிற்சேர்க்கை - 1.......................... 472

பிற்சேர்க்கை - 2.......................... 478

துணை நூற் பட்டியல்.......................... 488

ஆதாரக் குறிப்புகள்.......................... 499

குறிப்புகள் 515

திறப்பின் வாசல்

ஐரோப்பிய மற்றும் ஆப்பிரிக்க பெரும் நிலப்பரப்பை இரண்டாகப் பிரித்து அடையாளம் கண்டிட உதவுவது மத்திய தரைக்கடல். இதன் விளிம்பு நாடுகளாகத் தென் பகுதியில் எகிப்து, இஸ்ரேல்ள போன்ற நாடுகளும் வடபகுதியில் இத்தாலிய, கிரேக்க நாடுகளும், கிழக்கில் சிரியா, லெபனான், ஆசியாமைனர் எனும் துருக்கியும் அமைந்துள்ளன. இத்தாலி நாட்டின் தலைநகராக ரோமாபுரி தொன்று தொட்டு விளங்கி வருகின்றது. ரோமாபுரியின் ஒரு சிறிய பகுதிக்குள் போப் ஆண்டகை இன்று ஆட்சி செய்துவரும் வாட்டிகன் நகரம் உள்ளது.

இஸ்ரேல் நாடு யூதேயா என்றும் பாலஸ்தீனம் என்றும் பொதுவாக அழைக்கப்பட்டது. அதன் தலைநகரம் ஜெருசலேம். ஏக இறைவன் கொள்கையைக் கொண்டுள்ள யூதம், கிறித்துவம் ஆகிய சமயங்கள் தோன்றிய இடங்களும் இந்நகரமே. இஸ்லாமிய சமயமும் இந்நகருடன் பெரிதும் தொடர்புடையது.

இஸ்ரேல் நாட்டில் தொன்றுதொட்டு வசித்து வருபவர்கள் யூத இனத்தவர். உலகம் முழுமைக்கும் ஆசிர்வாதம் வழங்க இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மக்கள் யூதர்களே என யூத சமயப் புத்தகங்கள் (பழைய ஏற்பாடு) கூறுகின்றன. புதிய ஏற்பாடும், இரட்சிப்பு யூதர்கள் மூலமே வரும் என்றும் கூறுகின்றது. எனவே, யூதர்களின் சமய வரலாற்றுப் புத்தகங்களான பழைய ஏற்பாடும், யேசு பிரானின் வாழ்க்கையை விவரிக்கும் புதிய ஏற்பாடும் இணைக்கப்பட்டுப் பைபிள் எனும் சமய நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

பெருமை மிக்க யூத இனத்தில் அன்னைமேரியின் மகனாய், கி.மு. மூன்றாம் ஆண்டு வாக்கில் பிறந்தவர் யேசுபிரான்? அக்காலத்தில் மத்திய தரைக் கடலின் விளிம்புப் பகுதி நாடுகள் (இஸ்ரேல் உட்பட) அனைத்தும் ரோமானிய அரசின் காலனிகளாக விளங்கின. உலகின் மக்கட் தொகையில் ஐந்தில் ஒன்று ரோமானியர்களின் ஆளுகையின் கீழ் அன்று இருந்தது என வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இந்தியாவுட

னான பெரும் வர்த்தக பங்காளிநாடாகவும் ரோமாபுரி இருந்துள்ளது. யேசுபிரான் காலத்தில் ரோமாபுரியை அரசாட்சி செய்தவர்கள் ஆகஸ்டஸ் (அதன் பின்னர்) டைபிரியஸ் எனும் அரசர்கள். டைபிரியஸ் ஆட்சிக் காலத்தில் பாலஸ்தினத்தில் ரோமாபுரியின் ஆட்சியாளராக (கவர்னர்) விளங்கியவர் பிலாத்து. யேசுவைச் சிலுவையிலடிக்க உத்தரவிட்டதும் இவரே!

மேற்கண்ட இரு ரோமானிய அரசர்கள் காலத்தில் (கடைச் சங்க காலத்தில்) இந்தோ - ரோமானிய வர்த்தகத் தொடர்பும், இரு நாட்டு மக்களுக்கிடையேயான கலாச்சாரத் தொடர்பும், சிறப்பாக இருந்துள்ளன. இதற்கான பல ஆதாரங்கள் இந்திய - தமிழக - ரோமானிய இலக்கியங்களில் உள்ளன.[1] ஆகஸ்டஸ், டைபிரியஸ் உருவம் பொறித்த நாணயங்கள் இந்தியாவில் மேற்குக் கடற்கரைப் பகுதிகளிலும், கரூர் மற்றும் புதுக் கோட்டையிலும் காணக்கிடைத்துள்ளன.[2] எனினும் யேசு பெருமானைப் பற்றிய கர்ண பரம்பரை செய்திகளோ கதைகளோ இந்திய / தமிழக மண்ணிற்கு அன்று வந்து சேரவில்லை. கடைச் சங்க இலக்கியங்களிலும், வேறு இந்திய இலக்கியங்களிலும் இது பற்றிய குறிப்பின்மை ஈண்டு கவனிக்கத்தக்கது. இத்தகைய குறிப்பின்மை யேசுவின் கதையைப் பெரும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

பவுல் அடிகளாரால் யேசுவின் பெயரைக் கொண்டு பரிசுத்த ஆவி கோட்பாடு உருவாக்கப்பட்டு, யூதர்களின் கடவுளான யெகோவா (கர்த்தர்), மற்றும் அவர்கள் எதிர்பார்த்திருந்த மெஸ்ஸையாவான கிறிஸ்த்து ஆகிய வற்றுடன் யேசுவின் பெயர் இணைக்கப்பட்டுக் கர்த்தராகிய யேசு கிறித்து எனும் கொள்கை உருவாக்கப்பட்டது. பவுல் அடிகளார் மரணமடைந்து 250 வருடம் கடந்தபின் ரோமானியப் பேரரசன் கன்ஸ்டன்டைன் இக்கொள்கையை ஏற்றதன் மூலம் கிறித்துவம் ஓர் அரசியல் சார்ந்த மதமாக உருவாகியது.

இவ்வாறு சிறிய தீப்பொறியாய் ரோமாபுரியில் கி.பி. நான்காம் நூற்றாண்டில் தோன்றிய இச்சமயம், இன்று உலகம் முழுமையிலும் வியாபித்துள்ளது.

இந்நூல் சார்ந்து எழுதப்பட்ட ஆதார குறிப்புகளின் அட்டவணை புத்தகத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வறிமுகச் செய்திகளுடன் நூலினுள் செல்லுங்கள்.

பகுதி - 1

தோற்றம்

பகுதி-1 : பொருள்

பக்கம்

1.1 ஏன் இது, எதற்கு இது? 5

1.2 வரலாறு, மறைக்கப்பட்டனவும் மாற்றப்பட்டனவும்... 6

1.3 உலகத் தோற்றம் 12

1:1 ஏன் இது, எதற்கு இது?

வரலாற்று நூல்கள், அத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களாலே பெரும்பாலும் எழுதப்படுகின்றன. ஆனால் அத்தகைய நூல்களில் சில, சிறிது காலத்திற்குப் பின் களையிழந்து போய்விடுகின்றன. அந்நூல்களில் குறிப்பிடப் படும் நிகழ்வுகள் நடைபெற்ற சமயத்தில் மேவியிருந்த சூழ்நிலைகள் காலப்போக்கில் மாற்றமடைந்து விடுவதால் அந்நூல்களும் தற்காலத்திற்கு ஒவ்வாதவை ஆகிவிடுகின்றன. எனவே ஏற்புடமையை அதிகரித்திட நூல்கள், தற்போது காணப்படும் பண்டைய எச்சங்கள் அடிப்படையில் விடுபட்ட கண்ணிகளைத் தொகுத்து எழுதப்படுவது அவசியம். அதுபோன்றே இந்திய வரலாறும், இந்திய கண்ணோட்டத்தில் அதுவும் தற்கால சமய-சமுதாயக் கண்ணோட்டத்தில் எழுதப்படுவது அவசியம். அவ்வாறு செய்யப்பட்டால், மறைக்கப்பட்ட உண்மைகளும், வெளிக்காட்டப்பட்ட பொய்களும் மக்கள்முன் ஆய்விற்காகக் கொணர முடியும்.

தங்கள் கையில் உள்ள இந்நூல் ஆய்வுகள் மேற்கொண்டு எழுதப்பட்ட முதல் நூல் அல்ல. மாறாகப் பல நூல்களில் உள்ள முத்துக்களைத் தேடி எடுத்துக் கோர்க்கப் பட்ட ஒரு முத்துமாலை அனைய வழிநூல் எனலாம். இவ்வழிநூல் செய்திட தொல்காப்பியம் நூற்பா எண். 1597 வழிகாட்டுதலாக அமைந்துள்ளது.

'தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலோடு அனை மரபினவே.'

(முந்தைய நூலுள் உள்ளவற்றைத் தொகுத்து நூலாக்கல், விரித்து நூலாக்கல், தொகுத்தும் விரித்தும் நூலாக்குதல், மொழி பெயர்த்தல், இவை நான்கையும் மரபுப்படி யாத்தல், வழி நூலாகும்.)

இந்திய வரலாற்றைப் பொறுத்த அளவில் அதனை எழுதியவர்கள் அத்துறையில் வல்லமை பெற்றவர்களே எனினும் அவர்களில் பலர் 'எண்ணெய் செக்கு' இயக்குபவன் போல் ஓர் எல்லைக்குள்ளே சுற்றி வந்துள்ளது காணக் கிடக்கின்றது. வரலாற்று நூல்கள் ஆரியப் படையெடுப்பு

போன்ற ‘எண்ணெய் செக்கு’த் தத்துவத்திலிருந்து வெளிவர வேண்டுமெனில் வரலாறு எழுதும் பணியில் கற்றுணர்ந்த வேறு பலரும் பங்கேற்க வேண்டியது அவசியம். அவ்வகையில் தோன்றியதே இந்நூல்.

பண்டைய இந்தியர்கள் கலை, இலக்கியம், சிற்பம், வான சாஸ்திரம் போன்ற எண்ணற்ற துறைகளில் சிறப்பாய் இருந்துள்ளனர். எனினும் அவர்கள் தங்கள் வரலாற்றை எழுதி வைப்பதில் காட்டியுள்ள சிரத்தையின்மை ஏன் என்பது பெரும் புதிராய் உள்ளது. இந்தியர்களின் ஒரு சில குறைபாடுகளில் இது முதன்மையாய் விளங்குகின்றது. எனவே பண்டைய நமது வரலாற்றினைத் தெரிந்து கொள்ள, தற்போதுகூட காலனியாதிக்க - மதவாதிகளின் நூல்களையே பெரிதும் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.[1] இத்தகைய அந்நிய வரலாற்றாசிரியர்கள் இந்திய வரலாற்றைத் தங்களது சமயம், அரசியல் நிலவரம் ஆகியவற்றிற்கு உதவும் வண்ணம் மறைத்தும் மாற்றியும் எழுதிக் கொண்டனர். எனவே இந்நாட்டின் உண்மையான வரலாறு இன்றைய வரலாற்று நூல்களில் விவரிக்கப்படுவதற்கு வெளியே உள்ளது எனலாம். அதனை வெளிக் கொணர வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயம்.

பிறநாட்டு வரலாற்றினைத் திரிபுவாத கருத்துகளுடன் எழுதிய சமய-காலனியவாதிகள் தங்களது சமயத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் போக்குகளை ஒளிவு மறைவின்றி எழுதவில்லை. இவ்வெற்றிடத்தை நிரப்புவதும் இந்நூலின் நோக்கம்.

1:2 வரலாறு, மறைக்கப்பட்டனவும் மாற்றப்பட்டனவும்...

ஜேம்ஸ் மில் (1820) எனும் மேற்கத்திய வரலாற்றாசிரியர் இந்திய வரலாற்றை மூன்று கால கட்டமாகப் பிரித்து எழுதினார். இந்து, முஸ்லீம், பிரிட்டிஷ் காலம் என்பவையே அவை. பிரிட்டிஷ் காலம் என்று அவர் குறிப்பிடுவது உண்மைக்குப் புறம்பானது எனலாம். அக்காலகட்டத்தில் இந்தியாவில்

பிரிட்டிஷ் மட்டுமின்றிப் போர்ச்சுகீசியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டச்சு நாட்டினரும் இந்தியாவின் பகுதிகளை ஆங்காங்கே ஆண்டு வந்தனர். இவர்கள் அனைவரும் கிறித்துவர்கள் என்பதே ஒரே ஒற்றுமை.[2] எனவே இந்திய வரலாற்றுக் காலத்தை இந்து, முஸ்லீம், கிறித்துவ காலம் எனப் பிரித்து அறிதலே சரியானது. இங்கு கிறித்துவர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் நடத்திய கொடுமைகளால் ஏற்பட்ட பழி கிறிஸ்துவ மதத்தின் மீது ஏறாமல் இருக்கும் பொருட்டு அன்னிய வரலாற்று ஆசிரியர்கள் இதுபோன்ற தந்திரங்களைக் கையாண்டு வந்தனர்.

ஸ்ட்ராபோ (Strabo - 63 BC), பிளைனி (Pliny. AD 23-79) போன்ற சரித்திர ஆசிரியர்களின் பயணக் குறிப்பில் இந்திய வரலாறு ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. அவை முற்றிலுமாக ஏற்றுக் கொள்ள முடியாத நிலையிலும் அவற்றில் காணப்படும் செய்திகளிலிருந்து இந்த நாட்டின் அன்றைய நிலவரங்களை ஓரளவு தெரிந்து கொள்ள முடிகின்றது.

நம் நாட்டின் மகான்களாகிய அகத்தியர், தொல்காப்பியர், முனிவர்கள் வஸிஷ்டர், விசுவாமித்திரர், பேரரசர்களாய் வாழ்ந்த சந்திர குப்த மௌரியர், ஹர்சர், பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகியோர் அன்றைய வெளிநாட்டு வரலாற்று ஆசிரியர்களை விடக் கல்வி அறிவில் மிகச் சிறந்தவர்களாயிருந்தும் அவர்கள் இந்திய வரலாற்றையோ, தங்களது வரலாற்றையோ, அன்றைய மக்களின் பொருளாதார, காலாச்சார நிலவரத்தையோ எழுதி வைக்கவில்லை. நமக்குப் பிந்தைய கிரேக்க, ரோமானிய, ஐரோப்பிய நாகரிகங்களைப் பொறுத்த அளவில் அதன் அகழ்வாராய்ச்சி முடிவுகள் ஏற்கெனவே எழுதப்பட்டுள்ள வரலாற்றை ஆதரிக்குமாறு அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் அங்கே பண்டைய கலாச்சாரத் தொடர்ச்சி இன்று இல்லை. எனினும் வரலாற்று ஆசிரியர்களால் அவ்வரலாறுகள் நம்பிக்கைக் குரியதாய்க் கருதப்படுகின்றன. இந்தியாவைப் பொறுத்த அளவில், அகழ்வாராய்ச்சி கண்டுபிடிப்புகளை ஆதரிக்கும் வகையில் வரலாறுகள் இல்லை அல்லது எழுதப்படவில்லை.

சிந்து சமவெளி நாகரிகத்திற்கு முந்தைய இராமாயண - மகாபாரத கால (கங்கை சமவெளி) நாகரிகத்தையும் வரலாற்று முறையில் ஏற்றுக் கொள்வார் இலர். இந்நாகரீகங்களைப்

பொறுத்த அளவில் அவற்றின் கலாச்சாரத் தொடர்ச்சியும், தொன்மை இலக்கியங்களும் இன்று பெருமளவில் காணப்படினும் அவற்றை ஆதரிக்கும் அகழ்வாராய்ச்சி முடிவுகள் இன்னும் போதுமான அளவு வெளிப்படுத்தப்படவில்லை. எனவே இந்நாகரிகத்தை மேலை நாட்டு வரலாற்று ஆசிரியர்கள் பலர் ஏற்றுக் கொள்ளவில்லை. கற்பனையானது என அவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டுவிடுகின்றது.

இந்தியா முழுமையும் இன்று வழக்கத்திலிருக்கும் தர்ம சாத்திரங்கள், ஒரே வகையான திருமணம் மற்றும் ஈமச்சடங்குகள்,[3] பெற்றோர், பிள்ளைகள் ஆகியோரின் உறவுமுறைகள், திருவிழாக்கள் ஆகியன நமது பண்டைய ஒற்றுமையை எடுத்துக் காட்டுவதாய் உள்ளன. எனினும் காலனியாதிக்க-அன்னிய வரலாற்று ஆசிரியர்கள் நம் வரலாற்றில் இந்தியத் தன்மையை அழித்து அதனைப் பிளவுபடுத்தி அணுவின் அளவிற்கு நுண்ணியதாய்க் கொண்டுவந்து விட்டனர்.

இந்திய கலாச்சாரம் 'தர்மம் மற்றும் உண்மையின்' அடிப்படையில் அமைந்தது. தர்மத்தைப் போதிக்கும் நூல்கள் மேல்நாட்டு மதகுருமார்கள், காலனிய வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் கண்டனத்துக்குள்ளானது. மேற்கத்திய வரலாற்று ஆசிரியர்கள் மனுதர்ம சாஸ்திர நூலை மொழிபெயர்த்து, வர்ணப் பகுப்பினைப் பிரம்மாண்டப் படுத்திக் காட்டுவதில் காட்டியுள்ள பெரும் ஆர்வம் நடுநிலையாளர்களை ஆழமாகச் சிந்திக்க வைத்துள்ளது. இதன் காரணமாக இத்தகைய திருமறையாளர்கள் மீது எழும் கேள்விகள் பல.

1. இந்தியப் புராணங்களும், சாத்திரங்களும் பொய்யானவை, கற்பனையானவை என்கிறீர்கள். ஆனால் அவற்றில் ஒன்றான மனு சாத்திரத்தின் அடிப்படையிலேயே இந்திய சமுதாயத்தையும் அதன் மக்களையும் தாழ்மைப் படுத்துகிறீர்களே ஏன்?

2. இந்திய மக்களின் கலாச்சாரத்தையும், சமயத்தையும், தர்ம சாத்திரங்களையும் பூதக்கண்ணாடியுடன் ஆய்விட்டு எழுதும் நீங்கள் உங்கள் சமய வரலாற்றை ஆரம்பம் முதல் இக்காலம் வரை உண்மை ததும்ப எழுதவில்லையே ஏன்?

இந்நூலில் குறிப்பிட்டுள்ள தொன்மை நாகரிகங்களின் இருப்பிடங்கள்


1
2
3
4
5
6
7
8
A
B
C
D
E
தொன்மை நாகரிகங்கள்
1 மஞ்சள் நதி தீரம்
2 சிந்து சமவெளி
3 சுமேரியன்
4 நைல் நதி
5 அஸ்டெக்
6 மாயன்
7 இன்காஸ்
8 ஈஸ்ட்டர் தீவு
நகரங்கள்
A ஜெருசலேம்
B ரோமாபுரி
C கான்ஸ்டன்டிநோபிள்
D அலெக்ஸாண்டிரியா
E நிஸியா

3. பரிசுத்த வேதாகமத்திற்குத் தொன்மையான துணைநூல்கள், வழிநூல்கள், உரைநூல்கள், கவிதைகள், கட்டுரைகள் இல்லையே ஏன்? திருமறையாளர்களுக்கு எழுதும் திறமையும், நேரமும் இல்லையா?

4. வரலாற்றை எழுதுவதில் மேற்கத்திய ஆசிரியர்கள் தான் திறமை மிக்கவர்கள் எனும் பெருமை பாராட்டுவோர் இயேசுவின் பிறந்த நாளையும், வருடத்தையும், ஆரம்பகால வாழ்வையும் எழுதத் தவறிவிட்டார்களே! இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் அவரின் மூன்றாம் வயது முதல் 30ஆம் வயது வரை நடந்த சம்பவங்களை எழுதி வைக்கவில்லையே ஏன்? அல்லது அப்படி ஒரு நிகழ்ச்சியே நடைபெறவில்லை என்பதா? தண்டிக்கப்பட்டு, பின்னர் தண்டனை நிறைவேற்றம் செய்ததற்கும் இடைப்பட்ட பலமணி நேரத்தில் இயேசு இவ்வுலக சந்ததியினருக்கு மரண வாக்குமூலச் செய்தி வழங்கவில்லையே ஏன்? சிலுவையேற்றம் மூலம் இறப்பதற்கு யேசுவிற்கு பல மணிநேரம் ஆகியிருக்கும். அந்நேரங்களில் அவர் இறைவனை நோக்கி ஸ்தோத்திர மகிமை விண்ணப்பம் (Prayer) எதுவும் சொல்லவில்லையே! ஏன்? அல்லது அப்படி ஓர் நிகழ்ச்சி நடைபெற வில்லையா?

5. கிறித்துவ ஆட்சியின்போது இந்தியாவின் ஏட்டுப் பிரதிகளைப் பாதுகாப்பதாகக் கூறி இந்தியாவின் மூலை முடுக்குகளிலிருந்துகூட ஓலைச் சுவடிகளைப் பணம் கொடுத்துச் சேகரம் செய்தீர்கள். அவற்றில் பெரும்பாலான வற்றைக் கடலிலும், தீயில் இட்டும் அழித்தீர்கள். மீதம் இருந்தவற்றை லண்டன் காட்சியகத்திற்குக் கொண்டு சென்றீர்கள். எதனை எல்லாம் எரித்தீர்கள்? அழித்தீர்கள்? அனுப்பி வைத்தீர்கள் என வரலாறு எழுதுவதில் வல்லவர்களான நீங்கள் பட்டியல் வைத்துள்ளீர்களா? தமிழின் எழுத்து மற்றும் மொழி வரலாறுகளைக் கூறும் நூல்களை நீங்கள் அழிக்கவில்லையா? தமிழின் முதல் இலக்கண நூல் அகத்தியம், இலமூரியா கண்டத்தின் வரலாறு ஆகியவை உங்கள் கையால் (நல்லூர்) ஜாப்னா நகரில் 1625ல் தீயிட்டு அழிக்கப்பட்டது எனத் தற்கால அறிஞர் கூறுவது உண்மையா?

6. வரலாற்று வல்லவர் எனப் போற்றிக் கொள்ளும் நீங்கள் மொகஞ்சதாரோ - ஹரப்பா நாகரிக காலத்

திராவிடர்களுக்கு எழுத படிக்கத் தெரியாது என்கிறீர்களே, அப்படி எனின் அவர்கள் அன்று சுமேரியா, எகிப்து, கிரேக்கம் நாடுகளுடன் எவ்வாறு வணிகம் செய்தார்கள் என விளக்க முடியுமா?

7. இந்தியாவின் வேத - இலக்கிய நூல்கள் அனைத்தும் அதன் தோற்றம் முதல் குப்த அரசர்கள் காலத்தில் அவை எழுதப்படும் வரை மனப்பதிப்பாகவே இருந்தது.[4] வேறு எந்த நாட்டின் வரலாற்றிலாவது வேதங்களில் மனப்பதிவு முறை இருந்ததா? இத்தகைய பெருமைமிக்க பாரம்பரியமுள்ள வேத இலக்கியங்கள் பொய்யானவை, கற்பனையானவை என உங்கள் முடிவிற்கு நீங்கள் எப்படி வந்தீர்கள்? கூற முடியுமா?

பண்டைய இந்திய மொழிகளான சமஸ்கிருதம், தமிழ் ஆகிய இரண்டும் முறையே தேவ மொழியாகவும், மானிட மொழியாகவும் இறைவனால் படைக்கப்பட்டன.[5] தேவ மொழிக்கும், தமிழ் மொழிக்கும் ஆரம்பக்காலத்தில் தனியான எழுத்து (லிபி) வடிவம் இல்லை. ஒலி வடிவம் மட்டுமே உண்டு. பிற்காலத்தில் இலக்கியங்கள் ஓலைச் சுவடிகளாகப் பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டன. பனை ஓலைச் சுவடிகள் 400-500 வருடங்களுக்கு மேல் மங்கி, பழுப்பு நிறம் அடைந்து ஒடிந்து விடும் தன்மையானது. இத்தகைய நூல்கள் நகலெடுத்துப் புதுப்பிக்கப்படாவிட்டால் அதனில் பதியப்பட்டுள்ள நூல் அழியும். எனவே இன்று நமக்குக் கிடைத்துள்ள இந்திய நூல்கள் மொத்தத்தில் ஒருசில மட்டுமே எனலாம்.

மேற்கத்திய நாடுகளில் வரலாறுகள் பாப்பிரஸ் (Papyrus) எனும் ஆற்று ஓரத்தில் வளரும் சம்பு போன்ற ஒருவகைக் கோரைப் புற்களில் இருந்து தயாரிக்கப்பட்ட எழுதும் பொருளினாலும், ஆட்டுத் தோலின் உட்பக்கம் படர்ந்திருக்கும், ஜவ்வுகளிலும் (Parchment) எழுதப்பட்டன.[6] இவ்வெழுது பொருட்கள் ஈரப்பதம் இன்றிப் பாதுகாக்கப் படின் ஒரு சில ஆயிரம் ஆண்டுகள் வரை கெடாமல் இருக்கும். பனை ஓலைகளைவிட இவ்வெழுது பொருட்கள் வளைந்து கொடுக்கும் தன்மையது. எனவே பாப்பிரஸ் / பார்ச்மென்டில் எழுதப்பட்ட நூல்கள் அழிபடாமல் இருந்தன. அவற்றில் பல எகிப்தின் அலெக்சாண்டிரிய நகரின் நூலகத்தில் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. அவை யேசுபிரானின் கருத்துக்களுக்கு

ஒவ்வாமல் இருப்பதாக அறிவிக்கப்பட்டு கி.பி. 391ல் (coptic) போப் தியோபிலஸ் (Theophilus) அவர்களால் எரித்து அழிக்கப்பட்டன.[7] தப்பிய நூல்கள் கி.பி. 642ல் இஸ்லாமிய படையெடுப்பின் போதும்[8], திருச்சிலுவை யுத்தத்தின் போதும் தெய்வீக விசாரணையின்போதும் (Inquisition) அழிக்கப் பட்டன. இவ்விதமாகப் பண்டைய கிறித்துவ எகிப்திய - கிரேக்க ரோமானிய சமய நாகரிகத்தைக் காட்டும் நூல்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன. அழிவிலிருந்து தப்பியவை ரோமானிய அரசின் பகுதியிலிருந்த கிறிஸ்துவ நூல்கள் ஒருசில மட்டுமே!

எனவே இன்றைய காலகட்டத்தில் உலக சமய வரலாற்றினை எழுதுவதற்கான மூலச் சுவடிகள் உலகிற்குக் கிடைக்காத நிலைமை ஏற்பட்டு விட்டது. எனினும் ஆங்காங்கே கிடைக்கும் ஒருசில நூல்களையும், அகழ்வாராய்ச்சி கண்டுபிடிப்புகளையும், கலாச்சார எச்சங்களையும் கொண்டுதான் தற்போது உலக சமயவரலாற்றினை எழுத வேண்டியுள்ளது.[9]

மாவீரன் அலெக்ஸாண்டர் எகிப்து நாட்டில் நிறுவிய நகரம் அலெக்சாண்டிரியா. இந்நகரில் செராபிஸ் (Serapis) கோவிலின் ஓர் பகுதியில் மாபெரும் நூல்நிலையம் இருந்தது. அவைகளில் எகிப்திய - கிரேக்க - ரோமானிய கடவுள்களைப் பற்றிய நூல்களும் சாக்ரடிஸ், பிளாட்டோ (Plato) போன்ற அறிஞர்களின் தத்துவ நூல்களுமிருந்தன. அந்நூல் நிலையத்தைச் சுற்றிலும் மலர்த் தோட்டங்களும் அதன் நடுவினில் நடைபாதைகளும் அமைந்திருந்தன. உட்பகுதியில், அடுக்கப்பட்ட நூல்களும் அவற்றை உட்கார்ந்து படிப்பதற்கான மத்திய மண்டபமும், உணவு உண்ணும் பொதுவிடமும், விவாத மேடைகளும் அமைந்திருந்தன. நூல் நிலையத்தின் மத்திய மண்டபத்தில் 'ஆன்மாவைச் சுகப்படுத்தும் இடம்' (The place for the cure of the soul) என எழுதப்பட்டிருந்தது. இந்நூலகமே கி.பி. 391ல் காப்டிக் போப் தியோபிலஸ் அவர்களால் அழிக்கப் பட்டது.[10]

1:3 உலகத் தோற்றம்

புவிக்கோள் இன்றைக்கு 500 கோடி ஆண்டிற்குமுன்னர் சூரியனிலிருந்து சிதறுண்டு தனிக்கோளாகப் பிறந்தது எனப்படுகின்றது. முதலில் தணற்பிழம்பாகக் காணப்பட்ட புவி, காலச்சுழற்சியில் குளிர்ந்து இறுகத் தொடங்கியது.

பலகோடி ஆண்டுகள் கழித்தே பூமி தற்போதைய வடிவத்தைப் பெற்றது. பூமி தோன்றியது முதல் இக்காலம் வரையிலான காலப்பகுதி ஐந்து ஊழிகாலங்களாக ஆய்வாளர் களால் பிரிக்கப்பட்டுள்ளது.

1. உயிரினங்கள் தோன்றாத காலம் - Archaean era

2. நீர்வாழ் உயிரினங்கள் தோன்றிய காலம் - Palaeozoic era

3. இடைக்காலம் - டைனோசர் போன்ற ஊர்வனவும் பறப்பனவும் வாழ்ந்த காலம் - Mesozioic era

4. புவி ஏறக்குறைய இன்றைய வடிவை அடைந்த காலம் - Tertiary era

5. மனிதன் உலகில் தோன்றிய காலம்- Quarternery era

பூமி தோன்றி சுமார் 400 கோடி ஆண்டுகள் வரை எந்தவிதமான உயிரினங்களும் பூமியில் தோன்றவில்லை. அதன்பின்னர்தான் அமிபா (amoeba) என்ற ஒற்றை உயிர்மம் கொண்ட உயிரினம் தோன்றியது. பல உயிர்மங்கள் கொண்ட உயிரினங்கள் அதிலிருந்துதான் தோன்றின என்றும், சுமார் 35 கோடி ஆண்டு வரை கடலில் மட்டுமே உயிரினங்கள் தோன்றி வளர்ந்தன என்றும் அதன்பின்னர் 15 கோடி ஆண்டுகளில் ஊர்ந்து செல்லும் பிராணிகளும், பாலூட்டி மிருகங்களும் தோன்றின என்றும், மனிதன் தோன்றிச் சுமார் இரண்டு லட்சம் ஆண்டுகள் ஆகியுள்ளன என்றும் விஞ்ஞான வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கின்றனர். இன்றைய மனிதன் குரங்குகளின் ஓரினத்திலிருந்து பரிணாம வளர்ச்சி பெற்று ஆதிமனித உருவங்களையும், பின்னர் நியாண்டர்தால் மனிதனாக வளர்ச்சி பெற்று, பின்பு இன்றைய மனிதனாக மாற்றம் பெற்றான் என - விஞ்ஞானம் பகர்கின்றது. பத்தாயிரம்

ஆண்டுகளுக்கு முன்பிருந்த, இன்றைய மனித கட்டமைப்புக் கொண்ட மனிதனின் எலும்புக் கூடுகள் பிரான்ஸ் நாட்டிலுள்ள குரோமாக் எனும் கிராமத்தின் அருகிலுள்ள ஒரு குகையில் 1868 ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

விலங்குகள் ஒன்றிலிருந்து மாறுபட்ட மற்றொன்றாக எவ்வாறு மாறக்கூடும் என்பது சார்லஸ் டார்வின் தன்னுடைய பரிணாமக் கொள்கையை விரிவுபடுத்தும்வரை ஒரு புதிராகவே இருந்தது. உயிரினங்கள் வாழும் பகுதி எப்போதும் ஓரே தட்ப வெப்பநிலையில் ஆண்டாண்டுக்காலம் இருப்பது அல்ல. சில பகுதிகள் திடீர் என வெப்பமாக மாறுவதும், சில பகுதிகள் குளிர்ப் பிரதேசமாக மாறுவதும், சமவெளியாக இருந்த பகுதிகள் மலைப் பகுதியாக மாறுவதும் இயற்கையாக நடந்துள்ளது காணக்கிடக்கின்றது. இன்றைய அரேபிய பகுதிகள் பலகோடி ஆண்டுகளுக்கு முன்னர் பெரும் காடுகளைக் கொண்டிருந்தன என விஞ்ஞானிகள் கூறுவதை நாம் கண்ணுற்றுள்ளோம். இவ்வாறு தங்களைச் சுற்றியுள்ள எல்லாமே மாறும்போது உயிரினங்களும் மாற்றத்திற்கு உள்ளாகின்றன. புதிய சூழ்நிலைகளை ஏற்றுக் கொண்டு அனுசரிக்க இயலாத உயிரினங்கள் அழிந்துபடுகின்றன. தகுதியுள்ளவை தப்பிப் பிழைத்துப் பல்கிப் பெருகுகின்றன. இதுவே survival of the fittest எனும் டார்வின் அவர்களின் பரிணாம வளர்ச்சிக் கொள்கை. இவ்வாறாகவே உலகில் இன்று காணப்படும் தாவரங்களும், விலங்கினங்களும், மனிதனும், தோன்றிப் பல்கிப் பெருகியுள்ளன. புதிய சூழ்நிலைகளை ஏற்றுக் கொள்ள முடியாத டைனோசர் போன்ற சில உயிரினங்கள் அழிந்துள்ளன.

எனினும் உலகத் தோற்றத்தையும் உயிர்வாழ் இனத் தோற்றத்தையும் சமய நூல்கள் மற்றொரு கோணத்தில் விவரிக்கின்றன.

அ) உலகத்தோற்றமும் இந்து சமயமும்:

இந்து சமய வேதங்கள் மற்றும் இலக்கியங்களின்படி இப்பூவுலகத் தோற்றம் மிக மிகப் பழமையானது. பிரபஞ்சங்களின் தோற்றத்துடன் இது சம்பந்தப்பட்டது. ஆனால் பூமியின் இத்தோற்றத்தை அறிந்தவர் யாரும் இல்லை. அறியாதவனும் இல்லை எனக் கூறுகின்றது.

‘உலகமும், பிரபஞ்சங்களும் அன்று இல்லாமலும் இல்லை. காற்றும் இல்லை, ஆகாயமும் இல்லை, யார் அறிவார் இதன் தோற்றத்தினை? தேவலோகத்திலிருந்து இதனை ஆள்பவர் யார்? யார் அறிவார் இதன் உண்மைகளை?

- ரிக் வேதம் 10:129;1-7

வேதங்களின் உப அங்கமாகிய உபநிஷத்துகளின் பிரகாரம், பிரபஞ்சத் தோற்றங்களும் அதிலுள்ள உயிரினங்களின் தோற்றமும், அவற்றின் அழிவு ஆகியவை சுழற்சியின் அடிப்படையில் (பிரளயத்தின் அடிப்படையில்) அமைந்தவை. உண்டாக்குதலும், அழித்தலும் பிரளயம் மூலம் மாறி மாறி வருபவை.

ரிக்வேதம் தொடர்ந்து கூறுவதாவது:

‘இங்கு இருக்கின்றது, இல்லாமலும் இருக்கின்றது, எது மறைக்கப்பட்டுள்ளது, எது மறைக்காமல் உள்ளது, யாருடைய பாதுகாப்பில் உள்ளது, யார் அறிவார் இவ்வுண்மையை? என்று இது தோன்றியது, எங்கிருந்து தோன்றியது? பிரபஞ்சங்களுடைய தேவர்களும், உலகத் தோற்றத்தின் பின்னரே தோன்றினார்கள். எனவே பூவுலகத் தோற்றத்தை அறிந்தவர் யாரும் இல்லை. இவ்வுண்மையை அறிந்தவர் யாரும் இல்லை! இவ்வுலகத்தை வானிலிருந்து கண்காணிப்பவன் யாரோ? அவனுக்குத்தான் இவ்வுண்மை தெரியும்!’

ஒரு பிரபஞ்சத்தின் வயது, படைக்கும் கடவுள் பிரம்மாவின் ஒரு நாள் பொழுதுக்குச் சமமானது. ஒரு நாள் என்பது 864 கோடி பூலோக வருடம். எனவே 864 கோடி ஆண்டுகளுக்கு ஒரு தடவை பிரபஞ்சம் தோன்றுதலும், அழிதலும், அதாவது விரிவடைதலும் ஒடுங்குதலும், சுழற்சி முறையில் தொடர்ந்து நடக்கின்றன.

கர்ல் சாசன் என்போர் எழுதியுள்ள ‘காஸ்மாஸ்’ எனும் நூலில் (பக்கம் 25ல்) பிரபஞ்சத் தோற்றம், மற்றச் சமய நூல்களைவிட இந்து சமய நூல்களில் மட்டும் விஞ்ஞானக் கருத்திற்கு நெருங்கி வருகின்றது என்று கூறியுள்ளார். இதர சமய நூல்களில் பூமியின் தோற்றம் மட்டுமே பேசப் படுகின்றது. பிரபஞ்சங்களின் தோற்றம் பற்றிப் பேசப்படவில்லை என்றும் கூறியுள்ளார். கேப்ரா (capra) எனும்

ஆராய்ச்சியாளர் "The Tao of physics" எனும் நூலில் 'பிரபஞ்சம் தொடர்ந்து விரிதலும், ஒடுங்குதலும்' எனும் தத்துவம் டார்வினின் பரிணாமக் கொள்கையைப் போன்றது என்றும், பிரபஞ்சத்தின் பரிணாம வளர்ச்சி பற்றி இந்து சமயம் மட்டுமே பேசுகின்றது என்றும் கூறியுள்ளார்.

மகாவிஷ்ணுவின் தசாவதாரம் உண்மையாகவே பூமியில் மனிதனின் பரிணாம வளர்ச்சி பற்றி வரிசைக் கிரமமாகக் கூறியுள்ளது எனப் பிரிட்டிஷ் மரபணு ஆராய்ச்சியாளர் ஹால்டேன் (JBS. Haldane) கூறியுள்ளார். அவைகளின் பட்டியலைக் காணலாம்.

அவதாரம்	நிகழ்வு	காலம்
1. மச்சாவதாரம்	நீரில்	கேம்பிரியன் காலம் எனும் Geological time scale
2. கூர்மாவதாரம்	நீரிலும் நிலத்திலும் ஊர்வன தோற்றம்	மிச்சிசிபியன் காலம்
3. வராக அவதாரம்	நிலத்தில்	நீரிலிருந்து உயிரினங்கள் பல நிலத்தை நோக்கி வெளியேறிய காலம்
4. நரசிம்ம அவதாரம்	சிங்கம் போன்ற மனித உருவம்	மனிதத் தோற்றத்தின் ஆரம்பகாலம்
5. வாமன அவதாரம்	குள்ளமான மனிதத் தோற்றம்	நியாண்டர்தால் மனிதன் போன்று சற்றுக் குள்ளமான மனிதர்களின் - தோற்றம்
6. பரசுராம அவதாரம்	கோடாரியைத் தோளில் தாங்கிய காலம்	மனிதனின் இரும்புக் காலம் (Iron age)
7. ராமவதாரம்	வளர்ச்சி பெற்ற மனிதன்	மனிதக் குரங்குகள் (வானரங்கள்) பூவுலகில் மனிதனோடு சேர்ந்து வாழ்ந்த காலம்
8. பலராம அவதாரம்	மனித வளர்ச்சி முழுமைபெற்றது	மனிதகுல மேம்பாட்டிற்காக இறைவனே உலகில் வாழ்ந்து காட்டிய காலம்
9. கிருஷ்ணாவதாரம்		
10. கல்கி அவதாரம்	இனிவர இருப்பது	நமது தற்போதைய அறிவுக்கும் கற்பனைக்கும் எட்டாத காலம்

இவ்வாறு பூமியில் உயிரினத் தோற்றம் கடலில் ஆரம்பித்து நிலத்திற்குத் தாவியது என்பதே இந்து சமயம் மற்றும் நவீன கால பரிணாமக் (evolution) கொள்கை.[11] நிலத்தில் வாழ ஆரம்பித்த மனிதன் எவ்வாறு வாழவேண்டும், தர்மங்கள் யாவை அவற்றை எப்படிப் பின்பற்றவேண்டும் என மனிதனின் தனிப்பட்ட வாழ்வினை ஒழுங்குபடுத்தி நிறுவியது ராமாவதாரம். சமூக, சமுதாய வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும், அதனில் மனிதனால் ஏற்படும் கேடுகள் மற்றும் அழிவுகள் யாவை என்பதை விளக்கிடுவது, கலியுக தொடக்கத்தில் நிகழ்ந்த கிருஷ்ணாவதாரம். இந்து சமயத்தின் இக்கோட்பாடுகள் விஞ்ஞானக் கருத்திற்கு முழுமையாக ஏற்புடையதாய் இருப்பதைக் காணலாம்.

ஆ) உலகத் தோற்றம்: யூத - கிறித்துவ சமயக் கோட்பாடு

பழைய ஏற்பாட்டிலுள்ள ஆதியாகமம் எனப்படும் புத்தகத்தில் முதல் இரண்டு அத்தியாயங்களில் பூமியின் தோற்றம் பற்றியும், தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனிதன் தோற்றம் பற்றியும் கூறப்பட்டுள்ளன. ஆனால் இவை அனைத்தும் இன்றைக்கு 6500 ஆண்டுகளுக்குள் யெகோவா எனப்படும் கர்த்தரால் நடத்தப்பட்டது என யூதம் மற்றும் கிறித்துவ சமயத்திற்குப் பொதுவானதாகக் கருதப்படும் பைபிளின் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது.[12]

பைபிளின் பிரகாரம் உலகை உண்டாக்கி அதில் சகல செடி, கொடி, உயிரினங்கள், விலங்கினங்கள் மற்றும் மனிதன் ஆகியவற்றை உண்டாக்க எல்லாம்வல்ல கர்த்தர் ஆறு நாட்களை எடுத்துக் கொண்டார். மனிதனைத் தவிர அத்தனை பொருள்களும் கர்த்தரின் வாய்மொழி உத்தரவின்படி உண்டாக்கப்பட்டவையே!

முதல் நாள்: கர்த்தர் உலகைப் படைத்து அதில் மண்டிக் கிடந்த இருளை நீக்கி வெளிச்சத்தை ஏற்படுத்தினார். வெளிச்சத்திற்குப் பகல் என்றும், இருளுக்கு இரவு என்றும் பெயரிட்டார்.

இரண்டாம் நாள்: வானத்தைப் படைத்தார்.

மூன்றாம் நாள்: பூமியையும், கடலினையும் பிரித்துப் பூமியில் தாவரங்களை உண்டாக்கினார்.

நான்காம் நாள்: சூரியனைப் பகலை ஆட்சி செய்யவும், சந்திரனையும் நட்சத்திரங்களையும் இரவை ஆட்சி செய்யவும் படைத்தார்.

ஐந்தாம் நாள்: நீர்ப் பிராணிகளையும், பறவை இனங்களையும் உண்டாக்கினார்.

ஆறாம் நாள்: பூமியில் வாழும் மிருகங்களையும் அதில் ஊறும் பிராணிகளையும் உண்டாக்கினார். அதே நாளில் தம்முடைய உருவம் போன்று ஒரு மனிதனையும் படைத்தார்.

ஏழாம் நாள்: சகல சிருஷ்டியையும் முடித்துவிட்டுக் கர்த்தர் ஓய்ந்திருந்தார்.

பழைய ஏற்பாட்டின் ஆதியாகமத்தின் முதல் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள இந்த சிருஷ்டி, இரண்டாம் அத்தியாயத்தில் பல மாறுதல்களுடன் மீண்டும் சொல்லப் பட்டுள்ளது.

'அப்போது நிலத்தில் எந்தவித மரம் செடிகொடிகளும் உண்டாகவில்லை. ஏனென்றால் பூமியின் மீது தேவனாகிய கர்த்தர் மழை பொழியப் பண்ணவில்லை (ஆதி 2:5). நிலத்தைப் பண்படுத்தி செடி கொடிகளை வளர்க்க மானிடனும் இருந்ததில்லை. மூடு பனி பூமியைச் சூழ்ந்திருந்தது. தேவன் ஓர் ஆண் மகனைப் பூமியின் மண்கொண்டு உருவாக்கி அவன் மூக்கில் உயிர்க் காற்றினை ஊதினார். அவன் மானிடத்தின் முதல் ஆண்மகனாய் ஆனான். அவன் பெயர் ஆதாம். கிழக்கே ஏடன் எனும் தேவலோகத் தோட்டத்தை உண்டாக்கித் தான் உருவாக்கிய மனிதனை அதிலே உலாவ விட்டார். அப்போது தேவன் உண்டாக்கிய ஆண்மகனுக்கு இறப்பில்லாப் பெருவாழ்வு கொடுத்திருந்தார். தோட்டத்திலே சகல விதமான மரங்களையும் அதன் நடுவில் நன்மை தீமை அறியத்தக்க ஒரு ஞான மரத்தையும் தேவன் முளைக்கப் பண்ணினார். தோட்டத்திற்கு நீர் பாய்ச்சுவதற்கு ஒரு நதியும் உண்டாக்கப் பட்டது.

முதல் ஆண்மகன் ஆதாமுக்கு ஒரு துணை கொடுக்கப்பட வேண்டுமென்று அப்போது தேவனுக்கு ஓர் எண்ணம் ஏற்பட்டது. அவர் ஆதாமுக்கு ஆழ்ந்த தூக்கம் வரச் செய்து அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்துப் பெண்ணாக உருவாக்கி அவளை ஆதாமிடம் கொண்டு

வந்தார். அவள் ஆண்மகனிடமிருந்து தோற்றுவிக்கப் பட்டதால் 'பெண்' என அழைக்கப்படுவாள் என்றார். இவளே ஏவாள் எனப் பின்னர் அழைக்கப்பட்டார்.

எனவே உலகிலுள்ள அனைத்து உயிரில்லாததும், உயிர் உள்ளதுமான பொருள்களும் (ஆண் மகன் உட்பட) கர்த்தரால் நேரடியாக உண்டாக்கப்பட்டவை. அதிலும் ஆதி ஆண் மகனுக்குக் கர்த்தரின் ஜீவ சுவாசமும் கிடைத்தது. ஆனால் உலகிலே பெண் மட்டுமே ஆண் மகன் மூலமாய்த் தோற்றுவிக்கப்பட்டாள். பெண்ணைப் படைத்த இறைவன் ஆணிடம் நீ உனது மனைவியுடன் நகமும் சதையும் போல் உறவாடி இருக்க வேண்டும் எனவும் கட்டளை இடுகின்றார். இவ்விதமாகத் தேவனின் உலகப் படைப்பு முழுமை அடைந்தது.

இ) விஞ்ஞானம் கூறும் - மனிதத் தோற்றம்

உலகம் தோன்றிய காலத்தில், பூமியில் நீரும், வாயுக்களும் இருந்திருக்க வாய்ப்பில்லை என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். பூமிக்கு நீரினைக் கொண்டுவந்த பெருமை அண்டவெளி வால்நட்சத்திரங்களைச் சாரும் எனவும் தெரிவித்துள்ளனர். அதன்பின்பு பூமியில் பல்வகை உயிரினங்களும் தோன்றின. இன்றைய மனிதனின் தோற்றம் முதன்முதலில் ஆப்பிரிக்க, பெரும் நிலப்பரப்பில் மத்திய கிழக்குப் பகுதியில், தற்போதைய எத்தியோப்பியாவில் தோன்றி உலகம் முழுவதும் பரவியிருக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது. அன்றைய காலகட்டத்தில் நிலப்பகுதி கண்டங்களாகப் பிரியாமல் இருந்தமையால் மனிதன் நிலப்பரப்பில் வியாபித்து வாழ்ந்து வந்தான். பூமியின் அடிப்பகுதியில் பின்னர் ஏற்பட்ட அசைவுகளால் நிலப்பரப்புப் பல்வேறு கண்டங்களாகப் பிரிந்தன. இவ்வாறு பிரிந்த நிலப்பரப்பு ஒவ்வொன்றிலும் வேறுபாடான தட்பவெப்ப நிலைகள் நிலவின. பூமியின் மத்திய பகுதிகளில் சூரியனின் ஒளியும், வெப்பமும் அதிகமாய் இருந்தமையால் அப்பகுதியில் வாழ்ந்த மனிதன் கருமையாகவும், மற்றப் பகுதிகள் குளிர்ச்சியாய் இருந்தமையால், அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் வெள்ளை நிறம் உள்ளவர்களாகவும் ஆயினர் என்பது இன்று பொதுவாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் கருத்து.

(ஈ) பைபிளின்படி மனிதன் பூலோகத்திற்கு வந்த கதை:

பைபிளின்படி, ஆண்மகனைத் தன்சாயலாகவும், பெண் மகளை ஆணின் விலா எலும்பிலிலிருந்தும் தோற்றுவித்த கர்த்தர் அவர்களைத் தேவலோக ஏடன் தோட்டத்தில் வைத்தார். தோட்டத்திலுள்ள அனைத்துப் பழவர்க்கங்களையும் அவர்கள் உண்ணலாம் எனவும், ஆனால் தோட்டத்தின் மத்தியிலுள்ள ஞான மரத்தின் கனியை மட்டும் உண்ண வேண்டாம் எனவும் கூறி மறைந்தார்.

அவ்வமயம் அங்கிருந்த சகல காட்டு மிருகங்களிலும் மிகவும் தந்திரக்காரனான சாத்தான் (பேய், பிசாசு, லூசிபர், அரக்கன் என்பது இவனின் மறுபெயர்கள்) அந்தப் பெண்ணை நோக்கி நீங்கள் ஞான மரத்தின் ஞானப் பழத்தினைச் சாப்பிடுங்கள் என்றான். அவ்வாறு சாப்பிட்டால் உங்கள் கண்கள் திறக்கப்பட்டு, நன்மை தீமை அறிந்து பகுத்தறிவுடன் தேவர்களைப் போல் பரம நித்திய வாழ்வுடன் வாழ்வீர்கள் என்றும் கூறினான். அவ்வாறே, ஏவாள் அந்த ஞானப்பழம் பார்வைக்கு அழகாக இருப்பதைக் கண்டு அதனைப் பறித்து ஒரு பகுதியைப் புசித்து மீதத்தைத் தன் துணைஆள் ஆதாமுக்கும் கொடுத்தாள். அவனும் அதைச் சாப்பிட்டான். அப்போது ஞானப்பழத்தின் வல்லமையால் அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டன. அப்போதுதான் அவர்களுக்குத் தாங்கள் நிர்வாணமாக இருப்பதும், அது தவறு என்றும் தெரியவந்தது. உடனே இலைகளைத் தைத்து அரைக் கச்சைகளை உண்டுபண்ணி அணிந்து கொண்டனர்.

இதனை மறுநாள் கவனித்த கர்த்தர் ஏவாளை நோக்கி நீ தடைசெய்யப்பட்ட கனியினைச் சாப்பிட்டாயா எனக் கேட்டார். நான் சாப்பிட்டேன் என்றாள். அந்தச் சாத்தானாகிய பாம்பு என்னை வஞ்சித்து விட்டது என்றும் கூறினாள். இதனால் எரிச்சலுற்ற தேவன் அவர்கள் இருவருக்கும் சாபங்கள் கொடுத்துத் தேவலோக ஏடன் தோட்டத்திலிருந்து கீழே (பூமிக்கு) துரத்தி விட்டார்.[13]

கொடுக்கப்பட்ட சாபங்கள்

சாபம் : 1. நீங்கள் சாகக்கடவீர் (சாகாத தன்மை இனி உனக்குக் கிடையாது). தடை செய்யப்பட்ட கனியைச்

சாப்பிட்ட பாவத்தின் காரணமாக உனக்கும் உன் சந்ததிக்கும் இனிக் காலம் காலமாக மரணம் ஏற்படும். பாவத்தின் சம்பளம் மரணம் என்றார்.

சாபம்: 2. நீ, இனி வாழ்வில் பாவம் செய்யக் கடவாய். அதன் காரணமாக உன் வாழ்வில் பாவச்சுமை கூடிக்கொண்டே போகும்.

சாபம்: 3. பெண்ணே! நீ பிரசவ காலங்களில் பெரும் வலியினால் அவதிப்படுவாய்.

சாபம்: 4. ஆண்மகனே! நீ இனி நெற்றி வேர்வை நிலத்தில் விழச் சிரமப்பட்டு உழைத்தே உயிர்வாழ்வாய். (இனி உனக்கு இலவசமாகக் கனி வழங்கப்படாது).

ஆதாமும் ஏவாளும் தங்கள் செயலால் மனித குலம் முழுமைக்கும் சாவு, பாவம், வலி, வேதனை, ஆகிய நான்கு சாபங்களைப் பெற்று மனிதனின் துன்பங்களுக்குக் காரணமாகி விட்டார்கள். ஆதாம், ஏவாளின் இந்தக் குற்றம் அவர்களை ஏடன் தோட்டத்திலிருந்து துரத்தப்படுவதற்குக் காரணமாகவும் மனிதன் - கடவுளின் கூட்டுறவை இழப்பதற்குக் காரணமாகவும் அமைந்தது. இதனை 'மனிதனின் வீழ்ச்சி' எனக் கிறித்தவர்கள் சொல்கின்றனர்.[14]

மேலும் இவையே மனித குலத்தின் ஆதி பாவங்களாகவும் ஆயின. எனினும் இன்று மனிதகுலம் அணிந்திருக்கும் ஆடை, ஆபரணங்கள் மற்றும் அவனின் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் ஆகியன ஞானப் பழத்தை உண்டதன் மூலம் மனித குலத்திற்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதம். இப்பெரும் செயலுக்காகக் கிறித்துவ உலகம் சாத்தானுக்கு நன்றி செலுத்தத் தவறி விட்டது என்ற கருத்தும் கற்றோர்கள் மத்தியில் இன்றளவும் உண்டு.

ஆதாமும் ஏவாளும் கணவனும் மனைவியுமாக வாழ்ந்தனர். அவர்களுக்குக் காயின்,ஆபெல் எனும் இரண்டு மகன்கள் பிறந்தனர். விவசாயம் செய்தனர். வயல் வெளியில் இருக்கும்போது காயின் தன் சகோதரன் ஆபெல்லைக் கொலை செய்தான். அவ்வமயம் உலகில் ஆதாம், ஏவாள், காயின் ஆகிய மூன்று பேர் மட்டுமே மீதமாக இருந்தனர். எனினும் காயின், நோத் எனும் தேசம் சென்று (?) மனைவி ஒருவரைக் கொண்டான் என பைபிள் கூறுகின்றது. இவ்வாறு அவர்கள்

குடும்பம் பல்கிப் பெருகியது. ஆதாமின் பத்தாவது தலைமுறையில் நோவா என்பவர் தோன்றினார். இவர் காலத்தில் பெருவெள்ளம் எனும் பிரளயம் நடந்தது.

பிரளயம் (பெரும் வெள்ளம்)

யூத-கிறித்தவ சமய நம்பிக்கையில் பெரும் நம்பிக்கையை வளர்ப்பது பெருவெள்ளம் - பிரளயம் எனும் கதையாகும். இப்பெருவெள்ளம் ஆதியாகமம் அத்தியாயம் 6 முதல் 8 வரை கூறப்பட்டுள்ளது. இப்பெருவெள்ளம் நோவா என்பவர் காலத்தில், உத்தேசமாக கி.மு. 2150 வாக்கில் நடந்ததாகக் கூறப்படுகின்றது.

கர்த்தரால் தோற்றுவிக்கப்பட்ட இவ்வுலகில் வானத்திலிருந்து வந்த தேவகுமாரர்கள், பூலோகத்திலிருந்த பெண்களின் அழகில் மயங்கி அவர்களுடன் உடலுறவு கொண்டு பல பிள்ளைகளைப் பெற்றனர். இப்பிள்ளைகள் பலவான்களானதால் உலகில் அக்கிரமம் பெருகியது. இதனைக் கண்ட கர்த்தர் மனஸ்தாபம் கொண்டார். அது, அவர் இதயத்தில் விசனமாய் இருந்தது. எனவே உலகில் தான் உண்டாக்கிய அத்தனை பொருட்களையும் அழிக்கத் துணிந்தார் (ஆதி 6:2.4). எனினும் நோவா என்பவருக்குக் கர்த்தரின் கருணை கிடைத்தது. அவன் அக்காலத்தில் இருந்த மனிதர்களில் உத்தமனாய் இருந்தான். நோவா, கர்த்தரிடம் கூடவே சஞ்சரித்துப் பேசிக் கொண்டு இருந்தான். கர்த்தரின் உத்தரவுப்படி அவன் ஒரு பெரிய பேழையைச் செய்து நோவாவின் குடும்பமும் மற்றும் அத்தனை ஜீவராசிகளும் ஜோடி ஜோடியாக ஆணும் பெண்ணுமாக அதனுள் அடைக்கப்பட்டு படகில் ஏற்றி மிக உயரமான மலையுச்சிக்குக் கொண்டு சென்றான். அவ்வாறு சென்றதும் 40 நாள் பெரும் மழை பெய்து உலகம் ஜலத்தில் மூழ்கி, மீதமுள்ள அனைத்து ஜீவராசிகளும் மாண்டன.

நோவாவிற்கு 601 வயதில், இரண்டாம் மாதம் 27ஆம் நாளிலே பூமி காய்ந்திருந்தது. அப்போது தேவன் நோவாவையும் மற்றுமுள்ள ஜந்துக்களையும் பேழையை விட்டு வெளியே வர உத்தரவிட்டார்.

நோவாவின் பிறப்பு ஆதாமின் தோற்றத்திலிருந்து 1056 வது வருடத்திற்குப் பிற்பட்டது. வெள்ளம் நோவாவின் 600

வது வயதுக்குபின் நிகழ்கின்றது. எனவே வெள்ளம் நிகழ்ந்தது உலகத் தோற்றத்திலிருந்து 1656 வருடம் சென்றபின் ஆகும். இதனை இன்னோரு முறையாகவும் கணக்கிடலாம். ஆபிரகாம் எனும் யூதர்களின் தந்தை ஆதாமிலிருந்து இருபதாவது தலைமுறையாகக் கி.மு. 1948 ஆம் வருடத்தில் பிறந்தார். எனவே ஆபிரகாமின் தோற்றத்திற்கு 292 வருடங்களுக்கு (1948-1656) முன்னர் பெரும் வெள்ளம் (1948+292=2240) கி.மு. 2240 ஆம் ஆண்டுவாக்கில் நிகழ்ந்தது எனவும் கொள்ளலாம். எனவே பைபிள்படி உத்தேசமாகக் கி.மு. 2240 லிருந்து 1656க்குள் ஜலபிரளயம் நிகழ்ந்திருக்க வேண்டும். ஆனால் கி.மு. 2240க்கு முன்னரே எகிப்திய சாம்ராஜ்ஜியம் நடந்து கொண்டிருந்தது. பாபிலோனியரின் (சுமேரியர்கள்) வரலாறும் கி.மு. 2200லிருந்து தொடங்கி, கி.மு. 1700 வரை நடைபெற்றது. எனவே எகிப்திய - பாபிலோனிய சரித்திரம் பெரும் வெள்ளத்திற்குக் குறைந்தது 50 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி, பின்பு 350 வருடங்கள் வரை நடைபெற்று வந்துள்ளது. யூதர்கள் வாழ்ந்த பாலஸ்தீனத்திற்கு அருகில் நடைபெற்ற இவ்வாட்சிக் காலங்களில், பெரு வெள்ளம் நடந்ததாகவோ அல்லது இடங்கள் பாதிக்கப்பட்டதாகவோ குறிப்பில்லை. சுற்றியுள்ள நாடுகளில் அரசுகள் நிலைபெற்று நடந்து வந்துள்ளன. இவற்றின் மூலம் பெருவெள்ள நிகழ்ச்சி நடந்ததாகக் குறிப்பிடும் பைபிள் கதைகள் உண்மையானது அல்ல என ஈண்டுக் குறிப்பிடப்படுகின்றது. இக்கதை சுமேரிய நாட்டுக் கதைகளைத் தழுவி எழுதப்பட்டதே. சுமேரியாவில் யூதர்கள் அடிமைப்பட்டிருந்த காலத்திற்கு (கி.மு. 587-538) பின்னர் அங்கிருந்து கற்று வந்ததின் அடிப்படையில், பைபிளின் பழைய ஏற்பாடு எழுதப்பட்டுள்ளது எனக் கொள்ள இடமுண்டு.

* * *

பகுதி - உ

தொன்மை வரலாறு

பகுதி-௨ : பொருள்

பக்கம்

2.1 சிந்து சமவெளி நாகரிகம் 25

2.2 சுமேரிய அல்லது மெசப்பட்டோமிய நாகரிகம் ... 31

2.3 நைல் நதி நாகரிகம் 37

2.4 மஞ்சள் நதி நாகரிகம்.......................... 41

2.5 உலக சமயங்கள் 42

2.6 யூதர்களின் வரலாறு 51

2.7 இஸ்ரேலிய வம்சாவளி 55

2.8 இஸ்ரேலிய அரசர்கள் 58

தொன்மை வரலாறு

மனிதன் தன் சுய தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றிற்கு அப்பால் தன் வாழ்க்கையை மேம்படுத்துவது நாகரிகம் என வழங்கப்படுகின்றது. பண்டைய கற்காலத்தின் இறுதியில் மனிதன் இத்தகைய நாகரிக வாழ்க்கை முறையில் ஈடுபட்டான். அவ்வாழ்க்கையின் எச்சங்களும், தொடர்புகளும் இன்று நமக்கு அகழ் வாராய்ச்சிகள் மூலமும், கலாச்சாரம் மற்றும் இலக்கியங்கள் மூலமும் தெரியவந்துள்ளன. அத்தகைய பண்டைய நாகரிகங்களில் மிகச் சிறந்ததாகக் காணப்படுவது நான்கு.

1. சிந்து சமவெளி அல்லது மொகன்ஜதாரோ - ஹரப்பா நாகரிகம் (கி.மு. 3500-1500)

2. எகிப்திய நாகரிகம் அல்லது நைல்நதிதீர நாகரிகம் (கி.மு. 3600 - 1000)

3. மெசப்பட்டோமிய அல்லது சுமேரிய நாகரிகம் (கி.மு. 4000 - 600). தற்போது இப்பகுதி ஈராக் நாட்டில் அமைந்துள்ளது.

4. சைனா நாட்டின் ஹுவான்கோ அல்லது மஞ்சள் நதிதீர நாகரிகம் (கி.மு. 1700 - 1200)

இந்நாகரிகங்கள் அனைத்தும் ஆற்றுப் பள்ளத்தாக்கிலும், ஆசிய - ஆப்பிரிக்கப் பெருநிலப்பரப்பிலும், மிதமான தட்பவெட்ப பகுதியிலும் தோன்றியுள்ளதைக் காணலாம்.

2:1. சிந்து சமவெளி நாகரிகம்

சிந்துநதி இமயமலையில் தோன்றித் தார்ப்பாலை வனத்தை மேற்கு ஓரமாகக் கடந்து, குஜராத் மாநிலத்திற்கு மேற்கே (இன்றைய பாகிஸ்தான்) அரபிக்கடலில் கலக்கின்றது. இந்நதியின் முகத்துவாரத்திற்குக் கிழக்கே ரண் ஆப் கட்ச் பகுதியில் ஸ்ரீகிருஷ்ணன் ஆண்டுவந்த துவாரகா நகரம் இருந்தது. சிந்து நதிக்கு இணையாகக் கிழக்கே புராதன சரஸ்வதி நதி, இமயமலையில் தோன்றி, தார்ப்பாலைவனம் வழியாகப் பாய்ந்து அரபிக்கடலில் சங்கமமாகியுள்ளது என்று பல்வேறாகக் கூறப்பட்டுள்ளது. இத்தகைய சரஸ்வதி நதியின்

கரைகளில் தொடங்கி ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதிவரை பன்னிரண்டு லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் சிந்து சமவெளி நாகரிகம் பரவியிருந்தது. இவற்றிலிருந்த 1150 குடியிருப்புகளில் அறுபது சதவீதம் தற்போதைய இந்தியாவில் உள்ளது. மீதமுள்ளவை பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானத்திலும் பரவியுள்ளது. சரஸ்வதி (இன்றைய கிக்கார் நதி) நதிக்கரைகளில் மட்டும் 32 சதவித நாகரிக இடங்கள் உள்ளன. இந்நாகரிகத்தின் சிறப்பான ஆய்வுக்களமாக (நகரங்கள்) விளங்கும் மொகன்ஜதாரோ, ஹரப்பா ஆகியவை பாகிஸ்தானிலும், கலிபங்கான் (ஹரியானா), தலாவி (குஜராத்) போன்ற புகழ்பெற்ற களங்கள் இந்தியாவிலும் உள்ளன. சிந்துசமவெளி நாகரிகப் பகுதியில் அன்றைய மக்கள்தொகை 50 லட்சமாக இருந்திருக்கக்கூடும். இந்நாகரிகம் பற்றிப் பல வல்லுநர்கள் கூறுவதைக் காணலாம்.

‘உலகின் பெரும்பகுதி மக்களெல்லாம் தோல் ஆடைகளையும், சணல் மற்றும் கம்பளி ஆடைகளையும் அணிந்து கொண்டு, மாமிசம் மட்டுமே உண்டு திரிந்து கொண்டிருந்த பண்டையக் காலகட்டத்தில், சிந்து சமவெளியில் வாழ்ந்திருந்த நம் முன்னோர்கள் பயிரிட்டு வேளாண்மை செய்து, சுட்ட செங்கலால் வீடுகள் அமைத்தும், பருத்தியினால் அழகிய ஆடைகள் செய்தும், பெண்கள் அழகிய அணிகலன்களை அணிந்து கொண்டும், இறைவனை வழிபடுவதற்கு முன்பு தெப்பக்குளங்களில் நீராட வேண்டும் என்ற கட்டுப்பாடுடனும் செவ்வனே வாழ்ந்துள்ளனர்.’

சிந்து சமவெளிமக்கள் பயிர்த்தொழில் தவிர முத்திரை அச்சுகள் (seals), வண்ணக் கற்களினால் ஆன மாலைகள், தங்கத்தினாலான ஆபரணங்கள், தாமிரம், வெண்கலம், ஈயம் மற்றும் தகரம் போன்ற உலோகங்களினால் ஆன வீட்டு உபயோகப் பொருட்கள் ஆகியன செய்யும் திறமை உடையவர்களாகவும் இருந்துள்ளனர். இப்பகுதியில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் அனைத்திலும் உபயோகப் படுத்தப்பட்டுள்ள சுட்ட செங்கல்கள் ஒரே அளவு உடையதாகவும் காணப்படுகின்றன. ஊரின் நடுவில் படிக்கட்டுடன் அமைந்துள்ள தெப்பக்குளமும், அதனைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள மண்டபங்களும், வீடுகள் தோறும் குளியலறையும், அதன் தளங்கள் நீரை வடிக்கும் பொருட்டுச்

சாய்வாகவும், வீடுகளின் கழிவுநீரை அகற்ற அவர்கள் கைக்கொண்ட பாதாளச் சாக்கடையும் (சாக்கடைகள் கற்கள் கொண்டு மூடப்பட்டிருந்தன), கற்கள் பாவப்பட்ட சாலைகளும், இந்நாகரிகத்தின் சிறப்பு அம்சங்களாகும். தமிழ்நாட்டில் இன்று இருப்பதுபோன்ற முற்றங்களுடைய வீடுகளும், முற்றங்களில் தானியங்களை அரைக்க உரல்களும், ஆட்டுக்கல்களும் காணப்பட்டுள்ளன. அங்குக் காணப்பட்ட இதரபொருட்கள் : நடனமாடும் பெண்சிலை (தடித்த உதடுகளும் கைநிறைய வளையல்களும், கழுத்தில் மாலைகளும் உடைய அந்தமான் தீவு வாசிகளைப் போன்று உருவம் கொண்டவர்), யாழ் இசைக் கருவி போன்று தந்திகள் கொண்ட இசைக் கருவி, சதுரங்க விளையாட்டில் உபயோகப் படுத்தப்படும் காய்கள், சிறுவர்கள் விளையாடுவதற்கு மாட்டுவண்டி உருவம் கொண்ட பொம்மைகள், களிமண்ணினால் ஆன சித்திர எழுத்துக்களைத் தாங்கிய முத்திரைகள், ஸ்வஸ்திக் அடையாளம் கொண்ட முத்திரைகள், நெற்றிப் பட்டயம் அணிந்துள்ள புரோகிதர் சிலை, சுட்ட மண்ணினால் ஆன பெண் உருவகங்கள், யோக நிஷ்டையிலிருக்கும் ஒரு யோகியின் உருவம், வீடுகளிலும், பொதுவிடங்களிலும் வேள்வி செய்யும் யக்ஞ குண்டம், ஆகியவையாம்.[1] மாடி வீடுகள் கட்டப்பட்டிருந்தன. அவ்வீடுகள் கட்டத் தற்போதைய காலத்தைப் போன்று உத்திரங்களும், மாடி, தளம் அமைக்க (Madras terrace) மூங்கில் பட்டிகளும், பாய்களும் (reeds), சாந்து கலந்த கலவையும், உபயோகப்படுத்தப் பட்டிருந்தன.

சித்திர வடிவில் அடையாள எழுத்துக்கள் இருந்தன. விஞ்ஞான அறிவு பெற்றிருந்த அம்மக்கள், நீளம், கனம், காலம், எடை, அளவு, பரிமாணம் ஆகியவற்றை அளந்து அறியும் திறன் பெற்றிருந்தனர். வைத்தியத்திலும் முன்னேறி யிருந்த அம்மக்கள் குறிப்பாகப் பல் வைத்திய சிகிச்சையில் திறன் உடையவர்களாயிருந்தனர். இவர்கள் சுமேரியா, எகிப்து நாட்டு மக்களுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். வாணிபம் கடல்வழியாய் நடைபெற்றது. சுமேரியா, மற்றும் எகிப்தில் சிந்துநாகரிகச் சின்னங்கள் பெருமளவில் காணப்பட்டுள்ளன. ஆனால் சிந்து பிரதேசத்தில் மற்றப் பிரதேசச் சின்னங்கள் அந்த அளவுக்குக் காணப்படவில்லை.

எனவே வர்த்தகம் ஒருவழிப்பாதையாய் இருந்துள்ளது. வாணிபம் தனிபட்ட முயற்சியின் காரணமாகவே நடைபெற்றுள்ளது. கூட்டு முயற்சிகள் காணப்படவில்லை. அரசனின் அரண்மனை மற்றும் கோவில்கள் ஆகியவையும் காணப்படவில்லை. மொகன்ஜதாரோவில் நகரின் நடுவே தெப்பக்குளம் (*185 x 115 x 8* அடி) இருப்பதும் அதன் அடிப்பகுதியும் ஓரத்திலுள்ள சுவர்களும் சுட்ட செங்கல்லால் கட்டப்பட்டு நீர் கசியாவண்ணம் ஆக்கப்பட்டிருந்ததும், ஊரின் நடுவில் *82* x *82* அடி அளவிலான சதுரமான மக்கள் அரங்கமும் காணக்கிடக்கின்றன. அவ்வரங்கங்கள் வரிசைக்கு ஐந்து வீதம் நான்கு வரிசைத் தூண்களும், உயரமான மேற்கூரையும் கொண்டிருந்தன. பெரிய தானியக் களஞ்சியமும் (*153* x *50* அடி), அதனைச் சுற்றிக் கைவினைஞர்களின் உலைகளும், தொழிற் கூடங்களும் காணப்படுகின்றன. மக்களின் வீடுகள் இரண்டு அறைகள் முதல், பெரிய ஆடம்பரமான வீடுகள் வரை இருந்தன. வீடுகளுக்குக் கதவுகளும், ஜன்னலும் இருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் கிணறுகளும் இருந்தன.

சிந்து சமவெளிப் பகுதியில் 400-600 வகையிலான சித்திர வடிவ எழுத்துக்கள் காணக்கிடைக்கின்றன. ஆனால் அவ்வெழுத்துக்கள் கூறும் பொருள் யாது என இன்னும் உணரப்படவில்லை. அவை பொருள்கூறும் எழுத்துக்களா அல்லது தனி மனிதனை அடையாளம் காட்டிடும் குறிச்சொற்களா (விலாசம் காட்டும் எழுத்துக்களா) என்று இன்றுவரை தெரிந்துகொள்ள முடியவில்லை. எழுத்துக்கள் அவர்களுக்கு இன்மையால் இலக்கியங்கள் இருந்திருக்க வாய்ப்பில்லை. மனப்பாட இலக்கியங்கள் இருந்திருக்கக் கூடும். அவர்கள் வணிக கணக்குகளையும், நிகழ்வுகளையும் எழுதி வைக்கவில்லை. நிகழ்வுகளையும், கணக்குகளையும் வியாபாரிகள் எழுதும் பழக்கம், தமிழ்நாட்டில் எழுதும் தாள்களும் மைகளும் 1950 ஆம் ஆண்டுவாக்கில் பிரபலம் ஆகும் வரை கிராமமக்கள், குறிப்பாக வணிகர்கள், அதிலும் குறிப்பாகப் பலசரக்குக் கடை வணிகர்கள் எழுதிவைக்கவில்லை. பலசரக்குக் கடைகளில், நூற்றுக்கும் மேற்பட்ட விற்பனைப் பொருட்களும் அவற்றின் கொள்முதல் மற்றும் விற்பனைவிலை ஆகியவை இன்றைய தேதிவரைகூட மனப்பாடமாகவே பராமரிக்கப்படுகின்றன. எனவே எழுதத்

தெரியாமை வணிகர்களுக்கு அக்காலகட்டத்தில் பெரும் தடங்கலாக இருந்திருக்க வாய்ப்பில்லை. உதாரணமாக இந்நூலின் ஆசிரியரின் மாமனார் கையெழுத்து இடக்கூட தெரியாமல் இருந்தபோதிலும் 1930-1950 ஆம் ஆண்டுகளில் பர்மா-ரங்கோன் நகரின் போலேன் தெருவில் 100 ஆம் நம்பர் வளாகத்தில் பெரும் மரக்கடை வைத்திருந்தது இங்கே குறிப்பிடத்தக்கது. அதுபோன்று அக்காலச் சிந்துசமவெளி மக்களும் எழுத்து மூலமாக அல்லாமல் தங்கள் வாழ்க்கையை மேற்கொண்டிருக்கக் கூடும். வேத பாடல்களும், தோத்திரப் பாடல்களும் இன்றுபோல் அன்றும் மனப்பாடமாகவே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

தூத்துக்குடி, சிவகெங்கை, ராமநாதபுரத்தைச் சார்ந்தவர்கள், ஆங்கில அறிவும், எழுத்தறிவும் இல்லாத பலர் இலங்கை, மலேயா, சிங்கப்பூர் நகரங்களில் இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை பெரும் வணிகர்களாகத் திகழ்ந்துள்ளனர்.[2] எழுத்தறிவு பிரபலமாய் இல்லாவிடினும் எண்ணறிவில் இப்பெருமக்கள் நிபுணர்களாய் விளங்கினர். இவர்களுக்கு, மாகாணி, அரைக்கால், மும்மாகாணி (1/16, 1/8, 3/16) வாய்பாடுகளை மனப்பாடமாய் ஒப்புவிக்கும் திறமை இருந்தது. எனவே சிந்து சமவெளிமக்களும் இன்றுபோல் அன்றும் பெரும் ஞாபகசக்தியுடன் கூடிய மனப்பதிப்பாகத் தங்களது தொழிலையும், வாழ்க்கையையும் மேற்கொண்டிருக்கக் கூடும் என வலிவுடன் கூறலாம். இவற்றிலிருந்து கீழ்க்கண்ட முடிவிற்கு நாம் வரலாம்.

1. சிந்து சமவெளி நாகரிக காலத்தில் உருவ வழிபாடுகள் இல்லை, கோவில்களும் இல்லை. உருவ வழிபாடுகளும் கோவில்களும் இருந்தமைக்கு ராமாயணத்திலும், மகாபாரதத்திலும் கூட, சான்றுகள் இல்லை எனக் கூறலாம். உருவவழிபாடும், சிலைகள் செய்தலும், பெரும் கோவில்கள் கட்டுவதும் தென்னிந்தியாவில் தொடங்கி வடக்குநோக்கி நகர்ந்த பிற்காலக் கலாச்சாரமே எனலாம்.

2. புராதன சிந்து சமவெளி காலத்தில் அரசர்கள் இருந்திருக்க வாய்ப்பில்லை. இருந்திருந்தால்கூட வெளிநாடுகளின் அரசர்கள் போன்று ஆடம்பர மாளிகைகளில் வாழவில்லை எனலாம். எளிய வாழ்வு மேற்கொண்டு தங்கள் இருப்பிடங்களைத் தெய்வங்களைச் சுற்றியும், வழிபாட்டுத்

தலங்களின் அருகிலும் வைத்திருந்தனர் எனக் கொள்ளலாம். எனவே வழிபாட்டுத் தலங்கள் கோ+இல், அரசனின் வாழ்விடம் என்றானது (கோ என்றால் அரசன், இல் என்றால் இல்லம் அல்லது வீடு).

3. 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்பது சமீப காலத்தில் எழுந்த பழமொழி. ஆனால் பண்டைய சிந்துசமவெளி இந்தியர்கள் எண்களில் மட்டுமே நிபுணத்துவம் பெற்றிருந்தனர். எழுத்துக் கலையை அவர்கள் ஊக்குவிக்கவில்லை. எழுத்துக்கள் மூலம் ஒருதலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லப்படும் வேதங்களும், தோத்திரப் பாடல்களும் அதனின் இதயமான ஒலி உச்சரிப்பில் வேறுபட்டுவிடக் கூடும் என்பதால் எழுதும் கலை அவர்களால் உண்டாக்கப்படவில்லை. தமிழும், சமஸ்கிருதமும் அவர்களின் பேச்சு மொழியாய் இருந்திருக்கும். (பக்கம் 205 - Booknumber 112)

சிந்துவெளி நாகரிகம் பற்றி எண்ணற்ற நூல்கள், வெளிவந்துள்ளன. கருத்தரங்கங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அவ்வாறு அக்டோபர் 13-17, 2001ல் இத்தாலியில் ரவெண்ணா நகரில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் A.Panains, A.Piras ஆகியோர் "Growing in a foreign world : For a History of the Melukha Villages in Mesopotomea in the Third Millennium-BC" எனும் ஒரு நெடிய கட்டுரையில் கீழ்க் கண்டவாறு கூறியுள்ளார்கள்.

"இன்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்பாகச் சிறப்புடனிருந்த சிந்து சமவெளி நாகரிகப் (சி.ச.நா) பகுதிகள் சுமேரிய நாகரிக ஆவணங்களில் மெலுக்கா நாடு எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. மெலுக்கர்கள் எனும் சிந்து சமவெளி மக்கள் கி.மு.3000ம் ஆண்டிற்கு முன்பு கூட சுமேரிய பகுதியில் கூட்டம் கூட்டமாய்க் குடியேறியிருந்தனர்.[3] சுமேரிய மக்களுடன் ஒன்றிணைந்த உறவு கொண்டிருந்தனர். சி.ச.நா சின்னங்கள் சுமேரியாவின் நகர்களான ஊர், அக்கேடியா, லாகாஸ் போன்ற நகர்களின் அரச குடும்பத்தினரின் கல்லறைகளில் பெரிதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சி.ச.நாகரிக எழுத்துக்கள், மயில் தோகைகள், வெள்ளி, தங்கம், தகரங்கள், பாசி மாலைகள் - போன்றவை சுமேரியாவில்

காணப் பெற்றுள்ளன. வணிக ரீதியாகவும், சலாச்சார ரீதியாகவும் சுமேரியாவுடன் பெரும் தொடர்பிருந்தும், அங்குள்ள பொருள்களோ, எழுதும் முறையோ, சிக்குரட் எனும் கோவில்களோ, அரசனின் பெரிய அரண்மனைகள் போன்றவை சி.ச.நா இடங்களில் காணப்படவில்லை. வெளிநாட்டின் கலாச்சாரம் இந்தியத் தன்மையை மாசுபடுத்தி விடும் என இந்தியர்களும், அவர்களுக்கு வழிகாட்டியாய் விளங்கிய பிராமணர்களும் நினைத்தமையே இதற்கான காரணம் (பார்க்கவும் மேற்கண்ட கட்டுரையின் பக்கங்கள் 261-263).'' இந்நாகரிகத்தினைப் பற்றி மேலும் அறிந்திடக் கீழ்க்கண்ட தரவுகளை நாடலாம்.

1. S.Kalyanaraman “Meluhha - a Visible Language” - Saraswathi Research Centre, Herndon, Virginia, USA (2013)
2. www.aakklhelsinki.fi/melammu

2:2. சுமேரிய அல்லது மெசபட்டோமிய நாகரிகம்

இந்நாகரிகம் மேற்கு ஆசிய, பகுதியில் யூப்ரட்டிஸ் - டைகிரிஸ் ஆற்றுப்படுகையில் மலர்ந்திருந்தது. இப்பகுதியில் பல நாட்டு மக்களும் ஒன்றுகூடி வாழ்ந்திருந்தனர், எனவே இது ஒரு கலப்பு நாகரிகம். இதன் தலைநகர் பாபிலோன் எனலாம். தற்போது இந்நகர் அழிந்துபட்டு, ஈராக் நாட்டில் உள்ளது. ஐரோப்பாவும், ஆசியாவும் சந்திக்குமிடத்தில் பாபிலோன் இருந்தமையால் பண்டைய நாகரிக காலத்தில் பெரும் வணிகத்தலமாய் விளங்கியது. மெசபட்டோமியாவின் வடபகுதி அசிரியா என்றும், தென்பகுதி சுமேரியா எனவும் அழைக்கப்பட்டது.

இப்பகுதியில் பலதெய்வ வழிபாடுகள் பிரபலமாய் இருந்துள்ளன.[4] கோவில்களுக்குப் பெயர் சிக்குரட் (Ziggurat) என்பதாம். சுமேரியாவின் பிரதான நகரங்கள் பாபிலோன், ஊர், எரிடு, லாகாங், அக்கேடியா, ஆசூர், நினேவா, நிப்பூர் ஆகியவை. இந்நகரங்கள் தனித்தனி அரசர்களால் ஆளப்பட்டு,



சூரிய பகவானுக்காக கட்டப்பட்ட சிக்குரட் எனும் கோவில்

அவர்களுக்கிடையே நடைபெற்ற ஓயாத போர்களால் இப்பகுதி பின்னர் பாழ்பட்டு விட்டது.

ஆசூர், இஸ்தார், மர்துக், என்லில் போன்ற தெய்வங்கள் வணங்கப்பட்டன. கோவில்கள், சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டு, பளிங்குக் கற்களால் அழகுபடுத்தப் பட்டிருந்தன. சூரியவணக்கம் பிரபலமாய் இருந்தது. சூரிய பகவானின் சிலை கோவிலின் உச்சியில் வைக்கப்பட்டிருந்தது. கோவில்கள், கல்விக் கூடமாகவும், மக்கள் கூடுமிடமாகவும், வானசாஸ்திர ஆய்வுக் கூடமாகவும் விளங்கின. இம்மக்கள் முற்பிறவியையும், ஜோதிடத்தையும் நம்பினார்கள்.

மெசபடோமியா மக்கள் வேளாண்மையில் நிபுணத்துவம் பெற்றிருந்தனர். பாசனத்திற்காக ஆற்றிலிருந்து பல கால்வாய்களும், குளங்களும் மற்றும் தடுப்பணைகளும் அமைக்கப்பட்டிருந்தன. கொல்லர், குயவர்கள், தட்டார், தச்சர் ஆகிய கைவினைஞர்கள் இருந்தனர். இம்மக்களே போரில் பயன்படும் ரதங்களை முதலில் கண்டுபிடித்தவர்கள். வணிகத்தின் பொருட்டுச் செம்பு, வெள்ளி, தங்கக் காசுகள் வெளியிடப்பட்டன. எழுதும் கலை கி.மு. 4000ஆம் ஆண்டிலே வழக்கத்திலிருந்தது. வட்டத்திற்கு 360 பாகை

என்பதையும், மணிக்கு 60 நிமிடங்கள், நிமிடத்திற்கு 60 துளிகள் என்பதையும் இவர்களே முதன் முதலில் உபயோகித்தனர். இந்நாட்டு அரசர்களில் மிகவும் பெயர் பெற்றவர் கும்முராபி (Hummurabi) என்பவர் (கி.மு. 2067-2025).[5] இவர் மெசபட்டோமிய மக்களுக்கு வாழ்க்கைக்கான சட்டதிட்டங்களை வகுத்து வழங்கினார். அவற்றைக் கல்லில் செதுக்கியும் வைத்தார்.

மெசப்பட்டோமிய நாகரிகப் பகுதியின் அருகிலேயே யூதர்கள் வாழ்ந்த ஜெருசலேம் உள்ளது. யூதர்களின் நாகரிகம் மெசப்பட்டோமிய நாகரிகத்திலிருந்து எடுக்கப்பட்டவையே! பழைய ஏற்பாட்டின் பிரளயம் (Great deluge), மெசப்பட்டோமியர்களின் கதைகளிலிருந்து எடுக்கப் பட்டவையே! மெசப்பட்டோமிய மக்கள் சற்றுக் கறுப்பு நிறத்தவர்களாய் இருந்தனர்.

மெசப்பட்டோமிய, சிந்துசமவெளி நாகரிகங்களின் ஒப்பீட்டைக் கீழே காணலாம்.

	மெசப்பட்டோமிய நாகரிகம்	சிந்து சமவெளி நாகரிகம்
1.	கோவில்கள், சிலைகள் இருந்தன	கோவில்களோ சிலைகளோ கிடையாது.
2.	எழுதும் கலை அபிவிருத்தி யடைந்திருந்தது.	எழுதும் கலை உற்சாகப் படுத்தப் படவில்லை. அன்றைய மக்கள் ஒலிவடிவமான வேத வாசகங்களை எழுத்து மூலமாகக் குறிப்பிட விரும்பவில்லை என்பது காரணமாய் இருந்திருக்கக்கூடும்
3.	எழுத்து மூலமான கலை இலக்கியங்கள் உண்டு.	வாய்மொழி இலக்கியங்கள் உண்டு. ஆனால் எழுத்து மூலமாக இல்லை.
4.	கூட்டல், கழித்தல், வானசாஸ்திரம் போன்றவை உண்டு	இங்கேயும் உண்டு.
5.	அரசன் அவனது அரண்மனை ஆகியவை சிறப்பாக இருந்தன.	அரசனும், அரண்மனைகளும் காணப்படவில்லை.
6.	மக்களின் நிறம் கறுப்பு	பல நிறம் கொண்டவர்கள்
7.	கலப்பின நாகரிகம்	கலப்பின நாகரிகம்.[6]

8.	வணிகம் - தரைவழி-முதன்மையாய் இருந்தது.	கடல்வழி வாணிபம் முதன்மையாய் இருந்தது.
9.	சிந்து சமவெளி நாகரிகச் சின்னங்கள் இங்கே அதிக அளவில் காணப்படுகின்றன.	சிந்து சமவெளியில் மெசப்பட்டோமிய நாகரிகச் சின்னங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. (அதிக அளவில் அல்ல).
10.	பெண்களுக்குச் சமுதாயத்தில் சம அந்தஸ்து உண்டு	இங்கேயும் உண்டு.
11.	எழுதுவதற்குக் களிமண்ணினால் ஆன சிலேட்டுகளை உபயோகப்படுத்தினர்.	அடையாளங்களைத் தெரிவிக்க களிமண் சிலேட்டுகளில் குறிகள் இடப்பட்டன.
12.	பெரும்பான்மையான வீடுகள் களிமண்ணால் கட்டப்பட்டவை (கோவில்கள் சுட்ட செங்கல்லால் கட்டப்பட்டிருந்தன)	சுட்ட செங்கல்லால் வீடுகள் கட்டப்பட்டிருந்தன.
13.	குதிரை பூட்டிய தேர்கள் உபயோகத்திலிருந்தன.	இதற்கான போதிய சான்றுகள் இன்னும் கிடைக்கப் பெறவில்லை.
14.	மெசப்பட்டோமியாவின் ஹிட்டிஸ் (Hittites) அரசனும் மிட்டானி (Mittani) அரசனும் செய்த அரசியல் ஒப்பந்தம் (கி.மு. 2200) வேதகால தெய்வங்களான இந்திரன் வருணன், மித்திரன் பெயரால் செய்யப்பட்டது.[7, 8]	இதுபோன்ற குறிப்புக்கள் இங்கே காணப்படவில்லை.
15.	பேசிய மொழியின் பெயர் -சுமேரியன் என்பதே (இம்மொழி கிமு. 2ம் நூற்றாண்டில் வழக்கொழிந்துவிட்டது)	இவர்கள் பேசிய மொழி முண்டா, தமிழ் மற்றும் சமஸ்கிருதம் கலந்தவை. தமிழ்-மொழி எச்சங்கள் ஆப்கானிஸ்தானிலும், பாலஸ்தீனத்திலும், மெசப்பட்டோமியாவிலும் (ஊர் எனும் நகரம்) காணப்பட்டுள்ளன. லத்தீன்,கிரேக்க மொழிகளில் சமஸ்கிருத வேர்கள் காணப் படுகின்றன. சுமேரியநாட்டில் அரசர்களின் (Hittites) பேசும் மொழி சமஸ்கிருதமாயிருந்தது.

16.	யுத்தகங்ளும், போர்களும் வாழ்க்கை நெறியாய் இருந்தன.	யுத்தங்களோ, போர்களோ நடந்ததற்கு எவ்விதச் சான்றும் கிடைக்கவில்லை. ஜேன் எனும் பிரிட்டிஷ்அகழ்வாராய்ச்சியாளர் (Jane McIntosh) கூறியுள்ளது போல் இப்பகுதி 'அமைதிப் பூங்காவாக விளங்கியுள்ளது' இஃது ஓர் அதிசயமே!

மர்ம முடிச்சுகள்

1. சிந்து சமவெளி நாகரிகம் அண்டைய நாகரிகங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தபோதிலும் அவற்றின் நாகரிகக் கலப்பு இல்லாமல் எப்படித் தனித்து இருக்க முடிந்தது. (சுமேரியாவைப் போன்று கோவில்களோ, உருவ வழிபாடோ, அரண்மனைகளோ, ஆட்சிசெய்ய அரசன் இருந்தமைக்கோ, சிந்து வெளியில் சான்றுகள் இல்லை)?

2. வேதங்களை எழுத்துவடிவில் எழுதக்கூடாது எனும் நியதியினால் ஆதித் தமிழ், ஆதி சமஸ்கிருதம் ஆகிய இரண்டிற்கும் எழுதும் கலை மெசப்பட்டோமிய தொடர்புகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவில்லை. இதிலிருந்து எழுதாக்கிளவியான வேதங்கள் சுதந்திரமானவை என்பதும் சிந்து சமவெளி நாகரிகத்திற்கு முந்தியன என்பதும் நிரூபிக்கப்படுகின்றன. (அசோக சக்கரவர்த்தி காலத்தில்தான் எழுதும் கலை முதலாவதாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது). தமிழ், சமஸ்கிருதம் மொழிகளை எழுதுவதற்கு ஆரம்பத்தில் பிராமி எழுத்துக்களே உபயோகப்படுத்தப்பட்டன. எகிப்து நாட்டின் பண்டைய செங்கடல் துறைமுகமான 'அல்கோடிம்' (Quseir-Aal- quadim) நகரத்தில் இன்றைக்கு 2000ம் வருடத்திற்கு முந்தைய பிராமி எழுத்திலான தமிழ்ப் பலகைகள் சமீபத்தில் காணப்பட்டுள்ளன.

சுமேரியா நாட்டில் யூதர்கள் கி.மு. 586 முதல் 538 வரை (போரில் தோற்று) அடிமையாய் இருந்தனர். அதுசமயம் சுமேரிய வாழ்க்கை முறையையும் எழுதும் முறையையும் கற்றுக் கொண்டனர். சுமேரிய நாகரிகத்திற்கும் யூத நாகரிகத்திற்கும் இடையிலான சில ஒப்பீடுகளை அடுத்தப் பக்கத்தில் காணலாம்.

	சுமேரிய நாகரிகம்	யூத நாகரிகம்[9]
1.	மிக மிகத் தொன்மையானது	தொன்மையானது
2.	சுமேரிய மொழி பேசப்பட்டது.	அராமிக் மற்றும் எப்ரு (Hebrew) மொழிகள் உபயோகத்திலிருந்தன.
3.	பல இனக் கலப்பு நாகரிகம்	கலப்பு அனுமதிக்கப்படவில்லை. (பார்க்கவும்லெவி. 19:19)
4.	எழுதும் கலை வழக்கத்திலிருந்தது.	வழக்கத்திலிருந்தது.
5.	வளமான ஆற்றுவெளி நாகரிகம்	வறட்சியான, மலைப்பாங்கான பகுதியில் பிறந்த நாகரிகம்.
6.	எல்லா மக்களும் சமமாகக் கருதப்பட்டனர்.	யூதர்களே தேவனால் (கர்த்தரால்) தேர்ந்தெடுக்கப்பட்ட சமுதாயம் எனும் கொள்கை உடையவர்கள்.
7.	பல இன மக்களும் பல தேவர்களை வழிபட்டனர்.	ஒரே இனத்தவர் என்பதால் தங்களது தெய்வமான யெகோவா எனும் கர்த்தரை மட்டுமே (yehowa) வழிபட்டனர்.
8.	எந்தத் தெய்வத்தையும் வழிபடலாம்.	இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்கள் இனம் வணங்கும் கடவுள்மட்டுமே உண்மையானது, எனவே மற்றத் தேவன்களை வணங்குவோர் கொல்லப்பட வேண்டும் என்ற கொள்கை உள்ளவர்கள்.
9.	இறைவன் பலர்	ஒரே இறைவன் மட்டுமே!
10.	பிரதான கோவில்கள் பல இருந்தன.	ஜெருசலேம் கோவில் மட்டுமே பிரதானமானது.
11.	கோவில்களுக்குப் பெயருண்டு	தனிப் பெயர் இல்லை.
12.	கோவில்களில் உருவ வழிபாடு இருந்தது.	உருவ வழிபாடு இல்லை. கோவிலின் கருவறையில் இறைவனால் வழங்கப்பட்ட உடன்படிக்கைகள் அடங்கிய பெட்டி மட்டுமே இருந்தது.
13.	கோவில்களில் பலியிடுதல் உண்டு.	பலியிடுதலே பிரதான வழிபாடாக இருந்தது.
14.	ஆணும், பெண்ணும் சரிசமமாகக் கருதப்பட்டனர்.	பெண் ஆணுக்காகப் படைக்கப் பட்டவள் எனும் கொள்கை உடையவர்கள்.
15.	ஓயாமல் நடந்த போரினால் இந்நாகரிகம் அழிந்தது.	ஓயாமல் நடந்த போரினால் பேரழிவைச் சந்தித்தது.
16.	தொன்மைக் காலத்தில் உலகிற்கு நாகரிக வாழ்வை அளித்தது.	நாகரிக வாழ்வை வழங்கவில்லை

2:3 நைல் நதி நாகரிகம்

நைல்நதி, மத்திய ஆப்பிரிக்க பெருநிலப்பரப்பில் தோன்றி வடக்காகப் பாய்ந்து எகிப்து தலைநகர் கெய்ரோ அருகில் மத்திய தரைக் கடலில் சங்கமிக்கின்றது. ஆற்றின் இருபக்கமும் வண்டல்மண் படிந்துள்ள பகுதியில் வேளாண்மை சிறப்புற்றிருந்தது. இப்பகுதி மக்கள் தொன்மைக் காலத்திலே மாடுகள், ஆடுகள், பன்றி, கழுதைகள், ஒட்டகங்கள் ஆகியவற்றை வீட்டில் வளர்க்கப் பக்குவப்படுத்தினர். எழுதும் கலை வழக்கத்திலிருந்தது. புராதன எகிப்தியர்கள் சுமார் 2200 தேவன்களை வழிபட்டனர். அவருள் சூரியகடவுள் (ரதி) பிரதானமானவர். ஒசிரிஸ் எனும் (எமன்) கடவுளுக்கும் வழிபாடு செய்யப்பட்டது. அரசன் பாரோ (Pharaoh) என அழைக்கப்பட்டான். இறைவனின் பிரதிநிதியாக அவன் கருதப்பட்டான். எனவே அவன் இறந்துபட்டாலும் அவனது பூதஉடல், மூலிகைகள், களிம்புகள், பிசின்கள் கொண்டு பாடம் செய்யப்பட்டுப் பிரமிடுகளின் உட்பகுதியில் (அடுத்த பிறவியை எதிர்பார்த்து) வைக்கப்பட்டன. பிரமிடுகள் கி.மு. 2630லிருந்து கி.மு. 1840 வரையிலான காலத்தில் கட்டப்பட்டுள்ளது எனக் கணிக்கப்பட்டுள்ளது. அதனில் கிஸா (Giza) எனும் இடத்திலுள்ள பிரமிடு மிகப் பழமையானது, அளவிலும் பெரியது. இது 140 மீட்டர் உயரமும், அடிப்பாகம் 230 x 230 மீட்டர் அளவும் கொண்டது. இதன் அடிப்பாகம் மட்டுமே 15 ஏக்கர் பரப்பளவை ஆக்கிரமித்துள்ளது. பெரிய கற்கள் துல்லியமாக வெட்டப்பட்டு ஒன்றின்மீது ஒன்றாக அடுக்கப்பட்டு இவைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற 30 பெரிய பிரமிடுகளும், நூற்றுக்கணக்கிலான சிறிய பிரமிடுகளும் நைல்நதிப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளதை, எகிப்து நாட்டில் இன்றும் காணலாம். கிஸா பிரமிடு அருகில் ஸ்பிங்ஸ் (sphinx) எனும் சிலை (சிங்கத்தின் உடலும், மனித தலையும் உள்ள உருவம்) உள்ளது. இச்சிலையின் நீளம் 150 அடி, உயரம் 30 அடி. இது ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. நைல் நதி மக்களுக்கு

எழுதப்படிக்கத் தெரியும். அவர்களின் எழுத்துமுறை சித்திர வடிவானது.[10]

ஆனால் இத்தகைய பெருமைமிக்க எகிப்திய நாகரிகத்தின் எச்சங்களைத் தவிர அம்மக்களின் வழிபாட்டு புத்தகங்களும், வழிபாட்டு முறைகளும், தோத்திரப் பாடல்களையும் இன்று காணோம். அந்நாகரிகத்தைப் பின்பற்றுவோரும் இன்று காணாமற் போய்விட்டனர்.

பாலஸ்தீனத்தில் ஆதியில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக - யூதர்கள் எகிப்து நாட்டில் 400 வருடகாலமாக அடிமையாய் வாழ்ந்தனர். அடிமைப்பட்ட காலத்தில் அவர்களின் எண்ணிக்கை வெறும் 70 குடும்பங்கள் மட்டுமே. அடிமைக் கால இறுதியில் அவர்களின் குடும்பங்கள் ஆறுலட்சமானது. இம்மக்களை மீட்டுப் பாலஸ்தீனத்தில் குடியேற்றிய பெருமை மோஸஸ் எனும் யூத மகானைச் சாரும். யெகோவா எனும் கர்த்தரின் அருளால் அடிமைப்பட்டிருந்த இஸ்ரேலிய (யூத) மக்களைச் செங்கடலில் நீரை விலகச் செய்து சினாய் மலை அடிவாரத்திற்கு மோஸஸ் கொண்டுவந்தார் என கூறப்படுகிறது. அவர்களின் வரலாறு கீழ்க்கண்டவாறு:

நானூறு வருடகாலம் அடிமையாய் வாழ்ந்த யூதர்கள்-
-கி.மு. 1300ல் எகிப்து நாட்டிலிருந்து மோஸஸ் மூலம்
வெளியேற்றம். (Exodus)

↓

சினாய் மலையில் யூதர்கள் 40 வருடகாலம் வாழ்ந்தனர்.

↓

ஜோசுவா (கி.மு. 1250)

↓

இதர அரசர்கள்

↓

டேவிட் கி.மு. 1010-970

↓

சாலமன் கி.மு. 970-931
(ஜெருசலேம் யூதகோவிலைக் கட்டியவன்)

↓

கி.மு. 587ல் சுமேரிய அரசன் (பாபிலோனிய அரசன்) நெபுட்காட்ச்சர், யூதர்களைப் போரில் வென்று, கோவிலை அழித்து, யூதர்களைப் பாபிலோனுக்கு அடிமையாய்க் கொண்டு சென்றான் (எரேமியா தீர்க்கதரிசி காலம்)

↓

கி.மு. 538	பாபிலோனிலிருந்து விடுதலை
↓	
கி.மு. 520-515	யூதர்களின் மகான் எஸ்ராவின் காலம். ஜெருசலேமில் இடிக்கப்பட்ட யூதகோவில் மீண்டும் கட்டப்பட்டது.
கி.மு. 333-63	மாவீரன் அலெக்ஸாண்டர் மற்றும் கிரேக்க அரசர்களால் யூதநாடு அழிக்கப்பட்டுக் கோவிலும் வழிபாடின்றி ஆனது.
கி.மு. 63- கி.பி.313	பாலஸ்தீனத்தில் ரோமானியர்கள் ஆட்சி நடைபெற்றது. இக்காலகட்டத்தில் யேசு வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. கி.பி. 70ல் இரண்டாவது முறையாக ஜெருசலேம் கோவில் முற்றிலுமாக அழிக்கப்பட்டது. யூதர்கள் இப்பகுதியிலிருந்து அடித்து விரட்டப்பட்டனர். ஜெருசலேம் நகரத்தின் பெயர் ஏலியா காப்பிட்டலோனியா (Aelia capitolina) என, பெயர் மாற்றம் செய்யப்பட்டது. யூதர்களின் 'யுதேயா' நாடு பாலஸ்தீனம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

எகிப்திய நாகரிகமும் யூத நாகரிகமும் ஒப்பீடு

	எகிப்திய நாகரிகம்	யூத நாகரிகம்
1.	நதிப் பள்ளதாக்கில் தோன்றியது.	வறண்ட வனாந்திரத்தில் தோன்றிய நாகரிகம்.
2.	மிக மிகத் தொன்மையானது	தொன்மையான நாகரிகம்.
3.	பல கடவுளர் வழிபாடும் உருவ வழிபாடும் உண்டு	உருவ வழிபாடு இல்லை. ஒரே இறைவன் யெகோவா வணங்கப்பட்டார்.
4.	வேளாண்மையும், பலதேச வாணிபமும் மக்களுடைய தொழில்.	திராட்சை, அத்திமரம் பயிரிடுதலும், பார்லி போன்ற பயிர்கள் சாகுபடியும், ஆடு வளர்த்தலும், இவர்களது தொழில்.
5.	எழுதும் கலை உண்டு	எழுதும் கலை உண்டு.
6.	கல்வி, கலை, இலக்கியத்தில் ஈடுபாடுகள் அதிகம்.	ஈடுபாடு இல்லை. சில யூதர்கள் கல்வி கற்க எகிப்து சென்றனர்.
7.	எகிப்திலிருந்து யூதர்கள் வெளியேறியது எகிப்திய வரலாற்றில் இடம்பெறவில்லை.	வெளியேற்றம் (exodus) யூத வரலாற்றில் காணப்படுகின்றது. ஆனால் அதனை நிரூபிக்க அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் கிடைக்கப் பெற வில்லை.
8.	உலக அதிசயங்களில் ஒன்றான பிரமிடுகள் கி.மு. 2630-1840க்குள் கட்டப்பட்டது.	பிரமிடுகள் கட்டி 2000 வருடம் கழிந்தபின், எகிப்தில் 400 வருட காலம் அடிமைகளாயிருந்த யூதர்கள், தங்களது தோத்திரப் பாடல்களிலோ, பழைய ஏற்பாட்டிலோ, பிரமிடுகள் பற்றி எதனையும் குறிப்பிடவில்லை.
9.	யேசுநாதர் தன் இளம் வயதை எகிப்தில் கழித்தார்.[11]	யேசு அடிக்கடி கூறும் உவமைகளில் பிரமிடுகள், ஸ்பிங்ஸ் ஆகியவை பற்றி எதுவும் பேசப்படவில்லை.

குறிப்பு:

ரிக் வேதத்தில் குதிரைகளைப் பற்றிய குறிப்பு காணப் படுகின்றது. ஆனால் சிந்து சமவெளி அகழ்வாராய்ச்சியில் குதிரை எலும்பு காணப்படவில்லை(?) எனவே வேதங் களுக்கும் சிந்து நாகரிகத்திற்கும் தொடர்பு இல்லை என அன்னிய வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர். அதுபோன்று, நைல் நதி பகுதியில் தோன்றிய யூத, கிறித்துவ நூல்களில்

பிரமிடுகளைப் பற்றிக் குறிப்பிடாத பைபிள், உண்மையின் அடிப்படையில் எழுதப்பட்டதன்று, கற்பனையானது என அறிஞர்கள் பலர் கூறியுள்ளது இங்கே குறிப்பிடப்படுகின்றது.

2:4. மஞ்சள் நதி நாகரிகம்



ஹுவன்கோ நாகரிக சின்னம் – சைனாவின் நெடும் சுவர்
உலக அதிசயங்களில் ஒன்று

இந்நாகரிகம் வடக்குச் சைனாவில் மங்கோலிய நாட்டு எல்லைப் பகுதியில் 'ஹுவாங் கோ நதி பள்ளத்தாக்கில் இன்றைக்குச் சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன் மலர்ந்திருந்தது. வேளாண்மை மற்றும் தச்சுத் தொழில், வண்ணங்கள் வரைந்த பித்தளைப் பாத்திரங்கள் செய்தல், பட்டுத்துணிகள் நெய்தல், தேயிலை உபயோகம், எழுதும் தாள்களை அறிமுகப்படுத்திய பெருமை ஆகியன சைனா நாட்டினரைச் சாரும். கட்டிடக் கலையில் சாதனை படைத்தவர்கள் சீனர்களே. தொன்மைக் காலத்தில் அவர்கள் தங்கள் நாட்டைச் சுற்றிக் கட்டிய கோட்டை மதில் 3460 கி.மீ. நீளமும், 49 அடி அகலமும், 39

அடி உயரமும், 300 அடிக்கு ஒன்று வீதம் கண்காணிப்புக் கோபுரங்களும் கொண்டவை.[12] இவை உலக அதிசயங்களில் ஒன்றாகக் கொள்ளப்பட்டுள்ளது. அந்நாட்டு எழுத்துக்கள் சித்திரவடிவானவை. சைனா நாட்டுச் சமயத்தில் இந்தியக் கலாச்சார தாக்கம் இன்றும் காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

2:5. உலக சமயங்கள்

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக மனித சமுதாயத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாய் விளங்குவது சமயங்கள். இத்தகைய சமயங்கள் இல்லாதிருந்தால், மனித குலம் மட்டுமின்றி, பூலோக வாழ்வினங்கள் அனைத்தும் இன்னும் அமைதியாயும், மகிழ்ச்சியாயும் இருந்திருக்கும் என்பது பெரும்பான்மையான சமூக ஆர்வலர்களின் கருத்து.[13] பண்டைய இந்தியாவில் மதங்கள் தன்பால் மக்களை ஈர்த்தது. ஆனால் மேற்கத்திய நாடுகளில் மதவாதிகளும் அவர்களின் தொண்டர்களும் மக்களை மதங்கள்பால் ஈர்க்கின்றனர். இதன் விளைவாக மக்கள் மத்தியிலும், சமுதாயத்திலும் பெரும் கடைசல்கள் நடந்துள்ளன. கோடிக்கணக்கான மக்களின் உயிர், உடமை, சமூக - சமுதாய அந்தஸ்தை இழத்தல் ஆகியவை நடந்துள்ளன. மக்களை ஈர்ப்பதில் சில மதங்களுக்கு இடையே போட்டி, போட்டியில் வெற்றி பெற, பெரும் படையைத் திரட்டுதல், பொருள் மற்றும் மனித வளங்களை இதன் பொருட்டு ஈடுபடுத்துதல், மக்களைப் போர்களில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான இறை காரணிகளையும், இறை தத்துவங்களையும் கண்டுபிடித்து வெளியிடுதல் ஆகியவை 2000 வருட காலத்திற்கும் மேலாக உலகமெங்கும் நடந்து வந்துள்ளது. இவற்றிற்கெல்லாம் ஆதி மூலமாக விளங்குவது ஆபிரகாமிய மதங்களும் அதன் தத்துவங்களும் மட்டுமே. ஆபிரகாமிய மதங்களில் முதன்மையானது, யூதசமயம். உலகத்திலேயே பழம்பெரும் சமயம் இது மட்டுமே. (இந்து சமயத்தினை இப்பட்டியலில் சேர்க்க வில்லை. காரணம், இது ஓர் வாழ்க்கை முறையே, மதம்

என்பது அல்ல). மதமானது அடையாளம் காட்டப்பட்ட கடவுளர்களைச் சுற்றிப் புனையப்படும் கதைகளும், கொள்கைகளும், தத்துவங்களும் ஆகும். வாழ்க்கை முறை என்பது தத்துவங்களைச் சுற்றி அடையாளம் காட்டப்பட்ட கடவுளர்களை வணங்குதல் எனப்படும்.

சுமார் 3000 - 3500 வருடங்களுக்கு முன்பிலிருந்து யூதர்களுக்குள் 12 வகை சாதிப் பிரிவுகள் இருந்தன. இவற்றைக் கோத்திரங்கள் எனத் தற்போது அழைக்கின்றனர். இக்கோத்திரத்தினர், ஏக இறைவனை வணங்கி வந்தனர். அவ்விறைவனை ‘யெகோவா’ என அழைத்தனர்.[14] யூதர்கள் வாழ்ந்த பாலஸ்தீன நாட்டைச் சுற்றி வேறு சமய மக்களும் வாழ்ந்து வந்தனர். அவர்களைப் புற ஜாதியினர் எனப் பைபிள் குறிப்பிடுகின்றது. இந்த ஜாதியினர் அக்காலகட்டத்தில் தனித்தனித் தெய்வங்களை வணங்கி வந்தனர். இவற்றில் எந்தத் தெய்வம் மேலானது, மிகவும் பலம் வாய்ந்தது என நிரூபிக்க அவர்களிடையே பல போர்கள் நடைபெற்று வந்தன. இதன் விளைவாகக் கடவுளர்களுக்கு எதிராகக் கடவுளரைப் பொருத்திவிடும் முயற்சிகள் நடைபெற்று வந்தன. இதன் பொருட்டு யூதர்கள் தங்கள் கடவுளை எரிச்சல் உள்ள தேவனாகவும், வேறு தேவனை வணங்க அவர் அனுமதிக்க மாட்டார் எனவும் வர்ணனை செய்து வந்துள்ளனர். பண்டைய யூத, சமயக் கோட்பாடுகளைக் கிறிஸ்துவ சமயம் கடன் வாங்கிய போது அவர்களும் தங்களது தெய்வத்தையும் எரிச்சலுடைய தெய்வமாகவும் வர்ணனை செய்து வந்துள்ளனர். யூத சமயமும் அதன் வாரிசுகளில் ஒன்றான கிறித்துவமும் அன்னிய தெய்வ வழிபாட்டையும், விக்கிரக வழிபாட்டையும், இகழ்ந்து வந்துள்ளது. பண்டைய காலத்தில் தெய்வங்களுக்கிடையே மனிதர்களின் கற்பனையால் அவிழ்த்து விடப்பட்ட யுத்தங்களே, யூத-கிறித்துவ சமய புத்தகங்களில் நிறைந்துள்ளன.

உலகம் பிறந்த நாள் முதல் ஒரு மதம் பின்பற்றப்பட்டு வருகின்றது, என நிரூபிப்பதிலே அதனுடைய பழமையையும் நம்பகத்தன்மையும் மக்களிடையே பிரபலப்படுத்த முடியும். கிறித்துவமும் இஸ்லாமும் முறையே இன்றைக்குச் சுமார் 2000 மற்றும் 1300 ஆண்டுகளுக்கு முன்னர்தான் தோன்றியது.

எனவே அவற்றிற்கு அதற்கு முந்தைய பண்டைய வரலாறு இருந்ததில்லை. மனிதன் தோன்றிய காலம் முதலே தங்களது சமயம் இருந்தது எனத் தோற்றம் உண்டாக்குவதற்காக அவர்கள் வாழ்ந்த பகுதியில் பழம் பெருமையுடன் திகழ்ந்த யூதர்களின் ‘உலகம் தோன்றிய கதைகளையும்’ இறை தத்துவங்களையும் கடனாக, கிறித்துவர்களும், பின்னர் இஸ்லாமியர்களும் பெற்றுக் கொண்டனர். யூதர்களின் இறைப் புத்தகங்களுள் முழுமையையும் (பழைய ஏற்பாடு), கிறித்துவர்கள் தங்களது வழிபாட்டிற்கு ஏற்றுக் கொண்டனர். யூதர்களின் தெய்வமான யெகோவாவிற்கும் கிறித்துவர்களின் கடவுளான இயேசுவுக்கும் சற்றும் சம்பந்தம் இல்லாதபோதும் பழைய ஏற்பாட்டிற்கும் கிறிஸ்துவர்களின் தனிப் புத்தகமான புதிய ஏற்பாட்டிற்கும் பெரும் இணைப்பு இருப்பதாகவும், பழைய ஏற்பாட்டினை உண்மையென நிரூபிக்கவே இயேசு உலகத்திற்கு வந்ததாகவும், இயேசுவே யெகோவா என்றும், பழைய ஏற்பாட்டில் ஆரூடமாகக் கூறப்பட்டுள்ள கிறிஸ்துவும் அவரே என்றும் பெரும் பிரச்சாரம் கிறித்துவ தலைவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் காரணமாகக் கிறித்துவ மதம் தோன்றி சுமார் 2000 வருடம் மட்டுமே ஆகியுள்ளது என்ற உண்மை மறைக்கப்பட்டு, ஆதிமனிதன் தோன்றியகாலம் முதற்கொண்டு கர்த்தரை (யெகோவை) வணங்கும் தங்கள் சமயம் மக்களிடையே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது என்ற உண்மைக்குப் புறம்பான செய்தி மக்களிடையே திணிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமும் இவ்விறைப் புத்தகத்தின் சில பகுதிகளை, முக்கியமான அதன் முதல் ஐந்து காண்டத்தினைத் தனது சமயத்தின் வரலாறாக ஏற்றுக் கொண்டுள்ளது.

யூதம், கிறித்துவம், இஸ்லாம் ஆகிய மூன்று சமயங்களும் புராதன சரித்திர நாயகராக ஆப்பிரகாமைக் கொண்டுள்ளது. எனவே இவை ஆப்பிரகாமிய மதங்கள் என அழைக்கப்படுகின்றன. இம்மதங்களின் கோட்பாட்டின்படி கடவுள் படைத்த முதல் மனித தம்பதிகளின் பெயர்கள் ஆதாம், ஏவாள் என்பதே. இத்தகைய பெரும் ஆரம்பகால ஒற்றுமை இம்மதங்களிடையே இருந்த போதிலும், அவைகளுக் கிடையே சமய ஒற்றுமை இல்லாமல் ஆகிவிட்டது. அது மட்டுமல்லாமல் அவற்றிற்கிடையே பெரும் சமயப் போர்கள்

பல ஆயிரம் ஆண்டுகளாக நடந்து வந்துள்ளன. இதனால் இறந்தவர்களும், அழிந்துவிட்ட பொருள்களும் கணக்கில் அடங்காதவை. இம்மூன்று சமயங்களும் தங்களைப் பின்பற்றுபவர்களுக்கு மட்டுமே சொர்க்க லோகம் உண்டு, நித்திய ஜீவனும் பரலோக வாழ்வும் உண்டு எனப் பிரசங்கம் செய்து வருகின்றன. மூன்று சமயங்களும் கற்பிக்கும் சொர்க்க லோகத் தத்துவம் முற்றிலும், உண்மையாக இருந்திட வாய்ப்பில்லை. அதிகபட்சமாய் அதனில் ஒன்று மட்டும் தான் உண்மையாய் இருந்திட முடியும் அல்லது, அனைத்துமே தவறானதாய் இருந்திட வாய்ப்பு உள்ளது. இம்மூன்று ஆப்பிரகாமிய மதங்களும் தங்களது சொர்க்கலோகத் தத்துவம் மட்டுமே உண்மையானது என நிரூபிக்க முயன்று வருகின்றது. இதன் காரணமாகப் பாலஸ்தீன, சுமேரியப் பகுதியில் ஆரம்பித்த தத்துவ மோதல்கள் இன்று மத மோதலாக உலகெங்கும் வியாபித்துள்ளன. இம்மோதல்களால் அழிக்கப்பட்ட இறைக் கொள்கைகள் ஏராளம், ஏராளம். ரோமானிய - கிரேக்க - எகிப்திய மதங்களான ஹெலன் சமயம் (Pagan religion) சுமேரிய-இரானிய மதமாகிய ஜொரஸ்தானியம் ஆகியவை தற்போதைய கிறித்துவம், இஸ்லாம் ஆகிய மதங்களால் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டன. அதன் எச்சங்களைத்தான் நாம் எகிப்தில் பிரமிடுகளாகவும், கிரேக்கத்தில் ‘பெரும் அழிவுச் சின்னங்களாகவும்’ இன்று காண்கின்றோம். ஆனால் சுமேரிய (இன்றைய ஈராக் நாடு), ஈரானிய நாடுகளில் பண்டைய சமயங்களின் எச்சங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டன. உலகிலுள்ள பண்டைய மதமான புத்த சமயம், கன்பூசியானிசம் ஆகியவை அழியும் தருவாயில் உள்ளன. கிறிஸ்துவ சமயப் பரப்புதலுக்குத் தற்போது பெரும் இடையூராய் இருப்பது சைனா, இந்தியா, ஸ்ரீலங்கா மற்றும் மியான்மர் நாடுகளே. இந்த இடரை நீக்குவதற்கு, சைனா நாட்டினை உடைத்துப் பல்வேறு குட்டி நாடுகளாகப் பிரிப்பதற்கும், பர்மா (மியான்மர்) நாட்டினை ஆங்-சூய்-கி எனும் கிறிஸ்துவ பெண்மணி மூலம் கிறிஸ்துவ மயமாக்கிடவும் மேற்கத்திய அரசுகளால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஸ்ரீலங்காவைப் பொறுத்த வரை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மறைவிற்குப் பின்னர் அந்நாட்டினைக் கிறித்துவ மயமாக்குவதில் பெரும்

பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமின்றித் தமிழினப் பேரழிவினை முன்நிறுத்தி (?) தமிழகத்தில் பிரிவினைவாதப் போரினைத்தூண்டுவதற்கு ஸ்ரீலங்காவை ஓர் உந்து பலகையாக - உபயோகிக்க முயற்சித்த இயக்கங்களுக்கு இது ஓர் பின்னடைவாக ஏற்பட்டுவிட்டது. தமிழக அரசியல்வாதிகள் சிலரை இப்பெரும் மதமாற்றப் பணிக்கு உபயோகிக்கத் திட்டமிட்டிருந்த சமயவாதிகளுக்கு, ஸ்ரீலங்காவின் சமீப நிகழ்வுகள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டன. இதனை அவர்கள் மறப்பதற்கில்லை. தங்களது திட்டத்தின் தோல்விக்குக் காரணமான அன்றைய ஸ்ரீலங்கா குடியரசு தலைவர் ராஜபக்சேவை இவர்கள் மன்னிக்கவும் தயாரில்லை.

சாஸ்திரங்களின் வழியில் தர்மத்தின் அடிப்படையிலான வாழ்க்கை நெறி மூலமாய்ப் பிறந்தது இந்து சமயம். ஆனால் கிறிஸ்துவ சமயத்திற்கு வாழ்க்கை முறையைப் போதிக்கத் தனி நெறிகள் பைபிளில் வகுக்கப்படவில்லை. பைபிளில் ஆங்காங்கே பேசப்படும் வசனங்கள் தங்களது வாழ்க்கை முறை எனச் சில கிறித்துவ சமயவாதிகள் கூறிவருகின்றனர். ஆனால் இவ்வசனங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடாய் உள்ளதால் வாழ்வில் நெறிமுறை இல்லாத சமயமாய், கிறித்துவம் விளங்குகின்றது. பைபிளில் ஓர் இடத்தில் ‘இதோ உன் தாய்’ என்றும் இன்னொரு இடத்தில் ‘இது என் தாயல்ல’ என்றும் வசனங்கள் எதிரிடையாக காணப்படுகின்றன.

இந்து சமயத்தைப் பொறுத்தவரை அது எந்தக் கடவுளரையும் அல்லது நபரையும் வைத்துத் தொடங்கப்பட்டு அல்லது நடத்தப்பட்டு வருவது அன்று. மற்ற சமயங்கள் போல் அன்றி இந்து சமயம், சமூக, சமுதாய உறவுகளை அடிப்படையாய்க் கொண்டது. சமுதாய உறவுகளின் அடிப்படையில் பிறந்ததே கூட்டுக் குடும்பம், பங்காளிகள், குலம், கோத்திரங்கள், ஊர் பஞ்சாயத்துகள், சாதி ஆகியவை. இந்தச் சமுதாய அமைப்பிலிருந்து தோன்றியவையே கலாச்சாரமும், வழிபாட்டு முறைகளும். இத்தகைய பல அடுக்குகள் கொண்டதாய் இந்து சமயம் விளங்குவதால் இந்நாட்டை ஆக்கிரமித்த புறச் சமயத்தினரின் கொடுமைகளையும், அக்கிரமங்களையும் அதனால் தாங்க முடிந்தது. இந்து சமயத்தின் ‘ஆதி மூலம்’ இத்தகைய சமுதாய அமைப்புகளில் இழையோடி இருந்ததால் இந்தியாவை

ஆண்ட புறச் சமயத்தினரால் இந்து சமயத்தின் உயிர் முடிச்சை (Nodal point) கண்டுபிடித்து அழிக்க முடியாமல் ஆகிவிட்டது. இதற்கு மாறாக, மலைவாழ் மக்கள்போல் ஓர் தலைவனின் கீழ் இந்திய மக்கள் வாழ்ந்திருந்தால் அத்தலைவனைப் பரிசுகள் வழங்கியோ, தண்டனை கொடுத்தோ, கைவசப் படுத்தி அவனையும், அவன் ஆளுகையின் கீழ் உள்ள மக்களையும் மொத்தமாக மதம் மாற்றியிருக்க முடியும். இவ்வாறு தலைவன் மூலம் மதம் மாற்றப்பட்டவர்களே வடமேற்கு பகுதியிலுள்ள ஆப்கானிஸ்த்தான், பலுசிஸ்தான் மக்கள். இந்தியாவின் வடகிழக்கு மாகாணத்திலும் (நாகலாந்து, மிஸோரம்) இத்தகைய மதம்மாற்றம் நிகழ்ந்துள்ளது.

இந்நாட்டில் 1300 வருடமாக நீடித்த இஸ்லாமிய - கிறிஸ்துவ ஆட்சியின் போது, பல போர்களில் இந்து அரசர்கள் கொல்லப்பட்ட காலத்திலும்கூட இந்துக்களின் குலம், கோத்திரம், ஜாதி பிரிவுகள் கிராம நிர்வாக அமைப்பு ஆகியவை தளராமல் வாழ்ந்திருந்தன. பரந்து விரிந்த இதனை எத்தகைய யுக்திகள் கொண்டு அழிப்பது எனச் செய்வதறியாது அன்னிய ஆட்சியாளர்கள் தவித்தனர், இன்றுவரை தவித்துக் கொண்டும் இருக்கின்றனர். எனவே இந்தியாவின் தேசிய வாழ்விற்கும், கலாச்சாரத்திற்கும் சமுதாய அமைப்புகள், ஆணிவேராகவும், பக்க வேர்களாகவும் அமைந்து செயல்பட்டு வந்துள்ளன. இத்தகைய சமுதாய அமைப்பிலிருந்து தோன்றியதே இந்து சமயத்தின் கலாச்சார சின்னங்களான கவிதைகள், பாடல்கள், நடனங்கள், யோகா, பிரணாயாமம், இதிகாசங்கள், புராணங்கள், வேதங்கள், நீதிநூல்கள் போன்றவைகள். மனிதப் பிறவியே உலகில் சிறந்தது. தொடர் பிறவி, சாக்காடு எனும் சுழற்சியிலிருந்து விடுபட்டு இறைவனின் காலடியில் சரண் அடைவதே (மோட்சம்) வாழ்க்கையின் நோக்கம் எனும் தத்துவம் இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கை. இந்து சமயம், உலகம் முழுமைக்கும் போதிக்கும் கொள்கையும் இவையே. இத்தகைய பரந்த விசாலமான கொள்கை பண்டைய இந்தியாவிலிருந்த அனைத்து மக்களையும் கவர்ந்து ஈர்த்தது. இதனால் கவரப்பட்டு, மகிழ்ச்சியுடன் வாழ்ந்த மக்களே இன்று இந்துக்கள் என அழைக்கப்படுகின்றனர். இவ்வாறு வாழ்ந்த இந்துக்கள் பொறுமை, உண்மை, சகிப்பு தன்மை, தர்மம் ஆகிய கொள்கைகளைக் கடைப்பிடித்தனர்.

இந்து அரசர்கள் ஒருவருக்கொருவர் போரிடும்போதுகூட இத்தகைய உயிர்காக்கும் கொள்கைகளை அவர்கள் கைவிட்டது இல்லை. மனித குலத்திற்கே மாட்சியாக விளங்கிய இக்கோட்பாட்டின் மூலத்தினைக் கொண்டே தங்களது தெய்வத்தின் உருவங்களை இந்துக்கள் வடித்தனர். ரிஷிகளும் முனிவர்களும் அண்ட வெளியிலிருந்து தங்களுக்கு அசரீரி மூலமும், அதிர்வுகள் மூலமும் கிடைத்த ஒலி வடிவங்களை ஆதிசமஸ்கிருதம் எனும் எழுதாக் கிளவியில் அமைத்தனர். இவையே வேதங்களாகவும் உபநிஷதங்களாகவும் ஆயின. இவற்றிலிருந்து தோன்றியவையே புராண, இதிகாசங்கள் மற்றும் பக்தி இலக்கியங்கள். இவற்றின் மூலம் பெறப்படுவது யாதெனில், இந்து சமயம் ஆதி இந்திய மக்களின் வாழ்க்கை முறையிலிருந்து தோன்றியது என்பதே. இதனை அடுத்தப் பக்கத்தில் உள்ள வரைபடம் மூலமாயும் அறியலாம்.

இந்து சமயத்தின் இறுதியான நோக்கம் மனிதனை மோட்சம் எனும் பிறவியற்ற பெருவாழ்விற்கு அழைத்துச் செல்லல். மனித சமுதாயம் முழுமையும் இனம், நிறம், சாதி, மதம், கோத்திரம், ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் இம்மோட்சத்திற்குத் தகுதியானவர்களே. உலக மகா இக்கொள்கை அனைத்து மக்களையும், இந்து சமயம், தன்பால் கவரக் காரணமாய் அமைந்தது. ஆபிரகாமிய மதங்களான யூதம், கிறித்துவம், இஸ்லாம் ஆகியவை இறைவனின் மதமாகத் தோற்றுவிக்கப்பட்டு மனித சமுதாயத்தைச் சிற்றின்பமயமான சொர்க்கத்தை நோக்கி இட்டுச் செல்லுதலை மையக் கருத்தாகக் கொண்டது. இவ்விறைவன் வாக்களித்துள்ள சொர்க்கம் எல்லா நல்லவர்கட்கும் திறந்து வைக்கப்பட்டுள்ளது அன்று. அதற்கு மாறாக அந்தந்த மார்க்கத்தில் உள்ள மக்களுக்கு மட்டுமே (அவர் எவ்விதமாய் வாழ்ந்தாலும்) சொர்க்கலோக வாழ்வு ஒதுக்கீடு (reserve) செய்யப்பட்டுள்ளது. இம்மூன்று மதங்களும் தங்கள் சமயம் மட்டுமே உலகில் உண்மையானது எனும் தற்பெருமை கொண்ட கொள்கை உடையன. இவற்றில் கிறிஸ்துவமும், இஸ்லாமும் உலகம் முழுமையும் பரவ வேண்டும் எனும் தீவிர கோட்பாடு உடையவை. இதுவே உலகில் தற்போது பல்வேறு மக்களிடையே நிலவும் கலாச்சார, சமயக் கசப்புணர்ச்சிக்கு மூலகாரணம். மக்களின் நல்வாழ்விற்குச் செலவிடப்பட


இந்தியாவில் ஆதிமனித குலம்
மனித கூட்டம் (கோத்திரம்)
கிராம அமைப்புகள்
ஜாதி அமைப்புகள்
சமுதாய அமைப்பு
உண்மை, நேர்மை, பொறுமை, மகிழ்வு
இறைத்தன்மையான கொள்கைகளும் குணங்களும்
தர்மத்தில் வாழ்தல்
தெய்வத் திருமேனிகளின் வடிவங்களை ஞானிகள் படைத்தல்
இறைவனின் அண்டவெளி அசரீரிகளும் அதிர்வுகளும்
ஒலி வடிவங்கள்
எழுதாக் கிளவி
ஆதி சமஸ்கிருதம் (தேவ பாஷை)
வேதம், உபநிஷதம்
வேதப் பிழிவுகள் (இதிகாசங்கள், புராணங்கள், பக்தி இலக்கியங்கள், சங்கீதங்கள், நாட்டியங்கள், ஆகியன)
இந்து சமயம் → பிறவி அற்ற பெருவாழ்வு (மோட்ச கதி)
இந்து சமயத்தில் இணைந்து வாழ அனைத்து சமுதாயங்களின் ஆர்வம்

வேண்டிய செல்வமும், நேரமும், சமயங்கள் ஒன்றை மற்றொன்று மிஞ்சுவதற்கும், அழிப்பதற்கும் உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றது. இதில் முன்னனியில் திகழ்வது கிறித்துவ சமயமாகும்.

எனினும், கிறிஸ்துவத்தின் முக்கியமான எதிரி இந்தியாவில் இந்து சமயத்தில் தான் உள்ளது. அதனிடம் போரிட்டு வென்றாலே கிறித்துவம் உலகின்தலைமை இடத்தைப் பெற முடியும். இந்தியாவைக் கிறித்துவத்திற்கு மாற்றச் சமயப் பரப்பாளர்கள் கைக்கொண்ட முயற்சிகள் ஏராளம், ஏராளம். அதில் வெற்றி பெறப் பல்வேறு ஆயுதங்களையும், சூழ்ச்சிகளையும், தந்திரங்களையும் கடந்த 600 வருடங்களுக்கு மேலாக இந்தியாவில் உபயோகித்து வருகின்றனர். ஆனால் கிறிஸ்துவத்தின் ஆதார சக்தியான பிதா, குமாரன், பரிசுத்த ஆவி எனும் மூவிறைக் கோட்பாட்டை உலகிலே மிகவும் தொன்மையான இந்திய வேதங்கள் எதிர்கொண்டன. இவை கிறிஸ்துவத்தின் மூவிறைக் கோட்பாட்டை நகைப்புள்ளாக்கியது. இந்திய வேதங்களின் கொள்கைகள் முன்நிற்பதற்குக் கிறித்துவத்தில் சான்றுண்மை ஏதுமில்லை. மூவிறைக் கோட்பாட்டுடன் உலகம் முழுவதும் இல்லறம் நடத்தத் தொடங்கிவிட்ட கிறித்துவம் இனி அக்கோட்பாட்டை, அதற்கு உயிர் வாழமுடியாத பேரழிவு ஏற்பட்டாலொழிய புறக்கணிக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே இறையியல் கொள்கை மூலம் இந்தியாவில் தீவிர அறுவடை செய்வது கடினம் என்று உணர்ந்த கிறித்துவம், பணபலம் மற்றும் கலாச்சார ஊடுருவல்கள் மூலம் தமது பணிகளை இந்தியாவில் நிறைவடையச் செய்திடலாம் என நம்புகின்றது. இதற்கான ஆரம்பத்தை எங்கே ஆரம்பிப்பது? வடக்கே காஷ்மீரம் உள்ளது. அங்கு மதமாற்ற பணியை மேற்கொண்டால் வன்முறை பாய்ந்து விடக்கூடும். எனவே தென் கோடியிலுள்ள அமைதிப் பகுதியான தமிழ்நாட்டை முதல் (மதமாற்ற) களமாகத் தேர்ந்தெடுப்பதைத் தவிர, கிறித்துவத்திற்கு வேறு வழியில்லை.

இங்கு அஃது உலகின் தொன்மையான தமிழ் மொழி மற்றும் தமிழ்க் கலாச்சாரத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நன்கு திட்டமிடப்பட்டுப் பெறும் நிதி மற்றும் அரசியல் ஆதரவுடன் இன்று கிறிஸ்துவத்தால் நடத்தப்படும் மதமாற்றத்

திட்டத்தை அறிந்துகொள்ள வேண்டுமெனில் யூத-கிறித்துவம் பல ஆயிரம் ஆண்டுகளாகக் கடந்து வந்த பாதையை அறிந்து கொள்வது அவசியம்.

2:6. யூதர்களின் வரலாறு

யூதர்கள் பெரும் வரலாறு உள்ளவர்கள் என்றும் இறைவனால் முதலில் தோற்றுவிக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப் பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் எனவும், அவர்களே அறிவுக் கூர்மையிலும், செயல்திறனிலும் பெரும் வல்லவர்கள் என்றும் சிறப்புடன் கூறப்பட்டுவருகின்றது. அவர்களின் தோத்திர நூல் பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து காண்டங் களாகும். அதன் இதர காண்டங்கள், யூத நாடு, அதன் அரசர்கள் ஆகியோருக்கு இடையே நடந்ததாகக் கூறப்படும் நிகழ்ச்சிகளை விவரிக்கின்றது. பழைய ஏற்பாடு முழுமையும் கிறித்துவத்தின் ஆதிசத்திய வேதமாக ஏற்றுக் கொள்ளபட்டுள்ளது. மனிதனின் தோற்றத்தைப் பற்றி இயம்பும் பழைய ஏற்பாட்டின் பகுதிகளும், மோசஸ் மகான் எழுதிய பகுதிகளுள் சிலவும் இஸ்லாம் சமயத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் கர்த்தரால் உலகில் முதலாவது தோற்றுவிக்கப்பட்ட யூதர்கள், மனிதகுல நாகரிகத்தை முதலில் தோற்று வித்தவர்கள் அல்லர் என எண்ணும் போது அவர்கள் மீது பூசப்பட்டுள்ள புகழுரைகள் உண்மைதானா என ஆராயத் தோன்றுகிறது.

யூதர்கள், ஏபிரேயர்கள் என்றும் இஸ்ரேலியர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்களின் தோற்றம் அரபிய பாலைவனத்தின் விளிம்புப் பகுதிகள். அவர்கள் இனம் பெருகிய காலத்தில் அங்கிருந்து கி.மு. 1500 வாக்கில் நாடோடிகளாகக் கிழக்குத் திசையை நோக்கிச் செழிப்பான இடத்தைத் தேடிவந்தனர். அவர்கள் வந்து சேர்ந்த இடம் யூப்ரடிஸ்-டைகிரிஸ் ஆகிய நதிகள் பாயும் மெசப்பட்டோமிய சமவெளி. இப்பகுதியில் அக்காலத்தில் (கி.மு. 4000 முதற் கொண்டு) மனிதகுல வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுள்ள சுமேரிய நாகரிகம் மலர்ந்திருந்தது. அங்கு வாழ்ந்த மக்களின்

நகர வாழ்க்கை, இறைவனை வணங்கும்முறை, வேளாண்மை, மனிதர்களின் நடையுடை பாவனைகள் அனைத்தும் நாடோடி இஸ்ரேலியர்களுக்குப் புதுமையாக இருந்தன. அப்பகுதியில் ஏற்கெனவே எகிப்தியர்கள், பாபிலோனியர்கள், பெனிஷ்சியர்கள், கனானியர்கள், பெலிஸ்தியர்கள், அரபியர்கள் எனும் பல்வேறு பிரிவினரும் குடியிருந்து வந்தனர். அவர்கள் யூதர்களை விட ஒன்றுபட்டவர்களாகவும், வலிமையுள்ளவர் களாகவும் இருந்தனர். யூதர்கள் பலமுறை சண்டையிட்டும், அவர்களை வீழ்த்தமுடியவில்லை. எனவே அந்த அரசின் கீழ், சிறுசிறு குழுக்களாக யூதர்கள் அமைதியாகக் குடியிருந்து வந்தனர்.

யூதர்கள் அங்குள்ள மக்களின் நாகரிகத்தைக் கற்றுக் கொண்டனர். கானானியர் மூலமாக வீடுகட்டவும், கம்பளி ஆடைகளை அணியவும் கற்றனர். பெனிஷ்யர்களிடமிருந்து போர் முறையைக் கற்றுக் கொண்டனர். யூதர்களின் மொழியிலும் அரபியர்களின் தாக்கம் ஏற்பட்டது. கனானியனியர்களின் கடவுளரைப் பற்றியும் அரபியர்களின் கொள்கையையும் அவர்கள் அறிந்து கொண்டனர். சுமேரியர் ஆட்சிக்காலத்தில் உண்டான பாரம்பரிய கற்பனைக் கதைகளில் உள்ள மனிதப் படைப்பு, மனிதனின் வீழ்ச்சி, பெரும் வெள்ளம், பாபிலோனின் கோட்டை, வம்சாவளி சரித்திரம் ஆகியவற்றையும் யூதர்கள் கற்க ஆரம்பித்தனர். பாபிலோனியர்களின் சாஸ்திரங்களையும், நாட்கணக்கு களையும் ஏற்றுக் கொண்டனர். இக்கல்வியே இஸ்ரேலியர் களுக்குப் பின்னர், பழைய ஏற்பாடு (கிறித்துவர்களின் பைபிள்) என்னும் தோத்திர வரலாற்று நூலை எழுதுவதற்குப் பெரிதும் உதவியுள்ளது.

பழைய ஏற்பாட்டில், உலகின் முதல் மனிதன் ஆதாம் முதற் கொண்டு வம்சாவளி விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. இவை சுமேரியன் கதைகளிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. ஆதியாகமத்தில் 4, 5, 11, 12, 25 முதலிய அதிகாரங்களில் ஆதாம் முதல் ஆபிரகாம் வரை பரம்பரையும் அவர்கள் ஆயுள்களும் கொடுக்கப்பட்டுள்ளன. உலகில் முதன் மனிதனாகவும், ஆணாகவும் படைக்கப்பட்ட ஆதாம் உயிர் வாழ்ந்த காலம் 930 வருடம். இதுபோன்று அவருக்குப் பின் வாரிசுகளான சேத், ஏனோஸ் ஆகியோர் முதற்கொண்டு

நோவா காலம் வரை மனிதன் சராசரி 900 ஆண்டு வாழ்ந்துள்ளான். இவ்விபரம் பைபிளில் ஆதியாகமம் 5-11வது அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதிமனிதனின் பெயர்	ஆதாமிலிருந்து பிறந்த வருடம்	ஆயுள் காலம்	ஆதாமிலிருந்து இறந்தவருடம்
1	2	3	4 (2+3)
1. ஆதாம்	-	930	930
2. சேத்	130	912	1042
3. ஏனோஸ்	235	905	1140
4. கேனான்	325	910	1235
5. மகலாலேயல்	395	895	1290
6. யேரேது	460	962	1422
7. யேனோக்கு	622	365	987
8. மெத்துசலா	687	969	1656
9. லாமேக்	874	777	1651
10. நோவா	1056	950	2006
11. சேம்	1556	600	2156
12. அர்பகசாத்	1658	438	2096
13. சாலா	1693	433	2126
14. ஏபேர்	1723	464	2187
15. பேலேகு	1757	239	1996
16. ரெகூ	1787	239	2026
17. செருக்	1819	230	2049
18. நாகோர்	1849	148	1997
19. தேராகூ	1878	205	2083
20. ஆபிரகாம்	1948	175	2123

ஆதாமிலிருந்து இருபதாம் சந்ததியில் ஆபிரகாம் என்பவர் பிறக்கின்றார். ஆபிரகாம், யூத மற்றும் இஸ்லாமிய மதத்திற்குத் தந்தையார். இஸ்லாமியர்கள் ஆபிரகாமை இப்ராகிம் எனஅழைக்கின்றனர். ஆபிரகாமின் முதல் மனைவிக்குப்

பிறந்தவர்களில் ஒருவர் யூத இனத்தினர், இரண்டாவது மனைவிக்குப் பிறந்தவர் இஸ்லாமிய இனத்தினர்.

ஆபிரகாமின் சந்ததியினர்


இஸ்மாயில்
(இஸ்லாமிய சந்ததி)
ஐசக்
சிம்ரோன்
மெடியா
மிடியா
இஸ்பக்
சுவுவா
ஈசு
ஜாக்கப் (யோக்கோபு)
இஸ்ரேலிய சந்ததியினர்
ரூபன்
சிமியோன்
லெவி
யூதா
இசச்சார்
செபுலான்
ஜோசப்
பெஞ்சமின்
தான்
நப்தாலி
காட்
அசேக்
கோகாத்
பாரேஷ்
அம்ரம்
டேவிட்
சாலமன்
யேசு
ஆரோன்
மோசே

(யேசு ஆபிரகாமிலிருந்து 42வது தலைமுறையாகப் பிறந்தவர் என மத்தேயு சுவிசேஷத்திலும், 57வது தலைமுறையாகப் பிறந்தவர் என லூக்காவின் சுவிசேஷத்திலும் வேறுபாட்டுடன் கூறப்பட்டுள்ளது).

மோசே, இஸ்ரேலியர்கள் ஒரே கடவுளை வணங்க வேண்டும் என்றும், அக்கடவுளின் பெயர் யெகோவா என்றும் அறிவித்தார். மோசேயின் காலம் கி.மு. 1400 எனக் கொள்ளப்படுகின்றது. இவர் எகிப்து நாட்டில் அடிமையாய் வாழ்ந்த இஸ்ரேலியர்களை யெகோவா அருளினால் தப்பிக்க

வைத்துச் செங்கடலைத் தாண்டிச் சினாய் மலைப்பகுதிக்கு அழைத்து வந்தார். சினாய் மலை உச்சியில் மோசே, அக்னி வடிவில் இருந்த கர்த்தரை நேரில் சந்தித்து, கர்த்தர் கையினால் கல்லில் எழுதப்பட்ட பத்துக் கட்டளைகளைப் பெற்றார் எனக் கூறப்படுகின்றது.

பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களும் மோசேயால் எழுதப்பட்டது எனவும் சொல்லப்படுகின்றது. ஆனால் இப்புத்தகத்தில் மோசே இறந்ததைப் பற்றியும் அவர் புதைக்கப்பட்டதையும் பற்றி எழுதியிருப்பதால் மேற்படி ஐந்து புத்தகங்களையும் மோசே எழுதியிருக்க வாய்ப்பில்லை.[15] தான் இறந்த நிகழ்ச்சியை தான் எழுத முடியாதல்லவா? வாய்மொழியாய் கூறிவந்த மோசேயின் சரித்திரம் பிற்காலத்தில் எழுதப்பட்டிருக்கக் கூடும் என நம்பப்படுகிறது.

2:7. இஸ்ரேலிய வம்சாவளி

இஸ்ரேலியரின் மூதாதையர்கள் (செமட்டிக் சமய) ஆபிரகாமும் அவரது மகன் ஐசக் மற்றும் பேரன் ஜாக்கப், (யோக்கோபு) ஆகியோர். இவர்கள் பாலஸ்தீன கானான் பிரதேசத்தில் தொன்மையில் வாழ்ந்தனர். ஒரு சமயம் கர்த்தருக்கும் யோக்கோப்புக்கும் நடந்த பெரும் யுத்தத்தில் யோகோப்பு வெற்றி பெற்றார். இதனால் மகிழ்ந்த கர்த்தர் யோகோப்பு பெயரை இஸ்ரவேல் என்று மாற்றினார்.[16] யாகோப்பிற்கு நான்கு மனைவியர் அவர்கள் மூலம் 12 புதல்வர்கள் பிறந்தனர். அவர்களே ரூபன், சிமியோன், லேவி, யூதா, அசேக் முதலியோர். இவர்களைப் பாதுகாக்கப் பல உடன்படிக்கைகளைக் கர்த்தர் செய்துள்ளார். கி.மு. 1700 ஆண்டு வாக்கில் கானான் பிரதேசத்தில் ஏற்பட்ட பஞ்சத்திலிருந்து தப்பிக்க அவர்கள் எகிப்து நாட்டில் குடியேறினர்.[17] அங்கு அவர்கள் பல்கிப் பெருகினர். இஸ்ரேலியரின் ஜனப்பெருக்கத்தை அடக்கும் பொருட்டு அவர்களின் முதல் ஆண் குழந்தைகளைக் கொல்ல எகிப்து அரசன் உத்தர விடுகின்றான். இத்தகைய பல கொடுமைகளுக்கு உள்ளான

இஸ்ரேலியரை, மோசஸ் எகிப்து நாட்டிலிருந்து காப்பாற்றி சினாய் மலைக்குக் கொண்டுவருகின்றார்.

கர்த்தருக்கு மிகவும் நெருக்கியதால் - இஸ்ரேலியர்கள் கர்த்தரின் ஜாதியினர் எனவும், சுற்றிலும் வாழ்ந்த மற்ற ஜனங்கள் புற சாதிகள் எனவும் பைபிளில் வழங்கப் பட்டுள்ளது. அத்தகைய புற சாதியினரில் முக்கியமானவர்கள் எண்மர். இவர்களின் ஒவ்வொரு சாதியினருக்கும் தனித்தனிக் கடவுள்கள் இருந்தனர். அவர்கள் கடவுள் பெயரைப் பைபிள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றது.

புற சாதியினர்	அவர்களின் கடவுள் பெயர்
1. எக்ரோனியர்	பாகால் சேபூ
2. பெலிலிஸ்தியர்	காகோன்
3. கூத்	நேர்கால்
4. எவியர்	தர்தாக்
5. செப்பார்வியர்	அத்ரமலேக் / அன்ன மலேக்
6. அசீரியர்	நெங்ரோக்
7. பாபிலோனியர்	சுக்கோத்
8. ஹமாத்	அசிமா

இறைவன் ஒருவனே. அவனுக்குப் பெயர் பல உண்டு, அவனை எந்த உருவிலும், பெயரிலும் வணங்கலாம் எனும் தத்துவம் இப்பூர்வகுடி மக்களுக்கும், இஸ்ரேலியர்களுக்கும் தெரியாததால் யாருடைய கடவுள் பெரியவர், சிறந்தவர் என இவர்களிடையே பெரும் யுத்தங்கள் நடந்தன. தங்கள் சமயக் கடவுளருக்கும் புறஜாதியினர் கடவுளுக்கும் எதிராக நடந்த யுத்தங்கள் பற்றிப் பல குறிப்புக்கள் யூதர்களால் பைபிளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சமய மோதல்களின்போது இஸ்ரேலியர்கள்-கிறித்துவர்கள் நடந்து கொள்ள வேண்டிய விதங்கள் பற்றிக் கர்த்தர் பல கட்டளைகளையும் வழங்கி யுள்ளார்.

1. அவர்களுடைய பலிபீடங்களை இடித்து அவர்களின் கடவுளின் சிலைகள் அனைத்தையும் தகர்த்து, அவர்கள் தோப்புகளையும் வெட்டிப்போடுங்கள்.

- யாத் 34:13:14

2. கர்த்தர் (இஸ்ரேலிய கடவுள்) எரிச்சல் உள்ள தேவன் ஆகையால் அந்நிய தேவனைப் பணிந்துகொள்ள வேண்டாம்.
- ஏசயா 14:16

3. அவர்கள் (வேறு தேவனை வணங்குவோர்) குழந்தைகள் அவர்கள் கண்களுக்கு முன்பாக மோதி அடிக்கப்படும். அவர்கள் வீடுகள் கொள்ளையடிக்கப்படும். அவர்களின் மனைவிகள் கெடுக்கப்படுவார்கள்.- எண். 31:17,18

4. ஆகையால் குழந்தைகளில் எல்லா ஆண் பிள்ளைகளையும், புருஷம் யோகத்தை அறிந்த எல்லா ஸ்தீரிகளையும் கொன்று போடுங்கள். ஸ்தீரிகளில் புருஷன் யோகத்தையறியாத பெண் பிள்ளைகளை உங்களுக்காக உயிரோடு வையுங்கள்.
- எண் 31:17,18

5. நீ அவர்களுடைய தேவனைப் பணிந்து, கொள்ளாமலும் சேவியாமலும், அவர்களின் செய்கைகளின் படி செய்யாமலும் அவர்களை நிர்மூலம் செய்து அவர்களுடைய சிலைகளை உடைத்துப் போடுவாயாக.
- யாத் 23:24

6. நீங்கள் துரத்திவிடும் சாதிகள், தங்கள் தேவர்களைச் சேவித்த உயர்ந்தமலைகளின் மேலும் மேடுகளின் மேலும், பச்சையான சகல மரங்களின் கீழே உள்ள இடங்களையெல்லாம் முற்றிலும் அழிக்கவும்.
- உபா 12:2

7. அவர்கள் பலிபீடங்களை இடித்து அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை அக்கினியால் சுட்டெரித்து, அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை நொறுக்கி அவைகளின் பேரும் அவ்விடத்தில் இல்லாமல் அழியும்படி செய்யக்கடவீர்கள்.
- உபாகமம் 12:3

8. உன் தாய்க்குப் பிறந்த உன் சகோதரனாகிலும், உன் குமாரனாகிலும், உன் குமாரத்தியாகிலும், உன் மார்பிலுள்ள உன் மனைவியாகிலும், உன் பிராணனைப் போலிருக்கின்ற உன் சினேகிதனாகிலும் உன்னை நோக்கி நாம் போய் வேறு தேவர்களைச் சேவிப்போம் வாருங்கள் என்று சொல்லி நீயும் உன் பிதாக்களும் அறியாத அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி இரகசியமாய் உன்னை ஏவிவிட்டால்.... நீ

அவனுக்குச் செவி கொடாமலும் சம்மதியாமலும் உன் கண் அவன்மேல் இரக்கம் கொள்ளாமலும், அவனை ஒழித்து வைக்காமலும்... அவனைக் கொலை செய்து போட வேண்டும். அவனைக் கொலை செய்வதற்கு, முதலில் உன் கையும் பின்பு மற்ற ஜனத்தின் கையும் அவன்மேல் இருக்கக் கடவது.

- உபாகமம் 13:6-9

9. உங்களது நாற்புறத்திலும் இருக்கின்ற பிற மக்களின் கடவுளரைப் பின்பற்றாதிருப்பீர்கள். பின்பற்றினால் உன் நடுவில் இருக்கிற கடவுளாகிய ஆண்டவர் எரிச்சலுள்ள தேவனாகையால், ஒருவேளை உன் ஆண்டவராகிய கர்த்தரின் கோபம் உன்மேல் பொங்க, உன்னைப் பூமியின் முகத்திலிருந்து அழித்து விட்டாலும் விடலாம்.

- உபாகமம் 6:14, 15

இன்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பு பைபிளில் எழுதப்பட்ட இவ்வாக்கியங்கள் நிறைவேற்றப்படவேண்டிய இறைவனின் கட்டளை என யூதர்களாலும், பின் நாட்களில் கிறித்துவர்களாலும் நம்பப்படுகின்றது. அவ்வாறு செய்யப் பட்டால் மட்டுமே நாடு சுத்தப்பட்டு அமைதியும், மக்களுக்கு நோயற்ற வாழ்வும் கிடைக்கும் என நம்புகின்றனர். இந்நம்பிக்கையின் விளைவாகப் பல ஆயிரம் ஆண்டுகளாக இப்புவியில் மதத்தின் பெயரால் கொலைகளும் கொள்ளைகளும், கற்பழித்தலும், யுத்தங்களும் நடந்துள்ளன. உலக மகா இக்கொடிய கட்டளைகளை யூதர்களுக்கும், பிந்தைய கிறித்துவர்களுக்கும் கர்த்தர் வழங்கியுள்ளார். அன்பின் வடிவான ஒரு கடவுள் இத்தகைய கொடிய கட்டளைகளைத்[18] தன் மக்களுக்கு வழங்கியிருக்கக் கூடுமா என்பது ஆய்ந்து முடிவு செய்யப்படவேண்டும்.

2:8. இஸ்ரேலிய அரசர்கள்

இஸ்ரேலிய நாட்டின் முதல் அரசன் சவுல். இவர் கி.மு. 1250ல் பாலஸ்தீனத்தை ஆண்டதாகக் கருதப்படுகின்றார். பின்னர் இஸ்ரேலிய நாட்டை ஆட்சி செய்தவர்களில் டேவிட் (தாவீது) - (கி.மு. 1010-970) மற்றும் அவரின் மகன் சாலமன்

(கி.மு. 970-913) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சாலமன் அரசனுக்கு 1000 மனைவிகள் இருந்தனர். சாலமன் அரசனே ஜெருசலேம் நகரில் கர்த்தருக்கான முதல் ஆலயத்தைக் கட்டுவித்தான். அவ்வாலயத்தின் கருவறையில் கர்த்தர் மோசேயுக்கு கல்லில் பதித்து வழங்கிய பத்துக் கட்டளைகள் அடங்கிய பெட்டியினை வைத்து இஸ்ரேலியர்களை வழிபடச் செய்தான். இவன் மனைவிகளில் சிலர் புறசாதி பெண்கள். அப்பெண்கள் வேறு தேவன்களையும் வழிபட்டனர். இதனால் கர்த்தர் எரிச்சலுற்றார். அதன் விளைவாகச் சாலமன் மகன் ரகுபாம் காலத்தில் இஸ்ரேலிய நாடு வடக்கு (சமேரிய நாடு) எனவும், தெற்கு (யுதேயா நாடு) எனவும் இரண்டாகப் பிளவுபட்டது. சமேரியர்கள் யூதகோத்திரத்தினர் என்றாலும் அவர்கள் வேறுபல தெய்வங்களையும் வழிபட்டனர். இதனால் அவர்களின் தேவன் எரிச்சலுற்றார். கி.மு. 722ல் அசிரியா நாட்டு மன்னன் சமேரியா மீது படையெடுத்து அந்நாட்டைக் கைப்பற்றினான். அங்கு வாழ்ந்த இஸ்ரேலியர்களை அவ்வரசன் மூலம் கர்த்தர் அடித்துத் துரத்தச் செய்தார். யூதர்களின் வீடுகளில் வேறு சாதியினர் குடியேறினர்.

நாட்டின் தென்பகுதியான யுதேயாவில் யூதா கோத்திரத்தாரும், பெஞ்சமின் கோத்திரத்தாரும் ஒரு சில லெவிய கோத்திரத்தார்கள் மட்டுமே குடியிருந்தனர். இதில் லெவியர்கள் யூதசமய புரோகித வர்க்கத்தினர். யூத கோவில்களில் பூஜை வைப்போரும் இவர்களே. கோவில் மூலஸ்தானத்தில் மற்ற யூத வர்க்கத்தினர் நுழைய அனுமதியில்லை. லெவியர்களுக்கு நிலங்களின் பங்கோ அல்லது நிலம் வாங்கவோ, அல்லது சாகுபடி செய்யவோ அனுமதியில்லை. மற்றக் கோத்திரத்தார் லெவியர்களுக்குத் தங்களது வருமானத்தில் பத்தில் ஒரு பகுதியைக் காணிக்கையாக வழங்க வேண்டும். லெவியர்கள் இவ்வருமானத்தைத் தவிரக் கோவிலுக்குத் தானமாகவும், அர்ச்சனைக்காகவும், பலியிடப்படும் பொருள் ஆகியவற்றிலும், ஓர் பகுதியைப் பெற்றுக் கொள்ளலாம். யுதேயா நாட்டில் வாழ்ந்த யூதர்கள் ஒரே தேவனை வழிபட்டனர். அத்தேவனின் பெயர் எல்சடை (Elsadai) அல்லது எலோகிம் (Elohem) எனவும் யெகோவா (yehowa) எனவும் வழங்கப்பட்டது. எப்ரு (Hebrew)

மொழியிலுள்ள பைபிளில் யெகோவா எனும் பெயருக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, சுமார் 6500 தடவை அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் பைபிளில் ஒரு சில இடங்களில் மட்டுமே (யாத் 6:2) இப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.[19] மற்ற இடங்களில் யெகோவின் பெயர் கர்த்தர் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (இதன் காரணமாக தங்களின் கடவுள் பெயர் யெகோவா என்பது கிறித்துவமக்களுக்குத் தெரியாமல் மறக்கடிக்கப்பட்டுவிட்டது. பைபிளில் இல்லாத கர்த்தர் எனும் பெயர், தங்களின் தெய்வத்தின் பெயராகத் தமிழ்க் கிறித்துவர்களின் மனதில் பதிவு செய்யப்பட்டுவிட்டது.)

கி.மு. 587ல் பாபிலோனிய நாட்டு மன்னன் நெடிகர்த்நேசர் யுதேயா நாட்டின்மீது படையெடுத்தார். அவனின் படைகளுக்கு அஞ்சி யூதர்கள் பல நாடுகளுக்குச் சிதறி ஓடினர். பின்னர், ஓடிய நாடுகளிலே குடியிருப்புகளை ஏற்படுத்தி கர்த்தருக்கு ஜெப வீடுகளையும் ஏற்படுத்தி வாழ்ந்தனர். ஓடியவர்கள் போக எஞ்சியவர்களுள், உழைக்கத் தகுதியானவர்கள் பாபிலோன் நாட்டிற்கு அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்டனர். யூதர்கள் அவமானம் அடைந்தனர். ஜெருசலேமிய நகர ஆலயம் வழிபடுவோர் இன்றி அழிந்தது.

பாபிலோனில் அடிமையாக வாழ்ந்த காலத்தில் யூதர்கள் புற சாதி மக்களின் இறைவனைப்பற்றியும், அதன் கோட்பாடுகளையும் கற்றனர். இதுவே பின்னர் யூதர்களின் இறைக்கொள்கையை வலுப்படுத்திடப் பெரிதும் உதவியது. அடிமையாய் வாழ்ந்த யூதமக்களுக்குக் கி.மு. 538ல் பெர்சியா நாட்டு மன்னன் சைரஸ் என்பவனால் விடிவுகாலம் வந்தது. அவன் பாபிலோனியாவைக் கைப்பற்றி யூதர்களை விடுவித்து யுதேயா நாட்டிற்குத் திரும்புவதற்கு அனுமதித்தான்.[20] அவ்வாறு திரும்பிய யூதர்கள் ‘எஸ்ரா’ எனும் ஓர் மகான் தலைமையில் கி.மு. 520 - 515ல் ஜெருசலேம் ஆலயத்தைப் புதுப்பித்து வழிபாடுகளைத் தொடர்ந்தனர். எனினும் அவர்கள் மனதில் தங்களை அடிமையாக்கிய பாபிலோனிய அரசன் நெடிகாத்நேசார் மீது பெரும் எரிச்சலும் பழிக்கும்பழி வாங்க எண்ணமும் உண்டானது. அதுவரை நம்பியிருந்த கர்த்தராகிய

கடவுள் (யெகோவா) தங்களைக் கைவிட்டது கண்டு மனம் வருந்தினர். அவ்வாறு துயரப்பட்டு நம்பிக்கையிழந்த மக்களை யூத சமயத்தில் நிலை நிறுத்திட தனியேல், எசேக்கியல் முதலிய மகான்கள் 'மெசியா' எனும் கடவுள் கொள்கையை உருவாக்கினர். அக்கொள்கையின் முதன்மையான கோட்பாடுகள் வருமாறு:

1. கர்த்தர் மீண்டும் யுதேயா (யூதர்கள்) நாட்டிற்கு வருவார். யூதர்களைப் பாதுகாத்திடுவார். எனவே மக்கள் பயப்படத் தேவையில்லை.

2. சிதறுண்ட மற்றும் காணாமல்போன ஆடுகளை (இஸ்ரேலிய கோத்திரங்களை) ஒன்று சேர்ப்பார்.

3. யூதர்களைத் துன்புறுத்தி, அவமானப்படுத்திய பாபிலோன் நாட்டு அரசனை நியாயத் தீர்ப்புக்கு உட்படுத்தித் தண்டனை வழங்குவார்.

4. ஒன்று சேர்க்கப்பட்ட இஸ்ரேலியர்கட்குத் தாமே அரசனாக (கிறிஸ்துவாக) - மெஸையாவாக இருப்பார் (பார்க்கவும் எசக்கியேல் 28:25, 30:3, செப்பனியா 3:19, 20 எரோமியா 51:36, 51:24)

பாபிலோன் நாட்டிலிருந்து விடுபட்டு யுதேயா (யூத) நாடு திரும்பிய மக்களிடம் மெஸியா கொள்கை பிரபலமாக இருந்தது. எனினும் யூதர்களுக்குத் துன்பங்களும், அவமானமும் தொடர்ந்து வந்துகொண்டு இருந்தது. கி.மு. 333 - 63ஆம் ஆண்டு வரை யூதயா நாடு கிரேக்கப் படையெடுப்பினால் துயருற்றது. கிரேக்க நாட்டு மாவீரன் அலெக்சாண்டர் யூதேயா நாட்டைக் கைப்பற்றினான். அதன் பின்னர் வந்த கிரேக்க அரசன் அண்டியோகஸ் (Antiochus) காலத்தில் ஜெருசலேம் ஆலயம் மீண்டும் சரிவைச் சந்தித்தது. கி.மு. 63 முதல் கி.பி. 313 வரை யூதேயா நாடு ரோமானியர்களுக்கு அடிமையாய் ஆனது. இக்காலகட்டத்தில் யூதர்கள் தங்களை விடுவிக்கத் தானியேல், எசேக்கியேல் ஆகியோர் வாக்குதத்தம் அளித்திருந்த மெஸ்சியா (கிறிஸ்த்து) வந்துவிட மாட்டாரா எனப் பெரிதும் ஏங்கினார். அக்காலத்தில் எதிர்பார்க்கப்படும் மெஸ்ஸியா நானே எனப் பல போலி மெஸ்ஸியர்கள் யூதயோ நாட்டில் (பாலஸ்தீனத்தில்) நடமாடி

வந்தனர். இத்தகைய எதிர்பார்ப்புக்கு இடையே நாசரேத் ஊர்க்காரரான யேசுவே அந்த மெஸ்ஸியா எனப் பின்னர் பிரகடனப்படுத்தப்பட்டு வரலாற்றில் முன்பாக வைக்கப் பட்டார்.

* * *

பகுதி - 3

அறிந்ததும், அறியாததும்

பகுதி-3 : பொருள்

பக்கம்

3.1 யேசு கிறிஸ்து - சுவிசேஷங்களின்படி 65

3.2 யேசுபிரானை உருவகப்படுத்திய வரலாறு 71

3.3 எகிப்திய நாட்டில் கிறித்துவம் 91

3.4 ரோமாபுரியில் கிறித்துவம் 97

3.5 கிறித்துவம் ஓர் சமயமாக உருவாகுதல் - ஐரோப்பாவின் இருண்ட காலம் 98

3.6 பரிசுத்த வேதாகமம் (பைபிள்) உருவாக்கம் 101

3.7 பரிசுத்த வேதாகமம் இறுதியாக்கப்படல் 110

3.8 கிறித்துவம் ஓர் உலகளாவிய சமயமாக உருவாகுதல் 115

3.9 பரிசுத்த வேதாகமம் அங்கீகரிக்கப்படல் 130

3:1. யேசு கிறிஸ்து - சுவிசேஷங்களின்படி

கி.மு. ஆறாம் ஆண்டில் பெத்லேகாம் நகரில் மேரி எனும் பெண் வாழ்ந்து வந்தார். அவருக்கும் ஜோசப் எனும் பெயருள்ள தச்சர் ஒருவருக்கும் திருமணம் செய்ய நிச்சயதார்த்தம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் திருமணத்திற்கு முன்பே மேரி கருவுற்றார்.[1] அவ்வாறு கருவுற்ற மேரியைத் திருமண உறவிலிருந்து உதறிவிட ஜோசப் எத்தனித்தார். அச்சமயத்தில் ஒருநாள் ஜோசப்பின் கனவில் இறைவன் தோன்றி, கன்னிமேரி பரிசுத்த ஆவியால் கருவுற்றிருப்பதாகவும், அவளை நிராகரிக்க வேண்டாம் எனவும் அறிவித்தது. ஜோசப்பும் அவ்வாறே ஏற்றுக் கொண்டார். அவர்களுக்குப் பிறந்த குழந்தைக்கு யேசு எனப் பெயரிட்டார்கள்.[2]

அச்சமயத்தில் பாலஸ்தீன நாட்டை ஆண்டுவந்த ஹெரார்டு (Herod) எனும் யூத சிற்றரசன் தனது ஆட்சிக்கு இவ்வாறு கன்னியின் வயிற்றில் பிறந்த குழந்தையால் ஆபத்து நேரிடும் என - ஜோதிடர்கள் மூலம் அறிந்து - அஞ்சினான். எனினும் கன்னிக்குப் பிறந்த அக்குழந்தையை அடையாளம் காணமுடியவில்லை. எனவே தனது நாட்டில் இரண்டு வயதுக்குக் குறைந்த வயதுள்ள ஆண் குழந்தைகள் அனைத்தையும் கொல்ல உத்தரவிட்டான். இதிலிருந்து தப்பிக்கும் பொருட்டு ஜோசப் தனது மனைவி, மகன் யேசு ஆகியோருடன் அண்டைய நாடான எகிப்திற்குத் தப்பியோடினார். சிலகாலம் கழித்து ஹெரார்டு அரசன் இறந்தபின் மேற்படி குடும்பம் பாலஸ்தீனம் திரும்பிக் கலிலியோ கடற்கரை அருகிலுள்ள நாசரேத் எனும் நகரில் வாழ்ந்து வந்தது. எனினும் யேசுவின் பிந்தைய வாழ்க்கை, அவரின் 30ஆவது வயதுவரையிலும் பதிவு செய்யப் படவில்லை.

யேசு தனது முப்பதாவது வயதில் யூதர்கள் வழக்கப்படி 'ஜான்' என்பவரால் ஜோர்டான் நதியில் ஞானஸ்நானம் செய்யப்பட்டு யூதமத சம்பிரதாயத்திற்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அவ்வமயம் பரிசுத்த ஆவி புறாவடிவில் வானத்திலிருந்து யேசுவின் உடலுக்குள் புகுந்ததாக

கூறப்படுகிறது. ஞானஸ்நானம் செய்து வைத்த 'ஜான்' எனும் மகான் யேசுவை 'கடவுளின் மகன்' என அறிவித்தார். ஞானஸ்நானத்திற்குப் பின், யேசு பாலைவனப் பகுதிக்குச் சென்று 40 நாட்கள் இரவும் பகலுமாகப் பிரார்த்தனை செய்தார். அவ்வமயம் சாத்தான், யேசுவிடம் மூன்றுமுறை முயற்சி செய்து அவரை ஆன்மீக வாழ்விலிருந்து உலக வாழ்விற்குத் திருப்ப முயற்சி செய்தான். அதனை யேசு ஏற்றுக் கொள்ளவில்லை. அதன்பின்னர் யேசு கலிலியோ பகுதிக்குத் திரும்பிப் பல கிராமங்களுக்குப் பயணம் செய்து தனது ஆன்மீகப் பணிக்குப் பலரைச் சீடராக்கினார். அவ்வாறு மொத்தம் 12 சீடர்கள் இருந்தனர். அதில் யேசுவின் இரட்டைச் சகோதரரான தாமஸ், இன்னொரு சகோதரன் ஜேம்ஸ் ஆகியோரும் அடங்குவர். இவர்களைத் தவிர மக்தோனா மரியா எனும் பெண் உதவியாளரும் யேசுவுக்கு உண்டு. யேசு சாகும்வரை இவர் கூடவே இருந்தார். யேசு ஒருநாள் ஜெருசலேம் நகருக்கு, அங்குள்ள யூதகோவிலுக்கு சென்றடைந்தார். கோவிலில் புறாக்கள், கோழிகள், ஆடுகள், மாடுகள் ஆகியவை பலியிடுவதற்காக விற்பனை செய்யும் பொருட்டு வியாபாரிகள் கொண்டு வந்திருந்தனர். இதனைக் கண்ட யேசு அவ்வியாபாரிகளை அடித்து விரட்டினார். பல இடங்களில் பல்வேறு அதிசயங்களைச் செய்தார். கிராமம் கிராமமாகச் சென்று தேவனுடைய ராஜ்யம் அதாவது மெஸையாவின் ஆட்சி சமீபத்தில் வரப்போகின்றது எனப் பிரசங்கித்தார். யூதர்கள் எதிர்பார்த்திருந்த மெஸ்ஸையா தானே என்றார். தன்னை நம்பினால் சொர்க்கலோக வாழ்க்கை நிச்சயம் என்றார். தானே யூதர்களின் அரசன் என்றார். இதனைக் கேள்வியுற்ற யூத பூஜாரிகளும், பிரமுகர்களும் யேசுவுக்கு எதிராக வெகுண்டு எழுந்தனர். தங்களுக்குத் தெரியாமல் யூதர்களுக்கு மெஸ்ஸையா எப்படி வரக்கூடும் என்றும், ஜெருசலேம் ஆலயத்தில் யேசு நடந்து கொண்டது யூதசமயத்தின் பலி கொள்கைக்கு எதிரானது என்றும் யேசுவுடன் வாதாடினார்கள். ஆருடமாகச் சொல்லப்பட்ட மெஸ்ஸையா, யூதசமய கோட்பாட்டுடன்தான் வருவார் என்றும், யேசுவின் செய்கை யூத சமயத்திற்கு எதிரானது, எனவே யேசு மெஸ்ஸையாவாக இருக்க முடியாது எனவும், அவர் சாத்தானின் பிரதிநிதி என்றும் நம்பினார்கள்.

ஒருநாள் யேசு தன் சீடர்கள் மூவரை மலைஉச்சிக்குக் கொண்டு சென்று இறைவனுக்குப் பிரார்த்தனை செய்தார். அவ்வமயம் யூத இன முன்னோர்களான எலிஜா, மோசஸ் இருவரும் வானத்திலிருந்து இறங்கி வந்து யேசுவிடம் பேசினார்கள். அச்சமயம் மேகத்திலிருந்து ஒரு பிரகாசமான ஒளி தோன்றியது 'இதுவே என் மகன் அவனுக்கு எல்லோரும் கீழ்ப்படியுங்கள்' எனும் ஓர் அசரீரி வாக்குத் தோன்றியது.

இக்காலகட்டத்தில் பாலஸ்தீனத்திலிருந்து ரோமானிய ஆட்சியைத் துரத்தியடித்து யூதர்களின் ஆட்சியை நிறுவிட யூதர்களின் தீவிரவாத குழு செயல்பட்டு வந்தது. இத்தீவிரவாத குழுவிற்கு ஜியாலட்ஸ் எனும் பெயர். எனவே யூத சமய குருக்களும், பரிசேயர் எனும் சமயத் தலைவர்களும், யேசுவை மேற்படி ரோமானிய ஆட்சிக்கு எதிரான ஜியாலட்ஸ் தீவிரவாதி எனக் கருதினர். பாலஸ்தீனத்தை ஆண்டுவந்த ரோமானிய சக்கரவர்த்தியின் ராஜபிரதிநிதி 'பிலாத்து' என்பவனிடம் சென்று யேசுவின் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர்.

1. ரோமானிய ஆட்சியின் கீழ் அடிமையாக வாழ்ந்த போதிலும் 'யூதர்களின் அரசன் நான்' என்கிறார் இவ் யேசு. எனவே இவர் ரோமானிய ஆட்சியை வீழ்த்த நினைக்கும் தீவிரவாத குழுவின் தலைவன்.

2. யூத கோவிலுக்குள் புகுந்து அங்குள்ளோரையும், பலி பொருட்களையும் அடித்து விரட்டியதன் மூலம் இவர் யூத சமயத்திற்குப் பெரும் துரோகம் செய்து விட்டார்.

எனவே ராஜதுரோகத்திற்கும் சமய துரோகத்திற்கும் ஒன்றுசேர்த்து யேசுவுக்கு மரணதண்டனை வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். முதலில் சற்றுத் தயங்கிய பிலாத்து பின்னர் யூதமத தலைவர்களின் வேண்டுகோளை ஏற்று அவ்வாறே மரணதண்டனை விதித்து, மேற்படி தண்டனை அக்கால ரோமானிய வழக்கப்படி சிலுவையில் அடித்து நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் உத்தர விட்டான்.

அவ்வாறே யேசுவைக் 'கொல்கதா' எனும் ஓர் பரம்பு காட்டிற்கு கொண்டு சென்று சிலுவையில் அடித்தனர். அவர் சாவதற்குப் பலமணிநேரம் ஆனது. பலமணிநேரம் சென்ற பின் அவர் 'ஏலி ஏலி லாமா சபக்தானி' (என் தேவனே, என்

தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்) என அலறித் தன் உயிரை விட்டார். அவர் இறக்கும்போது சிலுவைக்கு முன் தாயார் மரியாளும், சில சீடர்களும், சகோதரர்களும், மக்தோனா மரியாளும் நின்று கொண்டிருந்தனர். இவ்வாறு அவர் உயிர்விட்ட சமயத்தில் நிலம் நடுங்கியதாகவும், புதைகுழிகள் திறந்து அதில் புதைக்கப்பட்டிருந்தவர்கள் உயிருடன் எழுந்து நகர தெருக்களில் நடந்து சென்றுள்ளனர் எனவும் பைபிளில் கூறப்பட்டுள்ளது. அவர் இறந்தபின், அவரது உடல் சீடர்களால் எடுத்துச் செல்லப்பட்டு, காலியாக இருந்த ஒரு மலைக் குகையில் செதுக்கி வைத்திருந்த கல்லறையில் வைக்கப்பட்டுக் குகையின் நுழைவு வாயில்கள் பெரும் கற்களால், மூடப்பட்டன. எனினும், இறந்த மூன்றாம் நாள் சடலத்திற்கு ஈமச்சடங்குகள் செய்யவந்த பெண்கள் குழுவினர் கல்லறையின் வாசல் திறந்திருந்தது கண்டு பதறினர். அவ்வமயம் அங்கிருந்த தேவதூதர்கள், யேசு உயிர்ப்பித்து எழுந்து கலிலியோ சென்றுவிட்டதாகவும், அங்கு போனால் அவரைக் காணலாம் எனவும் கூறினர். அதன்பின் யேசு தன் சீடர்களுக்குப் பலமுறை காட்சியளித்ததாகவும், இறுதியில் அவர் இறைவனால் விண்ணிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தனது பிதாவின் அருகில் வலப்பக்கமாய், தற்போது வீற்றிருப்பதாகவும், அவர் மீண்டும் ஒரு தடவை இப்பூலோகத்திற்கு வந்து தன்னை நம்பியோருக்கு நித்திய ஜீவன் எனும் சொர்க்கலோக வாழ்வும், தன்னை நம்பாதோர்க்கு நித்திய நரகமும் வழங்குவார் எனவும் கூறப்பட்டுள்ளது.

யேசு உயிருடன் இருந்த காலத்தில் அம்மக்களை நோக்கி ‘உங்களில் பலர் உயிருடன் இருக்கும்போதே நான் திரும்பவும் வருவேன்’[3] என்று கூறியிருந்தார். எனவே அக்காலத்தில் யேசுவின்மீது மக்களுக்குப் பெரிதும் நம்பிக்கையிருந்தது. இரண்டாம் வருகை இதோ வரப்போகின்றது நித்திய ஜீவன் கிடைத்துவிடும் என மக்கள் நம்பி, கூட்டம் கூட்டமாய் யேசுவின் கொள்கையின் பக்கம் சென்றனர்.

எனினும் யேசுவின் குலத் தலைவர்களான யூதர்கள் ‘ஏசுவின் இறைக்கொள்கை’ முற்றிலும் தவறானது என அவரை நிராகரித்தனர். இதற்கிடையே மறைந்திருந்து வாழ்ந்த யூத விடுதலை படையினர் ரோமானிய ஆட்சிக்கு எதிராகக் கலவரம்

செய்தனர். இவ்வாறு நடந்த கலவரத்தின்போது ஜெருசலேம் ஆலயம் ரோமானியர்களால் அழிக்கப்பட்டது. கலவரத்திற்கு யேசுவின் கொள்கைதான் (நானே யூதர்களின் ராஜா என்றது) காரணம் எனக் கூறி யேசுவின் சீடர்கள்மீது பெரும் கொடூரங்கள் முடுக்கிவிடப்பட்டன. யேசுவின் சீடர்கள் தலைமறைவாயினர். யேசுவின் சீடர்களுக்கு எதிராக ரோமானிய ஆட்சியாளர்களுடன் சேர்ந்து கொடுமை செய்தவன் சவுல் எனவும் பவுல் எனவும் அழைக்கப்பட்ட ஒரு படைவீரன். பின்னாட்களில் ஒரு தேவதரிசனம் கிடைத்தது என்று கூறி யேசுவின் அடியாராகத் தன்னைக் காட்டிக் கொண்டார். ஆனால் இவரை யேசுவின் குடும்பத்தினர் தங்களின் நண்பனாக அணைத்துக் கொள்ளவில்லை. பவுல் அடிகளாருக்கும் யேசுவின் குடும்பத்தினருக்கும் மோதல் வெடித்தது.[4] இரு குழுவினர்களுக்குமிடையே கொள்கை வேறுபாடுகள் தோன்றின.

1. யேசுவின் குடும்பத்தினரும், தாமஸும், ஜேம்ஸ் மற்றும் பீட்டர் போன்றோரும் யேசுவின் கொள்கை யூதமதமே என்றும், அதனைப் புதுப்பித்திடவே யேசு உலகிற்கு வந்து மாண்டார் எனப் பிரசங்கத்தினர்.[5] ஆனால் பவுல் வேறுவிதமாகப் பிரசங்கித்தார்.

2. தடைசெய்யப்பட்ட ஞானப் பழத்தை உண்டதற்காக, மனித குலத்திற்கு ஏற்பட்ட சாபத்தை நீக்கி மக்களை 'மீட்கவே' யேசு உலகிற்கு வந்தார் என யேசுவின் மரணத்தை ஞானப்பழ கதையுடன் இணைத்துப் பவுல் ஒரு பெரும் கதையை உருவாக்கினார்.

3. அக்காலத்தில் யூதர்கள் ஏழையாக வாழ்ந்தனர். ஆனால் எதிர் நாட்டுக்காரர்களான கிரேக்கர்களும், ஆட்சியாளர்களான ரோமானியர்களும் பெரும் செல்வத்துடன் விளங்கினர். அவர்களைக் கவரும் பொருட்டு, யேசுவின் போதனைகள் யூதர்களுக்கானது மட்டுமல்ல, புற ஜாதியினருக்கும் ஏற்புடையது எனப் பவுல் பிரசங்கித்தார். யேசுவின் கொலைக்கு ரோமானிய ஆட்சி காரணம் அன்று எனவும், யூதர்களே காரணம் எனவும் பழியை வேறு திசைக்குத் திருப்பி, ரோமானியர்களின் அன்புக்கும், அரவணைப்பிற்கும், பெரும் செல்வத்திற்கும் பவுல் அடிகளார் பாத்திரமானார்.

4. யேசுவின் குடும்பத்தினர் யேசுவின் போதனைகளைப் பிரசங்கித்தனர். ஆனால் பவுல் அடிகளாரோ தனக்கு நற்செய்திகள் பரிசுத்த ஆவியால் நேரடியாக வழங்கப்பட்டுள்ளன எனக் கூறி யேசுவின் பெயரை உணவிற்கு ஊறுகாய் வைத்திருப்பது போன்று மேலெழுந்தவாரியாக உபயோகித்துக் கொண்டு முற்றிலும் வேறான கொள்கையைத் தனது கடிதங்கள் மூலமாகவும், பல இடங்களுக்கு ரோமானிய அரச பிரதிநிதி என்ற முறையிலும் சென்று பிரசாரம் செய்தார்.[6] பவுலின் பிரச்சாரமே கிறித்துவ கொள்கையாயிற்று. கிறித்துவ கொள்கை தோன்றியது கி.பி. 80 ஆம் ஆண்டு எனலாம். அக்காலகட்டத்தில் யேசுவின் வாழ்க்கையைக் கூறும் சுவிசேஷங்கள் எதுவும் எழுதப்படவில்லை. எனவே பவுல் அடிகளின் வார்த்தைகளே அதிகாரமானவையாக எடுத்து கொள்ளப்பட்டது. அதுவே கிறித்துவ ஆணி வேராயிற்று.

காலக்கிரமத்தில் பவுல் அடிகளாரால் பிரசங்கிக்கப்பட்ட கிறித்துவம் அரசு ஆதரவினாலும், பணபலத்தாலும் வென்றது.[7] அன்னை மரியாளின் குழுவினர் (ஜெருசலேம் குழுவினர்) போதித்த கொள்கை கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை ஆங்காங்கே பிரபலமாயிருந்து வந்தது.[8] எனினும் அவை காலகிராமத்தில் பவுல் அடிகளாரின் கிறித்துவத்தால் ஜீரணிக்கப்பட்டுவிட்டது.

மேலே குறிப்பிட்டுள்ள யேசு கிறித்து மற்றும் கிறித்துவ ஆரம்பகட்ட வரலாறு ஆகியவை, நவீன கால வரலாற்றுப் புத்தகங்கள் போன்று வரிசைக் கிரமமாக எழுதப்படவில்லை. மாறாக, செய்திகள் அங்கீகரிக்கப்பட்ட சுவிசேஷங்களில் ஆங்காங்கே கிடக்கும் செய்திகளைக் கோர்த்து எழுதப் பட்டுள்ளதே! இச்சமய வரலாற்றிலிருந்தோ அல்லது வேறு துணை ஆவணங்களிலிருந்தோ முக்கியமான நிகழ்வுகளான, யேசுவின் பிறந்த நாளும், இறந்த நாளும் காணப்படவில்லை. இன்று அனுசரிக்கப்படும் தேவமாதா கர்ப்பம் தரித்தநாள், நல்ல வெள்ளிக் கிழமை, ஈஸ்ட்டர், கிறித்துமஸ் ஆகியவை கற்பனையாய்க் கடைப்பிடிக்கும் நாட்களே.

யேசுவின் வாழ்க்கையை விவரிக்கும் நான்கு சுவிசேஷங்களிலும் எண்ணற்ற முரண்பாடுகள் உள்ளதாக அறிஞர்கள் கூறுகின்றனர். (பார்க்கவும்: ஜைனுல் ஆபிதீன். ‘இயேசு சிலுவையில் அறையப்படவில்லை’, நபீலா பதிப்பகம், சென்னை (2010).

1. சிலுவையைச் சுமந்ததில் முரண்பாடு (சிலுவையைச் சுமந்தது ஏசுவா அல்லது வேறு நபரா)

2. யேசுவைச் சிலுவையில் அடிக்கும்போது நிந்தித்த வர்கள் ஒருவரா? இருவரா?

3. கல்லறைக்கு முதலில் வந்தவர் யார்?

4. சிலுவையில் அறையப்பட்ட நேரம் எது?

5. கல்லை புரட்டியதில் முரண்பாடு

6. கல்லறைக்குப் பெண்கள் வந்த நேரம் எது?

7. சுகந்தவர்க்கம் (ஈமசடங்கு) இடுவதிலும் முரண்பாடு

8. கல்லறை முன் இருந்தது ஒரு தேவ தூதனா, இரண்டா?

9. சீடர்கள் பார்த்தபின் யேசு வானுலகம் சென்றாரா? அல்லது முன்பா?

பரிசுத்த ஆவியால் கூறப்பட்டு மனிதர்களால் எழுதப்பட்ட சுவிசேஷங்களில் இவ்வாறான பல்வேறு முரண்பாடுகள் இருப்பதை இக்காலக் கிறித்துவ அறிஞர்கள்கூட அன்புடன் ஏற்றுக்கொள்ளவில்லை.

3:2. யேசுபிரானை உருவகப்படுத்திய வரலாறு

பழைய ஏற்பாடு மற்றும் பவுல் போதனைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த வரலாறும் யேசு பிரானின் தோற்றமும், வாழ்க்கையும், இறுதிமுடிவும் அதன் மூலமாகத் தோன்றிய திருமறைகளின் கூற்றுக்களும் பற்றி இதுவரை கண்ணுற்றோம்.

எனினும் யேசுபிரான் எனும் வரலாற்று நாயகர் பாலஸ்தீனத்தில் (யுதேயா நாட்டில்) உண்மையில் வாழ்ந்தாரா, அல்லது அவர் ஓர் உருவாக்கப்பட்ட பாத்திரமா எனும் சர்ச்சை பல ஆயிரம் ஆண்டுகளாக உலக மக்களிடையே உலாவி வருகின்றனது. அத்துடன் யேசுபிரான் உண்மையில் உலகில் வாழ்ந்தார் எனும் கருத்திற்கு வலுசேர்க்கும் வண்ணம் பல ஆவணங்கள் தயாரிக்கப்பட்டது என்ற கருத்தும் வரலாற்று அறிஞர்கள் மத்தியில் பரவியுள்ளது. அவற்றை அறிந்து

கொள்வது மிகவும் அவசியம். அதற்குமுன்னர் யூதர்களின் வரலாற்றை மீண்டும் ஒருமுறை ஆதியந்தமாக பார்வை யிடலாம். (பார்க்கவும். "The Dead Sea scrolls... மற்றும் www.thenazareneway.com / Classical authors on Essenes).

கிமு - 587 - யூதர்கள், பாபிலோனிய அரசன் நெடிகாத் நேசர் என்பவரால் அடிமைகளாக்கப்பட்டு அந்நாட்டிற்குக் கொண்டு செல்லப்படல்.

கிமு - 538 - பெர்சிய மன்னன் சைரஸ் பாபிலோனி யாவைக் கைப்பற்றியதும், யூதர்களை விடுதலைசெய்து, அவர்களை யுதேயா நாட்டிற்குத் திரும்ப அனுமதித்தல்.

கிமு - 538 - 152 யுதேயா நாடு, எகிப்திய மற்றும் கிரேக்க, பெர்சிய அரசர்களுக்கு வெவ்வேறு காலகட்டங்களில் அடிமையாதல்.

கிமு 152 - மகாபியஸ் (Mattathias Maccabaeus) எனும் வைராக்கியமான யூதர், அன்னிய ஆட்சியை அகற்றி யூதர்கள் அரசை நிறுவுதல். யூதர்களின் சமயக் கட்டுப்பாடுகளும் உணவு ஆச்சாரங்களும் தீவிரமாக மக்கள் மத்தியில் வழக்கத்திற்கு வருதல்.

கிமு 150 - கிபி 180: யூதர்களிடையே ஞானமார்க தத்துவம் (messianic cult) வழக்கத்திற்கும், வழிபாட்டிற்கும் வருதல். ஆங்காங்கே ஞானமார்க்க வழிபாட்டுத் தலங்கள் (சர்ச்) முளைத்தல். ஞானமார்க்க யூதர்கள், எஸ்ஸின் (Essene) என அழைக்கப்பட்டனர். இவர்களின் மகான்கள் உப்புக் கடலின் வட மேற்குப் பாலைவன பகுதியில், கும்ரான் குன்றுகளின் குகைகளில் வாழ்ந்தனர்.[9] இக்காலத்தில் எழுந்தவை உப்புக்கடல் சாஸனங்கள் (Dead sea scrolls) எனும் யூத இலக்கியங்கள். எஸ்ஸின்கள், இந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்து சென்ற சமணமதத்தினர் என கருதப்படுகின்றது.

இதே காலகட்டங்களில் ஜியாலட்ஸ் (Zeolats) எனும் ஓர் தீவிரவாத யூத இயக்கம் கலிலியா கடற்கரை பகுதியில் தோன்றியது. இதனைத் தோற்றுவித்தவர் கமலா (Gamala) எனும் நகரைச் சார்ந்த ஜூதா (Judas). இவர்கள் மோசே (Moses) வெளிப்படுத்திய யூத சமய சட்டதிட்டங்களைத் தீவிரமாக பின்பற்றுபவர்களாய் இருந்தனர். அன்னியர் (Romans)

ஆட்சியை எதிர்த்து அவ்வப்போது கலகங்களைச் செய்து வந்தனர்.

கிமு 63 - யுதேயா நாடு ரோமானிய அரசன் பாம்பி (Pompey) என்பவரால் கைப்பற்றப்பட்டு மகாபியஸ் எனும் யூத அரசனின் பரம்பரை ஆட்சி முடிவுக்கு வருதல்.[10]

கிமு 37 - ஏரேது (Herod) எனும் அரேபிய-யூத சிற்றரசன் வசம் ரோமானியர்கள் பாலஸ்தீன ஆட்சியை ஒப்படைத்தல்.

கிமு 4 - ஏரேது அரசன் மரணமடைதல். ரோமானிய அரசனின் நேரடி ஆட்சி அமுலுக்கு வருதல்.

கிமு - 3- கிபி 6 - யேசுபிரானின் பிறப்பு (?)

கிபி 33 - ரோமானி ஆட்சியாளரின் பிரதிநிதி (Governor) பிலாத்து என்பவரால் யேசுபிரான் சிலுவையில் அடிக்கப் படுதல் (?)

கிபி 34 - ஸ்டீபன் எனும் எஸ்ஸின் மகான் உணவு பங்கீட்டின் போது நடைபெற்ற கலகத்தின் காரணமாகக் கல்லெறியப்பட்டுக் கொலைசெய்யப்படல்.

கிபி 49 - கிறிஸ்த்துஸ் (Christus) என்பவர் தலைமையில் ரோமாபுரியில் வாழ்ந்த யூதர்கள் கலகம் செய்தல். அதன் காரணமாக யூதர்கள் ரோமாபுரி நாட்டிலிருந்து விரட்டப்படல்.

கிபி 50 - 64 - நியாயவான் ஜேம்ஸ் என்பவருக்கும் பவுல் அடிகளாருக்குமிடையே தத்துவ மோதல்.

கிபி 64 - ஜேம்ஸ், பவுல் குழுவினரால் கொலை செய்யப்படல்[11] (?)

கிபி 66 - 74 - ரோமானியர்களின் ஆட்சிக்கு எதிரான ஜியாலட்ஸ் குழுவினரின், முதலாவது யூத விடுதலைப்போர். யூதர்கள் தோற்கடிக்கப்பட்டு கும்ரான் குகைகளும் கிராமங்களும் அழிக்கப்படுதல் (குகை இடிகாலம்). யூதர்களின் கடைசி போர்க்களம் மகதா கோட்டையை பாதுகாப்பதில் நிகழ்ந்தது. இக்கோட்டை ஏப்ரல் 16, கி.பி. 74ல் ரோமானியர்களால் கைப்பற்றப்பட்டது. அவ்வமயம் அக்கோட்டைக்குள் வாழ்ந்த 960 பெண்களும், குழந்தைகளும், சில ஆண்களும் ரோமானியர்களுக்கு அஞ்சி தீயில் குதித்துத் தற்கொலை செய்துகொண்டனர்.

கிபி 67 - பவுல் அடிகளார் கைது செய்யப்பட்டு ரோமாபுரியில் சிறையில் அடைக்கப்பட்டு மரண தண்டனை வழங்கப்படல் (?) இந்நிகழ்வு உண்மையானது என இதுகாறும் நிருபிக்கப்படவில்லை.

கிபி 70 - ஜெருசலேம் நகர யூதகோவில் இடிக்கப்படல்.

கிபி 132 - 135 - யூதர்களின் இரண்டாவது விடுதலைப் போர்: யூதர்கள் மீண்டும் தோல்வியடைதல்.

மகாபியஸ் எனும் யூத அரசனை இறைவன் அளித்த மெஸ்ஸியா என யூதர்கள் முதலில் நம்பினர். அவ்வரசனின் வீழ்ச்சிக்குப் பின்பு தானியல், (Daniel), எசேக்கியல் (Ezekiel) ஆகிய மகான்களால் நிறுவப்பட்ட மெஸ்ஸியா கொள்கை ஆட்டங்கண்டது. மெஸ்ஸியா எனும் கிறிஸ்து மூலம் உலகிற்கு இரட்சிப்புக் கிடைக்கும், உலகெங்குமுள்ள யூதர்களை அவர் ஒன்று சேர்ப்பார், உலகம் முழுமையையும் அவர் ஆண்டிடுவார் (எசாயா *11:4-16*) போன்ற நம்பிக்கைகள் தளர்ந்தன. இதன் காரணமாக யூதர்களில் பல பிரிவுகள் அன்று தோன்றின.[12]

1. பரிசேயர்கள்

யூதர்களில் பெரும்பாலோர் பரிசேயர்கள் - இப்பிரிவினர் யூத வேதங்களையும் (Tora) மகான்களின் வாழ்க்கையையும் (tradition) பின்பற்றினர். உயிர்ப்பித்து எழுதலிலும், தெய்வ லோக வாழ்விலும் நம்பிக்கை உடையவர்கள். கர்த்தர் அவனவன் செயலுக்குத் தகுந்தவாறு இறுதியில் தண்டனை அல்லது சொர்க்கம் வழங்குவான் எனும் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர்கள். விதியின் மீது நம்பிக்கை கொண்டிருந்தனர். ரோமானிய ஆட்சியாளர்க்கு உதவிவந்தனர்.[13]

2. சதுர்சேயர்கள்[14]

இவர்கள் யூத அரசவம்சத்தினர். எழுதப்பட்ட வேதங்களில் மட்டுமே நம்பிக்கை கொண்டிருந்தனர். உயிர்ப்பித்து எழுதலையும், ஆன்மா உண்டு என்பதையும் மறுத்தனர். விதிப்பயன் எனும் கொள்கையை மறுதலித்தனர். ரோமானிய ஆட்சியை எதிர்த்து ஜியாலெட்ஸ் எனும் விடுதலைப் படைக்கு மறைமுகமாக உதவிவந்தனர்.

3. ஜியாலெட்ஸ்[14]

யூதசமயக் கொள்கைகள் மீது வலுவான பற்றுக் கொண்டவர்கள். பரிசேயர்களுக்கு எதிராக நடந்து கொண்டனர். ரோமானிய ஆட்சிக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடினர். இவர்கள், மெஸ்ஸியா கொள்கைமீது தீவிர நம்பிக்கை கொண்டவர்கள்.

4. எஸ்ஸின்ஸ்[14]

இவர்கள் இந்து, புத்த, எகிப்திய கொள்கைகள் கலந்த யூத சமயக் கோட்பாட்டினைப் பின்பற்றினர். ஜெருசலேம் கோவில் பூஜாரிகள் மீது நம்பிக்கையின்றிக் கோவிலுக்கு வெளியே தனியிடங்களில் தங்கள் வழிபாடுகளை மேற்கொண்டனர். வாழ்விலும், சிந்தனையிலும் தூய்மையைக் கடைப்பிடித்தனர். சாவிற்குப் பின் உயிர்தெழுதல் நடைபெறும் எனும் கோட்பாட்டை நம்பாதவர்கள். இச்சமய பிரிவினரில் விவசாயிகள், தச்சர்கள், தொழிலாளர்கள் எனப் பல பிரிவினரும் இணைந்தனர். இவ்வியக்கம் அன்றைய காலத்தில் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டது. எஸ்ஸின் சன்னியாசிகள் சமண, புத்த சமயத் துறவிகளைப் போன்று எளிய, தூய்மையான வாழ்க்கை மேற்கொண்டு வாழ்விடங்களுக்கு வெளியே மலைகளிலும், குகைகளிலும் வாழ்ந்தனர்.[15]

எஸ்ஸின் சன்னியாசிகளைத் தவிர எஸ்ஸின் இயக்கத்திலிருந்த சாதாரண மக்கள், தங்களது நிலபுலன்களை வழிபாட்டுத்தலத்திற்கு வழங்கி, வழிபாட்டுத் தலத்தில் தங்கி, அங்குக் கிடைக்கும் உணவை மட்டும் உண்டு வாழ்ந்தனர்.. (இத்தகைய சமுதாய வாழ்விலிருந்து 1950ம் ஆண்டு வாக்கில் இஸ்ரேல் (யுதேயா) நாட்டில் தோன்றியதே கிட்புட்ஸ் Kitbutz எனும் கூட்டுப்பண்ணை வாழ்க்கை முறை)

அன்பு, சகோதரத்துவம், ஒருவருக்கொருவர் உதவி செய்தல், இறைவனை வானத்தை நோக்கித் தேடாமல் இதயக்குகையில் தேடு என்பது போன்ற வாழ்க்கை, வழிபாட்டு முறையை எஸ்ஸின்கள் பின்பற்றினர். இவ்வியக்கத்தில் மிகவும் பிரபலமானவர்கள் நியாயவான் ஜேம்ஸ் (யேசுவின் சகோதரர் -?), யோவான் எனும் ஞானஸ்தானிகன், பீட்டர், பர்னபாஸ், அகஸ்டின் ஆகியோர்.[16]

எஸ்ஸின் இயக்கம் "Messianic movement"எனவும், Gnoistic cult எனவும், ஏழைகளின் கூடாரம் (Congregation of poor) என்றும், ஆதிகிறித்துவம் (Proto christianity) எனப் பல்வேறாக அழைக்கப்பட்டது இவர்கள் கூட்டு வழிபாட்டினை மேற்கொண்டனர். அத்தலங்கள் ஞானமார்க்க சர்ச்சுகள் என வரலாற்று ஆசிரியர்களால் இன்று குறிப்பிடப்படுகின்றது. பரிசேயர்கள் இக்குழுவினருக்கு எதிராகச் செயல்பட்டாலும் அவர்களுக்கிடையில் பெரும் மோதல்கள் ஏற்படவில்லை.[17] ரோமானிய ஆட்சியாளர்களையும் எஸ்ஸின்கள் எதிர்த்துக் கொள்ளவில்லை. நியாயவான் ஜேம்ஸ் காலத்தில் இக்குழுவினரின் வழிபாட்டுத் தலங்கள் மத்திய தரைக்கடல் விளிம்புப் பகுதியில் வாழ்ந்த யூதர்கள் குடியிருப்புகளில் பிரபலமாக விளங்கின.[18] இக்குழுவினரே கிபி 50ல் ஜெருசலேம் குழுவினர் எனவும் அழைக்கப்பட்டனர். ஜெருசலேம் குழுவினர் புனித பவுல் அடிகளாரின் பரிசுத்த ஆவி இயக்கத்திற்குப் பெரும் எதிர்ப்பாளராக விளங்கினர். இவ்விரண்டு இயக்கங்களுக்கு மிடையே நடந்த போராட்டம் கலாத்தியர் இரண்டாம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. பேதுருவுடன் (பீட்டர்), பவுல் முகத்திற்கு முகமாக (நேரடியாய்) வாக்குவாதம் செய்தார் (கலாத் 2:11) என்பதும் அதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பரிசுத்த ஆவி இயக்கம்: (தற்கால கிறித்துவம்)

இவ்வியக்கத்தைத் தொடங்கியவர் பவுல் அடிகளார். கல்வி கேள்விகளில் சிறந்த அறிஞர். எகிப்திய - கிரேக்க - ரோமானிய கடவுட் கொள்கைகளை நன்கு அறிந்தவர். ஓர் யூதராய் இருந்தாலும் ரோமானிய நாட்டுக் குடிமகனாய் வாழ்ந்தார். இளம் வயதில் ரோமானியப் படைப் பிரிவு ஒன்றிற்குத் தலைமைதாங்கி அதனை வழிநடத்தினார். பாலஸ்தீனப் பகுதியில் அன்று ரோமானிய ஆட்சிக்குச் சிம்ம சொப்பனமாய் விளங்கிய ஜியாலட் தீவிரவாதிகளையும், சதுர்சேயர்கள் எனும் ராஜ-குருவம்சத்தினரையும் அடக்குவதற்கு ரோமானியர்களால் இவர் உபயோகப்படுத்தப்பட்டார். பரிசேயர்கள் எனும் யூத சாதியைச் சேர்ந்தவர் என்பதால், அன்றைய காலகட்டத்தில் ஜெருசலேம் ஆலயத்தை நிர்வாகித்து வந்த பரிசேயர் குருக்களுடன் நல்லுறவு

கொண்டிருந்தார். பரிசேயர்களின் கடவுள் கொள்கைக்கும், ஜெருசலேம் கோவிலுக்கும் எதிராக ஆங்காங்கே ஜேம்ஸ் குழுவினர் ஏற்படுத்தியிருந்த ஞானமார்க்க வழிபாட்டுத் தலங்களை அழிக்கப் பரிசேயர்கள் பவுல் அடிகளாரை உபயோகித்தனர். அத்தகைய ஓர் அழிவுக்கான டமாஸ்கஸ் பயணத்தின்போது பரிசுத்த ஆவியை மின்னல் வடிவில் கண்டதாகவும் 'என் மக்களைத் துன்புறுத்தாதே' என வானத்திலிருந்து அசரீரி கேட்டதாகவும் அதன் விளைவாக மனம் மாறுதலடைந்து ஆதி கிறித்துவர்களை துன்புறுத்துதலைத் தவிர்த்தது மட்டுமின்றிப் புதிதான பரிசுத்த ஆவி கிறித்துவராக மதம் மாறி விட்டார் என்றும் வரலாறு எழுதப்பட்டுள்ளது.

புதிய கிறித்துவராகப் பவுல் மதம் மாறிய பின்னர் எஸ்ஸின்கள், சதுர்சேயர்கள், ஜியாலட்ஸ் இயக்கத்தினர் ஆகியோர் பின்பற்றிய தீவிர யூத சமய வழிபாடு - உணவு - சமுதாயக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு எதிராக வேகத்துடன் திரும்பினார். படைப்பிரிவிலிருந்து விலகி உருவமற்ற பரிசுத்த ஆவியை வணங்கும் ஒரு புதிய வழிபாட்டு முறையை உருவாக்கினார். அக்காலகட்டத்தில் பாலஸ்தீனம் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது. ஜியாலெட்ஸ் எனும் தீவிரவாத இயக்கம் ரோமானிய காலனியாதிக்கத்திற்கு எதிராகப் பெரும் கலவரத்தை நடத்தி வந்தது. கலவரத்திற்குச் சதுர்சேயர்கள் தங்களது நேரடி ஆதரவையும், எஸ்ஸின்ஸ் தங்களது தார்மீக ஆதரவையும் வழங்கினர். ஆனால் பரிசேயர்களும் பவுல் அடிகளாரின் குழுவினரும் ரோமானியர்களுக்கு ஆதரவு வழங்கினர். கிபி 66ல் துவங்கிய யூதர்களின் விடுதலைப் போர் 74ல் முடிவு பெற்றது. போரின்போது ஜியாலெட்ஸ் குழுவினர் முழுமையாகக் கொல்லப்பட்டனர். சதுர்சேயர்கள் சமுதாயம் அழிந்தது. ஜெருசலேம் நகரக்கோவில் இடிக்கப்பட்டது.[19] எஸ்ஸின்ஸ் சன்னியாசிகள் வாழ்ந்த குகைகளும் இடிக்கப் பட்டன (குகை இடிகாலம்). இவ்விடுதலைப் போரின்போது யூதர்களின் பிரதான குழுக்கள் தோற்கடிக்கப்பட்டதுடன் எஸ்ஸின்களின் கூட்டு வாழ்க்கை முறையும், வழிபாட்டு முறையும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாயின. பணபலம், படைபலம், அரசு ஆதரவு ஆகியவை இன்றி அழிவை நோக்கி

இவ்வியக்கம் சென்றது.[20] கூட்டு வாழ்க்கைமுறை காலத்திற்கு ஒவ்வாமல் ஆனது. எஸ்ஸின்ஸ் (ஜேம்ஸ்) குழுவினர் மத்தியதரைக்கடல் பகுதியில் நிறுவியிருந்த ஞானமார்க்க சர்ச் வழிபாட்டுத் தலங்கள் யாவும் பவுல் குழுவினரால் பரிசுத்த ஆவி (சர்ச்) வழிபாட்டுத் தலங்களாக மாற்றப்பட்டன.[21] இம்மாற்றத்தினைத் துரிதப்படுத்திட, ரோமானியர்கள், கொரிந்தியர்கள், கலாத்தியர்கள் போன்றோருக்குப் பவுல் அடிகளார் நீண்ட நிருபங்களை (கடிதங்களை) எழுதினார். பவுல் அடிகளார் காலமான பின்னர் நடந்த இரண்டாவது யூதர்களின் விடுதலைப் போரிலும் (132-135) யூதர்கள் தோல்வியைத் தழுவினர்.[22] அத்துடன் ஞானமார்க்க இயக்கமும் அதன் வழிபாட்டுத் தலங்களும் முழு அழிவைச் சந்தித்தன. கிபி 64ல் ஜேம்ஸ் அவர்கள் கொலை செய்யப்பட்டதில் தொடங்கி கிபி 135வரை பாலஸ்தீனத்தில் (சுமார் இரண்டு தலைமுறைக்கும் மேலாக) சமய வெற்றிடம் தோன்றியது. மக்கள் செய்வதறியாது திகைத்தனர். பஞ்சமும், பசியும், ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளும் மேலோங்கின. இத்தகைய சூழ்நிலையில், சில ஆண்டுகளுக்கு முன்பே யேசு என்பவர் கடவுளின் மகனாகவும், யூதர்களின் மெஸ்ஸியாவாகவும் (Christ) பிறந்து சிலுவையில் அடிபட்டு இறந்தார். அதனை யூத சமுதாயம் கண்டுகொள்ளத் தவறியதால் அவர்களின் நாட்டிற்கு இவ்வளவு பெரிய சோதனைகள் ஏற்பட்டன எனவும் மக்களிடையே ஒரு நாடோடிக் கதை உருவானது.[23] அக்கதையை உருவாக்கிட அக்காலத்தில் பிரபலமாயிருந்த-பழைய ஏற்பாட்டின் சமய-இலக்கியக் கதைகள் மற்றும் பல வரலாற்று நாயகர்கள் பெயர்கள் தாராளமாய் உபயோகப்படுத்தப்பட்டன. இதனை எதிர்ப்போரும் அன்று இலர்.

யேசுபிரான் தோற்றம் - வரலாற்றுப் பின்னணி

முதலாம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னரும் எகிப்திய, கிரேக்க - ரோமானிய நாடுகளின் இலக்கியங்களில் பல தெய்வங்களின் வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. அவற்றிலிருந்துதான் யேசுவின் கதை எழுதப்பட்டுள்ளது எனத் தற்கால பைபிள் ஆராய்ச்சி அறிஞர்கள் கூறியுள்ளனர். www.scaruffi.com/politics/jesus.[24]

ஜீயஸ் (Zeus) எனும் கிரேக்க தெய்வத்திற்கும் அல்மினி (Alcmene) எனும் கன்னிப் பெண்ணிற்கும் பிறந்தவர் ஹெர்குலிஸ் எனும் தெய்வம். பூமியில் பல அதிசயங்களைச் செய்தவர். நரகலோகம் சென்று துன்பப்படுபவர்களைப் பார்த்து வந்தவர். பின்னர் மிகவும் துன்பப்பட்டு இறந்தார் மூன்றாம் நாள் உயிர்ப்பித்து எழுந்தார். இக்கதையை முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜோசபியஸ் எனும் யூத வரலாற்று ஆசிரியரும் தனது வரலாற்றுப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2. ரோமாபுரியில் அன்றைய காலத்தில் பிரபலமாக விளங்கியது 'மித்ரா' எனும் சூரிய தெய்வ வழிபாடு. மனிதகுலத்தைப் பாதுகாத்திட இத்தெய்வம் பூமிக்கு அனுப்பப்பட்டு, ஒரு கன்னி வயிற்றில் டிசம்பர் 25ம் தேதி பிறந்தார். பிறப்பின்போது இடையர்கள் சூழ்ந்திருந்தனர். இத்தெய்வத்திற்கும் 12 சீடர்கள் இருந்தனர். தெய்வம் தான் இறப்பதற்கு முன்னர் நடந்த விருந்தின்போது தன் சீடர்களிடம் தான் இறந்த பின்னர் தன் பூதஉடலைத் தின்னும்படியும், தன் இரத்தத்தைக் குடிக்கும்படியும் கூறினார். இத்தெய்வமும் கல்லறையிலிருந்து மூன்றாம் நாள் உயிர்ப்பித்து எழுந்தது.

3. எகிப்து நாட்டில் வணங்கப்பட்ட ஒஸிரிஸ் (Osiris)[25] எனும் தெய்வமும் டிசம்பர் 25ம் தேதியில் பிறந்து, ஓர் வெள்ளிக்கிழமையில் இறந்து, மூன்றாம் நாள் உயிர்ப்பித்து எழுந்தது.

4. அதுபோன்றே டயோனிஸஸ் (Dionysus) எனும் கடவுளும் 12 சீடர்கள் கொண்டிருந்தார். இத்தெய்வமும் டிசம்பர் 25ல் பிறந்தவர். இறந்தபின் மூன்றாம் நாள் உயிர்ப்பித்து எழுந்தார்.

அக்காலத்தில் பாலஸ்தீனத்தில் ஜோசப், மேரி (மரியம்) பீட்டர், தாமஸ், யேசு ஆகிய பெயர்கள் பிரபலமாயிருந்தன.[26] ஒரே பெயரில் பலர்வாழ்ந்து வந்தனர். உதாரணமாக மேரி எனும் பெயரில் ஏழு பெண்கள் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ளனர். (லூக்கா *8:2, 10:38-42*, மார்கு *15:40-47*, யோவான் *19:25*, அப் *12:12*, ரோமானியர் *16:6*). அதுபோன்று பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் மேரி என்ற பெயர் பிரபலமாய் இருந்துள்ளது (I நாளாகமம் *4:17*). கிமு 37 முதல் யுதேயா நாட்டில் அரசனாயிருந்த, எரோது எனும் யூத

அரசனுக்கு நான்கு மனைவிகள். அவர்களில் இருவர் மேரி எனும் பெயர் கொண்டவர்கள். மேரி எனும் பெயரையும், மற்றும் ரோமானிய, யூத, எகிப்திய ஆவணங்களில் காணப்படும் நியாயவான் ஜேம்ஸ், ஞானமார்க்க ஸ்தானிகள் யோவான் (John the Baptist), பாலஸ்தீனத்தின் ரோமானிய ஆட்சியாளர் (கவர்னர்) பூப்ளியஸ் (Publus Lentulus) அதற்குப் பிந்தைய கவர்னர் பிலாத்து, ரோமாபுரியில் கிபி 49ல் வாழ்ந்து நாடுகடத்தப்பட்ட கிறிஸ்து (christodas), மற்றும் Herodotus (ஏரோது அரசன் கிமு 37 - கிபி 4) ஆகியோர் பெயர்களை உபயோகப்படுத்தி கிபி 80 வாக்கில் யேசு கதைகள் புனையப்பட்டன.[27]

எரோது அரசன் காலத்தில் பிறந்த மேரியின் மகன் யேசு, அவரே யூதர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த கிறித்து என்றும் மெஸ்ஸையா என்றும் அன்று பாலஸ்தீனத்தில் உண்மையில் வாழ்ந்த ஜேம்ஸ், தாமஸ், சைமன் ஆகியோரின் சகோதரர் என்றும், கும்ரன் மலைச் சன்னியாசிகளில் ஒருவரான ஞானஸ்தானிகன் (John the Baptist) யோவானின் சீடராகவும்,[28] பூப்ளியஸ் எனும் ரோமானிய கவர்னர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவராகவும் பின்னர் பிலாத்து எனும் ரோமானிய ஆட்சியாளர் (Governor) காலத்தில் சிலுவையிலடித்துக் கொல்லப்பட்டதாகவும் அவருடைய ஆவியே பரிசுத்த ஆவியெனப் பவுல் கூறுவது என்றும் வரலாற்று வலை பின்னப்பட்டது. அதாவது, நடந்திடாத யேசுவின் கதையை உண்மையாக்கிட, அன்று பாஸஸ்தினத்தில் உண்மையில் வாழ்ந்த வரலாற்று நாயகர்கள் பெயர் உபயேகப்படுத்தப் பட்டது. வரலாறுகளும் - போதனை புத்தகங்களும் (Gospels) அவ்வாறே எழுதப்பட்டன.

இவர்களைத் தவிர யேசுவின் தாயார், உதவியாளர் மக்தோனியாமரியாள், ஜேம்ஸ், தாமஸ், பீட்டர், பர்னபாஸ், காட்டிக் கொடுத்த யூதாஸ் இன்னும் அனேக பெயரில், ஏன் பிலாத்து பெயரிலும்கூட பரிசுத்த ஆவியால் சுவிசேஷங்கள் எழுதப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை சுய ஒழுக்கங்களை வலியுறுத்தி ஞானமார்க்கத்தைப் போதிப்பதாக இருந்தது. இதற்கிடையே பாலஸ்தீனத்திலும், மத்திய தரைகடல் விளிம்பு பகுதிகளிலும் ஜேம்ஸ் அவர்களால்

போற்றி வளர்க்கப்பட்ட ஞானமார்க்க சர்ச்சுகள் பெரும்பாலானவை பரிசுத்த ஆவி சர்ச்சுகளாகப் பவுல் அடிகளாராலும் அவரின் சீடர்களாலும் மாற்றப்பட்டன. இம்மாற்றத்திற்குப் பின்னர் நவீன கிறித்துவம் (Pauline christianity) ஒரு சமயமாக உலக அரங்கில் முளைத்தது என்பது வரலாற்றாசிரியர்களின் கணிப்பு.[29] இதுபற்றி மேலும் தெரிந்திடக் கீழ்க்கண்ட தொடர்புகளைப் பார்க்கவும்.

1. www.jesusneverexisted.com
2. பக்கம் 164-170, 172, 173. The Dead Sea scrolls.
3. Wikipedia - Christ myth Theory
4. www.nazareneway.com/classical authorities on essenes.
5. Bart.D.Ehrman, Professor, University of North-Corolina, USA "Forged" ISBN 10:0062012614 என்பதையும் பார்க்கவும்.

யேசுவின் வரலாறுகள் இவ்விதம் தோற்றுவிக்கப் பட்டதின் காரணமாகப் பவுல் அடிகளாரின் பரிசுத்த ஆவி கொள்கைக்கு மக்கள் முன் காட்டிட ஓர் மனித உருவம் கிடைத்தது. யேசுவின் பிறந்த காலத்தைக் குறிப்பிடவும், அவர் வரவைத் தெரிவிப்பதற்கும், சுவிசேஷங்களை உண்மைப் படுத்துவதற்கும் பலயுக்திகள் தொடர்ந்து செய்யப்பட்டன. அவைகளைக் கீழே காணலாம்.

செய்யப்பட்ட யுக்திகள்	செய்யப்பட்டதற்கான காரணம்	குறிப்புகள்
1. யூத அரசன் எரோது காலத்தில் கிறித்து பிறந்துள்ளார் என்றும் அவரால் தனக்கு ஆபத்துவரும் என்று அஞ்சி அவ்வரசன் பெத்லகேம் நகரில் 2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அனைத்தையும் கொல்ல உத்தரவிட்டான்.	ஏரோது எனும் அரசன் யுதேயா நாட்டை ஆண்ட காலத்தில் கிபி 3-4 ஆண்டுகளில் யேசு பிறந்தார் என நிருபிக்கும் பொருட்டு இக்கதை செய்யப்பட்டது.	இதுபோன்று இளம் குழந்தைகளைக் கொன்ற நிகழ்ச்சி நடை பெறவில்லை. ஏரோது அரசன் இறந்து இரண்டு ஆண்டு சென்ற பின் ரோமானியர் ஆட்சி காலத்தில் குடும்பக் கணக்கெடுக்கும் நிகழ்ச்சி நடந்தது[29A] குழந்தை யேசு காலத்தில் அல்ல.

2. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த நியாயவான் ஜேம்ஸ், ஸ்டீபன் ஆகியோருக்குக் கத்தோலிக்க, திருச்சபை பிற்காலத்தில் புனிதர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.	ஸ்டீபன் மற்றும் ஜேம்ஸ் ஆகியோர் கிறித்துவ சமய ஆதி தந்தையர்கள் (Ancient fathers) என நிரூபிக்கும் பொருட்டும், யேசு பெருமான் இறந்த காலத்திலே கிறித்துவம் தோன்றி மலர்ந்தது என நிரூபிக்கவும், மேற்படிப் பெருமக்கள் பவுல் அடிகளாருக்கு நெருக்கமானவர்கள் என்றும் நிரூபிக்கவும் செய்யப்பட்டது.	உண்மையில் ஸ்டீபன் மற்றும் ஜேம்ஸ் ஆகியோர் பவுல் அடிகளாரின் கிறித்துவர்கள் அல்லர். அவர்கள் ஞானமார்க்க ஆதி கிறித்துவர்கள். பவுல் அடிகளாரின் கிறித்துவ கோட்பாட்டிற்கு எதிரானவர்கள்.
3. யேசுபிரான் வாழ்க்கையை விவரிக்கும் நான்கு சுவிசேஷங்களும் பவுல் அடிகளார் காலத்திற்குப் பின்னர் கிபி 80-150 ஆண்டு காலத்தில் தோன்றியது. எனினும், அவை பரிசுத்த வேதாகமத்தில் பவுல் அடிகளார் கடிதங்களுக்கும், அப்போஸ்தலர் நடவடிக்கைகளுக்கும் முன்னதாக வைக்கப் பட்டுள்ளன.	சுவிசேஷங்கள் பின்னர் தோன்றியதை மறைத்து யேசு பெருமான் மரணம் அடைந்த உடனே கிறித்துவ மறைகள் தோன்றி மலர்ந்தது எனவும், பவுல் அடிகளார், சுவிசேஷங்களின் அடிப்படையிலேயே பல்வேறு கடிதங்களை எழுதினார் என நிரூபிக்கவும், வரலாறு வரிசைக்கிரமாகவே எழுதப்பட்டுள்ளது என மாயத் தோற்றத்தை இவை உண்டு பண்ணவும் செய்யப்பட்டுள்ளது.	பின்தோன்றியதை முன்னுக்குக் கொண்டு செல்லுதல் ஓர் வரலாற்று மோசடி.
4. நான்கு சுவிசேஷங்களில் காலத்தால் முன்னது என்றாலும் மார்க் சுவிசேஷம் இரண்டாவதாக வைக்கப்பட்டுள்ளது.	மத்தேயுவைப் பின்பற்றியே மார்க் தனது சுவிசேஷத்தை எழுதினார் என்ற எண்ணத்தைக் கிறித்துவர்கள் மனதில் ஏற்படுத்தவே இவ்வாறு செய்யப்பட்டது.	மார்க் சுவிசேஷத்தில், யேசுவின் பிறப்பும் இறப்பும் (உயிர்பித்தல்) முதல் நூற்றாண்டில் உள்ள பைபிள்களில் காணப்படவில்லை. மார்க் 16:9-20ன் வசனங்கள் இடையில் சேர்க்கப்பட்டது எனக் கிறித்துவ

		ஆராய்ச்சியாளர்களே ஏற்றுக் கொண்டுள்ளனர். (பார்க்கவும் www.biblicalarcheology.org) மேலும் மார்க் வசனங்களில் யேசுவின் கன்னி பிறப்பும் கூறப்படவில்லை. ஜோசப் பெயரும் குறிப்பிடப்படவில்லை. யேசுவும் மேரியின் மகனாகவே மட்டும் குறிப்பிடப்படுகிறார். கடவுள் மகன் எனக் குறிப்பிடப்படவில்லை. இச் செயல்கள் கிறித்துவ குருமார்களின் வெறுப்பிற்கு ஆளாகியது. எனவே காலத்தால் முற்பட்டது எனினும் மார்க் சுவிசேஷம் இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டது.

யேசு என்பவர் உண்மையில் இல்லை:[30]

யேசு எனும் வரலாற்று நாயகர் உண்மையில் உலகில் இருக்கவில்லை எனப் பல ஆய்வுக் கட்டுரைகளும் புத்தகங்களும் வெளிவந்துள்ளன. அவற்றின் பட்டியலை www.wikipedia forgery in Bible எனும் வலைதளத்திலும் "Crimes of christianity" எனும் நூலிலும் காணலாம். ஒருசில குறிப்புகள் கீழே வழங்கப்படுகின்றன.

1. இந்தியாவில் கி.மு. 304-232ல் பாடலிபுத்திரத்தை தலைமையிடமாகக் கொண்டு பேரரசன் அசோகர் ஆட்சி புரிந்தார் என்பது நாம் அறிந்ததே. அவரது நாட்டின் எல்லை மேற்கே ஆப்கானிஸ்தான் முழுமையும் விரிந்து கிடந்தது. புத்த சமயத்தை பரப்பிட காந்தகர் மற்றும் லம்பாயா எனும் இடங்களில் கல்வெட்டுகளை அசோகர் செதுக்கி வைத்தார்.

அவற்றில் இரண்டு பாலஸ்த்தின நாட்டின் அராமிக் மொழியில் செதுக்கப்பட்டுள்ளது.

அக்கல்வெட்டுகளில் கிரேக்க, பாபிலோனிய, சிரியா மற்றும் வடக்கு ஆப்பிரிக்க நாடுகளான சைரின் (லிபியா), எகிப்திய நாட்டு அரசர்கள் ஆகியோர் பெயரும் குறிப்பிடப் பட்டுள்ளது. எகிப்திய - பாலஸ்தினிய அரசன் டாலமி (Turamaya II) இவர்களில் ஒருவனாக குறிப்பிடப்பட்டுள்ளான். இவ்வரசனே அசோகர் அரச சபைக்கு டையோனிஸியஸ் (Dionysius) எனும் தனது தூதுவரை அனுப்பி சிறப்பு செய்தவன். இவ்வரலாறுகளிலிருந்து தோன்றும் வினாக்கள் இரண்டு.

(அ) இந்திய பேரரசர் அசோகர் புத்த சமய கொள்கைகளை பரப்ப, யேசு பேசிய (பாலஸ்தினத்தின்) அராமிக் மொழியை உபயோகித்துள்ளார். ஆனால் பாலஸ்தினத்தில் அதன் பின்னர் தோன்றிய யேசு சமய நூல்கள் (பைபிள் - புதிய ஏற்பாடு) கிரேக்க மொழியில் எழுதப் பட்டுள்ளது. எதனை மறைக்க உள்ளூர் மொழி இவ்வாறு உதாசீனம் செய்யப்பட்டது?

(ஆ) அசோகர் காலத்திலிருந்து இந்தியாவுக்கும் - பாலஸ்தினிய, எகிப்திய நாடுகளுக்குமிடையே ராஜதந்திர உறவுகள் இருந்துள்ளன. அவ்வாறிருந்தும் யேசுபிரான் பிறந்து, வாழ்ந்த, வீழ்ந்த வரலாறுகள் ஐரோப்பாவின் இருண்ட காலம் முடியும் வரை இந்தியாவிற்கு வந்து சேரவில்லை! ஏன்? அதுபோன்ற வரலாற்று நிகழ்ச்சியே நடைபெறவில்லை என்பதா?

2. இந்தியாவுடன், குறிப்பாகத் தமிழகத்துடன், கிமு 200க்கு முன்பே கிரேக்கம், ரோமானிய நாடுகள் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தன என்பதை இந்தியாவிற்கு வருகைதந்த மெகஸ்தனிஸ் (கிமு-350) எழுதிய இண்டிகா (Indica) எனும் நூல் மூலமும், ஹெரடோட்டஸ் (Herodotus) எழுதிய Graeco Persian Wars எனும் நூல் மூலமும், ஸ்ட்ரோபோ (63BC - AD17) எழுதியுள்ள Geography எனும் நூல் மூலமாகவும் அறியலாம். ரோமானிய - கிரேக்க - இந்தியா - தமிழக உறவுகள் மேற்கண்ட நூல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.[31] யேசு

வாழ்ந்ததாகக் கூறப்படும் காலத்தில் பாலஸ்தீனிய - ரோமானிய அரசனாக இருந்தவன் ஆகஸ்டஸ் எனும் பேரரசன். இவ்வரசன் சபைக்குப் பாண்டிய அரசனின் தூதர்கள் சென்று அவனுக்குப் பரிசுகள் வழங்கியதை ஸ்ட்ரோபோ தனது நூலில் கூறியுள்ளார்.[32] ஆகஸ்டஸ் காலத்து வெள்ளி நாணயங்களும் அதன் பின் பதவிக்கு வந்த டைபிரியஸ் (யேசுவைச் சிலுவையில் அடித்த காலத்திய ரோமாபுரியையும், பாலஸ்தீனத்தையும் கிரேக்கத்தையும், பெர்சியாவையும் ஆண்டவன்) காலத்து வெள்ளி நாணயங்களும் தமிழகத்தில் கிடைக்கப் பெற்றுள்ளன. (பார்க்கவும் Original sources for the History of Tamilnadu pages 247 - 274). இவ்வரசர்கள் காலத்தில் ரோமாபுரியில், இந்தியாவிலிருந்து (தமிழகத்திலிருந்து) சென்ற அழகிகளும் குடுகுடுப்பைகாரர்களும், ஜோதிடர்களும், மாயாஜலம் செய்வோர்களும், யானைகளைப் பழக்குபவர்களும் வாழ்ந்து வந்துள்ளனர் (பக்கம் 231- The Wonder that was India).[33] இதுபோன்ற ரோமானிய - இந்திய - தமிழக உறவு, பிளைனி (கிபி 75), டாலமி (Ptolemy கிபி 130), ஆகியோராலும் விரிவாக பேசப்பட்டுள்ளது (பக்கம் 22, 23 History of South India). பாலஸ்தீனத்தை அரசாட்சி செய்த ரோமானிய அரசர்கட்கும், இந்தியாவிற்கும் - தமிழகத்திற்கும், வியாபாரம் மட்டுமின்றி, சமயக் கலாச்சார உறவுகள் யேசு வாழ்ந்ததாகக் கூறப்படும் காலத்தில் நிலவியிருந்தும்,[34] யேசுவைப் பற்றியும், சிலுவையில் அவர் அடிக்கப்பட்டதையும், அவ்வமயம் உலகம் நடுங்கியதையும், பாலஸ்தீனத்தில் மகான்களின் பிரேத குழிகள் திறந்து, அவர்கள் ஜெருசலேம் நகரில் நடந்து சென்ற அதிசயமும் (மத்தேயு 27:51-53) இந்தியர்களுக்குக் குறிப்பாகத் தமிழர்களுக்குத் தெரியாமல் போனது ஏன்?[35] அத்துடன் அக்காலத்தில் (கிபி முதலாம் நூற்றாண்டு) தமிழகத்தில் தோன்றிய இலக்கியங்களான நற்றிணை, ஐங்குறுநூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து முதல் திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம் ஆகியவற்றில் பாலஸ்தீன நகரத்தில் நடந்த இவ்அதிசயங்கள் குறிப்பிடப்படாதது, அந்த நிகழ்ச்சிகள் உண்மையில் நடக்கவில்லை என்பதை உறுதி செய்கின்றன. எனவே யேசுநாதர் என்பவர் ஒரு கற்பனைப் பாத்திரம் என்பது உறுதியாகின்றது.

3. யேசு மறைந்த காலத்தில் அப்பகுதியில் வாழ்ந்த யூதர்களைப் பற்றி வரலாற்று நூல்கள் பல எழுதியவர் ஜோஸ்பியஸ் (கிபி37-96) என்பவர். அவர் எழுதியுள்ள Antiquities of the Jews எனும் நூலில் அப்பகுதியில் நடைபெற்ற சிறு நிகழ்ச்சிகள்கூடப் பதிவு செய்யப்படாமல் விடுபட வில்லை. அதனில் யேசு பிரான் வாழ்ந்தது குறிப்பிடப்பட வில்லை.[36] ஜோஸ்பியஸ் எழுதியது இருபது வால்யும் கொண்ட பெரும் புத்தகம். இவ்விடுதலை நீக்கிட பிஷப் ஈசுபியஸ் (கிபி 260-339) காலத்தில் இரண்டு பத்திகள் இந்நூலில் இடைசொருகல் செய்யப்பட்டது.[37] இருபது பெரும் வால்யும்களைக் கொண்ட பெரும்புத்தகத்தில் இரண்டு பத்தி மட்டுமே யேசு பெருமானுக்கு, அதுவும் இடைசெருகல் மூலம் வழங்கப்பட்டுள்ளது.[38] வரலாற்றில் இவ்வாறு மோசடி செய்வது பிஷப் ஈசுபியஸ் அவர்களால் நியாயப்படுத்தப் பட்டுள்ளது. அவர் இது பொருட்டு கூறுவதைக் காணலாம். "It is lawful and fitting to use falsehood as a medicine and for the benefit of those who wanted to be deceived" அதாவது 'ஏமாற்றுக் காரர்களைச் சரிசெய்யப் பொய்யான வரலாற்றை மருந்து போன்று உபயோகிப்பதில் தவறில்லை'. வரலாற்றில் இவ்வாறு ஈசுபியஸ் மோசடி செய்துள்ளதை மேற்கத்தைய வரலாற்று ஆசிரியர்களான எட்வர்டு (Edward Gibbon) மற்றும் ஜாக்கோப் (Jacob - Burckhardt) ஆகியோர் கண்டித்துள்ளனர்.

4. பாலஸ்தீனத்தில் வாழ்ந்த-பைலோ எனும் யூதசமய தத்துவ அறிஞர் (கிமு 20 - கிபி 50-யேசு பிறந்து, வளர்ந்து, இறந்தகாலம்) தான் எழுதியுள்ள (Legatio ad Gaium) 'கையஸ் அரசனுக்கு தூது' எனும் நூலிலும் யேசு பெருமானைப் பற்றிக் குறிப்பிடவில்லை. யேசு வாழ்ந்ததாகக் கூறப்படும் பாலஸ்தீனத்திற்கு அருகிலுள்ளது இன்றைய எகிப்தின் அலெக்ஸாண்டிரியா நகரம். அந்நகரில் யூதர்களுக்கும் கிரேக்கர்களுக்குமிடையே அன்று பெரும் கலவரம் ஏற்பட்டது. கலவரத்தை அடக்கி அமைதியை நிலைநாட்ட உதவுமாறு ரோமானியப் பேரரசன் கலிகுலா (Caligula) என்பவருக்குப் பைலோ கிபி 40ல் (யேசுபிரான் இறந்தது கிபி 33 என கருதப்படுகின்றது) தூது சென்றவர், என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

5. அதுபோன்றே ரோமானிய வரலாற்று அறிஞர் லூசியஸ் சினேகா (LuciusAnnaeusseneca) கிமு 4 - கிபி 65 மற்றும் அவரின் தகப்பனார் மார்க்கஸ் (Marcus Annaeus seneca கிமு 54 - கிபி 39) ஆகியோர் நூல்களிலும் யேசுபிரான் பற்றியோ, ரோமாபுரியில் பேரரசன் நீரோ காலத்தில் தீவிபத்து ஏற்பட்டதையும் (?) அதன் காரணமாக அங்கு அப்போது வாழ்ந்த கிறித்துவர்களும் (?) பீட்டர், பவுல் ஆகியோரும் கொடுமைப்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர் என்பதையும் அவர் தனது நூலில் குறிப்பிடவில்லை. எனினும் யேசு பெருமானைப் பற்றிப் பைலோ (Pilo) எனும் வரலாற்று ஆசிரியர் பவுல் அடிகளாருக்கு எட்டுக் கடிதங்கள் எழுதிய தாகவும், அதில் ஆறு கடிதங் களுக்குப் பவுல் அடிகளார் பதில் எழுதியுள்ளதாகவும் கிபி நான்காம் நூற்றாண்டில் முன் தேதியிட்டு பொய் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப் பட்டன.[39] இவ்வாறு யேசு பிரானை வரலாற்று நாயகராக ஆக்கிட, தொடர் முயற்சிகள் அன்றிலிருந்து நடந்து வந்துள்ளன.

6. ஜான் ரெம்ஸ்பர்க் (John Remsburg) 1848-1919 எனும் வரலாற்று ஆசிரியர் தனது நூல் "The Christ Myth" என்பதில் யேசு வாழ்ந்த காலத்திலும் அதற்குப் பின்பு 100 ஆண்டுகளுக்குள் வாழ்ந்த யூத ரோமானிய வரலாற்று ஆசிரியர்கள் 42 பெயர்களைப் பட்டியலிட்டு, அவர்கள் எழுதிய நூல்கள் எதிலும் யேசுபிரானைப் பற்றிக் கூறப்படாததால் யேசு ஒரு கற்பனைப் படைப்பு எனக் கூறியுள்ளார்.[40]

7. வல்னி எனும் பிரான்ஸ் நாட்டு வரலாற்று அறிஞர் (Francois - de - volney - 1757 -1820) மற்றும் சார்லஸ் (Charles Depuis 1742 - 1809), டேவிட் (David strauss) என்போர் 1835ல் தனித்தனியாக எழுதிய ஆய்வு நூல்களிலும் இவ்வாறே யேசுபிரான் என்பவர் உண்மையில் வாழவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

8. ராபட்சன் (J.M.Robertsan 1856-1933) என்பவரும் G.R.S. மீடு (Mead 1863-1933) என்பவர்களும் தாங்கள் தனித்தனியாக எழுதியுள்ள நூல்களில் கிமு 100ம் ஆண்டில் வாழ்ந்த பண்டிரா யேசு (Jesus of Pendera) என்பவரின் கதை தல்முட் எனும் யூத சமய நூலில் காணப்படுகின்றது. அக்கதை மேரியின் மகன்

யேசு என யேசு காவியங்களில் மாற்றி எழுதப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

9. இதுபோன்ற பல்வேறு கருத்துகள் இருபதாம் நூற்றாண்டிலும் எண்ணற்ற வரலாற்று ஆசிரியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவர்களில் சிலரின் பட்டியலைக் காணலாம்.[41]

1. வில்லியம் (William Benjamin)
2. ஆர்தர் (Arthur Drews)
3. வெல்ஸ் (G.A. Wells)
4. அல்வர் (Alvar Ellegard)
5. தாமஸ் (Thomas L Brodie)
6. ராபர்ட் (Robert M. Prince)
7. புருனோ (Bruno Baeur)

10. கும்ரன் மலைக் குகைகளில் கண்டுபிடிக்கப்பட்ட எப்ரு / அரமிக் வேத சரித்திர நூல்களில் சித்தரிக்கப்பட்டுள்ள 'ஞானாசிரியன்' என்பவரைச் சிலுவையில் அடித்துக் கொன்ற கதை, அந்நூல்களுக்கு 200 ஆண்டுகளுக்கு பின்தோன்றிய யேசு எனும் ஒரு சாதாரண மனிதன் வாழ்க்கையோடு இணைத்து 'ஆண்டவராகிய யேசு கிறிஸ்த்து' எனும் கதை உருவாக்கப்பட்டுள்ளதாகப் பெரும் வரலாற்று ஆராய்ச்சி யாளர் ஜான் அல்லெக்ரோ (John Alegro) என்பவர் ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.

இதுபோன்று இன்னும் ஏராளமான வரலாற்று ஆசிரியர்கள் கூறியுள்ளதை (www.enwikipedia/christ myth theory) எனும் வலைதளத்தில் காணலாம்.

வரலாற்று மோசடிகள்

வரலாற்றுக் கதைகளில் இவ்வாறான குறைபாடுகள் இருப்பினும் அவற்றைச் சரிசெய்யவும், பரிசுத்த ஆவி கோட்பாட்டிற்கு வலுச்சேர்க்கவும் பலமுயற்சிகள் கிபி இரண்டாம் நூற்றாண்டு முதற்கொண்டு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் ஒருசிலவற்றைக் கீழே காணலாம்.[42]

1. ரோமானிய - கிரேக்க ஹெலன் சமய வழிபாட்டினை அழிக்க, மூன்றாம் நூற்றாண்டு முதல் கிறித்துவம் தனது பணியை முடுக்கிவிட்டது. ஹெலன் சமயம் தங்களுக்கு எதிரி எனக் கிறித்துவம் செயல்பட்டாலும் ஹெலன் சமய இலக்கியங்களைக் கர்த்தராகிய யேசு கிறித்துவின் வாழ்வோடு (?) இணைத்திடத் தயங்கியதில்லை யேசுவின் காலத்திற்கு முன்பு ரோமானிய பகுதியில் வாழ்ந்தவர் சிபிலிஸ்ட் (Sibyllist) எனும் ஹெலன் சமய ஆருடம் சொல்லும் பெண்மணி.[43] இப்பெண்மணி தன் ஆருடம் ஒன்றில் யேசுபிரான் உலகிற்கு வரவிருக்கின்றார் என ஆருடம் கூறியுள்ளதாக ஒரு வதந்தி எழுதப்பட்டது. இவ்வதந்தியை 3-4ம் நூற்றாண்டில் வாழ்ந்த பேரரசன் கன்ஸ்டன்டைன் பெரிதும் நம்பினார். அதுபோன்றே யேசு காலத்திற்கு முன்பு தோன்றிய பொர்பிரி என்பவர் எழுதிய அருள்வாக்குப் புத்தகம் "Philosophy of Oracles by Porphyry"[44] நூலிலும் யேசுபிரான் உலகிற்கு வரவிருப்பது முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ளது என நான்காம் நூற்றாண்டில் பிஷப் ஈசுபியஸ் மற்றும் தியோடர் (Eusebius and Theodoret) ஆகியோரால் பிரசிங்கப்பட்டது. இவ்விதமாக ஒரே இறைவன், ஒரே புத்தகம் எனும் கொள்கைக்கு வலுசேர்க்கப் பலதெய்வக் கோட்பாட்டிலிருந்து ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டன.

2. யேசு வாழ்ந்த காலத்தில் (?) பாலஸ்தினத்தில் ரோம் நாட்டின் ஆட்சியாளராய் (Governor) இருந்தவர் பூப்ளியஸ் என்பவர் (Publius Lentulus). அவர் ரோமாபுரி ஆட்சிமன்றத்திற்கு (Senate) எழுதியதாக ஒரு கடிதம் மூன்றாம் நூற்றாண்டில் போலியாகத் தயாரிக்கப்பட்டது. அக்கடிதத்தில் யேசு பிரானுக்குக் கீழ்க்கண்டவாறு உருவம் வழங்கப்பட்டுள்ளது.[45]

'யேசு கிறிஸ்து எனும் ஓர் மகான் தற்போது பாலஸ்தீனத்தில் வசித்து வருகின்றார். அவர் இறைவனின் வல்லமை பெற்றவராக விளங்குகின்றார். அன்னாரின் தலைமுடி பழுப்பு நிறமாகவும், நெற்றிக்கு நேராக தலைமுடி பிரித்து வாரப்பட்டுள்ளதாகவும், அம்முடி தோள்வரை அலை அலையாய்த் தொங்குவதாகவும் தாடி அடர்த்தியாகவும், அவரது உருவம் உயரமாயும், தெய்வ கடாட்சம் நிறைந்துள்ளதாகவும், அவர் - நீல நிறக் கண்களுடையவராய் விளங்குவதாகவும்' வர்ணனை செய்யப்பட்டுள்ளது.

இக்கடிதம் லத்தீன் மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் லத்தீன் மொழியில் யேசு எனும் வார்த்தை இல்லை. ஜேசுவா என எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கிரேக்க மொழியிலுள்ள யேசு எனும் சொல் லத்தீன் மொழிக் கடிதத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே யூசுபியஸ் பிஷப் காலத்தில் (நான்காம் நூற்றாண்டில்) இக்கடிதம் போலியாகத் தயாரிக்கப்பட்டிருக்க கூடும் எனக் கருதப்படுகின்றது.

3. பூப்ளியஸ் என்பவருக்குப் பின்னால் அப்பதவிக்கு வந்தவர் பிலாத்து என்பவர். இவர்தான் யேசுவைச் சிலுவையிலடிக்க உத்தரவிட்டதாகக் கதைகள் புனையப்பட்டுள்ளதை முன்பே கண்ணுற்றோம். இவர் அக்கால ரோமானிய பேரரசனுக்குத் ‘தான் சிறந்த யேசு எனும் மகானைத் தவறுதலாகச் சிலுவையிலடித்துக் கொன்று விட்டதாக’ எழுதிய கடிதமும் போலியாகத் தயாரிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இக் கடிதம் பிஷப் டெர்ட்டுலியான் (Tertullian) காலத்தில், கிபி இரண்டாம் நூற்றாண்டில் தயாரிக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது.[46]

4. யேசுபிரான் தன்கைப்பட எடிசா நகர அரசன் அப்கரஸ் (Abgarus of Edessa) என்பவருக்கு எழுதியதாகக் கூறப்படும் ஓர் கடிதம் போலியாகத் தயாரிக்கப்பட்டது. (யேசு பிரானுக்கு எழுதத் தெரிந்ததற்கு சுவிஷேஷங்களில் ஆதாரமில்லை).[47]

5. ரோமானியப் பேரரசன் கன்ஸ்டன்டைன் தனது நாட்டையும், மாளிகையையும், செல்வங்களையும் கத்தோலிக்க தலைமை மதகுரு (போப் ஆண்டகை) அவர்களுக்கு நான்காம் நூற்றாண்டில் நன்கொடையாக வழங்கிவிட்டதாக, எட்டாம் நூற்றாண்டில் போலியாக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, அதனில் குறிப்பிட்டுள்ள நாடுகளைப் போப் ஆண்டவர் 13ம் நூற்றாண்டில் கைப்பற்ற உபயோகப்படுத்தப்பட்டது. (பத்தி 2-5ல் கூறப்பட்டுள்ள கருத்துகள் Crimes of Christianity எனும் நூலின் பக்கம் 135-153ல் குறிப்பிடப்பட்டுள்ளது).[48]

6. ரோமானியப் பேரரசன் கன்ஸ்டன்டைன் அரசவையில் தலைமை சமயகுருவாக விளங்கியவர் பிஷப் யூசுபியஸ்.[49] யேசுவை வரலாற்று நாயகராக்கிய பெருமையும் புதிய ஏற்பாட்டைக் கூட்டி, குறைத்து ஒருங்கிணைந்த

நூலாக்கிய பெருமையும் இவரை சாரும். நூற்றுக்கு மேற்பட்ட எழுத்தர்களை கொண்டு இவ்வாறு ஒன்று போல் 50 புத்தகங்கள் புதிய ஏற்பாடாகத் தயாரிக்கப்பட்டு ஆட்டுத் தோலினால் வெளி உறையிட்டு பேரரசன் கன்ஸ்டன்டைன் அவர்களிடம் வழங்கப்பட்டது.[50] ஆனால் இந்த புத்தகங்களில் ஒன்றுகூட இன்று இல்லைஎன்பது குறிப்பிடத்தக்கது.[51] இவை யூசுபியஸ் கால இறுதியில் திட்டமிட்டு அழிக்கப்பட்டது. (இவை இருந்தால் யூசுபியஸ் கால இறுதியிலும், அதன் பின்னரும் புதிய ஏற்பாட்டில் சேர்க்கப்பட்டவையும், நீக்கப்பட்டவையும் மக்கள் மன்றத்திற்கு வந்துவிடக்கூடும் என அஞ்சி ஒரிஜினல் 50ம் அழிக்கப்பட்டன). யேசுவின் வரலாற்றில் (?) பெரும் மோசடிகள் செய்தவர் என்ற பெருமை யூசுபியஸ் அவர்களுக்கு உண்டு.[52] இதன்பொருட்டு Christianity-revealed வலைத்தளத்திலுள்ள இரண்டு கட்டுரைகள் இந்நூலின் இணைப்புகளாகக் கொடுக்கப்பட்டது.

1. Father Eusebius - Forger
2. How Christianity was invented : The Truth

இக்கட்டுரைகளில் யேசு பெருமானை வரலாற்று நாயகராக ஆக்கும்பொருட்டுச் செய்யப்பட்ட மோசடி வேலைகள் ஆதாரங்களுடன் விவரிக்கப்பட்டுள்ளது.

3:3. எகிப்திய நாட்டில் கிறித்துவம்

கிறித்துவ சகாப்தம் ஆரம்பிக்கும் முன்னரே பாலஸ்தீனம், கிரேக்கம், ரோமானிய நாடுகளில் இந்தியர்கள் குடியிருந்து வந்தனர்.[53] இம்மக்கள் மகாபாரத யுத்த கால இறுதியில் புலம்பெயர்ந்தவர்கள். பேராசிரியர் ஹிரன் (Hiren) என்பவர் பண்டைய இந்தியர்களின் மண்டை ஓடுகளும் எகிப்தியர்களின் மண்டை ஓடுகளும் ஒன்றுபோல் காட்சியளிப்பதாகக் கூறியுள்ளார் ("Historical Research" as quoted in page 33 of Jesus Christ was a Hindu). சிந்து நதிதீர இந்துக்கள் எகிப்தில் குடியேறி உள்ளதாகப் பிஷப் யூசுபியஸ் (Eusebius) என்பவரும், பில்லாஸ்ட்டஸ் (Phillastratus) எனும் எகிப்திய எழுத்தாளரும்

கூறியுள்ளனர். புராதனக் கிரேக்க நாட்டில் பாண்டியன் எனும் பெயர்களைத் தாங்கியவர்கள் அரசர்களாக விளங்கியதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

புராதன துவாரகையில் சமஸ்கிருதம் பேச்சு மொழியாய் இருந்தது. அந்நகர் அழிவுற்றதும் அங்கு வாழ்ந்த யாதவ குல மக்களில் பலர் அரேபியா, பாலஸ்தீனம், கிரேக்கம், வட ஆப்பிரிக்க பகுதிகள் (எகிப்து) ஆகியவற்றில் குடியேறியதாக கூறப்படுகின்றது. அவ்விதமாகப் பாலஸ்தினத்தில் இன்றைக்கு 5700 வருடத்திற்கு முன் குடியேறியவர்களே யூதர்கள் எனும் பெயரில் வரலாற்றில் இடம்பிடித்துள்ளனர். அவர்கள் பேசிய சமஸ்கிருதம் மொழிக் கலப்பின் காரணமாகவும், உச்சரிப்பின் வேறுபாடு காரணமாகவும், இன்று யூதர்களின் எப்ரு (Hebrew) மொழியாக மாற்றம் பெற்றுள்ளதாக பல வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர். அவ்வாறு துவாரகையிலிருந்து புலம் பெயர்ந்து சென்றவர்களில் சமஸ்கிருதம் பேசுவோர் மட்டுமின்றி ஆதி தமிழ் மொழி (proto Tamilians) பேசுவோரும் இருந்தனர் (பார்க்கவும் www.viewzone.com/matlockல் கொடுக்கப்பட்டுள்ள மேட்லாக் Gened Matlock எனும் 18ம் நூற்றாண்டின் பிரிட்டிஷ் வரலாற்று ஆசிரியரின் கட்டுரைகள்). இதன் காரணமாகவே எப்ரு மொழியில் சமஸ்கிருத, தமிழ் வார்த்தைகள் பல இடம் பெற்றுள்ளன என்றும் அக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது.

ஹரப்பா நாகரிகத்தின் இறுதிக் காலத்திலும், அசோகர் காலத்திலும் இந்து சமய மக்களும், புத்த, சமண சமயத் துறவிகளும் முறையே கி.மு. 1300, கி.மு. 350 ஆகிய ஆண்டுகளில் இந்நாடுகளில் தொடர்ந்து குடியேறினர். இம்மக்கள் எகிப்திய பாலஸ்தினிய மக்களுக்குத் துறவறம் மற்றும் சைவ உணவுகள் பற்றியும் யோகா பயிற்சிகளையும் அளித்து வந்தனர்.[54] இம்மக்களால் நிறுவப்பட்டதே அலெக்சாண்டிரியா நகரின் செராபிஸ் கோவிலும், நூல் நிலையமும் எனப் பல வரலாற்று ஆசிரியர்களால் கூறப்பட்டுள்ளது (பக்கம் 92 Crimes of Christianity by G.W. Foote and others).[55] கி.பி. 2ம், 3ம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த கிறித்துவர்களின் கல்லறை முகப்புக் கற்களில் மீன் சின்னம், மற்றும் மயில் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம். மீன் சின்னம் பாண்டிய அரசர்களின் கொடிகளில் போன்று சித்தரிக்கப்பட்டுள்ளது. அந்நாடுகளில் இல்லாத

மயிலும், மயில் தோகைகளும் கி.மு. 2 நூற்றாண்டு தொடங்கி ரோமாபுரிக்குத் தென்னிந்திய துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதற்குப் போதுமான ஆதாரங்கள் இந்திய, தமிழக இலக்கியங்களில் காணப்படுகின்றது. ரோமாபுரி அரசன் டாலமி (Ptolemy Philadelphus கிமு258 - 246) காலத்தில் அங்கு நடைபெற்ற ஒரு கலாச்சாரக் காட்சியில் இந்தியப் பெண்களும் நம் நாட்டின் நறுமணப் பொருள்களும், இந்திய வேட்டை நாய்களும், பசுக்களும் பங்கேற்றதாகக் குறிப்புகளும் உள்ளன. (பார்க்கவும் www.hinduwisdom.info / seafaring in ancient India).

இவ்வாறான இந்து / புத்த, சமண, சமய கலாச்சார ஊடுருவலை ஒழிப்பதற்காகப் பவுல் அடிகளார், யேசுவின் காலக் கதைகளை உபயோகித்து ஒரு புதிய சமயக் கொள்கை நிறுவிடத் திட்டமிட்டு அதில் போதுமான வெற்றியும் பெற்றுவிட்டார்.

யேசு வாழ்ந்ததாகக் கூறப்படும் முதல் நூற்றாண்டின் இறுதியில் அவரது பெயரால் தோன்றிய கதைகள் பல்வேறு திசைகளில் பல்வேறு கருத்துகளுடன் பரவியது. இன்றைய எகிப்தும், கிரேக்கமும், இத்தாலியும் அவ்வாறு பாதிக்கப்பட்ட நாடுகளில் சில.

இரண்டாம் நூற்றாண்டில், யேசுவின் மீதான பரிசுத்த ஆவி கொள்கை ஒரு சமயமாக உருவெடுக்கத் தலைப்பட்டது. ஆங்காங்கே புதிய வேதக் கோவில்கள் (Church) உருவாகின. கிறுத்துவர்கள் சிறுபான்மையினராக இருந்த போதிலும் ரோமாபுரியில் பெரும்பான்மையாக விளங்கிய உருவ வழிபாட்டுச் சமய மக்களையும், யூத - எஸ்ஸின் பிரிவினரையும் நரகத்தைச் சுட்டிக்காட்டி நீங்கள் அங்குதான் செல்லப் போகின்றீர்கள் எனப் பயமுறுத்தினர். புற சமய மக்களைத் தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கி வைத்தனர். அவர்களுடன் சமுதாயத் தொடர்புகளைத் துண்டித்தனர். அவர்களின் கோவில் விழாக்களுக்குச் செல்வதையும், கோவில் விருந்துகளை ஏற்பதையும் புறக்கணித்துத் தனித்தன்மையினராகத் தங்களை ஆக்கிக் கொண்டனர். அதற்குப் பதிலாக அவர்கள் தங்களுக்குள் 'இரவு விருந்துகள்' (Love feasts/Eucharist / Agape)[56] நடத்திக் கொண்டனர். அவ்விருந்துகள் இரவில் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் நடைபெறும் என்றும், விருந்து

முடிந்ததும், விளக்குகள் அணைக்கப்பட்டு விருந்தில் கலந்து கொண்ட ஆண்களும் பெண்களும் இருட்டினில் தங்கள் விருப்பப்படி இன்பம் கண்டனர். இதற்கான ஆதாரத்தை I கொரி 5:1, 2ல் காணலாம். மேலும் இதனை அறிந்துகொள்ள விரும்புவோர் “Crimes of Christianity” பக்கம் 15-18 மற்றும் The Story of Christianity பக்கம் 39ஐ பார்க்கவும்.

மத்திய தரைக்கடல் பகுதியில் மாவீரன் அலெக்ஸாண்டரால் நிறுவப்பட்ட நகரம் அலெக்ஸாண்டிரியா (இந்நகர் தற்போது எகிப்து நாட்டில் உள்ளது). இந்நகரில் இந்திய - யூத - ஹெலனிய (Hellenistic religion) சமயங்களின் கலப்பு இருந்தது. இந்நகர் அலெக்ஸாண்டர் இறந்தபின் கிமு 323ல் டாலமி (Ptolemy), அதன் பின் கிளியோபாட்ரா VII, ஆகியோரின் ஆட்சியில் இருந்தது. கிமு. 30ல் இப்பகுதி ரோமானியர்களின் ஆளுமைக்குள் வந்தது. கலை, இலக்கியம், கல்வி, ஆடல், பாடல்கள் நிறைந்த இடமாக இந்நகர் விளங்கியது. கிறித்துவ சமயம் இந்நகருக்குக் கிபி இரண்டாம் நூற்றாண்டில் பான்டானஸ் (Pantaenus) என்பவர் மதம் மாறியது மூலம் வந்து சேர்ந்தது எனலாம். இவர் அலெக்ஸாண்டிரியாவில் கிறித்துவக் கொள்கைகளைப் பரப்பிடக் கிறித்துவக் கல்வி நிலையம் ஒன்றை நிறுவினார். இப்பள்ளி Clement of Alexandriaவினாலும் கிபி 180-254ல் ஒரிஜன் (Origen Adamantius) எனும் பாதிரியாராலும் நிர்வகிக்கப்பட்டது. யேசுவின் அடுத்த வருகையும், பரலோக ராஜ்யம் ‘இதோ வருகின்றது’ (மத் 9:35, 10:17) என்ற பிரசங்கம் காரணமாகவும் எகிப்திய மக்கள் கிறித்துவ சமயத்தில் பெருவாரியாகச் சேர்ந்தனர். அவர்களில் மூன்று வகையான மக்கள் இருந்தனர்.

1. பொது மக்களில் பலர் நித்திய நரகத்திற்குத் தள்ளப்பட்டு விடுவோம் எனப் பயப்பட்டுக் கிறித்துவத்தில் சேர்ந்தனர்.

2. கிறித்துவப் பாதிரியாராகவோ அல்லது சன்னியாசி பெண்ணாகவோ (Nun) வாழ்ந்துவிட்டால் நித்திய சொர்க்கத்தையும், நித்திய ஜீவனையும் முன்னுரிமை அடிப்படையில் அடைந்து விடலாம் என்று நம்பிக்கையுள்ளோர். இதன் காரணமாக மூன்று, நான்காம் நூற்றாண்டில் அலெக்ஸாண்டிரியா நகரின் மக்கள் தொகையில் பாதிக்கும்

மேலானோர் கிறித்துவ குருமாராகவோ Nun ஆகவோ இருந்தனர்.[57] அவர்களின் வாழ்க்கை அன்று அந்நகரில் பிரபலமாயிருந்த புத்த சமய குருமார்களின் வாழ்வைப் போன்று எளிமையாயிருந்தது. இவர்கள் தங்களது வீடு, நில, புலன்களை உதறிவிட்டுக் கிறித்துவ சன்னியாசியாக ஆனவர்கள் (மத் 10:10; அப் 4:34 - 37). இத்தகைய குருமார்கள் பரதேசிகளாய் ஊர்தோறும் சென்று 'பரலோக ராஜ்யம் இதோ வருகின்றது' எனப் பிரசங்கித்தனர். பரதேசிகள் தங்களது பரலோக ராஜ்ய தத்துவத்தில் மிகவும் நம்பிக்கையுடன் இருந்தனர். நம்பாதவர்கள் பெரும் பாவி எனவும் அத்தகையோர் சமுதாயத்திலிருந்து பலவந்தமாகவோ அல்லது மதமாற்றம் மூலமாகவோ அல்லது வேறுவழியிலோ அகற்றப்பட வேண்டும் எனவும் நம்பினர். குருமார்கள் சமணர்களைப் போன்று தங்கள் வாழ்நாளைப் பெரிதும் விரதம் அனுஷ்டிப்பதில் கழித்தனர். இவர்கள் கல்வியறிவு அற்றவர்களாய் இருந்ததாலும், இந்து - சமண - புத்த சமய யோகா, பிரணாயமம் போன்ற அனுஷ்டானங்களில் போதிய ஞானம் இன்மையாலும், தங்களது உடலை வருத்திக் கொள்வது மூலமாகவே நித்திய ஜீவ வாழ்க்கையை விரைவில் அடைந்து விடலாம் என நம்பினர். அதற்காகப் பலர் பாலைவனத்தில் உணவு, உடை, தங்குமிடமின்றி வெயிலிலும், குளிரிலும் கடினமாக வாழ்ந்தனர். பரதேசிகள் பலர் ஓயாமல் முழங்காலிட்டுத் பரிசுத்த ஆவியை துதித்ததின் காரணமாக அவர்களின் முழங்கால் ஒட்டகத்தின் முழங்கால் போன்று கரடுமுரடாய் ஆனது.[58] இதுபோன்று ஆண்டவன்மீது முரட்டு நம்பிக்கையைக் கொண்ட மக்களை இதுவரை உலகம் சந்திக்கவில்லை எனலாம். இப்பரதேசிகளின் கண்ணோட்டத்தில் மாற்றுச் சமய வழிபாட்டு ஸ்தலங்கள் சாத்தானின் கூடாரமாகத் தென்பட்டன. இவ்வாறான பல பரதேசிகள் அன்று ஒன்றுகூடி, கையினில் ஆயுதம் எதுவும் இன்றித் தங்களது முஷ்டியினை உபயோகித்துப் பல கோவில்களை இடித்தனர். இத்தகைய உத்வேகமும் நம்பிக்கையும் அவர்களிடமிருந்தது. மொத்தத்தில் கல்வி, கலாச்சார மையமாக விளங்கிய அலெக்ஸாண்டிரியா நகரம் இதன் மூலம் தனது ஜீவனை இழந்து மூட நம்பிக்கையிலும் வன்முறையிலும் மூழ்கியது.[59]

3. பண்டைய கிறித்துவத்தின் மூன்றாவது ரகத்தைச் சேர்ந்தவர்கள் எல்லையற்ற தவறான நம்பிக்கை கொண்டவர்களாயிருந்தனர். அவர்கள் மத்தேயு 19:12ல் கூறியுள்ள வசனத்தில் பெரும் பற் றுள்ளவர்களாயிருந்தனர்.[60]

'தாயின் வயிற்றிலிருந்து அண்ணகர்களாய்ப் (அலிகளாய்) பிறந்தவர்களும் உண்டு, மனிதர்களால் அண்ணகர்களாக (அலிகளாக) ஆக்கப்பட்டவர்களும் உண்டு. பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக ஆக்கிக் கொண்டவர்களும் உண்டு; இதை ஏற்றுக்கொள்ள வல்லவன் ஏற்றுக்கொள்ளக் கடவன் என்றார்.'

இவ்வசனத்தைச் சிரமேற்கொண்டு அன்றைய பல குருமார்களும் பரதேசிகளும் தங்களது ஆண்குறியை வெட்டி எறிந்து அலியாக வாழ்ந்தனர். அவர்களில் முதன்மையான குருவாக விளங்கியவர் 'ஒரிஜன்' (Origen Adamantius)[61] எனும் மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த சன்னியாச குருவும் அதன் பின்னர் வாழ்ந்த Valens of Barathin ஆகியோரும் அடங்குவர். இவர்கள் தங்களை அலியாக்கிக் கொண்டனர். இக்குருமார்கள் திராட்சை ரசத்தைக் குடிப்பதில்லை. சைவ உணவை மட்டுமே உண்டனர், வாரம் ஒருநாள் உண்ணா நோன்பு இருந்தனர், வெறும் தரையில் படுத்து உறங்கினர், காலில் பாதணிகள் இன்றிப் பரதேசியாய் ஊர் ஊராய் அலைந்து திரிந்தனர். இவர்கள் மக்களில் பலரையும் அண்ணகர்காளாக்கினர். (பார்க்கவும் "A Religion for Eununch by G.W. Foote, 1980 & Crimes of Christianity பக்கம் 94)[62]

அலெக்ஸாண்டிரிய பாலைவனத்தில் வாழ்ந்த கிறித்துவ சித்தாந்த குருமார்களில் மிகவும் முதன்மையானவர் புனிதர் அந்தோணி (கிபி 251). இவர் கல்வி கற்க



மூன்றாம் நூற்றாண்டு எகிப்திய பாதிரியார் ஒரிஜன்

மறுத்ததோடு, தனது தங்கையைச் சன்னியாசினி (Nun) ஆக்கிவிட்டு, தனது உடமைகளை ஏழைகளுக்கு அளித்து விட்டு, அலெக்ஸாண்டிரியா நகரின் அருகிலிருந்த பாலைவனத்தில் திறந்த வெளியில் 'பரலோக ராஜியத்தை' எதிர்பார்த்து வாழ்ந்தார்.[63] உலக சுகங்களைத் துறந்தார். உணவுக் கட்டுப்பாடு மேற்கொண்டார். தனது வாழ்நாளில் குளித்ததோ, ஆடை மாற்றுதலோ செய்தது கிடையாது. இவர் பாலைவனத்தின் முதல் பாதிரியார் என்று இன்றும் அன்புடன் அழைக்கப்படுகின்றார். அன்னாரைத் தொடர்ந்து புனிதர் ஹிலாரியன் (St. Hilarion), ஆர்சினியஸ் (Arsenius) ஆகியோரும் பாலைவனத் துறவியார்களாக வாழ்ந் தனர். பாலைவன சந்நியாசிகள் பலர் நீரில் மூழ்கியும், மலைகளி லிருந்து வீழ்ந்தும், தீயில் பாய்ந்தும் தங்களது இறை நம்பிக்கையை நிரூபித்து (பக் 97-101, Crimes of Christianity) இறந்ததுண்டு.[64]

3:4. ரோமாபுரியில் கிறித்துவம்

மத்திய தரைக் கடலின் தென்பகுதியிலுள்ள எகிப்து நாட்டில் கிறித்துவம் பரவ ஆரம்பித்த காலகட்டத்தில் மத்திய தரைக்கடலின் வடபுறத்தில் அமைந்துள்ள ரோமாபுரியிலும் பரவ ஆரம்பித்தது. அதன்போது ரோமாபுரியில் பல கடவுளர் வழிபாடும், உருவவழிபாடும் மேலோங்கியிருந்தது. ரோமாபுரி அரசர்கள் கடல்வழி வணிகம் மூலம் உலகத்தின் அத்தனை நாடுகளுடனும் தொடர்பு கொண்டிருந்தனர். யேசுவின் கதைகளும் ரோம் நாட்டில் பரவ ஆரம்பித்தது. முதலில் இச்சமயக் கதைகள் இரகசியமாக மக்களிடையே பரவின. அதுபோது ரோமாபுரியில் பிரபலமாயிருந்த ஹெலன் சமயம் கிறித்துவத்தை எதிர்கொண்டது. கிபி 64ம் நூற்றாண்டில் ரோமாபுரியில் நிகழ்ந்த தீவிபத்திற்குக் காரணம் கிறித்துவர்களே என ரோமாபுரியை ஆண்ட 'நீரோ' எனும் அரசன் குற்றம்சாட்டி கிறித்துவர்களை அடக்குமுறைக்கு உள்ளாக்கினான் என்றும், கிபி 235ல் பேரரசன் மாக்ஸிமைனஸ் (Maximinus Thrax) என்பவரும் கிபி 250ல் பேரரசன் டெஸியஸ் (Decius) என்பவரும், கிபி 257ல் பேரரசன் வாலரியன் (Valerian) என்பவரும், கிறித்துவ கொள்கைகளை அடக்கி ஒடுக்கினார்கள்

என்றும் கூறப்படுகின்றது. எனினும் ஒவ்வொரு அடக்கு முறைக் காலத்திலும் அச்சமயம் முன்பிலும் வேகமாக வீறுகொண்டு எழுந்தது. அக்காலகட்டத்தில் சாதாரண மக்கள் அனைவரும் நித்திய நரகத்தின் வாழ்விற்கு அஞ்சியும், பரலோக ராஜியத்தை எதிர்பார்த்தும் கிறித்துவர்களானார்கள். ஆனால் கற்றோர்களும், அரச வம்சத்தினரும், யூதர்களும், கிறித்துவ தத்துவங்களைத் தள்ளுபடி செய்து அவை உண்மைக்குப் புறம்பானவை என அதனை எதிர்கொண்டனர். எனினும் கிறித்துவத்தின் விடிவுகாலம் பேரரசன் கன்ஸ்டன்டைன் (280-337) காலத்தில் ஏற்பட்டது.[65] அதுபோது அரசவம்சத்தினரின் ஆதரவும் அச்சமயத்திற்குக் கிடைத்தது.

3:5. கிறித்துவம் ஒரு சமயமாக உருவாகுதல் - ஐரோப்பாவின் இருண்ட காலம்

ஐரோப்பிய நாகரிகம் சுமேரிய நாகரிகத்தின் விளைவு எனலாம். சுமேரியாவிலிருந்து கிரேக்கம் 500 கி.மீ. தொலைவிலும் ரோமாபுரி 1000 கி.மீ. தொலைவிலும் உள்ளது. கிரேக்கம் கி.மு. 750ல் ஐரோப்பா, வட ஆப்பிரிக்கா, மேற்கு ஆசிய பகுதிகளில் எண்ணற்ற காலனிகளைக் கொண்டிருந்தது. கட்டிடக்கலை, இலக்கியம், பொருளாதாரம், கல்வி, தத்துவஞானம், இறைவன் வழிபாடு ஆகியவற்றில் பெரும் முன்னேற்றம் அடைந்திருந்தது. இம்மக்கள் பல தெய்வ வழிபாடு மற்றும் உருவ வழிபாட்டினைப் பின்பற்றி வந்தனர்.

கி.மு. 146ல் கிரேக்கம், ரோமானியப் பேரரசின் ஆட்சியின் கீழ் வந்தது. ஆட்சி ரோமானியர் வசம் வந்ததே தவிர சமூக - சமுதாயப் பழக்கவழக்கங்களில் மாறுபாடுகள் ஏற்படவில்லை. ரோமானியர்களின் இறைவழிபாடு கிரேக்கர்கள் வழிபாட்டுடன் இணைந்திருந்ததே இதன் காரணம். கி.மு. எட்டாம் நூற்றாண்டிலிருந்தே ரோமானியப் பேரரசு பெரும் செல்வாக்குடனும், மக்களின் பெரும் ஆதரவைப் பெற்றதாகவும் இருந்து வந்தது. ரோமானியர்களும் கலை இலக்கியம் இறை வழிபாடு ஆகியவற்றில் சிறந்து

விளங்கினார். இப்பேரரசு கி.மு. முதலாம் நூற்றாண்டில் அதன் சிறப்பின் உச்சியில் அமர்ந்திருந்தது. இப்பேரரசின் தலைநகரமாக ரோமாபுரி விளங்கியது. மக்கள் ஆடல், பாடல், திருவிழாக்கள் கொண்டாடுதல் ஆகியவற்றில் நாட்டம் கொண்டிருந்தனர். அக்காலத்தில் மித்ரன் (சூரியன்) எனும் கடவுளின் பிறந்த நாளாக டிசம்பர் 25 பெரும் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வந்தது. குளிர்காலம் முடிவுக்கு வந்து, வசந்தகாலம் தொடங்கும் நாளைச் சூரியபகவான் மகிமையுடன் பிறக்கும் நாளாகக் கிரேக்க - ரோமானியர்கள் கொண்டாடினர். குறுக்கும் நெடுக்குமாகச் செல்லும் சூரிய ஒளிக் கற்றைகள் அம்மக்களின் சமய சின்னமாயிருந்தது. (ரோமானியர்களின் ஹெலனிய சமய திருவிழா நாளும், சமயச் சின்னமும் பின்னாட்களில் கிறித்துவ சமயத்தால் ஆட்கொள்ளப்பட்டுவிட்டது).

ரோமானியப் பேரரசு மத்தியதரைகடலின் வடபகுதி நாடுகளான இத்தாலியில் தொடங்கி, கடலின் விளிம்பு நாடுகளான கிரேக்கம், பெர்சியா, ஆசியா மைனர் (துருக்கி) பாலஸ்தீனம், எகிப்து ஆகிய நாடுகளிலும் பரவியிருந்தது. இந்தியாவுடனும், குறிப்பாகத் தென்னிந்தியாவுடன் பெரும் வர்த்தகக் தொடர்பு கொண்டிருந்தது. பாண்டிய அரசனின் பிரதிநிதிகள் கிரேக்க - ரோமானிய அரச சபையில் அமர்ந்திருந்தனர். ரோமானிய அரசன் ஆகஸ்டஸ் (கிமு. 27-கிபி. 14) டைபிரியஸ் (கிபி. 14-17) ஆகியோர் ஆட்சிக்காலத்தில் இந்திய - ரோமானிய வர்த்தகம் பெருமளவில் நடைபெற்றுவந்தது. ரோமானியத் தங்கம் - வெள்ளி நாணயங்கள், அரூர் (தர்மபுரி), கரூர், புதுக்கோட்டை (தஞ்சாவூர்), காளியம்புத்தூர் (மதுரை) கோட்டயம், பொள்ளாச்சி, வெள்ளலூர் (கோயம்புத்தூர்) நெல்லூர் (ஆந்திரா) ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இவற்றிற்குச் சான்றாக அமைந்துள்ளன.[66]

ரோமானிய நாட்டில் நெடிய அகன்ற சாலைகள் 50000 மைல் நீளத்திற்கு அமைக்கப்பட்டிருந்தன. ஆறுகள், ஓடைகள் ஆகியவற்றைக் கடந்து செல்லக் கற்களினால் கட்டப்பட்ட வளைவான பாலங்கள் ஆயிரக்கணக்கில் அமைக்கப்பட்டிருந்தன. அலெக்ஸாண்டிரியா, ஏதென்ஸ், டார்ஸஸ் (Tarsus) ஆகிய நகரங்கள் பெரும் கல்வி மையங்களாய் விளங்கின. கிரேக்க மொழி ரோமானிய மக்களின் பேசும்

மொழியாகவும் விளங்கியது. ரோமானிய - கிரேக்க மக்கள் ஸ்ட்ரோயிக் (Stoic) எனும் ஹெலனிய சமய தத்துவத்தைப் பின்பற்றினர். அத்தத்துவத்தின்படி 'தீதும் நன்றும் பிறர் தர வாரா, மனித சிந்தனையே துன்பத்திற்குக் காரணம், நேர்மையே வாழ்வின் வழிகாட்டி, புலனடக்கம் மூலம் பெறப்படுவதே மகிழ்ச்சி' ஆகிய கொள்கைகள் சமுதாயத்தில் பரவியிருந்தன.[67]

பேரரசன் ஆகஸ்டஸ் ஆட்சிக்குப் பின்னர் பதவிக்கு வந்தவர் டைபிரியஸ் (Tiberius). இவரது ஆட்சிக் காலத்தில் அடிமைப்பட்டிருந்த பாலஸ்தீன நாட்டிற்கு ரோமானிய நாட்டு ஆட்சிப் பிரதிநிதியாய் இருந்தவர் பிலாத்து என்பவர். இவரது ஆட்சிக் காலத்தில் யேசு வாழ்ந்ததாகவும், இவரே யேசுவை சிலுவையில் அடித்துக் கொல்ல உத்தரவிட்டதாகவும் நம்பப்படுகின்றது. இத்தகைய பெருமைமிக்க கிரேக்க ரோமானிய கலாச்சாரமும் கல்வியும், ஆட்சியும், கிறித்துவம் ஒரு சமயமாக உருவெடுத்த நான்காம் நூற்றாண்டு தொடங்கி, கிறித்துவ சமயத்தை உலகம் உலுக்கி வெளிதள்ளிய 16ம் நூற்றாண்டு வரை ஒடுக்கப்பட்டு அழிக்கப்பட்டன, கோவில்கள் தகர்க்கப்பட்டன, சிந்தனையாளர்களும், அறிவும் அழகுமுள்ள பெண்கள் சாத்தானின் வடிவமாகக் கருதப்பட்டுக் கொல்லப்பட்டனர். ஓர் இறைவன் கொள்கைக்கு எதிராகச் சிந்தனையைச் செலுத்தியோரும் பேசியோரும், அஞ்ஞானிகள் (heretics) என அறிவிக்கப்பட்டுத் தீயிலிட்டு எரியூட்டப்பட்டனர். சமய யுத்தங்கள் மனித சமுதாயத்தைத் தாக்கி அழித்தன. சமய பிரிவினைப் போர் (கத்தோலிக்க x புரட்டஸ்டன்டு) மக்களை வாட்டியது. வேளாண்மையும், இந்தியாவுடனான வர்த்தகமும் 1200 ஆண்டுகாலமாக முடங்கியது. ஐரோப்பிய மக்கள் உணவும், உடையுமின்றியும் நோயினாலும் செத்துமடிந்தனர். கல்வி கற்றோர் குறைந்தனர். இவற்றிற்கெல்லாம் காரணம் தீவிர கிறித்துவமே. ஆனால், யூதர்கள் மற்றும் உருவ வழிபாட்டுக்காரர்கள், மக்கள் மத்தியில் வாழ்ந்து வருவதே இத்துன்பங்களுக்குக் காரணம் என அறிவிக்கப்பட்டு அத்தகையோர் கண்டுபிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

இக்காலகட்டத்தில் அகில உலக சமயத் தலைவர்களாக விளங்கிய போப் ஆண்டவர்கள், ஆடம்பரம், காமவிகாரம் ஆகியவற்றில் சிக்குண்டனர். பிஷப்புகள், இறைவனின்

பிரதிநிதியாகக் கருதப்பட்டு அவர்களுக்கு மது, மாது, பணம் ஆகியவற்றை வழங்கித் திருப்திப்படுத்துதலே சாமானியனின் இறைத்தொண்டு எனவும் கருதப்பட்டது. அரச பிரமுகர்களும், கிறித்துவ மறையாளர்களும் அரசின் வரிவிதிப்பிலிருந்து விலக்குப் பெற்றனர். விவசாயம் செய்பவர்களும், தொழிலாளர்களும் அரசின் வரி முழுவதையும் தாங்க வேண்டியிருந்தது. இத்தகைய சீழ்பிடித்த ஐரோப்பிய சமுதாயத்தின் 1200 வருடகாலத்தை அதன் இருண்டகாலம் என வரலாற்றாசிரியர்கள் அழைப்பது நியாயமானதே. கிறித்துவ சமயமே இவ்விருண்டகாலத் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் காரணம் என வரலாற்றாசிரியர்கள் முத்திரையிடுவதில் உண்மையில்லாமல் இல்லை.

3:6. பரிசுத்த வேதாகமம் (பைபிள்) உருவாக்கம்

பரிசுத்த வேதாகமத்தில் நான்கு சுவிசேஷங்கள் உள்ளன. அவை மத்தேயு, மார்க்கு, லூக்கா, ஜான் ஆகியோரால் பரிசுத்த ஆவியின் உந்துதலால் எழுதப்பட்டவை என இரட்சிக்கப்பட்டவர்களால் நம்பப்படுகின்றது. யேசு, கன்னி மேரிக்குப் பிறந்தது, மனிதகுலப் பாவங்களை ஏற்றுச் சிலுவையில் உயிர் நீத்து மூன்றாம் நாள் உயிர்ப்பித்துப் பூத உடலுடன் தேவலோகம் சென்றது, மற்றும் இயேசுவின் இரண்டாம் வருகை தத்துவம், யேசுவை நம்பியவர்களுக்கு மட்டுமே (அவர்கள் கொடும் பாவிகளாய் இருந்தால்கூட) நியாயத் தீர்ப்பு நாளில் சொர்க்கலோக வாழ்வு, நம்பாதவர்கட்கு (சிறந்த புண்ணியவனாய் இருந்தால்கூட) நிரந்தர நரகம் என்பது பைபிளில் மையக் கருத்துகளாகக் கூறப்பட்டுள்ளன.[68] எனினும் குடும்ப வாழ்க்கையின் சிறப்போ, உற்றார் உறவினருடன் வாழும் முறையையோ, இறைவனின் திருப்பாதங்களை நல்வாழ்க்கை மூலம் அடைதலோ (மோட்ச கதி), மத்திய கருத்தாக அதில் அமையாமல் போய்விட்டது. கிறித்துவராய் இருந்தால் பூலோகத்தில் எதையும் எப்படியும் செய்யலாம், பாவமன்னிப்புக் கிடைத்துவிடும், பரலோக வாழ்வும் உறுதி என்ற நம்பிக்கை மேலோங்கி விட்டது. இதன்

காரணமாக ஆசீர்வதிக்கப்பட்டதாகக் கூறப்படும் மேற்கத்திய நாடுகளில் இல்வாழ்க்கையும், சமூக, சமுதாய வாழ்க்கைகளும் முதன்மையாக்கப்படாமல் அவை சின்னா பின்னமாகி விட்டன.

இந்த நான்கினைத் தவிர அக்காலகட்டத்தில் சுமார் 250 வகை சுவிசேஷங்களும் இருந்தன. அவற்றில் முதன்மையானவை தாமஸ் சுவிசேஷம், ஜேம்ஸ் சுவிசேஷம், மக்தாலினா மரியாள் சுவிசேஷம் (இயேசுவுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்), அன்னை மேரியின் சுவிசேஷம், ஜூடாஸ் சுவிசேஷம் ஆகியன. இவை அனைத்திலும் ஞானமார்க்கத்தின் மூலம் (தர்மத்தின் வாழ்வு மூலமே) தேவலோக வாழ்வை அடைய முடியும் என்பது மையக் கருத்தாய் உள்ளது. தர்மத்தின் வாழ்வு வாழ்பவர்கட்கு (தீமைகளைவிட நன்மைகள் அதிகம் செய்தவர்கள்) பாவமன்னிப்புப் பெறுதல் என்பது தேவை இல்லை. வாரந்தோறும் சர்ச் செல்வதும், பாதிரியார்கள் மூலம் பாவமன்னிப்புப் பெறுதலோ தேவையில்லை என்கின்றது ஞானமார்க்கம். இம்மார்க்கம் பிரபலமானால் கட்டுக்கோப்பான சர்ச்சுகளோ அதில் பாவ மன்னிப்பு வழங்கும் பாதிரியார்கட்கோ தேவையில்லாமல் போய் விடும். எனவே கி.பி. நான்காம் நூற்றாண்டில் நியாசி எனும் நகரில் நடைபெற்ற பாதிரியார்கள் மாநாட்டில் பெரும்பான்மை ஆதரவுடன் ஞானமார்க்க கிறித்துவமும் அதன் சுவிசேஷங்களும் பொய் எனத் தள்ளுபடி செய்யப்பட்டன. கிபி. 492ல் அப்போது கிறித்துவ உலகை ஆண்டபோப் ஜெவேசியாப் இத்தகைய ஞானமார்க்க பைபிள்களை (சுவிசேஷங்களை) படிப்பதைத் தடை செய்தார். தடை செய்யப்பட்ட சுவிசேஷங்களைப் படித்தோர் ‘சமய நீதி மன்றங்கள்’ மூலம் நாத்திகர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை வழங்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.[69] தடை செய்யப்பட்ட சுவிசேஷங்கள் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு எரிக்கப்பட்டன.[70] அவற்றில் தப்பியவை சில தற்போது மனித சமுதாயத்திற்குக் கிடைத்துள்ளன.

கன்னிமேரி கர்த்தரால் அடையாளம் காணப்பட்டுப் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு, அபிஷேகிக்கப்பட்டு, ஆட்கொள்ளப்பட்டு, தேவகுமாரனைப் பெற்றெடுத்தவர்.

அவரின்றித் தற்கால கிறித்துவத்திற்கு கர்த்தரின் குமாரன் கிடைத்திருக்காது. பரிசுத்த ஆவியின் நிழலில் வாழ்ந்த இம்மங்கையே இறைவனுடன் சமபாகமாகக் கலந்தவர். இத்தகைய பெண்மணியின் மூலம் பெண் குலத்துக்குக் கர்த்தரால் இடப்பட்ட சாபமான பெரும் பிரசவ வேதனை எனும் ஆதி சாபம் ஏன் நீங்கவில்லை என்பது பெரும் புதிராக உள்ளது? அறிஞர்களால் இதனைப் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. மதபோதகர்களால் நியாயப்படுத்தவும் முடியவில்லை. ஆசீர்வதிக்கப்பட்ட ஆண்மகன் யேசு தனது வாழ்நாட்களின்போதும் மனித குலத்தின் ஆதி சாபத்தினை நிவர்த்தி செய்திட எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. அதாவது, பெண்களுக்கு இன்றுவரை சாப விடுதலையும் கிடைக்கவில்லை. தடை செய்யப்பட்ட ஞானப்பழத்தை உண்ட பாவத்தின் சம்பளமாக மனித குலத்திற்குக் கர்த்தரால் வழங்கப்பட்ட மரணம் எனும் சாபமும் நீக்கப்படவும் இல்லை (ஞானப்பழத்தை ஆதி ஆணும் பெண்ணும் உண்ணாதிருந்தால் மனிதன் சாகாத் தன்மையுடன் இருந்திருப்பான் என்பது நம்பிக்கை). அத்துடன் நித்ய ஜீவன் எனும் சாகா வாழ்வு பெற, மனித குலம் இறைவன் யேசுவின் அடுத்த வருகைக்காகத் தற்போது காத்திருக்க வேண்டியுள்ளது. இரண்டாயிரம் வருடத்திற்கு மேலாகியும் இறைகுமாரன் வருகை இன்னும் நடைபெறவில்லை. பலமுறை இயேசு சாத்தானை நேரடியாகக் சந்தித்த போதும் (மத்தேயு *4:5-1 16:23* யோவான் *13:26 - 27*), மலை உச்சிக்கு ஒன்றாகப் பயணித்த போதும் மகா தந்திரக்காரனான இச்சாத்தானை அவர் கொன்று அழிக்கவில்லை. சாத்தானால் வழங்கப்பட்டுள்ள மனித குலத்தின் வேதனைகளான வியாதி, துன்பம், துயரம் ஆகியவற்றிலிருந்து மக்களுக்கு விடுதலையும் கிடைக்க வில்லை. மாறாக இப்பூவுலகில் கர்த்தரின் திருவசனங்களால் பிரிவினைவாதமும் துன்பங்களும் நடைமுறைக்கு வந்து விட்டன.

1. பூமியின் மேல் சமாதானத்தை அனுப்ப வந்தேன் என எண்ணாதிருங்கள் சமாதானத்தை அல்ல பிரிவினையை உண்டாக்க வந்தேன். எப்படியெனில் மகனுக்கும் - தகப்பனுக்கும், மகளுக்கும் - தாய்க்கும், மருமகளுக்கும்

மாமிக்கும் பிரிவினை உண்டாக்கவே வந்தேன் (மத்தேயு 10:34 , 35)

2. யாதொருவன் என்னிடத்தில் வந்து தன் தகப்பனையும், தாயையும், பிள்ளைகளையும், சகோதரிகளையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீடனாய் இருக்கமாட்டான் (லூக்கா 14:26)

இயேசு கூறினார் 'இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யத்தைக் காணும்முன், மரணத்தை ருசிப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்' (லூக்கா 9:27) இதன் பொருள் இங்கு நிற்கும் உங்களில் சிலர். சாவதற்கு முன் நான் மீண்டும் வருவேன் என்பதாகும். யேசு சிலுவையில் அடிக்கப்பட்டு இறந்து மூன்றாம் நாள் உயிர்ப்பித்ததன் மூலம் லூக்கா 9:27ல் கூறப்பட்டுள்ள வாக்குதத்தம் நிறைவேற்றப்பட்டது. எனினும் இன்றுவரை மனிதர்கள் யாருக்கும் நித்திய ஜீவன் கிடைக்கவில்லை.

மனித குமாரன் சிலுவையில் அடிக்கப்பட்டு இறந்தபின் (யோவான் 19:30) கல்லறையில் வைக்கப்பட்டு மூன்றாம் நாள் உயிர்ப்பித்து (ரோமர் 10:9) வந்ததாகக் கிறித்துவ உலகில் ஒரு நம்பிக்கை உள்ளது. இது அவருக்கு இரண்டாம் பிறவி. மனிதர்கட்கு இது அவருடைய இரண்டாம் வருகை. இரண்டாம் வருகையின் போதும், தனது சீடர்கட்கும், மீன்பிடிப் போர்க்கும், ஆங்காங்கே ரகசியமாகக் காட்சியளித்தார். (பார்க்கவும் மார்க்கு 16:5-7, 16:12. மத்தேயு 28:5-10 யோவான் 20:16, 19:20). ஆனால் கிறித்துவ உலகம் ஏசுவின் இந்த இரண்டாம் வருகையை அங்கீகரித்து மகிமைப்படுத்தத் தவறிவிட்டது. இயேசுவும் தனது இரண்டாவது பிறவியில் உலகை நியாயம் தீர்க்கவும், நித்திய ஜீவன் வழங்கவும் தவறிவிட்டார். எனினும் கிறித்துவ குருக்கள் யேசுவின் இரண்டாம் வருகை இன்னும் நடக்கவில்லை எனவும், அடுத்த வருகை இனிமேல் தான் நடக்க உள்ளது எனவும் மக்களிடையே உண்மைக்குப் புறம்பான போதனை செய்து வருகின்றார்.

புதிய ஏற்பாட்டில் வெளிபடுத்தியுள்ள வசனங்களின்படி விரைவில் உலகம் யேசுவால் அழிக்கப்படும்.[71] அதற்கு முன்பாக உள்ள 1000 ஆண்டுகள் மகாஉபத்திரம் நிறைந்த வருடங்களாக இருக்கும்.

அந்த 1000 ஆண்டுகளும் பூமியானது அந்திகிறிஸ்து எனும் போலி கிறிஸ்துவின் ஆட்சியின் கீழ் பெரும் உபத்திரவங்களைச் சந்திக்கும். அப்போது ஜனங்கள் மிகப் பெரிய கொடுமைகளைச் சந்திப்பார்கள். அந்தக் கொடுமைகளை, ரட்சிக்கப்பட்ட தனது தேவ பிள்ளைகள் அனுபவிக்கக் கூடாது எனத் தேவன் அவர்களைக் காப்பாற்ற ரகசியமாக வருவார். இந்த வருகையின் போது தன்னுடைய தேவ பிள்ளைகளை ஒரு நொடியில் மறுஉருவமாக்கித் தன்னோடு விண்ணுலகிற்கு அழைத்துச் செல்வார். இந்நிகழ்ச்சியானது பூமியிலுள்ள மற்றவர்கட்குத் தெரியாமல் நடப்பதால் இதை ரகசிய வருகை என்கின்றனர். ஒரே வீட்டில் தேவ பிள்ளையாகிய கணவன், மனைவி காணாமல் எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பான், இரட்சிக்கப்படாத (மதம் மாறாத) மனைவி உயிரோடு இருப்பாள். இரட்சிக்கப்பட்ட தம்பி எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பான். ஆனால் அண்ணன் மதம் மாறாமல் இருந்திருந்தால் பூலோகத்தில் இருந்திடுவான். அங்ஙனம் கைவிடப்பட்ட மனைவியும், அண்ணனும் அழுது தன்னையே நொந்து கொண்டிருப்பார்கள். இது கணக்குப்படி இயேசுவின் மூன்றாம் வருகை.

இவ்வாறு ரட்சிக்கப்பட்டவர்கள் எனும் பரிசுத்தவான்கள் எல்லாம் மூன்றாம் வருகையின் போது விண்ணுலகத்திற்கு எடுத்துக் கொண்டபின் பூமியில் வாழும் மிச்சமுள்ள மனிதர்கள் தேவனின் கருணையை இழந்ததால் ரத்தக் கண்ணீர் வடிப்பார்கள். அவ்வமயம் போலி கிறித்துவின் கொடுங்கோல் ஆட்சியால் உலகமே துடித்துக் கொண்டிருக்கும். இவ்வாறு 1000 ஆண்டுகள் முடிந்த பின் பரிசுத்தவான்களோடும், தூதர்களோடும் இயேசு கிறித்து பகிரங்கமாக நான்காம் தடவையாக உலகிற்கு வருவார். அந்திகிறிஸ்துவை அழித்துவிட்டு உலகத்தின் முதல் மனிதனான ஆதாம் முதல் அந்தநாளில் உயிரோடு இருக்கும் ஜனங்கள் வரை எல்லோரையும் நியாயம் தீர்ப்பார். நியாய விசாரணையின் போது இயேசு தங்க சிம்மாசனத்தில் விண்ணுலகில் இருப்பார். அவ்வமயம் இரட்சிக்கப்பட்டதாகக் கூறிக்கொள்ளும் கிறித்துவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் வலது பாரிசத்திலும், இரட்சிக்கப்படாத மற்ற மனிதர்கள் அனைவரும் இயேசுவின் இடது பாரிசத்திலும் நிற்பார்கள். வலது பாரிசத்திலுள்ள

அனைவரையும் இயேசு நித்ய ஜீவன் எனும் சொர்க்க லோகத்திற்கும், இடது பாரிசத்திலுள்ளவர்கள் அனைவரையும் நித்திய நரகத்திற்கும் அனுப்புவார்.

இயேசு கிறிஸ்து தமது முதல் பிரசங்கத்திலும் (மத் - 5:29, 30) கடைசி பிரசங்கத்திலும் (மத் - 23:33) நரகம் பற்றி எச்சரித்துள்ளார். அவர் சொர்க்கலோகம் பற்றி 24 முறையும், நரகம் பற்றி 56 தடவையும் பேசியுள்ளார். வெளிப்படுத்தின வசனங்களிலும் பாதி வசனங்கள் நியாய தீர்ப்பு குறித்தும் பேசுகின்றன. தற்கால கிறித்துவ கொள்கையின்படி எவ்வளவு புண்ணியவான்களாய் இருந்தாலும் புத்தர், சிவாஜி, காந்தி, கட்டபொம்மன், வ.உ.சி., பாரதியார் ஆகியோருக்கு நித்திய ஜீவன் கிடையாது, காரணம் அவர்கள் இரட்சிக்கப்படவில்லை. ஆனால் எவ்வளவு தீயவனாய் இருந்தாலும்: திருச்சிலுவை யுத்தம், மந்திரவாதிகள் வேட்டை, சூனியகாரி கொலையிலும், தெய்வீக விசாரணை (Inguisition) போன்ற கொடுஞ் செயல்களில் ஈடுபட்டிருந்தாலும் அவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு, காரணம் அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள்.

சொர்க்கமும் நரகமும் யாருக்கு? ஓர் ஒப்பீடு

நியாயத் தீர்ப்புப் பற்றிய அடிப்படைக் கொள்கைகள் கிறித்துவ மறைகளில் உண்டு. ஒரு சிலவற்றை மட்டும் இங்கே பார்க்கலாம்.

1. இரக்கம் இல்லாதவனுக்கு இரக்கமில்லாத் தீர்ப்பு (சங் 96:13).

2. அக்கிரமக்காரர்களுக்கு, அசுத்த இச்சைகாரருக்கு, அகங்காரர்களுக்கு ஆக்கினை உண்டு (2 பேதுரு 2:9,10).

3. தேவ பக்தியில்லாதவர்கள், விபச்சாரம் செய்பவர்கள் ஆக்கினை அடைவர்கள் (2 பேதுரு 3:7).

4. சகோதரனைக் கோபிப்பவன், அடுத்தவரை முட்டாள் எனக் கூறுபவன் ஆகியோருக்கு ஆக்கினை உண்டு (மத் 5:22).

5. துர்சிந்தனை உள்ளவர்கட்கு ஆக்கினை உண்டு (நீதி 12:2).

இதுபோன்று நரகத்திற்குச் செல்லும் ஆன்மாக்களின் செயல்களைப் பற்றிப் பைபிளில் கூறப்பட்டுள்ளவை எல்லாம் அனைத்து மதங்களிலும் கூறப்பட்டுள்ளவையே. அவ்வா றெனின் நல்ல மனிதர்கள் அனைவரும் சொர்க்கம் செல்லத்

தகுதியுள்ளவர்களாகின்றனர். ஒருவர் நித்திய ஜீவன் அடைய நற்செயல்கள் புரிந்தால் போதும், அவன் எந்தக் கடவுளையும் வணங்கலாம் என்றாகின்றது. ஆனால் கிறித்துவம் ஒரு சுய முரண்பாடான தத்துவ ஞானம் ஒன்றை வழங்கியுள்ளது. அதுவே ‘சுய நீதி பாவத்தைப் போக்காது’ எனும் தத்துவம்.[72] யோகம், ஞானம், நற்கருமம் ஆகிய சுய நீதிச் செயல்கள் ஒருவனை இறைவன்பால் (இயேசுவின்பால்) இட்டுச் செல்லா. அவன் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் அவனின் பாவங்கள் கழுவப்பட வேண்டும். அதற்குப் பாவமே செய்யாதே ஒரு பிராணியின் இரத்தம் தேவை. பரிசுத்தவான் (இயேசு) இரத்தமே நல்ல கரைப்பான். எனவே ‘மனித குலத்திற்காகக் கல்வாரி சிலுவையில் இரத்தம் சிந்திய இயேசு பெருமான் மீது நம்பிக்கை கொண்டு, அவரை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெறுதலே நற்கதி அடைய ஒரே வழி’ என புதிய ஏற்பாடு இயம்புகின்றது. இன்றைய மனித சமுதாயத்தின் முன் கிறித்துவம் தெரிந்தோ தெரியாமலோ இரண்டு மாற்று வழிகளை சொர்க்கத்திற்குச் செல்லும் பொருட்டு மனித குலத்தின் முன் பரிசீலனைக்கு வைத்துள்ளது.

1. சுய நீதியைப் பின்பற்றல்: நல்லவனாய் வாழ்தல் சற்றுக் கடினமான செயல். நல்லவனாய் வாழ்ந்தாலும் யேசு மூலம் அன்றி இரட்சிப்புக் கிடையாது.

2 (சுய நீதி இன்றி வாழ்ந்தாலும்) இயேசுவுக்குள் அடைக்கலம் அடைந்து வாழ்ந்தால் இரட்சிப்பு உண்டு - மிகவும் எளிதான வழி.

மேற்கண்ட இரு தத்துவங்களில் மேற்கத்திய கிறித்துவம் இரண்டாவது எளிய முறையைத் தேர்ந்தெடுத்து, அதுவே சிறந்தது என உலகிற்கு கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக விளம்பரங்களையும், போதனைகளையும் செய்து வருகின்றது. மனிதன் கிறித்துவுக்குள் விசுவாசத்துடன் இருந்தால் போதும், எப்படியும் வாழ்ந்து கொள்ளலாம் என்ற எளிய நம்பிக்கை உருவாவதற்கு இக்கோட்பாடே காரணம்.

கிறித்துவ சமயத்தில் விசுவாசம் (நம்பிக்கை) ஓர் சிறப்பான இடத்தை ஆக்கிரமித்துள்ளது. விசுவாசமாய் வாழ்தலே யேசுவுக்குள் வாழ்வதை உறுதிசெய்யும் அளவுகோல். இயேசுவின் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு

ஆகியவற்றின் மீதும் அவர் நிகழ்த்திய அற்புதங்கள் மீதும் 'நம்பிக்கை' கொண்டால் மனிதன், நித்திய ஜீவனை (சொர்க்கலோக வாழ்வை) அடைந்திடலாம் என்பதே விசுவாசம்.

இயேசு, அன்றைய தலைமுறையினர் இறக்கும் காலத்திற்குள் மீண்டும் வருவேன் என்று கூறினார். ஆனால் அதன் பிரகாரம் நடந்த இயேசுவின் உயிர்ப்பித்தல், இரண்டாம் வருகைதான் என்பது மறைக்கப்பட்டு விட்டது. எனவே அவரின் இரண்டாவது வருகை இனிதான் நிகழவிருக்கின்றது என்றும், அவர் வரும் அடுத்த வருகையின் போது விசுவாசிகள், மரணம் என்ற துயரம், சிரமம், கொடுமை இன்றி நேரடியாக பரலோக வாழ்விற்கு எடுத்துக் கொள்ளப் படுவார்கள் என்ற நம்பிக்கை கிரேக்க - ரோமானிய மக்களை அன்றைய காலத்தில் பெரிதும் கவர்ந்தது. ஆனால் ஏசுவின் சுய ஜாதியினரான யூதர்கள் அவரை நிராகரித்தனர். பழைய ஏற்பாட்டின்படி மெஸ்ஸையா எனும் கிறிஸ்து தனது முதல் வருகையின் போது ராஜாவாக உலகை ஆட்சி செய்ய வேண்டும். ஆனால் யேசு அவ்வாறாக ஆட்சி புரியாதது மட்டுமின்றி, சமயக் குற்றமும், இராஜ குற்றமும் புரிந்ததால் மரண தண்டனை அடைந்தார். எனவே பழைய ஏற்பாட்டில் 'வருவார்' எனக் குறிப்பிட்டுள்ள மெஸ்ஸையா யேசுவல்ல எனவும், அந்நிகழ்வு இன்னும் நிகழவில்லை எனவும், இனிதான் நிகழ இருப்பதாகவும் யூதர்கள் நம்புகின்றனர். எனவே குழப்பம் நீங்கிட ஆபிரகாமிய மதங்களான யூதம், கிறித்துவம், இஸ்லாம் ஆகிய மூன்று சமயங்களின் மெஸ்ஸையா கோட்பாட்டின் ஒற்றுமை, வேற்றுமைகளைக் காண்பது அவசியம்.

1. யூதர்களின் கோட்பாடு

எதிர்பார்க்கப்படும் இறைவன் (மெஸ்ஸைய்யா) முதல் வருகையே இன்னும் நிகழவில்லை, அவர் விரைவில் வருவார். பரலோக ராஜ்யம் தருவார் என்பதும், அத்தகைய பரலோகத்தை அடைய 'யூதர்கள்' மட்டுமே தகுதியானவர்கள் என்பது.

2. கிறித்துவ கோட்பாடு

யூதர்களின் சமய நூலின்படி எதிர்பார்க்கப்பட்ட மெஸ்ஸையா மனித குமாரனாக, யூத இல்லத்திலிருந்து

யேசுவின் வடிவில் வந்து விட்டார். அவர் யூதர்களுக்கு மட்டுமின்றி மனித சமுதாய முழுமைக்கும் இரட்சிக்கத் தகுந்த கொள்கைகளை வழங்கி விட்டார். அதனைப் பின்பற்று வோரைத் தனது இரண்டாம் வருகையின் போது நேரடியாகப் பரலோக ராஜ்யத்திற்கு எடுத்துக் கொள்வார். அதற்கு முன் இறந்தவர்களின் கல்லறைகள் திறக்கப்பட்டு அதில் தூங்கியவர் களும் நேரடியாக வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். அங்கு அவர்கட்கு நித்திய ஜீவன் எனும் இறப்பற்ற பெருவாழ்வு வழங்கப்படும். இரட்சிக்கப் படாத நபர்கள், 'நியாயம் தீர்த்தல்' எனும் இறைவனின் விசாரித்தலுக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களுக்கு நித்திய நரக தண்டனை வழங்கப்படும் என்பதாம்.

இஸ்லாமிய கோட்பாடு

பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து அத்தியாயங்களை இஸ்லாம் ஏற்றுக் கொள்வதுடன், அதில் வருவேன் எனக் கூறப்படும் மெஸ்ஸையா இறைவனின் திருக்குமரன் அல்லன். இறைவனுக்கு மகன் கிடையாது, மாறாக மெஸ்ஸையா என்பது இறை தூதரைக் குறிக்கும் ஒரு சொல். உலகத்திற்குப் பல்வேறு காலகட்டத்தில் பல்வேறு இறைத் தூதர்கள் (மெஸ்ஸையா) வந்துள்ளனர். அவரில் ஒருவர்தான் இயேசு. கடைசியாக வந்த இறைத் தூதர் முகமது நபி (சல்) அவர்கள். இறைவனைத் தொழுவதற்கும், உலகில் வாழ்வதற்கும், மனித குலம் முழுமைக்கும் 'குர் ஆன்' எனும் இறைவன் அருளிய வேத நூலை அவர் வழங்கியுள்ளார். அதன்படி நடந்தால் ஒருவன் பரலோக வாழ்வை அடையலாம். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாத (காபிர்கள்) இறைவனின் தீர்ப்புக்கு உட்படுத்தப்பட்டு நரக தண்டனை வழங்கப்படுவார்கள் என்பதாம்.

ஆபிரகாமிய சமயங்களான யூதம், கிறித்துவம், இஸ்லாம் ஆகியவற்றிற்குள் சொர்க்கலோகத் தத்துவத்தில் வேறுபாடு இருந்திடினும், அவற்றிற்கிடையே சில முக்கிய ஒற்றுமை களும், உண்டு.

1. இம்மூன்று மதங்களும் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா கண்டங்களின் இணைப்புப் பாலமாக விளங்கும் மேற்கு ஆசிய பகுதியில் உருவானது.

2. இப்பகுதியில், இன்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முன் பிரபலமாயிருந்த இந்து சமயம், சொரஸ்தானியம், கிரேக்க சமயம் எனும் ஹெலன் சமயம் (எகிப்து, கிரேக்க, ரோமானிய மக்களிடையே பிரபலமாயிருந்த மதம்) ஆகியவற்றின் கொள்கைத் தாக்கம் இந்த மூன்று ஆபிரகாமிய மதங்களின் மீதும் உண்டு.

3. மூன்று சமயங்களுக்கும், ஒரே இறைவன் கொள்கையும், இறை தூதுவர்கள் வருகை பற்றியும், நியாயத் தீர்ப்பு, சொர்க்கம், நரகம் ஆகிய கொள்கை பற்றியும் ஏற்பு உண்டு.

4. மூன்று சமயங்களும் ஆபிரகாம் என்பவரைத் தங்களின் மூதாதையராக ஏற்றுக் கொண்டுள்ளது.

5. மூன்று சமயங்களும் பழைய ஏற்பாட்டின் மீது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நம்பிக்கை கொண்டுள்ளது.

6. மூன்று சமயங்களும் தங்கள் சமயம் மட்டுமே உண்மையானது. தங்கள் சமயத்தவர் மட்டுமே சொர்க்க லோகம் அடையத் தகுதியானவர்கள் எனும் கொள்கை உள்ளடக்கியது.

3:7. பரிசுத்த வேதாகமம் இறுதியாக்கப்படல்

ஆபிரகாமிய சமயங்களில் நடுநாயகமாக உள்ளதும், பெரும்பொருள் மற்றும் நேரம் ஆகியவற்றின் மூலம் பரப்பப்படுவதும் கிறித்துவம் மட்டுமே. அதன் வேத நூலாகிய பைபிள் உலகத்திலே பல்வேறு மொழிகளில் அச்சிடப் பட்டுள்ளது. உலகிலே அதிகப் பிரதிகள் விற்பனை செய்யப்பட்டுப் புழக்கத்தில் உள்ளது எனும் பெருமை பெற்றது. பைபிளைத் தற்காலக் கிறித்துவர்கள் 'பரிசுத்த வேதாகமம்' என்று அழைக்கின்றனர். இந்து சமயத்தில் வேதம் என்றால் இறைவனை வணங்க உபயோகிக்கப்படும் மந்திரங்கள், அடங்கிய நூல். ஆகமம் என்றால் கோவில் வழிபாட்டு முறை, அதன் தத்துவங்கள், கோவில்கள் மற்றும்

திருவிழாக்கள் கொண்டாடும் முறைமை ஆகியவற்றை வழங்கும் நூல். ஆனால் கிறித்துவ வேதாகமத்தில் இதுபோன்று வழிபாட்டு முறைகள் வழங்கப்படவில்லை. எனினும் அந்நூல் பரிசுத்த வேதாகமம் என அழைக்கப்படுகின்றது. பைபிளின் சிறப்புகள் சில:[73]

1. உலகத்தின் நூல்கள் அனைத்தும் மனிதர்களால் எழுதப்பட்டிருக்க, பரிசுத்த வேதாகமம் மாத்திரமே இந்த உலகை உருவாக்கியவரும், இயற்கைக்கு அப்பாற்பட்டவருமான இறைவனை ஆசிரியராகக் கொண்டுள்ள புத்தகமாகும் (2. தீமத்தேயு 3:16). பரிசுத்த ஆவியால் அருளப்பட்டு வெவ்வேறு மனிதர்களால் 160 ஆண்டுகால இடைவெளியில் எழுதப்பட்ட நூல்.[74]

2. உலகில் முதலாவது அச்சிடப்பட்டது.

3. காலத்தை வென்ற தீர்க்க தரிசனம் சொல்வது.

4. தடைகளைக் கடந்து செல்வது.

5. எல்லா வயதினருக்கும் ஏற்றது.

6. மொழி பெயர்ப்பால் பாதிக்கப்படாதது.

7. அறிஞர்களுக்குச் சவால்விடும் வேதம்.

8. இலக்கியமும், அரசியலும் கலந்தது.

9. தற்காலம் வரை ஆராய்ந்து, ஆராய்ந்து அப்பணி முடிக்கப்படாத வேதம்.

10. சரித்திர பூர்வமான வேதம்.

புதிய ஏற்பாட்டில் ஏசு கிறிஸ்து பிறப்பு, செயல்பாடுகள், இறப்பு, உயிர்த்தெழுதல், விண்ணேற்றம் முதலிய செய்திகள் மத்தேயு, மாற்கு, லூக்கா. - ஜான் ஆகிய நால்வரும் நற்செய்திகளாக-சுவிசேஷங்களாக (Gospel) வழங்கியுள்ளனர்.

ஏசு தன் வாழ்நாளிலே பரலோக வாழ்வு தருவார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவரைப் பற்றிப் பல நாடோடிக் கதைகள் பாலஸ்தீனப் பகுதியில் பரவியிருந்தன. அவைகளில் மேற்குறிப்பிட்ட நான்கைத் தவிர மற்றவைகள் அங்கீகரிக்கப்படவில்லை. அங்கீகரிக்கப்படாத சுவிசேஷங்கள் பற்றிய விவரம் கலைக்கதிர் எனும் பத்திரிகையில் (ஜூன் 2006) கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் சிலவற்றைப் பற்றிச் சுருக்கமாகக் காணலாம்.[75]

1. தாமஸின் வேதம் (கி.பி. 50)

தாமஸ் இயேசுவின் சகோதரர் என வர்ணிக்கப்படுகிறார். தச்சு வேலைசெய்து கொண்டிருந்த இவரை இயேசு சில வெள்ளிக் காசுக்காக அடிமையாக விற்றுவிட்டார்.[76] இவர் தன் காலத்தில் பாரசீகம் (ஈரான்) மற்றும் இந்தியாவின் மேற்கு, பகுதிகளுக்கும் வந்ததாகவும் கூறப்படுகின்றது.

இறைவனை நேரடியாக உணரலாம், இறைவனை உன் இதய குகையில் தேடு, சுயநீதியுடன் வாழ்ந்திடு என்பது போன்ற ஞானக் கருத்துக்கள் இதனில் சொல்லப் பட்டுள்ளன.[77] தாமஸின் வேதம் நாத்திகக் கருத்துக்கள் கொண்டது எனக் கி.பி. 264-268 ஆண்டில் அண்டியோச் (Antioch) நகரில் கூட்டப் பட்ட கிறித்துவ திருச்சபை வர்ணித்து, நிராகரித்து, தனது கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

2. மேரியின் வேதம் (கி.பி. 100)

மேரி மக்தலின் என்ற பெண் விசுவாசிக்கு ஏசுபிரான் சிறப்பாக எடுத்துரைத்த செய்திகள் கொண்டது.

3. சத்திய வேதம் (கி.பி. 150)

உலகமென்னும் மாயையிடமிருந்து ஆன்மாவை விடுவிக்கும் முறைகள் சொல்லப்பட்டுள்ளன.

4. ஜானின் இரகசிய ‘மறை மொழிகள்’ (கி.பி. 150)

இந்த நூல் பைபிளின் பழைய ஏற்பாட்டினை மறுக்கின்றது. உண்மையை மனிதனுக்குக் கிடைக்க விடாமல் பழைய ஏற்பாடு மறைத்து வைக்கின்றது எனக் குற்றம் சாட்டுகிறது.

5. ஜூடாஸின் உபதேசங்கள் (கி.பி. 220-340)

யேசுவைக் காட்டிக் கொடுத்தவன் என்று கடந்த 2000 ஆண்டுகளாக வெறுக்கப்பட்டவன் ஜூடாஸ் இக்காரியத். ஆனால் இந்த வேத உபதேசத்தின்படி அவ்வாறில்லை. இவ்வேதத்தின் முதல் வரியே ஜூடாஸ்சுடன் தனியாக இயேசு நடத்திய உரையாடலின் மூலம் வெளிப்படும், வெளிப்பாடுகளின் இரகசிய சேகரிப்பு எனத் துவங்குகின்றது. இயேசுவுக்குத் தனது முடிவைப் பற்றித் தெரியும். ஆகவே அவர் ஜூடாஸை அழைத்து நீ ஒருவனே என் சீடர்களில் என்

தத்துவங்களை அறிந்தவன், இந்த என் உடலில் சிக்கியிருக்கும் மனித ஆவியை விடுவிக்க நீ தான் தக்க சீடன், அதன் மூலம் நீ பெரிய பாவத்தைச் செய்தவனாகக் கருதப்படலாம், ஆனால் நீ எனக்காகக் காட்டிக் கொடுப்பதைச் செய் என்கிறார். கார்பன் டேட்டிங் பரிசோதனை மூலம் இந்த நூல் கி.பி. 220-340க்குள் எழுதப்பட்டிருக்கும் எனத் தெரியவருகின்றது.

பேரரசன் கன்ஸ்டன்டைன்:

இவ்வாறு யேசுவின் போதனைகள் பற்றி வெவ்வேறான கருத்துக்கள் கொண்ட நூல்கள் பல அன்றைய காலத்தில் பிரபலமாய் விளங்கி வந்துள்ளது. இவற்றில் எதை உண்மையென்று நம்பிப் பின்பற்றுவது எனக் கிறிஸ்துவ குருமார்களிடம் பெரும் குழப்பம் மேலோங்கியது. இதனைத் தீர்த்து வைக்க முதலாவது கிறிஸ்துவ அரசன் என்றும், முதலாவது பிஷப் என்றும் கருதப்படும் ரோமானியப் பேரரசன் கன்ஸ்டான்டைன் (கி.பி. 313) முன்வந்தார். தனக்கு எதிரியாக இருந்தவர்களை ஒடுக்கி அடக்க அவனுக்கு ஒரு கொள்கையும், ஆதரவும் தேவையாயிருந்தது. இதனை அன்று கிரேக்க - ரோமபுரியில் வளர்ந்து வந்த கிறித்துவம் வழங்க முன்வந்தது. இதனைக் கண்டு அரசன் மகிழ்ந்தான்.

ஆட்சி அதிகாரப் போட்டியில் கான்ஸ்டன்டைன் ரோமானியப் பேரரசனாக நிலைபெற்றான். நடந்த அதிகாரப் போட்டியில் தனது மனைவியையும், மூத்த மகனையும், தன் மனைவியின் தகப்பனையும் கொன்று விடுகின்றான்.[78] அதனால் ஏற்பட்ட பெரும் பழி ரோமானிய மக்களிடையே அவனுக்குப் பெரும் செல்வாக்குச் சரிவினை ஏற்படுத்தியிருந்தது. அரசன் தன் பாவத்தைத் துடைப்பதற்கு பரிகாரம் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான். நாட்டின் நிர்வாகத்தில் மூத்த அதிகாரிகளின் ஒத்துழைப்பும் அவனுக்குக் கிடைக்கவில்லை. அந்நிலையில் ரோமாபுரியில் இயங்கி வந்த கத்தோலிக்க கிறித்துவ தேவாலயம் (Pauline church) அரசனின் ரத்தக்கறை படிந்த பாவத்தைக் கழுவித் துடைப்பதற்கு வழிகாட்டியது. தங்களது தேவாலயத்தில் ஜபம் செய்து கர்த்தரிடம் பாவ மன்னிப்புக் கோரினால் அரசனின் பாவமும், பழியும் நீங்கிவிடும் என்பதே அவர்கள் காட்டிய வழி. மனச்சாட்சி உறுத்தியதினால் அமைதி இழந்திருக்க அரசன் ஏதோ ஒரு வகையில் பரிகாரம் தேட எண்ணினான்.

ரோமானிய பேரரசன் கன்ஸ்டன்டைன்

கத்தோலிக்க தேவாலயத்தின் யோசனையை ஏற்றுச் செயல்பட்டான். திருச்சபை அரசனைப் பாவம் நீக்கியவனாக அறிவிப்புச் செய்தது.

கத்தோலிக்க திருச்சபைக்கு நன்றிக்கடன் பட்ட அரசன் அதற்கு அதிகப்படியான மத சுதந்திரமும், அதிகாரமும் கொடுத்தான். பெற்ற அதிகாரத்தைக் கொண்டு கத்தோலிக்க குருமார்கள், ஹெலன் மதத்தினரையும் (Pagon religion), கிறித்துவத்தில் அப்போதிருந்த பல்வேறு ஞான மார்க்க கிறித்துவர்களையும் ஒடுக்குவதற்கு உபயோகப்படுத்தினர். இதன் காரணமாக மதக் கலவரங்கள் ரோமானியப் பேரரசில் தோன்றின. பேரரசில் நிலையான அமைதி திரும்பிட அரசன் விரும்பினான். ஒன்றுபட்ட கிறித்துவ சமய ஆதரவு அப்போது அவனுக்கு அவசியமாகத் தேவைப்பட்டது. அத்தகைய ஆதரவும் ஒத்துழைப்பும் அவனது எதிரிகளை வீழ்த்தி நாட்டில் அமைதியினை ஏற்படுத்த அவனுக்குக் கேடயமாகப் பயன்படும் என்றும் எண்ணினான்.

கிறித்துவ மதத்திற்குள் இருந்த பல்வேறு வேத புத்தகங்களும் (Gospels), மதப் பிரிவுகளும் அரசனின்

முயற்சிக்குத் தடங்கலாக இருந்தன. இவற்றினை ஒழுங்கு படுத்தி ஒற்றுமைபடுத்திட, கான்ஸ்டன்டின் கி.பி. 325ல் நைசியா (துருக்கி நாட்டில் இந்நகரம் தற்போது உள்ளது) நகரில் ஒரு திருச்சபைக் கூட்டத்தை அழைத்தான்.

3:8. கிறித்துவம் ஓர் உலகளாவிய சமயமாக உருவாகுதல்

கிறித்துவம் ஒரு உலகளாவிய சமயமாக உருவெடுத்தது ரோமானியப் பகுதியில்தான். எனவே கிறித்துவ சமயத் தோற்றம், அதன் தாக்கம், அது ஓர் உலகப் பெரும் சமயமாக எவ்வாறு உருவெடுத்தது என அறிய வேண்டின் ரோமப் பேரரசின் வரலாற்றைக் கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து பரிசீலிப்பது அவசியம்.

முதலாம் நூற்றாண்டு

யேசு, கி.பி. 33ல் சிலுவையில் அறையப்பட்டு உயிரிழந்தார் என்றும், மீண்டும் மூன்று நாட்களுக்குப் பின்னர் உயிர்த்தெழுந்தார் என்றும், அதற்குச் சில நாட்களுக்குப் பின்னர் பூதஉடலுடன் வானிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் எனவும் நம்பப்பட்டது. இதனைக் குறித்துப் பல்வேறு நாடோடிக் கதைகள் பாலஸ்தீனத்தில் அன்று உலாவி வந்தன. இதனைத் தொடர்ந்து யேசுவின் வாழ்க்கை வரலாற்றை நம்பியவர்கள் பல்வேறு குழுக்களாகச் செயல்பட்டு அவருடைய கொள்கைகளைப் பிரசங்கித்து வந்தனர். அத்தகைய ஒரு குழுவின் தலைவராகப் புனித பவுல் அடிகளார் விளங்கினார். அவர் காலத்தில் சுவிசேஷங்கள் எதுவும் எழுதப் படவில்லை.[79] பவுல் அடிகளாரும் யேசுவை நேரடியாகச் சந்தித்து அவரின் கொள்கைகளை அறிந்தவரும் அல்லர். ஒரே இறைவன் கொள்கையில் தளராத நம்பிக்கை கொண்ட இவர், கிரேக்க - ரோமானிய பகுதியில் அன்று பிரபலமாயிருந்த இந்து, புத்த சமய செல்வாக்கினையும் பல தெய்வ வழிபாட்டையும், உருவ வழிபாட்டையும் ஒழிக்க எண்ணினார். அத்துடன் ரோம் சாம்ராஜ்ஜியத்திற்கு எதிராகக் கலகம் செய்து வந்த ஜியாலெட்ஸ் மற்றும் அவர்களுக்கு ஆதரவளித்து வந்த

எஸ்ஸின்ஸ், சதுர்சேயர்கள் ஆகியோரை ஒழிப்பதன் மூலம் ரோம சாம்ராஜ்யத்திற்கு உதவிடவும் விரும்பினார். அதன் பொருட்டு ஒரு புதிய தத்துவத்தை நிறுவிடவும் விரும்பினார். அவ்வமயம் பாலஸ்தீன - கிரேக்க - ரோமானிய பகுதியில் பிரபலமாகப் பேசப்பட்டுவந்த யேசுவின் கதைகளைத் தன் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய உபயோகிக்கவும் துணிந்தார். யேசுவின் யூத குலத்தோர் ஏழைபட்டவர்களாய் இருந்ததால் அவர்களால் பலன் ஏதும் இல்லை என அறிந்து, புதிய தத்துவத்தைப் புனைய ரோமானிய அரசின் செல்வாக்கையும், யூதர்களின் புறஜாதியினரான கிரேக்கர்களின் செல்வ வசதியையும் உபயோகிக்கத் திட்டமிட்டார். அத்துடன், அன்றைய மக்கள் சாவிற்கு மிகவும் பயந்திருந்ததையும், அப்பயத்தைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திடவும் திட்டமிட்டார்.[80]

பவுல் அடிகளார் சரியான பெயர் சவுல் என்பதாகும். இவர் கிரேக்க நாட்டுப் பகுதியின் வடக்கில் அமைந்திருந்த டாரஸ் (Tarus) எனும் நகரில் பிறந்து, கல்வி கற்ற சிறப்புடையவர். ஸ்டோட்டிக் (Stoic) எனும் கிரேக்க தத்துவ போதனையை உணர்ந்து கற்றவர். இவர் தன்னைப் பெஞ்சமின் கோத்திரத்தைச் சார்ந்த யூதர் எனவும், தான் ஒரு பரிசேயர் கூட்டத்தைச் சேர்ந்தவர், எப்ரு (Hebrew) மொழி பேசுபவர் என்றும் கூறிக்கொண்டார். (பரிசேயர் என்போர் யூதர்கள் கோவிலில் சாதாரண மக்களும் பூஜாரியாய் இருக்கலாம், எல்லோரும் உள்ளே சென்று வழிபாடு செய்யலாம், ஆண்டவன் முன்பு அனைவரும் சமம் என்போர்). அத்துடன் தன்னை ஒரு ரோமானிய பிரஜை எனவும் அறிவித்துக் கொண்டார். அக்காலகட்டத்தில் ரோமானியப் பிரஜை என்றால் பெரும் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உடையவர்களாய் இருந்தனர். அத்தகையோர் ரோம ஆட்சிப் பகுதியில் எந்த நேரத்திலும் பயணம் செய்யலாம் என்பதும் வழக்கத்திலிருந்தது. இவர் மத்தியத் தரைக் கடலைச் சுற்றியுள்ள ரோமாபுரி ஆட்சிக்கு உட்பட்ட பல நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் குறுக்கும் நெடுக்குமாக 80000 கி.மீ. வரை பயணம் செய்து புதிதாகப் பெயரிட்ட கிறித்துவின் பரிசுத்த ஆவித் தத்துவத்தைப் பரப்பினார். இதன் கொள்கைகளை யூத சமய நடைமுறைகளிலிருந்து ஓரளவு

வேறுபடுத்தவும் விரும்பினார். எனவே யேசுவின் காலத்தோடு, யூத பழக்கவழக்கங்களான, சுன்னத்து செய்தல், கோவில்களில் பலியிடுதல், யூத உணவுக் கட்டுப்பாடு ஆகியவை காலமாகிவிட்டன. அவை கிறித்துவர்களுக்குத் இனி தேவையில்லை எனப் பிரசங்கித்தார்.[81] கிறித்துவத்தில் யூதர்களுக்கு மட்டுமின்றி புறஜாதியினருக்கும் அதில் இடம் உண்டு என அறிவித்தார். இக்கொள்கையினால் புறஜாதியினர் மகிழ்வுற்றனர். ஆனால் யூதர்களும், ஞானமார்க்க யூத கிறித்துவர்களும் பவுல் அடிகளாருக்கு நெருக்கடி கொடுத்தனர். யேசுவின் குடும்பத்தினரும் பவுல் அடிகளாரை எதிர்க்கத் தலைப்பட்டனர்.[82] பவுல் அடிகளார் யூதர்களைப் பற்றியும், யேசுவின் குடும்பத்தார் பற்றியும் சுன்னத்துப் பற்றியும் தீவிர எதிர்மறையான கருத்துக் கொண்டிருந்தார். இதனை அவர் பிலிப்பியர்களுக்கு எழுதிய நிருபத்தின் வசனங்களில் காணலாம்.

> 'நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாய் இருங்கள், சுன்னத்து காரர்கட்கு எச்சரிக்கையாயிருங்கள்.'
>
> - பிலிப்பி, 3:2

> 'கிறித்துவை மேன்மைபாராட்டுகிறவர்கள் சுன்னத்து செய்யத் தேவையில்லை'
>
> - பிலிப்பி, 3:3

யேசு கொலை செய்யப்பட்டதற்கு யூதர்களே காரணம் என்றும் பவுல் அடிகளார் குற்றம் சாட்டினார் (தெசலோ 2:15). புறஜாதியினரை இரட்சிப்புச் செய்வதற்கு யூதர்கள் தடங்கலாய் விளங்குகின்றனர் எனவும் அவர் குற்றம் சாட்டினார் (தெசலோ 2:16). அவ்வமயம் பவுல் அடிகளாரைக் கொலை செய்ய தீவிரவாத யூதர்களால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

புனிதர் பவுல் அடிகளார் தனது கொள்கைகளைப் பரப்பப் பெரும்பாடுபட்டார். அதன் பொருட்டு, 'சொர்க்க லோக'த் தத்துவம் ஒன்றை மக்கள் முன் வைத்தார். ஒருவன் சொர்க்கலோகம் புகுவதற்கு நற்கிரியைகள் பூவுலகில் செய்து சிரமப்படத் தேவையில்லை எனவும், யேசுவின் சிலுவை யேற்றத்தையும், உயிர்ப்பித்தலையும் விசுவாசித்தால் போதும் எனவும் போதித்தார். பரலோக ராஜ்யம் சமீபத்தில் இருக்கின்றது என்றும், அப்போதைய தலைமுறை முடிவதற்கு முன்பே தேவகுமாரன் மக்களை அழைத்துச் செல்ல

வானிலிருந்து மகிமையுடன் வருவார் என்றும் பிரசங்கித்தார். இதனால் சாவுக்கும், நரகத்திற்கும் அஞ்சிய மக்கள், நித்தியஜீவன் வேண்டி கூட்டம் கூட்டமாய்க் கிறித்துவத்தில் சேர்ந்தனர்.

மதமாற்றத்தைத் தீவிரப்படுத்தவும், மதம் மாறியவர்களை விசுவாசத்தினை வழங்கி நிலைநிறுத்திடவும் பவுல் அடிகளார் தன் விசுவாசிகளுக்கு நீண்ட கடிதங்களை எழுதினார். இக்கடிதங்கள் பரிசுத்த ஆவியினால், பவுல் அடிகளாரால் எழுதப்பட்டவை எனக் கருதிப் புதிய ஏற்பாட்டின் ஒரு முக்கிய பாகமாகப் பின்னர்ச் சேர்க்கப்பட்டன.

எதிர்ப்பு, எழுச்சி, வளர்ச்சி

யேசு, யூதகுலத்தில் பிறந்து, அதன் சமய ஆச்சாரங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர். அவர் தன்னை ஒரு போதகராக வர்ணித்துக் கொண்டாரேயன்றிப் புதிய சமயத்தை ஸ்தாபிக்க வந்தவராகக் கூறிக்கொள்ளவில்லை. ஏற்கெனவே யூத நாட்டில் இருந்து வந்த சமயக் கோட்பாடுகளை (சீர்திருத்தம் செய்து) நிறைவேற்ற வந்ததாகவே கூறியுள்ளார் (மத் 5:17). எனினும் இவரின் கருத்துக்களையோ, கோட்பாடுகளையோ யூதர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை (பார்க்கவும் தீத்து 1:10, 11). யேசுவை யூதர்கள் ஒரு போலி தீர்க்கதரிசி எனக் கருதினார்கள். அவரைச் சிலுவையில் அடிக்கவும் கோரினார்கள். எனவே யூத சமயத்தினர் ஆரம்பத்திலிருந்து இன்று வரையிலும் யேசுவின் கோட்பாடுகளை எதிர்த்தே வந்துள்ளனர். ஆனால் யேசுவின் சீடர்களோ அவரை உண்மையான தீர்க்கதரிசி எனக் கருதினர்.

யேசுவுக்கு யாக்கோப்பு, ஜேம்ஸ், ஜூடாஸ், சைமன் என்ற நான்கு உடன்பிறந்த சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் இருந்தனர் (மார்க் 6:3, மத் 13:55, 56).[83] யேசுவின் மறைவுக்குப் பின்னர் அவரின் சகோதரர்களும், அன்னை மரியாளும், மக்தலோனா மரியாளும், இன்னும் பலரும் யேசுவை ஓர் தீர்க்க தரிசியாய்க் கருதி யேசுவின்மீது நம்பிக்கை கொண்டு செயல்பட்டனர். அவர்கள் யூத கிறித்துவர்கள் எனவும், நசரேயர்கள் எனவும், ஜெருசலேம் கூட்டத்தினர் எனவும் (Judeo christians), ஞானமார்க்க

கிறித்துவர்கள் எனவும் பல்வேராக அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு யேசுவின் சகோதரர் ஜேம்ஸ் தலைவராக விளங்கினார். இவர்களுக்கெனத் தனிச் சுவிசேஷங்களும் பிரார்த்தனைப் புத்தகங்களும் இருந்தன (பார்க்கவும் கலாத்தியர் 1:6).[84] தாமஸ் சுவிசேஷம் (Gospel of Thomas), மக்தலானோ மரியா சுவிசேஷம் (Gospel of Macdolena Mary), ஜுடாஸ் இஸ்காரியட் சுவிசேஷம் (Judas Iscariat) ஆகிய சுவிசேஷங்கள் யேசுவின் போதனைகளை அறிவிப்பதாகக் கருதி ஜெருசலேம் குழுவினர் அவற்றைத் தங்களது வழிபாட்டிற்கும் வாழ்க்கை முறைமைக்கும் பயன்படுத்தி வந்தனர். யேசுவின் போதனைகளை யூதசமயக் கொள்கைகளுடன் (பழைய ஏற்பாட்டுடன்) சேர்த்துப் பின்பற்றினர். பசித்தவனுக்கு உணவு கொடுத்தலும், தாகமாய் இருப்பவனுக்குத் தண்ணீர் கொடுத்தலும், அன்னியனைச் சேர்த்துக் கொள்ளுதலும், ஏதுமற்றவனுக்கு வஸ்திரம் கொடுத்தலும், காவலில் உள்ளவனை விசாரித்தலும், புண்ணியகாரியமாகக் கருதப்பட்டது.

ஜெருசலேம் குழுவினரின் இதர கொள்கைகளாவன:

1. இரட்சிப்பு தெய்வீக ஞானம் பெறுதலாலே கிடைக்கும் (விசுவாசத்தினால் அல்ல).

2. சாதாரண மனிதன் உலகின் நிழலை உண்மை என எண்ணுகிறான், ஆனால் அத்தகைய நிழலை உண்டுபண்ணும் சக்தியை அவன் காணாமல் உள்ளான்.

3. இறைவனை வெளியில் தேடாதீர்கள் (மேகத்தில் தேடாதீர்கள்). அவனை உங்கள் இதய குகையில் உள்ளுணர்வு மூலம் உணர்ந்து அனுபவியுங்கள்.

4. கற்பனையான நம்பிக்கை மூலம் இறைவனை உணர முடியாது.

5. ஆத்மதரிசனத்தின் மூலம் இறைவனை இப்பிறவியிலே கண்டு அனுபவிக்கலாம் (கிறித்துவ சமயத்தின்படி இப்பூவுலக வாழ்வின்போது கர்த்தரைக் காண முடியாது).

இதுபோன்ற கருத்துக்களே தாமஸ் மற்றும் மேரி மக்தாலின் ஆகியோர் சுவிசேஷத்தில் நிறைந்துள்ளதை காணலாம்.

மேரி மக்தாலின் சுவிசேஷம் எனும் இப்புத்தகம் எகிப்து நாட்டுக் குகை ஒன்றில் 19ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்

பட்டது. யேசு கிறித்துவின் வழித் துணையாக விளங்கியவர் இப்பெண்மணி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் இப்பெண்மணியின் சுவிசேஷம் செல் அரித்துக் காணப்பட்டது. இந்து சமய உபநிஷதங்கள்போல் மக்தானா மரியாளுக்கும், உயிர்ப்பித்து எழுந்த யேசுவுக்கும் உரையாடல் நடந்ததை விவரிக்கின்றது. சமய வழிபாடுகளை நடத்தப் பெண்களுக்கும் உரிமை உண்டு என்பதை இந்நூல் நிருபிப்பதாக அமைந்துள்ளது. இவ்சுவிசேஷத்தில் கூறப்படும் இதர சமய கருத்துக்களைக் காணலாம்.

1. ஞானத்தின் மூலமே இறைவனை அடைய முடியும்.

2. யேசுவின் மரணத்தின் மூலம், மனிதகுலம் பாவங்களிலிருந்து விடுதலை பெற்றுவிட்டது என்ற கோட்பாட்டை நிராகரிக்கின்றது.

3. மேரி மக்தாலின், புதிய ஏற்பாட்டில் பேய் பிடித்து அலைந்த பெண்மணியாகச் சித்தரித்துள்ளதைத் தள்ளுபடி செய்கின்றது.

4. பாவம் எனும் தனிப்பொருள் கிடையாது. பாவம் மனிதனின் வாழ்வில் ஓர் அங்கம். உள்ளுணர்வு மூலம், தான் யார் என்பதை ஒருவன் உணர்ந்தால் பாவச் செயல்களிலிருந்து விடுதலை பெறலாம்.

மேரி மக்தாலின் காலத்திலேயே இவரின் சுவிசேஷத்திற்கு எதிர்ப்புத் தோன்றியது. எதிர்ப்பை முன்னின்று நடத்தியவர் பீட்டர் எனும் யேசுவின் நேரடி சீடர். அவருடைய கருத்தின்படி 'புரட்சிகரமான இத்தகைய ஆன்மீக நற்செய்திகளை ஒரு பெண்மணி மூலம் யேசு வெளிப்படுத்தினார் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல' என்பதாகும். அவருக்கும், மரியாளுக்கும் இடையில் இக்கருத்தினால் வாக்குவாதம் ஏற்பட்டது. எனினும், இப்பெண்மணி வழங்கிய சுவிசேஷம் யேசு இறந்த பின்னரும் மத்திய தரைக்கடலின் விளிம்பு நாடுகளிலெல்லாம் பரவி இருந்தமைக்குப் பல ஆதாரங்கள் உள்ளதாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான ஞானமார்க்கக் கிறித்துவத்தைப் பவுல் அடிகளார் எதிர்த்தார்.[85] மனிதன் வாழ்வில் இத்தகைய ஒழுக்கங்களைக் கடைபிடிப்பது சிரமம் எனவும், அதன்மூலம் இறைவனை அடைதல் என்பது இன்னும் சிரமமானதே என்றும் எண்ணினார். எனவே யேசு சமயத்தை இன்னும்

எளிமையாக்கி ரோமானிய - கிரேக்க மக்களைத் தன்பக்கம் இழுக்க முயற்சித்தார். இச்சிந்தனையிலிருந்து பிறந்ததே பவுல் அடிகளாரின் 'விசுவாச' தத்துவம். இதன்படி 'ஒருவன் யேசுவை ஏற்றுக் கொண்டு அவர் மீது விசுவாசம் வைத்திருந்தாலே போதும், நித்திய ஜீவன் உறுதி, சுயநீதி கரை சேர்க்காதென்றும்' போதித்தார். அத்துடன் யூத சமயத்திலிருந்து கிறித்துவத்தைத் தனிமைபடுத்தவும், தன்னை ஆதரிக்காத யூதர்களை எதிர்க்கவும் துணிந்தார். மொத்தத்தில் யேசுவின் இறை தத்துவங்களை முன்நிறுத்துவதற்குப் பதிலாக அவரது ஆவியையும், பரலோக ராஜ்யத்தின் கவர்ச்சியையும் முன்நிறுத்திப் பிரசங்கித்தார்.[86] தான் பிரசங்கிக்கும் நற்செய்தி (சுவிசேஷம்) ஆவிருபமாக இருந்த யேசுவிடமிருந்து தன்னால் நேரடியாகப் பெறப்பட்டது (யேசுவின் குடும்பத்தினர் மூலமாக அல்ல) என்றும் பிரசங்கித்தார். இறுதியில் பவுல் அடிகளார் பிரசங்கித்த கிறித்துவ தத்துவமே வெற்றி பெற்றது. யேசுவின் குடும்பத்தாரும், சீடர்களும் தனிமைப்படுத்தப் பட்டனர். இவ்விபரங்களைப் பவுல் அடிகளார் எழுதிய நிருபங்களில் காணலாம்.[87] இவைகளில் அன்னை மேரி, மேரி மக்தாலின், ஜேம்ஸ் ஆகியோர் அடங்கிய ஜெருசலேம் குழு நடவடிக்கைகளை (பார்க்கவும் பிலிப்பி *3:18 - 20* மற்றும் I தீமொத்தேயு *6:20*) அவர் கண்டிப்பதைக் காணலாம். கலாத்தியர்களுக்குப் பவுல் அடிகளார் எழுதிய கடிதங்களிலும் இக்கருத்துக்கள் காணப்படுகின்றன. அவைகளில் சில:

அதிகாரம் - 1 வசனம் 6

பவுல் அடிகளார் தன்னையும், தான் உபதேசிக்கும் சுவிசேஷத்தையும் அன்னை மேரி குழுவினர் நிராகரிப்பதைக் கண்டிக்கின்றார் (பிலிப்பியர் *4:9* ஆகியவற்றிலும் இக்கருத்தை காணலாம்).

வசனம் 7

'சிலர் உங்களைக் கலகப்படுத்திக் கிறித்துவின் சுவிசேஷத்தை புரட்டுத்தனம் செய்கின்றனர்.'

வசனம் 8, 9ல்

பவுல் அடிகளார் தான் பிரசங்கிக்கும் சுவிசேஷத்தைத் தவிர வேறு எதுவும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடாது எனவும் அப்படிப் பிரசங்கிப்பவன் சபிக்கப்படுவான் என்றும் கூறுகின்றார்.

வசனம் 12ல்

தான் பிரசங்கிக்கும் சுவிசேஷம் மனிதனால் வழங்கப் பட்டதன்று, அதனை யேசு கிறிஸ்துவே தனக்கு (பரிசுத்த ஆவி மூலமாக) நேரடியாய் வழங்கினார் எனக் கூறியுள்ளார்.

வசனம் 13, 14, 15ல்

தான் யூதனாய், யூத சமயத்தில் இருந்தபோது யூத கலாச்சார வழிபாட்டு முறையையும் பாரம்பரியத்தையும் பின்பற்றி, தேவனாகிய யேசுவின் சபையாரைத் துன்புறுத்தியதாகவும், ஆனால் பின்னர் யேசு கிறித்து தன்னைத் தேர்ந்தெடுத்துப் புற நாட்டினருக்கு யேசுவின் கொள்கைகளைக் கொண்டு செல்ல நியமித்துள்ளதாகவும் அறிவித்தார்.

கலாத்தியர் அதிகாரம் இரண்டில் இப்பொருள் பற்றிப் பவுல் அடிகளார் சற்றுக் கூடுதல் விபரங்கள் தந்துள்ளார்.

வசனம் 4

தன்னையும் தன் குழுவினரையும் பழைய ஏற்பாட்டின் நியாயபிரமாணங்கள் கட்டுப்படுத்தாது என்றும், தங்களை யாரும் அடிமைப்படுத்த முடியாது என்றும், யேசு தங்களுக்குச் சுயாதீனம் அளித்துள்ளார் என்றும் அறிவிக்கிறார். தனது இயக்கத்தில் பக்கவாட்டில் நுழைந்த (யேசுவின்) சகோதரரையும் கண்டிக்கின்றார்.

வசனம் 5ல்

ஜெருசலேம் குழுவினருடன் கீழ்ப்படிந்து போக மாட்டோம் என அறிவிக்கின்றார்.

வசனம் 11-14ல்

யேசுவின் குடும்பத்தினருக்கு நெருக்கமாய் இருந்த யேசுவின் சீடர்களான பேதுரு, யாக்கோப்பு, பர்னப்பாஸ் ஆகியோரைத் தனது இயக்கத்திலிருந்து பவுல் வெளியேற்றியது காணக்கிடக்கின்றது.

வசனம் 15, 16

ஒருவன் தனது நற்செயல்களால் நியாயவான் ஆக முடியாது. யேசுவைப் பின்பற்றும் விசுவாசத்தினாலேயே ஒருவன் நீதிமானாய் ஆக்கப்படுகின்றான்.

இவ்வாறு யேசுவின் குடும்பத்தினர் பிரசங்கித்த யூதசமய அடிப்படையிலான, 'அறிவுபூர்வமான' கிறித்துவம் அழிக்கப்

பட்டு நம்பிக்கை அடிப்படையிலான பரிசுத்த ஆவி - கிறித்துவம் வெற்றி பெற்றது. இன்று உலகெங்கும் அனுசரிக்கப்படுவது பவுலின் 'விசுவாச கிறித்துவமே' (Pauline christianity). இதனைச் சுருக்கமாக கிறித்துவம் எனத் தற்போது அழைக்கின்றனர்.

பவுல் அடிகளாரின் இறுதிக்காலம் எவ்வாறு அமைந்திருந்தது எனப் பைபிளில் கூறப்படவில்லை. அவர் ரோமபுரி அரசன் நீரோ காலத்தில் தண்டிக்கப்பட்டு தலை வெட்டப்பட்டு இறந்தார் எனக் கதைகள் கூறப்படுகின்றன. அவை உண்மையாய் விளங்குவதற்குக் காரணமில்லை. ஏனென்றால் முதலாம் நூற்றாண்டில் ரோமானியர்களின் காலனியாதிக்கத்தை எதிர்த்து கிளர்ந்த பாலஸ்த்தீன யூதர்களின் விடுதலை போராட்டத்தை நசுக்கவும், அதன் போராளிகளான ஸ்டீபன், ஜேம்ஸ், ஜுதா கம்லா ஆகியோரின் மரணத்திற்கும் காரணமாக விளங்கியவர் புனித பவுல் அடிகளார். ரோமானியர்களின் ஆட்சிக்கு ஆதரவு பெருக்கும் பொருட்டு, அவர்களின் எதிரிகளான எஸ்ஸின்ஸ்கள் அமைத்துள்ள வழிபாட்டு தலங்களை ரோமாபுரியை ஆதரிக்கும் தலங்களாக ஆக்கும் பொருட்டும், மத்திய தரைக்கடல் நாடுகளனைத் திற்கும், பவுல் குறுக்கும் நெடுக்குமாக பயணித்தார். இவரின் பாதுகாப்பு மற்றும் பயணச் செலவுகள் முழுமையும் ரோமாபுரி அரசர்களால் வழங்கப்பட்டது. இத்தகைய பெருமைக்குரிய வரை ரோமாபுரி அரசன் கைது செய்து மரண தண்டனை வழங்கினான் என்று கிறித்துவ வரலாறுகள் எழுதப்பட்டுள்ளது என்பது யதார்த்தத்திற்குப் புறம்பாய் உள்ளது. பவுல் அடிகளாரும் தனது அந்திம காலம் வரை ரோமானிய ஆட்சிக்கும் அதிகாரத்திற்கும் உறுதுணையாகவே இருந்துள்ளார். ரோமர்களுக்கு அவர் எழுதியுள்ளதாக கூறப்படும் கடிதத்தில் (ரோமா 13:1,6,7) அந்நாட்டு அரசனுக்கு உரிமையும், தீர்வையும் முறைப்படி செலுத்தப்படவேண்டும் என்றும் மக்களுக்கு ஆன்மிக வேண்டுகோள் விடுத்துள்ளார். எனவே கிறித்துவ உலகம் இதுபோன்ற வரலாற்று நெருடல்கள் செய்துள்ளது எனலாம். பவுல் பற்றி நான்கு சுவிஷேங்களிலும், அதன் சமகாலத்திய இதர வரலாற்று நூல்களிலும் எதுவும் கூறப்படாமல் மௌனமாய் இருப்பதால் பல மேற்கத்திய வரலாற்று ஆசிரியர்கள் இவர் ஓர் வரலாற்று நாயகர்

அல்ல என்றும், அவர் எழுதியுள்ளதாக கூறப்படும் கடிதங்கள் உண்மையானவை அல்ல என்றும் கூறியுள்ளனர்.[88]

பவுல் அடிகளாரும் தனது கடிதங்களில் யேசுவின் கன்னி பிறப்பு பற்றியோ அன்னைமேரி, ஜோசப், பெத்லேகம், நாசரேத் பற்றியோ, யேசுவின் 12 சிஷ்யர்களை பற்றியோ, ஜாண் ஞானஸ்தானிகள் பற்றியோ, மலைபிரசங்கம் பற்றியோ, உவமைகள் பற்றியோ, இறந்த லாசரஸ் என்பவரை உயிர்பித்தது பற்றியோ, நீரினை ஒயின் ஆக்கியதையும், நீரில் நடந்து சென்றது பற்றியோ, புயலை நிறுத்தியது பற்றியோ, யேசுவை சிலுவையிலடித்த நாள், நேரத்தையோ, கொல்கதா பரம்பு காடு பற்றியோ, மரண வாக்குமூலம் பற்றியோ, அவர் இறந்ததும் பிரேத குழிகள் திறந்து இறந்தோர் பழைய உரு பெற்று ஜெருசலேம் நகர தெருக்களில் நடந்து சென்ற அதிசயம் பற்றியோ எதுவும் குறிப்பிடவில்லை என்பது இதுபோது கவனிக்கத்தக்கது.[89]

கூட்டு வழிபாட்டுச் சபைகளும், குழுக்களும், வழிபாட்டு ஸ்தலங்களும் (Church), வழிபாட்டு ஸ்தல நிர்வாகிகளும், பிஷப்புகளும் ஆங்காங்கே உருவாகினர். ரோம சாம்ராஜ்யத்தின் மேற்குப் பகுதியில் பரவ ஆரம்பித்த கிறித்துவம் மத்தியதரைக் கடல் பகுதியைச் சுற்றியுள்ள (ரோமானிய ஆளுகைக்கு உட்பட்ட) நாடுகளுக்கும் பரவியது. மாற்றுச் சமய நூல்களும் கலாச்சார மையங்களும் இனித் தேவையில்லை என அழிக்கப்பட்டன. இவ்வாறு ஊர்களையும், நகரங்களையும் நாடுகளையும் சுத்தப்படுத்தும் பணியை மதம்மாறிய மக்கள் முன்நின்று நடத்தினர். எனினும் கிறித்துவத்தின் பொற்காலம் கி.பி. 312 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கியது.

கி.பி. 312

மேற்கு ரோம சாம்ராஜ்யத்தின் அரசனான கன்ஸ்டன்டைன் (Constantine) பதவிக்கு வரும் பொருட்டுப் பல்வேறு குற்றங்களையும் கொலைகளையும் செய்தவன் என்பதை ஏற்கெனவே பார்த்தோம். அரசன் மக்ஸன்டியஸ் (Maxentius) என்பவரைப் போரில் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவன் தன்னுடைய போர் வீரர்களை உற்சாகப்படுத்த ஓர் உபாயத்தைக் கைக்கொண்டான்.

வீரர்களின் கேடயத்தில் கிராஸ் (cross) சின்னத்தைப் பொறிக்கச் செய்தான்.[90] கிராஸ் சின்னம் அப்போதைய ஹெலினிய மதத்தின் சின்னமாக இருந்தது. போரில் கன்ஸ்டன்டைன் ராணுவம் வெற்றிபெற்றது. போரில் கிடைத்த வெற்றி யேசு கிறிஸ்துவின் சிலுவைப்பாட்டைக் கேடயத்தில் வரைந்ததாலே எனக் கிறித்துவ மதகுருமார்கள் அரசனிடம் உறுதிபடக் கூறினர். அரசனும் தான் பெற்ற வெற்றி யேசுவினால் பெறப்பட்டதே என நம்பினான்.

கி.பி. 313

கிழக்கு ரோம சாம்ராஜ்ய அரசன் லிசினியஸ் (Licinius) மற்றும் மேற்கு சாம்ராஜ்ய அரசன் கன்ஸ்டன்டைன் இருவரும் சந்தித்து அதிசய வெற்றியை அளித்த கிராஸ் சின்னத்திற்கு அதிபதியான கிறித்துவத்தை ஒரு சமயமாக அங்கீகரித்து அதற்கு உதவிட ஓர் அறிக்கை வெளியிட்டனர். அவ்வறிக்கை மிலான் பிரகடனம் (Milan edict) என அழைக்கப்பட்டது. மிலான் பிரகடத்தின் மூலம் அதுவரை ஒரு கோட்பாடாகயிருந்த தத்துவங்கள் கிறித்துவ மதமாக மாற்றம் பெற்றது. புதிதாக தோன்றிய இச்சமயம் தனது தனித்தன்மையை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டது. அதற்கு எளிதான வழி இதர சமயங்களை இகழ்வதும் கோவில்களை அழிப்பதுமே சிறந்தது என சமயகுருக்கள் முடிவுக்கு வந்தனர். அவ்வாறே செய்திடவும் துணிந்தனர்.[91]

கி.பி. 314

அன்சிரா எனும் நகரில் (தற்போதைய துருக்கியின் தலைநகர் அங்காரா) நடைபெற்ற கிறித்துவக் குழுவினரின் கூட்டத்தில் அப்போது பிரபலமாயிருந்த ஆர்டிமிஸ் எனும் அம்பாள் வழிபாடு மீது அரசு உதவியுடன் கண்டனங்கள் எழுப்பப்பட்டன.

கி.பி. 324

பேரரசன் கன்ஸ்டன்டைன் கிறித்துவ சமயத்தை, ரோமானிய அரசின் சமயமாக அறிக்கையிட்டான். மாற்றுச் சமயத்தினரை (ஹெலன் சமயத்தினரை) ஆத்தோஸ் பகுதியிலிருந்து வெளியேற்றி அப்பகுதிகளில் இருந்த கோவில்களை இடிக்க உத்தரவிட்டான். திதிமா பகுதியிலிருந்த அப்பலோ கடவுளின் கோவிலும் அழிக்கப்பட்டது.

கி.பி. 326

தன்னுடைய தாயார் விருப்பத்திற்கு இணங்கிக் கன்ஸ்டன்டைன் ஜெருசலேம், அன்டோலியா பகுதியிலிருந்த இறைவன், இறைவி கோவில்களை இடித்துத் தள்ள உத்தரவிட்டான். அத்துடன், எதிர்த்துச் செயல்பட்ட தன்னுடைய மனைவி பாஸ்ட்டா (Fausta), மகன் கிறீஸ்பஸ் (Crisbus) ஆகியோரையும் கொன்றான்.

கி.பி. 330

கன்ஸ்டன்டைன் தன் பெயரில் கான்ஸ்டான்டிநோபிள் எனும் நகரத்தை அமைத்தான். அதில் கிறித்துவர்கள் மட்டுமே வசிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டான். புதிய நகரம் அமைக்கப் பல கோவில்களின் செல்வங்கள் அபகரிக்கப் பட்டன, மற்றும் கோவில் தூண்களும் உபயோகிக்கப்பட்டன. இப்போது இந்நகரம் இஸ்தான்புல் எனும் பெயரில் துருக்கி நாட்டில் உள்ளது.

கி.பி. 335

ரோமானியப் பேரரசு பகுதியில் வாழ்ந்த குறிசொல்லு வோர், ஆருடம் சொல்வோர் வருங்காலம் உரைப்போர், சோப்பட்ரஸ் (Sopatros) போன்ற தத்துவ ஞானிகள் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

கி.பி. 337

பேரரசன் கன்ஸ்டன்டைன் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையானான். மரணப்படுக்கையின் போது அவன் கிறித்துவ சமயத்திற்கு மதமாற்றம் செய்யப்பட்டான். அவன் அதுவரை அந்நாட்டின் ஹெலனிச மதத்தில் பெயரளவிற்கு மட்டுமே சார்ந்திருந்தான்.

கி.பி. 337-350

ரோமானியப் பகுதியில் புறச் சமயத்தவர்கள் தீவிரமாய் அடக்கி ஒடுக்கப்பட்டனர்.

கி.பி. 353

உருவ வழிபாடு செய்பவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

கி.பி. 354

கோவில்கள் அழிக்கப்பட்டு, பூஜாரிகள் கொல்லப் பட்டனர். சமய வாசகசாலைகள் தீயிட்டு அழிக்கப்பட்டன (யேசுவின் சுவிசேஷங்களைத் தவிர இதர சமய புத்தகங்கள் நாட்டிற்குத் தேவையில்லை என எண்ணினர்).

கி.பி. 356

உருவ வழிபாடு செய்பவர்களைக் கொல்ல மீண்டும் ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கி.பி. 357

தேவபிரசன்னம் பார்த்தலும், ஜாதகம், கைரேகை பார்த்தலும் தடைசெய்யப்பட்டன.

கி.பி. 359

தற்போது சிரியா நாட்டிலுள்ள ஸ்கைதோபோலிஸ் (Skythopolis) நகரில், கிறித்துவர்கள் தங்களது முதலாவது மரண முகாமை (death camp) நடத்தினர். ரோமராஜ்யத்தில் எஞ்சியிருந்த புறச் சமயத்தினர் அங்குக் கொண்டுவரப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

கி.பி. 355-363

இக்காலகட்டத்தில் மேற்கு ரோமானிய பேரரசனாக விளங்கியவர் ஜூலியான் என்பவர் (Flaius Claudius Julianus). இவர் கிறித்துவ சமயத்திலிருந்து ஹெலனிய மதத்திற்கு மதம் மாறினார். சமய இலக்கியங்களிலும், தத்துவங்களிலும் கவிதைகள், கட்டுரைகள் எழுதுவதிலும் பெரும் ஆர்வம் கொண்ட இம்மன்னன் கிறித்துவ சமயம் உண்மைபூர்வமானது அல்ல எனப் பல நூல்களும் கவிதை தொகுப்புகளும் வெளியிட்டான். அதே நேரத்தில் ஹெலினிய கடவுள்கள் மீது பல தோத்திரப் பாடல்களையும் வெளியிட்டார். கிறித்துவப் பிஷப்புகளுக்குப் பல கேள்விக் கடிதங்களும் எழுதினான். எனினும் இப்பேரரசன் பெர்சியா நாட்டின்மீது போர் தொடுத்த நேரத்தில் மறைந்திருந்த (கிறித்தவன் ஒருவனால்?) போடப்பட்ட அம்பு தைத்து உயிரிழந்தான். மரண படுக்கையின்போது ‘கலிலி நாட்டுக்காரனே (இயேசு கிறித்துவே) நீ என்னை இந்த ஜன்மத்தில் கொன்றுவிட்டாய், ஆனால் உன்னை அழிக்க நான் மீண்டும் இவ்வுலகிற்கு

வருவேன்' என்று கூறித் தன் உயிரை விட்டதாக வரலாற்றாசிரியர்கள் பலர் பதிவு செய்துள்ளனர். இத்துடன் ரோம் சாம்ராஜ்யத்தில் ஹெலன் சமயத்தை (பேகான் சமயம் என்றும் அழைக்கப்பட்டது) மீண்டும் உயிர்ப்பிக்கும் முயற்சி தோல்வியடைந்தது.

கி.பி. 364

அண்டியோச் (Antioch) நகரிலிருந்த சமயவாசக சாலை எரியூட்டப்பட்டது. தற்போதைய ஈராக், சிரியா நாட்டுப் பகுதியிலிருந்த பூர்வீக சமயத்தைச் சார்ந்தோர் கண்டுபிடிக்கப் பட்டுக் கொல்லப்பட்டனர்.

கி.பி. 370

கிழக்கு ரோமானிய நகரங்களில் புறமதத்தினர் அதிகமாக இருந்த பட்டிணங்கள் எரிக்கப்பட்டன. மடங்களும், ஆஸ்ரமங்களும் அழிக்கப்பட்டன. பூஜாரிகள் உயிருடன் எரிக்கப்பட்டனர்.

கி.பி. 398

கிறித்துவ குருமார்கள் அங்கீகரிக்காத புத்தகங்களைப் படிப்பது தடைசெய்யப்பட்டது.

கி.பி. 400

பிஷப் நிஸிட்டாஸ் என்பவர் விசாய் எனும் நகரிலிருந்த புறச்சமயத்தினரைக் கட்டாய மதமாற்றம் செய்தார்.

கி.பி. 401-405

பாலஸ்தீனத்தில் காஸா பகுதிகளிலிருந்த புறச்சமயக் கோவில்கள் இடிக்கப்பட்டன. கிறித்துவர்கள் புறசமயத்தினருடன் தொடர்புவைத்திருப்பது தடை செய்யப்பட்டது. தொடர்பு வைத்திருந்தோர் ஊர்விலக்கும், சமய விலக்கும் செய்யப்பட்டனர்.

கி.பி. 406

சைப்ரஸ் தீவிலிருந்த புறசமயக் கோவில்கள் இடிக்கப் பட்டன.

கி.பி. 415

எகிப்து நாட்டின் அலெக்ஸாண்டிரிய நகரில் 'ஹிபாட்டியா' எனும் அழகுமிக்க இளம்பெண் வாழ்ந்து

ஹிபாட்டியா அழகும் அறிவுமிக்க எகிப்திய பெண்

வந்தார். இவர் ஹெலன் சமய தத்துவ மேதையாகவும் சிறந்த கவிஞராகவும் விளங்கினார். அவரது செயல்கள் யேசு பெருமானின் போதனைகளுக்கு எதிரானது என அந்நாட்டு பிஷப் 'சிரில்' என்பவர் கருதி அப்பெண் மணியைக் கொலை செய்ய உத்தரவிட்டார். பிரயாணம் முடிந்து வண்டியிலிருந்து இறங்கிய அப்பெண் கொலை செய்யப்பட்டு அவளின் மாமிசம் துண்டு துண்டாக வெட்டப்பட்டு நகரெங்கும் வீசப்பட்டது.[92]

வட ஆப்பிரிக்க நாடுகளிலுள்ள அனைத்து கோவில்களும், சிலைகளும் உடைக்கப்பட்டன. இந்நாடுகளிலிருந்த கோவில் பூஜாரிகள் சிலுவையில் அடிக்கப்பட்டும் (அல்லது) தீயிலிடப்பட்டும் கொல்லப்பட்டனர்.

கி.பி. 429

கிரேக்க நாட்டிலிருந்த புராதனக் கோவில்களும், கலாச்சார மையங்களும் அழிக்கப்பட்டன. அழிக்கப்பட்ட கோவிலில் பிரதானமானது 'அத்தினா' எனும் தேவிக்கான கோவில்.

கி.பி. 438

ரோமானிய நாட்டில் பிளேக் நோய் பரவி ஆயிரக்கணக்கானோர் செத்து மடிந்தனர். தெய்வ குற்றமும் நிந்தனையுமே இதற்கான காரணம் என அறிவதற்குப் பதிலாக, எஞ்சியிருக்கும் சாத்தான் வழிபாட்டுக்காரர்களே இதற்குக் காரணம் என அறிவிக்கப்பட்டு, எஞ்சியிருந்த புறசமய மக்கள் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

கி.பி. 440-450

ஏதென்ஸ் மற்றும் ஒலிம்பியா நகரிலிருந்த பெரும் புராதன கலைக்கோவில்களும், நினைவுச் சின்னங்களும் அழிக்கப்பட்டன (இன்றும்கூட அழிவுபட்ட பெரும் கோவில்களின் எச்சங்களை இந்த நகருக்குப் பயணம் செல்வோர் காணலாம்).

கி.பி. 515

ஞானஸ்நானம் பெறுதல் ரோமானிய சாம்ராஜ்யத்தின் அனைத்து மக்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டது. அரேபியா பகுதியிலிருந்த ஜோரா நகரிலிருந்த தியான்டிரிட்டஸ் (Theandrites) எனும் தெய்வத்திற்கான பெரும் கோவில் இடிக்கப்பட்டு உருவ வழிபாட்டுக்காரர்கள் கொல்லப்பட்டனர்.

இவ்வாறாக ரோம ராஜ்யத்தில் மதத்தின் சார்பாக நடைபெற்ற வெறியாட்டம் சொல்லில் அடங்காது. மேலே சொல்லப்பட்டவை ஒரு சில மட்டுமே. முழுமையும் சொல்லப்படவேண்டுமெனின் இதற்கெனத் தனியாக நூல் எழுதப்பட வேண்டிய அளவு செய்திகள் உள்ளன. சமயத்தின் பெயராலும் ஏக இறைவன் பெயராலும் நடைபெற்ற இக்கொடுஞ்செயல்களால் பண்டைய சுமேரியா, எகிப்திய, கிரேக்க, ரோமானிய கலாச்சாரமும் வழிபாட்டு முறையும், பண்டைய நாகரிக எச்சங்களும், அவற்றின் பல நிறங் கொண்ட மலர்க் கொத்துப் போன்ற அழகும், சிதைக்கப்பட்டு, ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்க நாடுகளின் பெரும் பகுதிகள் வெட்ட வெளியாய் ஆயின. மக்களின் அலரல், அழுகை, ஏக்கம் அவர்களின் சாபம், முடிவில்லாக் கொலைகள், தீயிடல், சித்திரவதைகள், கோவில் இடிப்புகள், பூஜாரிகளைத் தீயிலிடல், புராதன சின்னங்களை அழித்தல் ஆகியவை, கிறித்துவம் உலகை ஆளத் துவங்கிய நாளிலிருந்து தொடங்கியது. சாத்தான் வழிபாட்டை அழிப்பதாக எண்ணிய சமய குருமார்கள் தாங்களே சாத்தான் ஆகிவிட்டனர். இப்பேரழிவிலிருந்து தப்பியவை எகிப்து நாட்டின் பிரமிடுகள் மட்டுமே. பிரமிடுகளை அழிக்கும் தொழில்நுட்பம் இக்கொடுமையாளர்களுக்கு அவ்வமயம் தெரியாதிருந்ததால் அவை தப்பின.

3:9. பரிசுத்த வேதாகமம் அங்கீகரிக்கப்படல்

பேரரசன் கன்ஸ்டன்டைன், பவுல்அடிகளார் போதனைகளைக் கொண்டு கிறித்துவ சமயத்தை உருவாக்கி அதனை

அரசின் மதமாக ஆக்கி அதற்கு மதிப்பும், மரியாதையும் செல்வாக்கும் வழங்கினான். எனினும் அம்மதத்திற்குத் தனி வேத நூல்களோ தத்துவங்களோ அவ்வமயம் இல்லாதிருந்தது. யேசுவின் வாழ்க்கையினையும் போதனைகளையும் கூறுவதாகப் பல்வேறு நூல்கள் தோன்றியிருந்தன. அந்நூல்களுள் எவை உண்மையானவை, பின்பற்றகூடியவை, எனத் தெரியாமல் மக்களும் திருமறையாளர்களும், பெரும் குழப்பத்திலிருந்தனர். எனவே குழப்பங்களை நீக்கிடவும், மதப் பிரிவுகளை ஒற்றுமைப்படுத்திடவும் கன்ஸ்டன்டைன் விரும்பினார்.[93] இதன்பொருட்டு கி.பி. 325 ம் ஆண்டில் நைசியா எனும் பட்டணத்தில் ஒரு திருச்சபையைக் கூட்டினார். இந்நகரம் தற்போதைய துருக்கி நகரில் இஸ்னிக் எனும் பெயரில் உள்ளது.

நைஸியா நகரம் அப்போதைய ஆதி கிறித்துவ நாடுகளான கிரிஸ், துருக்கி, ஈரான், ஆசியா, பாலஸ்தீனம், எகிப்து, லிபியா, ஜியார்ஜியா, ஆர்மினியா, ரோம் ஆகியவற்றிற்கு மையமாக அமைந்துள்ளது. இம்மாநாட்டிற்கு 1800 பிஷப்புகள் அழைக்கப்பட்டிருந்தனர்.[94] ஒவ்வொரு பிஷப்பும் இரண்டு பாதிரியார்களையும் மூன்று உதவியாளர்களையும் அழைத்து வரலாம் என ஆணையிட்டிருந்தான். ஆனால் மாநாட்டில் 300 பிஷப்புகள் மட்டுமே பங்கேற்றனர். பங்கேற்ற பிஷப்புகளின் பிரயாணச் செலவை மன்னனே ஏற்றான். பங்கேற்பாளர்களுக்குத் தங்கும் வசதியும் செய்து கொடுக்கப்பட்டது. கி.பி. 325 மே 20ல் தொடங்கி ஒரு மாதம் இம்மாநாடு அரண்மனை வளாகத்திலே நடைபெற்றது.

மாநாட்டின் நோக்கம்

1. மனித குமாரன் யேசுவுக்கும் வானிலுள்ள பிதாவுக்குமான தொடர்பை விளக்குதல்.

2. ஏசு கிறிஸ்து வானுலக பிதாவின் மகனா அல்லது பூமியில் பிறந்த ஜோசப் அவர்களின் வளர்ப்பு மகனா அல்லது பூமியில் வாழ்ந்த ஒரு மகான் என்பதா என முடிவு செய்தல்.

மாநாட்டின் முடிவிற்கு அனைத்துப் பிஷப்புகளும் உடன்பட வேண்டும் எனவும், உடன்படாதவர்கள் இலியா எனும் தீவுக்கு நாடு கடத்தப்படுவார்கள் எனவும் அரசன் அறிவித்தான். மாநாட்டின் இறுதியில் கீழ்க்கண்ட

தீர்மானங்கள் ஓட்டெடுப்பு, மூலம் நிறைவேற்றப்பட்டன. அவைகளே நைஸியா நகரத் திருச்சபைப் பிரகடனம் என அழைக்கப் படுகின்றது.

மாநாட்டின் பிரகடனம்[95]

1. கிறிஸ்துவே, ஒரே இறைவன் தந்த ஒரே இறைவன், ஒளியிலிருந்து பிறந்த ஒளி, உண்மையான இறைவனிடமிருந்து பெறப்பட்ட உண்மையான இறைவன்.

2. இறைப்பொருள் மூலம் பூமியில் பிறந்தவரே இயேசு. அவர் இறைவனால் செயற்கையாகச் செய்யப்பட்டவர் அல்லர்.

மேற்கண்ட அறிவிப்பிற்கு பிஷப் ஆரியாஸ் தலைமையில் எதிர்ப்பு ஏற்பட்டது. யேசு ஒரு மகான் தானே தவிர அவர் கடவுளின் குமாரன் அல்லர் என அவர் கூறினார். இவ்வாறு எதிர்த்தவர்கள் நாடு கடத்தப்பட்டனர். அவர்களின் வேறுபட்ட தத்துவ விளக்க உரைகள் கைப்பற்றப்பட்டு எரிக்கப்பட்டன. இரகசியமாக அதனைப் படிப்பவர்களும் கண்டுபிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

நியாசியா மாநாட்டு இதர தீர்மானங்கள்

1. அதுவரை கிறித்தவர்களுக்கு ஓய்வு நாளாக இருந்த (கர்த்தர் உலகைப் படைத்த பின் ஓய்வெடுத்த நாள்) சனிக்கிழமையை மாற்றி அன்றைய ரோமாபுரி சமயத்தின் (பேகான் சமயத்தின்) வார விடுமுறை நாளாகிய ஞாயிற்றுக் கிழமையே கிறித்துவர்களின் ஓய்வு நாள் என்று அறிவிக்கப்பட்டது (பேகான் சமயத்தினரின் வாராந்திர விடுமுறை நாள் அபரிக்கப்பட்டது). இப்போது கூட Seventh Day Adventist பிரிவினருக்குச் சனிக்கிழமையே விடுமுறை நாள்.[96]

2. ரோமர்களின் பேகான் சமயத்தவரின் (ஹெலன் சமயத்தினர்) அன்றைய சூரியவழிபாட்டின் சமய அடையாளம், குறுக்கிலும் நெடுக்கிலும் செல்லும் கடவுளின் (சூரிய) ஒளிக் கற்றை. அது கிறித்துவர்களின் சிலுவை அடையாளமே என அறிவிக்கப்பட்டது. அதுவரை கொலைக் கருவியாக கருதப்பட்ட சிலுவை முதன் முதலில் புனிதமான கருவியாகக் மகிமைப்படுத்தப்பட்டது (பேகான் சமயத்தினரின் சமய சின்னமும் பறிபோனது).[97]

பகுதி - 4

கிறித்துவக் காப்பியம்

பகுதி-4 : பொருள்

பக்கம்

4.1 கிறித்துவமும் விசுவாசமும் 135

4.2 சாத்தான் தத்துவம் 140

4.3 கர்த்தரும் சாத்தானும் நேருக்கு நேர் 143

4.4 பலி செலுத்துதல் 146

4.5 இந்து சமயத்தில் பலி கோட்பாடு 152

4.6 சிலுவையேற்றம் 155

4.7 நியாயத்தீர்ப்பு நாள் 160

4.8 எதிர்மறையான கருத்துக்கள் 168

4.9 ஏக இறைவன் பெயரில் நடைபெற்ற சமய யுத்தங்கள் 172

4.10. திருச்சிலுவை யுத்தம் 177

4.11 பெண்வேட்டை 186

4.12 தெய்வீக விசாரணை 192

4.13 அடிமை வியாபாரம் 198

4.14 போப் ஆண்டவர் 202

4.15 கிறித்துவப் பிரிவுகள் 209

4.16 முப்பதாண்டு போர் 216

4:1. கிறித்துவமும் விசுவாசமும்

பேரரசன் கன்ஸ்டன்டைன் ஆட்சியின் போது கிடைக்கப் பெற்ற அதிகாரத்தைக் கொண்டு ரோமானிய கிறிஸ்துவ மதத்தினர் நியாசி பிரகடனத்திற்கு வேறுபட்ட கொள்கை கொண்ட கிறிஸ்துவர்களையும் மாற்று மதத்தினரையும் வேட்டையாடிக் கொன்றனர். எனினும் அவ்வப்போது கிறிஸ்துவ மதத்திற்கு எதிராகச் சரித்திரபூர்வமான மற்றும் ஆதாரபூர்வமான கருத்துக்கள் மறைவாக எழுந்து கொண்டே இருந்தன. அவற்றில் சில.

1. யேசு ஓர் முழுமையான கடவுள் அல்லர் என்றும் அவர் வாழ்க்கை முற்றுப் பெறவில்லை என்றும் உலகில் நடைபெறும் தவறான செயல்களுக்கு அவர் தான் காரணம் என்றும் அதனைச் சரி செய்யவே வேறு ஒரு இரட்சகர் (இரண்டாவது வருகை) இன்னும் தேவைப்படுகிறது எனவும் அவர்கள் கூறினார்கள்.

2. உங்களில் சிலர் இறப்பதற்கு முன்னரே நான் இரண்டாவது வருகை செய்வேன். மனிதர்களை நியாயத் தீர்ப்புச் செய்வேன் என்றவர் (நைசியா மாநாடு வரை) 300 ஆண்டுகள் ஆகியும் வரவில்லை.

3. யேசு சிலுவையில் அடிபட்டு உயிர்விட்டபோது ரோமானிய அரசர்களின் ஆளுமையின் கீழ் இருந்த பாலஸ்தீனத்தில் நிலம் நடுங்கிப் பூமி பிளந்ததையும், கல்லறைகள் திறந்து மரித்தோர் பாலஸ்தீன வீதிகளில் நடந்து சென்றதாகக் கூறப்படுவதையும் (மத் 27:51-53) அன்று கண்ணால் கண்டவர்கள் யாரும் இல்லர்.[1] அந்த அதிசயத்தை அன்று பாலஸ்தீன யூதர்களும் அவர்களை ஆண்டு வந்த ரோமானியர்களும் கண்டிருந்தால் கிறித்துவம் அன்றே முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும்.

4. பாலஸ்தீனத்திற்கு அருகிலுள்ள ஆசியா மைனர் (ஈரான், ஈராக்) எனும் பகுதியில் வாழ்ந்த ஒரு பெரும் பொருளாளர் மார்சியோன் என்பவர். தீவிரமான கிறிஸ்துவர். தன் சொந்தச் செலவிலே கிபி. 140ல் ரோமாபுரியில் ஒரு சர்ச் கட்டித் தந்தவர். பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படும் தேவன்

எரிச்சலுள்ளவராயும் கோபப்படுகிறவராயும் இருப்பதால் அவர் மேலான கடவுளாக இருக்க முடியாது. எனவே யூதர்களின் பைபிளுக்கும் கிறித்துவத்திற்கும் தொடர்பு கூடாது என அறிவித்தார்.[2] மத்தேயு, மாற்கு, யோவான், எழுதிய சுவிசேஷங்களையும் லூக்காவின் சுவிசேஷத்தில் சில பகுதிகளையும் போலியானவை என நீக்கினார். தீமொத்தேயு எனும் புதிய ஏற்பாட்டில் வரும் பகுதியையும் மறுத்தார். இதனால் தடித்த பைபிள் ஒரு சில பக்கங்களைக் கொண்ட நூலாகச் சுருங்கிப் போய் விட்டது.[3]

5. இவற்றைத் தவிர இயேசுவின் பிறப்பு பற்றியும் இயேசு கடவுளின் சொந்த மகனா அல்லது வளர்ப்பு மகனா, கன்னி மேரிக்குப் பிறந்தது கிறிஸ்துவா அல்லது யேசுவா? எனப் பல கேள்விகளுக்குக் கிறிஸ்துவம் அக்கால கட்டத்தில் பதில் கூற வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது.

இதுபோன்ற அறிவுசார்ந்த கேள்விகளுக்கு அறிவு பூர்வமான பதில்களைக் கிறிஸ்துவத்தால் வழங்க முடியவில்லை. இத்தகைய இக்கட்டான நிலையிலிருந்து விடுபடக் கிறித்துவம் 'விசுவாசம்' எனும் தத்துவத்தைத் தனது எதிரிகளுக்குப் பதிலாகத் தந்தது.

கான்ஸ்டான்டிநோபிளில் பிறந்த விசுவாசம் (கி.பி. 381)

கான்ஸ்டான்டிநோபிள் நகரில் கிபி. 381ல் பிஷப்புகளின் மற்றொரு சமய கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. அதில் கிறிஸ்துவத்தின் எதிரிகளுக்குப் பதில் கூறுவதற்காகவும், கிறிஸ்துவர்களைத் திடப்படுத்துவதற்காகவும் ஒரு விசுவாசப் பிரமாணம் உருவாக்கப்பட்டது. தங்களால் பதில் கூற முடியாத சமயம் சார்ந்த கேள்விகளுக்கெல்லாம் 'அது எங்கள் விசுவாசம்' எனக் கூறுவது Creed of Constantinople என்பதிலிருந்து பெறப்பட்டதே. இவ்விசுவாச அறிவிப்பு தற்காலத்திலும் வேத கோவில்களில் வாசிக்கப்படுகிறது. ஆங்கிலத்திலுள்ள இவ்வறிவிப்பு தமிழில் கீழ்க்கண்டவாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

'விண்ணகத்தையும், மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகிறேன். அவருடைய ஒரே மகனாகிய இயேசு கிறிஸ்துவை நம்புகிறேன். இவர் தூய ஆவியால் கருவுற்றுத் தூய கன்னி

மரியாவிடமிருந்து பிறந்தார். பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டுச், சிலுவையில் அறையப்பட்டு இறந்து அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். விண்ணகம் சென்று எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் வலப் பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு வழங்க மீண்டும் வருவார். தூய ஆவியரை நம்புகிறேன். தூய கத்தோலிக்க திருச்சபையையும், புனிதர்களுடைய சமூக உறவையும் நம்புகிறேன். பாவ மன்னிப்பை நம்புகிறேன். உடலின் உயிர்ப்பை நம்புகிறேன். நிலைவாழ்வை (சொர்க்கத்தில் கிடைக்கும் நித்திய ஜீவனை) நம்புகிறேன். ஆமென்.'

இந்த விசுவாசப் பிரமாணம் மூலம் முன்னால் எழுதப்பட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் கீழ்க்கண்டவாறு பதிலளிக்கப்பட்டு விட்டது.

1. முழு முதற் கடவுள் கர்த்தர்தான்.

2. யேசு, கர்த்தரின் சொந்த மகன் (சுவிகார புத்திரன் அல்லன்), மனிதர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மகானும் அல்லர்.

3. இயேசு, பரிசுத்த ஆவியால் பிறந்தவரே. கர்த்தர் - இயேசு - பரிசுத்த ஆவி எனும் மூவொருமை தத்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

4. யேசுவும் எதிர்பார்க்கப்பட்ட கிறித்துவும் ஒருவரே. அவரே சிலுவையில் அறையப்பட்டார். எனவே கர்த்தரே யேசு, யேசுவே கிறிஸ்து. இதன் அடிப்படையில் கர்த்தராகிய ஏசு கிறிஸ்து எனும் பைபிள் வாக்கியம் வழக்கத்திற்கு வந்தது.

5. இயேசு, உயிர்ப்பித்ததும், அவர் தற்போது பரலோக ராஜ்யத்தில் தம் தந்தையின் வலப் பக்கத்தில் இருப்பதாகவும், நியாயத் தீர்ப்புக்கான காலத்தில் அவர் மீண்டும் வருவார் என்பதும் 'உயிர்ப்பித்தல்' நடக்கும் என்பதும் விசுவாசமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பழைய ஏற்பாடு

பைபிளில் உள்ள பழைய ஏற்பாடு புத்தகங்கள் கிறிஸ்துவின் காலத்திற்கு முன்பே எழுதப்பட்டாலும் அவை இன்றைய வடிவில் முன்பு இல்லை. இஸ்ரேல் நாட்டின்

இறைவனைப் பற்றிய பல நூல்கள் இருந்தன. ஆனால் அவைகளுக்கு ஒருங்கிணைந்த வழிபாட்டிற்கான புத்தகம் எனும் அங்கீகாரம் அப்போது கிடைக்கவில்லை. கி.பி. 90ம் ஆண்டு யவ்னே (Yavneh) எனும் இஸ்ரேலிய நகரில் நடைபெற்ற சமய கவுன்ஸில் கூட்டத்தில் தீவிர விவாதம், எதிர்ப்பு, விட்டுக்கொடுத்தல், ஆதரித்தல், வாக்கெடுப்பு ஆகியன மூலம் பரிசீலிக்கப்பட்ட பல வழிபாட்டுப் புத்தகங்களில் 39 புத்தகங்கள் மட்டும் பழைய ஏற்பாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இவற்றினைத் தவிர, பரிசுத்த ஆவியால் குறிப்பிடப்பட்டுள்ள பல தீர்க்கதரிசன புத்தகங்கள் அன்றே இருந்துள்ளன. அவை யவ்னே நகரில் நடந்த சமய மாநாட்டில் வழிபாட்டிற்குரியதாக அங்கீகரிக்கப்படவில்லை. பழைய ஏற்பாட்டிலும் சேர்க்கப்படவில்லை. எனவே அவை அழிக்கப்பட்டன. ஆனால் அவை அன்றைய காலத்தில் இருந்தமைக்கான குறிப்புகள் பழைய ஏற்பாட்டில் பல்வேறு வசனங்களில் காணப்படுகின்றன. அவற்றைக் கீழ்க்கண்ட பட்டியலில் காணலாம்.

	நீக்கப்பட்டதீர்க்க தரிசன புத்தகத்தின் பெயர்	இப்புத்தகம் இருந்தமைக்கான ஆதாரம் காணப்படுவது
1.	நாத்தர்ன தீர்க்கதரிசி புத்தகம்	நாளாகமம் II 9:29
2.	ஞானதிருஷ்டிகாரன் காத் பிரபந்தம்	நாளாகமம் 29:30
3.	யாசேரின் புத்தகம்	யேசுவா 10:13; II சாமுவேல் 1:18
4.	சாலமனின் நடவடிக்கைகள்	I ராஜாக்கள் 11:41
5.	அசியாவின் தீர்க்கதரிசனம்	II நாளாகமம் 9:29
6.	இத்தோ தீர்க்கதரிசனம்	II நாளாகமம் 9:29;12:15
7.	செமாயாவின் புத்தகம்	II நாளாகமம் 12:15
8.	உசியாவின் நடவடிக்கைள்	II நாளாகமம் 26:22
9.	ஓசாயின் புத்தகம்	II நாளாகமம் 33:18
10.	சத்திய எழுத்து	டேனியல் 10:21
11.	உடன்படிக்கையின் புத்தகம்	யாத்திரகாமம் 24:7

12.	மர்மோனின் புத்தகம்	கும்ரான் குன்றின் குகைகளில் 1947ல் கண்டுபிடிக்கப்பட்டவை (எழுதப்பட்ட காலம் கிமு. 150-கிபி.ப70)
13.	மர்மோனின் உபதேசம்	
14.	மர்மோனின் உடன்படிக்கை	
15.	ஏனோக்கின் புத்தகம்	
16.	பரதீசு இழக்கப்பட்டுத் திரும்பப் பெறுதல் இதுபோன்று இன்னும் பல	

இப்புத்தகங்கள் அனைத்தும் அன்று யேசுபிரான் பேசிய அரமிக் மற்றும் எப்ரு மொழியில் இருந்தன. யேசுபிரான் பேசிய மொழியிலிருந்த மேற்கண்ட ஒரிஜினல் தீர்க்கதரிசன புத்தகங்கள் பைபிளிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. ஆனால் புற ஜாதியினரின் கிரேக்க மொழியிலிருந்த புதிய ஏற்பாட்டின் நகல்கள் பைபிளின் அங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. காரணம் என்ன?

புதிய ஏற்பாட்டிலுள்ள வசனங்கள், நடவடிக்கைக் குறிப்புகள் கடிதங்கள், வருங்கால தீர்க்கதரிசன விபரங்கள் (வெளிப்படுத்திய வசனங்கள்) ஆகியவை, அன்றைய காலத்தில் பல்வேறு பகுதிகளில் சுற்றித் திரிந்த ஏடுகளிலிருந்து ரோம் நகரில் கி.பி. 382லும், ஹிப்போ நகரில் 393லும், கார்த்தேஜ் நகரில் கி.பி. 397, 419 ஆகியவற்றிலும் நடந்த சர்ச் தலைவர்கள் கூட்டத்தில் அத்தியாயங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பைபிள் (பரிசுத்த வேதாகமம்) இறுதியாக்கப்பட்டது. அன்றைய பாலஸ்தீனத்தில் அரமிக் (Aramic) மொழியும் எப்ரு (Hebrew) எனும் யூதமொழியும் வழக்கத்திலிருந்தன. ஆனால் இன்று கிடைத்துள்ள புதிய ஏற்பாடு பிரதிகள் தொலை தூர நாட்டில் வழக்கத்திலிருந்த கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளது.[4]

யேசுவின் சம்பவங்கள் நடந்தது பாலஸ்தினத்தில் (?). ஆனால் அவை புதிய ஏற்ப்ட’ாடாக எழுதப்பட்டது, மத்திய தரைக்கடலுக்கு அப்பால் பாலஸ்தினத்திலிருந்து 3000 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ரோமாபுரியில், அதுவும், அதன் அருகாமையிலிருந்த கிரேக்க நாட்டு மொழியில். இதன் விளைவாக கி.பி.1385ல் புதிய ஏற்பாடு எப்ரு மொழியில்

எழுதப்படும் வரை பாலஸ்தின யூதர்களுக்குத் தங்கள் குலச் செம்மல் யேசு என்பவர் கடவுளாக ஆக்கப்பட்டிருப்பதோ, அவரைப்பற்றி புதிய ஏற்பாடு எழுதப்பட்டிருப்பதோ தெரியாது. அதுபோன்று கிரேக்கத்தில் புதிய ஏற்பாட்டை எழுதிய நபர்களுக்கு யூத கலாச்சாரமோ, யூதவரலாறோ தெரியாது. எனவேதான் புதிய ஏற்பாட்டில் யேசு காலத்தில் அங்கு வாழ்ந்த எஸ்ஸின்கள் பற்றியோ, விடுதலை இயக்கம் பற்றியோ, நடைபெற்ற இரு பெரும் யூத விடுதலைப்போர் பற்றியோ, ஜெருசலேம் கோவில் அழிக்கப்பட்டது பற்றியோ குறிப்பில்லை.

எனவேதான் புதிய ஏற்பாட்டை வரலாற்றுப் பூர்வமானது என அறிஞர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

4:2. சாத்தான் தத்துவம்

யூதம், கிறித்துவம், இஸ்லாம் ஆகியவற்றில் ஆன்மா கொள்கை கிடையாது. வேதாகமத்தை எழுதிய மகான்கள் ஆன்மாவைப் பற்றி அறிந்திராமையால் உயிருள்ள மனிதனை மாமிசமும், ஆவியும் (spirit) உள்ள உருவமாகக் கருதினர். சுவாசம் நின்றுபோனால் ஆவி (உயிர் காற்று) போய்விட்டதாகக் கருதினர். இறந்த மனிதனின் உடலை யேசுவின் அடுத்த வருகையின்போது அது மீண்டும் ஜீவசுவாசம் வழங்கப்பட்டுக் கல்லறைகளிலிருந்து எழுந்திருக்கும்வரை, கல்லறையைப் பூசி மெழுகி, வெள்ளையடித்துப் பாதுகாக்க வேண்டும் என்பதே இம்மதத்தினரின் கொள்கை. ஆனால் இந்து சமயத்தின் உடல், உயிர் கொள்கை இவற்றிற்கு முழுவதுமாக வேறுபாடு உடையது. உடல் அழியக் கூடியது எனவே அது புதையுண்டோ, எரியூட்டியோ அழிக்கப்பட வேண்டும். ஆனால் உடலை இயக்கும் ஆன்மா அழிவில்லாதது. இந்து சமயத்தில் ஆவி அல்லது உயிர் ஒரு தனிப் பொருள் அன்று. உடலும் ஆன்மாவும் ஒருங்கிணைந்து இணக்கத்துடன் செயல்பட்டால் அதன் வெளிப்பாடு உயிர் எனவும், மேற்கண்ட இரண்டும் இணைந்து செயல்படாவிட்டால் அதனைப் பிரிவு, சாவு அல்லது மரணம் என்றும்

இந்து சமயம் அறுதியிட்டுக் கூறுகின்றது. ஆன்மாவைப் பற்றிய பல ஆய்வுகள் இந்திய முனிவர்களால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நடத்தப்பட்டு அவை வேதங்களின் அந்தமாக விளங்கும் உபநிஷதங்களில் பெருமளவில் பேசப்பட்டுள்ளது.

இத்தகைய ஆன்மா ஒருவனிடமிருந்து பிரிந்துவிட்டால் (மரணம் ஏற்பட்டு விட்டால்) அதனை நற்கதிக்குச் செலுத்துவதும், அடுத்த பிறவியின் தன்மையைத் தீர்மானிப்பதும், அவன் உயிருள்ள காலத்தில் செய்த நற்கிரியைகளும், சந்ததியினர் செய்யும் காடாற்றல் மற்றும் பிதுர்தானம் முதலிய கருமங்களும் என இந்து சமயத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளன. இறந்தோருக்கும், வாழும் சந்ததியினருக்கும் திவசம் செய்வது மூலமாக ஆன்மா வழித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. முன்னோர்களின் பெயர்கள் (தாத்தா பெயர் பேரனுக்கும்) குழந்தைகளுக்கும் சூட்டப்பட்டது. கிறித்துவத்தில் இது போன்ற பிறவிகளுக்கிடையே ஆத்மார்த்த தொடர்புகள் இன்மையால் ஒவ்வொரு மனிதனும் இப்பரந்த உலக வாழ்க்கையில் தனிமையாகவே காட்சியளிக்கின்றான். எனவே அவன் இவ்வுலகில் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்குத் தற்போதைய வாழ்விலே காரணம் தேடவேண்டியுள்ளது. இச்சூழலிலிருந்து தோன்றியதே கிறித்துவத்தின் கர்த்தர் - சாத்தான் கொள்கை.

இக்கொள்கையின்படி 'மனித வாழ்க்கையில் ஏற்படும் நன்மைகள் எல்லாம் கர்த்தரால் அருளப்பட்டவை, தீமைகள் அனைத்தும் சாத்தானால் ஏற்படுபவை'. இக் கோட்பாடு ஐரோப்பாவின் இருண்ட காலத்தில் மதகுருமார்களால் மிகவும் பிரபலப்படுத்தப்பட்டது. தனிமனித வாழ்க்கையில் ஏற்படும் நன்மை, தீமைகள், அவனின் உடலுக்கு வெளியே, புறப்பகுதியில் கர்த்தருக்கும், சாத்தானுக்கும் இடையில் நடைபெறும் யுத்தத்தின் வெளிப்பாடே என்றும், அத்தகைய நல்லது கெட்டது விளைவதற்கு மனிதன் எவ்விதத்திலும் பொறுப்பானவன் அல்லன் என்றும், இத்தத்துவத்தின் மூலம் விளக்கப்பட்டது. இப்போர் மனிதனின் புறவாழ்வு மற்றும் மரணத்திற்குப் பிந்தைய பரலோக வாழ்வையும் பாதிக்க வல்லது எனவும் கூறப்பட்டது. இப்போரில் வெற்றி பெறவும், மறுமையில் நற்கதி அடையவும் கர்த்தரின் மேல் வைத்துள்ள

விசுவாசமே காரணி எனவும் பிரசங்கிக்கப்பட்டது. இவ்விசுவாசமின்றி, சுயநீதி அவனுக்கு எவ்வகையிலும் உதவிடாது எனவும் மக்களிடையே செய்திகள் பரப்பப் பட்டன. அத்துடன் ஒவ்வொரு மனிதன் வாழ்விலும் கர்த்தர் - சாத்தான் யுத்தத்தின் அடையாளங்கள் காணப்படும் என்பதும் ஒரு நம்பிக்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கிறித்துவத்தில், மனிதர் வாழ்வில் நடைபெறும் கர்த்தர் - சாத்தான் யுத்தத்தில், கர்த்தர் பூரண வெற்றி பெற்றதாகச் சரித்திரமே இல்லை. சாத்தான் செயல்களில் ஏற்பட்ட தீமைகள் அன்றி, கர்த்தர் செயலால் நன்மைகள் மட்டுமே பெறப்பட்ட மனித பிறவியே உலகில் இல்லை. கிறித்துவ சமயத்தினால் அத்தகைய ஒரு பரிபூரண மனிதனை உருவாக்கிட முடியாமை, கர்த்தரின் சர்வ வல்லமைக்கு ஒரு பெரும் கேள்விக் குறியாகவும், சாத்தானின் வல்லமையை நிலைநாட்டுவ தாகவும் மக்களால் உணரப்படுகின்றது. இயேசு கிறிஸ்து சிலுவையில் தனது சொற்ப வயதில் துயர மரணமுற்றதும், அதன் விளைவாகக் கன்னி மேரி முதலானோர்களுக்கு ஏற்பட்ட துயரமும், சாத்தானுடைய நடவடிக்கையால் ஏற்பட்டதே - (பார்க்கவும் யோவான் 13:2). பரிசுத்த ஆவியால் பிறந்து, பரிசுத்த ஆவியால் ஞான ஸ்நானம் பெற்று, அபிஷேகிக்கப்பட்டு, பின்னர் சிலுவையில் அறையப்பட்டு ஆவியை இழந்த யேசு, மரணித்த மூன்றாம் நாள் உயிருடன் மீண்டும் எழுந்தார் எனின் கல்லறையில் வைக்கப்பட்டிருந்த யேசுவின் பூத உடலுக்கு ஜீவ சுவாசத்தை வழங்கியவர், யார்? எப்போது? எனும் மர்ம முடிச்சை அவிழ்த்திடும் விபரம் புதிய ஏற்பாட்டின் சுவிஷேஷங்கள் எதிலும் தெளிவாக குறிப்பிடப் படவில்லை. யாருமே கண்டிராத, சிருஷ்டி காலத்தில், முதல் மனிதன் உலகில் தோன்றிய வரலாற்றை அதன் ஆதியாகமத்தில் முழுமையாக வருணனை செய்துள்ள பைபிள், மனித குல பார்வையில் வரலாற்றுக் காலத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் 'சிலுவையில் ஏற்பட்ட மரணம்' எவ்வாறு வெல்லப்பட்டது, சாத்தான் எவ்வாறு தோற்கடிக்கப்பட்டான், ஜீவ சுவாசம் யேசுவுக்கு எவ்வாறு கல்லறையில் வழங்கப்பட்டது என விவரமாகக் கூறவில்லை. இதனை முன்னிட்டுப் பல்வேறு, சர்ச்சைகளும், யூகங்களும், மறுப்புகளும் தோன்றியுள்ளன. இது சம்பந்தமாக 'யேசு

சிலுவையில் மரணிக்கவில்லை' எனவும், சிலுவையில் மரணித்தவர் வேறு நபர் என்றும் பல்வேறு கருத்துகள் கடந்த 2000 ஆண்டுகளாக உலகைப் பிடித்து ஆட்டி வருகின்றது. இது தொடர்பாக சமீபத்தில் கூடப் பைபிள் ஆதாரங்கள், குர் - ஆன் ஆதாரங்கள் பலவற்றை மேற்கோள் காட்டிப் பல நூல்கள் வெளிவந்துள்ளன (பார்க்கவும் ஹஸ்ரத் மவ்லானா அவர்களின் 'சிலுவையில் மரணம்' எனும் நூல்)

இவற்றினைத் தவிர யேசுபிரானின் வாழ்க்கையில் சாத்தானுடைய பங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

1. சாத்தான் வல்லவனா? நல்லவனா?

2. யேசுபிரான் பலமுறை சாத்தானை நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்தபோதும், சாத்தான் ஏன் அழிக்கப்படவில்லை?

3. இந்து இலக்கியங்களின்படி கடந்த யுகங்களில் தோன்றிய அரக்கர்கள் (சாத்தான்) அனைவரும் அழிக்கப்பட்டு விட்டனர். இதன் காரணமாக அரக்கர்கள் மனிதனின் தற்கால வாழ்வில் ஆதிக்கம் செய்ய முடியாமல் ஆக்கப்பட்டுவிட்டது. எனவே நவீன காலத்தில் மனிதன், சாத்தானின் தலையீடு இன்றிச் சுயமாகச் சிந்தித்து, சுய முயற்சியின் அடிப்படையில் வாழ வழி செய்யப்பட்டுவிட்டது.

ஆனால் கிறித்துவ வாழ்வில் சாத்தானின் செல்வாக்கும் குறுக்கீடும் இன்னும் காணப்படுகின்றது. சுயநீதியாய் வாழ்ந்தாலும் கரைசேர முடியாது. பூரணனாய் வாழவும் வழி சொல்லப்படவில்லை. சாத்தானும் இன்னும் அழிக்கப்பட வில்லை. விசுவாசத்துடன் வாழ்ந்தாலும் சாத்தானின் குறுக்கீட்டைக் கர்த்தரால் தடுக்க முடியவில்லை. அப்படி யெனின் இச்சமயத்தால் உலக மக்களுக்கு விளைந்துள்ள நன்மைகளே இல்லையே? எனவேதான் மேற்கத்திய அறிவு ஜீவிகள் தற்காலத்தில் கர்த்தர் - சாத்தான் தத்துவத்திற்கு வெளியே தங்களது வாழ்வினை அமைக்க விரும்புகின்றனர்.

4:3. கர்த்தரும் - சாத்தானும் நேருக்கு நேர்

பரிசுத்த வேதாகமத்தில் சாத்தான் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றான். சர்ப்பம் (பாம்பு), லூசிபர், கலியன்,

குறோனி, இப்லீஸ், பிசாசு ஆகியவை இவனின் மறு பெயர்கள். அவனுக்குப் பரலோகத்தில் கர்த்தர் வாசம் செய்யுமிடத்தில் வாஸஸ்தலம் உண்டு. இவனுக்குக் கர்த்தருக்குச் சமமான வல்லமை உண்டு. இவன் மகா புத்திசாலி எனவும், தந்திரக்காரன் எனவும் பரிசுத்த வேதாகமத்தில் வர்ணிக்கப்படுகிறான். அவன் கர்த்தரின் கையாளாகவும், துணைவனாகவும், ஆலோசகனாகவும், நண்பனாகவும், அதே நேரத்தில் எதிரியாகவும் பல்வேறு கோணத்தில் காட்டப் படுகின்றான். (பார்க்கவும் பக்கம் 95-112, ஆதிபலி பிரமாணம்).

ஒருநாள் பரலோகத்தில் கர்த்தர் சாத்தானைப் பார்த்து 'நீ எங்கேயிருந்து வருகின்றாய்' என்றார். அதற்கு அவன் 'பூமியெங்கும் உலாவி அதில் சுற்றி வருகின்றேன்' என்றான் (யோபு 1:7). யோபுவின் சரித்திரத்தில் கர்த்தரின் தாசனாகச் சாத்தான் நடந்து கொள்வதைக் காணலாம் (யோபு 1:8-12). யேசுவுக்குச் சோதனை நடத்தி அவரைப் பக்குவப்படுத்தும் பணியையும் சாத்தான் செய்கின்றான் (மத் 4:1-11, மாற்கு 1:12, 13, லூக்கா 4:1-13). யேசு சாத்தானுடன் சகபயணியாய் மலைஉச்சிக்கும் செல்கின்றார் (மத் 4:8).[5]

லூசிபர் எனும் சாத்தான் தேவனுடைய சிம்மாசனத்தைப் பாதுகாக்கும்படி ஏற்படுத்தப்பட்ட தேவதூதனாய் இருந்தான். அவன் பூமியில் முதலாவது சிருஷ்டிக்கப்பட்டவற்றை ஆளுகை செய்து கொண்டும் இருந்தான். அவன் தேவ செய்திகளை மறைத்துப் போட்டான். சிருஷ்டிக்கப்பட்ட நாள் முதல் அவன் அக்கிரமகாரனாயும் இருந்தான். அவனுக்கு வானத்திற்கு ஏறும் சக்தியும் உண்டு. அவனே பாவத்தைப் பூமிக்குக் கொண்டு வந்தவன், (எசேயா 14:13). அவனுடைய செயல்கள் அதிகமாகப் பூமியிலும், மத்திய ஆகாசத்திலும் இருக்கிறது (1 பேதுரு 5:8). அவன் வீழ்ச்சியடைந்த தூதர்களுக்கும், பொல்லாத ஆவிகளுக்கும் தலைவனாய் இருக்கின்றான். வீழ்ச்சிக்குப் பிறகு அவன் சர்ப்பமாய்த் தோன்றி ஏவாளை வஞ்சித்துப் பூமியின் ஆட்சியைக் கைப்பற்றினான் (ரோமர் 5:12-14). தன் வீழ்ச்சிக்குப் பிறகு தேவலோகத் தோட்டத்தில் கர்த்தருடன் போர் செய்தான். ஆதாமோடு கர்த்தர் செய்த உடன்படிக்கையின்படி அவன் தோல்வியடைந்தான் (ஆதி 3:15, ரோமர் 16:20).

தற்போதுள்ள உலக அமைப்பிற்கு அவனே அதிபதி (யோவான் 14:30, 16:11, கொரி 4:4). அவன்தான் மரணத்திற்கு அதிபதி (எபி 2:14). தேவனுடைய பிள்ளைகளைச் சோதிப்பதற்கு அவன் கர்த்தரின் அதிகாரம் பெற்றிருக்கிறான், ஆனால் அவர்களை அவன் தொட முடியாது (யோபு 1:6-11, லூக்கா 22:31, 32, கொரி 5:5, I தீமெத்தேயு 1:20).

மனிதகுலத்திற்கு இத்தகைய எதிரியாக விளங்கும் சாத்தானை யேசு பலமுறை நேருக்குநேர் சந்தித்தபோதும் (பார்க்கவும் மத் 4:5-11, 16:23, யோவான் 13:26, 27) அவனைச் சம்காரம் செய்யவில்லை. அவ்வாறு சம்காரம் செய்திருந்தால் மனிதகுலம் இன்று குற்றம், குறைகள், பாவங்கள், நோய் நொடியின்றி இருந்திருக்கும். யேசுவும், மீண்டும் ஒருமுறை உலகிற்கு வரத் தேவையில்லாமல் இருந்திருக்கும். கள்ளக் கிறிஸ்துகளும், போலி தீர்க்கதரிசிகளும் இன்றி, உலகம் இன்று, அமைதியாய் இருந்திருக்கும். பூலோக வாழ்வே சொர்க்க லோக வாழ்வாக விளங்கியிருக்கும். இத்தகைய குறைபாட்டால் யேசுவின் முதலாம் வருகை மனிதகுலத்திற்கு எவ்வித உபயோகமும் இன்றி ஆகிவிட்டது. யேசுவும் சிலுவையில் பலியாக நேரிட்டுவிட்டது. எனினும் கிறித்துவ சமயத்தினர் இயேசு கிறித்து பாவிகளை இரட்சிக்க இப்பூஉலகிற்கு வந்ததாக நம்புகின்றனர். இரட்சிப்பு எனும் சொல்லுக்கான இலக்கணம் பரிசுத்த வேதாகமத்தில் கொடுக்கப் படவில்லை. எனினும் சொல் வழங்கலிலிருந்து 'பாதுகாத்தல்' எனும் பொருள் கொள்ளப்படுகின்றது. பாதுகாத்தல் எதிலிருந்து? யாரிடமிருந்து? உலக கொடுமைகளிலிருந்தா? தீமைகளிலிருந்தா அல்லது சாத்தானிடமிருந்தா?. யேசு கிறிஸ்துவின் சரித்திரம், சுவிசேஷங்களில் கூறப்பட்டவைகளை ஆய்விடும்போது, இவற்றில் எதனிடமிருந்தும் அவர் உலக மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவில்லை. ரோமானிய ஆட்சியில் அடிமையாய் இருந்த தனது யூத மக்களை விடுதலை செய்யவில்லை. யேசுவின் உடலில் அன்புத் தழும்புகளோ அல்லது ஆன்மீகத் தழும்புகளோ காணப் படவில்லை. ஆனால் ஆணித் (சாத்தானின்) தழும்புகளே காணப்பட்டன. இந்து வேதங்களில் நல்லோரையும் தர்மத்தையும் பாதுகாக்க இறைவன் பூமிக்கு வந்ததாகக்

கூறப்பட்டுள்ளது. ஆனால் கிறித்துவ வேதத்தில் பாவிகளைப் பாதுகாக்க இறைகுமாரன் பூலோகம் வந்ததாகக் குறிப்பிட்டுள்ளது. எனவே இவ்விரண்டில் சரியான ஒன்றை மக்கள்தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

4:4. பலி செலுத்துதல்

கிறிஸ்துவ சமயத்தில் 'பலிக் கொள்கை' பிரதான இடத்தை வகிக்கின்றது. பலி செய்யப்பட்டு இரத்தம் சிந்தப்படுவதன் மூலமே மனிதன் காப்பாற்றப்பட முடியும் எனக் கிறித்துவ சமயம் தனது கோட்பாட்டை விவரித்துள்ளது. மீட்பு இரத்தத்தினால் செய்யப்படவேண்டும். - யாத் : *12:13, 23,27*, பேதுரு *1:18, 19.* பலியிடுதல், கிறிஸ்துவத்தின் ஆதி காப்பாளர்களான யூதர்களால் இயேசு பிறப்பதற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே செய்துவரப்பட்டது எனப் பழைய ஏற்பாட்டிலிருந்து தெரிய வருகிறது.[6] யூத சமயம் பலிகளைப் பல்வேறு விதமாகப் பிரித்து செய்தது. அவை சுகந்த வாசனை பலி, என்றும் சுகந்தவாசனையல்லாத பலி என்று இரண்டு வகைப்படும்.

பலி செலுத்துதல் மூலமும், பலியின் இரத்தத்தை மேலே பூசிக்கொள்வதன் மூலமும் மனிதனும், அவன் வசிக்கும் இடங்களும், வழிபாட்டு ஸ்தலங்களும் புனிதப்படும், காப்பாற்றப்படும் என யூதர்கள் நம்பினர் ('இயேசுவின் இரத்தம் ஜெயம்' எனும் வசனத்தைக் கவனிக்கவும்). இதன் பொருட்டுப் பல்வேறு விதமான பலிகள் இயேசுவின் முன்னோர்களால் இயேசுவின் காலத்தில், இயேசு வளர்ந்த நாட்டில் செய்யப்பட்டன. இவை ஆதிபலி என அழைக்கப் பட்டன. இவற்றில் சிலவகை பலி வருடம் ஒரு தடவை மட்டும், நடைபெறும். மற்றவகை பலிகள் எந்த நாளிலும் செய்யப் படலாம்.

பலிகளைச் செலுத்த யூதர்கள் ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்கினார்கள். இவ்வழிபாட்டு ஸ்தலத்தை உண்டாக்க ஜனங்கள் காணிக்கை செலுத்த வேண்டும் என்றும் சினாய் மலையில் மோசஸ் மூலமாகக் கர்த்தர் உத்தரவிட்டார். (யாத்

25:2,8). ‘வெறுங்கையோடு என் கோவிலுக்கு ஒருவனும் வரக்கூடாது’ (யாத் 34:20) எனவும் கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். தனக்குக் கோவில் அமைக்கும் பொருட்டு அதன் மாதிரியைக் கர்த்தர் மோசசுக்குக் காண்பித்தார் (யாத் 25:40, 26:30). அதன்படி பரிசுத்த ஸ்தலத்தில் (கோவிலில்) வெளிப்பிரகாரமும், மகா மண்டபமும் கருவறை மற்றும் பலிபீடமும் உண்டு. கோவில் நீண்ட சதுரமாகவும் அதன் வாசல் கிழக்கு நோக்கியும் அமைந்திருந்தது. கோவில் வாசல் அருகே பூஜாரிகளான லெவியர்களின் வீடுகள் இருந்தன. பலிபீடத்தின் அருகே எப்போதும் அக்னி எரிந்துகொண்டே இருக்கும்.


பலியிடுதல் (இரத்தத்தைக் கொண்டு
சுத்தப்படுத்துவதற்கும் பாவங்களைக் கழுவுவதற்கும்)
சுகந்த வாசனை பலி
சுகந்த வாசனையல்லாத பலி
சர்வாங்க தகனபலி
போஜன பலி
சமாதான பலி
குற்ற நிவாரண பலி
பாவ நிவாரண பலி
ஸ்தோத்திர பலி
உற்சாக பலி

சர்வாங்கதகனபலி : (ஆதி 15:7-18, லெவி 6:16)

இப்பலிக்குக் காளை (கிடாரி), ஆடு, கடா, காட்டுப்புறா, புறாக்குஞ்சு ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆதியாகமம் 15:9-10ன்படி இப்பிராணிகளைத் துண்டித்து, இரத்தத்தைப் பாத்திரத்தில் பிடித்துச் சுற்றுப்புறத்தைப் புனிதப்படுத்த, பூசாரியினால் தெளிக்கப்பட்டது. பின்னர் பலிபொருள், தோல் நீக்கப்பட்டு பலிபீடத்தின் மேல் எப்போதும் எரிந்து கொண்டு இருக்கும் அக்னியில் போடப்படும் (லெவி 6:13). எரியும்போது கிளம்பும் சுகந்தவாசனை, வானிலுள்ள கர்த்தரால் நுகரப்படுகின்றது. பலியை நிறைவேற்றிய ஆச்சாரியனுக்குப் (பூஜாரிக்கு) பலி பொருளின் தோல் காணிக்கையாக வழங்கப்பட்டது.

போஜனபலி: (லேவி 6:14-16; 2:14, 15)

புளிப்பு இல்லாததும், பச்சை மாவினால் எண்ணெயில் செய்த பணியாரங்கள், அதிரசங்கள், அடைகள், நெருப்பில் வாட்டப்பட்ட தானியகதிர்கள் போஜன பலியாகக் கர்த்தருக்குப் படைக்கப்பட்டன. இப்பலிகளின் ஒரு கைப்பிடி எடுத்துப் பலிபீடத்தில் வைத்து, கர்த்தருக்காகத் தகனிக்கப் படும். மீதத்தை பூஜாரிகள் தங்களின் பங்காக எடுத்துக் கொள்ளலாம்.

சமாதான பலி

பலி செய்யப்படும் மிருகத்தின் மார்பு மற்றும் வலது தொடை பூஜாரியின் பங்கு ஆகும். கொழுப்பு முழுவதும் கர்த்தர் உடையது. கொழுப்பு பலிபீடத்தின் மீது வைத்துத் தகனிக்கப்படும். அதனின் சுகந்த வாசனை கர்த்தருக்குப் போய்ச் சேரும் (லேவி *3:16; 7:31-34*). மீதமுள்ள பாகங்கள் பலி செலுத்தியவருக்குக் கொடுக்கப்படும். ஊனை உண்பதற்கு லெவியர்களுக்கு நியமிக்கப்பட்டிருந்த கால அளவைப் பொறுத்து இப்பலி ஸ்தோத்திர பலி, உற்சாக பலி என இருவகைப்படும். ஸ்தோத்திர பலியில் மாமிசம் அன்றே உண்ணப்பட வேண்டும் (லேவி *7:12-14*). உற்சாக பலியில் அது மறுநாள் வரை புசிக்கப்படலாம். மீதம் இருந்தால் மூன்றாம் நாளில் அக்னியில் சுட்டு எரிக்கப்பட வேண்டும். பலிகள் கோவில் வாசலில் செலுத்தப்பட்டது. இரத்தம், பலிபீடத்தையும் கோவிலையும் சுற்றித் தெளிக்கப்பட்டது.

குற்றநிவாரணப்பலி : (லேவி 5:1-4, 7-10, 7:2-5)

இப்பலி, அறிக்கை செய்த குற்றத்திலிருந்து விடுபடச் செய்யப்படுவதாகும். காளைக்கன்று (கிடாரி) பலியாகக் கொடுக்கப்படும். பலியிடக் கொண்டுவந்த காளையை கொண்டு வந்தவன் அதன் தலைமேல் கையை வைத்து ஒப்புவிக்க வேண்டும். அது கோவிலின் வாசலில் பலியிடப் படும். பூஜாரி இரத்தத்தைப் பிடித்துக் கோவிலைச் சுற்றித் தெளித்து அவ்விடத்தைப் பரிசுத்தம் ஆக்க வேண்டும் (லேவி *4:3, 4*). குடலினை மூடிய கொழுப்பு, இரண்டு குண்டிக் காய்கள் மற்றும் கல்லீரல் மேல் இருக்கின்ற சவ்வையும் எடுத்துப் பலிபீடத்தின் மேல் வைத்துத் தகனிக்க வேண்டும்

(லேவி 4:8-10). அதன் தகன புகை வானிலுள்ள கர்த்தருக்குப் போய்ச் சேரும். அறியாமையால் செய்த பாவத்தைப் போக்க இளம் வெள்ளாட்டையும் பலியாகக் கொடுக்கலாம் (லேவி 4:22, 23). இதனில் கிடைக்கும் மாமிசத்தின் ஒரு பகுதி கோவில் பூசாரிகளுக்குப் புசிக்கக் கொடுக்கப்பட வேண்டும். அதனைப் பூசாரியின் குடும்பத்தாரும் புசிக்கலாம். இத்தகைய பலி வருடம் ஒரு தடவை யூதர்களின் ஏழாம் மாதம் 10ஆம் தேதியில் வாத்தியங்கள் முழங்கச் செய்யப்பட வேண்டும் (லேவி 25:9). இத்திருவிழா நாளில் ஜனங்கள் எவரும் வேலைக்குச் செல்லக் கூடாது (லேவி 23:28). அன்று ஊர் சபையினரும் கூட்டமாய்க் கூடுவர் (லேவி 23:26-32). அப்போது பலிபொருளின் மீதமுள்ள மாமிசம் அனைவராலும் பலி விருந்தாக உண்ணப்படும் (சாமுவேல் 16:5). இவ்வழிபாட்டு முறை இந்து சமயத்தின் சுடலைமாடசுவாமி, கருப்பண்ண சுவாமி கோவில் கொடைவிழா போன்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பாவ நிவாரண பலி[7]

இப்பலி மகாபரிசுத்தமானது (லேவி 6:25). செய்த பாவத்திற்காகப் பலிசெலுத்தப்பட்ட காளையின் மாமிசம் ஊருக்கு வெளியே எரிக்கப்பட வேண்டும். ஆனால் சாப்பிடப்படக்கூடாது (லேவி 6:30). பலியின் இரத்தம் வசிக்கும் இடத்தையும் கோவிலையும் சுத்தப்படுத்துவதற்காக உபயோகப்படுத்தப்பட வேண்டும். இயேசுவின் சிலுவை மரணம் இத்தகைய பாவ நிவாரணி பலியாகக் கருதப் படுகின்றது. பழைய ஏற்பாட்டில் கூறப்படும் இப்பலியிடும் முறை பவுல் அவர்களால் கிறித்துவத்தின் புதிய ஏற்பாட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதாமின் பத்தாவது தலைமுறையில் அதாவது நோவாவின் காலத்தில் ஏற்பட்ட விசனத்தால் உலக ஜீவன்களை அழிக்கக் கர்த்தர் தேவலோகத்தில் திட்டமிட்டார் என்பதை ஏற்கனவே பார்த்தோம். அழிவுக்குக் கருவியாக நோவா தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின்பும் (நோவாவின் காலத்திற்குப் பின்பும்) இப்பூவுலகில் பாவங்கள் அதிகரித்து விட்டதாகவும் இப்பாவங்களை நீக்கி உலக மக்களை நரகம் எனும் பாதாளக் குழியிலிருந்து காக்க வேண்டும் எனவும்

தேவலோகத்தில் கர்த்தர் இரண்டாம் முறையாக மீண்டும் திட்டமிட்டார். இவ்விரண்டாம் திட்டமே 'இரட்சிப்பின் திட்டம்' எனப்படுவது. இத்திட்டத்திற்குக் கருவியாக ஜோசப் - மரியா தம்பதியினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஜோசப் அவர்களின் வளர்ப்பு மகனாகவும், மரியாவின் மகனாகவும் தேவன் தம்மைப் பரிசுத்த ஆவியின் மூலம் உலகில் பிறப்பித்துக் கொண்டார். ஒரு ஸ்தீரியின் வித்தாகிய யேசுவின் மூலம் சர்ப்பத்தின் (சாத்தானின்) வித்தின் தலையை நசுக்கி, ஆதிபாவத்தையும் அதன் சம்பளமாகிய மரணத்தையும் அகற்ற ஆண்டவர் தீர்மானித்தார் (ஆதி 3:15, ரோமர் 6:23). பாவம் இல்லாதவராக இருந்தபோதிலும் பாவியைப் போல் மரணத்திற்கு நியாயம் தீர்க்கப்பட்டார். கிறிஸ்துவின் சிலுவை மரணம்தான் கர்த்தரின் பலியின் மகத்துவம் ஆகும் (யோவான் 8:46). மனிதர்கள் எல்லாம் ஆடுகளைப் போல் வழி தப்பித் திரிந்து அவனவன் தன் வழியிலே போனான். கர்த்தரோ நம்மை ஒன்றுபடுத்தி எல்லோருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார். அவர் தன் ஆத்மாவை மரணத்திலுற்றி அக்கிரமக்காரர்களில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரர்கள் வேண்டிக்கொண்டதன் நிமித்தம் அவர்களுக்காகப் பலியானார். இவ்வாறு அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் (இயேசுவின்) விலையேறப் பெற்ற இரத்தம் சிந்தப்பட்டதின் மூலமாக (பழைய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ளது போல்) பரலோகத்திலும் பூலோகத்திலும் நித்திய மன்னிப்பு முத்திரிக்கப்பட்டது. சாத்தான் கல்வாரியில் (சிலுவையில் அடிக்கப்பட்ட இடம்) நியாயம் தீர்க்கப்பட்டான். அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி (இயேசு) முன்பாக அவன் எப்பொழுதும் குற்றவாளியாக இருக்கிறான். (II பேதுரு 2:4). சிலுவையில் இவர் இறந்தது மூலமாக மனிதனின் வியாதியை இயேசு சுமந்தார். பாவம்தானே வியாதியையும், சுகவீனத்தையும் கொண்டு வந்தது (ஏசேயா 53:4-5). பாவத்திற்கு உரிமை இல்லாத இடத்தில் வியாதிக்கு உரிமை இல்லை. பரிசுத்த ஆவியின் வல்லமையினால் யேசுவின் உயிர்த்தெழுதல் என்ற ஜெயம் கொள்ளும் செய்தி பிரகடனப்படுத்தப்பட்டது. அவருடைய தழும்புகளாலே குணமடைந்தீர்கள் என்று பேதுருவும் சாட்சியிடுகிறான் (பேதுரு 2:24).

இவ்வாறு இயேசு ஊருக்கு (பாளயத்திற்கு) வெளியே கல்வாரியில் சிலுவையில் அடிக்கப்பட்டு மனித சமுதாயத்தை மீட்டு எடுக்கத் தன் இரத்தத்தைச் சிந்தி, பலியாகத் தன்னை ஒப்புக் கொடுத்தார். மூன்றாம் நாள் மீண்டும் உயிர்ப்பித்து எழுந்தார். இயேசுவின் இரத்தம் நல்ல கரைப்பானாக மனிதர்களின் பாவத்தைக் கரைத்தெடுக்கும் தன்மை வாய்ந்தது. இயேசுவின் சிலுவை மரணத்தையும் அவர் உயிர்ப்பித்ததையும் விசுவாசமாக ஒப்புக் கொண்டு இயேசுவை ஏற்றுகொள்கிறவர்களே இரட்சிக்கப்படுவார்கள். அவர்களுக்கே பரலோக ராஜ்ஜியமும், நித்திய ஜீவனும், மரணம் இல்லாப் பெருவாழ்வும் கிடைக்கும் என்பது தற்போது ஒரு விசுவாசமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எனவே இயேசுவின் பலியால் பயன்பெறவும் அதன் மூலம் இரட்சிக்கப்படவும் வேண்டுமெனின் கீழ்க்கண்ட நிபந்தனைகளை ஒருவன் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என புதிய ஏற்பாடு தெரிவிக்கின்றது.

1. யேசுவின் சிலுவை மரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் கழுவும், கரைக்கும் என்பதை நம்ப வேண்டும்.

2. இயேசு மூன்றாம் நாள் உயிர்ப்பித்து எழுந்து மரணத்தை (சாத்தானை) வென்றார் என்பது நம்பப்பட வேண்டும். இயேசுவின் உன்னதப் பிறப்பின் தன்மையை (ஒரு கன்னியின் வயிற்றில் பிறந்ததை) பிரமாணமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பைபிளின் பழைய ஏற்பாட்டில் மனிதனுடைய பாவத்தை நீக்கப் பலியிடுதல் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்மூலம் பலன் பெற்றிட எவ்வித நிபந்தனைகளும் அதில் விதிக்கப்படவில்லை. எனவே புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள பலியினால் நன்மை பெறுவதற்கான நிபந்தனைகள் எவ்வித ஆதாரங்களும் இன்றிப் பவுல் அடிகளாரால் விதிக்கப்பட்டவை ஆகும். இவை கிறித்துவ வேதங்களுக்கு எதிரானவை, வேத சம்மதமற்றவை.

செய்த பலி திரும்பி வருதல் எனும் முத்தாய்ப்பான நிகழ்ச்சி பழைய ஏற்பாட்டில் எங்கும் முன்அறிவிக்கப்படவில்லை (திமிங்கலத்தின் வயிற்றிலிருந்து விழுங்கப்பட்ட ஒருவன் துப்பப்பட்டு உயிருடன் திரும்பி வருதல் பைபிளில்

சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அவன் இறந்து உயிர்ப்பித்து வருவதாக சொல்லப்படவில்லை). எனவே இயேசு மூன்றாம் நாளில் கல்லறையிலிருந்து உயிர்ப்பித்து வந்தார் என்பது பழைய ஏற்பாடு எனும் திருமறையின் சம்மதம் இல்லாத ஒரு கற்பனை நிகழ்வு என அறிஞர்கள் கூறுவது, கவனத்தில் கொள்ள வேண்டியதே. மேலும் பலியிடுவதற்கு, பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட கீழ்க்கண்ட வழிமுறைகள் யேசுவின் நிமித்தம் பின்பற்றப்படவில்லை.

1. லேவியர்கள் எனும் சாதியைச் சார்ந்த பூஜாரிகளாலே பலி நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால் இயேசுவின் பலி ரோமானிய வீரர்களால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2. சிலுவையில் அறைதலின்போது அவரது இரத்தம் சேகரிக்கப்பட்டு வழிபாட்டு இடங்களிலும் வீட்டின் நிலைகளிலும், மனிதன் மீதும் (பரிசுத்தப்படுத்தும் பொருட்டு) தெளிக்கப்படவில்லை. மேலும் அப்பலியின் கொழுப்பு முதலியவற்றை எடுத்துப் பலி - பலிபீடத்தின்மீது வைத்துத் தகனம் செய்யப்படவுமில்லை.எனவே இப்பலி பைபிளின் ‘பலி வழிகாட்டுநெறிக்கு’ எதிரானவை. ஆகையால், தற்போதைய கிறித்துவத்தின் பலிக் கோட்பாட்டுக் கொள்கை பவுல் அடிகளார் காலத்தில் ஏற்பட்ட திரிபுவாத கருத்து என்பது அறிஞர்களால் நிறுவப்பட்டுள்ளது.

4:5. இந்து சமயத்தில் பலிகோட்பாடு

ஆடு, கிடா, கோழி போன்றவை சுடலைமாட சுவாமி, கருப்பண்ண சுவாமி ஆகிய தெய்வங்களுக்கான கோவில் களில் பலியிடப்படுகின்றன. பலியிடும் காரணத்தை உமரிக்காடு காசிப்பழம் நாடார் அவர்கள் கீழ்க்கண்ட பாடல் மூலம் தெரிவிக்கின்றார்.

> சாமண வேதம் சொன்ன தன்மையில் பலிகள் ஏற்று
> வேம்ளரி தனில்பூவாடி வீங்கிருள் திரளை உண்டு
> மாமழை விளையுமிஞ்சி மங்கலப் பொருள்கள் மிக்கு
> சேமமாய் வாழவழி செய்யகழிக் கரையானே.

(பக்கம் 57, உமரிமாநகர் தல வரலாறு)

இப்பாடலிலிருந்து நல்ல மழை பெய்யவும், மங்கலப் பொருட்களான அரிசி, கரும்பு, மஞ்சள் ஆகியவை அதிகமாய் விளையவும், மக்கள் ஷேமமாய் வாழவும் பலிகள் கொடுக்கப் பட்டதை அறியலாம். பாவ மன்னிப்பிற்காக அல்ல.

இனி ‘இந்துசமய பலி கோட்பாடு’ எவ்விதமாகப் பவுல் அடிகளாரால் இயேசுவின் மீது சாட்டப்பட்ட பலி கோட்பாட்டுடன் வேறுபடுகின்றது என்பதைப் பார்க்கலாம்.

1. இந்து சமயத்தில் பலி பொருளின் இரத்தம் அசுத்த மாகக் கருதப்படுகிறது. ஆனால் கிறித்துவத்தில் புனிதமாகக் கருதப்படுகிறது.

2. குடும்பத்தினரின் நேரடி நன்மை கருதிப் பலி, இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய்யப்படுகின்றது. பாவ மன்னிப்பிற்காக அல்ல. ஆனால் இயேசுவின் பலி யாருடைய நேரடி நன்மைக்காகவும் செய்யப்படாமல் உலகத்தினரின் பாவ மன்னிப்பிற்காகச் செய்யப்பட்டு விட்டது. உலக நன்மைக்காக ஒருவனைப் பலி செய்வது என்பது நடப்பிலுள்ள பழக்கம் அன்று.

3. பலியிடப்படும் ஆட்டுக்குட்டி மாசு, மறுவற்றதாக இருக்க வேண்டும். ஆனால் இயேசு எனும் ஆட்டுக்குட்டி நான்கு குற்றச்சாட்டுடன் பலியிடக் கொண்டு வரப்பட்டது.

(i) ராஜ துரோகம்:

யூதர்கள் நாடு அவ்வமயம் ரோமானியர்களால் ஆளப்பட்டு வந்தது. ஆனால் யேசு தன்னை யூதர்களின் ராஜா எனப் பிரகடனப்படுத்தினார். அவ்வறிவிப்பு ராஜதுரோகமாக ரோமானியர்களால் கருதப்பட்டது.

(ii) கடவுள் நிந்தனை:

நான் (யேசு) இந்த ஜெருசலம் கோவிலை உடைக்கவும் முடியும், திருப்பிக் கட்டவும் முடியும் என்று கூறினார்.

(iii) உண்மைக்குப் புறம்பானவை:

இயேசு தன்னைக் கடவுளின் மகன் என்றும், தான் யூதர்களின் தந்தையாகிய ஆபிரகாம் காலத்திலிருந்து (அன்றைக்குச் சுமார் 1800 வருடகாலத்திற்கு முன்பிருந்து) இவ்வுலகில் வாழ்கின்றேன் என்றும் கூறினார். (பார்க்கவும் யோவான் 8:57, 58, 10:30-34).

(iv) ஏளனம்:

யூதமதத் தலைவர்களைச் சாத்தானின் மக்கள் எனக் கூறியது.

4. பிராணிகளைப் பலியிடுவதற்குக் கொண்டு வருவோரும், பலியிடுவோரும், வெறுப்பின்றித் தேவ அர்ப்பணமாகப் பலியை நிறைவேற்ற வேண்டும். ஆனால் இயேசுவின் பலி, யூத மத ஆச்சாரிகளின் வெறுப்பின் அடைப்படையிலும், ரோமானிய அரச பிரதிநிதியின் வேண்டா வெறுப்புடன் நிறைவேற்றப்பட்டது.

5. பலி நிறைவேற்றம் சித்திரவதையின்றித் துரிதகதியில் செயல்படுத்தப்பட வேண்டும். ஆனால் இயேசு, சிலுவையில் அடிக்கப்பட்டு மெல்ல மெல்லச் சாகடிக்கப்பட்டார். இது பலி நிறைவேற்றம் என்பதை விட 'வதை நிறைவேற்றம்' என்பதே சரி என்றும் கூறலாம்.

6. பலி நிறைவேற்றப் பயன்படும் கருவி (அரிவாள், கத்தி போன்றவை) மகிமைப்படுத்தப்படுவதோ, அல்லது வணங்கப்படுவதோ உலகில் இல்லை. ஆனால் இயேசு கிறிஸ்துவின் சிலுவை, மகிமைப்படுத்தப்பட்டுச் சமய சின்னமாகவும், ஏன், வணங்குதலுக்கும் உபயோகப்படுத்தப் பட்டு வருகின்றது. இது உலக நியதிக்கு முற்றிலும் மாறுபட்டது. இதனை நியாயப்படுத்திடக் கூறப்படும் காரணங்கள் வலுவிழந்தவை.

7. பலி கருவி மகிமைப்படுத்தப்பட்டால் பலிக்குக் காரணமானவர்களும் (யூதர்களும்) மகிமைப்படுத்தப்பட்டுப் பூஜிக்கப்பட வேண்டும். ஏனென்றால் யூதர்கள் செயல் மூலமே திருப்பலி நிறைவேற்றப்பட்டது. யூதர்களைப் பூஜிக்காமல் சிலுவையை மட்டும் பூஜிப்பது ஒருதலைப் பட்சமான பாரபட்சம். 'யூதர்கள் மூலமே இரட்சிப்பு உண்டு' (யோவான் 4:22) எனும் இயேசுபிரானின் அறிவிப்பிற்கும் எதிரானது.

8. ஓர் அஃறிணையான பிராணியை வழிபாட்டுத் தலத்தில் பலியிடுதலே நேர்த்திக்கடன் செய்வதாகும். மனிதன் மனிதனைப் பல்வேறு காரணம் கூறிப் பலியிடுதல் 'தண்டனை பலி', அல்லது 'நரபலி' எனப்படும்.

எனவே இயேசுவைச் சிலுவையில் மரணிக்க வைத்ததும் கொலைக் கருவியை மகிமைப்படுத்துவதும் பழைய ஏற்பாட்டின் பலி கொள்கைகளுக்கும், ஏன் அனைத்து மத கோட்பாட்டுகளுக்கும், உலக நடைமுறையில் உள்ள பழக்க வழக்கங்களும் ஏற்புடையது அல்ல. இப்பலியிட்டதின் விளைவாக யூதர்களுக்கும் (பலியிடக் கொண்டு வந்தவர்களுக்கும்) எந்தவித நன்மையும் ஏற்படவில்லை. மாறாக யூதர்கள் மீதுகடந்த 2000 ஆண்டுகளாக யேசு மதத்தினர் நடத்திய கொடுமைகள் கூறித்தீராதவை. எனவே சிலுவையில் யேசு அடிக்கப்பட்டது பலி அல்ல, அது ரோமானிய ஆட்சியாளர்களால் நிறைவேற்றப்பட்ட 'கொலைத் தண்டனையே' எனக் கொள்ளலாம்.

4:6. சிலுவையேற்றம்

யேசுவைச் சிலுவையில் அடித்த இடம் ஜெருசலேம் நகருக்கு வெளியே கொல்கதா என்ற பாறைகள் நிறைந்த கரம்பைக் காட்டுப் பகுதி. தற்காலத்தில் கிறித்துவர்கள் சித்திரங்களில் சித்தரிப்பது போல் யேசு தான் அடிக்கப்பட்ட சிலுவையைத் தூக்கிச் செல்லவில்லை. மாறாக சைரின் எனும் கிராமத்தை சார்ந்த சைமன் என்ற நபரே யேசுவுக்காகச் சிலுவையைத் தூக்கிச் சென்றார் (பார்க்கவும் மத்தேயு, மார்க், லூக்கா சுவிசேஷங்கள்). யோவான் எழுதிய சுவிசேஷத்தில் மட்டும் யேசு தன்னுடைய சிலுவையைத் தானே தூக்கிச் சென்றதாக விவரிக்கப்பட்டுள்ளது. பிலாத்துவின் அரண்மனையிலிருந்து சிலுவையிலடிக்கப்பட்ட இடம் வரை செல்ல மூன்று மணி நேரமாவது ஆகியிருக்கும். இது போன்ற மரண நேரத்தில் மரணமடைபவன் தன் சந்ததியினருக்கு 'மரண வாக்குமூலம்' வழியாகச் செய்திகளை வழங்குவது உலக நியதி. ஆனால் யேசு தன் குடும்பத்தினருக்கோ, பின்பற்றுவோருக்கோ செய்திகள் யாதும் அனுப்பவில்லை. மேலும் யேசுபிரான், பரமண்டலத்திலுள்ள தனது பிதாவை நோக்கி, தான் சாகும்போது பிரார்த்தனை (Prayer) யாதும் செய்யவில்லை. இச்செயல்கள் நாட்டார் வழக்கத்திற்கு மாறுபட்டது.

மத்தேயு, மார்க் கூற்றுப்படி சிலுவையில் அடிக்கப்பட்ட போது 'ஏலி, ஏலி, லாமா சபக்தானி' என அலறி ('என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்' என்பது இதன் பொருள்) தன் உயிரை விட்டார். ஆனால் லூக்காவின் கூற்றின்படி அவர் 'தந்தையே உங்கள் கையில் நான் என் ஆவியை அர்ப்பணிக்கிறேன்' என்று கூறியபின்னர் அவர் உயிர் பிரிவதாகக் கொடுக்கப்பட்டுள்ளது. யோவான் எழுதிய சுவிசேஷத்தின்படி 'இது இப்போது முடிந்துவிட்டது' என கூறி உயிரைவிடுவதாக வருகின்றது.

இத்தகைய முக்கிய நிகழ்வை விவரிப்பதில் சுவிசேஷங்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள் அறிவு ஜீவிகளால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனவே யேசுவின் சிலுவை யேற்றம் பெரும் விவாதப் பொருளாக அமைந்துவிட்டது.

சிலுவையின் மரணம் யாருக்காக?

சிலுவையில் அறையப்பெற்ற யேசு மீண்டும் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் எனவும், பின்னர் தனது சீடர்களுக்குக் காட்சியளித்தார் எனவும், சில நாட்களுக்குப் பிறகு தனது பூதவுடலுடன் விண்ணிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் எனவும் பரிசுத்த வேதாகமம் இயம்புகின்றது. யேசு எதற்காகச் சிலுவையில் அடிக்கப்பட்டார் என்பதை முன்பே பார்த்தோம். தற்போது, யாருக்காகச் சிலுவையில் அடிக்கப்பட்டார் என்பதைப் பார்க்கலாம். சுய தண்டனை நிறைவேற்றத்திற்காக யேசு கொல்லப்பட்ட நிகழ்ச்சி, உலகளாவிய காரணத்திற்காகப் பலியிடப்பட்டார் என மாறுதல் அடைந்துள்ளதையும் தற்போது காணலாம்.

1. உலகத்தின் பாவத்தைச் சுமந்து பலியிடப்பட்டார் - யோவான் 1:30
2. யேசு உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனுக்காகவும் தன் உயிரை விட்டார் - எப்ரு 2:9
3. ஏசு பாவிகளை இரட்சிக்க உலகிற்கு வந்தார்.
4. யேசு எல்லோருக்குமாகச் செத்தார் - மத் 25:32, 33
5. யேசு செம்மறி ஆட்டிற்காகச் செத்தார் - மத் 25:32, 33 - யோவான் 10:11, 15
6. யேசு உலகின் ரட்சகர் - யோவான் 3:17
7. யேசு உலகம் முழுமைக்குமானவர் - யோவான் 2:21

இவ்வேத வாக்கியங்களின்படி இரட்சிப்பு உலகின் அனைவருக்கும் உண்டு. ஆனால் யேசுவை நம்பினோர்க்கு மட்டுமே இரட்சிப்பு உண்டு எனும் பாரபட்சமான கருத்தைத் தற்போது மக்களுக்கு வழங்கி வருகின்றனர். அவ்வாறு எனின் 'யேசுவை, நம்பாமல் இருப்பதுவும் ஒரு பாவமே'. அத்தகைய பாவத்திற்கும் சேர்த்துத்தான் அவர் மரணித்துவிட்டாரே, நம்மைக் காப்பாற்றி விட்டாரே, நாம் செய்தபாவங்கள் அவரின் சாவோடு தொலைந்து போய்விட்டதே?. ஏன், இனி யேசுவை ஏற்றுக் கொள்ள வேண்டும்?. இறைவன் அனைவருக்கும் பொதுவானவர் அல்லவா?. யேசுவை ஏற்றுக் கொள்பவனுக்கு மட்டும்தான் இரட்சிப்பு என்பது தேவ நிந்தனை அல்லவா?. இதுபோன்ற கருத்தைத் கூறிய - John of Oldenharneveldt (கிபி. 1619) எனும் டச்சு அறிஞர் கொலை செய்யப்பட்டார்.

யேசு மனிதர்களை நல்வழிப்படுத்திட வந்தார் என அவரை உலகின் முன்நிறுத்துவதற்குப் பதிலாகப் பாவிகளை பாதுகாத்திட (இரட்சிக்க) வந்தார் என்ற வார்த்தையால் உலகம் நல்வழி படாததோடு பாவ மன்னிப்புப் பெறுதலும், பின்னர் பாவம் செய்தலும் எனும் ஒரு வளையத்திற்குள் கிறித்துவின் கொள்கைகள் மனிதனை அடைத்துவிட்டன. அத்துடன் உலக மக்களை நம்பிக்கை உடையோர், நம்பிக்கை அற்றவர் என இருபிரிவாக்கி நம்பிக்கை அற்றோரை இதுகாலம் வரை வேட்டையாடக் கிறித்துவம் உபயோகப்பட்டுவிட்டது. ஒழுக்கத்தை முன்நிறுத்தாதலால் கிறித்துவத்தில் திருக்குறள், நாலடியார், ஆத்திச்சூடி போன்ற நீதிநூல்கள் ஏற்படவில்லை. அத்துடன் பாவங்களைப் பற்றிய உபநூல்கள் அல்லது பாவங்களைப் பற்றிச் சுவிசேஷங்களில் கூறப்பட்டுள்ளதை விரிவுபடுத்தி ஏதாவது உரைகள் (commentries) அல்லது சித்தாந்தங்கள் தோன்றி மக்களுக்கு விசாலமான அறிவை வழங்கியுள்ளதா என நாம் ஆய்விட்டாலும் நமக்குக் கிடைக்கும் பதில் 'இல்லை' என்பதே. எனவே இன்று உலகம் முழுவதும் பரவி விரிந்துள்ள கிறித்துவம், ஆழம் குறைந்த மணல்பகுதியில் ஆதரவு தரும் விழுதுகள் இன்றித் தனியாக நின்று கொண்டிருக்கின்றது. எந்த நேரமும் சாய்ந்து விடக்கூடும்.

கிறித்துவத் தத்துவ விமர்சனங்கள்

கிறித்துவம் அதன் தோற்றகாலத்திலே பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளானது. விமரிசித்தவர்கள் பெரும் தண்டனைக்கு உள்ளானார்கள். அவர்களில் ஒருவர் கிறித்துவிற்கு 150 வருடங்களுக்குப் பின்னால் வாழ்ந்த கிரேக்க அறிஞர் ஸெல்ஸஸ் (Celsus). இவரது நூல் அழிக்கப்பட்ட போதிலும், அதனை மறுத்துக் கிறித்துவர்களால் எழுதப்பட்ட நூல்கள் மூலம் அழிக்கப்பட்ட நூல் மீட்டுருவாக்கம் செய்யப் பட்டுள்ளது. இவரைவிட அதிகமான ஆற்றலோடு பார்ஃபரி எனும் மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞர் கிறித்துவத்தை விமரிசித்து 15 நூல்கள் எழுதினார். அவைகள் மூன்றாம் வலந்தீனியஸ், இரண்டாம் தியடோசியஸ் (கிபி. 448ல்) ஆகிய கிரேக்க / ரோமானிய அரசர்கள் காலத்தில் அழிக்கப்பட்டு விட்டன.

ரோமானிய அரசு, ஆரம்பகாலத்தில் கிறித்துவத்தைத் தடை செய்ததை ஸெல்ஸஸ் வரவேற்றார். எனினும் கிறித்துவர்கள் இரகசிய இடங்களில் கூடிவாழ்ந்தனர். பரலோக ராஜ்ஜியம் எந்த நேரத்திலும் வந்துவிடக்கூடும் எனவே விரைவில் மனம் திரும்புங்கள் என்ற அழைப்பினால் பாமரர்கள் உந்தப்பட்டு, மேலும், மேலும் இம்மதம் பெருகியது. கிறித்துவர்களைப் பொருத்த அளவில் அவர்கள் வாதவிவாதங்களில் ஈடுபடவில்லை. சுவிசேஷங்கள் ஒருபக்கமாகச் சாய்ந்து அக்காலகட்டத்தில் எழுதப்பட்டன. யேசுவைப் புகழும் பகுதிகள் அவற்றில் இடம் பெற்றன. இயேசுபிரானின் மறுபக்கக் கொள்கைகளை மக்கள் காண அனுமதிக்கப்படவில்லை. எனவே பைபிள் பிரச்சார நூல் அன்றி ஆன்மீக நூல் அல்ல என ஸெல்ஸஸ் கருதினார். அவர் காலத்திற்குப் பின்பு வாழ்ந்த வால்டயர் (Voltaire), தாம்பெயின் (Tompaine), ஸ்ட்ராஸ் (D.F. Straws), Arthur Drews, Rudolf Bulttmann ஆகிய வரலாற்று ஆசிரியர்களும் கிறித்துவக் கொள்கைகளைக் கடுமையாகச் சாடினர்.

ஆரம்பகாலக் கிறித்துவம் ‘அதிகபடிப்பு ஆபத்தானது, ஆன்மாவின் வியாதி அறிவு, அறிவுதேடும் ஆன்மா அழிந்துபடும்’ எனப் பிரசங்கித்து அறிஞர் பெருமக்களின்

அறிவுசார்ந்த கேள்விகளுக்கு மொட்டையாகப் பதிலளித்தது (I கொரி 3:18-20).

மேற்படி வசனம் 18

> ஒருவனும் தன்னைத் தானே வஞ்சியாது இருப்பானாக! இவ்வுலகில் உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் பைத்தியக்காரனாகக் கடவன்.

வசனம் 19

> இப்பூவுலகின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பயித்தியமாக இருக்கின்றது.

வசனம் 20

> ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாகவிருக்கின்றது.

I கொரி 1:18

> சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாய் இருக்கின்றது. இரட்சிக்கப்படுகின்ற நமக்கோ தேவபெலனாய் இருக்கின்றது.
>
> நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறித்துவைப் பிரசங்கிக்கின்றோம்; அவர் யூதர்களுக்கு இடறலாயும், மற்றவர்களுக்குப் பைத்தியமாயும் இருக்கிறார் (மேற்படி வசனம் 23).

இத்தகைய பவுல் அடிகளாரின் வசனங்கள் மூலம் கிறித்துவ சமயத்தில் ஞானிகளுக்கும், சிந்தனையாளர்களுக்கும் அறிவு ஜீவிகளுக்கும் இடமில்லாமல் ஆகிவிட்டது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் சில அறிவு ஜீவிகள் இந்துசமயத்தை அணு அணுவாகப் பிளந்து அலசுகின்றனர். அவர்கள் அலசுவதை இன்றுவரை யாரும் தடைசெய்ய விரும்பவில்லை. இத்தகைய அலசலைக் கிறித்துவ சமயம் தாக்குப்பிடிக்கக் கூடுமா?

மதக்கெடுபிடிகள் அதிகம் இல்லாத இக்காலத்தில் கிறித்துவத்தின் பெரும் சிறப்பான இடத்தை வகிக்கும் மற்றொரு தத்துவமான நியாயத் தீர்ப்பு நாள் (Day of Judgement) எனும் கொள்கையை இப்போது ஆய்விடலாம்.

4:7. நியாயத் தீர்ப்பு நாள்

ஒருவன் செய்த நன்மைகள், தீமைகள் ஆகியவற்றைத் தீர விசாரித்து அவன் நல்லவனா, கெட்டவனா எனும் முடிவிற்கு வருவதே நாட்டார் வழக்கப்படி நியாயத் தீர்ப்பு. ஆனால் பரிசுத்த வேதாகமத்தின்படி அவன் கிறித்தவனா, மாற்று மதத்தினனா என ஆய்விட்டு அவன் நித்திய ஜீவனுக்குத் தகுதியுள்ளவனா இல்லையா எனத் தீர்மானிப்பதே நியாயதீர்ப்பு என அழைக்கப்படுகின்றது. கிறித்துவக் கோட்பாட்டின்படி இதற்கான அதிகாரம் வானுலகில் யேசு பெருமானுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கோட்பாட்டில் சில முரண்பாடுகள் காணப்படுகின்றன.

1.	சமய வேறுபாடின்றி நல்லவனுக்கு நித்திய ஜீவன் வழங்கப் பட்டுவிட்டால்	அவன் கிறித்தவனாக இல்லாவிட்டாலும் பழுதில்லை.
2.	கிறிஸ்துவன் ஒருவன் பாவஜென்மமாய் இருந்து நியாயத் தீர்ப்பின்போது நித்ய ஜீவன் வழங்கப் படாவிட்டால்	கிறித்துவனாய் இருந்தும் பயனில்லை.

இவ்விரட்டைப் பிரச்சினையைத் தீர்க்க ஆதி கிறித்துவர்கள் பெரும்பாடுபட்டு அதனைக் கீழ்க்கண்டவாறு தீர்வு செய்தனர்.[8]

1.	எவ்வளவு சுயநீதியுடன் ஒருவன் வாழ்ந்தாலும் யேசுவை ஏற்றுக் கொள்ளாவிட்டால்	அவனுக்கு நித்திய நரகமே உண்டு
2.	எவ்வளவு பாவியாய் ஒருவன் வாழ்ந்தாலும் யேசுவை ஏற்று விட்டால்	அவனுக்கு நித்திய ஜீவன் உண்டு

பரலோகத்தில் இவ்விதமாக நியாயத்தீர்ப்பு வழங்குவதற்கு யேசு அமர்ந்திருக்கும் பரலோக சபை தேவையில்லை, மிகவும் எளிதான இச்செயலைச் செய்திட பூமியில் ஒரு சமய குருபோதுமே! குளறுபடியான, அநீதியான நியாய தீர்ப்பு அறிஞர்கள் மத்தியில் பெரும் கண்டனத்திற்கு உள்ளாகியது.

நியாயதீர்ப்பு யேசுவின் இரண்டாவது வருகையின் போது நடைபெறும். இறந்தோர்கள் கல்லறையிலிருந்து எடுக்கப்பட்டு பழைய உருவம் பெற்று, காத்திருக்கும் அவனது ஆவியுடன் இணைக்கப்படுவார்கள். அச்சமயத்தின் போது உயிரோடு இருக்கின்ற மனிதர்களும் வானிற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். அவர்கள் அனைவரும் தேவனின் முன்பு கூட்டப்பட்டுச், செம்மறி ஆடுகள் (ரட்சிக்கப்பட்டோர்) தேவனுடைய வலது பாரிசத்திலும், கருத்த கிடாக்கள் (இரட்சிக்கப்படாதவர்கள்) இடது பாரிசத்திலும் நிறுத்தப் படுவார்கள். பின்னர் அவரவர்களின் தீர்ப்புக்கு இணங்க முன்னவர்கள் சொர்க்கத்தில் நித்தியஜீவன் பெறவும், பின்னவர்கள் நரகத்தில் நித்திய கொடூரம் அனுபவிக்கவும் தள்ளப்படுவார்கள் (யோவான் 5:20-25).

இத்தகைய தீர்ப்புக் கிடைக்கப்போவது பூவுலகிலே மக்களுக்கு தெரியும். யார் யார் செம்மறி ஆடுகள் / கருத்த கிடாக்கள் என இங்கேயே கண்டு விடலாமே, வானுலகில் யேசு புதிதாக என்ன தீர்ப்பு வழங்கிவிடப் போகின்றார்? எனவே இந்நியாய தீர்ப்பும், அதன் கோட்பாடும் பரிசுத்த வேதாகமத்தில் பல இடங்களில் விவரிக்கப்பட்டுள்ளது தேவையில்லாத ஒன்று! இறந்தபின் மக்களை வலது பாரிசமாகவும், இடது பாரிசமாகவும் பிரிப்பது தேவையற்றது.

எனினும் பரிசுத்த வேதாகமத்தின்படி நியாயத் தீர்ப்பு வழங்கும் காரணிகளைச் சற்றுக் கூர்ந்து நோக்கலாம். இதனில் பெரும் குளறுபடிகள் காணப்படுவதைக் கவனியுங்கள்.

> ‘இதோ சீக்கிரமாய் வருகின்றேன். அவனவனுடைய கிரியைகளின்படி (செயல்களின்படி) அவனவனுக்கு நான் அளிக்கும் பலனும் என்னுடன் வருகின்றது’ வெளி 22:12
>
> ‘தேவன் அவனவனுடைய கிரியையின்படி அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும், கனத்தையும், அழியாமையையும், தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனையும் அளிப்பார். ரோமர் 2:6,7

இவற்றிலிருந்து கிரியைகளே, பரலோகமா, நரகமா என்பதைத் தீர்மானிக்கவல்லது எனத் தெளிவாய்த் தெரிகின்றது. யேசுவையேற்றுக் கொண்டதாலோ,

நிராகரித்ததாலோ பெரும் வேறுபாடுகள் ஏற்படபோவது இல்லை. அப்படி எனின் பெரும் பொருள் மற்றும் நேரம் செலவிட்டு நடத்தப்படும் நற்செய்திக் கூட்டங்கள் யாருக்காக? மதம்மாற்றம் செய்யப்படாமல் ஒருவன் இந்து சமயத்திலே விட்டுவிடப்படலாமே! பெரும் பொருளும் நேரமும் மீதமாகுமே. புறஜாதியினர் தெய்வத்தைச் சாத்தான் எனவும், புறஜாதியினரைச் சாத்தானின் பிள்ளைகள் எனவும், புறஜாதியினரின் கூட்டத்தைப் பிசாசுவின் சேனைகள் எனவும் அழைப்பதும் தேவையில்லாமல் ஆகிவிடுமே! இதனைத்தான் பரிசுத்தவேதாகமமும் கீழ்க்கண்டவாறு இயம்புகின்றது.

> ‘மாயக்காரராகிய வேதபாரகரே (சமய குருக்களே), உங்களுக்கு ஐயோ!. ஒருவனை உங்கள் மார்க்கத்தான் ஆகும்படி (கிறித்தவனாக்கும்படி) சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றித் திரிகின்றீர்கள். அவன் உங்கள் மார்க்கத்தானபோது, அவனை உங்களிலும், இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகின்றீர்கள்’ – மத் 23:15

> ‘ஒரே பிதா (தேவன்) எங்களுக்குண்டு. அவர்தான் கர்த்தர்’ என்று கூறிய கூட்டத்தை நோக்கி யேசு கூறியதாவது. ‘நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசுவினால் உண்டானவர்கள். உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கின்றீர்கள், அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாய் இருக்கின்றான். சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியால், அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை. அவன் பொய்யனாயும், பொய்க்குப் பிதாவுமாய் இருக்கின்றான்.’ – யோவான் 8:44

> ‘எனக்கு முன்னே வந்தவர்களெல்லாம் கள்ளரும் கொள்ளைக்காரருமாய் இருக்கின்றனர்.’ – யோவான் 10:8

இவற்றிலிருந்து யேசு பழைய ஏற்பாட்டில் நம்பிக்கை கொண்டுள்ள பிதாக்களையும், மக்களையும், அவர்களின் குருமார்களையும் சாத்தானின் மக்கள், கொலைகாரர்கள், பொய்யர்கள், கள்ளர்கள் எனப் பல்வேறுவிதமாய்க் கண்டித்துள்ளதைக் காணலாம். பழைய ஏற்பாட்டிலுள்ள நியாய பிரமாணங்களை யேசு அப்பட்டமாய் நிராகரிப்பதையும் காணலாம். ஆனால் ‘இரட்சிப்பு யூதர்கள் வழியாக (தன் வழியாக) வருகின்றது’ (யோவான் 4:32) என்றார்.

'யூதனாகிய தன்னை விசுவாசிப்பவனுக்கு நித்திய ஜீவன் உண்டு' (யோவான் 5:24, 6:47) என்றும் கூறினார். இவ்வாறாக நியாய தீர்ப்பு தத்துவம் பல்வேறான முரண்பாடுகளில் சிக்கித் தவிக்கின்றது.

யேசுபிரான் இன்னொரு சந்தர்ப்பத்தில் பழைய ஏற்பாட்டின் நியாய பிரமாணங்களைப் புகழ்ந்தும் பேசியுள்ளார்.

> 'நியாய பிரமாணத்தையும், தீர்க்கதரிசனங்களையும் அழிப்பதற்கு நான் வந்தேன் எனக் கொள்ளாதேயுங்கள். அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன்'
>
> - மத் 5:17.

> 'வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாய பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'
>
> - மத் 5:18

யூதர்களுக்கு மட்டுமே நித்திய ஜீவன் உண்டு எனச் சொல்லப்பட்டிருக்கும் வசனங்களையும் காணலாம்.

> இஸ்ரேல் இனத்தில் 12 ஜாதிகள் (கோத்திரங்கள்) உள்ளன. அவைகளைப் பாதுகாக்கவே கர்த்தர் இப்பூலகிற்கு வந்தார் - (மத் 10:5, 6).

> மேற்படி ஜாதிகளுக்குத் தலா 12000 வீதம், 1,44,000 பேருக்கு மட்டுமே பரலோக ராஜ்யம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (வெளி 7:4-8)

எனினும் இத்தேவ வசனங்களை நம்பாமல், இந்திய கிறித்துவம் ஓர் வேறுபாடான சொர்க்கலோக தத்துவத்தை முன் வைக்கின்றது. அதனைப் பற்றிப் பைபிள் விரிவுரையாளர் சகோதரர் தாயப்பன் அவர்கள் 'பாவத்தின் சம்பளம் மரணம்' எனும் நூலில் சற்று விபரமாகவே குறிப்பிட்டுள்ளார்.

'நான் கிறித்துவுக்குள் 2001ல் வருவதற்கு முன்பு ஒரு தீவிர இந்துவாக இருந்தபோது பாவத்தைப் பற்றியோ, சொர்க்கம், நரகம் பற்றியோ அவ்வளவு சீரியஸாக நினைச்சுப் பார்த்ததே இல்லை' (பக்கம் 8). 'வினையை விதைச்சா பனையை அறுக்க முடியாது.' உங்கள் பாவங்கள் உங்களுக்கு

எதிராகச் சாட்சி சொல்லும். எசயா 59:12 - (அதே புத்தகம் 33) கர்த்தர் நம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் (எபி 10:30) என்பதிலிருந்து நியாயத்தீர்ப்பு ஒன்னு இருக்கு. அதைப்பற்றி எத்தனையோ வசனங்கள் இருக்கு. சிலவற்றை மட்டும் கீழே குறிப்பிடுகிறேன் (என்கிறார் கிறித்துவ பிரச்சாரகர் சகோ. தாயப்பன். அதே புத்தகம் 39, 40).

1. அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயம் தீர்ப்பார் - சங். 96:13

2. இரக்கம் செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத் தீர்ப்பு கிடைக்கும் - யாக் 2:13

3. அக்கிரமக்காரர், அசுத்த இச்சையோட மாம்சத்திற் கேற்றபடி நடப்பவர்கள், அசட்டை பண்ணுகிறவர்கள், துணிகரக்காரர், அகங்காரிகள், மகத்துவங்களைத் தூஷிக்க அஞ்சாதவர்கள், அனைவரும் நியாயத் தீர்ப்பில் ஆக்கினைக்குள்ளாவர்கள் - 2 பேதுரு 2:9, 10

4. தேவபக்தியில்லாதவர்கள் நியாயம் தீர்க்கப்பட்டு அழிவுக்கு ஒப்புக் கொடுக்கப்படுவார்கள் - 2 பேதுரு 3:7

5. விபச்சாரம் பண்ணி அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்தால் அக்கினியின் ஆக்கினையை அடைவார்கள் - யூதா - 7

6. விரோதமாய்ப் பேசிய கடின வார்த்தைகளுக்கும் நியாயத் தீர்ப்பு உண்டு - யூதா 14,15

7. தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்ளுகிறவன் நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாய் இருப்பான். மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்திற்கு ஏதுவாய் இருப்பான் - மத் 5:22

8. நான் விசாரிக்கும் நாளிலே அவர்களுடைய பாவத்தை அவர்களிடத்தில் விசாரிப்பேன் - யாத் 32:34

9. கர்த்தர் அவர்கள் அக்கிரமங்களை நினைத்து அவர்கள் பாவங்களை விசாரிப்பார் - எரேமி 14:10

10. துர்சிந்தனை உள்ள மனுஷனை அவர் ஆக்கினைக்குட்படுத்துவார் - நீதி 12:2

11. ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதபடிக்கு, உள்ளதை உள்ளதென்றும், இல்லாததை இல்லாததென்றும் சொல்லக் கடவீர்கள் - யாக். 5:12

'இயேசு கிறித்து தமது முதல் பிரசங்கத்திலும் (மத் 5:29,30), கடைசி பிரசங்கத்திலும் (மத் 23:33) நரகம் பற்றி எச்சரித்திருக்கிறார். அவர் பரலோகம் பற்றி 24 முறையும், நரகம் பற்றி 56 தடவையும் பேசியிருக்கிறார். வெளிப்படுத்திய சுவிசேஷத்திலும் அதனில் உள்ள 404 மொத்த வசனத்தில் 191 வசனங்கள் நியாயத் தீர்ப்பைப் பற்றியும் நரகத்தைப் பற்றியும் பேசுகின்றன' எனவும் சகோ. எஸ் தாயப்பன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வேத வசனங்கள் எதிலும் ஏசுவை நம்புகிறவர்களுக்கு நியாய தீர்ப்பிலிருந்து விடுதலையும், அல்லது அவர்களுக்கு மட்டுமே நித்திய ஜீவன் உண்டு எனவும் குறிப்பிடப்பட வில்லை. மாறாக சுயநீதியுடன் வாழ்ந்தாலே நித்திய ஜீவனுக்கு அருகதையுடையவர்கள் ஆகிவிடுவார்கள் எனவும் அறியப்படுகின்றது. எனவே ஒருவன் மதம் மாறிதான் பரலோகம் செல்ல முடியும் என்பது உண்மைக்கு புறம்பாய் உள்ளது. மேலும் நியாயத்தீர்ப்பு தம்முடைய ஜனங்களுக்கு (கிறித்துவர்களுக்கு) மட்டும்தான் செய்யப்படும் எனவும் (எபி 10:30), புறஜாதியினருக்கு அல்ல என்றும் பைபிள் கூறுகின்றது. எனவே பரிசுத்த வேதாகம கருத்துக்கள் புறஜாதியினருக்குப் பொருந்தாது எனக் கூறப்படுவதிலும் நியாயம் உள்ளதை அறியலாம்.

மற்றொரு பிரச்சாரகர் சகோ. அகத்தியன்[9] அவர்கள் இந்து தெய்வங்களுக்குப் பரலோகம் கொண்டுசெல்ல சக்தி உள்ளதா இல்லையா என்பதைப் பற்றி (இந்து சகோதரர்களின் 100 கேள்விகளும் பதில்களும் எனும் நூலில்) பேசியுள்ளார். இதனையும் பார்க்கலாம்.

இந்துவின் கேள்வி:16

நான் எனது தெய்வத்தை வணங்குகிறேன், அதில் நான் சந்தோஷமாய் இருக்கிறேன். அதுபோதாதா? உங்கள் ஏசுவால் என்ன சிறப்புப் பலன்?

சகோ. அகத்தியன் பதில்:

தெய்வமென்றால் நம்மைவிடக் கொஞ்சமாவது நன்றாக இருக்க வேண்டும். களவு செய்பவர், கொலை செய்பவர், விபச்சாரம் செய்பவர், ஏமாற்றுபவர், மனிதரை மேல்ஜாதி கீழ் ஜாதி எனப் பிரித்துச் சமுதாயக் குழப்பங்களை உருவாக்கி

வேடிக்கை பார்ப்பவர் எப்படித் தெய்வமாக முடியும்?.. ஆனால் யேசு கிறிஸ்து சமத்துவத்தின் வித்தல்லவா? அவர் எல்லோருக்கும் பொதுவான தெய்வமல்லவா, மனிதனைப் பிரிக்கவேமாட்டார். விடுதலை பெற யேசு அழைக்கின்றார்!

இந்துவின் கேள்வி 7

எங்கள் தெய்வங்கள் எங்களைப் பரலோகம் கொண்டு சேர்க்காதா?

சகோ. அகத்தியன் பதில்:

ரொம்ப தமாஷாக கேட்கிறீர்களே! உங்கள் தெய்வங்களே பரலோகம் போக முடியாதே. களவு,கொலை, விபசாரம், ஏமாற்றம், காமவிகாரம் என்னும் பாவம் செய்தவர்களை எப்படிப் பரலோகம் ஏற்றுக்கொள்ள முடியும்? (அத்தெய்வங்களில்) யார், யார் என்னென்ன பாவங்கள் செய்தார்கள் என்று உங்களுக்குத்தான் தெரியுமே!

இப்பதில்களிலிருந்து இந்துக்களுக்கு மட்டுமின்றி இந்து தெய்வங்களுக்குக் கூடப் பரலோகத்தில் இடம் இல்லை என்பது வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி அவர்களையும், அவர் தென் ஆப்பிரிக்காவில் 1893ல் வாழ்ந்தபோதும் மத மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வற்புறுத்தல்களும் கொடுக்கப்பட்டன. இதற்காக அவரிடம் பட்லர் என்பவர் எழுதிய 'உபமானங்கள்' எனும் புத்தகம் வழங்கப்பட்டது. அப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள வாதங்களைப் பற்றிக் காந்திஜி அவர்கள் கூறுவதைப் பார்க்கலாம்.

> 'கடவுளின் ஒரே அவதாரம் யேசுவே, கடவுளிடம் மனிதரைச் சேர்க்கவல்லவரும் அவர் ஒருவரே என்பதை நிரூபிப்பதற்காகக் கூறப்பட்டிருந்த வாதங்கள் என் மனதைக் கவர்ந்து விடவில்லை.
>
> – சத்தியசோதனை பக்கம். 148

மகாத்மா காந்தி அணிந்திருந்த துளசிமணி மாலையைக் கோட்ஸ் எனும் ஓர் கிறித்துவ நண்பர் வெட்டி அகற்ற விரும்பினார். அந்நிகழ்ச்சியைப் பற்றிக் காந்திஜி அவர்கள் கூறுவதைக் காணலாம்.

> 'வைஷ்ணவத்திற்கு அடையாளமாகத் துளசிமணி மாலை என் கழுத்தில் இருப்பதை அவர் பார்த்தார். அது மூடநம்பிக்கை என்று எண்ணி அதற்காக அவர் மனம் வருந்தினார். 'இந்த மூடநம்பிக்கை உங்களுக்கு ஆகாது, வாருங்கள் இந்த மாலையை நான் அறுத்து எறிந்து விடுகிறேன்' என்று அவர் கூறினார்.

(அதே நூல், அதே பக்கம்)

மகாத்மாகாந்தி அவர்களுக்கு அவரின் தென் ஆப்பிரிக்கப் பணியின்போது அறிமுகமான மற்றொரு குடும்பத்தினர் 'பிளிமத்' எனும் கிறித்துவ குடும்பத்தினர். ஒரு நாள் அவர்களில் ஒருவர் காந்திஜி அவர்களிடம் கிறித்துவ சமயம் பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறினார் (சுருக்கப்பட்டுள்ளது)

> 'எங்கள் மதத்தின் மேன்மையை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. நீங்கள் செய்துவிட்ட தவறுகளைக் குறித்தே (பாவங்களைக் குறித்தே) உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் வருந்திக் கொண்டு இருப்பது நீங்கள் சொல்வதில் இருந்தே தெரிகிறது. உங்களுக்கு இதனால் மனசாந்தியே இராது. நாம் எல்லோரும் பாவிகளே என்பதை ஒப்புக் கொள்ளுங்கள். எங்கள் நம்பிக்கை எவ்வளவு பரிபூரணமானது என்பதை இப்பொழுது பாருங்கள். பாவத்தின் சுமையை நாம் எவ்விதம் தொடர்ந்து தாங்கமுடியும்? அப்பளுவை நாம் ஏசுநாதர் மீது போட்டுவிடத்தான் முடியும். அவரை நம்புகிறவரே நித்தியமான வாழ்வை அடைவார்கள். உங்களுடைய வாழ்வு எவ்வளவு அமைதியற்றதாக இருக்கிறது என்பதையும், எங்களுக்கு அமைதி எவ்வளவு நிச்சயமாக இருக்கிறது என்பதையும் ஒப்பிட்டுப் பாருங்கள்'.

இதற்கு மகாத்மா காந்தி அவர்கள் ஆத்மார்த்தமாகக் கூறும் பதிலை அடுத்துப் பார்க்கலாம்.

> 'அந்தச் சகோதரர் சொன்னதற்கு ஏற்பவே அவருடைய செயலும் இருந்தது. அறிந்தே பல தவறுகளைத் (பாவங்களை) தொடர்ந்து அவர் செய்தார். அத்தவறுகளைப் பற்றிய எண்ணம் அவரைக் கவலைக்குள்ளாக்கவில்லை என்பதையும் அவர் எனக்குக் காட்டிவிட்டார்.'

(அதே புத்தகம் பக்கம் 149, 150)

பாவமன்னிப்பு, நியாயத்தீர்ப்பு, பரலோக ராஜ்யம் (நித்திய ஜீவன்) பெறுவதற்கு யாருக்கெல்லாம் உரிமை உண்டு என்பதை வரையறுப்பதில் பெரும் குழப்பம் நிலவுவதை இதுகாறும் காணமுடிந்தது. இக்குழப்பங்கள் நீடித்து இருந்தாலும் அவற்றைப் பயன்படுத்தி மதம் மாற்றம் செய்திட அம்மக்களுக்கு உண்டாகியிருக்கும் தீவிரம் அளவிட முடியாததாயும் உள்ளது.

4:8. எதிர்மறையான கருத்துக்கள்

பரிசுத்த வேதாகமம் (பைபிள்) பரிசுத்த ஆவியால் அருளப்பட்டு மனிதனால் எழுதப்பட்டது என அச்சமயப் பெருமக்கள் நம்புகின்றனர். எனவே அதனைப் பரிசுத்தமாக அவர்கள் கருதுவதில் ஆச்சரியமில்லை.[10] போதகர்கள் அதனை மார்போடு அணைத்துக் கொண்டு பிரசங்கங்கள் செய்வது தினசரி காணப்படும் ஒரு நிகழ்ச்சி. குழந்தைகளை மேற்படி நூலைத் தலையணைக்கு அடியில் வைத்துத் தூங்கச் சொல்வதும் அச்சமயத்தினரின் வீடுகளில் நிகழும் அன்றாட நிகழ்வு. எனினும் இந்நூல் பற்றிப் பழனி பாபா எனும் ஓர் இஸ்லாமிய அறிஞர் தனது நூல் ‘புனித பைபிள் ஆண்டவனால் அருளப்பட்டதா?’ என்பதில் பதித்துள்ள கருத்தினைக் கீழே காணலாம்.

‘இத்தகைய அருள்நூல் (பரிசுத்த வேதாகமம்) எவ்வித மாற்றங்களும், முரண்பாடுகளும், விதண்டா வாதங்களும் சந்தேகத்திற்கும் இடமின்றி, அசிங்கங்களுக்கும், அனாச்சாரங்களுக்கும் அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். ஒரு குடும்பத்தலைவர் படித்துப் பொருள் சொல்ல அன்னை, தங்கை, தம்பி, உறவுகள் உட்கார்ந்து பயபக்தியோடு கேட்டு ஆமோதித்து ஜபிக்க வேண்டும். இதுவே சுருக்கமான அளவுகோல்’ இவ் அளவுகோலின்படி பரிசுத்த வேதாகமம் உள்ளதா என்பதைப் பரிசீலிப்பது அவசியம்.

யேசுநாதர் வாழ்ந்த காலத்தில் பாலஸ்தீன நாட்டின் பேச்சு மொழியாய் இருந்தது அரமிக் எனும் மொழி. யேசுநாதரும், அவர் வாழ்ந்ததாகக் குறிப்பிடப்படும்

காலத்திலும் அரமிக் மொழியையே பேசினர் என்பது பல்வேறாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. ஆனால் பரிசுத்த வேதாகமத்தின் மூலப்பிரதி பாலஸ்தீனத்தில் வழக்கிலிருந்த மற்றொரு மொழியான எப்ரு (Hebrew)வில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. ஆனால் அதன் மூலப்பிரதியும் காணாமல் போய்விட்டது என்பதைப் புதிய ஏற்பாட்டின் மூன்றாம் பக்கத்தில் (King James version) கொடுக்கப்பட்டுள்ளதையும் காணலாம். ஆண்டாண்டுக் காலமாக இருந்து மக்களை வழிநடத்த வேண்டிய பரிசுத்த வேதாகமத்தின் மூலப்பிரதி காணாமல் போய்விட்டதா? ஆம். இதுபற்றி அந்நூலில் குறிப்பிடப்பட்டிருப்பது அப்படியே ஆங்கிலத்தில் கீழே தரப்பட்டுள்ளது.

"The New Testament, which has a total of 27 books begins with four Gospels, which record the life and teachings of Christ from four different view points. Although the original autograph no longer exists."

அதன் தமிழ் மொழி பெயர்ப்பு:

'இருபத்தி ஏழு புத்தகங்களைக் கொண்ட புதிய ஏற்பாடானது நான்கு சுவிசேஷங்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு, யேசு நாதரின் வாழ்க்கை மற்றும் போதனைகளை நான்கு கோணங்களில் பதிவு செய்கிறது. எனினும் அதன் மூலபிரதி காணாமல் போய்விட்டது.'[11]

மூலாதாரமே ஆட்டங்கண்டுள்ள வேதாகமத்தில் பலவகையான குளறுபடிகளும், முரண்பாடுகளும் நிறைந்துள்ளன.[12] அவற்றைப் பற்றித் தேவாசிர் இம்மானுவேல் எல். லாறி தனது 'ஆதி பலி பிரமாணம்' நூலில் (பக்கம் 431) எழுப்பியுள்ள கேள்விகளைக் காணலாம்:

1. ஒருவனும் என்ஜீவனை எடுக்க முடியாது என அவர் கூறினார். அப்படியிருக்க அவரை எவ்வாறு சிலுவையில் அடித்துக் கொல்ல முடியும்?

2. நீங்கள் என்னை மறுபடியும் காணமாட்டீர்கள் என அவர் சொன்னார். அவர் மறுபடியும் வரப்போகிறார் என எவ்வாறு கூற முடியும்?

3. அவர் ராஜாவாக இருப்பாரென்றால் எப்படி நரகத்திற்குப் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முடியும்?

4. பாவத்தின் சம்பளம் மரணம். உங்களது பாவங்கள் தான் மன்னிக்கப்பட்டுவிட்டனவே! அப்படியென்றால் கிறித்துவர்கள் சாக முடியாதே?

1. ஆபாசங்கள்

வேதாகமத்தில் பிரபலமாகப் பேசப்படுபவன் தாவீது எனும் அரசன். அவன் தனது அரண்மனைக்குப் பக்கத்து வீட்டில் வசித்த உரியா என்பவனின் மனைவி 'பத்சேபாள்' என்பவளுடன் கொண்ட முறையற்ற உறவை II சாமு 11:2-5ல் காணலாம். இவ் உறவு முறையில் பிறந்தவனே சாலமன் எனும் புத்திகூர்மையான (?) அரசன்.

II சாமுவேல் 13:1-14ல் தாவிதின் மற்றொரு மகன் 'அப்சலொமுக்கும்' தாவிதின் மகள் 'தாமர்' என்பவளுக்கும் இடையே (அண்ணன் தங்கைக்குள் ஏற்பட்ட உடல் உறவை) விவரிக்கின்றது.

'லோத்' எனும் மகான் வரலாறு ஆதியாகமம் 19:30-38ல் கொடுக்கப்பட்டுள்ளது. அதனில் லோத்துக்கும் அவன் மகள்களுக்கும் இடையிலான காமக்களியாட்டமும், அதன் விளைவாக மகள்கள் இருவரும், தகப்பன் மூலமாகக் குழந்தைகள் பெற்றுக் கொண்டதையும் கூறுகின்றது.

2. வேறுபாடுகள்

ஆதியாகமம் 6:3ன் படி மனிதனின் வயது 120 வருடமே எனக் கர்த்தர் கூறுகின்றார். ஆனால் நோவா என்ற மகான் 950 வருடம் உயிர் வாழ்ந்துள்ளார். (ஆதி 9:29)

மத்தேயு 1:16ன் படி யேசுவின் தாத்தா பெயர் 'யாக்கோப்பு' என்றும் லூக்கா 3:23ல் அவரின் பெயர் ஏலி (Heli) என்றும் உள்ளது.

புதிய ஏற்பாட்டில் மத்தேயு, மார்க், லூக்கா, யோவான் ஆகியோர் எழுதிய சுவிசேஷங்களில் யேசு சிலுவையில் அடிக்கப்பட்டு உயிர்நீத்தார் எனவும், அப்போஸ்தலர் நடவடிக்கைகள் 5:30ல் அவர் மரத்தில் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. முரண்பாடுகள்

புதிய ஏற்பாட்டில் ஒரு சுவிசேஷம் கூறுவதை மற்றது மறுப்பதும் காணப்படுகின்றது.

(i) யேசு தன் சுவிசேஷ பிரசங்கத்தை ஓர் ஆண்டு நடத்தினார் - மார்க், மத்தேயு, லூக்கா; இரண்டு ஆண்டுகள் நடைபெற்றன - யோவான்.

(ii) இந்தச் சந்ததியினருக்கு ஓர் அடையாளம் காட்டப்படும் - லூக்கா

ஓர் அடையாளம் கூடக் காட்டப்பட மாட்டாது - மாற்கு

(iii) யேசு மரித்தவுடன் வானுலகம் எய்தினார் - லூக்கா

மரித்து 40 நாள் கழித்து அது நடந்தது - அப்போஸ்தலர் நடவடிக்கைகள்

(iv) யேசுபிரான் மரணித்தபின் மூன்று முறை மற்றவர்களுக்குத் தோற்றமளித்தார் - லூக்கா

ஒரே ஒருமுறை (கலிலியோவில்) தோற்றமளித்தார் - மத்தேயு

(v) யேசுநாதர் உயிர்ப்பித்தபின் முதலில் தோற்றமளித்தது யுதேயாவில் - லூக்கா

யேசுநாதர் முதலில் தோற்றமளித்ததுக் கலிலியோவில் - மத்தேயு

(vi) யேசுவின் சிலுவையைச் சுமந்தது சீரேனே எனும் ஊரானாகிய சீமோன் - மத் *27:32-34* - மாற்கு *15:21-23*, லூக்கா *23:26, 27*

தம்முடைய சிலுவையைத் தாமே சமந்துகொண்டு கொல்கொதா என்கிற கொலைகளத்திற்குப் போய்ச் சேர்ந்தார். - யோவான் *19:17*

(vii) சிலுவையில் அடியுண்டபோது அவரது இருபக்கங்களிலும் சிலுவையில் அடிக்கப்பட்ட இரு திருடர்களும் யேசுவை நிந்தித்தனர். - மத் *27:39-44*

ஒரு திருடன் மட்டும் நிந்தித்தான், மற்றவன் யேசுவுக்குப் பரிந்து பேசினான் - லூக்கா *23:40-43*

(viii) தாய் மரியாள், இன்னொரு மரியாள் முன்னிலையில் தேவதூதன் வானிலிருந்து இறங்கி வந்து கல்லறைக் கல்லைப் புரட்டினான் - மத் 28:12

கல்லறை கற்கள் மேற்படி பெண்கள் வருவதற்கு முன்பே புரட்டித் தள்ளப்பட்டிருந்தன - யோவான் 20:1

இவ்வாறாகப் பைபிள் எனும் காப்பியம் தாறுமாறான கருத்துக்களை உள்ளடக்கியதாய் அமைந்துள்ளது.[13, 14]

4:9. ஏக இறைவன் பெயரில் நடைபெற்ற சமய யுத்தங்கள் (கி.பி. 711 முதல் 1492 வரை)

இறைவன் ஒருவனே எனும் கொள்கையைக் கொண்ட சமயங்கள் கிறித்துவமும், இஸ்லாமும். ஆனால் அவர்களுக் கிடையே மேற்கு ஐரோப்பாவில் நடைபெற்ற சமயப் போர் கேட்போர் மனதை நடுங்க வைக்கும் கொடூரம் வாய்ந்தது.[15]

ஐரோப்பாவின் மேற்குப் பகுதியில் உள்ளது ஐபீரியன் தீபகற்பம் (Iberian peninsula). இப்பகுதி, ஹிஸ்பானியா (Hispania) என்று லத்தீன் மொழியில் அழைக்கப்படுகின்றது. இத்தீப கற்பத்தில் அடங்கியுள்ள நாடுகள் ஸ்பெயின், போர்ச்சுக்கல் மற்றும் பிரான்ஸ் நாட்டின் வடபகுதிகள். இப்பகுதி முதலாம் நூற்றாண்டுவரை ரோமானியப் பேரரசின் ஆட்சியில் இருந்தது. கிபி3, 4ம் நூற்றாண்டில் ரோமானிய ஆட்சிக்குப் பின்னர் ஐபீரியன் தீபகற்பம் விசிகோத் (visigoth) எனும் ஜெர்மனிய நாடோடிக் கும்பலின் (இவர்களும் கிறித்துவர்களே) ஆட்சியின் கீழ் வந்தது.

விஸ்கோத்தியர்கள் ஆட்சிகாலத்தில் ஆதி சாபத்தைக் காரணம் காட்டிப் பெண்கள் ஒடுக்கப்பட்டனர். விளை நிலங்கள் அனைத்தும் வேதக்கோவில் மற்றும் பிரபுக்கள் கைவசம் இருந்தன. அந்நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துப் பயிர்செய்த குடியானவர்கள் கடுமையான நிலவரிக்கு உட்படுத்தப்பட்டனர். அடிமையாகவும் நடத்தப்பட்டனர். வேதகோவில் தலைவர்கள் எந்த நேரத்திலும் எந்த

வீட்டிற்குள்ளும் நுழையலாம் என்ற தனிச் சலுகையும் வழக்கத்திலிருந்த காலம். சர்ச் தலைவர்கள் தங்கள் வீட்டிற்கு வந்து இன்பம் காண்பதைப் பெரும் பாக்கியமாக அன்றைய மக்கள் கருதினர்.[16]

இத்தகைய புரையோடிப் போயிருந்த சமய - சமுதாய காலத்தில் இஸ்லாம், அரேபியாவில் தோன்றி வெடித்தது. இவ்வுலகம் முழுவதும் அல்லாவுக்கே சொந்தம், எனவே உலகம் முழுமையையும் அல்லாவின் அருளாட்சியின்கீழ், கொண்டு வரவேண்டும் எனும் சமய உத்வேகத்துடனும் துடிப்புடனும் அரேபியர்கள் பணியாற்றிய காலம். இஸ்லாமிய சமயக் கொள்கைகளான சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் சொர்க்கலோக கொள்கை காரணமாக அரேபியா மற்றும் வடக்கு ஆப்பிரிக்க பகுதிகளில் இச்சமயம் வேகமாகப் பரவியது. அதுவரை கிறித்துவ நாடுகளாய் விளங்கிய ஈராக், ஈரான், பாலஸ்தீனம், எகிப்து ஆகிய நாடுகள் இஸ்லாமிய சமயத்தின் பக்கம் சாய்ந்தன. இதனால் ஓர் இறைவன் எனும் தத்துவங்களைக் கொண்ட இரு சமயங்களான கிறித்துவம் மற்றும் இஸ்லாம் ஒன்றையொன்று ஆப்பிரிக்காவின் வடபகுதியிலும், ஐரோப்பாவின் தென்பகுதியிலும் சந்தித்தன. ஒரே இறைகொள்கையுடைய இருசமயங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்து, பிணைந்து புத்தொளி வீசி உலகெங்கும் பிரகாசிப்பதற்குப் பதிலாக உலகம் முழுமையையும் நீண்ட நெடிய யுத்தத்தின்கீழ் தள்ளிவிடுவதாக இச்சந்திப்பு அமைந்து விட்டது. ஓர் இறைவன் கொள்கை மக்களை இணைக்கத் தவறியதுடன், மக்களை அண்ட பாதாளத்தில் அமிழ்த்து வதாகவும் அமைந்து விட்டது. ஆன்மீக பலம் ஏற்படுவதற்குப் பதிலாக மக்கள் மத்தியில் கசப்புணர்ச்சியும் நீங்காத துயரும் ஏற்படக் காரணமாகி விட்டது. இதனால் இவ்விரண்டு சமயங்களின் 'ஓர் இறைவன் கொள்கை' பெரும் கேள்விக் குறியாகிவிட்டது.

எனினும் அல்லாவின் தூதர் முகம்மது நபி அவர்கள் மெக்கா நகரில் நிகழ்த்திய தனது இறுதி சமய உரையின் வாசகம், மூட நம்பிக்கையிலும், பெரும் வரிச்சுமையிலும், வர்ணாசிரம வேறுபாட்டிலும் சிக்கித் தவித்த ஐரோப்பியர்களுக்குத் தங்களது வாழ்வில் புதிய வசந்தம் வீசுவதாக அமைந்தது.

நபி அவர்களின் உரையைக் கீழே காணலாம்:

'அரேபியர்கள் புற இனத்தவர்களைவிட மேலானவர்கள் அல்லர். புற இனத்தவர்கள் அரேபியர்களைவிடச் சிறந்தவர்களும் அல்லர். ஆனால் உண்மையில் முஸ்லீம்கள் அனைவரும் சகோதரர்களே. அபிசீனிய நாட்டு (இன்றைய எத்தியோப்பியா) அடிமை ஓர் முடவனாய் இருந்தால்கூட, அவன் இஸ்லாத்தின்படி ஆட்சி செய்வானாகில் அவனுக்கு நீங்கள் கீழ்ப்படியுங்கள்'.

இஸ்லாமிய சமயத்தின் இக்கொள்கைகள் அடிமைத் தனத்திலும், மூடநம்பிக்கையிலும் வரிச் சுமையிலும் மூழ்கித் திளைத்திருந்த கிறித்துவ மக்களுக்குத் தங்களை விடுவித்துக் கொள்ளப் பெரும் சந்தர்ப்பமாக அமைந்தது. அவ்வமயம் ஐபீரியன் துணைக்கண்டத்தை ரொட்டிரிக் (Roderick) எனும் விஸ்கோத்திய மன்னன் ஆண்டுவந்தான். இவ்வசரன் காலத்தில் அந்நாட்டில் வாரிசுரிமைப் போராட்டங்கள் பல நடந்தன. அத்துடன் இவ்வரசன் அன்று ரோமாபுரியில் வாழ்ந்த ஒரு பிரபலமான நபராகிய ஜூலியான் (Count of Julion of Centa) என்பவரின் மகளைக் கற்பழித்தான். இதன் காரணமாக இவர்களுக்கிடையே காழ்ப்புணர்ச்சி இருந்து வந்தது. இப்பிரபலம் வடக்கு ஆப்பிரிக்க பகுதிக்குச் சென்று, அங்கு நிலை கொண்டிருந்த இஸ்லாமிய தளபதி 'தாரிக்' (Tarique) என்பவரைச் சந்தித்து, தனது விரோதி ஆட்சி செய்யும் ஐபீரியா மீது படையைச் செலுத்தும்படியும் அதற்கு வேண்டிய கடற்பயணத்திற்கான கப்பல்களையும் இதர உதவிகளையும் வழங்குவதாகவும் வாக்களித்தான். அவ்வாறு படையைச் செலுத்திய தாரிக், ஐபீரிய கிறித்துவ படைகளை 711ம் ஆண்டில் தோற்கடித்து அதன் அரசனையும் கொன்றான். இதன் காரணமாக ஐபீரிய தீபகற்பம் முழுமையும் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

இஸ்லாமியர்கள், போர்ச்சுக்கல், ஸ்பெயின், பிரான்ஸின் வடபகுதி இணைந்த ஐபீரியன் தீபகற்பத்தை 'அல் அண்டாலஸ்' (Al Andalus) என அழைத்தனர். அதன் பொருள் 'பூலோக சொர்க்கம்' எனப்படுவதாகும். ஐபீரியன் பகுதியில் இதன் மூலம் ஓர் இறைவன் கொள்கையைப் பின்பற்றிய கிறித்துவம், இஸ்லாம் மேலும் அந்நாடுகளில் ஆங்காங்கே வசித்து வந்த யூதர்களின் யூத சமயம் ஆகிய மூன்றும் நேருக்கு நேர் சந்திக்கும் சந்தர்ப்பம் தோன்றியது.

இஸ்லாமியர்கள், இப்பகுதியில் வசித்துவந்த கிறித்துவர்களையும், யூதர்களையும் ஓரளவு நியாயமாகவே நடத்தினர். கொடுங்கோன்மையாலும், நிலவரியாலும், துன்புற்ற மக்கள் அதிலிருந்து விடுதலை பெறவும் காமக்களியாட்டத்தில் ஈடுபட்டிருந்த, வேதகோவில் நிர்வாகிகளை, உதறித் தள்ளவும் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தைக் கண்டு மகிழ்ந்தனர். இவர்கள் இஸ்லாத்திற்கு மனமுவந்து மாறினர். வேறு சமயங்களை பற்றியும் சமய நூல்களைப் பற்றியும் அறிந்திராத ஐரோப்பிய பாமரர்கள், இஸ்லாத்தையும், அதன் வேதமான 'குர்-ஆன்' ஆகியவற்றை அறிந்தும் கேட்டும் மகிழ்ந்தனர். வேத கோவில்கள் மசூதிகளாக மாறின. கல்வி, கலை, இலக்கியம் ஆகியவற்றை அறிந்திராத ஐரோப்பியர்களுக்கு இஸ்லாம் இவற்றை அளித்தது. கிரானடா (Granada) எனும் நகரில் பெரும் கல்விக்கூடத்தை இஸ்லாமியர்கள் அமைத்தனர். எனினும் கிறித்துவர்களுக்கு அரசு மற்றும் ராணுவத்தில் உயர்பதவிகளை வழங்க இஸ்லாமியர்கள் முன்வரவில்லை. அத்துடன் மதம் மாறாமல் எஞ்சியிருந்த கிறித்துவர்கள் மீது ஜிஜியா எனும் இஸ்லாமிய வரியை விதித்தனர். செல்வக் களிப்பிலும், சிற்றின்பத்தைப் பேரின்பமாக கருதி வாழ்ந்த வேதகோவில் நிர்வாகிகள் பெரும் பாதிப்புக்குள்ளானார்கள். செய்வதறியாது திணறினர்.

இத்தகைய சூழ்நிலையில் 1492ல் நாட்டின் வடபகுதியிலுள்ள மலையடிவாரத்தில் ஒளிந்து வாழ்ந்து கொண்டிருந்த ஸ்பெயின் அரசன் பெர்டினாண்டு (Ferdinand) அப்பகுதியிலுள்ள கத்தோலிக்க பாதிரியார்களை ஒன்றிணைந்து ஒரு சமயப் படையைத் தோற்றுவித்தான். இவனது படைக்கும், இஸ்லாமிய படைக்கும் கர்னாடா நகரில் ஒரு கொடிய போர் நடந்தது. இப்போரில் இஸ்லாமிய படைகள் தோற்கடிக்கப் பட்டன. இதன் விளைவாக 731 ஆண்டுகளாக ஐபீரியா பகுதியை ஆண்ட இஸ்லாமிய ஆட்சி வீழ்ந்தது. பூலோக சொர்க்கம் எனக் கருதப்பட்ட ஸ்பெயின் - போர்ச்சுக்கல் - பிரான்ஸ் நாடுகளில் இஸ்லாம் வீழ்ந்தது. வெற்றிபெற்ற இப்பகுதிகளில் இஸ்லாமியர்களுக்கு எதிரான கொடுஞ்செயல்களும் துரிதகதியில் ஆரம்பிக்கப்பட்டன.[17] ஐபீரிய பகுதிக்குக் கத்தோலிக்க கார்டினலாக விளங்கியவர் சிஸ்நிரோஸ் (Cisnerols)

எனும் பாதிரியார். இவர் மதம் மாறிய இஸ்லாமியர்கள்மீது கொடூரத்தைத் கட்டவிழ்த்து விட்டார்.

1. நாட்டில் வசித்து வந்த இஸ்லாமியர்கள் கட்டாய மத மாற்றம் செய்யப்பட்டனர். மறுத்தவர்கள் கொல்லப்பட்டனர், அல்லது நாடு கடத்தப்பட்டனர்.

2. அரேபிய நூல்களும், கல்வி நிலையங்களும் தீயினால் எரிக்கப்பட்டன.

3. முஸ்லீம் சிறுவர்கள் கைப்பற்றப்பட்டுக் கட்டாய ஞானஸ்நானம் செய்யப்பட்டனர்.

இத்தகைய பெரும் குழப்பமான அரசியல் - சமய சூழ்நிலையில் 1478ல் போப் ஆண்டவராகப் பதவியிலிருந்த போப் ‘சிக்ஸ்டஸ்’ (Pope Sixtus IV) என்பவர் ஸ்பெயின் நாட்டில் உலகிலே முதன்முதலாக ‘இறை திருகுமரன்’ நாமத்தைக் கொண்டு ஒரு ‘தெய்வீக விசாரணைக்கு’ (Inquisition) உத்தர விட்டார். இத்தெய்வீக விசாரணையின்போது இஸ்லாமியர் களும், மறைமுகமாக இஸ்லாத்தைத் பின்பற்றும் போலிக் கிறித்துவர்களும் கண்டுபிடிக்கப்பட்டுக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். இஸ்லாமியர்கள் பன்றி இறைச்சியை உண்ணவும், மதுபானங்களை அருந்தவும் வற்புறுத்தப் பட்டனர். இந்நிலை ஸ்பெயின் அரசன் பிலிப்ஸ் (Philips II) காலம்வரை தொடர்ந்தது. இவ்வரசனும் அந்நாட்டில் மிச்சம் மீதி இருந்த இஸ்லாத்தைக் கடுமையாக ஒடுக்கினான்.

1. அரேபிய மொழி தடை செய்யப்பட்டது.

2. இஸ்லாம் தடைசெய்யப்பட்ட மதமாக அறிவிக்கப் பட்டது.

3. இஸ்லாமிய நடைமுறைகளும், பழக்கவழக்கங்களும் ஆடைகளும் சட்டவிரோதமாக்கப்பட்டன.

4. கர்னாடா நகரின் அருகிலிருந்த கலிரா எனும் நகரம் முற்றிலும் அழிக்கப்பட்டு அதனில் வாழ்ந்த இஸ்லாமியர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர்.

5. வேறு இடங்களில் மீதமிருந்த அனைத்து இஸ்லாமியர் களும் 1614ல் நாடுகடத்தப்பட்டனர்.

இந்நடவடிக்கைகளின் மூலம் ஐபீரிய பகுதியில் 700 ஆண்டுகளுக்கும் மேலாக மலர்ந்திருந்த இஸ்லாம் வேரும், வேரடி மண்ணுமின்றி அகற்றப்பட்டது. இஸ்லாமியர்களின்

ஐரோப்பிய பூலோக சொர்க்க கனவும் கலைந்தது. எனினும் கடல் பயணம், கடல் படை யுத்தம் ஆகியவற்றில் ஸ்பெயின் போர்ச்சுக்கல், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு இதன்மூலம் பெரும் அனுபவம் கிடைத்தது. கடல்கடந்த காலனி ஆதிக்கத்திற்கு இந்நாடுகளுக்குப் பயிற்சி அளித்ததாக அமைந்தது.[18] அதுவரை ஒன்றுமறியாத இருட்டில் உலாவி வந்த ஐரோப்பியர்களுக்குக் கல்வி, கலை, இலக்கியம் பற்றிய அறிவு கிடைத்தது. தொழில் புரட்சிக்கு இவ்வறிவு வித்தாக அமைந்தது.

4:10. திருச்சிலுவை யுத்தம்

திருச்சிலுவை யுத்தம் ஆகஸ்ட் 15ஆம் நாள் 1095ம் வருடம் தொடங்கிப் பல நூறாண்டுகளாக ஐரோப்பிய நிலப்பரப்பில் நடந்தது. இந்தயுத்தம் தொடங்கிய கால கட்டத்தில் போப் ஆண்டவராகப் பதவி வகித்தவர்கள் கிரிகரி VII (1073-85), அர்பன் II (1088-99) ஆகியோர். இப்போர்களின் போது என்றும் காணாத கொடுமைகளும் நரபலிகளும் நடந்தன. இதனைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமெனின் பதினொன்றாம் நூற்றாண்டின் ஐரோப்பிய அரசியல் - சமய - சமுதாய நிலவரத்தை அறிந்து கொள்வது அவசியம்.

அன்றைய ஐரோப்பியர்கள் வாழ்க்கையில் கிறித்துவ சமயம் முழுமையாக ஊடுருவி இருந்தது. இச்சமயத்தின் மீது மக்கள் முழு நம்பிக்கையும் கொண்டிருந்தனர். சமய நம்பிக்கை பாவங்களிலிருந்தும், நரக வேதனையிலிருந்தும் தங்களை முழுமையாக விடுதலை செய்யவல்லது என நம்பினர். நியாயத் தீர்ப்புநாள் பற்றி மிகவும் அஞ்சினர். பிரார்த்தனை செய்தல், எளிமையாய் வாழ்தல், உண்மை, நேர்மை, அடிபணிதல் முதலிய நற்குணங்கள் மக்களிடம் மேலோங்கி இருந்தது.

அதேநேரத்தில் பிஷப்புகளும், போப் ஆண்டவர்களும் எல்லையில்லாச் சுகபோகத்தை அனுபவித்து வந்தனர். புனிதர் பீட்டர் காட்டிய நடத்தை நெறி, சமய குருமார்களால் அப்பட்டமாய் மீறப்பட்டது. பிஷப்புகள் முகத்தை வழித்துக் கொண்டனர், திருமணம் செய்து கொண்டனர், உள்நாட்டு யுத்தங்களில் பங்கேற்றனர், செல்வம் சேர்ப்பதையே

முதன்மையான குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். ஆடம்பரமும், காமக்களியாட்டங்களும் தங்குதடையின்றி நடந்தன. போப் ஆண்டவர்கள், தங்களது அதிகாரம் இறைவனால் நேரடியாக வழங்கப்பட்டுள்ளவை என்றும், ஐரோப்பாவின் ஒவ்வொரு பிரஜையின் ஆன்மீக முன்னேற்றத்திற்கும், அவர்களைத் தங்கு தடையின்றிச் சொர்க்க லோகத்திற்கு அழைத்துச் செல்லுதலும் தங்களது பெரும் பொறுப்பு எனவும் நம்பினர்.

எனினும் அக்காலகட்டத்தில் போப் அவர்களின் அதிகாரம் ரோம் நகருக்கு அப்பால் செல்லுபடியாகவில்லை. பிரான்ஸ், ஸ்பெயின், இங்கிலாந்து, ஜெர்மனி, வடக்கு இத்தாலி ஆகிய பகுதிகளின் பிஷப்புகள் போப் அவர்களின் தலையீடு இன்றிச் சுதந்திரமாகச் செயல்பட்டுவந்தனர். பிஷப்புகள், தாங்களே இறைவனின் பிரதிநிதி எனக் கூறிகொண்டனர். அவ்வமயம் பொறுப்பில் இருந்த அரசர்கள், தாங்களும் இறைவனின் பிரதிநிதியே என நம்பினர். இதன் காரணமாக இவ்விரண்டு அதிகாரமையங்களுக்கிடையே போட்டி நிலவி வந்தது. தங்களுக்கு வேண்டியவர்களைப் பிஷப்பாகத் தேர்ந்தெடுக்க அரசர்கள் பெரும் பணத்தையும் நேர்மைக்கு எதிரான உபாயங்களையும் பயன்படுத்தினர். பிஷப்புகளின் நிர்வாகத்தின் கீழ் ஏராளமான நிலபுலன்களும், பெரும் செல்வமும், இவற்றைக் கட்டிக் காக்க ஏராளமான படைவீரர்களும் இருந்தனர். எனவே பிஷப்புகள் நியமனம், போப் அவர்களால் செய்யப்படுவதற்குப் பதிலாக அரசர்களாலே செய்யப்பட்டு வந்தன.

போப் கிரிகரி தன்னுடைய அதிகாரத்தை உலகளாவிய அளவில் விஸ்தரிக்க எண்ணினார். தனக்கு அடிபணியாத ஜெர்மனிய அரசன் ஹென்றி IVஐ கிறித்துவ மதத்திலிருந்து நீக்கினார். இதனால் வெகுண்ட ஜெர்மானிய அரசன், போப் கிரிகிரி அவர்களைக் கைது செய்து நாடுகடத்தினான். நாடுகடத்தப்பட்ட போப் அவமானப்பட்டு 1085ல் இறந்தார். ஹென்றி அரசன் தனக்கு வேண்டிய ஒரு நபரை, கிளமண்ட் III (Clement III) என்பவரை ஒருதலைப் பட்சமாய்ப் போப்பாக நியமித்தான். பதவிப் போட்டி சுமார் இரண்டாண்டுக் காலம் நீடித்தது. இறுதியில் போப் அர்பன் II (Urban II) என்பவர்

இப்பதவிக்குப் பெரும் போட்டியினிடையே தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆனால் ரோமானிய சிம்மாசனம் கிளமண்ட் எனும் போட்டி போப் வசம் இருந்தது. போப் அர்பன் ஒரு சிறிய நகரத்தில் வசித்து வந்தார். பெரும் பணத்தைத் கையூட்டாகப் போப் கிளமண்ட் அவர்களுக்கு வழங்கி ரோமானிய மாளிகையையும், புனிதர் பீட்டர் வழங்கிய தேவலோக சாவியையும் போப் அர்பன் பெற்றார். இத்தகைய அவலமான சூழ்நிலையில் வாழ்ந்து வந்த போப் அர்பன் அவர்கள் தன்பதவிக்குப் பெருமை சேர்க்கவும், தனது அரசியல் செல்வாக்கை ஐரோப்பா முழுமையிலும் விஸ்தரிக்கவும், ஐரோப்பியப் பெரு நிலப்பகுதி முழுமையிலும் இருந்த வேதகோவில்கள் அனைத்தும் தனது அதிகார எல்லைக்குள் கொண்டுவரவேண்டும் என்று எண்ணி அதனை நிறைவேற்றச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார்.

இதற்கான சந்தர்ப்பம் போப் அர்பனுக்கு 1095ல் கிடைத்தது. போப், இத்தாலியின் பியாஸின்ஸா (Piacenza) நகரில் ஒரு சமய மாநாட்டை நடத்திக் கொண்டிருந்த சமயத்தில் கிழக்கு ரோமானிய அரசனிடமிருந்து இராணுவ உதவி வேண்டி ஒரு தூதர் வந்துசேர்ந்தார். கிழக்கு ரோமானிய அரசின் தலைநகர் கான்ஸ்டான்டிநோபிளை (இன்றைய இஸ்தான்புல்) இஸ்லாமிய படைகள் தாக்கவிருப்பதாகவும், அதனைப் பாதுகாக்க அவசர ராணுவ உதவி தேவை என்பதே அத்தூதுவரின் வேண்டுகோள். இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தித் தனது ஆட்சியினைப் பலப்படுத்திட, போப் திட்டமிட்டார். கன்ஸ்டான்டிநோபிள் நகரைப் பாதுகாப்பதற் கெனப் பெரும் படையைத் திரட்டத் திட்டமிட்டார். இப்படையைக் கொண்டு கான்ஸ்டான்டிநோபிள் நகரைப் பாதுகாப்பதுடன், அந்நகருக்குத் தென்மேற்கே 850 மைல்கல் தொலைவிலுள்ள ஜெருசலேம் நகரையும் இஸ்லாமியர் களிடமிருந்து விடுவிக்க வேண்டும் எனவும் திட்டமிட்டார். இதன்மூலம் மத்தியதரைக்கடல் விளிம்புப் பகுதியிலுள்ள வேதக்கோவில்கள் மற்றும் அந்நாடுகளின் அரசர்கள் அனைவரையும் தனது செல்வாக்கின் கீழ் கொண்டுவந்து விடலாம் எனவும் எண்ணினார். போர் நடத்திட வேண்டுமெனின் அதற்கான காரணம் தெள்ளத்தெளிவாக அறிவித்தல் அவசியம். அதன்பொருட்டு ஒரு கதை புனையப்பட்டது.

யேசுகிறித்து சிலுவையில் அடிக்கப்பட்டு இறந்து, பின்னர் கல்லறையில் வைக்கப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்ப்பித்ததாக நம்பப்படும் இடத்தில் கட்டப்பட்டுள்ள Church of The Holy Sepulchre எனும் வேதகோவில் இஸ்லாமியர்களால் இடிக்கப்பட்டு வருவதாகவும், ஜெருசலேம் நகரத்திலுள்ள கிறித்தவர்கள், இஸ்லாமிய - யூத குழுக்களால் பெரும் கொடுமையை அனுபவித்து வருவதாகவும், போர் தொடங்கிட ஒரு காரணம் போப் அர்பன் அவர்களால் கூறப்பட்டது. இதற்கு மக்கள், இளவரசர்கள், அரசர்கள், பிஷப்புகள் என அனைவரின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைத்தது. போப், ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்து இப்போரில் ஈடுபட மக்களின் ஆதரவைத் திரட்டினார். எனினும் இம்முயற்சிக்கு தடங்கல் ஏற்பட்டது. அன்பையும், சேவையையும் வலியுறுத்துவதாய்க் கூறப்படும் கிறித்துவ ஆன்மீக அரசர் போப், எவ்வாறு போரினைத் தொடங்கி நடத்திட முடியும்? இத்தகைய ஆன்மிக தடங்கலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பெரும் பிரச்சினையாய் இருந்தது. போருக்கு எதிராகவும், ஆதரவாகவும் பல பைபிள் வசனங்கள் முன்வைக்கப்பட்டன.

போருக்கு எதிரான கருத்துகள்

1. பத்துக் கட்டளைகள் - கொலை செய்யாதிருப்பாயாக எனும் வசனம்.

2. யேசுவின் மலைப் பிரசங்கம் : ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டு, எதிரிகளிடமும் அன்பு செலுத்து எனும் வசனங்கள்.

3. யேசுவைக் கைது செய்யவந்த ரோமானிய போர் வீரர்களுக்கு எதிராகப் பீட்டர் எனும் சீடர் தன் வாளை வீசத் தயாராகும் போது, ‘வாளை அதன் கூட்டிற்குள் போடு’ என யேசு கட்டளையிட்டார். எனவே வாள்வீசிச் சண்டையிடக் கிறித்தவர்கள் அனுமதிக்கப்படவில்லை என்பது.

போருக்கு ஆதரவான கருத்துகள்

1. சமய யுத்தங்களை நடத்துதல் கிறித்துவத்தின் ஒரு அங்கீகரிக்கப்பட்ட கடமையே. பழைய ஏற்பாட்டில் கிறித்துவ தந்தையர்கள் 221 யுத்தங்களை நடத்தியுள்ளனர். எனவே போரிடல் கிறித்துவத்தின் ஓர் அங்கமே. எனவே சந்தர்ப்பம்

எழும் பொழுது தீவிர - கொடுமையான போர்களை நடத்திடத் தடையில்லை.

2. நான் உலகிற்குச் சமாதானத்தை அன்று பட்டயத்தை அனுப்பவே வந்தேன் எனும் யேசுவின் பிரசங்க வசனம் போரிடுதலை அங்கீகரித்துள்ளது.

3. பணம் வசூல் செய்யும் வியாபாரிகளை யேசு சாட்டையினால் அடித்துக் கோவிலிலிருந்து விரட்டியுள்ளார். எனவே சிறு காரணங்களுக்காகவும் பெரும் தவறு செய்யலாம் என்பது.

4. கி.பி. மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி இன்றுவரை கிறித்துவம் வளர்ந்ததற்குக் காரணமாயிருப்பது, ஹெலன் சமயக் கோவில்களை இடித்தும், கோவில் நிர்வாகிகளையும், பூஜாரிகளையும், முன்னணி சமயத் தலைவர்களையும் கொன்றதன் மூலமே சாத்தியமாகியுள்ளது. எனவே, அதுபோன்ற இன்னொரு உக்கிரமான கொலைகளை நடத்திட, தடங்கல் ஏதும் இல்லை என்பது.

இத்தகைய ஆன்மீக குழப்பங்களிலிருந்து மக்கள் ஏற்றுக் கொள்ளச் செய்யும் ஓர் உக்தியை வகுப்பதற்கு முடியவில்லை. எனினும் போப் அர்பன் அவர்களின் நண்பர் ஒருவர், நான்காம் நூற்றாண்டில் (354-430 கி.பி) வாழ்ந்த பிரபல கிப்போ பிஷப் புனிதர் அகஸ்த்தீன் (Saint Augustine of Hippo) போதனையைப் போப் ஆண்டவர் முன்வைத்தார். அப்போதனைகளில் சமயப் போரினை நடத்திட, கிறித்துவர்களுக்கு உரிமை உண்டென்றும் ஆனால் அப்போர் மிகவும் கட்டுப்பாட்டுடன் நடத்தப்பட வேண்டும் என்றும் கூறப் பட்டுள்ளது. அப்போர் கீழ்க்கண்ட மூன்று நிபந்தனைகளைப் பூர்த்திசெய்வதாகவும் அமைய வேண்டும் எனவும் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

1. சட்டபூர்வ அதிகாரமுள்ள அரசன் அல்லது பிஷப் அவர்களால் போர்ப்பிரகடனம் வெளியிடப்படவேண்டும்.

2. போர் நடத்திட நியாயமான காரணம் காட்டப்பட வேண்டும்.

3. போரில் தேவைக்கு அதிகமான கொடுமைகளும் ரத்தம் சிந்துதலும் நடத்திடக்கூடாது.

எனவே புனிதப்படுத்தப்பட்ட கொடுஞ்செயல்களுக்குக் (Sanctified Violence) கிறித்துவ சமயப் புத்தகங்களில் இடம் உள்ளது எனும் முடிவிற்கு போப் ஆண்டவர் வந்தார். இப்போரினைக் கிறித்துவின் யுத்தம் (Warfare of Christ) எனும் தலைப்பில் நடத்திடவும் திட்டமிட்டார். இதுபோன்ற போர் இதற்குமுன்பு இரு சந்தர்ப்பங்களில் நடத்தப்பட்டுள்ளது என்பதையும் அறிந்து போப் அவர்கள் மகிழ்ந்தார்.

1. கி.பி. 1053ல் போப் லியோ என்பவர் நார்மன் படையினருக்கு எதிராகத் தானே படைநடத்திச் சென்றது.

2. ஐபீரிய துணைக் கண்டத்தில் இஸ்லாமிய படைக்கு எதிரான யுத்தத்தில் அலெக்ஸாண்டர் II (1061-73) எனும் போப் பங்கேற்றது.

யுத்தத்தின் பொருட்டுப் போப் ஆண்டவரின் கட்டுப்பாட்டில் பெரும்படையைத் திரட்டுவது, அதற்குத் தேவையான கூடுதல் நிதியைத் திரட்டுவது, போப் ஆண்டவரின் படைவீரர்களுக்கு 'யேசுவின் சேனை' எனும் பெயரைச் சூட்டுவது, யுத்தத்திற்கு, கடவுளின் அருளால் (Deus volt) நடைபெறும் திருச்சிலுவை யுத்தம் என்ற பெயரைச் சூட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

திருச்சிலுவை யுத்தங்கள் பதிநான்குக்கும் மேற்பட்டவை. எனினும் அவற்றில் ஒன்பது மிகவும் பிரபலமானவை. இவ்யுத்தங்கள் 11ஆம் நூற்றாண்டில் தொடங்கிப் பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை வெவ்வேறு நிகழ்வாக நடந்தன.

யூதம், கிறித்துவம், இஸ்லாம் ஆகிய மூன்று சமயங்களும் 'எல்லாம் வல்ல' ஏக இறைவனை (Monotheistic) வணங்கும் கோட்பாடுகளை உடையவை. எனினும் அவற்றிற்கு இடையே நடைபெற்ற ரத்தக் களரியும், சூறையாடலும் கணக்கற்றவை.[19] இதன் காரணமாக ஏக இறைவன் கொள்கையே கேள்விக்குறியாகி விட்டது என்பதை முன்னரே கண்ணுற்றோம். இந்தயுத்தங்கள் அனைத்தும் பாலஸ்தீனத்திலுள்ள ஜெருசலேம் நகரம் மற்றும் அதுபோன்ற பகுதிகளைக் குறிவைத்தே நடத்தப்பட்டன. ஜெருசலேம் நகரம் யூதர்கள், கிறித்துவர்கள், இஸ்லாமியர்கள் ஆகிய மூவருக்கும் புனித இடங்களாக விளங்கியது.

1. யூதர்களின் வழிபாட்டிற்காகச் சாலமன் மன்னன் கட்டிய கர்த்தருக்கான கோவில் ஜெருசலேம் நகரிலே உள்ளது. இக்கோவில், முன்பு நடந்த யுத்தங்களினால் அழிக்கப்பட்டுத் திரும்பத் திரும்பக் கட்டப்பட்டது. இதனில் ஒரு சுவர் மட்டுமே இடிபடாமல் உள்ளது. அச்சுவர்முன்பு நின்று யூதர்கள் தங்கள் வழிபாட்டை நடத்தி வருகின்றனர்.

2. கிறித்துவர்களைப் பொறுத்த அளவில் யேசு பிறந்து வளர்ந்து, சிலுவையில் அடிபட்டு இறந்து, மீண்டும் உயிர்ப்பித்த இடங்கள் இங்கே உள்ளன.

3. இஸ்லாமியர்களைப் பொறுத்த அளவில் அவர்களுடைய மூன்றாவது புனித இடம் ஜெருசலேம். இந்நகரில்தான் முகம்மது நபி (சல்) அவர்கள் தனது ஆயுள் முடிவில் நேரடியாகப் பூதஉடலுடன் வானிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இடம் உள்ளது.

ஓர் இறைக் கொள்கையைப் பின்பற்றும் மூன்று சமயங்களுக்கும் ஒருங்கிணைந்த உறைவிடமாக இருப்பதற்குப் பதிலாக ஜெருசலேம் நகரம் மூன்று வெவ்வேறு பகுதியாகப் பிளவுண்டு விளங்கியது. இதனால் கடந்த 2000 ஆண்டுகளுக்கும் மேலாக இந்நகரம் பல பேரழிவுகளைச் ஒன்றன்பின் ஒன்றாக சந்தித்து வருகின்றது. இதனைப் பழைய ஏற்பாட்டின் வசனங்களிலும் காணலாம். உதாரணத்திற்கு ஒரு சில மட்டும் கீழே :

எரோமியா அதிகாரம் - 1. வசனம் 7

> ...... ஜெருசலேம் நகருக்கு உதவி செய்வார் இல்லாமல் அவளுடைய ஜனங்கள் சத்துருவின் கைகளிலே விழுகையில் .... அவளைப் பார்த்துப் பரிகாசம் பண்ணினார்கள்.

வசனம் 10

> அவளின் (ஜெசலேமின்) இன்பமான எல்லாவற்றின் மேலும் சத்துரு தன்கையை நீட்டினான். உம்முடைய சபையிலே வரலாகாதென்று தேவரீர் விலக்கிய புற ஜாதியினர் உமது பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்ததைக் கண்டனர்.

முதலாம் திருச்சிலுவை யுத்தத்தைத் (1096 - 1099) தொடங்கி வைத்துப் போப் அர்பன் அவர்களால் வழங்கப்பட்ட 'போர்ப் பிரகடன' உரை அவ்வகையில் உலகிலே மிகச்சிறந்தது எனக் கருதப்படுகின்றது. போரில் இறந்துபடும் கிறித்துவர்கள் தங்கள் பாவங்கள் எதுவும் இருப்பின் அவை மன்னிக்கப்பட்டு நேரடியாகச் சொர்க்கம் சென்று நித்திய ஜீவனை அனுபவிப்பார்கள் என்றும், போருக்குச் செல்லும் விவசாயிகள், தாங்கள் யூதர்களிடம் கடன் வாங்கியிருந்தால் அதனைத் திருப்பிக் கொடுக்கத் தேவையில்லை என்றும், போர் வீரர்களின் வீடும் நிலமும் அவர்கள் போரிலிருந்து திரும்பி வரும்வரை வேதகோவில் நிர்வாகிகளால் பாதுகாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.[20] போப் ஆண்டவரின் இவ்யுத்த பிரகடனம் கிறித்துவ உலகம் முழுமையிலும் எதிரொலித்தது. பெரும் திரளான மக்கள் இவ்யுத்தத்தில் பங்கேற்றனர். அதே வேளையில் ஜெருசலேம் நகரில் யூதர்களும், இஸ்லாமியர்களும் ஒன்று சேர்ந்து யேசுவின் சேனையை எதிர்கொண்டனர். ஜெருசலேம் நகரம் ரத்த வெள்ளத்தில் மிதந்தது. அங்குக் காணப்பெற்ற கொடூரத்தை ஒரு கிறித்துவர் வர்ணிப்பதைப் பார்க்கலாம்.

'குவியல் குவியலாக மனிதத் தலைகளும், வெட்டப்பட்ட கைகளும் கால்களும் ஜெருசலேம் நகரெங்கும் காணப்பட்டன. நகரில் நடந்து செல்ல வேண்டுமெனின் அவற்றின் மீது மிதித்துத் தான் செல்லவேண்டும். இவைகள் எல்லாவற்றையும்விட யூதர்களின் கோவில் வளாகத்தில் நடந்தவைகள் கொடூரமானது. அதனை விவரித்தால் உங்கள் உடல் நடுங்கும், கற்பனையானதாகவும் தோன்றும், எனவே அதனைச் சுருக்கமாக மட்டுமே கூறுகின்றேன். 'அக்கோவிலில் ஒருவன் நடப்பதாயிருந்தால் அவன் முழங்கால் வரை ரத்தம் தோய்ந்திருக்கும்' என்பதே அது. (The first crusade: The chronicle of Fulcher and Chartres and other source materials பக்கம் 214 as told on page 111 of Expression of Christianity with a Focus on India, VKP வால்யும் 35, நம்பர் - 1)[21]

போரில் வேதக்கோவில்படை வென்றது. ஜெருசலேம் நகரம் 1099ல் கிறித்துவர்களின் வசமானது. அதே சமயத்தில் போப் ஆண்டவர் அர்பன் அவர்களும் இவ்வெற்றியை முழுமையாக அனுபவிக்காமல் ரோமாபுரியில் இயற்கையான மரணம் எய்தினார்.

இரண்டாவது திருச்சிலுவை யுத்தம் 1147-1149

ஐபீரியன் துணைக் கண்டத்தை இஸ்லாமியரிடமிருந்து கைப்பற்றப் போர்ச்சுக்கல் அரசனுக்கு உதவும் பொருட்டு நடத்தப்பட்டது.

மூன்றாவது திருச்சிலுவை யுத்தம் *1187-1192*

நான்காவது திருச்சிலுவை யுத்தம் *1202-1204*

ஐந்தாவது திருச்சிலுவை யுத்தம் *1217-1221*

இந்தயுத்தம் எகிப்து நாட்டை இஸ்லாமியர்களிடமிருந்து கைப்பற்ற நடத்தப்பட்டது. இதற்கான போர்வீரர்களைத் திரட்ட ஐரோப்பாவெங்கும் ஜெபகூட்டங்களும் நற்செய்தி கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தப்பட்டன. எனினும் போரில் வேதகோவில் படையினர் எகிப்திய நாட்டு அரசனால் தோற்கடிக்கப்பட்டு வீரர்கள் கொல்லப்பட்டனர். எஞ்சியவர் சரணடைந்து இஸ்லாமியராக மதம் மாறினர்.

ஆறாவது திருச்சிலுவை யுத்தம் *1228 - 1229*

ஏழாவது திருச்சிலுவை யுத்தம் *1248 - 1254*

எட்டாவது திருச்சிலுவை யுத்தம் *1270*

ஒன்பதாவது திருச்சிலுவை யுத்தம் *1271 - 1272*

இவ்வாறு பல நூறு ஆண்டுகளாக நடைபெற்ற திருச்சிலுவை யுத்தங்களில் லட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.[22] மேற்கத்திய வரலாற்றாசிரியர்கள் இறந்தோர் எண்ணிக்கையைக் குறிப்பிடவில்லை. ஜெருசலேம் மற்றும் இதர நகரிலுள்ள வீடுகளில் வசித்த இஸ்லாமியர்களும், யூதர்களும் கொல்லப்பட்டு அவர்கள் வீடுகள் கிறித்துவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டன. பாலஸ்தீன கிறித்துவர்களிடமிருந்த அங்கீகரிக்கப்படாத சுவிசேஷங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.[23]

திருச்சிலுவை யுத்தங்களின் காரணமாகப் போப் ஆண்டவரின் ஆளுகை, எதிர்பார்த்தது போன்று ஐரோப்பிய நிலப்பகுதி முழுமையும் சென்றடைந்தது. இவ்யுத்தத்தின் காரணமாகக் கிறித்துவர்கட்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையே பெரும் பகைமை ஏற்பட்டது. அதுவே இன்றுவரை உலகைப் பீடித்துள்ள பெரும் பிரச்சினைகளில் முதன்மையாக விளங்குகின்றது.

4:11 பெண்வேட்டை (Witch hunting)

கிறித்துவ சமயக் கோட்பாடுகளின்படி உலகில் காணப்படும் அனைத்துத் துன்பங்களுக்கும் சாத்தானே காரணம் எனவும், அவனே மந்திரவாதிகள், சூனியகாரிகள், வயதான பெண்கள் மற்றும் அழகிய புத்திக்கூர்மையுள்ள பெண்கள் ஆகியவர்களின் கூட்டாளி எனவும் கருதப்பட்டது. பெண்களின் உடம்பிலுள்ள மச்சம் மருக்கள் மூலமாக இரவினில் சாத்தான் அப்பெண்களின் ரத்தத்தை உறிஞ்சிக் குடித்து உலகில் வாழ்கின்றான் எனவும் நம்பினர். இத்தகைய மகா தந்திரக்காரனான சாத்தானை வென்றால் மட்டுமே நாட்டில் பஞ்சம், பசி, பட்டினி மற்றும் கொள்ளை நோய்கள் ஆகியவற்றை ஒழிக்க முடியும் எனக் கிறித்துவர்கள், குறிப்பாக அவர்களின் மத குருமார்கள் நம்பினர். எனவே 15ஆம் நூற்றாண்டு தொடங்கிச் சமீபகாலம் வரை சாத்தான் வேட்டை எனப்படும் பெண்வேட்டை கிறித்துவ நாடுகள் முழுமையிலும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது.

புனிதர் பவுல் அடிகளார் பெண்களைப் பற்றிக் கூறுமிடத்து 'அவர்கள் (பெண்கள்) தடைசெய்யப்பட்ட கனியை உண்டதன் மூலம் மனிதகுலத்திற்கு நீங்காப் பழியைக் கொண்டு வந்தனர். எனவே அவர்கள் கர்த்தரை வணங்கும் போதும், பிரார்த்தனை செய்யும் போதும் தங்களது தலையை முக்காடுபோட்டு மூடிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் ஆண்மகனின் தலை கிறித்துவின் தலைபோன்றது. பெண்ணின் தலையோ மனிதனிடமிருந்து பெறப்பட்டது (கொரி - *11:3, 9*)'. 'வேத கோவிலுக்குள் பெண்கள் அமைதியாய் இருக்க வேண்டும். அங்கு அவர்களுக்குப் பேச அனுமதி இல்லை உண்மையில் வேதக் கோவிலில் அவர்கள் பிரசங்கிப்பது ஓர் அவமானச் செயல் (கொரி - *14:34:35*).[24] ஏனென்றால் உலகில் முதலில் பெண்தான் சாத்தானால் ஏமாற்றப்பட்டாள். முதல் பாவியும் அவளே (திமோதி *2:11-14*)'.

ஏனைய கிறித்துவ குருமார்களும் எழுத்தாளர்களும் பெண்களைப் பற்றி என்ன கூறுகிறார்கள் பார்க்கலாம்.

1. 'உலகின் ஒவ்வொரு பெண்ணும் ஏவாள் போன்றவளே. நீங்கள் நரகத்திற்கான வாசல், தடை செய்யப்பட்ட ஞானப்பழத்தைப் பறித்தவள் நீயே, கர்த்தரின் தடையை முதலில் உலகில் மீறியவளும் நீயே' - 2ம் நூற்றாண்டில் வாழ்ந்த பாதிரியார் டெல்டுலியன்.

2. 'கர்த்தரின் தடையை மீறியதன் மூலம் பெண்ணாகிய நீ, ஒரு பெண்ணாக இருப்பதற்கு வெட்கப்பட வேண்டும்'. - 2ம் நூற்றாண்டில் வாழ்ந்த புனிதர் கிளிமண்ட் (Bishop of Rome St. Clement).

3. 'பெண்கள், ஆண்களின் வாழ்க்கையில் தேவையான ஒரு கெடுபொருள், ஆசைப்பட வைப்பவர்கள் அவர்களே, அழிவதற்கான சாதகிகளும், அழகிய சூத்திரதாரிகளும் அவர்களே'. - ஜான் கிரையோஸ்டாம் (கி.பி. 347-407) John Chrysostom - ஆர்ச் பிஷப், கான்ஸ்டாண்டினோபிள்.

'பெண்கள் களைப்படைந்தால் என்ன? பிரசவ நேரத்தில் (ஆதிபாவம் புரிந்ததற்காக) அவர்கள் இறந்தால் என்ன? அது போன்று துயரப்பட்டு இறப்பதற்காகவே அவர்கள் இவ்வுலகில் உள்ளார்கள்'. - மார்ட்டின் லூதர், அகில உலக புராட்டஸ்டண்ட் மதஸ்தாபகர் (1483-1546) (Martin Luther Works 20:84)

பெண்களுக்கெதிரான இத்தகைய அடிப்படைவாதக் கருத்துக்கள் காரணமாக அவ்வினம் ஐரோப்பிய நாடுகளில் பல நூற்றாண்டுகளாக அனுபவித்த கொடுமைகளைச் சொல்லி மாளாது. எனினும் அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே காணலாம்.

பெண் வேட்டை: வெறுப்பின் காரணமாகப் பெண்கள் மீது வேதக்கோவில் ஆயர்களால் கிபி 1450ல் தொடங்கி 300 வருட காலமாகப் பெரும் கொடுமைகள் இழைக்கப்பட்டன. அவர்கள் மீது (ஆதிசாபத்தைத் தவிர) கூடுதலாகச் சில குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டன.

1. பெண்களின் இயற்கையான சுபாவமே சாத்தானையும், பேய், பிசாசுகளையும் வணங்குதல் செய்வதே.

2. உலகில் சாத்தானின் பிரதிநிதி பெண்களே.

3. பெண்கள் மகா சூனியகாரிகள், மந்திரவாதிகள், மகா தந்திரக்காரிகள்.

4. மனிதனின் உடல்நலம் கர்த்தடமிருந்தே பிரார்த்தனை மூலமும் நோன்பு மூலமும் மட்டுமே பெறப்பட வேண்டும். பாட்டி வைத்தியம் மூலம் அல்ல.

5. பாட்டி வைத்தியம் மூலமாகவும், மூலிகைகளைக் கொண்டும் வியாதிகளைச் சுகமாக்குவது, சாத்தான் இவர்களுக்கு வழங்கிய பெரிய தந்திர மந்திரத்தால் ஆனது.

6. பெண்களின் அழகும், அறிவும், புத்தி கூர்மையும், ஆண் மகனை ஏய்ப்பதற்காகச் சாத்தானால் வழங்கப் பட்டவை.

குடும்பத்திற்காகவும் தனது கணவன், மகன், மகள்,பேரக் குழந்தைகள் நலனுக்காகவும் பாடுபட்டு உழைத்து, உழைத்து, ஓடு ஆகி, அழகும் உடல்நலமும் இழந்து, கூனிக் குறுகி உடல் சதைகளெல்லாம் தொங்கி நொய்ந்த பாட்டிகளும் சாத்தான் வடிவமாகக் காணப்பட்டனர்.[25] போப் ஆண்டவர் கிபி. 1488 ஆம் ஆண்டில் வெளியிட்ட பிரகடனத்தில் (Papal Bull) சூனியகாரிகள், வேத கோவில்களை அழிக்க, சாத்தானுடன் ஒப்பந்தம் செய்துள்ளதாகவும், இக் கூட்டுறவை ஒழிக்க அனைத்து ஆண் மக்களும் ஒன்றுசேர வேண்டும் எனவும் ஆணையிட்டார். குடும்பத்திற்குள்ளும், ஊரினில் அல்லது நாட்டில் ஏற்படும் அனைத்து நோய், பஞ்சம், பசி, பக்கத்து வீட்டுக்காரனுக்கு ஏற்பட்டுள்ள வியாபார நஷ்டம் ஆகியவற்றிற்கும் சூனியக்காரிகளே காரணம் எனப் பழி சுமத்தப்பட்டது.

கறுப்பு நிறப் பூனைகளும் சாத்தானின் வடிவமாகக் கருதப்பட்டது. சூனியக்காரப் பெண்களுடன் சேர்த்து இவைகளும் கொல்லப்பட்டன.

பெண்வேட்டைக் காலத்தில் யாரும் எந்தப் பெண்ணையும், சூனியக்காரி எனப் பிரகடனப்படுத்தலாம். மனைவியை ஏற்றுக் கொள்ளாத கணவன் அவளைச் சூனியக்காரி எனலாம். தகப்பன் மகளையும், மகன் தாய் தங்கையரையும், பக்கத்து வீட்டுக்காரன் தனக்கு இணங்காத பக்கத்து வீட்டுப் பெண்ணையும் இதன் மூலம் தீர்த்துக்கட்ட முடியும். இதைத் தவிர, பெண்களின் உடலில் மச்சம், மரு, தழும்புகள், தடிப்புகள் ஆகியவை இருந்தால் அப்பெண்

சாத்தானிடம் இரவில் உறவு கொண்டு, அத்தழும்புகள் வாயிலாகச் சாத்தானுக்கு இரத்தம் வழங்கி அவனை இவ்வுலகில் வாழவைப்பதாகவும் நம்பினர். சாத்தானை உலகிலிருந்து ஒழிக்க வேண்டுமெனில் இத்தகைய பெண்கள் கொல்லப்பட வேண்டும் எனவும் வேதக்கோவில் பணிவிடையாளர்களால் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வேட்டையின் போது இதுபோன்ற தழும்புகள் இல்லாவிடினும் குற்றம் சாட்டப்பட்ட பெண் நடுவீதியில் நிர்வாணமாக நிறுத்தி வைக்கப்பட்டு உடலில் உள்ள அத்தனை முடிகளும் சிரைக்கப்பட்டு ஏதாவது மச்சம், மரு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு சூனியக்காரி என அறிவிக்கப்படுவாள். பல்வேறு சித்ரவதைகள் மூலம் அவளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படும். இவ்விதமான சித்ரவதையின் போதே பல பெண்கள் இறந்து பட்டனர். இறந்து படாதவர்கள் பொது இடங்களில் வைக்கோல் அல்லது நிலக்கரி அல்லது விறகுகளின் மீது உயிருடன் வைத்து எரிக்கப்பட்டனர். எரிப்பதற்கு முன்னர் மேற்படிப் பெண்கள், சுற்றி உள்ளவர்களிடம் உண்மையைச் சொல்லாமலிருக்க நாக்கை வெட்டினர். (பார்க்கவும்: The Women's Encyclopedia of Myths and Secrets by Walker, 1083)

1. ஒருதடவை உடல்நலம் இன்றி இருந்த ஆர்ச் பிஷப் (St. Andrews), பைரிகிம் எனும் ஊரிலுள்ள அலிசோன் என்ற பெண்ணைத் தனக்கு வைத்தியம் செய்ய அழைத்து வரச் செய்தார். வைத்தியம் முடிந்தபின் அப்பெண்ணுக்குப் பணம் கொடுக்காததோடு அவளை மந்திரக்காரி என உயிருடன் எரித்து விட்டார்கள் (Baroja, The World of Witches).

2. வீர அழகி ஜோன்ஆப் ஆர்க் (1412) என்பவர் இன்றைக்கு 600 ஆண்டுகளுக்கு முன்னர் பிரான்ஸ் நாட்டில் பிறந்தார். அவர் தனது 16வது வயதில் படை திரட்டிக் கொள்ளையர்களை அடக்குதல், உள்நாட்டுக் கலகத்தை அடக்குதல் ஆகிய வீரச் செயல்களைச் செய்தார். அன்று நடைபெற்ற வாரிசுரிமைப் போரில் ஆங்கிலேயப் படையை எதிர்கொண்டு பிரான்ஸ் நாட்டு வெற்றிக்கு அடிகோலினார். ஒரு போரில் ஆங்கிலப்படைகளால் இவர் சிறைப்பிடிக்கப்பட்டு மதகுருமார்களின் மன்றம் இவரை விசாரித்து இப்பெண்ணின் வீரம் சாத்தானால் வழங்கபட்டதெனவும் 'ஜோனை'



வீர அழகி ஜோன் ஆப் ஆர்க்

மந்திரவாதி, சூனியக்காரி என்றும், சமயக் கோட்பாடுகளுக்கும், திருச்சபைக்கும் புறம்பானவள் என்றும் வசைமாரி பொழிந்து அவளது 19 வயதில் தீயிலிட்டு எரிக்கப்பட்டாள். (தினத்தந்தி 30.5.2012) எரிந்த தீயினை மிகவும் சிறியதாக வளர்த்து அதில் ஜோனை நிற்க செய்து எரித்தார்கள். உடல் எரிந்து சாவதற்குப் பல மணிநேரம் ஆனது. பல மணி நேரம் அலறியே இறந்தாள். (Matt Williams, Blood, Blasphemy and the Burning Bishops.)

3. போப் இன்னோசன்ட் VIII, (Pope Innocent VIII) தனது 1484ஆம் ஆண்டு உத்தரவின்படி பெண் வேட்டைக்குத் தனது ஆசீர்வாதத்தை வழங்கினார்.

4. ஐரோப்பியக் கிறித்துவ நாடுகள் முழுவதிலும் நடமாடும் பெண் வேட்டை நீதிமன்றங்கள் பல இருந்தன. அவற்றில் முதன்மையானது ஸ்பிரிங்கர் (Sprenger) என்பவர் தலைமை வகித்த நீதிமன்றம் (18ம் நூற்றாண்டு). இவர் பெண்களின் புத்திகூர்மையைச் சாத்தான் வழங்கியுள்ள ஆயுதம் எனப் பிரசங்கித்தார். பெண்களை ஆங்கிலத்தில் Femina எனப் அழைப்பதில் Fe என்பது இறை நம்பிக்கையையும், mina என்பது minus (இல்லாதது) என்பதின் சுருக்கம் என்றும் கூறினார். இவ்வாறு பெண் சமுதாயம் முழுமையுமே கர்த்தர் மீது நம்பிக்கையில்லாத, பாவப்பட்ட ஜென்மாக்கள் என அக்காலத்தில் உருவகப் படுத்தப்பட்டது.

சமீபத்தில்கூட ஸ்பெயின் நாட்டுத் தலைநகரில் (மாட்ரிட்) சாலை அபிவிருத்திப் பணியின்போது நீண்ட கருப்பு

நிறப் பொருள்களால் நிரப்பப்பட்டிருந்த 150 அடி நீளமுள்ள நீண்ட பள்ளம் ஒன்றினைக் காண நேர்ந்தது. அதனை முதலில் ஒரு நிலக்கரிப் படிவம் கண்டுபிடிக்கப்பட்டதாய்க் கருதினர். ஆனால் நீண்ட ஆய்விற்குப் பின்னர் அவைகள் திருசிலுவையின் எரியூட்டும் இடங்கள் என அடையாளம் காணப்பட்டன. அவைகளில் பெரியவர்கள், குழந்தைகள் எனப் பல்வேறு வயதினர் எரிக்கப்பட்டு அவர்களின் சாம்பலும் எலும்பும் புதையுண்டுள்ளது கண்டுபிடிக்கப் பட்டது. நிலக்கரியில் உண்டாக்கப்பட்ட தீயினால் அரைகுறையாய் எரிந்த மனிதக் கொழுப்பு, முடிகள், உடைகள் ஆகியன கலந்து மக்கிக் கருப்பு நிறக் களிம்பு போல் தோற்றமளித்துள்ளன. இந்த ஓர் இடத்தில் மட்டும் ஆயிரக்கணக்கானோர் எரியூட்டப்பட்டிருக்கக் கூடும். ஸ்பெயின் நாட்டில் இத்தகைய எரியூட்டும் சம்பவம் ஊரின் மத்திய பகுதியில் விடுமுறை நாட்களில் மேற்கொள்ளப் பட்டது. எரிக்கப்பட்டோரில் பெரும்பான்மையோர் பெண்கள். இவ்வாறு தண்டிக்கப்பட்டவர்களின் வீடும், நிலமும், அபராதப் பொருளாக வேதகோவிலுக்கு வந்து சேர்ந்து விடும். இதன்மூலம் வேத கோவிலின் செல்வம் பெருகியது. எனவே இவ்வேட்டை, வேதகோவில் நிர்வாகி களால் மேலும் மேலும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது.[26]

ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் இத்தகைய வேட்டைகள் தங்குதடையின்றிச் சமீபகாலம் வரை (இருபதாம் நூற்றாண்டுவரை) நடந்து வந்துள்ளது. இவற்றினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் பெண்கள் மட்டுமன்றி உடல் குறைபாடுகள் உள்ளவர்களும் இதில் அடங்குவார்கள்.

1. கிழவர்கள், கிழவிகள்கொல்லப்பட்டனர். (வீட்டில் கிழவர்கள் கூடாது - I சாமுவேல் - 2:31, 32)

2. குருடர்களும் நொண்டிகளும் கொல்லப்பட்டனர். (குருடர்களும், நொண்டிகளும் கர்த்தருக்கு ஆகாது. லெவி 21:17-20)

3. புத்திசுவாதீனம் இல்லாதவர்களும், அறிவாளிகளும் கொல்லப்பட்டனர் (கிறுக்கர்களையும், அறிவாளிகளையும் கொல்லவும் - லெவி 20:27)

4. அழகுள்ள பெண்கள் ஆபத்தானவர்கள் (அழகு ஆபத்தானது, நீதி 31:30).

மொத்தத்தில் இவ்வாறாக 90 லட்சம் பெண்கள் சூனியகாரிகள் என 1484 ஆம் ஆண்டு தொடங்கி 300 வருடகாலத்தில் கிறித்துவ உலகில் கொல்லப்பட்டனர். (பெண் வேட்டையைப் பற்றி மேலும் அறிந்திட விரும்புவோர் Women, Church and State ISBN 81-85990-46-8 பார்க்கவும்)

4:12. தெய்வீக விசாரணை (Inquisition)

கத்தோலிக்க குருமார்கள், தங்களது சமயத்தினர் பைபிள் வாசிப்பதை 16 ஆம் நூற்றாண்டுவரை தடை செய்திருந்தனர். போப் ஆண்டவர் மற்றும் பிஷப்புகள் வழங்கும் அறிவுரையே வேதவாக்கியமாகக் கருதப்பட்டது. அத்துடன் ஆயர்களும் பேராயர்களும் தெய்வ அம்சமாகக் கருதப்பட்டு அவர்களுக்குப் பொதுமக்கள் செய்யும் பணிகள் தெய்வீகப் பணியாகக் கருதப்பட்டன. எனினும் இந்நம்பிக்கைக்குக் கிறித்துவர்கள் மத்தியிலும் புற சமயத்தார் மத்தியிலும் ஆங்காங்கே எதிர்ப்புகளும் தோன்றின. இத்தகைய எதிர்ப்புகளைச் சமாளிக்க, சமயக் குருமார்களுக்கு ஒரு கருவி தேவைப்பட்டது. அக்கருவியே 'தெய்வீக விசாரணை'. வேதகோவில் நிர்வாகிகளுக்கு எதிராக எழுதுதலும், பேசுதலும், மதமாற்றத்தை எதிர்ப்பவர்களும், பலவந்தமாய் மதமாற்றப்பட்டவர்கள் இரகசியமாய்ப் பழைய வழிபாட்டுமுறையை மேற்கொள்பவர்களும், யூதர்களும், இஸ்லாமியர்களும், இந்துக்களும் இத்தெய்வீக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இவ்விசாரணையின்போது குற்றவாளிகள் என அடையாளம் காணப்பட்டவர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

1. இரண்டு மூங்கில்களுக்கு இடையே தலைகீழாகக் கட்டி, மூங்கில்களை இழுத்து உடம்பை இரண்டாகப் பிளத்தல்.

2. ரம்பங்களை உபயோகப்படுத்தி உடல் பாகங்களைத் துண்டு துண்டாக வெட்டுதல்.

3. இயந்திரங்களுக்கு இடையே உடலை வைத்துச் சுழல் ஆணியைத் திருக்கிக் கொல்லுதல்.

4. தீயிலிட்டுக் கொல்லுதல்.

இதற்கான குற்றவாளிகளை அடையாளம் காணுதலும், கைது செய்து, விசாரணை மேற்கொண்டு தீர்ப்பு வழங்குதலும் வேதகோவில் குருமார்களால் மேற்கொள்ளப்பட்டன. விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றும் பொறுப்பு அரசினைச் சாரும். இவ்வாறு சமய குருமார்களும், அரசின் நிர்வாக இயந்திரமும் இணைந்து இத்திட்டத்தினை நிறைவேற்றினர். முதலாவதாக இத்தகைய நீதிமன்றங்கள் 12 ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் தொடங்கிப் பின்னர் ஐரோப்பிய நாடுகள் அனைத்திற்கும் பரவியது. அதன்பின்னர் ஐரோப்பியர்களின் காலனி நாடுகளுக்கும் இக்கொடூரம் பரவியது. இவ்விசாரணை மன்றங்கள் 700 ஆண்டுகளாகச் செயல்பட்டுவந்தன பெரும் எதிர்ப்பின்காரணமாக 19ஆம் நூற்றாண்டில் இவை கைவிடப்பட்டன. கத்தோலிக்க குருமார்கள் மட்டுமின்றிப் புரொட்டஸ்டன்ட் சமய நிர்வாகிகளும் இவ்விசாரணை மன்றங்களை நடத்தினர். இதற்கெனப் போப் ஆண்டவர் கிரிகரி X (1271-76) என்பவர் Dominic Order எனும் திருக்குழுவை நியமித்தார். இதற்கெனத் தெய்வீக ஆணை (Papal Bull) ஒன்றும் போப் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டது. அவ்வாணையில், அன்றைய காலகட்டத்தில் ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட கடும் குளிருக்கும், பஞ்சம், பசி, பட்டினி, பிளேக் நோய் அனைத்திற்கும் தெய்வீக திருக்குமரன் (யேசு) பிரசங்கித்த சமய ஆச்சாரங்களை மக்கள் அனைவரும் சரிவர பின்பற்றாமையே காரணம் என அறிவிக்கப்பட்டது. சமய ஆச்சாரங்களைக் கடைப்பிடிக்காதவர்கள் கண்டுபிடிக்கப் பட்டுக் கொல்லப்பட்டு நாடுகள் சுத்தப்படுத்தப்பட்டாலே மேற்கண்ட குறைபாடுகள் அகலும் எனவும் அறிவிக்கப் பட்டது.

இவ்விசாரணைகளைத் தீவிரமாக நடைமுறைப்படுத்திய நாடுகளில் முன்னிலை வகித்தவை ஸ்பெயின் மற்றும் போர்ச்சுக்கல் ஆகியன.[27] இவ்விருநாடுகளும் 1492ல் இஸ்லாமிய ஆட்சியைத் தங்களது பூமியிலிருந்து அகற்றியதை முன்பே பார்த்தோம். இஸ்லாம் அந்நாட்டில் அன்றுமுதல் தடைசெய்யப் பட்டது. தெய்வீக விசாரணை இவ்விருநாடுகளிலும் 1496 முதல் அமல் செய்யப்பட்டது. தெய்வீக நீதிமன்றங்கள்மூலம் ரகசியமாய் இஸ்லாம் சமயத்தைப்

பின்பற்றுபவர்கள் அடையாளம் காணப்பட்டு விசாரிக்கப்பட்டுப், பலர் முன்னர் கொல்லப்பட்டனர். இதன் ஒரு பகுதியாகப் போர்ச்சுகீஸிய அரசன் மானுவல் அந்நாட்டிலிருந்த யூதர்கள் அனைவரும் பத்துமாத காலத்திற்குள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் எனவும் ஆணையிட்டார். அவ்விதம் வெளியேறும் யூதர்கள் தங்கள் வீடு, நிலங்களையும் குழந்தைகளையும் வேதகோவிலில் ஒப்படைத்துச் செல்ல வேண்டும் எனவும் உத்தரவிட்டான். தங்கள் குழந்தைகள் வேத கோவிலில், கிறித்துவுக்குள் வளர்க்கப்படுவதைவிடச் சாவதேமேல் எனக் கருதி யூதர்கள் தங்களது குழந்தைகளைத் தாங்களே நீர்நிலைகளில் அமிழ்த்தியும், துண்டுதுண்டாக வெட்டியும், தரையில் அடித்தும் கொன்றுவிட்டு இந்தியா போன்ற நாடுகளுக்கு அகதியாய்ச் சென்று குடியேறினர்.

பேர்ச்சுகீஸிய அரசிற்கு அன்று காலனியாய் விளங்கியவை பிரேசில் (Brazil) நாடும், இந்தியாவின் கோவா பகுதியும். இப்பிரதேசங்களுக்கும் தெய்வீக விசாரணை பின்னர் விரிவாக்கப்பட்டது. விசாரணையைக் கோவாவிற்குக் கொண்டுவந்த பெருமை புனிதர் பிரான்ஸிஸ் சேவியர் (St. Xaviour) எனும் பாதிரிக்குச் சேரும்.

புனிதர் பிரான்ஸிஸ் சேவியர் (1504-1552) என்பவர் 16ம் நூற்றாண்டில் கிறித்துவத்தைப் பரப்ப இந்தியாவுக்கு வருகை தந்த ஸ்பெயின் நாட்டுப் பாதிரியார். இவர் இந்தியா வருகைதந்தபோது மொகலாயர்களின் ஆட்சி (ஷெர்ஷா - ஹுமாயின்) இந்தியாவில் செயல்பட்டுவந்தது. எனினும் அவ்வாட்சி திறம்பட இன்மையால் அதன் நிர்வாகம் ஆக்ரா. டில்லி என்றளவிலே நின்றது. தென்னிந்தியாவில் பல சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். மத்திய இந்தியாவை அகமத்நகர், பிஜாபூர், கோல்கொண்டா சுல்தான்களும், துங்கபத்ரா நதிகரையில் விஜயநகரப் பேரரசும் (ராமராயர் காலம்) ஆட்சி புரிந்து வந்தன. அதன் நிர்வாகமும் இந்தியாவின் தென்கோடி வரை முழுமை பெற்றிருக்கவில்லை. இக்காலத்தில் தடியெடுத்தவன் தண்டல்காரன் (வரிவசூலிப்பவன்) எனும் பழமொழிக்கேற்ப, கடலோர வர்த்தகம் முழுமையும் இஸ்லாமியர் வசமே இருந்தன. கடற்கரையோர மக்கள் பரதர் என அழைக்கப்பட்டனர். கடல் தொழிலிலும், உடல்

வலிமையிலும் இம்மக்கள் சிறந்தவர்கள். பிற்காலச் சோழர்கள் காலத்தில் (ராஜராஜன் - ராஜேந்திர சோழன்) மிகச் சிறப்பாய் விளங்கிய கப்பற்படையில் இவர்கள் போர்வீரர்களாய் இருந்தவர்கள். இவர்கள் தீவிர இந்துக்களாய் விளங்கி வந்தனர். தூத்துக்குடி அருகிலுள்ள காயல் எனும் கிராமத்திலிருந்துதான் முன்பு மதுரை மீனாட்சி அம்மன் கோவில் திருவிழா கொடியேற்றத்திற்கு மீன் சின்னம் பொறித்த கொடி எடுத்துச் செல்லப்படும் என்பது இப்பகுதி மக்களிடையே இன்றும் கர்ண பரம்பரைாய் வழங்கிவரும் செய்தி.

இத்தகைய சூழலில் புனிதர் பிரான்சிஸ் சேவியர் போர்ச்சுகீஸிய காலனியாக விளங்கிய கோவாவிற்கு 1541 ல் வந்து சேர்ந்தார். கோவாவிற்குப் புறப்படும் முன் 'போப் ஆண்டவர் பவுல் III என்பவரைச் சந்தித்து ஆசிபெற்றார்.

அன்றைய காலத்தில் தென்னிந்தியாவின் தெற்கு, தென் கிழக்கு தென்மேற்கு, பகுதிகளில் திருவிதாங்கூர் அரசின் ஆட்சி நடைபெற்று வந்தது. இவ்வரசர் கடலோர மக்களின் நல்வாழ்வைக் கவனிக்கத் தவறிவிட்டார். மீன், கருவாடு வர்த்தகத்தில் திறமை மிக்க இஸ்லாமியர்கள் கடல் பொருள்களுக்குச் சரியான விலை கொடுத்து வாங்காததோடு, மீனவ மக்களின் இல்லற வாழ்விலும் தலையிட்டுச் சீரழித்தனர். எனவே கடலோர மக்கள் ஆயிரக் கணக்கில், அப்போது மலபாரில் தங்கியிருந்த பிரான்சிஸ் சேவியரை அணுகித் தங்களுக்குப் பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும், அதன்பொருட்டுக் கிறித்துவ சமயத்திற்கு மாறவும் தயார் எனவும் அறிவித்தனர். அவ்வாறே போர்ச்சுகீஸிய கடற்படை இம்மக்களுக்குப் பாதுகாப்பளித்துத் துன்பத்தைக் களைந்தது. இவ்வாறு மதம் மாறிய மீனவர்களின் தமிழ்ப் பெயர்கள் முற்றிலும் மாற்றப்பட்டுப் போர்ச்சுகீஸிய பெயர்கள் சூட்டப்பட்டன. அச்சமுதாயத்தினர் பெயரும் பரதர் என்பதிலிருந்து பெர்னான்டோ (Fernando) எனவும் மாற்றப்பட்டது.

இதனால் பெரும் உற்சாகமடைந்த சேவியர் தனது பணிகளை இந்தோனேஷியா, மலாக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கும் விரிவுபடுத்தத் திட்டமிட்டார். இவரின் வழிச்செலவு முழுவதும் போர்ச்சுகீஸிய அரசினரால் ஏற்றுக்

கொள்ளப்பட்டது. போர்ச்சுகீஸிய நாட்டுப் பிரதிநிதி என்ற வகையில் இவர் எந்த நாடு சென்றாலும் சிவப்புக் கம்பள வரவேற்புப் பெற்றார். எனினும் ஒரு தடவை சைனா நாட்டிற்குப் பயணம் செய்யும் பொருட்டுக் குவான்டுங் தீவில் கப்பலுக்காகக் காத்திருக்கும் தருணத்தில் தீராத காய்ச்சல் காரணமாக உயிரிழந்தார். கிறித்துவ சமயத்திற்கு இவர் ஆற்றிய சேவையை நினைவுகூறும் பொருட்டு, இவரது பூதஉடல் கோவா கொண்டுவரப்பட்டுப் புனிதன் என அறிவிக்கப்பட்டு அங்குள்ள பிரபல வேதகோவிலில் கண்ணாடிப் பேளைக்குள் வைக்கப்பட்டு இன்றும் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

புனிதர் பிரான்சிஸ் சேவியர் இந்துக்களை மதமாற்றம் செய்வதிலும், இஸ்லாமிய மற்றும் அகதியாய் இந்தியா வந்து சேர்ந்த யூதர்களையும் கோவா அரசின் சார்பில் அடக்கி ஒடுக்குவதிலும் மிகத் தீவிரமாய்ச் செயல்பட்டார். இவர் 1543ல் ரோமானிய யேசு சபைக்கு எழுதிய கடிதத்தில் அன்றைய இந்தியாவின் சமுதாய நிலவரத்தைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

‘இந்தியாவில் பிராமணர்கள் எனும் ஒரு பிரிவினர் உள்ளனர். கடவுள் வழிபாட்டை நடத்துவதும், இந்து கோவில்களைப் பராமரிப்பவர்களும் இவர்களே. இவர்கள் மட்டும் இந்தியாவில் இல்லாதிருந்தால் இந்தியர் அனைவரையும் யேசுவை ஏற்றுக்கொள்ள வைக்க எளிதில் முடிந்திருக்கும்.’

‘கோவாவில் இப்பொழுது இஸ்லாமியர்களும், இந்துக்களும், யூதர்களும் நம் மதத்திற்கு மாறாததுடன், அவர்களது சமயக் கலாச்சாரத்தை மேற்கொண்டு வாழ்கின்றனர். எனவே இவர்களைக் கட்டுப்படுத்தத் தெய்வீக விசாரணை உட்படத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தாங்கள் மேற்கொள்ளுங்கள்’ என 16.5.1545ல் போர்ச்சுகீஸிய அரசனுக்கும் ஒரு கடிதம் எழுதினார். இதனால் வெகுண்டு எழுந்த போர்ச்சுகீஸிய அரசன் ஜான் III, கோவாவிலுள்ள தனது கவர்னருக்குக் கீழ்க்கண்ட உத்தரவை வழங்கினான்.

‘கோவில்களும் சிலைகளும் உடைக்கப்பட வேண்டும். கோவில் விழாக்கள் தடுக்கப்பட வேண்டும், விக்கிரகங்களைச்

செய்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். பிராமணர்களுக்கும், அவர்களை ஒளித்து வைப்பவர்களுக்கும் அதிகபட்சத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.’

‘இந்து திருவிழாக்களின்போது பாட்டுக்களோ, பஜனைகளோ பாடப்படக்கூடாது, வெற்றிலை பாக்கு வினியோகம் செய்யக்கூடாது, பந்தல் அமைக்கக் கூடாது, முன்னோர்களுக்குத் திவசம் செய்யக்கூடாது, அறுவடைத் திருநாளைக் கொண்டாடக் கூடாது, ஏகாதசி விரதம் போன்றவை அனுசரிக்கக் கூடாது, வீடுகளில் தென்னையும், துளசியும் வளர்க்கக் கூடாது, இறந்தவர்கள் வீடுகளில் சாணம் கொண்டு பூசுதல், முட்டிற்குக் கீழே வேட்டி அணிதல், பெண்கள் மேலாடை அணிதல் போன்றவை அனுமதிக்கபடக் கூடாது’ என்றும் கட்டளையிட்டான்.

‘இந்தியர்களும் கருப்பு, அவர்கள் வணங்கும் தெய்வங்களும் கருப்பு, அத்தகைய சிலைகளை நம் மதத்திற்குப் (கிறித்துவத்திற்கு) புதிதாய் மாறியவர்கள் போட்டு உடைக்கும் போது எனக்கு ஏற்பட்ட மனதிருப்திக்கு அளவே இல்லை’ எனவும் புனிதர் பிரான்சிஸ் சேவியர் கூறினார்.

போர்ச்சுகீசியர் வசமிருந்த பகுதிகளில் அமல் செய்யப்பட்ட தீவிர கிறித்துவ மதமாற்றத்திற்கு அஞ்சி இஸ்லாமியர், யூதர்கள் மற்றும் பிராமணர்கள் அப்பிரதேசத்தை விட்டு ஓடினர்.

போர்ச்சுகீஸிய அரசனுக்குச் சேவியர் எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து, கோவாவில் தெய்வீக விசாரணை அவர் இறந்த பிறகு, 1560ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டது. கிறித்துவத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இருட்டறையில் அடைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். பலர் தீயிலிட்டு எரிக்கப்பட்டனர். இக்கொடுமையிலிருந்து பெண்களும் குழந்தைகளும் கூடத் தப்பிக்க முடியவில்லை. கிறித்துவத்தின் பெயரால் நடத்தப்பட்ட இக்கொடுமை உலகில் எங்குமே நடந்திருக்காது எனலாம். இக்கொடுமைகளைப் பற்றிப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றினைச் சொல்லி மாளாது. இத்தெய்வீக விசாரணை 1812ம் ஆண்டுவரை கோவாவில் தொடர்ந்தது. இத்தகைய கொடுமைகளுக்குக் காரணமாயிருந்த

சேவியர் அவர்களைப் பாராட்டுமுகமாக மதகுருமார்கள் அன்னார் பெயரில் ஏராளமான வழிபாட்டுத் தலங்களும் கல்விச்சாலைகளும் அமைத்துள்ளனர்.

4:13. அடிமை வியாபாரம்

போரின் மூலமோ, பொருளாதாரக் காரணங்களினாலோ ஒருவன் மற்றவனுக்கு அடிமையாகிக் குற்றேவல் செய்வதை வரலாற்று நூல்களின் பல பக்கங்கள் காட்டி வருகின்றன. ஆனால் அவ்வடிமையை, வியாபாரப் பொருளாக்கி அவனைக் கடைச் சரக்கு போல் விற்பதும் வாங்குவதும் எந்த நாட்டுக் கலாச்சாரத்திலும் இருந்தது இல்லை. அடிமை வியாபாரத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை போர்ச்சுக்கல் நாட்டிற்குச் சாரும் (1452). இந்நாடு தீவிர கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றிய நாடு - திருக்குமரனின் சமயக் கோட்பாடுகளை வைராக்கியமாகக் கடைபிடித்த நாடு. அடிமை (ஆண் / பெண் / குழந்தைகள்) வியாபாரம் இறைவனால் ஆசிர்வதிக்கப்பட்ட தொழில் எனவும் அதனைக் கடைப்பிடிக்க வெள்ளையர்களுக்குத் தெய்வீக அனுமதி இருப்பதாகவும் அவர்கள் கருதினார்கள். அடிமைத்தனம் பிறவியால் வருவதே, அடிமைக்குப் பிறந்தவன் அடிமையே எனும் கொள்கையும் கொண்டிருந்தனர்.

'உனக்குள்ள ஆண் அடிமையையும், பெண் அடிமையையும் சுற்றிலும் இருக்கின்ற புறஜாதிகளாய் இருக்க வேண்டும். அவர்களில் நீ ஆண் அடிமைகளையும், பெண் அடிமைகளையும் விலைக்கு வாங்கலாம் - லெவி 25:44.

அடிமைகளை நடத்த வேண்டிய விதம் கர்த்தரால் யாத்திரகாமம் 21:2-6, 20, 21, லூக்கா 12:47, 48லும் அடிமைகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது எபேசியர் 6:5லும், I தீமொத்தேயு 6:1, 2லும் கொடுக்கப் பட்டுள்ளது. மேலும் அடிமையின் இல்லற வாழ்க்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது யாத்திரகாமம் 21:5,6ல் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

'ஓர் அடிமை தன் மனைவி மக்களுடன் - எஜமானன் வீட்டில் நிலையாகத் தங்க விருப்பப்பட்டால், அத்தகைய அடிமையின் காதில் எஜமானன் கம்பி கொண்டு குத்த வேண்டும் (அவன் செவிடாக்கப்பட வேண்டும்)'.

போர்ச்சுகீஸியர்கள் தங்களது படைபலத்தால் இதர நாடுகளை அடிமைப்படுத்திய தருணத்தில், அங்குள்ள நிலங்களைச் சீர்திருத்தம் செய்து சாகுபடிக்குக் கொண்டுவரப் பெருமளவில் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். தொழிலாளர்களை அடிமை வியாபாரமாகக் கொண்டால் பெரும் பலன் கிடைக்கும் என்பதால் - போப் ஆண்டவரைக் கலந்தாலோசித்து ஒரு தீர்வு தேடினர். நிக்கோலஸ் V எனும் போப் ஆண்டவர் 'டம் டிவர்ரஸாஸ்' (Dum Diaversas) எனும் ஓர் தெய்வீக ஆணை ஒன்றை வெளியிட்டார். அதில் உருவவழிபாட்டு மக்களைப் பரம்பரை அடிமையாய்க் கொள்ளலாம் என அனுமதி வழங்கப்பட்டது. இவ்வடிமைத் தொழிலை வரன்முறைப் படுத்திட மேலும் ஒரு தெய்வீக ஆணை (Romans Pontift Bull) 1455ல் வெளியிடப் பட்டது. இவ்வாணைகளால் ஐரோப்பிய நாடுகளில் அடிமை வியாபாரம் மேலோங்கியது. போர்ச்சுக்கலைப் பின்பற்றி டச்சுக்காரர்களும் ஸ்பெயின் நாட்டினரும் தங்களது காலனிகளாகிய, பிரேசில் மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கும் ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகளை வாங்கிக் கொண்டு சென்றனர். இவ்வடிமைகள் கரும்பு, பருத்தி, காப்பித் தோட்டங்கள் அமைக்கவும், பயிரிடவும் உபயோகப்படுத்தப் பட்டனர். ஆங்கிலேய (பிரிட்டிஷ்) அரசும் தன் பங்கிற்கு அடிமை வியாபாரத்தைத் தொடங்கியது. ஆப்பிரிக்காவில் அடிமைகளைக் காடுகளில் தேடிப்பிடித்துக் கப்பல்களிலேற்றிப் பிரிட்டன் கொண்டுவரும் பொருட்டு 'ராயல் ஆப்பிரிக்கன் கம்பெனி' (Royal African Company) ஒன்றை 1672ம் ஆண்டில் தொடங்கியது. அடிமைகள் வேறு நாடுகளுக்கும் விலைக்கு விற்கப்பட்டனர். கப்பலில் அடிமைகள் விற்பனைக்குக் கொண்டு வருவதைத் துண்டுப் பிரசுரம் மூலம் பிரிட்டனில் விளம்பரம் செய்யப்பட்டது.

ஆப்பிரிக்க நிலப்பகுதியில் வடமேற்கில் அமைந்திருப்பது செனகல் எனும் நாடு - இதன் தலைநகராகவும், துறைமுகமாகவும் விளங்குவது 'டாகர்' எனும் நகரம். இந்நகரிலிருந்து 10 நிமிட கடல் பயணத்தில் (3 கி.மீ) உள்ளது

'கோரி' எனும் தீவு. உத்தேசமாக 900மீட்டர் நீளமும், 300 மீட்டர் அகலமும் கொண்டது இக்குட்டித் தீவு. இத்தீவிலிருந்து கப்பல் மூலம் அமெரிக்கா, ஐரோப்பாப் பகுதிகளுக்கு நேரடியாகப் பயணம் செய்யலாம். இத்தீவிலிருந்து தான் ஆப்பிரிக்க நாட்டுக் கருப்பர்களைத் தங்களின் காலனி நாடுகளுக்கு ஐரோப்பியர்கள் கொண்டு சென்றனர். அடிமைகள் இல்லம் எனும் ஒரு பெரிய கட்டிடம் இங்கு உண்டு. இதனை டச்சுக்காரர்கள் கட்டியிருந்தனர்.

ஆப்பிரிக்காவின் பலபகுதியிலிருந்தும் பிடித்து அல்லது விலைக்கு வாங்கிவரப்படும் ஆண், பெண், குழந்தைகள் யாவரும் இவ்வடிமையில்லத்தின் திறந்தவெளியில் நிறுத்தப்படுவர். அடிமைகளை வாங்க விரும்பும் வியாபாரிகள் கட்டிடத்தின் மாடியிலிருந்து அவர்களைக் கூர்ந்து நோக்கி விலை நிர்ணயிப்பார்கள். நல்ல புஷ்டியான திடகாத்திரமான, உறுதியான ஆண்களைத் தேர்வு செய்வார்கள். இன்றைய எடை அறுபது கிலோவுக்கு மேலிருக்கும் ஆண்களுக்கு நல்ல கிராக்கி. மற்றபடி பெண்களும் துணை வேலைக்காகவும், அனுபவிப்பதற்கும் கொண்டு செல்லப்பட்டனர். குடும்பத்திலுள்ளவர்கள் பிரிக்கப்பட்டுப் பெயர்களும் மாற்றப்பட்டு வெவ்வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். அத்துடன் அடிமைகளின் குடும்பம் அழிந்தது.

கப்பலின் கொள்ளவுவரை அடிமைகள் சேரும் வரைக்கும், ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட ஆண் அடிமைகள் கழுத்தைச் சுற்றி இரும்பு வளையங்களால் பிணைக்கப்பட்டனர். இரும்பு வளையம் கை கால்களிலுள்ள சங்கிலியுடன் பின்னப்பட்டது. சங்கிலியின் நுனியில் இரும்புப் பந்துகள் இணைக்கப்பட்டிருக்கும். மல ஜலம் கழிப்பதற்கு இவ்வடிமைகள் ஒருதடவை மட்டும் அனுமதிக்கப்பட்டனர். கொண்டுவரப்பட்ட பெண்கள் கட்டிடத்தின் மேல்தளத்திற்குக் கொண்டுவரப்பட்டு இஷ்டத்திற்குப் பாலியல் புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டனர். இப்புணர்ச்சியின் போது எவ்விதமான கொடுமைகளெல்லாம் நிகழ்த்தப்பட்டன என்பதை நினைக்கவே உடல் அஞ்சுகின்றது.

ஏறத்தாழ இரண்டுகோடி ஆப்பிரிக்கர்கள் கோரித் தீவின் வழியாகக் கப்பல் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டனர். கடலில் குதித்துத் தப்பிக்க முயன்றவர்களும் உண்டு. அத்தகையோர்

வெள்ளையர்களின் துப்பாக்கிக்கு இரையானார்கள் அல்லது கடல் சுறாக்களுக்கு இரையானார்கள். கப்பலில் கொண்டு செல்லப்பட்டோரில் வயிற்றோட்டம் காரணமாக இறந்தோர் பல லட்சம். இறந்தவர்கள் உடலும், நோயுற்றோர்களும் கடலில் வீசி எறியப்பட்டது. கடல் பயணத்தின் போது நடந்த கலவரங்களில் கொல்லப்பட்டோர் பல்லாயிரம். இவ்வியாபாரம் நடந்த சுமார் 300 வருட காலத்தில் (1536-1848) இத்தீவிலிருந்து சென்ற ஆப்பிரிக்கர்களில் ஆறுலட்சம் பேர் இவ்வாறு இறந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

கொண்டு செல்லப்பட்ட பெண் குழந்தைகளின் பழைய பெயர்கள் நீக்கப்பட்டுப் புதிய பெயர்கள் சூட்டப்பட்டன. அத்தகைய பெயருடன் அப்பெண்ணின் முதலாளியின் பெயரும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது. அப்பெண் மீண்டும் கைமாறினால் முந்தைய பெயருடன் புதிய முதலாளியின் பெயரும் சேர்க்கப்பட்டது. இவ்விதமாகவே அடிமைகள் ஒவ்வொருவருக்கும் இரண்டு அல்லது மூன்று பெயர் வரை இருந்தது. உதாரணமாக டரோத்தி விக்டர் சாமுவேல். இதில் டரோத்தி என்பது மட்டுமே அப்பெண்ணின் பெயர், மற்றவையெல்லாம் அப்பெண்ணின் மாஸ்டர்களின் பெயர்களே.

'யிலி விட்னி' எனும் ஐரோப்பியர் 1793ம் ஆண்டில் பருத்தியிலிருந்து கொட்டைகளை நீக்கும் இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்தார். இதனால் பருத்தி உற்பத்தி பன்மடங்கு பெருகியது. பருத்திப் பண்ணைகள் புற்றீசல் போன்று உலகெங்கும் முளைத்தன. கடத்திவரப்பட்ட அடிமைகள் பருத்திப் பண்ணையில் வேலை செய்ய அடைத்து வைக்கப்பட்டனர். இவ்வாறு கருப்பர்கள் உழைப்பினால் ஐரோப்பாவும், அமெரிக்காவும் வளமிக்கதானது. இம்மக்களே அந்நாடுகளின் சாலைகள், இருப்புப் பாதைகள், அணைகள், கால்வாய்கள் அமைத்தனர். ஆப்பிரிக்க கருப்பர்களின் கடும் உழைப்பையும், வியர்வையையும் ரத்தத்தையும் உபயோகப் படுத்திய மேலைநாடுகள் வளமிக்கதாயின. இந்நாடுகளிலுள்ள மாடமாளிகைகளும், ஏன் வெள்ளை மாளிகையும் இவ்வடிமைகளால் கட்டப்பட்டவையே. இதன்மூலம் 'உன்னை நீர்பாய்ச்சலான தோட்டத்தைப் போலப்

பண்ணுவேன்', 'கர்த்தரை நம்புகிறவனே செழிப்பான்' என்ற கர்த்தரின் இரண்டு வாக்குதத்தங்களும் நிறைவேறின எனலாம்.

(மேலும் விவரங்களுக்கு வெ.சிவகுமாரின் கருப்பு மாளிகை எனும் நூலைப் பார்க்கவும்).

4:14. போப் ஆண்டவர்[28]

போப் ஆண்டவரின் கத்தோலிக்க கிறித்துவ ஆட்சி இத்தாலி நாட்டில் அமைந்துள்ள வாட்டிகன் நகரிலிருந்து கடந்த 2000 ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் நிகழ்ச்சி. போப் ஆண்டவர் பதவி ஏதும்காரணங்களால் காலியாகி விட்டால் உலகெங்கிலுமுள்ள கார்டினல்கள் ஆட்சியரின் தலைநகரில் ஒன்று கூடி வாக்கெடுப்பு மூலம் அவர்களுள் ஒருவரைப் போப்பாகத் தேர்ந்தெடுப்பது வழக்கம். ஏசு கிறித்துவின் உலகப் பிரதிநிதியாகவும், தெய்வீக திருமறைக்கு (பரிசுத்த வேதாகமத்திற்கு) வியாக்கியானம் வழங்கும் ஏக பிரதிநிதி யாகவும் போப் உலகில் விளங்குகின்றார். கத்தோலிக்கக் கிறித்துவமே முதலில் தோன்றிய கிறித்துவம். அதுவே தற்போது பல கிறித்துவ கிளைகளாகவும் சபைகளாகவும் உலகெங்கும் விரிந்து கிடக்கின்றது. கிறித்துவ சமயம் தற்போதைக்கு 60 வருடங்களுக்கு முன்பு கூட உலகின் பெரும் பகுதியைத் தனது ஆட்சியின் கீழ் வைத்திருந்தது. இன்று அச்சமயம் மேற்கத்திய நாடுகளில் கூனிக் குறுகித் தளர்ந்து தள்ளாடி உயிர் வாழ்ந்து வருகின்றது. எனினும் இச்சமயம் இன்றுகூட உலகின் பல்வேறு பகுதிகளில் சமூக சமுதாய இன வேற்றுமைகளைத் தூண்டி உசுப்பி விடும் சக்தி உள்ளதாய் விளங்குவதை மறுக்க முடியாது. அளவு கடந்த செல்வமும் இச்சமயத்தின் வசம் உள்ளது. இத்தகைய பெருமைமிக்க, பலமிக்க கிறித்துவத்தின் ஒரு பெரும் பிரிவின் தந்தையாக விளங்கும் போப் அரசரின் வரலாற்றை அறிந்து கொள்வது மிகவும் அவசியம்.

முதலாவது போப்பாண்டவராகக் கருதப்பட்டவர் புனித பீட்டர் (சைமன் பீட்டர்) கி.பி. 33-67 வரை ஆட்சி புரிந்ததாகக் கருதப்படுகின்றது.[29] இவர் இயேசு கிறித்துவிடமிருந்து

சொர்க்கலோகத்தின் சாவியை நேரிடையாகப் பெற்றவர் எனும் (பார்க்கவும் மத்தேயு 16: 19) பெருமைமிக்கவர். எனினும் இவர் காலத்தில் ஏற்பட்ட பெரும் கலவரம் காரணமாக இவர் தலை கீழாகச் சிலுவையில் அடிக்கப்பட்டு உயிரிழந்ததாக நம்பப்படுகிறது. அன்றிலிருந்து இன்றுவரை போப் ஆண்டவரின் பதவி பல்வேறு வித்தியாசமான நபர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இவர்களில் பலர் கிறித்துவத்திலும், கிறித்துவ சமயத்திலும் நம்பிக்கையற்றவர்கள்.[30] சிலர் பில்லி சூனியத்தைப் பின்பற்றினவர்கள். இன்னும் சிலர் பெரும் கொடூரர்களாகவும் மனிதர்களைக் கொலை செய்து ஓடிய ரத்த வெள்ளத்தில் நடந்து வந்தவர்களாகவும் இருந்தனர். சில போப் ஆண்டவர்கட்குத் தங்களின் பெயர்களை கூட எழுதத் தெரியாமலும் இருந்தது (பார்க்கவும் Weidenfeld George - "The Papacy" London 1964). இத்தகையோரில், பிரபலங்களில் சிலரை மட்டும் பார்க்கலாம்.

I பெண் போப் ஜாண்
(உண்மையான பெயர்: ஜோவான் - Joan)[31]

இவர் இரண்டு வருட காலம் (855-857) ஆண் வேடத்தில் போப் ஆண்டவராக ஆட்சியில் இருந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர் ஓர் ஆண் பெயரைத் தாங்கிய பெண். கிரேக்க நாட்டின் ஆதென்ஸ் (Athens) நகருக்கு ஆண் வேடமிட்டுக் காதலன் ஒருவரால் கடத்தி வரப்பட்டவர். அறிவிலும் புத்திசாலித்தனத்திலும், கல்வி கேள்விகளிலும், முதன்மையாகத் திகழ்ந்த இவர் 855ம் ஆண்டில் (பெண் என அறியப்படாமல்) போப் ஆண்டவர் பதவிக்கு ஜாண் எனும் பெயரில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆண் வேடத்திலே போப் ஆண்டவராக உலாவி வந்த இவர் தனது காதலன் மூலம் கருவுற்றார். இச்செய்தியினை யாரும் அறியவில்லை. இவர் தனது பிரசவ தேதியை ஆய்ந்து வைக்கவில்லை. இவர் ஒரு நாள் ரோம் நகர சமய ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கிக் குதிரையில் அமர்ந்து பயணம் செய்தபோது அத்தனைபேர் முன்னிலையிலும் தெருவில் ஓர் ஆண் மகனைப் பெற்றெடுத்தார். அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்த மக்களும், இதர மத குருமார்களும் இவரைக் குதிரையின் வாலில் கட்டித் தெரு முழுவதும் இழுக்கச் செய்து கொன்றனர். பிரசவம் நடந்த இடத்திலே இவர் பின்னர் அடக்கம் செய்யப்பட்டார்.

இவருடைய வரலாறு, நாடகமாகவும், கதை வடிவங்களிலும் சித்தரிக்கப்பட்டுள்ளது. பெண் போப்பினால் கிறித்துவத்திற்கு ஏற்பட்ட களங்கத்தைப் போக்கிடவும், இதுபோன்ற ஆண் - பெண் மாறாட்டம் பிற்காலத்தில் நடந்திடாமலிருந்திடவும் மூன்று முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. போப் ஆண்டவர் இனிக் குதிரையில் பயணிக்கக் கூடாது. பல்லக்கில்தான் செல்ல வேண்டும்.

2. போப் பதவியேற்றதும் அடியில் ஒரு துவாரமுள்ள நாற்காலியில் அவர் ஆடையை உயர்த்தி உட்கார வேண்டும். அவர் ஆண் தானா என ஒருவர் துவாரத்தைக் குனிந்து உற்று நோக்கி உறுதி செய்ய வேண்டும். (பளிங்கினால் செய்யப் பட்ட இந்நாற்காலி இன்றளவும் வாட்டிகன் அருங்காட்சி யகத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது)

3. ரோம் நகரில் பிரசவம் நடந்த பகுதியைப் பின்னர் அரியணை ஏறிய போப் எவரும் உற்று நோக்கக் கூடாது எனும் பாரம்பரியம் ஏற்படுத்தப்பட்டது.

II போப் பர்மோஸஸ் (Formosus)[32]

இவர் 891-896 வரை ஆண்டகையாய் இருந்தார். இவர் பல குளறுபடிகளைச் செய்ததின் காரணமாக அனைவரின் விரோதத்தையும் பெற்றார். இவரின் மறைவிற்குப் பின் போனிபேஸ் (Boniface VI) என்பவரும் ஸ்டீபன் VI என்பவரும் (Stephen VI) அடுத்தடுத்துப் போப் ஆண்டவர் பதவியேற்றனர். போப் ஸ்டீபன் (896-897) காலஞ்சென்ற போப் பர்மோஸஸ் அவர்களைப் பழிவாங்க எண்ணி, புதைக்கப்பட்டிருந்த அவர் உடலைத் தோண்டி எடுக்கச் செய்தார். இறந்து 8 மாதம் ஆன நாற்றமடித்துப் புழு ஓடிய உடல், போப்பாண்டவர் அரண்மனைக்குக் கொண்டு சென்று, போப் ஆண்டவர் உடையில் அலங்கரிக்கப்பட்டு ஓர் ஆசனத்தில் உட்கார வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது. பிணத்தின் அருகில் கருப்பு ஆடை அணிந்த ஒரு நபர் நிற்க வைக்கப்பட்டார். ஸ்டீபன் VI எனும் போப், பிணமாயிருந்த போப் மீது குற்றங்களைத் தொடுத்தார். இறந்த போப் சார்பாகக் கருப்பு ஆடை அணிந்த நபர் பேசிக் குற்றங்களை ஒப்புக் கொண்டார். குற்ற தண்டனையாக, இறந்த போப்பின் வலது

கையின் மூன்று விரல்கள் வெட்டப்பட்டு, போப் பர்மோஸஸ் சடலம் ரோமாபுரியின் டைபர் ஆற்றில் வீசி எறியப்பட்டது. வீசி எறியப்பட்ட பிரேதம் பாதிரியார் ஒருவரால் ரகசியமாகக் காப்பாற்றப்பட்டுப் புதைக்கப்பட்டது.

போப் ஸ்டீபனின் கொடுஞ்செயல், ரோமாபுரி மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பையும் கலவரத்தையும் ஏற்படுத்தியது. போப் ஸ்டீபன் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுப் பின்னர் கழுத்து நெறிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். இதன் பின்னர் 904-911ம் ஆண்டு வரை செர்ஜியாஸ்; (Pope Sergius III) என்பவர் போப் அரசராகப் பதவி ஏற்றார். இவருக்கும் ஏற்கெனவே விரல்கள் வெட்டப் பட்டுத் தண்டிக்கப்பட்ட போப் பர்மோஸஸ் மீது அடங்காக் கோபம் இருந்தது. அவரை இரண்டாவதாக அடக்கம் செய்யப்பட்ட இடத்தை ஆராய்ந்து அறிந்து சடலம் இரண்டாம் முறையாகத் தோண்டி எடுக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டுத், தலை வெட்டப்பட்டு, மூன்றாம் முறையாகப் புதைக்கப்பட்டது.

III பெண் ஆண்டகை பேரழகி மரோஜியா (Marozia)[33]

இவர் (890) ரோமாபுரியின் ஒரு சதிகாரப் பேரழகி. தனது வாழ்நாளில் போப் ஆண்டவர் ஒருவருக்குக் காதலியாகவும், மற்றொருவருக்குத் தாயாகவும் இன்னும் ஒரு போப்பிற்கு, பாட்டியாகவும் விளங்கினார். இவர் தனது 15ஆவது வயதில் போப் செர்ஜியஸ் (Sergius III) அவர்களின் காதலியாகி ஒரு மகனைப் பெற்றெடுத்தார். அம்மகன் பின்னாளில் போப் ஜாண் (John XI) ஆகப் பதவிக்கு வந்தார். மரோஜியா காலத்தில் ஐந்து போப் ஆண்டவர்கள் அடுத்தடுத்து ஆட்சியில் அமர்ந்தனர். அவர்களில் போப் ஜான் (John X) என்பவரைத் தலையணை அமிழ்த்திக் கொலை செய்தார்.[34] பின்னர் ஆட்சிக்கு வந்த போப்பரசர்கள் இவரது ஆணைக்கும் செல்வாக்கிற்கும் அடிபணிந்தனர். இப்பெண்ணழகி அல்பெக் என்பவரையும் அடுத்து, கய் (Guy) என்பவரையும், அதன்பின் ஹூவே (Hugh) என்பவரையும் திருமணம் செய்து கொண்டார். மரோஜியா - ஹூவா ஜோடிகளின் திருமணத்தை (932) நடத்தி வைத்தவர், மரோஜியாவின் காதலனுக்குப் பிறந்து அப்போது போப் ஆண்டவராக விளங்கிய ஜான் XI எனும் போப்பரசர்.

போப் ஆண்டவர் தன் தாயின் திருமணத்தை நடத்திவைத்துத், தான் வகித்து வந்த பதவிக்குப் பெருமை (?) தேடித்தந்தார். மரோஜியா - ஹுவே தம்பதிகளுக்குப் பிறந்த மகனும் ஜான் XII எனும் பட்டப் பெயர் சூடிப் போப் ஆண்டவராகப் (955-64) பதவி வகுத்தார். இவ்வாறு, போப் ஆண்டவர்களின் 2000 வருட வரலாற்றில் அரண்மனைச் சதிகளும், சூழ்ச்சிகளும், கொலைகளும் சூழ்ந்து கிடந்தன. அங்கு நடந்த அரண்மனைக் கொலைகளில் சிலவற்றைக் காணலாம்.

அ) கொலை செய்யப்பட்ட போப் ஆண்டவர்களின் பட்டியல்

1. பெண் போப் ஜோவான் (855-857) - குதிரைவாலில் கட்டி இழுத்தடிக்கப்பட்டுக் கொலை.

2. ஸ்டீபன் VI (896-897) - கழுத்து நெறிக்கப்பட்டுக் கொலை.

3. ஸ்டீபன் VIII (939- 942) - உடல் சிதைக்கப்பட்டுக் கொலை.

4. ஜான் XII (955-964) - அடிக்கப்பட்டுக் கொலை.

5. பெனிடிக்ட் VI (973-974) - கழுத்து நெறிக்கப்பட்டுக் கொலை.

6. ஜாண் XIV (983-984) - பட்டினியால் வதைக்கப் பட்டுக் கொலை.

7. கிரிகரி V (996 - 999) - விஷமிட்டுக் கொலை.

ஆ. கொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் போப் ஆண்டவர்களின் பட்டியல்

1. ஜாண் VIII (872 - 882) விஷமிட்டும், அடித்தும் கொலை.

2. அட்ரியன் III (884 - 885) விஷமிட்டுக் கொலை

3. லியோ V (903) - கழுத்து நெறிக்கப்பட்டுக் கொலை

4. ஜாண் X (914 - 928) - தலையணையை அமிழ்த்திக் கொலை

5. செர்ஜியாஸ் IV (1009 - 1012) - கொலை

6. கிளிமண்ட் II (1046-47) விஷமிட்டுக் கொலை

7. டமாசுஸ் II (1048) - கொலை

8. ஜாண் XXI (1276 - 1277) - சர்ச் ஒன்று கட்டப் படுவதைப் பார்வையிடச் சென்றபோது கூரை சரிந்து சாவு (சதி காரணம்).

9. செலஸ்டின் V (1294-96) - கடத்திக் கொலை (கொலைக்குச் சதி செய்ததாக, பின்பு அரியணை ஏறிய போப் போனிபேஸ் VIII கருதப்படுகின்றார்).

10. பொனிபேஸ் VIII (1294 - 1303) - அவமானமாகவும் மோசமாகவும் நடத்தப்பட்டுக் கொலை.

11. பெனிடிக்ட் XI (1304 - 1305) - விஷமிட்டுக் கொலை

12. அலெக்சாண்டர் VI (1492 - 1503) இவருக்கு ஒரு காதலியும் அவர் மூலமாக மூன்று மகன்களும் ஒரு மகளும் பிறந்தனர். இவர் காலத்தில் ரோம் நகரம் குற்றவாளிகளின் கூடாரமானது. போப் அலெக்சாண்டர் ஒரு நாளில் தனி அறையில் இறந்து கிடந்தார். பல நாட்கள் சென்ற பின்தான் பிணம் கண்டுபிடிக்கப்பட்டது. பிரேதம் ஊறி, வீங்கிப் புடைத்துப் பிணப்பெட்டிக்குள் அடங்காமல் இவரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

13. பயஸ் VI (1922-1939) - கொலை

14. ஜாண் பால் (1978) சதியின் விளைவாகக் கொல்லப் பட்டதாகக் கருதப்படுகின்றது. பதவியில் இருந்த காலம் 33 நாட்களே. கத்தோலிக்க மக்கள் குடும்பக் கட்டுப்பாடு மாத்திரையை உபயோகிக்கலாம் எனக் கூறிப் பெரும் சர்ச்சையில் இவர் சிக்கிக் கொண்டார்.

போப் ஆண்டவரின் வரலாறு இவ்வாறாக உருக் குலைந்து கிடப்பதைக் கண்ணுறலாம். இதுவரை 267 போப்பரசர்கள் அதிகாரத்தில் இருந்துள்ளதாகக் கருதப் படுகின்றது. அவர்களில் 38 பேர்கள் போப் தேர்வின் போது தோல்வியடைந்த பின்னரும் தான் வெற்றி பெற்றதாகச் சுய அறிவிப்புச் செய்து பதவியில் இருந்தவர்கள். எனவே ஒரே காலத்தில் இரண்டு போப்பரசர்கள்கூடப் பதவியில் இருந்ததையும் காண முடிகின்றது.

இதைத் தவிர இன்னும் ஒரு வேறுபட்ட போப் ஆண்டவர் ஒருவரைச் சந்திக்கலாம்.

கிளிமண்ட் VI[35] : இவர் 1342ம் ஆண்டிலிருந்து 1352ம் ஆண்டு வரை போப் அரசராகப் பட்டம் வகித்தார். ஆடம்பரத்திற்கும், அழகு பெண்களின் சகவாசத்திற்கும் பெயர் பெற்றவர். இவர் போப் ஆண்டவராகப் பதவியேற்ற நாளில் தனது அரண்மனையில் 3000 பிரமுகர்களுக்கு விருந்து வழங்கினார். விருந்திற்கு இறைச்சிக்காக 1023 ஆடுகளும், 118 மாடுகளும் 101 கன்றுக் குட்டிகளும், 60 பன்றிகளும் 10471 கோழிகளும், 1440 வாத்துகளும் உபயோகிக்கப்பட்டன. இவை தவிர 200 பெட்டி மதுபானங்களும் உபயோகப் படுத்தப்பட்டன. இவரது அரண்மனையைப் பல பெண்கள் அலங்கரித்தனர். இதனைப் பற்றிப் பெட்டர்ச் (Petrarch) எனும் அன்றைய எழுத்தாளர் வர்ணிப்பதைக் கீழே காணலாம்.

> [36]'போப் அரண்மனையில் நடைபெற்ற காமக் களியாட்டம், கற்பழிப்பு, பெண் கடத்தல் போன்றவற்றைக் கூட நான் வர்ணித்திட விரும்பவில்லை. எத்தனை பேரின் மனைவிகள் திருடப்பட்டு, அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டனர் அல்லது எத்தனை இளம் பெண்கள் ஆசை நாயகியாக ஆக்கப்பட்டனர், என்பதையும் கூடச் சொல்ல விரும்பவில்லை. பாதிக்கப்பட்ட கணவன்மார்களும், தாய் தகப்பன்களும் எவ்விதமாக வாய் அடைக்கப்பட்டனர் என்பதை நினைத்தால் பயமாக உள்ளது. அதனைத் தவிரப் பல குடும்பத் தலைவர்கள் தங்களது பெண்களைச் சில தங்கக் காசிற்காக அரண்மனைக்கு விற்றார்கள் என்பதும், பின்னர் அப்பெண்கள் என்ன ஆனார்கள் என்பதையும் நினைத்தால் பெரும் வேதனையாய் உள்ளது.'

இப்போப் ஆண்டவர் காலத்தில் ஜனவரி 1348ல்,[37] நாட்டில் பிளேக் நோய் பரவி, பலர் செத்து மடிந்தனர். போப் அன்று வாழ்ந்த அவிக்னான் (Avignon) நகரில் மட்டும் 10 மாத காலத்தில் 62000 பேர் செத்தனர். செத்தவர்களைப் புதைக்க இடம் பற்றாமையால் புதிய இடுகாடுகளைப் போப் வாங்கி மக்களுக்கு வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அந்நகரத்தில் வாழ்ந்த யூதர்களின் பாவச் செயலால்தான் நோய் பரவியுள்ளதாக வதந்தி பரவியதால் 350 இடங்களில் ஒன்றுமறியாத யூதர்கள் கொத்துக் கொத்தாய்க் கொலை செய்யப்பட்டனர். இவ்விதமாகப் போப் ஆண்டவர்கள் பலர்

தங்களது பதவியை மக்களை நல்வழிபடுத்திட உபயோகப் படுத்துவதற்குப் பதிலாகச் சிற்றின்பத்தை அனுபவிப்பதிலும் கொடூரங்களை நிறைவேற்றிடவும் செலவிட்டுள்ளனர்.

குறிப்பு: போப் ஆண்டவர்களின் வரலாற்றினை மேலும் அறிந்திட கீழ்க்கண்ட நூல்களைக் கண்ணுரலாம்.

1. John Julius Norwich - the Popes.
2. en.wikipeida.org/wiki/pope/formosus
3. The Criminal History of Papacy, Vol.14. Number-1 Dec.2006 - Jan 2007

4:15. கிறித்துவ பிரிவுகள்

கிறித்துவம் தோன்றி, முதல் 700 ஆண்டுகள் வரை கத்தோலிக்கமே கிறித்துவத்தின் ஏகபிரதிநிதியாய் விளங்கியது. இத்தாலி நாட்டின் வாட்டிகன் நகரில் வசிக்கும் போப் ஆண்டவர் அவர்களே உலகளாவிய கிறித்துவ உலகிற்கு இறைவனின் ஏகபிரதிநிதியாகவும், தெய்வீக ஆணை (Papal Bull) பிறப்பிப்பவராகவும், சமய உண்மைகளைப் பிரகடனப் படுத்துவராகவும் இருந்தார். போப் ஆண்டவரின் இவ் உலகளாவிய ஆளுமையை முதன்முதலில் கிழக்கு ஐரோப்பிய மதகுருக்கள் சிலர் கிபி 1054 முதற்கொண்டு எதிர்க்க ஆரம்பித்தனர். இதன் விளைவாகக் கிழக்கத்திய உண்மை கிறித்துவம் (Eastern orthodox church) எனும் சமயப்பிரிவு தோன்றியது.[38] இதனின் முதன்மையான கொள்கைகள்:

1. கிறித்துவ சமயத்திற்கு மத்திய தலைமையாக விளங்கும் போப் ஆண்டவரின் ஆன்மிக ஆட்சியை எதிர்த்தனர். ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியான பிஷப்புகள் தலைவராக வேண்டும் என்றனர்.

2. கிறித்துவத்தை வளர்க்க பைபிள் மட்டுமின்றி உள்ளூர் கிறித்துவமகான்களின் போதனைகளையும் மனதில் கொள்ள வேண்டும் என்றனர்.

3. கிறித்துவம் வெறுமனே பைபிள் அடிப்படையில் மட்டும் இயங்கக் கூடாது என்றும், அதனில் இறையியல் தத்துவங்களையும் (interpretations) இணைக்க வேண்டும் எனவும் விரும்பினர்.

4. பரிசுத்த ஆவியின் பிறப்பிடம் பிதா மற்றும் குமாரன் எனக் கத்தோலிக்கம் பிரசிங்கத்தது. அதனை மறுத்துப் பரிசுத்த ஆவியின் பிறப்பிடம் பிதாவிடம் மட்டுமே உள்ளது என, 'கிழக்கத்திய உண்மை கிறித்துவம்' (Eastern Orthodox church) நம்பியது.

இப்பிரிவினையின் காரணமாக 11ஆம் நூற்றாண்டில் கிழக்கு மற்றும் தெற்கு ஐரோப்பிய நாடுகளும், மத்திய கிழக்கு நாடுகளும் (ரஷ்யா, உக்ரைன், ருமேனியா, கிரீஸ், சைப்ரஸ்) கிழக்கத்திய உண்மைக் கிறித்துவத்தின் கீழ் வந்தன. மேற்கு ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்து கத்தோலிக்க நாடுகளாகத் திகழ்ந்தன. எனினும் கிறித்துவ சமயத்தில் பெரும்பாதிப்பினை ஏற்படுத்திய பெரும் பிளவு கிபி 1517ல் ஜெர்மனி நாட்டில் தோன்றியது. இப்பிரிவினைக்குப் பெரும் காரணகர்த்தராய் விளங்கியவர் மார்ட்டின் லூத்தர் எனும் கத்தோலிக்க சமயகுரு.

பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத்தில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. பணப்புழக்கம் (currency circulation) வழக்கத்திற்கு வந்தது. நிலபுலன்கள் அதிகம் கொண்டிருப்பவரே செல்வந்தர் எனும் நிலை மாறி, கைவசம் நிறைய பணம் (Currency) வைத்திருப்பவரே செல்வந்தர் என்ற நிலைமை தோன்றியது. இச்சூழ்நிலையில் அப்போதைய போப் ஆண்டவர் லியோ X (1513-21) என்பவர் வட்டிகன் நகரில் புனிதர் பீட்டர் அவர்களின் நினைவாகப் பெரும் வேதகோவில் ஒன்றைக் கட்டுவதற்கு முனைந்தார்.[39] அம்முயற்சிக்குப் பெரும் செல்வம் (நிதி) தேவையாயிருந்தது. போதிய நிதியினைத் திரட்ட, 'பாவமன்னிப்புப்' பத்திரங்களை (Indulgence document) கத்தோலிக்க திருச்சபை வெளியிட்டது. இப்பத்திரங்களைப் பணம் கொடுத்துப் பெறுவோர் பாவங்கள் மன்னிக்கப்பட்டுத் தங்களின் சாவிற்குப் பின் திருச்சிலுவை யுத்தத்தில் பங்கு பெற்றவர்கள் போன்று நேரடியாகச் சொர்க்கம் செல்லலாம் எனவும் அறிவிக்கப்பட்டது. எனினும் மக்களிடத்தில் ஒரு

பெரும் கேள்வி எழுந்தது. செய்த பாவங்கள், பத்திரம் வாங்குவதின் மூலம் தள்ளுபடி ஆகின்றது. ஆனால் பத்திரம் வாங்கியபின் செய்யப்படும் பாவங்களுக்குப் பரிகாரம் என்ன என்பதே அக்கேள்வி. இதற்குப் பதிலளிக்கும் முகமாகச் செய்த பாவங்கள் மட்டுமின்றிச் செய்யவிருக்கும் பாவங்களும் இப்பத்திரத்தைப் பெறுவதன் மூலம் தள்ளுபடி ஆகிவிடும் எனக் கத்தோலிக்கத் திருச்சபை புதிய விளக்கமளித்தது. இதனால் மக்கள், கூட்டம் கூட்டமாய் இப்பத்திரங்களை வாங்கினர். போப் ஆண்டவர் வசம் பெரும் நிதி சேர்ந்தது.

சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசர்கள் தங்கள் அனுமதியின்றிப் போப் ஆண்டவர் தம் மக்களிடமிருந்து நேரடியாய் நிதி திரட்டுவதை விரும்பவில்லை. அன்றைய ஜெர்மனி நாட்டில் மட்டும் 244 நாடுகளும், அரசர்களும் இருந்தனர். இவர்கள் அனைவரும் போப் ஆண்டவரின் அதிகாரத்தைக் கட்டுக்குள் கொண்டுவர விரும்பினர். அன்று இவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் விடிவெள்ளியாகவும் விளங்கியவர் மார்ட்டின் லூத்தர் எனும் ஜெர்மானிய கத்தோலிக்க மதகுரு.[40] இவர் தன்னுடைய இளம் சமய வாழ்வின்போது ஜெர்மனி நாட்டு யூதர்களின் நண்பனாய் விளங்கினார். யேசு பெருமானும் அவர்தம் சீடர்களும் யூத இனத்தைச் சார்ந்தவர்களே. எனவே அவ்வின மக்கள் மீது மார்ட்டின் லூத்தருக்குப் பெரும் மதிப்பும் மரியாதையும் இருந்தது. யேசுபிரான் தங்களது இனத்தவர் என்று நன்கு அறிந்திருந்தும், பரிசுத்த வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டையும், யேசுபிரானையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளாதது அவருக்குப் பெரும் புதிராக விளங்கியது. ஜெர்மனிய யூதர்களைக் கிறித்துவ சமயத்திற்கு மாற்றிட லூதர் அவர்கள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. இதனால் லூதருக்கு ஜெர்மனிய யூதர்கள்மீது அளவுகடந்த வெறுப்புத் தோன்றியது.

இத்தகைய காலகட்டத்தில்தான் அச்சு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அன்றுவரை சாதாரண மனிதனிட மிருந்து மறைத்து வைக்கப்பட்டிருந்த பைபிளின் பிரதிகள் பெரும் எண்ணிக்கையில் அச்சிடப்பட்டுச் சாதாரண மனிதர் படித்திடவும் ஆய்விடவும் கிடைத்தன. அதனின் சில வசனங்கள் போப் ஆண்டவரின் பாவமன்னிப்புப் பத்திரங்களுக்கு எதிராக இருப்பதை மார்ட்டின் லூத்தர்

கண்டார். எபேசியர் 2:8,9ல் இரட்சிப்பு தேவ கிருபையால் பெறப்பட வேண்டுமே ஒழிய நற்கிரியைகளால் (பாவ மன்னிப்புப் பத்திரம் வாங்குவதால்) மூலம் அல்ல எனக் கத்தோலிக்கக் குருமார்களுக்கு எதிராகக் குரல் எழுப்பினார். லூத்தர் தன்னுடைய கருத்து ரோமர் 3:28லும் எதிரொலிப் பதைச் சுட்டிக்காட்டினார். இவருடைய கருத்துகள் கத்தோலிக்கத் திருச்சபையின் அஸ்திவாரத்தையே அசைப்பதாக அமைந்தது. லூதரின் கேள்விகள் சிலவற்றைக் கீழே காணலாம்.[41]

1. பணம் கொடுத்துப் பத்திரம் வாங்கினால் பாவம் பறந்து போய்விடுமா என்ன?

2. வேதகோவில் செயல்பாடு கர்த்தரின் கருணையால் மட்டுமே மேம்படும், பணத்தினால் அல்ல!

3. போப் ஆண்டவரிடம், இருப்பதோ பெரும் செல்வம் அவ்வாறிருக்க இறை நம்பிக்கையுள்ள ஏழை எளிய மக்களிடம் இன்னும் பணம் வசூல் செய்ய என்ன காரணம்?

4. திருடர்களையும் கொள்ளையடிப்பவர்களையும் தண்டிக்கிறோம், ஆனால் ரோம் நகரில் வசிக்கும் கொள்ளையனை ஏன் நாம் தண்டிக்கவில்லை?

5. கர்த்தரே விரைவில் வந்திடும். ரோமில் வசிக்கும் சாத்தானின் பிரதிநிதியை விரைவில் அழித்திடும்.

இதுபோன்ற 95 முழக்கங்களைப் பாவமன்னிப்புப் பத்திரத்திற்கு எதிராகவும், போப் ஆண்டவருக்கு எதிராகவும் லூத்தர் எழுப்பினார்.[42] இக்கேள்விகள் அச்சிடப்பட்டு ஜெர்மன் நாடு முழுவதும் வினியோகிக்கப்பட்டது. வேதக் கோவில் களில் அவை ஒட்டப்பட்டன. இதன் காரணமாகப் பாவ மன்னிப்புப் பத்திரத்தின் விற்பனை சரிந்தது. லூதரின் செல்வாக்கு மக்களிடையே பெருகியது. ஒளிவட்டம் சூழ்ந்த லூத்தரின் படங்கள் நாடெங்கும் வினியோகிக்கப்பட்டன. இத்தகைய எதிர்ப்பின் காரணமாகப் பெரும்பான்மையோர் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்திட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதுபோன்று ஐரோப்பா முழுவதிலும் எதிர்ப்பு இயக்கங்கள் பல தோன்றின. லூத்தரை போன்று அயர்லாந்தில் ஜாண் கல்வின் (John calvin) என்பவரும், பிரிட்டனில் ஜான் நாக்ஸ் (John knox) என்பவரும் கத்தோலிக்க,

திருச்சபையிலிருந்து விலகித் தனித்தனியான கிறித்துவ இயக்கங்களைத் தொடங்கினர். இவ்வியக்கங்களின் காரணமாக 1534ல் சர்ச் ஆப் இங்கிலாந்து (Church of England) எனும் புரொட்டஸ்டன்ட் சபை தோன்றியது.

இப்பிரிவினை ஆன்மீகப் பிரிவினை அன்று. நிர்வாகப் பிரிவினை மட்டுமே. இருபிரினவருக்குமிடையே மனித குமாரன் பிறவி, மனிதகுல பாவத்திற்காகச் சிலுவையில் பலியுண்டது போன்ற மத்திய கொள்கைகளில் சம்மதம் உண்டு. எனினும் இருவர்களுக்கிடையே சமயக் கோட்பாடுகளை மக்களிடையே கொண்டு செல்வதிலும், திருச்சபை அமைப்பதிலும், அதனை நிர்வகிப்பதிலும் பெரும் வேறுபாடுகள் இருந்தன. அவற்றில் சிலவற்றைப் பார்க்கலாம்:

புரொட்டஸ்டன்ட் கிறித்துவம்	கத்தோலிக்க கிறித்துவம்
பரிசுத்த வேதாகமம் மட்டுமே பின்பற்றக் கூடியது (Solo Scripture)	வேதாகமம் மட்டுமின்றிப் புனித குருமார்கள் காட்டிய வழியும் பின்பற்றக் கூடியதே.
கர்த்தரை வழிபடுதல் பரிசுத்த வேதாகமம் காட்டியுள்ள வழியால் மட்டுமே	புவி மண்டலத்தில் இறைவனின் பிரதிநிதியாக விளங்குபவர் போப் ஆண்டவர். அவர் காட்டும் வழியும் தெய்வீகமானதே! பின்பற்றக் கூடியதே.
யேசு கிறித்துவின் மீதான நம்பிக்கையும், விசுவாசமும் ஒருவனை நித்திய ஜீவனை (சொர்க்க லோகத்தை) அடையச் செய்யும்.	விசுவாசம் மட்டும் போதாது. திவ்ய நற்கருணை பெறுதல், உபவாசம் எனும் நற்செயல்கள் ஆகியவையும் முக்கியமானவைகளே!
நற்செயல்களை ஒருவன் செய்வது தெய்வீக ஆசீர்வாதத்தால் மட்டுமே (By Grace of God) ஏற்படுகின்றது.	விசுவாசம் எனும் அஸ்திவாரத்தின் மீது அடுக்கப்படுவதே நற்செயல்கள். நற்செயல்கள் செய்திட தெய்வ கருணை பெறப்படவேண்டும்.
மரணத்தின் முடிவில் ஓர் ஆன்மா பெறுவது, நித்யஜீவன் எனும் சொர்க்கம் புகுதலே!	மரணத்திற்குப் பின்னர் ஆன்மாக்கள் தான் செய்த பாவங்களின் பொருட்டுச் சிறிது காலம் அட்டியில் (Purgatory) திரிசங்கு சொர்க்கம் போன்றதில் தங்கிச் சிரமத்தை அனுபவித்து அதன் பின்னரே சொர்க்கம் செல்லும்.
புனிதமேரிஅன்னை, மனித குமாரனின் தாய் என்ற பெருமைக்கு உரியவர், அவ்வளவுதான்.	புனித மேரியன்னை இறைவனின் தாய், வணக்கத்திற்கு உரியவர்.

புனிதமேரி இறைவனின் வேலைக்காரி, பெண்களில் ஆசீர்வதிக்கப்பட்டவள் அவ்வளவுதான்!	புனித மேரியன்னை சொர்க்கத்தின் ராணி. பெண் குலத்தில் முதன்மையானவர். பரிசுத்த ஆவியால் அபிசேகிக்கப்பட்டு, முழுமையாகச் சூழப்பட்டு அப்பேரின்பத்தை முதலாவதாக இவ்வுலகில் உணர்ந்தவர்.
கர்த்தரை யாருடைய வழிகாட்டுதலும் இன்றி நேரடியாகத் தொழலாம்.	மேரி மற்றும் புனித தாமஸ், அர்ச் அருளப்பா போன்றவர்கள் மூலம் வேண்டுதல் செய்தால் கர்த்தர் மூலம் பெற வேண்டிய பலன்கள் விரைவில் கிட்டும்.
பரிசுத்த வேதாகமத்தில் மேரியின் வரலாறு கொடுக்கப்படவில்லை. எனவே அவரை பற்றிப் பேசிப் பயன் இல்லை.	வேதாகமத்தில் அன்னை மேரியின் வரலாறு கொடுக்கப்படாவிட்டாலும் அவர் ஒரு குகையில் பிறந்தது, யூத கோவிலில் கல்வி பயின்றது, வயதான ஜோசப் அவர்களைக் கடமைக்காக மணந்தது, பரிசுத்த ஆவியால் கருவுற்றது ஆகியவை மீது (ஆதாரம் இல்லாவிட்டாலும்) நம்பிக்கை உண்டு.
பழைய ஏற்பாட்டில் உள்ளடக்கமான 39 புத்தகங்கள் மட்டுமே பரிசுத்த ஆவியால் அருளப்பட்டது என்ற நம்பிக்கை கொண்டுள்ளது.	பரிசுத்த ஆவியால் அருளப்பட்டது 46 புத்தகங்கள் என்ற நம்பிக்கை கொண்டுள்ளது.

இத்தகைய பெரும் நடைமுறை வேறுபாடு காரணமாகவும் மார்ட்டின் லூதர் எழுப்பிய 95 கேள்விகள் காரணமாகவும் கத்தோலிக்க குருமார்களுக்குப் புரொட்டஸ்டன்ட் சமயத்தினர் மீது பெரும் கொலைவெறி பிறந்தது. பல லட்சம் மக்கள் இறந்துபட்டனர். புரொட்டஸ்டன்ட் பிரிவினர் கத்தோலிக்கர்களின் கண்ணோட்டத்தில் கருநாகமாக விளங்கினர். இச்சமயவிரோதம் இந்தியா உட்பட உலகெங்கும் எதிரொலித்தது. புரொட்டஸ்டன்ட் பிரிவினரைக் கண்டித்து ‘கரும்பாம்பின் விஷக்கடிக்கு மருந்து’ எனும் ஒரு நூல் பாண்டிசேரியில் கத்தோலிக்கர்களால் எழுதப்பட்டது என்பதிலிருந்தே நிலமையின் ஆபத்தினை ஆய்விடலாம்.

இதற்கிடையே கிறித்துவ சமயத்திற்கு மதம் மாறுவதாக லூத்தருக்கு வாக்களித்திருந்த யூதர்கள் மதம்மாற மறுத்தனர்.

இதனால் லூத்தர் வெகுண்டெழுந்தார். யூதர்களைப் பழிவாங்க எண்ணினார். இதன்பொருட்டு 'யூதர்களும் அவர்களது பொய்களும்' (Jews and Their Lies) எனும் நூலை எழுதி வெளியிட்டார். அந்நூலில், யூதர்கள் மீது வெறுப்புணர்ச்சியைக் கொட்டினார்.

'யூதர்கள் ஒழுக்கங்கெட்ட சமுதாயத்தினர். அவர்களின் பூர்வீகமும், சுன்னத்து செய்தலும், சட்டத்திட்டங்களும், உணவு கட்டுப்பாடுகளும், குப்பைக்குச் சமம்.[43] அவை சாத்தானின் மலத்திற்குச் சமம். மனிதக் கழிவுகளை நோக்கிப் பன்றிகள் ஓடுவது போன்று யூதர்களும் சாத்தானின் கழிவை நோக்கி ஓடுகின்றனர். அவர்களின் வழிபாட்டு ஸ்தலம் ஒரு கழிவிடம் போன்றதே.'

இந்நூல்முழுமையிலும் யூதர்கள்மீது அபாண்டங்களை அள்ளி வீசினார். யூதர்கள் மீது போர் தொடுக்க, கிறித்தவர்களுக்கு ஏழு ஆலோசனைகளையும் இப்புத்தகத்தின் மூலம் வழங்கினார்.

1. யூத தேவாலயங்கள் அழிக்கப்பட வேண்டும். அதன் இடிபாடுகள் கண்ணுக்குத் தெரியாவண்ணம் எறியப்பட வேண்டும்.

2. யூதர்களின் வீடுகள் எரிக்கப்பட்டு, அவர்களை ஊருக்கு வெளியே விளை நிலங்களில் வசிக்க வற்புறுத்தப்பட வேண்டும்.

3. அவர்களின் புனித நூல்கள் அகற்றப்பட வேண்டும்.

4. யூதகுருமார்களின் பிரசங்கம் தடைசெய்யப்பட வேண்டும் மீறுபவர்கள் கொலைசெய்யப்பட வேண்டும். (காதால் கேட்பதே தீட்டு).

5. யூதர்கள் சாலையிலும், தெருக்களிலும் நடமாடுவது தடைசெய்யப்பட வேண்டும் (கண்ணால் பார்ப்பதே தீட்டு).

6. அவர்களின் நிலபுலன்களும், தங்க ஆபரணங்களும் கைவசப்படுத்தப்பட வேண்டும்.

7. யூதர்கள் அடிமைகளாக்கப்பட்டு விவசாயக் கூலிகளாக ஆக்கப்பட வேண்டும்.

(பார்க்கவும் Wikipedia "Jews and their Lies")

யூதர்கள் மீதான லூதரின் இத்தகைய விஷ வீச்சு 400 ஆண்டுகளுக்குப் பின்னர் ஹிட்லர் அவர்களின் வழிகாட்டுப்

புத்தகமாக மாறியது. ஹிட்லரின் யூதவிரோத கொடுஞ் செயல்களுக்கும் விஷவாயு மூலம் அவர்களைக் கொத்துக் கொத்தாய்க் கொன்றதற்கும் லூதர் அவர்களின், இவ்வித விஷமத்தனமான எழுத்துக்களே காரணம்.

கத்தோலிக்க, புரொட்டஸ்டன்ட் சமயப் பிளவு மக்களை இறைவன்பால் இழுக்கும் வல்லமையுள்ள ஆன்மிகத்தின் அடிப்படையில் அமையவில்லை. யேசுபிரான் போதித்த அன்பும், சகிப்புத் தன்மையும் இப்பெரும் பிளவின்போதும், யூதர்கள் மீதும் பயன்படுத்தப்படவில்லை. இச்சமய வேற்றுமை மக்களிடையே மனக்கசப்பு உண்டாக்க உதவியதே தவிர, மக்களை அரவணைக்கும் ஒரு புதிய சித்தாந்தத்தை உருவாக்கத் தவறிவிட்டது.

இதுபோன்ற ஒரு சமயப்பிளவு கி.மு. 300 வாக்கில் இந்தியாவில் புத்தசமயம் தலையெடுத்தபோது நிகழ்ந்தது. அதன் காரணமாக இந்து சமயத்தில் சில முக்கிய நடைமுறைகள் பெரிதும் மாற்றமடைந்தன. ஆனால் இப்பிரிவினையின் காரணமாக இந்தியாவில் இந்து - பௌத்தர்களிடையே சமயப் போர்கள் யாதும் நிகழவில்லை.

மொத்தத்தில் லூத்தரின் காலத்தைக் கிறித்துவ மறுமலர்ச்சிக் காலம் என்றோ, அல்லது மதச்சீர்திருத்தக் காலம் என்றோ அழைப்பது முற்றிலும் தவறானது என்பதைப் பின்வரும் அத்தியாயத்தில் காணலாம்.

4:16. முப்பதாண்டு போர்
(1618 - 1648)

கொடியதான இப்பெரும்போர், பொகிமியன் யுத்தம் (Bohemian war) எனவும் அழைக்கப்பட்டது. உலகின் இதயமாக அன்று திகழ்ந்த மத்திய ஐரோப்பாவில் நடந்த பெரும் பேரழிவு இதுவாகும். கத்தோலிக்க சமயத்திற்கு எதிராக லூத்ரான் மற்றும் கால்வினிய புரொட்டஸ்டன்ட் கிறித்துவர்கள் நடத்திய இப்பெரும் போரினால் ஏற்பட்ட பேரழிவு அளவிட முடியாதது.



மொகன்ஜதாரோ

சிந்துசமவெளி நாகரிகத்தின் தொன்மை சின்னங்கள். இன்று போல் அன்றும் தெப்பகுளங்கள் இருந்தமையையும், அதனைச் சுற்றி சமயச் சடங்குகள் செய்ய, மக்கள் அமர, மண்டபங்கள் இருந்ததையும் காணலாம்.

(பார்க்கவும் பக்கம் 25)



வானளாவிய எகிப்திய பிரமிடுகள்

கி.மு.2600 ஆண்டுவாக்கில் கட்டப்பட்ட பிரமிடுகள் பற்றி அந்நாட்டில் நடைபெற்றதாக கூறப்படும் பைபிள் நிகழ்ச்சிகளில் குறிப்பிடப்படாமை, வரலாற்று ஆய்வாளர்களுக்கு பைபிள் மீதான நம்பகத் தன்மையை குலைத்திடும் விதமாக அமைந்துள்ளது.

(பார்க்கவும் பக்கம் 37)



போப் ஆண்டகையின் பிரேத விசாரனை (கி.பி.897)

போப் பார்மோஸஸின் (insert) உடல் புதைக்கப்பட்டு எட்டு மாதம் சென்றபின் தோண்டி எடுக்கப்பட்டு, போப் போன்று அலங்கரிக்கப்பட்டு போப் ஸ்டீபன் *(896—97)* என்பவரால் விசாரனைக்கு உட்படுத்தப்பட்டது. அதிகார துஷ்பிரயோகம் நிரூபிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு, இறந்த போப்பின் மத்திய மூன்று விரல் எலும்புகளும் வெட்டப்பட்டு, உடல் டைபர் ஆற்றில் வீசி எறியப்பட்டது.

(பார்க்கவும் பக்கம் 204)



ரோமாபுரி பேரழகி மரோஜியா (கி.பி.890)

போப் ஆண்டவர் ஒருவருக்குக் காதலியாகவும், மற்றொருவருக்குத் தாயாகவும், இன்னுமொரு போப்பிற்கு பாட்டியாகவும் விளங்கியவர்.

(பார்க்கவும் பக்கம் 205)


Iſrael ex. Cum Priuil. Reg.
A la fin ces Voleurs infames et perdus,
Comme fruits malheureux a cet arbre pendus
Monſtrent bien que le crime (horrible et noire engeance)
Eſt luy meſme inſtrument de honte et de vengeance,
Et que ceſt le Deſtin des hommes vicieux
D'eſprouuer toſt ou tard la iuſtice des Cieux.
11

முப்பது ஆண்டுகால போர் (1618–1648)

கத்தோலிக்க — புரொட்டஸ்டன்ட் ஆகியோருக்கு இடையே உக்கிரமாக நடைபெற்ற இப்போரில், மத்திய ஐரோப்பாவில் மட்டும் 80 லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். இறந்தவர்களின் உடல்கள் மரங்களில் தொங்கவிடப்பட்டு, எதிர்தரப்பினரை பயமுறுத்த உபயோகிக்கப்பட்டது.

(பார்க்கவும் பக்கம் 216)



இன்காஸ் மக்களின் சமய ஊர்வலம்

மத்திய அமெரிக்காவின் பூர்விக குடிகளான இம்மக்களின் சமய ஊர்வலம் இந்திய நாட்டின் இந்துக்களின் திருவிழா போன்று தோற்றமளிப்பதைக் காணலாம். சப்பரத்தின் முன்பு, பெண்கள் மார்பு தரையில் படாதவண்ணம் — இந்திய கோவில்களில் செய்வது போன்று வணங்குவதையும் காணலாம்.

(பார்க்கவும் பக்கம் 228)



மதம் மாற்றம்

மத்திய அமெரிக்காவில் அஸ்டெக் பூர்வ குடியினரை நிர்வாணமாக்கி துப்பாக்கி முனையில் மதம் மாற்றுதல் — துப்பாக்கியை காட்டும் ஸ்பெயின் நாட்டு வீரனையும், அவரின் பின்னால் நிற்கும் கத்தோலிக்க சமய குருவையும் காணலாம். *(16ம் நூற்றாண்டு படம்)*

(பார்க்கவும் பக்கம் 234)

ஈஸ்ட்டர் தீவின் கல் உருவகங்கள்

இத்தீவில் காணப்பட்ட சித்திர எழுத்துகளின் வடிவம் சிந்து சமவெளி நாகரிக எழுத்துக்களை போன்று உள்ளது.

(பார்க்கவும் பக்கம் 287)

ஜெர்மனி நாட்டில் 1606ம் ஆண்டில் டோனான் ஒர்த் (Donanworth) நகரில் ஆண்டுதோறும் நடத்தப்படும் கத்தோலிக்க சமய ஊர்வலத்தை அங்குப் பெரும்பான்மையாக விளங்கிய புரொட்டஸ்டன்ட் சமயவாதிகள் தடுத்ததால் பிரச்சினை உருவாகிச் சமயப்போராக மாற்றமடைந்தது. புரொட்டஸ்டன்ட் கிறித்துவர்களின் அதிகாரபோக்கை எதிர்க்கக் கத்தோலிக்கப் போர்க் குழு டியூக்மாக்ஸிமிலியான் (Duke Maximilian) தலைமையிலும் புரொட்டஸ்டன்ட் போர்குழு League of Evangelical union எனும் பெயரில் பிரடிரிக் (Elector Palatime Frederik) என்பவர் தலைமையிலும் அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் சிறிய அளவில் தோன்றிய சமயத் தீப்பொறி வேகமாக ஐரோப்பா முழுவதும் பரவியது. ஐரோப்பிய நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக இச்சமய யுத்தத்தினுள் இழுக்கப்பட்டன. உக்கிரத்திலும் அழிவிலும், இப்போர், பெயர் பெற்றதாய் விளங்கியது. போரின் ஆரம்பத்தில் 6½ லட்சம் புரொடஸ்டன்ட் படை வீரர்களும், 4½ லட்சம் கத்தோலிக்க வீரர்களும் ஈடுபட்டனர். போரினில் ஈடுபட்ட இருபிரிவினர்களுக்கும் கர்த்தரின் ஆசீர்வாதத்தைத் தவிர ஊதியம் எதுவும் வழங்கப்படவில்லை. போரிடும் நாடுகளில் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களும், கப்பமாகப் பெறப்பட்ட பணமும் போர்வீரர்களுக்கு ஊதியமாக அமைந்தது. எனவே வீரர்கள் போரிடுவதை விடக் கொள்ளை யடிப்பதில் அதிக ஆர்வம் காட்டினர். போரின்போது ஜெர்மனியில் மட்டும் 2000 அரண்மனைகளும், 18000 கிராமங்களும், 1500 நகரங்களும் கொள்ளையிடப்பட்டு அழிக்கப்பட்டன. ஜெர்மனியில் மக்கட்தொகையில் 30 சதவீதமும், செக்கோஸ்லாவியாவில் 33 சதவீதமும் அழிந்துபட்டன. இதர ஐரோப்பிய நாடுகளான இத்தாலி, ஆஸ்திரியா, ஸ்பெயின், ஹங்கேரி, போலந்து, லித்துவேனியா, டென்மார்க், நார்வே, ஸ்வீடன், பிரான்ஸ், இங்கிலாந்து நாடுகளும் அழிவைச் சந்தித்தன. ஆறுகள்தோறும் பிணங்கள் மிதந்தன. எதிர்தரப்பு வீரர்களைப் பயமுறுத்துவதற்காக இறந்தவர்களின் உடல்கள் மரத்தில் கட்டித் தொங்கவிடப் பட்டன. சாதாரண மக்கள் போருக்கு

அஞ்சி இடம் பெயர்ந்ததால் வேளாண்மையும், தொழில்களும் அழிந்தன. பஞ்சம், பசி, பட்டினி, அழுகுரல் ஆகியவை நாடெங்கும் பரவியது. அழுகிய பிணங்களால் காலரா, டைபாய்டு, பிளேக் ஆகிய நோய்கள் மக்களைப் பீடித்துக் கொன்றன. இதுபோன்ற கொடிய சகோதர - சமய யுத்தம் இதுவரை உலகில் எங்கும் நடந்ததில்லை. இப்போரின் விளைவாக எண்பது லட்சம் மக்கள் செத்து மடிந்தனர். கத்தோலிக்க சாம்ராஜ்யம் தவிடுபொடியானது, புரொட்டஸ்டன்ட் சமயத்தினரின் செல்வாக்கு உயர்ந்தது.

* * *

பகுதி - 5

ஏகாதிபத்தியமும் காலனியாதிக்கமும்

பகுதி - 5 பொருள்

பக்கம்

5.1 நாடுகளைக் கைப்பற்றல் 221
5.2 வாஸ்கோடகாமா - இந்தியா 223
5.3 பாதாள உலகம் - இந்து சமயம் - அமெரிக்கா பண்டை நாகரிகங்கள் அழிப்பு . . 228
5.4 சிவப்பிந்தியர்களும் - அமெரிக்காவும் 238
5.5. ஆஸ்திரேலிய அட்டகாசம் 243

5:1. நாடுகளைக் கைப்பற்றல்

இஸ்லாமிய ஆட்சி ஐபீரிய தீபகற்பத்திலிருந்து 1492ல் அகற்றப்பட்ட பின்னர் போர்ச்சுக்கல் மற்றும் ஸ்பெயின் நாடுகளில் ராணுவமும், கப்பற்படையும், செயல்பாடின்றி முடங்கியது. எனினும் இந்நாடுகள் இஸ்லாத்தை வெற்றி கொண்ட மகிழ்ச்சியில் திளைத்தது. போர்ச்சுக்கீஸிய அரசன் பெர்டிணான்ட் முடங்கிக் கிடந்த சக்திக்கு ஒரு சிறந்த வடிகாலைக், கண்டுபிடித்தான்.

1. ஐரோப்பிய நாடுகளில் 11-12ம் நூற்றாண்டு முதற் கொண்டு ஒரு கற்பனைக் கதை உலாவி வந்தது. அக்கதையின்படி பிரிஸ்டர்ஜான் (Prester John) எனும் ஓர் அரசன் கிழக்கத்திய நாடுகளில் இஸ்லாமியர் மற்றும் உருவ வழிபாட்டினருக்கு இடையே ஆட்சி புரிவதாகவும், அந்நாட்டில் பொன்னும் பொருளும் அளவற்றுக் கிடப்பதாகவும், அந்நாட்டில் ஒரு மாயக் கண்ணாடி இருப்பதாகவும் அதன்மூலம் தொலைதூரத்தில் நடப்பதைக் கூடக் கண்ணுற முடியும் எனும் ஒரு கட்டுக்கதை உலவி வந்தது. அந்நாட்டிற்குப் பயணம் செய்வது பற்றிச் சிந்துபாத் கடல் பயணக் கதைகள் போன்று ஒரு கற்பனைப் பயணக் கதையும் உலவி வந்தது. பிரிஸ்டர் ஜான் அரசன் 1165ம் ஆண்டில் கிழக்கு ரோமானிய அரசன் மானுவல் (Manual) என்பவனுக்கு எழுதியதாக ஒரு கடிதமும் அக்கால மக்கள் வசம் சுற்றுக்கு வந்தது. இக்கடிதம் நகலெடுக்கப்பட்டு ஐரோப்பா முழுவதும் வினியோகிக்கப்பட்டு மக்களின் ஆர்வம் தூண்டப்பட்டது (பிந்தைய ஆண்டுகளில் இக்கடிதம் போலியானது எனக் கண்டுபிடிக்கப்பட்டது). இக்கதைகளை உண்மை எனக் கருதி அன்றைய கத்தோலிக்க தந்தை போப் அலெக்ஸாண்டர் III என்பவர் பிரிஸ்டர் ஜான் எனும் அரசனுக்கு 27.9.1177ம் தேதியிட்ட ஒரு கடிதத்தினை நம்பிக்கைக்குரிய தனது மருத்துவரிடம் கொடுத்து, உலகம் முழுமையும் பயணம் செய்து பிரிஸ்டர் ஜான் அரசனைக் கண்டுபிடித்து அவனிடம் அக்கடிதத்தைச் சேர்த்திடுமாறு அனுப்பி வைத்தார். எனினும் அவ்வாறு அனுப்பப்பட்ட தூதுவர் என்ன ஆனார் என்பது இறுதிவரை தெரியவே இல்லை.

ஆரம்பத்தில் பிரிஸ்டர் ஜான் ஆட்சி செய்யும் நாடு இந்தியா என ஐரோப்பியர்கள் உறுதியாக நம்பினர். எனவே போர்ச்சுகீஸிய மற்றும் ஸ்பெயின் நாட்டு அரசர்கள் பிரிஸ்டர் ஜான் ஆட்சி செய்யும் இந்தியாவைக் கண்டுபிடிக்கப் பெரும் முயற்சிகள் மேற்கொண்டனர். அதன் விளைவாகப் போர்ச்சுகீஸிய நாட்டுத் தூதர்கள் தரைவழியாகப் பயணம் செய்து இந்தியாவைக் கண்டுபிடித்துவிட்டதாக அபிசீனியா நாடு (எத்தியோப்பியா) சென்றடைந்தனர். எத்தியோப்பியா அரசனைப் பிரிஸ்டர் ஜான் என்றும் அழைத்தனர். அவ்வமயம் ஆப்பிரிக்காவின் வடகோடியிலும் ஐபீரியன் துணைக் கண்டத்திலும் இஸ்லாமிய அரசு நிறுவுவதற்காகப் பல சமயப் போர்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தன் நாட்டை இஸ்லாமியர்களிடமிருந்து பாதுகாத்திட, அந்நாட்களில் தலைமறைவாக இருந்த போர்ச்சுகீஸிய அரசப் பிரதிநிதிகளிடம் எத்தியோப்பிய அரசன் உதவிகோரினான். அவ்வரசனுக்கு உதவுவற்காகக் கடல்வழியாகப் போர்ச்சுகீஸியர்கள் சென்றனர். அவ்வழிப்பயணத்தின்போது 1415ம் ஆண்டில் ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையில் பல தீவுகள் இருப்பதைக் கண்டறிந்து கால் ஊன்றினர். பின்னர் 1488ம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைச் சுற்றி இந்தியாவை அடையலாம் எனவும் கண்டறிந்தனர். இக்கண்டுபிடிப்பின் விளைவாகவே வாஸ்கோடகாமா இந்தியாவிற்குப் பின்னர் வரமுடிந்தது.

2. பண்டைய நாட்களில் ஐரோப்பியர்களின் உணவு தயாரித்தலுக்கு வேண்டிய நறுமணப்பொருள்களான மிளகு, இஞ்சி, ஏலக்காய் போன்றவைகளை, அரேபிய வியாபாரிகள் இந்தியாவிலிருந்து கடல்வழியாகப் பெற்று, தரைவழியாக (தற்போதைய) ஈரான், ஈராக் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டு சென்று வணிகம் நடத்தினர். ஐரோப்பியர்களுக்கு இன்றுகூட உணவில் காரம் சேர்ப்பதற்கு மிளகாய் வற்றல் உபயோகம் தெரியாது எனலாம். மிளகினை உணவில் காரம் சேர்ப்பதற்கு உபயோகிப்பது ஐரோப்பியர்களின் பண்டைய வழக்கம். இதன்பொருட்டுப் பல மிளகு யுத்தங்களும் நடைபெற்றுள்ளன. ஈரான், ஈராக் பகுதிகளை இஸ்லாம் ஏழாம் நூற்றாண்டில் வெற்றி கொண்டபின் இத்தரைவழி வணிகம் முற்றிலும் தடைபட்டது.

ஐரோப்பியர்கள் உணவிற்கு நறுமணப் பொருள்கள் இன்றித் தவித்தனர். எனவே அரேபிய மூலம் தரைவழி வணிகத்திற்குப் பதிலாகக் கடல் வழியாக இந்தியாவுடன் நேரடி வணிகம் செய்திட ஐரோப்பியர்கள் முயன்றனர். இதன் பொருட்டே வாஸ்கோடகாமா இந்தியாவிற்குப் பயணம் மேற்கொண்டார்.

போர்ச்சுகீஸியர்களின் கடல்வழிப் பயண வெற்றியைத் தொடர்ந்து, மற்றொரு கத்தோலிக்க நாடான ஸ்பெயினும் கடல்பயண கண்டுபிடிப்புகளை மேற்கொண்டது. அந்நாட்டின் ஆராய்ச்சிப் பயணியர் கொலம்பஸ் என்பவர் 1492ல் இந்தியாவைக் கண்டுபிடித்து விட்டதாகக் கருதி அமெரிக்கா பெருநிலப்பிலுள்ள கொலம்பியா சென்றடைந்தார். தென்அமெரிக்கா முழுமையையும் (பிரேசில் தவிர) ஸ்பெயின் வசமும்; பிரேசில், மொசாம்பிக்; மடகாஸ்கர், ஸ்ரீலங்கா, மலேசியா, இந்தோனேஷியா, கிழக்கு தைமூர் ஆகிய நாடுகளும், இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியும் போர்ச்சுகீஸியர் வசமுமானது.[1] இவ்வாறு ஐரோப்பிய நாடுகள் தங்களது கப்பற்படை, பீரங்கிகள், துப்பாக்கிகள் மூலம் உலகம் முழுமையையும் ஆளும் திறன் பெற்றது. ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், டச், பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்கும் ஆங்காங்கே காலனிகள் கிடைத்தன.

5:2. வாஸ்கோடகாமா - இந்தியா - ஐரோப்பா[2]

வாஸ்கோடகாமாவின் இந்தியப் பயணத்தை அறிந்து கொள்வதற்கு முன்னர் 14-15ம் நூற்றாண்டுக் காலத்தில் ஐரோப்பிய சமய, அரசியல் நிலவரத்தையும், இந்தியாவின் நிலைமையையும் சீர்தூக்கி அறிவது அவசியம். கிறித்துவ சமயம் தோன்றிய நான்காம் நூற்றாண்டு முதற்கொண்டு அச்சமய மக்களுக்கும் யூதர்களுக்குமிடையே பெரும் வெறுப்புகள் தூண்டடப்பட்டன. யூதராய்ப் பிறந்து யூதராய் வளர்ந்து யூதநாட்டில் சிலுவையில் அடிக்கப்பட்டு, இறந்து மீண்டும் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த யேசுபிரானை யூதர்கள் ஏற்றுக்கொள்ளாதது, கிறித்துவ சமயத்தைப் பொய்



வாஸ்கோடகாமா

என நிரூபிப்பதாகவும், அது தங்களைப் போன்ற யேசுவை நம்புபவர்களுக்கு அவமானமாய் இருப்பதாகவும் ஐரோப்பிய நாடுகள் கருதின. இதனால் கிறித்துவ சமயத் தோற்றத்திலிருந்தே ஐரோப்பிய கிறித்துவர்களுக்கும் யூதர்களுக்கு மிடையே பெரும் வெறுப்புணர்வு இருந்து வந்தது.

இதற்கிடையில் ஸ்பெயின் மற்றும் போர்ச்சுக்கல் நாட்டில் 700 வருட இஸ்லாமிய ஆட்சியின் காரணமாகக் கத்தோலிக்க சமயத்தினருக்கு இஸ்லாத்தின் மீது அளவுகடந்த கசப்புணர்ச்சி தோன்றியது. இஸ்லாமியர் களைத் தேடிக் கண்டுபிடித்து அழிக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டனர். எனவே 711ம் ஆண்டிற்குப் பின்னர் யூதர்களை மட்டுமின்றி இஸ்லாமியர் களையும் அழிப்பதே ஐரோப்பியர் களின் குறிக்கோளாய் இருந்தது. இக்கசப்புணர்ச்சியின் காரணமாக வாஸ்கோடகாமா தனது இந்திய பயணத்தின் போதும், இங்கு வந்து சேர்ந்த பிறகும் இஸ்லாமியர்களைக் கொல்வதற்குத் தயங்கியதில்லை.[3]

டில்லி இஸ்லாமியப் பேரரசர்கள் மற்றும் பாமினி சுல்தான்களின் தெற்கு நோக்கிய சமய - கலாச்சார ஊடுருவல் களைத் தடுத்து நிறுத்திட 15, 16ம் நூற்றாண்டுகளில் விஜயநகர பேரரசு அமைக்கப்பட்டது. இப்பேரரசு 1565ம் ஆண்டு வரை தென் இந்தியாவில் நீடித்தது. அதனின் மிகவும் திறமை வாய்ந்த அரசர்களாக விளங்கியவர்கள் அரிகர புக்கர் (1344-1377) என்பவரும் அவருடைய மைந்தர் குமார கம்பண்ணரும் ஆவார். அஞ்சாப் போர் வீரனான கம்பண்ணர் மதுரையில் இஸ்லாமியரின் ஆட்சியை அழித்து ஸ்ரீரங்கம், திருவானைக்கா

மற்றும் மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் ஆகியவற்றை இஸ்லாமியரின் 50 ஆண்டுகாலப் பிடியிலிருந்து விடுவித்தவர். அந்தணர்களின் சந்தனத்திற்குப் பதிலாக, உணவிற்காகப் பலியிடப்பட்ட மிருகங்களின் இரத்தம் ஓடிய வைகை ஆற்றையும், அக்கிரமக்காரர்களையும், தமிழுக்குப் பதிலாகப் பாரசீக மொழி பரவியிருந்ததையும் தடுத்த பெருமை குமார கம்பண்ணரைச் சாரும். இவருடைய சேவை தமிழகத்திற்கு அவ்வமயம் கிடைக்காமல் இருந்திருந்தால் இன்று தமிழ்மொழி தமிழகத்திலிருந்து மறைந்திருக்கும் என்றால் மிகையாகாது. அன்றைய பொழுதில் திருவானைக்கா அக்கிராகரத்தில் நுழைந்து வாழ்ந்த இஸ்லாமியர்கள் வளர்த்த கிளிகள்கூடப் பாரசீக மொழி பேசியது என வரலாற்றுக் குறிப்புகளில் காணப்படுகின்றன. எனினும் 1565ம் ஆண்டில் நடைபெற்ற தலைக்கோட்டை யுத்தத்தில் இஸ்லாமியர்களின் கூட்டுப்படை விஜயநகர அரசன் இராமராயரைத் தோற்கடித்து விஜயநகர பேரரசை வீழ்த்தினர். இத்தோல்வியைத் தொடர்ந்து தென்னிந்தியாவில் ராஜ பிரதிநிதியாய் ஆண்டு வந்த நாயக்கர்களும், கேரளாவின் கடற்கரைப் பகுதியில் ஆண்டுவந்த சிற்றரசர்களும் சுய ஆட்சி பெற்றனர். அவற்றில் ஒன்று கோழிக்கோட்டைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த இந்து அரசன் சாமுத்திரி. இவர் ஆண்டுவந்த காலத்தில் கேரள மேற்குக் கடற்கரைப் பகுதியில் பலமிக்க இந்து அரசர்கள் இன்மையாலும் பீரங்கி யுத்தத்தில் தென்னிந்திய சிற்றரசர்கட்குப் போதிய தேர்ச்சி இன்மையாலும், ஒருசில ஐரோப்பியரைக் கொண்ட (பீரங்கிகள் கொண்ட) கடற்படை பல ஆயிரக் கணக்கான இந்திய வீரர்களை வெற்றிகொள்ள முடிந்தது. ஐரோப்பியர்களின் நிறமும், உடற்கட்டும் இந்தியர்களுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தியது (இன்றுகூட அத்தகைய அடிமைப் புத்தியை நாம் ஐரோப்பியர்களிடம் காட்டுவதைக் காணலாம்). இத்தகைய சூழ்நிலையில் 1498ம் ஆண்டு மே மாதம் இருபதாம் நாளில் போர்ச்சுகீஸிய நாட்டுக் கத்தோலிக்க வர்த்தகப் பிரதிநிதிக்குழு நான்கு கப்பலில், 140 படை வீரர்களுடன் வாஸ்கோடகாமா தலைமையில் கோழிக்கோடு வந்தடைந்தது. அவர்களது அன்றைய நோக்கம் மிளகு, ஏலம், லவங்கம் ஆகிய வணிகப் பொருள்களை வாங்கித் தங்கள் நாட்டிற்குக் கொண்டு செல்ல வணிக நிலையங்களை நிறுவுதலாகும்.

கப்பலிலிருந்து இறங்கிய வெள்ளையர்கட்குக் (போர்ச்சுகீசியர்களுக்கு) கோழிக்கோடு அரசன் சார்பாகப் பெரும் வரவேற்பு வழங்கப்பட்டது. அரசனின் 3000 நாயர் படை வீரர்கள் புடைசூழ, தப்பணா நம்பூதிரி எனும் அரச ஆலோசகர் முன் செல்ல, வாஸ்கோடகாமா பெரும் ஊர்வலத்துடன் பல்லக்கில் அரச சபைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். எனினும் சாமுத்திரி தன் நாட்டில் வாஸ்கோடகாமாவை வாணிபம் செய்ய அனுமதிக்கும் பொருட்டுப் பொற்காசுகளை ஆயத் தீர்வையாக விதித்தான். இதனை வாஸ்கோடகாமா ஏற்றுக் கொள்ளாததால் இருவருக்குமிடையே பகைமை உணர்ச்சி பெருகியது. வாஸ்கோடகாமாவும் கோழிக்கோட்டில் வாசனைப் பொருட்களை வாங்குவதற்குப் பதிலாகப் பக்கத்து நாடுகளான கொல்லம், வேட்டத்துநாடு அரசர்கள் மூலமாக அவற்றை வாங்கிக் கப்பலில் ஏற்றி 1498 ஆகஸ்ட் மாதத்தில் போர்ச்சுக்கல் புறப்பட்டான். பொருட்களைக் கப்பலில் கொண்டு செல்லக் கோழிக்கோடு அரசனின் சில கப்பல்களைக் கைப்பற்றினான். அதனைச் செலுத்தப் பதினாறு மீனவர்களையும், சில நாயர் படைவீரர்களையும் அடிமையாகவும் பிடித்துச் சென்றான். கொண்டு சென்ற பொருள்களின் மதிப்பு, கடல் பயணச் செலவை விடப் பெருமளவு அதிகமாய் இருந்தது. எனவே போர்ச்சுக்கல் சென்ற வாஸ்கோடகாமாவிற்கு அந்நாட்டு அரசன் பரிசுகளையும் பட்டங்களையும் வழங்கிக் கௌரவித்தான்.

வாஸ்கோடகாமாவைத் தொடர்ந்து கோழிக்கோடு வந்து சேர்ந்த மற்றொரு போர்ச்சுகீஸிய வணிகர் கேப்ரல் என்பவர். இவர் கோழிக்கோட்டில் தங்கியிருந்த காலத்தில் போர்ச்சுகீஸியர்களுக்கு எதிராக இந்துக்களும், முஸ்லீம்களும் கலகம் செய்து பல போர்ச்சுகீஸியர்களைக் கொன்றனர். எனவே கேப்ரல், அருகிலுள்ள கொச்சின் நாட்டிற்குத் தப்பிச் சென்று பொருள்களை வாங்கிப் போர்ச்சுக்கல் சென்றடைந்தான். போர்ச்சுக்கீஸியர்களைக் கொலை செய்ததை அறிந்த அந்நாட்டு அரசன் வெகுண்டெழுந்தான். இதற்குப் பழிவாங்கும்பொருட்டு 800 போர் வீரர்களைக் கொண்ட பீரங்கி பொருந்திய கப்பலுடன் வாஸ்கோடகாமாவைக் கோழிக்கோட்டிற்கு (1500ம் ஆண்டில்) இரண்டாம் முறையாக அனுப்பி வைத்தான். கோழிக்கோடு அருகே நடுக்கடலில் வந்த

இப்படை ‘மிர்’ எனும் இந்திய கப்பல் மெக்கா யாத்திரை முடித்து இந்தியா திரும்பி வந்து கொண்டிருந்ததை வழிமறித்து அதனைப் பீரங்கி கொண்டு தாக்கி அதிலிருந்த ஆண் பெண் அனைவரையும் கொன்றது. இக்கொலை 781 வருடகாலமாகப் போர்ச்சுக்கல்லை (ஐபீரிய தீபகற்பம்) அடிமையாகக் கொண்டிருந்த இஸ்லாமியர்களைப் பழிவாங்குவதற்காகச் செய்யப்பட்டது. அதே வேளையில் மெக்கா சென்று கொண்டிருந்த மற்றொரு கப்பலான ‘மதாயி’ இடைமறிக்கப் பட்டது. அதிலிருந்த பயணிகளில் 50 பெண்களும், ஓர் எகிப்து நாட்டுத் தூதுவரும் அடங்குவர். பெண்கள் தங்களது கப்பலையும் அதிலிருந்த 350 ஆண்களையும் பத்திரமாக விடுவிக்க வேண்டித் தங்களது தங்க ஆபரணங்கள் முழுமையையும் வாஸ்கோடகாமாவிற்கு அளித்தனர். தங்கத்தைப் பெற்றுக் கொண்ட வாஸ்கோடகாமா, பயணிகளை விடுவிக்க மறுத்ததோடு கப்பலைத் தீவைத்து எரித்தான். ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக 400 பயணிகள் தீயில் வெந்து மாண்டனர். முஸ்லீம்கள் மீது இன்னும் கோபம் அடங்காமல், கோழிக்கோடு நகர் அருகில் சென்று அந்நகரை இரண்டு நாளாக இடைவிடாது பீரங்கியால் தாக்கினான். அந்நகரிலிருந்த இஸ்லாமியர்கள் அனைவரையும் நகரைவிட்டு விரட்டுமாறு அரசனுக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்தான். இவ்வேண்டுகோளை நிராகரித்த அரசன் சமாதானம் பேசும் பொருட்டுத் தனது பிரதிநிதியாக முன்பு வாஸ்கோடகாமா வரவேற்பு ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கிய தப்பணா நம்பூதிரியை வாஸ்கோடகாமாவைச் சந்திக்க அனுப்பி வைத்தான். தன்னை உளவு பார்க்க, அரசன் நம்பூதிரியை அனுப்பி வைத்துள்ளதாகக் கருதிய வாஸ்கோட காமா தப்பணா நம்பூதிரியின் உதட்டினையும், காதினையும் வெட்டியதுடன், நாய் ஒன்றின் காதுகளை நம்பூதிரி காதிருந்த பகுதியில் தைத்து அவமானப்படுத்தி அசரனிடம் அனுப்பி வைத்தான். அந்நாட்டிலிருந்த நாயர் படை வீரர்கள் பலரின் கையும், காதும், மூக்கும் வெட்டப்பட்டு அவமானப்படுத்தப் பட்டனர். மக்கள் மரண பயத்தால் உறைந்து போயினர். இத்தகைய வெறியாட்டம் ஆடிய வாஸ்கோ, ஊரினைக் கொள்ளையிட்டுப் பெரும் செல்வங்களுடனும் பொருள் களுடனும் போர்ச்சுக்கல் சென்றடைந்தான். இத்துடன்

நிறுத்திக் கொள்ளாமல் மூன்றாவது முறையாக 1524ம் ஆண்டில் மீண்டும் பதினான்கு கப்பல்களுடன் கோழிக்கோடு வந்து தனது வெறியாட்டத்தைத் தொடர்ந்தான். எனினும் மலேரியா நோயால் பீடிக்கப்பட்ட வாஸ்கோ அவ்வாண்டு இறுதியில் மரணமடைந்தான். அவனது பூதஉடல் கொச்சின் நகர செயின்ட் பிரான்ஸிஸ் சர்ச் இன்று இருக்குமிடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இவ்வாறு கர்ணகொடூரனாய் விழங்கிய வாஸ்கோடகாமா இந்தியப் பள்ளிப் புத்தகங்களில் கொடுரன் என வர்ணிக்கப் படுவதற்குப் பதிலாகக் கடற்பயணி எனும் ஓர் மென்மையான வார்த்தையால் அலங்கரிக்கப்பட்டுள்ளான்.

இவனை மகிமைப்படுத்தும் முகமாக மத்திய அரசும் தன் பங்கிற்கு வாஸ்கோடகாமா எனும் விரைவு இரயில் வண்டியை வேளாங்கண்ணியிலிருந்து புறப்படுமாறு அறிமுகப்படுத்தியுள்ளது.

5:3. பாதாள உலகம் - இந்து சமயம் - அமெரிக்கா - பண்டைய நாகரிகங்கள் அழிப்பு

அமெரிக்க நிலப்பரப்பு புவிகோள உருண்டையில் இந்தியாவிற்கு நேர் எதிர்ப்புறமாக அமைந்திருப்பதால் அது பண்டைய இந்திய அறிஞர்களால் பாதாள லோகம் என அழைக்கப்பட்டதாக ஒரு கருத்து நிலவி வருகின்றது.[4] அக்கருத்திற்கு வலுச்சேர்ப்பது போன்று, அமெரிக்க நிலப்பரப்பில் இன்றைக்கு 600 ஆண்டுகளுக்கு முன்புவரை நிலவியிருந்த சமய - கலாச்சார மற்றும் வழிபாட்டு முறைகள் அமைந்திருந்தன.

கிறிஸ்டோபர் கொலம்பஸ்

இவர் ஸ்பெயின் நாட்டு அரசரின் நிதிஉதவியுடன் புதிய நிலப்பரப்புகளைக் கண்டுபிடிக்கவும், அங்குக் கிடைக்கும் தங்கம், வெள்ளிகளைக் கைப்பற்றுவதற்கும் கடல்பயணம் மேற்கொள்ள நியமிக்கப்பட்டார். கரிபியன் தீவுகள், மத்திய



அமெரிக்கா, தென் அமெரிக்கா பகுதிகளை அவர் கண்ணுற்றார். அந்நாட்டு மக்களைக் கொடூரமாகக் கொன்று, ஸ்பெயின் நாட்டினரை அங்குக் குடியேற்றினார்.

கொலம்பஸ் அமெரிக்க நிலப்பரப்பைக் கண்டுபிடிப்பதற்கு முன்பே வட மற்றும் தென் அமெரிக்கா மற்றும் அவற்றிற்கு இடையே இருக்கும் எண்ணற்ற தீவுகளின் மக்கள், நாகரிகத்தின் உச்சியில் வாழ்ந்து வந்துள்ளனர். அதுவும் அம்மக்கள் இந்துக்களாய் வாழ்ந்துள்ளனர் என்பது பலருக்கு ஆச்சரியத்தையும் அதிர்வையும் தரக்கூடியது.[4A] அம்மக்கள் மாயன்கள், இன்க்காஸ், அஸ்டெக் இனத்தவர். இவர்களைத் தவிர வடஅமெரிக்கக் காடுகளில் 'ஆவி வழிபாடு' மேற்கொண்டிருந்த செவ்விந்தியர்களும் வாழ்ந்து வந்தனர்.

இவர்களில், செவ்விந்தியர்களைப் பற்றியும் அவர்களது பாரம்பரியம் பற்றியும் தெரிந்து கொள்ள ஆவணங்கள் அல்லது நாகரிக எச்சங்கள் உலகிற்குத் தெரியாமல் ஆக்கிரமிப்பாளர்களால் மொத்தமாக அழிக்கப் பட்டுவிட்டன. எனினும் மற்ற மூன்று இனத்தவர்களைப் பற்றி ஓரளவு கலை - இலக்கிய - சமய எச்சங்கள் இன்று நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. மீதமுள்ளவை, அந்நிலப் பகுதியை ஆக்கிரமித்த ஸ்பெயின் நாட்டுச் சமய - அரசியல்வாதிகளால் சுவடு தெரியாமல் அழிக்கப்பட்டன. எனினும் ஸ்பெயின் நாட்டு நூலகங்களில் இம்மக்களைப் பற்றிப் பாதிரியார்கள் எழுதிய குறிப்புகள் ஓரளவு கிடைக்கப் பெற்றுள்ளன. அக்குறிப்புகளில் அங்கு வாழ்ந்த மக்களின் கலாச்சாரம் இகழ்ந்து பேசப்பட்டிருப்பினும், அவற்றிலிருந்து ஒரு சில செய்திகளை நாம் அறிய முடிகின்றது.

மாயன்கள்

இம்மக்கள் மத்திய அமெரிக்காவின் தென் மெக்ஸிக்கோ, கோதிமாலா, ஹோண்டுராஸ் பகுதியில் வாழ்ந்துவந்த பூர்வ குடிமக்கள். இவர்கள் சிந்து சமவெளி நாகரிக காலத்தில் அவ்விடமிருந்து இங்குப் புலம் பெயர்ந்து வந்த இந்துக்களாக இருக்கக்கூடும் என ஒரு கருத்து உள்ளது.[5]



மாயன்கள் கோவிலும், திருவிழாவின் போது அணியும் முகமூடியும்

இன்க்காஸ்

இம்மக்கள் ஆதியில் டம்பட்டகோ (Tambatocco) எனும் குகையில் நான்கு சகோதரர்களாகவும், நான்கு சகோதரிகளாகவும் பிறந்து பின்னர் பல்கிப் பெருகியதாகவும் ஓர் உள்ளூர் கதை உண்டு. அவ்விதமான எட்டுச் சகோதர சகோதரிகளின் பெயர்கள் கீழ்க் கண்டவை.[6]

1. ஐயர் மன்கோ	-	Ayar Manco	-	சகோதரர்
2. ஐயர் கச்சி	-	Ayar Cachi	-	சகோதரர்
3. ஐயர் ஆகா	-	Ayar Auca	-	சகோதரர்
4. ஐயர் உச்சு	-	Ayar Uchu	-	சகோதரர்
5. மாமா உக்லோ	-	Mama Ocllo	-	சகோதரி
6. மாமா ரவ்வா	-	Mama Raua	-	சகோதரி
7. மாமா ஆக்கா	-	Mama Hauca	-	சகோதரி
8. மாமா கோரா	-	Mama cora	-	சகோதரி

இம்மக்கள் தென் அமெரிக்காவின் இன்றைய பெரு ஈக்குவடர், சிலி, அர்ஜென்டினா, பொலிவியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பகுதிகளில் வாழ்ந்துவந்தனர்.

அஸ்டெக்ஸ் (Aztecs)

அஸ்டெக்ஸ் மக்கள் மத்திய அமெரிக்காவின் வடக்கு மெக்ஸிக்கோ பகுதியில் வாழ்ந்துவந்தனர்.

இம்மக்களைப் பற்றியும் அப்பகுதியில் வாழ்ந்த மாயன் மற்றும் இன்காஸ் இனத்தவர்கள் பற்றியும் தற்காலத்தில் பல நூற்றுக்கணக்கான நூல்கள் வெளியாகியுள்ளன. அவைகளில் பிரபலமான சில வருமாறு:

1. The conquest of Incas - By John Hermming
2. Hindu America - By Gordon Ekholm and Bikghu Chammanlal
3. Who Discovered America - By Ricardo Palleres
4. The Mayans - en-wikipedia
5. My visit to Mayan land (of Central America) - By Dr. V. Ganapathy Sthapati.

இந்நூல்களில் இரண்டாவது குறிப்பிட்டுள்ளது 1940 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இதன் ஆசிரியரில் ஒருவரான சம்மன்லால் என்பவர் ஒரு புத்தசமய பிட்சு (துறவி). இந்நூலில் வேதகால மற்றும் சிந்துசமவெளி நாகரிகத்திற்கும் அமெரிக்க (மெக்சிகோ) நாகரிகத்திற்கும் பெரும் ஒற்றுமைகள் இருப்பதாக விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

மாயன்கள், இன்க்காஸ் மற்றும் அஸ்டெக் மக்களின் தெய்வ வழிபாடு இந்து சமயத்தின்படி இருந்தது என்றும், அவர்கள் சூரியன், சிவன் மற்றும் விஷ்ணுவை வழிபட்டதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன என்றும் மேற்கண்ட நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றைக் கீழே காணலாம்.[7]

1. வங்காளத்தில் சித்திரை மாத இறுதியில் அனுசரிக்கப்படும் சராக் பூஜை (Charak Pooja) இவ்விடங்களிலும் அனுசரிக்கப்பட்டது (தூக்கம் நிகழ்ச்சி போன்றது).

2. அங்குள்ள மக்களின் 'நேரம் கணக்கிடும் முறையும்', உலக வரலாற்றை யுகங்களின் அடிப்படையில் கணக்கிடும் முறையும் இங்குப் போல் உள்ளது.

3. ரோஜா மலர் சமயச் சின்னமாகக் கொள்ளப்பட்டது.

4. கை முத்திரை சின்னம் காணப்படுகிறது.

5. பகடை எனும் சூதாட்டம் அந்நாடுகளில் வழக்கிலிருந்தன. அவ்விளையாட்டின் விதிமுறைகளும் இந்தியாவில் உள்ளதுபோல் இருந்தன.

6. கல்வெட்டுகளில் யானை உருவம் காணப்படுகின்றது.[8] (அமெரிக்க நாடுகளில் யானை காணப்படாத ஒரு விலங்கினம். அதன் உருவமும் ஆப்பிரிக்க யானை போன்று இல்லாமல் இந்திய யானை போன்றுள்ளது).

7. பன்னிரெண்டு ராசிகளைக் கொண்டு ஜாதகம் கணித்தல் உபயோகத்திலிருந்தது.

8. அங்குள்ள அரசர்கள், இந்தியாவைப் போன்று பல்லக்கு, முத்துகுடை, சிம்மாசனம், ஆடை ஆபரணங்கள் அணிந்திருந்தானர்.

9. கோவில்களில் ஆடல், பாடல்கள் மூலம் வழிபாடு இருந்தது.

10. மெக்ஸிகோவிலும், அமெரிக்காவின் கொலராடோ பகுதியிலும் பெரிய சிவன்கோவில்கள் இருந்தன.

11. புனர் ஜென்மம், ஆன்மா ஆகியவற்றில் அம்மக்களுக்கு நம்பிக்கை இருந்தன.

12. மாயன்கள் கட்டிய கோவில்களில் விமானம் தமிழ்நாட்டுக் கோவில்களைப் போன்று இருந்ததாக ஸ்தபதி Dr. V. கணபதி குறிப்பிட்டுள்ளார்.

13. மாயன்களின் பிரமிடுகள் (தமிழகத்திலுள்ள சுடலை மாட சாமி கோவிலின் சிவனைணந்த பெருமாள்சாமி பீடம் போன்றும்) கேரளா மற்றும் நாகர்கோவிலில் காணப்படும் ஆராட்டுதாலா எனும் வழிபடுதலம் போல் உள்ளது என்று அங்குச் சென்று ஆய்வு நடத்திய நாகர்கோவில் பேராசிரியர் மகாதேவன்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

கணபதி ஸ்தபதி மெக்ஸிகோ நாட்டில் மாயன்கள் தலைநகராயிருந்த யுகாடன் நகரில் எழுப்பப்பட்டிருந்த (அழிக்கப்பட்ட) கோவிலுக்கு மார்ச் 21ம் நாள் சென்று பார்த்தார். அக்கோவிலில் அன்று ஒரு சிறப்பான நாள். சூரியன் அஸ்தமிக்கும் தருவாயில், நிழல், பாம்பு போல் படிகளில் சென்று, மலைக்கோவிலின் உச்சியிலிருக்கும் பாம்பின் தலையைத் தழுவிச் செல்வது போன்று படர்ந்து மறைந்த விதம், அன்று அங்குக் கூடியிருந்த 5000 சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்தது. மாயன்களின் வான சாஸ்திரமும் கட்டிட, சிற்பக் கலைகளும், வாஸ்து சாஸ்திரமும் இன்றும் பெரும் பாராட்டுக்குரியதாக விளங்குகின்றன.

ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாக ஆனந்தமாகவும், அமைதியாகவும் வாழ்ந்த மக்களும், அவர்களின் கலாச்சாரமும், கோவில்களும் 1519 முதல் 1590 வருட காலத்தில் ஸ்பெயின் நாட்டுக் கத்தோலிக்க சமயத்தினரால் உருத்தெரியாமல் அழிக்கப்பட்டன. ஸ்பெயின் நாட்டினர் தங்களை முழுமையான சுத்தமான கிறித்தவர்கள் என அழைத்துக் கொள்பவர்கள். இவர்கள் ஹிஸ்பானியோலா (Hispaniola) எனும் மேற்கிந்திய தீவில் 1517ஆம் ஆண்டில் முதலாவதாக தங்களது காலைப் பதித்தனர். இத்தீவுவாசிகள், ஸ்பெயின் நாட்டினரை வானில் இருந்து இறங்கிய பெருமைமிக்க தங்களின் இறைதூதர்களாகக் கருதி அவர்களுக்குத் தங்க இடமும், உண்ண உணவும் கொடுத்து உபசரித்தனர். உள்ளூர்வாசிகளை விட ஸ்பானிஷ் வீரர்கள் பலமடங்கு உணவுகளை உண்டனர். தீவுவாசிகளின் பெண்களிடம் மெள்ள மெள்ளத் தங்களது மோக வெறியைக் காட்டினர். பின்பு அத்தீவிலுள்ள பிரபல பிரமுகர்களின் வீடுகளிலும், அத்தீவின் அரசனின் மனைவியிடமும் தங்களது - மிருக - காமுக வேலையைக் காண்பித்தனர். அதன் பின்னரே, தீவு வாசிகள், இவர்கள் தேவலோக தூதுவர்கள் இல்லை, ஒழுக்கம் கெட்ட மூடர்கள் என உணரத்தலைப்பட்டனர்.

மார்ச் 1517ல் ஸ்பானிஷ் கடற்படையினர் மாயன் நாட்டுத் தலைநகரான யுகாடனில் புகுந்து கோவில்களிலும், வீடுகளிலுமிருந்த தங்கம், வெள்ளிப் பொருள்களைக் கவர்ந்து சென்றதுடன் கோவில்களை உடைத்தும் இடித்தும் சுத்தப்படுத்தினார்கள் (?). ஸ்பானியர்கள் நடத்திய கொடுமை எழுத்தில் அடங்காது.[9] ஆண்கள் அடிமையாக்கப்பட்டனர், பெண்கள் ஆசைநாயகிகளாக ஆக்கப்பட்டனர். வீடு வீடாகச் சென்று மக்களைக் கிறித்துவ சமயத்திற்குத் திருப்பினர். மறுத்தவர்கள் கொல்லப்பட்டனர். இக்கொடுமைகளை முன்னின்று நடத்தியவர் டிகோ - டி- லண்டா எனும் பாதிரியார். இவர் மணி எனும் நகரிலிருந்த நூல் நிலையத்தை அழித்தார். வான சாஸ்திரம், வைத்தியம், ஜோதிடம், வழிபாட்டு முறை ஆகியவை எழுதப்பட்டிருந்த சுவடிகளைத் தெருவில் குவித்துத் தீயிலிட்டுக் கொளுத்தினர்.[10] அவ்வமயம் இவ்வழிவிலிருந்து தப்பியவை மூன்று சுவடிகள் மட்டுமே. சில சுவடிகள் ஸ்பெயின் நாட்டுக் கண்காட்சியகத்தில் கிடைத்தன. ஒரு சுவடி 1860ல் பாரிஸ் நகரில் பழைய ஆவணங்களுடன் ஒரு பேழையில் கிடைத்தது. இச்சுவடிகளில் இறை வழிபாட்டு முறைகள், சடங்குகள் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இதுபோன்று இன்கா கலாச்சாரமும்,[11] நாடும், ஸ்பெயின் நாட்டினரால் அழிக்கப்பட்டது. இன்கா அரசன் அடகல்பா என்பவரைச் சூழ்ச்சியின் மூலமாக ஸ்பானியர்களும் அவர்களுடன் வந்திருந்த பாதிரியார் வெல்வர்ட் என்பவரும் கொன்றனர். சமாதானம் பேசுவதற்காக என வரவழைத்த அரசனைக் கைது செய்தனர். அவ்வமயம் நடந்த கலவரத்தில் ஆயுதமில்லாத ஆயிரக்கணக்கான இன்கா மக்களும், வீரர்களும் கொல்லப்பட்டனர். இன்கா மக்களை ஒரு மைதானத்தில் கூடச், செய்தனர். அதனில் வெளியேற ஒரே ஒரு வழி இருந்தது. மக்களை ஓட முடியாமல் செய்து அவர்களைப் பீரங்கியால் சுட்டும், குதிரையின் காலினால் மிதித்தும் கொன்றனர். கைது செய்யப்பட்ட இன்கா அரசன் அடகல்பாவை விடுவிக்க ஒரு பெரிய அறைமுழுவதையும் தங்கத்தால் நிரப்ப வேண்டும் எனப் பொதுமக்களிடம் கட்டளையிட்டனர்.[12] அவ்வாறு தங்கத்தால் அறை முழுவதும் நிரப்பிய பின்னரும் அரசனை விடுவிக்காமல் தூக்குமேடைக்குக் கொண்டு சென்றனர். தூக்கு மேடைக்கு முன் நின்ற அரசனைக் கிறித்துவ சமயத்திற்கு மதம்

மாற வற்புறுத்தினர். உயிருக்கு அஞ்சிய அரசனும் மதம் மாறினான். எனினும் ஸ்பானியர்கள் அரசனைத் தூக்கி லிட்டனர். இன்கா தளபதிகளையும் மக்களையும் கூட்டி ஸ்பெயின் ஆட்சியையும் கிறித்துவத்தையும் ஏற்றுக்கொள்ள உறுதிமொழி வாங்கினர்.

இதுபோன்று மற்றொரு இன்கா பகுதி அரசனான 'டோபக்' என்பவன் தலைநகரின் தெருக்களில் கையில் விலங்கு மாட்டித் தூக்கு மேடைக்குக் கொண்டு செல்லப் பட்டான். அவ்வமயம் அரசனைத் தூக்கிலிட வேண்டாம் என மக்கள் தரையில் விழுந்து ஸ்பானியரை வணங்கினர். எனினும் மக்களின் அழுகைக்கும் கதறலுக்கும் செவிகொடாத ஸ்பானிஷ் பிரதிநிதி 'டோல்டா' என்பவன் அரசனைத் தூக்கிலிட்டான். எஞ்சியிருந்த இன்கா மக்களையும் மதத்தையும் பூண்டோடு அழிக்க 1567-1570ல் ஸ்பெயின் அரசு நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில், யுக்திகள் வகுக்கப்பட்டன. அக்கூட்டத்தில் உரையாற்றிய அவிலர் எனும் பாதிரியார் தான் மட்டும் 30000 கோவில்களை இடித்ததாகவும், இன்காவினரின் மூதாதையர்களின் கல்லறைகள் தோண்டப்பட்டு உடல்களை அகழ்ந்து எடுத்து எரித்ததாகவும் பெருமை பாரட்டினார்.

இதுபோன்று பதினாறாவது நூற்றாண்டில் அஸ்டெக் கலாச்சாரம் ஸ்பெயின் நாட்டினரால் முற்றிலுமாக அழிக்கப்பட்டது. இதனை 1519ல் முன்னின்று செய்தவர் 'கெர்ணாண்டோ கோர்' எனும் ஸ்பெயின் நாட்டுக் கடற்படைவீரர். நகரத்திலும் கிராமங்களிலும் வீடுகளிலும் புகுந்து வழக்கம்போல் செல்வங்களை அள்ளிச் சென்றனர். மதம் மாற மறுத்தவர்கள் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு மாயன், இன்கா, அஸ்டெக் மக்களுக்கு ஸ்பெயின் நாட்டு ஆட்சியாளர்களும், கத்தோலிக்க சமயக் குருக்களும் இழைத்த அக்கிரமங்கள் பல நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளன. இதனை ஆர். எஸ். நாராயண ஸ்வாமி எழுதியுள்ள 'ஹிந்து அமெரிக்கா, கிறித்துவ அமெரிக்காவாக மாற்றப்பட்டது' எனும் கட்டுரையிலும் காணலாம்.

ஸ்பெயின் ஆட்சியாளர்கள் கத்தோலிக்க சமயத்தைத் தென் மற்றும், மத்திய அமெரிக்காவில் பரப்பியதுடன்,

அம்மைநோய், டைபாய்டு, பால்வினை நோய் (Syphilis) ஆகியவற்றையும் உள்ளூர் மக்களிடம் பரப்பினர். அம்மக்களுக்கு இந்நோய் முன்பு அறியப்படாததாலும், நோய் எதிர்ப்புச் சக்தி இன்மையாலும் இவற்றால் கொத்துக் கொத்தாய் மடிந்தனர். இவ்விதமான வன்முறை மற்றும் நோய்கள், பஞ்சம், பசி, பட்டினி ஆகியவற்றால் தாக்குண்ட இன்கா, மாயன், மற்றும் அஸ்டெக் மக்களின் மக்கட்தொகை 80 சதவீதம் குறைந்தது. இக்கொடுமைகளில் தப்பியவர்கள் காடுகளிலும், மலைகளிலும் ஓடி ஒளிந்து தலைமறைவாயினர். சுயநீதியுடன் வாழ்ந்த இவ்வின மக்கள் இன்று காடுகளில் வாழ்கின்றனர். சுயநீதியைப் பின்பற்றாத ஸ்பெயின் ஆட்சியாளர்களின் வாரிசுகளும், அவர்தம் சமயகுருமார்களின் வழித்தோன்றல்களும் இன்று அமெரிக்க நாடு முழுவதும் கோடிக் கணக்கில் பல்கிப் பெருகி, பெரும் செல்வத்துடனும், அதிகார பலத்துடனும் ஆட்சி செலுத்தி வாழ்கின்றனர்.[13]

இம்மூன்று இனத்தினரில் சிலர் கிறித்துவராக மதம் மாறினார்கள். அவர்கள் ஸ்பெயின் நாட்டினர் அமைத்த தங்கச் சுரங்கங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டு, கடின வேலை காரணமாக உயிரிழந்தனர். பெண்கள் ஸ்பெயின் நாட்டினர் கைப்பற்றிய நிலங்களில் அடிமைத் தொழில் செய்திட அமர்த்தப்பட்டனர். இவர்கள் ஊட்டச்சத்தும், உணவும் இன்றி மடிந்தனர்.[14]

பீரங்கி, துப்பாக்கி மற்றும் கபடம், சூது, ஏமாற்றல், பொய் சொல்லல், நோய், ஆகியவற்றை ஆயுதமாகப் பயன்படுத்தி உள்ளூர் மக்களைக் கொன்ற 'சுத்த கத்தோலிக்க சமய' ஆட்சியாளர்களை இன்றுவரை கண்டிக்கவோ, அறிவுரை கூறவோ உலகில் யாருமே இல்லை. உலகம் முழுமையிலுமுள்ள மக்களின் ஆன்மாவைப் பாதுகாக்கும் பணியை ஒருதலைப்பட்சமாகத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டுள்ள போப் ஆண்டவப் பெருந்தகையும் மௌனமாகி ஸ்பெயின் ஆட்சியாளர்களுக்கு உறுதுணையாய் விளங்கினார். எனினும் லாஸ் கஸாஸ் (Las Casas) எனும் கத்தோலிக்க பாதிரியார் தெற்கு, மற்றும் மத்திய அமெரிக்காவில் நடைபெற்ற கொடுமைகளைக் கண்டித்துப் போப் ஆண்டவர் பையஸ் V (Pious V) என்பவருக்கு 1566ல் ஒரு கடிதம்

எழுதினார்.[15] அதனில் அமெரிக்கக் கண்டத்தில் பூர்வகுடிமக்களுக்கு எதிராக ஸ்பெயின் நாட்டினர் செய்திடும் கொடுமைகளை உடனே நிறுத்திட ஆணையிடுமாறு விண்ணப்பம் செய்திருந்தார். அக்கடிதத்தில் வேறு பலகண்டனங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவ்வசனங்கள் வருமாறு:

> 'தங்களைப் (போப் ஆண்டவரை) பலர் (ஸ்பெயின் நாட்டவர்) புகழ்ந்துரைக்கின்றனர். ஆனால் அவர்கள் உண்மை எனும் மரத்தை நோக்கிக் குரைக்கும் வெறிபிடித்த நாய்கள். எனவே தாங்கள் கீழ்க்கண்ட தெய்வீக ஆணை பிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.
>
> 1. உருவ வழிபாட்டைத் தடைசெய்வதற்காகவும், தெய்வத் திருமறையைப் பரப்புவதற்காகவும், கிறித்துவர்கள் யுத்தம் புரியலாம் எனும் கோட்பாட்டைப் பைபிளிலிருந்து நீக்க வேண்டும்.
>
> 2. தெய்வீக சமயத்தை (கிறித்துவத்தை) ஏற்றுக் கொள்ளாதவர்கள், நிலபுலன்களையோ, வீடுகளையோ, தங்களின் உடமையாகக் கொள்ளத் தகுதியற்றவர்கள் எனும் கொள்கைப் பிரகடனத்தைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.
>
> 3. வெற்றி கொள்ளப்பட்டு, அடிமையாக்கப்பட்ட மக்கள் தெய்வத் திருமறையையும், தெய்வீகக் குமாரன் வழங்கும் பாவ மன்னிப்பையும் புரிந்து கொள்ளும் திறமையற்றவர்கள் என நம்மவர்களால் உருவாக்கப் பட்டுள்ள தத்துவத்தை உடனே தள்ளுபடி செய்ய வேண்டும். உண்மையில் அம்மக்கள் விபரம் தெரியாதவர்கள் அல்லர்.
>
> 4. உள்ளூர் மக்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட தங்கம், வெள்ளி மற்றும் நவரத்தினங்கள் அம்மக்களிடம் திருப்பியளிக்கப்பட்டு, அவர்கள் கொடுமையான அடிமை வேலைகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

ஆனால் - இவ்வேண்டுகோளுக்குப் போப் ஆண்டவர் செவிசாய்க்கவில்லை. மேலும் இதுபோன்ற சமயக் கொடுமைகளும், உள்ளூர் மக்களைச் சாத்தானாக உருவகப் படுத்துதலும், அவர்களின் பிள்ளைகளைச் சாத்தானின் பிள்ளைகள் என வர்ணிக்கும் கொடுமையும் இப்பூவுலகில் இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

சுவாமி விவேகானந்தர் ஸ்பெயின் நாட்டினரின் மிருகத்தனத்தை 1893ல் சிக்காக்கோ மாநாட்டில் கண்டித்துக் கூறியவை.

> நாங்கள் கீழ்த்திசை நாடுகளிலிருந்து வந்துள்ளோம். இம்மாநாட்டில் தினசரி 'கர்த்தரை ஏற்றுக் கொள்பவனே செழிப்பான்' எனத் திரும்பத் திரும்பப் பேசுகின்றீர்கள். யேசுவை ஏற்றுக் கொள்ளவும் அறிவுரை வழங்குகின்றீர்கள். ஆனால் அவ்வாறு செழிப்படைந்த இங்கிலாந்து நாட்டை நாங்கள் கூர்ந்து நோக்குகின்றோம். நீங்கள் அடைந்துள்ள செல்வம் கர்த்தரால் வழங்கப்பட்டது அல்ல. அவை 25 கோடி ஆசிய மக்களின் குரல்வளையை நெருக்கி வலியப்பெற்ற செழிப்பே என்பது எங்களுக்குத் தெரியும். கிறித்துவ ஐரோப்பாவின் செல்வம் மேற்கிந்திய தீவுகளையும் மெக்ஸிகோ நாட்டின் பூர்வ குடிமக்களையும் கொள்ளையடித்ததால் பெறப்பட்ட செல்வம் என்பதும், அவை அங்குள்ள மக்களின் தொண்டையைக் கிழித்து எடுக்கப்பட்டது என்பதும் சரித்திர பூர்வமாக எங்களுக்குத் தெரியும்.

5:4. சிவப்பிந்தியர்களும் - அமெரிக்காவும்[16]

இன்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்பு, இன்று நாம் அமெரிக்கா (USA) எனும் பொதுப்பெயரில் அழைக்கும் நாடு, சிவப்பிந்தியர்கள் வாழும் நாடாக இருந்தது. அன்று அம்மக்கள் பல்வேறு இனங்களாகப், பிரிந்து ஆனால் ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தனர். அவர்கள் பேசிய மொழியும் பல்வேறாக இருந்தது. ஐரோப்பியக் கிறித்துவ சமயத்தினர் அப்பெரும் நிலப்பரப்பில் காலெடுத்து வைப்பதற்கு முன்னர் அம்மக்களின் எண்ணிக்கை ஒன்றரைகோடியாக இருந்தது எனக் கணக்கிடப் பட்டுள்ளது. இவர்கள் கிறித்துவர்களைப் போன்று ஆவியை வழிபடுபவர்கள். இவர்கள் வணங்கிய இறைபொருள் 'பெரிய



டெக்கும்சே – சிவப்பிந்திய தலைவன்

ஆவி' (Great Spirit) என அழைக்கப்பட்டது. உருவ வழிபாடு இம்மக்களிடம் இல்லை. முன்னோர்களையும், ஆறுகள், மலைகள், குளங்கள் ஆகியவற்றை மகிமைப்படுத்தி வந்தனர். இவர்களின் தொழில் வேட்டையாடுதல், மீன்பிடித்தல் ஆகியன. பெண்கள் ஆங்காங்கே மக்காச்சோளம் பயிரிட்டனர். எருமை மாடுகள் இவர்களுக்குப் பால் வழங்கியது. இவர்கள் வாழ்ந்துவந்த நிலம் வளமிக்கதாகவும், ஏரிகளும், கடலும், மீன்கள் நிறைந்ததாகவும் இருந்தன.

மகிழ்வுடன் வாழ்ந்த மக்கள் நிறைந்த இப்பகுதியில், 1513ல் ஜீவாங் (Juan Ponce-de-Leon) எனும் ஸ்பெயின் நாட்டுக் கடற்படைத் தளபதி காலெடுத்து வைத்தது முதல் துயரம் ஆரம்பித்தது.

ஐரோப்பாவில் 16ம் நூற்றாண்டு தொடங்கிப் பல்வேறு சமயப் பூசல்களும், சமய யுத்தங்களும், பஞ்சம் பசியும், நோய் நொடிகளும் ஏற்பட்டிருந்ததை முன்பே அறிந்தோம். இதனால் பாதிக்கப்பட்ட பலநாட்டு மக்களும் படகிலும், தோணியிலும் பயணித்துப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அமெரிக்க நிலப்பரப்பிற்குச் சென்றடைந்தனர். இவ்வாறு முதலாவதாக வருகை தந்தவர்கள் ஆண்கள் மட்டுமே. அவர்களைச் செவ்விந்தியர்கள் வரவேற்று உபசரித்துத் தங்க இடமும், குளிரிலிருந்து தப்பிக்கக் கம்பளி ஆடைகளும், வயிற்றிற்கு உணவும் வழங்கி மகிழ்ந்தனர். செவ்விந்தியர்கள், ஐரோப்பியர்களை வரவேற்றவிதத்தை Daniel C. Sanders எனும் அறிஞர் விவரித்து எழுதியுள்ளதைக் காணலாம்.

"If hungry, he is fed; if naked he is clothed, if cold he is warmed, he lives upon the best they (Red Indians) have and nothing is required as a reward for all the favours they can lavish" (பக்கம் 177, Trechery and Terror against Indian, Tribes of USA)

நீங்கள் எத்தனைபேர் இங்கு வந்தாலும் எல்லோருக்கும் இங்கே இடமுள்ளது எனக் கூறி அம்மக்கள் மகிழ்ந்தனர். ஆனால் இப்பெருமைமிக்க பெருந்தன்மையான சமுதாயம் ஐரோப்பியக் கிறித்துவர்களால் அழிக்கப்பட்டது. இன்றைய நாட்களில் அப்பூர்வகுடிமக்களில் பல இனங்களைச் சார்ந்தவர்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டனர். சில இனத்து மக்கள் மட்டும் எஞ்சியுள்ளனர்.

> 'நீ இருக்கின்ற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப் பார். நீ பார்க்கின்ற இப்பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து உன் சந்ததியைப் பூமியின் தூள்களைப்போலப் பெருகப் பண்ணுவேன். .... நீ எழுந்து, தேசத்தின் நீளமும் அகலமும்

எம்மட்டோ, அம்மட்டும் நடந்துதிரி; உனக்கு அதைத் தருவேன்..... ஆதியாகமம் 13:14-17.

மற்ற நாட்டுமக்களை அடிமைப்படுத்தி ஆளுமை செய்வதற்குக் கர்த்தர் தங்களுக்குத் தெய்வீக அனுமதி தந்துள்ளதாக ஐரோப்பியர்கள் நம்பினார்கள்.[17] இத்தகைய ஆதியாகம வசனங்கள் தங்களுக்காகச் சொல்லப்பட்டுள்ளதாகவும் நம்பினார்கள். எனவே தங்களை முதன்முதலில் வரவேற்று உபசரித்த செவ்விந்தியர்களின் வாழ்விற்கே இவர்கள் உலை வைத்தனர். இதனால் ஏற்பட்ட யுத்தங்களின் விளைவாகப் பல லட்சம் உள்ளூர் மக்கள் கொல்லப்பட்டனர். வந்தேறிய ஐரோப்பியர்களிடம் துப்பாக்கியும், பீரங்கியும் இருந்தன. ஆனால் உள்ளூர் வாசிகளிடம் வில்லும், அம்பும், ஈட்டிகள் மட்டுமே இருந்தன. இம்மக்களின் பேரழிவிற்கும், ஐரோப்பியர்களின் நாடுபிடிக்கும் கொள்கைக்கும், அமெரிக்க முதல் ஜனாதிபதியாக இருந்த ஜார்ஜ் வாஷிங்டன் முதல் இருபதாம் நூற்றாண்டு வரை ஆட்சியிலிருந்த அமெரிக்க ஆட்சியாளர்களே பொறுப்பு என்பதில் ஐயமில்லை. செவ்விந்தியர்களை முற்றிலுமாக அழிக்கவும், அவர்களது நிலங்களைக் கைப்பற்றவும் கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்பட்டன.[18]

1. பூர்வ குடிமக்களுக்கு அவர்கள் அதுவரை அறிந்திராத மதுபானங்களை அன்பளிப்பாக வழங்கி நிலங்களைக் கையகப்படுத்துதல்! செவ்விந்தியர்கள் இம்மதுபானங்களை 'தீ தண்ணீர்' என அழைத்தனர்.

2. இறந்துபோன - காலஞ்சென்ற செவ்விந்திய தலைவர்கள் தங்களுக்கு அன்பளிப்பாக நிலங்களை அளித்துள்ளனர் எனப் பொய் கூறிப் பூர்வகுடிமக்களின் நிலங்களையும் ஊர்களையும் அபகரித்தல்.

3. பூர்வ குடிமக்களைத் தங்களின் வாழ்விடங்களிலிருந்து புலம் பெயர வைத்தலும், கொல்லுதலும் நடத்தினர். இதற்காகப் பல காரணங்கள் கற்பிக்கப்பட்டன. 1782ம் ஆண்டு தொடங்கி 1898 வரை இம்மக்கள்மீது 63 பெரும் போர்கள் ஐரோப்பிய 'சுத்த கிறித்துவர்களால்' நடத்தப்பட்டன.

4. ஆக்கிரமிப்பாளர்களால் நிறுவப்பட்ட அமெரிக்க அரசு உள்ளூர்த் தலைவர்கட்குப் பரிசுகளும், லஞ்சமும்,

கடன்களும், தீ தண்ணீரும் வழங்கிப் பெரும் நிலப்பரப்பைத் தனதாக்கிக் கொண்டது.

5. அமைதி ஒப்பந்தம் செய்வதாக வாக்களித்துப் பெரும் நிலப்பரப்பைப் பெற்றதுடன், அந்தஒப்பந்தத்தையும் பின்னர் மீறினர்.

6. செவ்விந்தியர்கள் கண்டிராத நோய்களான அம்மை, காலரா, டைபாய்டு ஆகியவற்றைப் பூர்வகுடி மக்களிடம் பரப்புதல் செய்தனர். வெள்ளையர்களின் இந்நோய்களுக்கான மருத்துவமனையில், நோயாளிகள் பயன்படுத்திய ஆடைகளையும், போர்வைகளையும் வேண்டுமென்றே படகில் வைத்து ஆற்றில் அனுப்பினர். ஒரு சூதும் அறியாத பூர்வ குடிமக்கள் அவைகளை எடுத்து உபயோகித்து நோய்கள் பீடித்துக் கூட்டம் கூட்டமாய் செத்து மடிந்தனர். பூர்வ குடிமக்கள் இந்நோய்களை அறிந்திராததால் அந்நோய்களுக்கான எதிர்ப்புச் சக்தி அவர்களுக்கு இல்லாமலிருந்தது.

7. அவர்களின் மக்காச்சோளப் பயிரினைத் தீ வைத்து அழித்தலும், எருமைகளைச் சுட்டுக் கொல்லுதலும் செய்யப் பட்டன. இதன்மூலம் பஞ்சம் பசியைப் பூர்வகுடி மக்களிடையே ஏற்படுத்துதல்.

8. ஆண்கள் வேட்டையாடச் சென்றபொழுதில் கிராமத்திற்குள் கிறித்துவர்கள் புகுந்து பெண்களைக் கற்பழித்தல் மற்றும் கொலை செய்தல்.

9. பயப்பட்டு ஓடிய மக்களை மலேரியா நோயுள்ள காட்டிற்குள் அடித்துத் துரத்துதல்.

நெய்பெர்சி (Nez perce) எனும் இடத்தில் செவ்விந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் 1877 மே 14 முதல் அக்டோபர் 1ம் தேதி முடிய நடந்த யுத்தமே செவ்விந்தியர்களின் கடைசி எதிர்ப்பாக அமைந்தது. பூர்வகுடிமக்களின் தலைவராக விளங்கிய ஜேசபு என்பவர் தம்மக்களிடையே ஆற்றிய கடைசி உரையைக் கீழே காணலாம்.

> ‘போரிட்டுப் போரிட்டுக் களைத்து விட்டோம். நமது இனத் தலைவர்களும், ஊர்ப் பெரியவர்களும் போரின் காரணமாக இறந்துபட்டுவிட்டனர். முன் நிறுத்திப் போரிட்ட இளைஞர்களும் செத்து விட்டனர். குளிருக்குப் போர்த்திக் கொள்ள நம்மிடம் ஆடைகள் இல்லை. நம் குழந்தைகள்

குளிரினாலும் பசியினாலும் நம் முன்னே சாகின்றன. நம் மக்களில் சிலர் மலையில் ஓடி ஒளிந்து உணவும், உடையுமின்றிச் சாகின்றனர். நம் குழந்தைகள் எத்தனை மீதமுள்ளது என எண்ணிப் பார்ப்போம். அவைகள் இங்குச் செத்துகிடக்கின்றன. எனவே நான் சொல்வது உங்கள் காதினில் விழட்டும். நான் களைப்படைந்து விட்டேன். என்னுடைய இருதயம் கவலையினால் நோய்வாய்ப்பட்டு விட்டது. நான் இனி எப்போதும் ஆக்கிரமிப்பாளர்களுடன் சண்டையிடத் தயாரில்லை.'

அமெரிக்காவில் 1513ல் கால்வைத்த கிறித்துவ ஐரோப்பியர்களை விருந்தினராக வரவேற்று உபசரித்த செவ்விந்திய சமுதாயம் வெள்ளையர்களின் ஏமாற்றல், சூது செய்தல் போன்ற தந்திரங்களால் அழிந்து மடிந்தது.[19] இன்று அச்சமுதாயம் அழியாமல் இருந்திருந்தால் இந்தியாவினைப் போன்று மக்கள் தொகையுடனும் கலப்புக் கலாச்சாரத்துடனும் இருந்திருக்கும். உலகெங்கும் சமாதானமும் நிலவியிருந்திருக்கும்.

5:5. ஆஸ்திரேலிய அட்டகாசம்

ஆஸ்திரேலிய நிலப்பரப்பு 1520ல் போர்ச்சுகீஸிய கடற்பயணிகளால் முதலில் கண்டுபிடிக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது. பின்னர் 1616ல் டச்சுக்காரர்கள் இப்பெரும் நிலபரப்பு இருப்பதைக் கண்டனர். வில்லியம் (William Dampier) எனும் பிரிட்டிஷ் கடற்கொள்ளையன் 1688ல் இந்நிலபரப்பைக் கண்ணுற்றான். எனினும் இந்நிலப்பரப்பில் இறங்கி (1770) பூரண ஆய்வு மேற்கொண்ட பெருமை ஜேம்ஸ் குக் (James Cook) எனும் பிரிட்டிஷ் ஆய்வாளருக்குச் சாரும். இவர், முதலில் ஆஸ்திரேலியாவை மனிதர்கள் அற்ற நாடு எனக் கருதினார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரிட்டனில் பெரும் சமூக சமுதாய நெருக்கடி தோன்றியிருந்தது. பொருளாதாரச் சரிவினால் வேலையில்லாத் திண்டாட்டம், திருடு, கொலை, கற்பழிப்பு, நாட்டுச் சாராயம் (Local Gin) உபயோகித்தல்,

குழந்தைத் தொழிலாளர்கள் எனப் பல்வேறு குற்றங்கள் மலிந்திருந்தன. மக்கட்தொகை பெருகிக் கொண்டே சென்றது. குற்றங்களைத் தடுக்கக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. குற்றவாளிகளை வைத்திருக்க சிறைச்சாலைகள் போதுமானதாக இன்மையால் நடுக்கடலில் பழைய கப்பல்களை நிறுத்தி அதில் வைக்கப்பட்டிருந்தனர். அதுவரை சிறைக்கைதிகளை நாடுகடத்திக் குடியமர்த்தப் பயன்பட்டிருந்த அமெரிக்காவும் அங்கு நடந்த விடுதலைப் போர் காரணமாகக் கைவிட்டுப் போய்விட்டது. இத்தகைய சந்தர்ப்பத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஆஸ்திரேலிய நிலப்பரப்பு, கைதிகளை நாடு கடத்திடவும் குடியமர்த்திடவும் பெரிதும் உபயோகப்படுத்தப்பட்டது. அதன்படி 1788ம் ஆண்டில் பிரிட்டிஷ் கைதிகள் ஆஸ்திரேலியாவில் முதன்முதலாகக் குடியேறினர்.

பிரிட்டிஷ் (ஆங்கிலேயர்கள்) கைதிகள் ஆஸ்திரேலியாவில் குடியேறிய தருணத்தில் அங்குப் பத்துலட்சம் பூர்வ குடிமக்கள் வாழ்ந்திருந்ததாகக் கருதப்படுகின்றது. ஆஸ்திரேலிய வரலாறு பிரிட்டிஷ் ஆசிரியர்களால் எழுதப்பட்டுள்ளமையாலும், அங்கு அவர்கள் புரிந்த அட்டூழியங்களைக் குறைத்து மதிப்பிட்டுள்ளதாலும், அவர்கள் வரைந்துள்ள வரலாறு நம்பகத் தன்மையற்று விளங்குகின்றது. எனவே பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் எழுதி வைத்திருப்பது போல் அன்றி ஆஸ்திரேலிய பூர்வ குடிமக்களின் மக்கட்தொகை கூடுதலாக இருந்திருக்க வாய்ப்புண்டு.

ஆஸ்திரேலிய பழங்குடியினரிடையே 250-300 வகை பேசும்மொழிகள் இருந்தன, 400க்கும் மேற்பட்ட இனங்களாகப் பிரிந்து கிடந்தனர். அவர்களின் சமய - சமுதாய வாழ்க்கை முறையில் பல்வேறான மாறுபாடுகள் இருந்தன. மீன்பிடித்தலும், வேட்டையாடுதலும் அவர்களின் பிரதான தொழில்கள். கங்காருவும், ஈமுகோழிகளும் அவர்களின் வேட்டைப் பொருள். உலகில் வேறெங்கும் காண முடியாத அரிய செடிகொடிகளும், பறவைகளும், விலங்கினங்களும் இங்கே காணப்பட்டன. மாசுபடாத நிலமும், நீரும், வாழ்விடங்களும், ஆஸ்திரேலிய பூர்வகுடிமக்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாய் இருந்தது.

ஆஸ்திரேலிய பூர்வகுடிமக்கள் ஏறத்தாழ 75000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆப்பிரிக்க நிலப்பரப்பிலிருந்து நகர்ந்து இந்தியா வழியாக 45000 ஆண்டுகளுக்கு முன்பு ஆஸ்திரேலியா சென்றடைந்ததாக நம்பப்படுகின்றது. இவர்களின் உருவக எச்சங்கள் சிந்துசமவெளி நாகரிக பகுதியில் நடனமாடும் பெண் சிலையாகக் காணப்படுகின்றன. அந்தமான் நிக்கோபர் தீவுகளிலும், பேர்னியா காடுகளிலும் ஆஸ்திரேலியர்களின் சந்ததியினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் எச்சங்கள் தமிழ் நாட்டின் திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூரிலுள்ள புதைகுழிகளில் கிடைக்கப் பெற்ற எலும்புகூட்டை ஆய்விட்டதிலும் காணப்பட்டுள்ளது.

ஒருலட்சம் ஆண்டிற்கு முன்னர் ஆப்பிரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா கண்டங்கள் பனிக்கட்டியால் இணைக்கப்பட்டு ஒரே கண்டமாகக் காட்சியளித்ததாக நம்பப்படுகின்றது. அக்காலகட்டத்தில் கடலின் நீர்மட்டம் இன்றிருப்பதைவிட 200 மீட்டர் (660 அடி) குறைவாகவும் இருந்துள்ளது. இதன் காரணமாக மனித நகர்வுகள் உலகம் முழுமையிலும் எளிதாக இருந்துள்ளன. இவ்வாறு ஆஸ்திரேலியாவை நோக்கி நகர்ந்து குடியமர்ந்த ஆதிமனிதர்கள், பனி உருகிக் கடல் தோன்றிக் கண்டங்கள் பிரிவினையானபின் ஆசிய, ஆப்பிரிக்க மக்களுடன் 45000 ஆண்டு காலத்திற்கும் மேலாகத் தொடர்பற்றுப் போனார்கள். எனவே ஆசிய ஐரோப்பிய மக்களின் நோய்களாகிய இன்புளுயன்ஸா, அம்மை நோய்கள் (measles), பால்வினை நோய்கள் போன்றவற்றிற்கு எதிர்ப்புச் சக்தி இல்லாமல் ஆகிவிட்டனர். சர்வதேச தொடர்புள்ள வெள்ளைய கிறித்துவர்கள் ஆஸ்திரேலியாவில் குடியேறியதும் இந்நோய்கள், அங்குள்ள பூர்வ குடிமக்களைப் பற்றிக் கொண்டது. ஓர் ஆண்டிற்குள் சிட்னி (Sydney Basin) பகுதியில் வாழ்ந்த பூர்வ குடியினரில் பாதிபேர் செத்து மடிந்தனர். இவர்கள் ஆற்று ஓரங்களில் மடிந்து கிடந்ததைப் பின்னர் குடியேறிய குழு ஒன்று பார்த்துப் பதிவு செய்துள்ளது. அத்துடன் காட்டு நாய்களைப் போன்று பூர்வ குடியினரைச் சுட்டுத் தள்ளுதல், கர்த்தருக்குச் செய்யும் சேவையாகக் கருதப்பட்டது. எவ்வளவுக்கெவ்வளவு இவர்களைச் சுட்டுத்தள்ள முடிகிறதோ அவ்வளவுக்கவ்வளவு வெள்ளையர்

கட்கு நல்லது என அப்போதைய பாதிரியார் போல்டிங் (Bishop Polding - 1845) கூறினார்.

பூர்வகுடிமக்கள் வசிக்கும் கிராமங்களில் வந்தேறிய வெள்ளையர்கள், அங்குள்ள ஆண்களைச் சுட்டுக்கொன்று பெண்களையும் குழந்தைகளையும் சூறையாடினர். அவர்களின் நீர்நிலைகளில் ஆர்சனிக் (Arsenic) எனும் நஞ்சு கலக்கப்பட்டது. குடியிருப்புகள் தீயிட்டு எரிக்கப்பட்டன. எஞ்சியவர்கள் பாலை நிலங்களுக்குத் தப்பியோடி, உணவின்றி அங்கேயே செத்து மடிந்தனர். ஊர்களிலுள்ள குழந்தைகள், பெற்றோர்கள் அறியாமல் திருடப்பட்டு கன்னியாஸ்திரிகளிடமும், ஆயர்களிடமும் வழங்கப்பட்டன. அக்குழந்தைகள் அனாதை விடுதிகளில் கிறிஸ்துவுக்குள் வளர்க்கப்பட்டு, ஆயர்களாலும் கன்னியாஸ்திரிகளாலும் பாலியல் கொடுமைக்கு ஆளாயினர். உலகிலே ஆஸ்திரேலிய நாட்டில்தான் முதன்முறையாக அனாதை விடுதிகள் தொடங்கப்பட்டன என்பது கவனிக்கத்தக்கது. இத்தகைய ‘குழந்தைத் திருடல்’ 1869 முதல் 1969வரை (சமீப காலம் வரை) நடைபெற்றது. இன்றும்கூட இக்கொடுமை ஆஸ்திரேலியாவில் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றது. இக்கொடுமைக்காகப் பிப்ரவரி 13, 2008ம் ஆண்டில் அப்போதைய ஆஸ்திரேலிய பிரதமர் கெவின் என்பவர் (Kevin Rudd) பூர்வகுடிமக்களிடம் மன்னிப்புக் கோரியது ஈண்டு நினைவு கூறத்தக்கது. இவ்விதமாக நடந்த இனப் படுகொலைக்கு வெள்ளையர்கள் பரிசுத்த வேதாகமத்திலிருந்து ஆன்மிக ஆதரவைத் தேடிக்கொண்டனர். வேதாகமத்தின் எரோமியா அதிகாரம் 16ல் கர்த்தரின் தீர்க்கதரிசியான ‘எரோமியா’ தனது தீர்க்கதரிசனத்தில் வேற்று நாட்டுமக்கள் பற்றிக் கர்த்தர் கூறியவற்றைக் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

வசனம் 4

> ‘மகா கொடிய வியாதியால் அவர்கள் சாவார்கள். அவர்களுக்காகப் புலம்புவார்களும், அடக்கம் பண்ணுவாரும் இல்லை. நிலத்திற்கு எருவும் அவர்களே. பட்டயத்தாலும், பஞ்சத்தாலும் மடிந்து போவார்கள். அவர்களுடைய பிரேதம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்.’

வசனம் 5

'ஆகையால் நீ அவர்களுக்குப் பரிதவிக்காமலும், இருப்பாயாக. என் சமாதானத்தையும், கிருபையையும் இரக்கத்தையும், இந்த ஜனத்தைவிட்டு எடுத்துப் போட்டோம்.'

வசனம் 6

'இந்தத் தேசத்தில் பெரியோரும், சிறியோரும் சாவார்கள். அவர்களை அடக்கம் பண்ணுவோரில்லை. அவர்களுக்காகப் புலம்புவாரும் இல்லை. அவர்கள் நிமித்தம் கீறிக்கொண்டு மொட்டை அடித்துக் கொள்வாரும் இல்லை.'

இவ்வாறு பாலஸ்தீனிய யூதர்களுக்குக் கர்த்தர் வழங்கிய வாக்குதத்தம், ஆஸ்திரேலியாவில் கிறித்துவர்களுக்காக நிறைவேறியது. ஆமென்! இதன்மூலம் தொடக்கத்தில் பத்து லட்சமாக இருந்த பூர்வகுடிமக்களின் எண்ணிக்கை 1900ம் ஆண்டில் 93000 ஆகவும் 1933ல் 74000 ஆகவும் குறைந்தது. அதே தருணத்தில் 18, 19ம் நூற்றாண்டுகளில் 1.65 லட்சம் வெள்ளையர்கள் (பெரும்பாலும் பிரிட்டனில் குற்றம் புரிந்ததற்காக ஆஸ்திரேலியாவிற்கு நாடு கடத்தப்பட்டவர்கள்) இங்கு வந்து குடியேறினர். அளவற்ற நிலமும் மாசற்ற நீரும் வெள்ளைய கிறித்துவர்களுக்கு எவ்விதச் செலவும், முயற்சியும் இன்றிக் கர்த்தரின் கிருபையால் கிடைத்தது. இதன்மூலம்

'நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் (ஆதி 12:2). நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மண்ணைப் போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன். உன் சந்ததியினர், தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (தனதாக்கிக் கொள்வார்கள்)' - ஆதி 22:17 என்ற கர்த்தரின் வாக்குதத்தம் நிறைவேற்றப் பட்டது.

இன்றுகூட ஆஸ்திரேலிய பூர்வகுடிமக்கள் இரண்டாம் தரக் குடிமக்களாகவே கருதப்படுகின்றனர். கல்வியிலும் வாழ்க்கைத் தரத்திலும் வெள்ளைய கிறித்துவர்களைவிட மிகவும் பின்தங்கியே உள்ளனர். மதுவுக்கும், போதைப் பொருளுக்கும் அடிமைப்பட்டுள்ளனர். இவர்களின் சராசரி வயது வெள்ளையர்களைவிட இருபது வருடம் குறைவாகவே உள்ளது. பூர்வீக குடிகள் அனைவரும் தற்போது யேசுவை ஏற்றுக்கொண்டு கர்த்தருக்குள் வாழ்கின்றனர். இவர்களது கையினில் தற்போது பரிசுத்த வேதாகமம் உள்ளது, ஆனால் நிலங்களில்லை.[20]

* * *

பகுதி - 6

இந்திய வரலாறு எழுதத் திட்டமிடல்

பகுதி - 6 பொருள்

பக்கம்

6.1 இந்திய வரலாற்றை எழுதத் திட்டமிடல் 251

6.2 சாதிகளை உண்டுபண்ணல் 259

6.3 திராவிடர்களை உருவாக்குதல் 271

6.4 கங்கைச் சமவெளி நாகரிகம் மறைக்கப்படல் 275

6.5 இந்தியர்களின் முதல் புலப்பெயர்ச்சி 280

6.6 சிந்து சமவெளி நாகரிகம் அழிந்தமையும் இந்தியர்களின் இரண்டாவது புலப்பெயர்ச்சியும் 283

6.7 சிந்து சமவெளி நாகரிகம் ஆடு மேய்த்து வந்தவர்களால் அழிக்கப்படவில்லை 289

6.8 சிந்து சமவெளிக்கு பிந்தைய வரலாறு 291

6:1. இந்திய வரலாற்றை எழுதத் திட்டமிடல்

இந்திய வரலாறு முதன்முதலில் புத்தக வடிவில் காலனிய சமயப் பரப்பாளர்களால்தான் எழுதப்பட்டது. ஆனால் அவையனைத்தும் இந்திய நிலப்பரப்பிற்கும் மக்களின் சமய, கலாச்சாரம், நம்பிக்கை, மரபு ஆகியவற்றிற்கும் இணைந்து வராததால் காலப்போக்கில் கேள்விகுறியுடன் படிப்போர் மனதை ஆக்கிரமித்துள்ளது. அவர்கள் எழுதிய வரலாறு பைபிள் எனும் கண்ணாடி மூலம் பார்த்து எழுதியவையாகும். பைபிள் கூறும் வரலாற்று எல்லைகள்.

1. உலகத் தோற்றம் 4004 BC, அக்டோபர் 23ம் நாள்

2. பெருவெள்ளம் என்னும் பிரளயம் - 2448 BC

எனவே உலக வரலாற்றையும், ஏன் இந்திய வரலாற்றையும் இன்றைக்கு 6000 வருட காலத்திற்குள் அடக்கினர். மேலும் மேற்கத்தியர்களுக்கு, இந்திய சமய, சமுதாய நிலவரம் அவர்களின் சமய சமுதாய நிலவரத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாகவும், மர்மமானதாகவும், ஆழம் கண்டுபிடிக்க முடியாமலும் இருந்ததால் அவர்களுக்கு இந்திய வரலாற்றை எழுதத் துணிவதில் ஒருவகை பயமும், காரணம் கண்டுபிடிக்க முடியாத ஒருவகைக் கசப்புணர்ச்சியும் மேலோங்கியிருந்தன. பைபிளின் பழைய ஏற்பாட்டினைப் போன்று, பல்வேறு புறஜாதி யுத்தங்களும், சகோதர யுத்தங்களும், சுட்டெரித்தலும், சுத்தப்படுத்துதலும் இந்திய வேதங்களில் குறிப்பிடப்படாதது அவர்களுக்கு பெரும் ஆச்சரியமாய் அமைந்தது. இத்தகைய ஒரு குற்ற உணர்வு அவர்களைச் சிந்திக்க வைத்தது. எனவே காலனியாதிக்க கிறித்துவ வரலாற்றாசிரியர்கள் இந்தியர்களிடையே பிரிவினைகளை உண்டுபண்ண, சமயப் புத்தகங்களைப் பெரிதும் நாடாமல் இந்தியாவின் வரலாற்றைத் திரிபுவாத அடிப்படையில் எழுத வேண்டும் எனும் முடிவுக்கு வந்தனர். அதற்குக் கீழ்க்கண்ட உத்திகளைக் கையாண்டனர்.

1. இந்திய நாகரிகத்தையும் அதன் தோற்ற காலத்தையும், பைபிள் குறிப்பிடும் உலக, மனிதத் தோற்ற காலத்திற்குப் பின்தேதியிட்டுக் குறிப்பிடுதல்.

2. இந்தியர்களை, தங்களின் பூர்வீக காலத்தைப் பற்றிப் பெருமைப்படவிடாமல் தடுத்ததுடன், வரலாற்றில் அவர்களது தன்மானத்தையும், சுயமரியாதையையும் பாதிக்கும் கருத்துக்களைத் தோற்றுவித்தல்.

3. மக்களிடையே ஒருவருக்கொருவர் கசப்புணர்ச்சியை உருவாக்கும் பொருட்டு வேறுபாடுகளைக் காட்டிடும், ஆங்காங்கேயுள்ள ஒரு சில சமய - கலாச்சார குறிப்புகளைப் பூதாகரமாக்கிக் காண்பித்தல்.

4. பண்டைய இந்தியாவில், பிராமண ஆரியர்களைத் தவிர ஏனையோருக்குச் சிந்திக்கும் ஆற்றல் இல்லையெனவும், இந்தியாவின் சமய, கலை, மொழி, இலக்கியம் முழுமையும் பிராமணர்களால், அவர்கள் விருப்பத்திற்குத் தகுந்தவாறு எழுதப்பட்டவையே என்ற கருத்தை உருவாக்குதல். (இக்கருத்தைப் பின்பற்றியே திராவிடக் கழகத்தின் தந்தை ஈ.வே.ரா. பெரியார், தமிழ் முழுமையும் காட்டுமிராண்டி மொழி என வர்ணித்தமை ஈண்டு குறிப்பிடப் படுகின்றது).

எனினும் இந்திய வரலாற்றை எழுதுவதில் அவர்களுக்குப் பெரும் தடங்கல்களாக இருந்தவை அவர்களின் சமய புத்தகமான பைபிளே (விவிலியமே). இதனை எதிர்கொள்ள அவர்கள் பின்பற்றிய உக்திகளை பார்க்கலாம்:

1. பைபிளின்படி உலகம் தோன்றி 6000 ஆண்டுகள் மட்டுமே ஆகின்றது. ஆனால் இந்திய பஞ்சாங்கங்களின் படியும் யுகங்கள் வாரியான கணக்கின்படியும் சிருஷ்டியாதி பத்தியம் 450 கோடி ஆண்டுகள் என்றிருப்பதையும், விஞ்ஞானக் கருத்துக்களும் இதற்கு இணையாக விளங்குவதையும் இந்திய மக்களுக்குத் தெரியாமல் எவ்வாறு மறைப்பது?

2. நோவா காலத்தில் (கி.மு. 2448) ஏற்பட்டதாக பைபிளில் கூறப்படும் உலகளாவிய பிரளயம், இந்திய சமய - வேத நூல்களில் குறிப்பிடப்படாமையை எவ்வாறு எதிர்கொள்வது? இதனை எதிர்கொள்ள இந்தியர்களுக்கு

அதுவும் குறிப்பாகத் திராவிடர்களுக்கு எழுத்து மூலமான இலக்கியங்கள் உண்டான காலம் சிந்துசமவெளி நாகரிக காலத்திற்குப் (கி.மு. 1900) பின்னரே எனும் நிலைப்பாட்டை எவ்வாறு உருவாக்குதல்.

3. பைபிளின் பழைய ஏற்பாட்டில் ஒருசில பக்கங்களைத் தவிர மற்றப் பகுதிகளில் காணப்படும் கடவுள் பங்குபெறும் சமய யுத்தங்கள், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, மாற்றார் ஊர்களையும், தோட்டங்களையும், பலிபீடங்களையும் உடைத்துச் சுட்டெரித்தல் ஆகியன இந்திய மக்கள் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படாமல் தடுத்தல்.

4. யேசுகிறித்து சிலுவையில் அடிக்கப்பட்டு உயிர்விட்ட நேரத்தில் ஏற்பட்டதாகக் கூறப்படும் நிலநடுக்கமும், கல்லறைகள் திறந்து, மாண்டோர் பழைய பூத உடலுடனும், உயிருடனும் எழுந்து ஜெருசலேம் நகரில் நடமாடிய அதிசயத்தை (மத்: 27:57-53), வேறு எந்த உலக இலக்கியத்திலும் குறிப்பிடப்படாமையை எவ்வாறு மறைப்பது. (கல்லறைகள் திறந்தகாலத்தில் பாண்டிய அரசனின் தூதர்கள் ரோமானிய நாடுகளில் பயணம் செய்துள்ளனர், சுமேரியா, எகிப்து நாடுகளில் வணிகமும் செய்துள்ளனர்).[1]

5. கல்லறை திறந்து பிணங்கள் உயிருடன் நடமாடிய நிகழ்ச்சியை ஜெருசலேம் நகரவாசிகளான யூதர்கள் கண்ணுற்ற பின்னரும் (?) ஏன் யேசுவின் இறைத்தன்மையை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ரோமானிய அரசின் ஆவணங்களிலும், இவ்வதிசயம் குறிப்பிடப்படவில்லையே ஏன்?

6. யேசு வளர்ந்து ஆளாகிய நாடு எகிப்து. யேசுவின் சரித்திரத்தைப் பல பக்கங்களில் விவரிக்கும் புதிய ஏற்பாட்டில், பிரமிக்கத்தக்கதாயும் அதிசயமாகவும் விளங்கும் பிரமிடுகளைப் பற்றி எந்தவிதக் குறிப்பும் இல்லாமல் இருத்தல் பைபிளின் நம்பகத்தன்மைக்கு ஊறுவிளைவிப்பதாக உள்ளதை மறைத்தல்.

7. எண்ணற்ற மகான்களும், ரிஷிகளும் வாழ்ந்த இந்த இந்திய புண்ணிய பூமியைச் சாமானிய மக்களுக்கு எதிரான கொடுங்களம் எனச் சித்தரித்து, இந்தியர்களைத் தங்களது முன்னோர்கள் மீது வெறுப்புணர்ச்சியைத் தூண்ட செய்தல்.

8. இந்திய வேதங்களுக்குக் காணக்கிடைக்கும் எண்ணற்ற உரைகள், இலட்சக்கணக்கான துணை நூல்கள், உப இலக்கியங்கள், கோடிக்கணக்கான பன்மொழி தோத்திரப் பாடல்கள் போன்றவை பைபிளுக்கு, எந்த மொழியிலும் இல்லாமல் உள்ளதை இந்திய மக்களிடமிருந்து எவ்வாறு மறைத்தல்.

இத்தகைய பல இடறல்கள் இருந்தும் காலனியாதிக்க சமய வரலாற்றாசிரியர்கள் தங்களிடமிருந்த பணபலம், அரசின் அசுர பலம் மற்றும் எதிர்த்து கேட்கும் திண்மையற்ற இந்திய அறிவு ஜீவிகள் ஆகியோரின் துணை கொண்டு இந்திய வரலாற்றினை எழுதத் தலைப்பட்டனர். அத்தகைய வரலாற்றாசிரியர்கள் கொண்டிருந்த மையக் கருத்துகள் வருமாறு:

'இந்தியாவில் (காலனியாதிக்க காலத்திலும் அதன் பின்னரும்) ஏற்பட்ட / ஏற்படக்கூடிய பஞ்சம், பசி, பட்டினி, தொற்றுநோய்கள், ஜாதிய வேறுபாடு, தீண்டாமை, மகளிருக்கு எதிரான குற்றங்கள், கல்லாமை ஆகிய அனைத்திற்கும் காரணம் இந்து சமயமும், அதன் கூட்டாளியான பிராமணர்கள் மட்டுமே பஞ்சம், பசி, பட்டினி எதற்கும் காலனியாதிக்க வாதிகளாகிய பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பொறுப்பல்ல. எனவே இந்து சமயமும், பிராமணர்களும் அழிக்கப்பட்டு இப்பூமி சுத்தப்படுத்தப்பட்டாலொழிய இங்குள்ள மக்களுக்கு சமூக நீதியும் வாழ்க்கையில் நிம்மதியும் கிடைக்காது' (இக்கொள்கையே பின்நாட்களில் நீதிக்கட்சியும், திராவிடர் கழகமும் தோன்றுதலுக்கு முக்கியமான காரணமாக அமைந்தது).

இம்மையக் கருத்தினை இந்திய மக்களிடையே குறிப்பாகக் கற்றறிந்த மக்களிடையே கொண்டு செல்வதில் காலனியாதிக்க திருமறையாளர்களுக்கு ஓரளவு வெற்றியும் கிடைத்தது. ஆனால் இவ்வெற்றி அவர்களுக்கு அமெரிக்கா, மெக்ஸிகோ, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் கிடைத்த வெற்றியுடன் ஒப்பிட்டால் இது ஒரு கொசுறு என்றே கருதவேண்டியுள்ளது. இதுவரை திருமறையாளர்கள் செலவு செய்துள்ள பணமும், நேரமும் முயற்சியும் போதுமான வெற்றியை அவர்களுக்கு

வழங்கவில்லை. எனவே தங்களது உக்தியைப் பின்னர் சற்றே மாற்றினர். திரிபுவாத கருத்துக்களைப் புகுத்தி, இந்தியர்களைத் தங்களது பூர்வீக காலத்தைப் பற்றி அவமானம் கொள்ளச் செய்வதற்குப் பதிலாக, இந்திய சரித்திரத்தை மாற்றி எழுதி இந்தியர்களுக்கிடையே பிரிவினைவாதத்தையும், பலவீனத்தையும் உண்டுபண்ணிட 'ஆரியப் படைஎடுப்பு கொள்கையை' உருவாக்கிட முயற்சிகள் மேற்கொண்டனர். இக்கொள்கையின் மையக்கருத்து வருமாறு:

கிமு. 3500லிருந்து 1900ம் ஆண்டு வரை வடஇந்திய சிந்து நதிதீரத்தில், உச்சக்கட்ட நாகரீகத்தில் திராவிடர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் நகர வாழ்விலும், வணிகத்திலும் சிறப்பாய் விளங்கினர். அவர்களை ஆடுமேய்த்து மத்திய ஆசியா பகுதிகளிலிருந்து கைபர் - போலன் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்த நாடோடிகளான ஆரியர்கள் தெற்கு நோக்கி அடித்துத் துரத்தினர். அதன் பின்னர் சிந்து சமவெளிப் பகுதியிலும், அருகிலிருந்த சரஸ்வதி நதி தீரத்திலும் ஆரியர்கள் நிலையாகத் தங்கி கிமு. 1200 வாக்கில் வேதங்களை உருவாக்கினர். அதன் தொடர்ச்சியாக உபநிஷதங்களும், அதன் பின்னர் இராமாயண, மகாபாரதக் கதைகள் கிமு. 500 வாக்கிலும் புனையப்பட்டன என்றனர். இதிகாசங்கள் கற்பனை எனவும், வேதங்கள் நாடோடிப் பாடல்கள் எனவும் அவர்கள் கூறத் தயங்கியதில்லை. மைலாப்பூர் கத்தோலிக்கப் பேராயம் 2008ல் நடத்திய கருத்தரங்கில்கூட இவ்வகைக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. வேதங்களும், இதிகாசங்களும் காலனியாதிக்க திருமறையைச் சார்ந்த வரலாற்றாசிரியர்களால், கற்பனைக் களஞ்சியங்கள் என அறிவிக்கப்பட்டு, அதில் ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் செய்திகளை மட்டும் கண்டெடுத்து, அவை இந்து சமயத்திற்கு எதிராக உபயோகப் படுத்தப்பட்டன. அதற்கான இரு உதாரணங்களை மட்டும் கீழே பார்க்கலாம்.

1. ஆரியர்களுக்கும், தாசர்கள் என்றும் தஸ்யுக்கள் என்றும் அழைக்கப்பட்ட திராவிடர்களுக்கும் யுத்தங்கள் நடந்தன. ஆரிய அரசன் இந்திரனால் திராவிட நகரங்கள் (மொகன்ஜதாரோ, ஹரப்பா போன்றவை) அழிக்கப்பட்டன.

2. இராமாயணத்தில் காணப்படும் இராவணன் ஒரு திராவிட அரசன். அவனிடம் தலைமை அமைச்சராக இருந்தவர்

மகோதாரா எனும் திராவிட சாணான் (நாடார்). சீதையை ராவணன் தூக்கிச் சென்ற நாள் ஆடி மாதம் முதல் நாள். ஆரிய அரசன்ஸ்ரீராமனைத்துயரப்படுத்தியஇச்சம்பவநாளைத்திராவிட - தமிழ் - சாணார்கள் இன்றளவும் ஓர் மகிழ்ச்சியான பண்டிகையாகக் கொண்டாடுகின்றனர் எனப் பாதிரியார் பிஷப் கால்டுவெல் என்பவர் (பிற்கால திராவிட இயக்கங்களின் குரு) தனது திருநெல்வேலி சாணார் எனும் புத்தகத்தில் (1849) குறிப்பிட்டுள்ளார். இப்புத்தகத்தில் நாடார் சமுதாயத்தினர் மிகவும் கேவலமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர். இதுபோன்று கிறித்துவ குருமார்கள் எண்ணற்ற இடங்களில் தாங்களே 'பொய்' என வர்ணிக்கும் இந்து சமய - இதிகாச இலக்கியங்களிலிருந்து மீண்டும் மீண்டும் உதாரணங்களை மேற்கோளிட்டுப் பொய்களைத் திட்டமிட்டுப் பரப்பியுள்ளனர்.

ஆரியப் படையெடுப்புக் கொள்கையை முதன்முதலாக முற்றிலுமாக ஏற்றுக் கொண்ட பெருமை மகாராஷ்டிரா மாநிலத்தைச் சார்ந்த ஜோதிராவ் பூலே - 1890 (Jyotirao Phule) என்பவரைச் சாரும். அவரைத் தொடர்ந்து இந்திய வரலாற்று அறிஞர்கள் சிலரும், மார்கிஸிய சிந்தனையாளர்கள் பலரும் இக்கோட்பாட்டினை அப்படியே ஏற்றுக் கொண்டனர். 'ஆரியப் படையெடுப்பு' எனும் விஷவித்து நாடெங்கும் பரப்பப்பட்டது. பள்ளியின் வரலாற்றுப் புத்தகங்களிலும் இக்கோட்பாடு எதிர்ப்பார் இன்றி அப்படியே சேர்க்கப்பட்டு இளம்பிஞ்சு உள்ளங்களில் வேற்றுமை விதைக்கப்பட்டது. அத்துடன் இந்தியர்கள் தங்களின் பண்டைக் காலத்தை அலசி ஆராயும் ஆற்றலுக்கும் முற்றுப்புள்ளியும் வைக்கப்பட்டது. இந்தியர்களின் பண்டைய நாகரிகமே கேவலமானது எனும் எண்ணம், மக்களிடையே தோற்றுவிக்கப்பட்டது. அதே நேரத்தில் திராவிடத் - தமிழர்களையும், கிறித்துவ சமய குருமார்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், விட்டுவைக்கவில்லை.

திராவிடர்கள் இந்நாட்டின் பூர்வகுடிகள் என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆரியர்கள் இந்நாட்டிற்குள் நுழைவதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு திராவிடர்கள் பெருங்கூட்டமாய் மத்திய ஆசியா பகுதியிலிருந்து குடியேறிய 'காக்களாய' இனத்தவர்கள் என்ற பொய்யையும் பரப்பினர்.[2]

இவர்கள் பேசிய தமிழ்மொழியின் வேர் உலகின் வடகோளத்திலுள்ளதும், ரஷ்ய நாட்டின் வடமேற்குப் பகுதியில் - ஐரோப்பிய பெருநிலத்தின் கிழக்குப் பகுதியிலுமுள்ள உக்ரைன் நாட்டில் வழங்கும் சித்திய மொழிக் குடும்பத்தில் உள்ளது என்றும் கூறியுள்ளார் (பார்க்கவும் பிஷப் ராபர்ட் கால்டுவெல் அவர்களின் ‘A comparative grammar..... எனும் புத்தகம் - 1856). அதே தொனியில் தலித் இயக்கங்கள் சில, ஆதிதிராவிடப் பெருமக்களும், வனவாசிப் பெருமக்களும் இந்திய மூலம் உடையவர்கள் அல்லர் என்றும், ஆப்பிரிக்கப் பெருநிலத்தில் - பூகோளத்தின் தென்பகுதியில் வாழும் நீக்ரோக்களின் வம்சாவளியினர் (நீக்ராய்டுகளும், இந்திய சூத்திரர்களும் ஒரே வம்சத்தினர்) என்றும், அவர்களின் ஒருங்கிணைந்த இனப்பெயர் சூத்திராய்டு (Sudhroid) எனவும் கூறி வருகின்றனர் (பார்க்கவும் Dalit Freedom Network, Colarado, USA; www. dalitstan.com etc).

இந்திய ஆதிதிராவிடர்கள் இனரீதியாகத் தென்கோளத்தோடும் (நீக்ரோக்களுடனும்), மொழி ரீதியாக வடகோளத்திலுள்ள உக்ரைன் நாட்டுடனும் இணைக்கப்பட்டு விட்டனர். இதன்விளைவாக, இந்திய தலித்துகளும், திராவிடர்களும், தமிழர்களும், நாம் யார்? நம் பூர்வீகம் யாது? என மொழி இழந்து, நாடு இழந்து பூமியின் வடகோடிக்கும், தென்கோடிக்கும் திருமறையைச் சார்ந்த வரலாற்றாசிரியர்களால் பந்தடிக்கப்படுகின்றனர். இதன்மூலம் காலனியாதிக்கவாதிகளின் எண்ணம் நிறைவேறியது. அதன்படி இந்தியாவிலுள்ள பூர்வ குடிமக்கள், ஆடு, மாடு, கிடா, கோழி போன்றோர்களே. இவர்களுக்குத் தனித்தன்மையோ, சீரான உறைவிடமோ, மொழியோ, கலாச்சாரமோ, தைரியமோ, வீரமோ கிடையாது. அதன் காரணமாகவே ஆரியர்கள், ஹூணர்கள், கிரேக்கர்கள், மங்கோலியர்கள், மத்திய ஆசிய, மேற்கு ஆசிய இஸ்லாமியர்கள், போர்ச்சுகீஸியர்கள், டச்சுகாரர்கள், பிரெஞ்சுகாரர்கள், பிரிட்டிஷ்காரர்கள் எனப் பலநாட்டு மக்களும் இந்திய நாட்டைப் பலவந்தமாகப் பிடுங்கித் தங்களது வாழ்விடங்களாக்கிக் கொண்டனர் என்று இந்திய வரலாற்றுக் கட்டுரைகளில் எழுதி வைத்தனர். எனவே

இந்தியா என்பது ஒரு நாடு எனச் சர்வதேச அரங்கில் கூறுவதற்குத் தகுதியற்றது என்றும், இது உடைக்கப் பட்டாலொழிய இதில் வாழும் பல இனக் குடிகளுக்கு சொந்த நாடும், வாழும் உரிமையும் கிடைக்காது என்றும் சில அரசியல்வாதிகளால் வெளிப்படையாகவும், வேத கோவிலைச் சார்ந்த தொண்டு நிறுவனங்களால் சற்று மறைவாகவும் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது. இவ்வியக்கங்களுக்குச் சர்வதேச நிறுவனங்கள் மூலம் பெரும் நிதி ஆதாரங்கள் கிடைத்து வருகின்றது. பெறப்படும் நிதி ஆதாரங்கள் இந்தியாவில் சமூக - சமுதாய வேற்றுமைகளை வளர்க்கும் செய்திகளை வெளியிட, சில ஊடகங்களுக்கு விளம்பரமாகவும், கடனாகவும் வழங்கப்படுகின்றன. சில அரசியல்வாதிகளுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் கையூட்டும், நன்கொடையுமாக வழங்கப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் இந்தியா சீரழிக்கப்படுகின்றது. இந்தியாவுக்கு எதிராகச் செயல்பட்டுவரும் ராஜதந்திர - சூதுவாதுகளை மக்களுக்கு எடுத்துச் சொல்ல இந்து சமய ஆச்சாரியார்களும் அஞ்சுகின்றனர். இவ்வுண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் நல்லெண்ணம் உள்ளவர்கள் ‘இந்துத்துவா’, மதவாதிகள் எனப் பட்டம் சூட்டப்படுகின்றனர். எனவே வளமான பாரம்பரியமிக்க இந்தியர்கள் வழிகாட்டும் ஆசான் அல்லது நிறுவனங்களின்றி ஆக்கப் பட்டுவிட்டனர். பதினெட்டாம் நூற்றாண்டு தொடக்கத்தில் அந்நிய - காலனியாதிக்க - திருமறையாளர்களால் தொடங்கி வைக்கப்பட்ட ‘ஆரியர் படையெடுப்பு’ கொள்கை, பின்னர் அதே சிந்தனையுடைய இந்திய அறிவு ஜீவிகள், சில அரசியல்வாதிகள் ஆகியோரின் அங்கீகாரம் பெற்று, இருபதாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட சிந்து சமவெளி நாகரிக கண்டுபிடிப்புகளுடன் இணைத்து, இந்தியாவைச் சின்னா பின்னமாக்கி வருகின்றனர். சிந்து சமவெளி நாகரிகத்தின் முக்கியபகுதி, இன்றைய பாகிஸ்தான் நாட்டிலே உள்ளது. ஆனால் இந்தியாவிலுள்ள அறிவுஜீவிகள் அந்நாட்டிற்குச் சென்று ஆரிய - திராவிட பேதத்தைப் பற்றியோ, சூத்திராய்டு தத்துவத்தைப் பற்றியோ பேசுவது இல்லை. குண்டு சட்டிக்குள்ளே இங்கு குதிரையோட்டி வருகின்றனர்.

6:2. சாதிகளை உண்டுபண்ணல்

பதினாறு, பதினேழாம் நூற்றாண்டில், ஜெர்மனியில், ஆரிய - சமஸ்கிருத - பிராமணர்களே உலகின் மேல் மக்கள் எனும் வாதம் தோன்றி மலர்ந்தது. அதே வேளையில் ஐரோப்பியர்களே சிறந்த நாகரிகத்தைக் கொண்டவர் எனும் வாதம் கிறித்துவ வேதாகமத்தை ஆதரவாய்க் கொண்டு பிரிட்டன் மற்றும் சுற்றுப்புற நாடுகளில் தலையெடுத்தது. இதனை முன்நின்று நடத்தியவர் சர். வில்லியம் ஜோன்ஸ் (Sir. William Jones). பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த இவர் இந்திய வரலாற்றின் தந்தை என இன்றுவரை பல இந்திய அறிஞர்களாலும், திராவிட இயக்கத்தினாலும் புகழப்படுபவர். இவரும், அக்கால அறிஞர்கள் பலரும் பைபிள் கதைகளை உண்மையானது என ஆத்மார்த்தமாக நம்பினார்கள். இந்நம்பிக்கை ஐரோப்பாவில் இருண்ட காலத்தில் தொடங்கி 20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் வரை நீடித்தது. இவர்களின் ஆன்மீக - சமுதாய கோட்பாடுகள் கீழே வழங்கப்படுகின்றன.

1. இந்து வேதங்களும், இலக்கியங்களும், கிறித்துவத்தின் மாறுபட்ட, ஆனால் கீழ்மையான பொருட்களே!

2. இந்தியர்கள், பைபிள் கூறும் பெரும் வெள்ளத்தின் போது கர்த்தரின் அருளால் தப்பித்த நோவாவின் மகன்களில் ஒருவரான ஹேம் என்பவனின் வாரிசுகள், இவர்களே கறுப்பு இந்தியர்கள்.

3. இவ்வாறு கீழ்நிலையில் உள்ள கறுப்பு இந்தியர்களிடம் இரட்சிப்பினை வழங்குவது தங்களைப் போன்ற பிரிட்டிஷ்- வெள்ளைய சாதியினரின் கடமை.

யார் இந்த ஹேம்?, அவருக்கும் இந்தியருக்கும் என்ன தொடர்பு? பார்க்கலாம்!.

உலகம் தோன்றிய விதமும், பெருவெள்ளம் நிகழ்ச்சியும் பரிசுத்த வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளதை நாம் முன்பே பார்த்தோம். உலகிலுள்ள இன்றைய மக்கள் எல்லோரும் ஆதாம் முதற்கொண்டு நோவா வரை 10 தலைமுறையும் இறை மக்களே. உலக மக்களில் நோவா குடும்பத்தினரைத் தவிர

மீதமுள்ள - இறைமக்கள் பிரளய காலத்தில் கர்த்தர் உண்டாக்கிய வெள்ளத்தில் மூழ்கி மரணித்தனர். எனவே இதன் பின்பு தோன்றிய அனைத்து உலக மக்களும் நோவாவின் மக்களே! அனைவரும் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே எனக் கருதப்படுவதைப் பரிசுத்த வேதாகமம் வேண்டுமென்றே மறுத்துரைக்கின்றது. அதற்குப் பதிலாக மனித சமுதாயத்தில் கீழோர், மேலோர் எனும் வேறுபாட்டை ஏற்படுத்திட பைபிள் கதைகள் உபயோகப்படுத்தப்பட்டன.

பெரு வெள்ளத்திற்குப் பின் நோவாவின் மூன்று மகன்களும் உலகெங்கும் பல்கிப் பெருகினர். ஷெம், ஹேம் (Ham), ஜப்பித் (Japheth) ஆகிய மூவர்கள் நோவாவின் மக்கள். இம்மூவர்கள் மூலம் நோவாவிற்கு நிறைவான பேரக்குழந்தைகளும் உண்டாயினர். அவ்வமயம், ஒருநாள் நோவா அளவிற்கு அதிகமாகத் திராட்சை மதுவினை அருந்தி ஆடையின்றி நிர்வாணமாய் வீட்டில் வீழ்ந்து கிடந்தான். இதனைக் கண்ட ஹேம் மற்றும் அவனது மகன் 'கானான்' ஆகியோர், அவனை ஆடைகொண்டு மூடுவதற்குப் பதிலாக எள்ளி நகையாடினர். இதனைக் கண்ட நோவாவின் இதர சகோதரர்கள் நிர்வாணமாய்க் கிடந்த தந்தையை ஆடை கொண்டு மூடினர். போதை இறங்கித் தன் சுயதன்மைக்குத் திரும்பிய கர்த்தரால் வல்லமை பெற்ற நோவா, நடந்ததை அறிந்து மிகவும் விசனம் கொண்டு, தன் கடமையில் தவறிய மகன் ஹேம், பேரன் கானான் இருவருக்கும் சாபங்களை வழங்கினான். 'உன்னுடைய சந்ததியினர் கறுப்பாகவும், புத்திகூர்மையற்றவர்களாகவும் இருப்பர். அவர்கள் மற்ற இருவம்சத்தினருக்கு அடிமையாய் வாழ்வார்கள் எனவும் சாபம் இட்டான் (பார்க்கவும் ஆதியாகமம் 9:21-29).

மேற்சொன்ன பைபிள் கதையின் அடிப்படையில் வர்ணத்தை கொண்டு மனித சமுதாயத்தை உயர்ந்தவர், தாழ்ந்தவர் எனப் பல்வேறாகப் பிரிவினை செய்யும் தன்மை கிறித்துவ சமய அறிஞர்கட்கு ஏற்பட்டது.

1. ஜப்பித் இனம் (வெள்ளையர்கள்)

உலகில் படைக்கப்பட்ட மனிதர்களில் இதுவே மிகவும் உயர்ந்த இனம். இவர்கள் ஐரோப்பா, கிரேக்க நாட்டில்

வாழ்பவர்கள் மற்றும் சைத்தியர்கள் (ஆரிய - பிராமணர்கள் இவ்வினத்தில் ஒருவராக மேற்கத்திய வரலாற்று அறிஞர்களால் பின்னர் சேர்க்கப்பட்டனர்).

2. ஹேம் இனம் (கருப்பர்கள்)

ஹேம் நான்கு மக்களைப் பெற்றான். அவனின் மகன்கள் குஷ் (Cush), மிஸ்ராஸின் (Mizracin), புட் (Phut) மற்றும் சபிக்கப்பட்ட நான்காவது மகன் கானான். இவற்றில் கானான் சந்ததியினர் இஸ்ரவேல், லெபனான், சிரியா நாடுகளில் வசிப்பவர்கள் எனக் கருதப்பட்டனர். ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா பழங்குடியினரும், இந்தியாவின் திராவிடர்களும் பின்னாளில் கானான் சந்ததியினராக அடையாளம் காணப்பட்டனர்.

3. ஷேம் இனம் (மஞ்சள் நிறத்தவர்)

இவர்கள் மனிதகுலப் பிரிவில் நடுநாயகமாக விளங்குபவர்கள். இரான் நாட்டினர், சுமேரியர்கள், அசிரீரியர்கள், அரேபியர்கள் ஆகியோர் இவ்வினத்தைச் சார்ந்தவர்கள் (பார்க்கவும் Wikipedia - sons of Noah).

எனவே கானான் சந்ததியினரான கருப்பர்களை அடிமைப்படுத்தப்படுவதற்குத் தெய்வீக அனுமதி உண்டு எனவும், அது தவறானது அன்று எனவும் ஐரோப்பியர்கள் மத்தியில் ஆண்டாண்டு காலமாக ஒரு கருத்து நிலவி வந்தது. இம்மக்களை அடிமையாகக் கொள்ளுதல் இறைவனுக்குச் செய்யும் அர்ப்பணமாகவும் கருதப்பட்டது.

வில்லியம் ஜோன் அவர்களின் இதரக் கண்டுபிடிப்புகள்.

1. அயோத்தி ஸ்ரீராமனும், பைபிள் கதையில் குறிப்பிடப்பட்டுள்ள ரம்மா என்பவரும் ஒருவரே!

2. ஸ்ரீராமனின் மகன் குசலவன் நோவாவின் பேரன் குஷ் என்பவனே!

3. மனுநீதி சாத்திரத்தைத் தந்த மனுவும், இனப் பிரிவினையை உண்டுபண்ணிய நோவாவும் ஒருவரே!

இதுபோன்ற இன்னும் பல கற்பனைக் கதைகள் இந்தியாவையும் பரிசுத்த வேதாகமத்தைச் சுற்றியும் புனையப்பட்டன. இவற்றைக் கொண்டு இந்தியாவில் பரிசுத்த வேதாகமத்தைப் பலப்படுத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்

பட்டன. பரிசுத்த வேதாகமத்துடன் பொருத்த முடியாத இந்திய - இலக்கிய வரலாறுகள் பொய்யானவை எனக் கொச்சைப் படுத்தப்பட்டன. உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் இங்கே பரிசீலிக்கலாம்:

பைபிளின்படி உலகம் தோன்றிச் சுமார் 6000 ஆண்டு கடந்துள்ளது. ஆனால் இந்து புராணங்களின்படி உலகம் தோன்றி நான்கு யுகங்கள், சுமார் 450 கோடி ஆண்டுகள் ஆகின்றன. இதனை மூடநம்பிக்கையின் அடிப்படையிலான கற்பனை என்று நிராகரித்தனர்.

சர்வில்லியம் ஜோன் மறைவிற்குபின், அவர், பரிசுத்த வேதாகமத்தை இந்தியாவுடன் தொடர்புபடுத்தியதைப் பாராட்டுமுகமாகவும், அதன் வரலாற்றை இந்தியாவுக்குக் கொண்டு சென்று கருப்பு இந்தியர்களை அடிமைப்படுத்து வதற்கு நியாயம் கற்பித்தமைக்குப் பாராட்டுமுகமாகவும் அவரது திருஉருவச் சிலை லண்டன் நகரின் புனிதர் பவுல் கத்தேட்ரலில் நிறுவப்பட்டது. அச்சிலையில் சர் ஜோன்ஸ் ஒரு கையில் மனு ஸ்மிருதியையும் மற்றொரு கையில் வேறு சில நூல்களையும் வைத்திருப்பது போன்று சித்தரிக்கப் பட்டுள்ளது.

பண்டைய வேதங்களில், இந்தியாவில் இப்போது போன்று சாதிப் பிரிவினைகள் குறிப்பிடப்படவில்லை. சமுதாயத்தில் ‘செய்யும் தொழிலின்’ அடிப்படையில் பல பிரிவுகள் இருந்தன. இதனைப் பற்றி ரிக்வேதம் அத்தியாயம் *9:112, 1-4*ல் கூறுவதைக் காணலாம்.

‘நான் ஓர் கவிஞன், என்னுடைய பிதா ஓர் வைத்தியர், என்னுடைய மாதா ஓர் அரவைத் தொழிலாளி. எங்களுடைய வெவ்வேறு திறமைகளைக் கொண்டு செல்வம் சேர்க்க விரும்புகிறோம் (ஒரே வீட்டில் பல தொழில் செய்பவர்கள் இருந்துள்ளனர்).

‘எங்களுடைய திறமை வெவ்வேறு தொழில்களைச் செய்யும் சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. தச்சுத் தொழிலைச் செய்யும் திறமை உடையவன், உடைந்த மரச்சாமான்கள் இருக்கும் இடத்தை நோக்கி வேலை தேடிச் செல்கின்றான், வைத்தியன் கால், கை உடைந்த நோயாளியை நோக்கிச் செல்கின்றான், ஆன்மீகத்தில் நாட்டம் உள்ளவன், அதனை

ஆதரிக்கும் வள்ளல் பெருமகனை நோக்கிச் செல்கின்றான், ஏனென்றால் அங்கே தான் அவனுடைய அறிவினை விருத்தி செய்ய ஆதரவு கிடைக்கும்.'

'நாங்கள் எங்களது வேலைக்கும், தொழிலுக்கும் தேவையான பொருள்களும், கருவிகளும் கிடைக்கும் இடத்தை நோக்கிச் செல்கின்றோம். இரும்பினைக் காய்ச்சி அடிக்கும் தொழிலாளி, உலைக்கு விறகு கிடைக்கும் இடத்தை நோக்கியும், உலையில் தணலைப் பெருக்கும் (விசிறியை போன்ற) பறவை இறகு கிடைக்கும் இடத்தை நோக்கியும், உருக்கிய உலோகத்தை ஊற்றி அடித்து, தேவையான வடிவத்திற்குக் கொண்டுவர தட்டையான பாறை உள்ள பகுதியை நோக்கியும் போகின்றோம். எனினும் நாங்கள் அனைவரும் இறைவனுக்காகப் பல்வேறு தொழில்களைச் சிறப்பாகச் செய்வதின் மூலம் அவ்விறைவனுக்குச் சேவை செய்து வருகின்றோம்.'

ரிக் வேதத்தில் இது போன்று பல தொழில்களைப் பற்றிக் கூறப்பட்டிருந்தும் அவற்றிற்கிடையே சமுதாய வேறுபாடுகள் இருந்தது பற்றி (உயர்ந்தவன் - தாழ்ந்தவன்) கூறப்படவில்லை.[3]

ஆதியில் இந்திய மக்களிடையே குணங்களைக் கொண்டு நான்கு வர்ணங்கள் இருந்தன. இதனையே ஸ்ரீமத் பகவத் கீதையும் பகர்கின்றது. கூட்டம் கூட்டமாய் வாழ்ந்த இந்தியர்கள் மத்தியில் செய்யும் தொழிலைக் கொண்டு பல பிரிவுகள் இருந்துள்ளன. அப்பிரிவுகளைக் குறிப்பிடுவதற்குப் பல்வேறு பெயர்கள் இந்தியாவெங்கும் இருந்தன. ஒவ்வொரு பிரிவினரும் அவரவர் செய்யும் தொழிலில் சிறப்பானவர்களாய் இருந்துள்ளனர். இத்தகைய ஆயிரக்கணக்கான பிரிவுகள் இந்தியாவில் இருந்திருக்கக் கூடும். இத்தகைய ஒரே தொழிலைச் செய்யும் பிரிவு மக்களையெல்லாம் ஒன்று சேர்த்து அவற்றை ஒரே ஜாதியாக்கி, அவற்றிற்குப் பெயர் வைத்த பெருமை சர். ஹெர்பட் ஹோப் ரிஸ்லே (Sir. Herbert Hope Risley) - 1851 - 1911 எனும் இந்தியாவில் பணியாற்றிய ஆங்கிலேயரைச் சாரும். அதுவரை மாற்றத்திற்கும், மாறுதலுக்கும் உட்பட்டிருந்த இந்திய சமுதாயப் பிரிவுகள், மாறுதலுக்கு உட்படாத சாதி எனும் அறைக்குள் அடைத்து வைக்கப்பட்டனர்.[4] உதாரணமாகப் பானை செய்யும்

தொழிலாளர்கள் தமிழகம் - இந்தியா முழுவதிலும் பல்வேறு சுட்டுப் பெயர்களில் இருந்த சமுதாயத்தை எல்லாம் ஒன்று சேர்த்துக் குயவர் எனும் சாதியில் கொண்டு சேர்த்தனர். ஐரோப்பியர்களின் இச்செயலினால் சாதிகள் இந்தியாவில் உருவாகின. (இங்கிலாந்து நாட்டிலும் நான்கு வகைச் சாதிகள் இருந்தமையைப் பார்க்கலாம்). இச்செயலால் உதாரணத்திற்குத் தச்சர் அனைவரும் ஒரே ஜாதியாகிப் பின்னர் தனிகுலமாக்கி, தனி இனமாகவும் ஆக்கப்பட்டனர். இவ்வாறு ஜாதியையும், குலத்தையும், இனத்தையும் உருவாக்கிய பெருமை ஐரோப்பிய கிறித்துவர்களைச் சாரும். சாதியை குறிக்க caste எனும் ஆங்கில வார்த்தை தற்போது உபயோகப்படுத்தப் பட்டு வருகின்றது. caste எனும் சொல் castos எனும் போர்ச்சுக்கீஸிய சொல்லிலிருந்து எடுக்கப் பட்டதாகும். இந்தியாவில் caste எனும் பிரிவினையை உண்டுபண்ணியவர்கள் 14-15-ம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த ஸ்பெயின் மற்றும் போர்ச்சுக்கல் நாட்டுத் திருமறையாளர்களும் அதன்பின்னர் இந்தியாவிற்கு வருகை தந்த ஆங்கிலேயர்களுமாகும். இந்து மதம் சிறப்பாக விளங்கும் இந்தோனேசியா நாட்டின் பாலித்தீவில் சாதிப் பிரிவுகள் இல்லை என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

> 'மனிதர்களின் இயல்புக்கு ஏற்றப்படி அவர்களது ஆர்வங்கள் அமைகின்றன. ஆர்வங்களால் செயல் படுபவனே மனிதன். ஆர்வமே அவன் செய்யும் தொழிலை உருவாக்குகின்றது'.
>
> – பகவத் கீதை 17:3.

> 'மனக்கட்டுப்பாடு, புலனடக்கம், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, ஞானம், விஞ்ஞானம், ஆன்மிக நாட்டம் போன்ற இயல்புகள் யாரிடம் இருக்கின்றனவோ, அவர்களே பிராமணர்கள்'.
>
> – பகவத் கீதை 18:42.

> வீரம், மனஆற்றல், செயல்திறன், சாதுரியம், போரில் புறங்கொடாமை, கொடை, ஆளும் திறமை, ஆகிய இயல்புகள் இயற்கையாகவே யாரிடம் இருக்கின்றனவோ, அவன் சத்திரியன்.
>
> – பகவத் கீதை 18:43

விவசாயம், கால்நடையைப் பராமரித்தல், வாணிபம் ஆகிய வேலைகளை இயல்பாகவே செய்யும் விருப்ப

முடையவன் வைசியன். சமுதாயத்திற்கான வெவ்வேறான பணிகளில் செய்வதில் மட்டுமே விருப்பமான இயல்புடையவன் சூத்திரன் எனப்படுகிறான்.

- பகவத் கீதை 18:43

எனவே இந்திய சமுதாயம் நான்கு வகைப்பட்ட மனிதர்களாக, அவரவர் இயல்புகள் அடிப்படையிலும், அவர்களுக்கு விருப்பமான செயல்களின் அடிப்படையினாலும் பிரிக்கப்பட்டது.

போர்ச்சுகீசிய - ஆங்கிலேயர்களின் சூழ்ச்சியின்படி இந்தியா வெவ்வேறு சாதிகளையும், இனங்களையும் கொண்ட நாடு எனவும், அது ஒரே நாடாக விளங்குவதற்குத் தகுதியற்றது எனவும் எழுதி வைக்கப்பட்டது. ஐரோப்பாவைப் பொருத்தளவில் தனித்தனி இயற்கையான எல்லைக்குள் தனித்தனி இனங்கள், தனித்தனி நாடுகளாக உறுதியுடன் உள்ளனர் என்றும் அவர்கள் கூறினர். இந்தியாவைப் பொறுத்தளவில் 43 இனங்களும், 2378 சாதிகளும் அவைகளுக்கான தனி வரையறையுள்ள பிரதேசங்கள் இல்லாமல் கலந்து காணப்படுகின்றன. எனவே இந்த நாடு வருங்காலத்தில் - (கிறித்தவர்கள் ஆட்சி முற்றுப் பெற்று விட்டால்) உள்நாட்டுக் கலவரங்களினால் சிக்கித் தவித்துவிடும், கலவரமும், அராஜகமும் பெருகிவிடும் எனவும் ஆருடம் கூறினர்.

ஹெர்பட் ஹொப் ரிஸ்லே 19ம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவின் ஜனத்தொகைக் கணக்கெடுப்பு அதிகாரியாக இருந்தார். அவர் மானிடக் கூறுகளின் அடிப்படையில் இனங்களைப் பிரிப்பதில் வல்லவர். மேற்கத்திய காலனி ஆதிக்கக் கிறித்துவ அறிஞர்களுக்கு - இந்தியாவிலுள்ள சாதிகளுக்கும், அதன் வேறுபாடுகளுக்கும் ஒரு விஞ்ஞான அடிப்படையிலான சான்று கொடுக்க வேண்டும் என விருப்பம் எழுந்தது. சாதிப் பிரிவுகள் வேதங்களில் குறிப்பிட்டுள்ளன போன்று விருப்பத்தின் அடிப்படையில் அல்லது செய்யும் தொழிலின் அடிப்படையில் தோன்றியன அல்ல எனவும், சாதிப் பிரிவுகள் தனித்தனி மனித இனத்தைச் சேர்ந்தன எனவும் நிரூபிக்க விரும்பினார்கள். இதற்கு வேதங்களில் ஆதாரங்களைத் தேடினார்கள். இந்து வேதத்தில் தஸ்யூ எனும்

இனத்தினருக்கு மூக்கு அகலமாகவும், சப்பையாகவும் இருக்கும் எனவும், அத்தகையோருக்கு எதிராக வேதாந்திகள் போராடினர் என்றும் ஒரு குறிப்பு உள்ளது. பரிசுத்த வேதாகமத்தில் சப்பை மூக்கு உள்ளவர்களைச் சாத்தானின் சந்ததிகள் என்றும் லெவி 21:18 அவர்களைச் சமுதாயத்திற்குள் அனுமதிக்கக் கூடாது எனவும் கட்டளை உள்ளது. இவை இரண்டையும் இணைத்து இந்தியர்களின் மூக்கின் நீள, அகலத்தை அளந்து கிறித்துவர்களின் சாதிய தத்துவத்திற்கு விஞ்ஞான முலாம் பூச முயன்றனர்.

1. சாதிப் பிரிவுகள் தொழிலினால் ஏற்படுவன அல்ல. பிறவியினால் ஏற்படுவனவே சாதிப் பிரிவுகள். அதன்படி:

2. இந்து வேதங்களில் சுட்டிக்காட்டி உள்ளவாறு, சாதி என்பது குண இயல்பினால் வருவது அன்று. பிறவியைப் பொறுத்து அமைவதே ஆகும்.

3. இந்து வேதங்களில் கூறியுள்ளவாறு சாதிகள் மாறக்கூடியன அல்ல, அல்லது மாற்றப்படக்கூடியன அல்ல. பரிசுத்த வேதாகமத்தில் மகான் நோவா வாழ்வில் இதற்கான ஆதாரங்கள் உள்ளன என்றும் அவை இந்திய சூழலுக்கும் பொருந்தும் என நிரூபிக்க ஆங்கிலேயர்கள் முயன்றனர்.

ஆங்கிலேயர்களின் இக்கொள்கைகளை நிரூபிக்க ரிஸ்லே பெரும்பாடுபட்டார். அவரது வாழ்நாள் முழுவதையும் இதற்காகவே செலவழித்தார். அன்றைய இந்தியா முழுவதிலும், மூக்கினை அளக்கும் ஒரு அளவுகோலுடன் பயணம் செய்து, இந்திய ஆண்களையும், பெண்களையும் ஜாதி வாரியாக மூக்கின் நீளம் மற்றும் அகலத்தைப் பதிவு செய்தார். இவ்வாறு கிடைத்த புள்ளி விவரங்களிலிருந்து ஜாதிகள் விஞ்ஞான பூர்வமான பிரிவுகள் என வாதிட்டார். அதன் பொருட்டு ஒரு தத்துவத்தை வெளியிட்டார். அதன் பெயர் Nasal Index Theory.

$$\left.\begin{array}{c}\text{மூக்கு விகித எண்}\\ \text{(Nasal Index)}\end{array}\right\} = \frac{\text{அடிமூக்கின் அகலம்} \times 100}{\text{மூக்கின் நீளம்}}$$

Nasal Index தத்துவம் ஆங்கிலத்தில் கீழ்க்கண்டவாறு கூறப்படுகின்றது.

"The nasal index is inversely proportional to caste hierarchy"

ரிஸ்லேயின் மூக்கு விகித தத்துவத்தின்படி விகித எண் குறைவாக உள்ளவர்கள் பெரிய சாதிப் பிரிவினர் என்றும், அதிக விகித எண் உடையவர்கள், குறைந்த சாதியினர் எனவும் புள்ளி விவரங்கள் மூலம் தெரிவித்தார். இவருடைய புள்ளி விவரங்கள்படி பிராமணர்களின் மூக்கு விகித எண் 76.70 எனவும் பறையர்களுக்கு மூக்கு விகிதம் 80 எனவும் சில மலை ஜாதி மக்களின் மூக்கு விகித எண் அதிகபட்சமாக 103 வரை உள்ளது என்றும் நிரூபித்தார். வெவ்வேறு சாதிப் பிரிவினருக்குத் தனியான மூக்கு விகித எண் உண்டு எனவும் நிரூபித்தார். அத்துடன் இப்புள்ளி விவரங்கள் அடிப்படையில் இந்தியாவிலுள்ள அனைத்துச் சாதியினரும், சாதி எனும் ஏணியில் அடுக்கி வைக்கப்பட்டு, எது உயர்ந்தது, தாழ்ந்தது என விஞ்ஞான பூர்வமாய் நிலைநிறுத்தப்பட்டது. இதற்காக ரிஸ்லே மேற்கொண்ட சர்வே விவரங்கள் "The people of India" எனும் நூலில் காணலாம்.

இந்நூலில் மூக்கு விகிதத்தைத் தவிர சாதிகள் பற்றிய பல்வேறு விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. இந்தியாவின் 43 இனங்களின் பெயர்களையும், அவைகளின் மூக்கு விகிதத்தையும் விஞ்ஞானபூர்வமாகப் புள்ளி விவரங்களுடன் பதிவு செய்தல். இவ் இனங்களில் ஒன்று திராவிட இனம்.

2. ஒவ்வொரு சாதியின் பழக்கவழக்கங்கள் (குறிப்பாகத் திருமணம், ஈமச்சடங்கு ஆகியவற்றை) பதிவு செய்தல்.

3. ஒவ்வொரு சாதியையும் ஏசுவதற்கு அடுத்த சாதியினர் எத்தகைய கேவலமான வார்த்தைகளை உபயோகப்படுத்துகின்றனர் என்பதைக் குறிப்பிடுதல்.

ஒரு சாதிப் பிரிவைக் கொண்டு இன்னொரு சாதிப் பிரிவை ரிஸ்லே கொச்சைப்படுத்தியுள்ளார். இந்தியாவில் சாதிச் சண்டையைத் தூண்டி விடுவதற்கான அடிப்படையை ரிஸ்லே நிறுவினார். இந்தியாவிலுள்ள திராவிட இனத்தைப் பற்றி (?) ரிஸ்லே எவ்விதம் வர்ணனை செய்கின்றார் எனப் பார்க்கலாம்.

'திராவிடர்கள் குள்ளமானவர்கள், கருப்பு நிறத்தவர், நீண்ட தலையும், சப்பை மூக்கும் உள்ளவர்கள். இவர்களின் முழங்கை நீளமாக விளங்கும். இந்தியாவிலுள்ள 43

இனங்களில் இவர்களே மிகவும் தாழ்ந்தவர்கள்' (மேற்படி புத்தகம் பக்கம் 44).

மொத்தத்தில் ரிஸ்லே முயற்சியைப் பிஷப் கால்டுவெல் அவர்களின் 'திராவிட மொழியின் ஒப்பிலக்கணம்' எனும் நூலை எழுதிய முயற்சியுடன் ஒப்பிடலாம். ஒப்பிலக்கண நூலில் உலகிலுள்ள மொழிகளில் காணப்படும் இலக்கண ஒற்றுமை, வேற்றுமை ஆகியவற்றைக் கொண்டு மொழிகளைச் குடும்பவாறு கால்டுவெல் பிரிவினை செய்துள்ளார். இவரது மொழி இலக்கணத்தின்படி திராவிட மொழிக்குடும்பம் தனிமையானது. சமஸ்கிருதத்துடன் தொடர்பில்லாதது என நிறுவியுள்ளார். ரிஸ்லே மூக்கு விகிதத்தின்படியும், கால்டுவெல் மொழி அமைப்பின் பிரகாரமும் திராவிடர்கள் எனும் ஓர் இனத்தை இந்தியாவில் உருவாக்கிவிட்டனர். எனினும் இவர்கள் இருவரும், தங்களை அறியாமலேயே ஒரு தத்துவத் தவறு புரிந்துவிட்டனர், அதாவது திராவிடர்கள் இந்தியாவிலுள்ள அனைத்து இனங்களிலும் தாழ்ந்தவர்கள் என்று ரிஸ்லேயும், இந்திய மொழிகள் அனைத்திலும் திராவிடர்கள் பேசும் தமிழ் மொழியே உயர்ந்தது என கால்டுவெல்லும் குறிப்பிட்டுள்ளனர். மிகவும் தாழ்ந்த இனத்திலிருந்து மிகவும் உயர்ந்த மொழி எவ்வாறு உருவாக முடியும் என்பதைக் கவனிக்கத் தவறிவிட்டனர். இத்தவறுதலால், ரிஸ்லே மற்றும் கால்டுவெல் தத்துவங்கள் முற்றிலும் முரண்பாடானவை எனவும், ஒன்றுக்கொன்று ரத்து செய்யக்கூடியது என்றும் தற்போது நிருபிக்கப்பட்டுள்ளது.

காலனியவாதிகளாலும், அந்நிய சமயவாதிகளாலும் இவ்வாறு இந்திய சமுதாயமும், மொழியும் சின்னாபின்னமாக உடைக்கப்பட்டுவிட்டன. பிரித்தாளும் கொள்கைக்கு இதன் மூலம் உரம் கிடைத்தது.[5] இந்தியா விடுதலையடைந்து சுமார் 70 ஆண்டுகள் ஆயினும் இன்னும் நம்மில் பலர் இக்காலனி ஆதிக்க மதவாதிகளின் வலையிலிருந்து வெளிவராமல் அதனுள்ளே பெரும் சினத்துடன் துடித்துக் கொண்டு கிடப்பது காணக்கிடக்கின்றது.

மூக்கு விகித தத்துவத்திற்கு எதிர்ப்பு

இந்தியா பலகோடி மக்கள் கொண்ட நாடு. அதனில் ஒவ்வொரு சாதியிலும் சில நூறுபேர்களின் மூக்கை

அளந்துவிட்டுச் சாதியை நிருபிப்பது சரியல்ல என்ற கருத்து ரிஸ்லே அவர்களின் முயற்சிக்கு எதிராகக் கிளம்பியது எதிர்த்தவர்களில் குருக்கி (Crooke) எனும் வெள்ளையரும் அடங்குவார். குருக்கி அவர்களின் கருத்தின்படி தஸ்யூ இனத்தவர் சப்பை மூக்கு உள்ளவர் என வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தேவைக்கு அதிகமாகத் தனது மூக்கு விகித ஆராய்ச்சிக்கு ரிஸ்லே உபயோகித்துள்ளார் என்றும் மூக்கின் வடிவம் செய்யும் தொழிலைப் பொறுத்து வேறுபடக் கூடியது எனவும் அவர் கூறினார். மூக்கு விகிதத் தத்துவத்திற்கு மற்றொரு எதிர்ப்பாளர் பீட்டர் வாண்டர் வீர் (Peter Vander Veer). இவரின் கருத்துப்படி ஆதிகாலம் தொட்டு பல்வேறு குடிகளையும், குடியிருப்பாளர்களையும், படையெடுப்பாளர்களையும் சந்தித்த இந்தியாவில் சமுதாய கலப்புகள் ஏற்பட்டிருப்பது தவிர்க்க முடியாத ஒன்று. இத்தகைய சூழலில் மூக்கை அளந்து இல்லாத ஒன்றை நிருபிக்க ரிஸ்லே முயன்றுள்ளார் என அவர் கர்ஜித்தார். மற்றும் ஒரு வரலாற்று ஆசிரியரான S. குர்யே (S. Ghurye) என்பவர் ரிஸ்லேயின் கண்டுபிடிப்பு (?) சாதி வேறுபாடுகளைக் கடினப்படுத்தி அவற்றிற்கிடையே மோதலை உண்டு பண்ணவும், பிராமண எதிர்ப்பை உருவாக்கவும் மட்டுமே உதவியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மதத்தைப் பரப்புதலே நோக்கமாகக் கொண்ட காலனி ஆதிக்கவாதிகள் இந்தியாவிலுள்ள ஒரு சில நடப்புகளை நாட்டு நடப்பு எனக் கருதினர். ஒருவனின் தோற்றம், செய்யும் தொழிலாலும் நடை, உடை, பாவனை அடிப்படையிலும் அமைவதே தவிர ஜாதியை வைத்து அமைவது அல்ல என்பதை அவர்கள் உணர மறுத்து விட்டனர். உதாரணமாக டைடல் பார்க் (Tidel park) சென்னை நிறுவனங்களில் வேலை செய்யும் மகளிரை இன்று உற்றுநோக்கினால் அவர்களிடையே தோற்றத்தில் ரிஸ்லே கூறியுள்ளவாறு வேறுபாடுகள் (மூக்கு வேறுபாடுகள்) இல்லை என்பதைக் காணலாம். பிஷப் கால்டுவெல் அவர்களும் 1849ம் ஆண்டில் எழுதி வெளியிட்ட ‘திருநெல்வேலி சாணார்கள்’ எனும் புத்தகத்தில் சாணார்கள் (நாடார்கள்) பொய் சொல்வதற்குத் தயங்காதவர்கள், தாழ்வான குணங்களை உடையவர்கள், அறிவில்லாதவர்கள், கோழையர்கள், சதிகாரர்கள், படிப்பறிவு

இல்லாதவர்கள், வணிகப் பொருள்களைத் திருடுபவர்கள் என வர்ணித்துள்ளார் (பார்க்கவும் பக்கம் 33, 38, 39, 52 கால்டுவெல்லின் திருநெல்வேலி சாணார்கள் எனும் புத்தகம்). அத்துடன் சாணார்கள் (நாடார்கள்) மொத்தத்தில் மேற்கு இந்திய தீவில் உள்ள நீக்ரோ அடிமைகளை விடத் தாழ்ந்தவர்கள் (அதே புத்தகம் பக்கம் 62) எனவும் கூறியுள்ளார். கால்டுவெல் கூறியுள்ள கருத்துகள் முற்றிலும் பொய்யானது எனத் தற்காலத்தில் வாழும் நமக்குக் கண்கூடாகத் தெரிகின்றது. நாடார்கள் அறிவிலும், செயல் திறனிலும், வணிகம், அரசியல் மற்றும் கணினி தொழில் நுட்பத்திலும் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க வெள்ளையர்களை விடக் குறைந்தவர்கள் அல்லர் எனத் தற்போது நிரூபிக்கப்பட்டு விட்டது. அதுபோன்றே ரிஸ்லேயின் மூக்குவிகித ஜாதீய வர்ணாசிரம தத்துவமும் பொய் என நாம் கருத இடமுண்டு. காலனி ஆதிக்கவாத கிறித்தவர்கள் (பிஷப் கால்டுவெல் முதலியோர்) ஒரு சில நடப்புகளை உலக நடப்பு எனப் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர்கள் எனக் கொற்கை கிராமத்தில் பிறந்த அருமை நாயகம் என்ற சட்டாம்பிள்ளை சாணார் (நாடார் கிறித்தவர்) இன்றைக்கு 160 ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளது இங்கு நினைவு கூறப்படுகின்றது.

இந்தியாவில் சாதித்துவம் இன்னும் 20 ஆண்டுகளில் முற்றிலும் மறைந்து விடும். கால்டுவெல்லின் திராவிட மொழி ஒப்பிலக்கணக் கொள்கையும், மொழி, இன வேறுபாடுகளும் மறைந்து விடும். அத்துடன் ரிஸ்லே, கால்டுவெல் ஆகியோரின் தத்துவங்கள் மறைந்து சரித்திரம் ஆகிவிடும். இதற்கு நாடார்கள் பற்றி பிஷப் கால்டுவெல் கூறியுள்ள கருத்துக்கள் தற்போது திவால் ஆகிவிட்டதை உதாரணமாகக் கொள்ளலாம். நோவாவின் பேரன் சபிக்கப்பட்ட காணானியரின் சந்ததியினர் - கருப்பர்கள், அடிமைத் தொழில் செய்வதற்கே பொருத்தமானவர்கள் எனும் பைபிள் வாசகம் தற்போது பொய் என நிரூபிக்கப்பட்டுவிட்டது. கருப்பர் சந்ததியைச் சார்ந்த ஒபாமா அவர்கள் அமெரிக்காவின் ஜனாதிபதியாக விளங்குவதும் கருப்பர்கள் பலர், சிறந்த விளையாட்டு வீரர்களாய் ஒலிம்பிக் போட்டிகளில் விளங்குவதும் பைபிளின் வர்ணாசிரம ஜாதீய கொள்கைகள் திவாலானதற்குச் சிறந்த உதாரணங்களாக விளங்குகின்றன.

6:3. திராவிடர்களை உருவாக்குதல்

வேதங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த மேக்ஸ் முல்லர், சமஸ்கிருதம் பேசுவோரை ஆரியர் என்று அழைத்தார். மொழியின் அடிப்படையில் இவ்வாறு பிரிக்கப்பட்ட மக்கள் பின்னர் இனமாக்கப்பட்டது (ஆரிய இனம் ஆக்கப்பட்டது). வட இந்தியாவில் முன்பு வாழ்ந்தவர்கள் திராவிடர்கள் என்றும் அவர்களை ஆடுமேய்த்து வந்த ஆரியர்கள் தெற்கு நோக்கி விரட்டினர் என்ற கொள்கை அதன்பின்னர் உருவாக்கப்பட்டது. பத்தொன்பதாவது, இருபதாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட சிந்து சமவெளி நாகரிக அகழ்வாராய்ச்சி கண்டுபிடிப்புகள் ஆரிய - திராவிட பிரிவினைக்கு உரம் சேர்க்கும் வகையில் திரித்து உபயோகப்படுத்தப்பட்டது. சிந்து சமவெளி நாகரிக இடங்களில் வாழ்ந்தவர்கள் தமிழ் பேசிய திராவிடர்கள், அவர்களை ஆடுமேய்த்து வந்த சமஸ்கிருதம் பேசிய ஆரியர்கள் விரட்டினார்கள் என மொழி பேதம் இனபேதமாக மாற்றப்பட்டது. மொத்தத்தில் சிந்து நாகரிகம் ஒரு பண்டைய இந்திய நாகரிகம் என்ற பெருமை மறக்கடிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சியின்போது 1856ல் கிழக்கிந்திய கம்பெனி லாகூரிலிருந்து கராச்சிக்கு ரயில் பாதை அமைக்கும்போது உடைத்த கருங்கல் ஜல்லிக்குப் பதிலாக கடினமான செங்கல்கள் அருகில் கிடைப்பதாகவும், அதனை உபயோகிக்கலாம் என்றும் அங்குள்ள மக்கள் கூறினார்கள். அச்செங்கல்கள் கிடைக்கும் இடம் பிராமணபாத் (பிராமணர்கள் வாழ்ந்த இடம்) என உள்ளூர் மக்களால் அழைக்கப்பட்டது. இவ்விடத்தைக் கண்டுபிடித்த பெருமை ஜான் மற்றும் வில்லியம் எனும் இருபொறியாளர்களுக்குச் சேரும். இவ்விடம் 1920ல் ஜான் மார்ஷல் எனும் ஆங்கிலேயரால் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டு ஒருதலைப் பட்சமான முடிவுகள் வெளியிடப்பட்டன. பிராமணபாத் அருகிலுள்ள தற்போதைய கிராமம் ஹரப்பா, எனவே இந்நாகரிகம் ஹரப்பா நாகரிகம் எனவும் அழைக்கப்பட்டது.

மொஹன்ஜதாரோ எனும் மற்றொரு தொன்மை களம் 1922ம் ஆண்டில் அகழ்வாராய்ச்சித் துறையில் பணியாற்றிய

பண்டோத்பதாயா என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. மொகன்ஜதாரோ என்றால் இறந்தோரின் குன்று எனப் பொருள்படும்.

சிந்து சமவெளியின் ஹரப்பா, மொகன்ஜதாரோ கண்டுபிடிப்புகள் எவ்வாறு ஆரிய - திராவிட பேதத்தை ஊக்கப்படுத்தவும் திராவிட - தமிழர்களை இழிவுபடுத்தவும் உபயோகப்படுத்தப்பட்டது என்பதைக் கீழே காணலாம்.

1. கிமு 1900ல் சிந்துநதிதீரத்தில் வாழ்ந்த தமிழர்களுக்கு எழுதத் தெரியாது. எனவே தமிழ், கல்தோன்றி முன்தோன்றாக் காலத்தே மூத்தமொழி எனும் தமிழ் ஆர்வலர்களின் பெருமைக்கு ஜான் மார்ஷல் மண்ணைத் தூவினர்.

2. சிந்து சமவெளி மக்கள் ஹோமம் செய்ததாலும், ஸ்வஸ்திக் சின்னம் அங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாலும் தன்னையுமறியால் மேற்படி நாகரிகம் இந்துக்கள் நாகரிகம் என்பதை வெள்ளையர்கள் ஏற்க வேண்டியதாயிற்று.

3. ஆரியர்கள் ஆடுமேய்த்து வந்து சிந்து நாகரிகத்தை அழித்த பின்புதான் சிந்து - சரஸ்வதி நதி தீரத்தில் கிமு 1000 ஆண்டுவாக்கில் வேதங்கள் உருவாயின. எனவே வேதங்கள் பைபிளை விடத் தொன்மையில் குறைவானதே என்பதை ஜான்மார்ஷல் தலைமையிலான வெள்ளையர்கள் நிரூபிக்க முயன்றனர். அத்துடன் ஹரப்பா - மொகன்ஜதாரோவில் வாழ்ந்த திராவிடர்களுக்கும், வேதங்களுக்கும் சம்பந்தம் இல்லை எனவும், ஏன் இரண்டும் எதிரிகள் என்றும் கூறப்பட்டது.

4. வேதங்களில் சரசுவதி நதி தொடர்ந்து புகழப் படுவதால், வேதங்கள் சரஸ்வதி நதி தீரத்தில் தோன்றியவை, வேதங்களுக்கும், கங்கை நதிக்கும் சம்பந்தமில்லை எனவும் மறைமுகமாக வலிந்து கூறினர். இதன்பொருட்டுத் தார்ப் பாலைவனத்தில் இன்று வரண்டு போய்க் கிடக்கும் 'கக்கார்' ஆறுதான் சரஸ்வதி நதி எனப் பல கட்டுரைகளும், நூல்களும் தோன்றின. சரஸ்வதி நதி கங்கையின் உபநதி என்பது பல ஆசிரியர்களால் இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

வேதங்கள் கங்கை நதி தீரத்தில் தோன்றி விரிவடைந்த விபரங்களை ரிக்வேதம் கூறும் முறையைக் காணலாம் (தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது).

'ஹே, கங்கா, யமுனா, சரஸ்வதி, சுதுத்ரி (சட்லஜ்) பருஷ்ணீய (ராவி) என் வாழ்த்துக்களைச் செவிமடுத்துக் கேளுங்கள்! ஓ அஸிக்ஞயா (செனாப்), மருத்வ்ருதே (மருத்வ்ரதன்), என் குரலுக்கு விதஸ்தா (ஜீலம்) ஆர்ஜிகி சுஷோமாவுடன் சேர்ந்து செவிசாயுங்கள்.' - நதி ஸ்துதி சூக்தம் ரிக்வேதம் 10.75-5-6 (பக்கம் 55, மிஷல் தனினோ).

இந்த ஸ்லோகம் கங்கையில் ஆரம்பித்து மேற்குத் திசை நோக்கி யமுனா, சரஸ்வதியையும் சிந்து நதியின் ஐந்து கிளைகளையும், ஆப்கானிஸ்தானிலுள்ள சுலைமான் மலைப்பிரதேசங்களிலிருந்து, காபுல் நகரின் அருகிலுள்ள குபநதி, குர்ராம், குமால் நதி ஆகியவற்றையும் குறிப்பிடுகின்றது.

எனவே வேதங்கள் கங்கை நதி தீரத்தில் தோன்றிச் சிந்து சமவெளிப் பகுதிக்கும் பின்னர் ஆப்கானிஸ்தானுக்கும் (கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி) விரிவடைந்தது என்பதை விவரிக்கின்றது. எனவே சிந்துவெளி நாகரிகம் எழுதாக் கிளவி நிலைபெற்றிருந்த வேதகால தொடர்ச்சியே என்றும், கங்கைச் சமவெளி நாகரிகத்திற்குப் பிந்தையது எனவும் கொள்ளலாம்.

சரஸ்வதியைப் பொருத்தவரை அது கங்கையின் உபநதியா, அல்லது வறண்டு போன கக்கார் நதியா, ஆப்கானிஸ்தானின் ஹெல்ம் நதியா அல்லது சிந்துவின் ஓர் உபநதியா என்பதில் பெரும் கருத்துவேறுபாடு உள்ளது. கக்கர் நதிக்கும், யமுனைக்கும் சில இடங்களில் 50 கிலோ மீட்டருக்கும் குறைவாகவே இடைவெளி உள்ளது. எனவே இந்நதி சில காலம் கங்கையுடனும், தனிமையாகவும், திசைமாறி ஓடியதற்கும் சந்தர்ப்பம் உள்ளது.

சரஸ்வதி நதிக்கரையில் 'புரு' எனும் வேதகால மக்கள் வசித்ததையும், பலராமர் சரஸ்வதியின் கரைவழியாகத் தீர்த்த யாத்திரை சென்றதையும், பீமனுக்கும் துரியோதனனுக்கும் இடையே நடந்த கோரச் சண்டை சரஸ்வதி நதியின் கரையில் நடந்ததாகவும், ஆற்றின் இருகரைகளிலும் முனிவர்களின் ஆசிரமங்கள் இருந்ததையும் மகாபாரதம் குறிப்பிடுகின்றது. எனவே சிந்து சமவெளி நாகரிக இடங்கள் பல மகாபாரத காலத்தில் கி.மு. 1900 ஆண்டிற்கு முன்னரே சிறப்புடன் இருந்தமை நிரூபிக்கப்படுவதாகவும் கொள்ளலாம்.

சிந்து நதி நாகரிகத்திற்கு முன்னரே கங்கைச் சமவெளியில் நாகரிகம் இருந்தது. கி.மு. 1800 க்கு முன்பே அங்கு இரும்பு உருக்கப்பட்டது. இன்றைக்கு 15000 வருடங்களுக்கு முன்பாகவே இங்கு, மக்கள் வேளாண்மை செய்து வாழ்ந்துள்ளனர். அவற்றில் உருவானதே அயோத்தி, மிதிலை, மற்றும் பிற்கால அஸ்தினாபுரம். அதுவே இன்று நமக்குப் புராணங்கள் கூறும் வரலாறு. 'கற்றது கைமண் அளவு.' நாம் அகழ் ஆய்வு செய்துள்ளது கைமண் அளவே! கங்கைச் சமவெளிப் பகுதியில் தற்காலத்தில் மக்கள் நெருக்கமாய் வாழ்வதல் (அயோத்தி உட்பட) அகழாய்வு செய்ய முடியவில்லை. ரிக்வேதத்தில் ஆறுகள் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி விவரிக்கப்படுவதால் நாகரிகம் கங்கைப் பகுதியில் தோன்றி மேற்கு நோக்கியும், மக்கள் புலன்பெயர்ந்ததும் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கியும் என நாம் வலிந்து கொள்ளலாம்.[7]

சிந்து சமவெளியைச் சார்ந்த ஹரப்பா, மொகன்ஜதாரோ நாகரிகம் திராவிட நாகரிகம் எனும் கொள்கையுடையோர், அந்நாகரிக காலத்திற்குப் பின்னர், அதுவும் திராவிடர்களை ஆரியர்கள் தெற்கே நோக்கி அடித்து விரட்டிய பின்னரே (கிமு 1900க்கு பின்னரே) தமிழ்மொழி எழுத்து வடிவம் பெற்று இலக்கியம், இலக்கணம், கலை ஆகியவற்றில் சிறப்புற்றனர் என்பது நம்புவதற்கு ஏற்றுக் கொள்வதாய் இல்லை. விரட்டப்பட்ட திராவிடர்கள் தென்னிந்தியாவிற்குப் பெண்கள், குழந்தைகள், கர்ப்ப ஸ்திரிகள், வயோதிகர்கள், ஆடு, மாடுகளுடன் 2000 கிலோ மீட்டருக்கும் அதிகமாக நகர்ந்து குடியேறுவதற்கே ஆயிரம் ஆண்டுகளாவது ஆகியிருக்கக் கூடும் (பார்க்கவும், ராமச்சந்திரன் T.N. தமிழக அந்தணர் பக்கம் 639). அதன்பின்னர் தமிழ் எழுத்து வடிவம் பெற்று, இலக்கியங்கள் தோன்றி, அவற்றிலிருந்து அகத்தியரின் ஐந்திர இலக்கண நூலும், அதன் பின்னர் கிமு. 500 வாக்கில் தொல்காப்பியமும் தோன்றியது என்பது கற்பனைக்குக் கூட எட்டாமல் உள்ளது. ஹரப்பா அழிந்த கிமு 1900லிருந்து தொல்காப்பியம் தோன்றிய கிமு. 500க்குள் இவ்வனைத்தும் நடந்திருக்க வாய்ப்பில்லை. மேலும் தெற்கு நோக்கி நகர்ந்த திராவிட - தமிழர்களுக்கு எழுதுவதற்கு கற்றுத் தந்தவர் யார் என இதுவரை தமிழ் ஆர்வல - கிறித்துவ ஆய்வாளர்கள் தெரிவிக்கவில்லை. இவற்றையெல்லாம் ஒப்பிட்டு நோக்கும்

போது தமிழின் - தமிழரின் வளர்ச்சி சிந்து சமவெளி நாகரிகத்திற்கு முன்னரே உள்ளது எனக் கொள்ளலாம்.

6:4. கங்கை சமவெளி நாகரிகம் மறைக்கப்படல்

மொகன்ஜதாரோ-ஹரப்பா கால சிந்து சமவெளி நாகரிக காலத்திற்குச் சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன்பே, தமிழும், தமிழக அரசர்களும் சிறப்புற்றிருந்தனர் என்பதைக் கங்கைச் சமவெளி நாகரிகம் நிலைநாட்டுகின்றது. இந்நாகரிகம் கங்கைக் கரை (சராயு நதிதீரத்தில்) அயோத்தி, அஸ்தினாபுரம், இந்திரபிரஸ்தம், மேற்குக் கடற்கரை (குஜராத் மாநிலத்தின் மேற்கு பகுதியிலுள்ள) துவாரகையிலும், தமிழக, கிழக்குக் கரையிலுள்ள காவிரிப் பூம்பட்டினத்திலும், பாண்டியன் தலைநகர் கபாடபுரத்திலும் சிறப்புற்றிருந்தது. கிமு 5500ல் ராமாயண காலத்திலும், கிமு 3500 மகாபாரத காலத்திலும், இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் முழுமையும் ஒரே நாடாக இருந்துள்ளதும் காணக்கிடைக்கின்றது.

கங்கைச் சமவெளி நாகரிகத்தைச் சிந்துநதி தீர நாகரிகத்திற்கு முன்னர் வைத்தால் உலகம் பிறந்து 6000 வருட காலம் மட்டுமே ஆகியுள்ளது எனும் பைபிள் கோட்பாடு தகர்ந்து விடும். எனவே காலினியாதிக்க மதகுருமார்கள் தாங்கள் எழுதிய இந்திய வரலாறுகளில் கங்கை நதிதீர நாகரிகமும் அதனில் நடைபெற்ற ராமாயண, மகாபாரத நிகழ்சிகளும் கற்பனை எனத் தள்ளி வைத்தனர். இந்நிகழ்ச்சிகள் கற்பனை என்பதற்கு அவர்கள் கூறும் காரணமும் அதற்கான இப்போதைய பதில்களையும் காணலாம்.

	கிறித்துவ - அன்னிய வரலாற்று ஆசிரியர்கள் கூற்று	அதற்கான பதில்
1.	வேதகால மற்றும் புராணகால இந்தியர்களுக்கு இரும்பு மற்றும் அதன் உபயோகம் பற்றித் தெரியாது (இரும்பு கிமு 1800ல்	1. வேதங்களில் கூறப்படும் ஆயே (Aye) எனும் உலோகம் இரும்பினைக் குறிப்பிடுவதே. (இரும்பினைக் கண்டுபிடிப்பதற்கு

	தான் கண்டுபிடிக்கப்பட்டது). எனவே புராணங்களில் காணப்படும் தேர் அச்சுகள், தேர் சக்கரங்கள், அம்புகள் ஆகியவை கி.மு.1800க்கு முன்பு இருந்திருக்க வாய்ப்பில்லை. எனவே ராமாயண மகாபாரத நிகழ்ச்சிகள் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அல்ல.	1000 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்தியர்கள் கற்களை உளி கொண்டு வெட்டிப் பிரமிடுகளை எவ்வாறு கட்டினர்?) 2. துருக்கி நாட்டிலுள்ள Gobekli Tepe எனுமிடத்திதிலுள்ள கற்சிலைகளும் (கிமு 9000), NeNali cori எனுமிடத்திலுள்ள கற்கோவிலும் (கிமு 8400), Derinkuyu எனுமிடத்திலுள்ள பதினெட்டுமாடி கல்மண்டபமும் (ஒரு லட்சம் மக்கள் அமரக் கூடியது) - கிமு 8000, Catal Huyuk[8] எனுமிடத்திலுள்ள மிகப்பெரும் பெண் தெய்வ சிலையும் (கிமு 6000), இரும்பு கண்டுபிடிப்பதற்கு முன் எவ்வாறு செதுக்கிச் செய்யப்பட்டதோ, அது போன்றதே இராமாயண, மகாபாரத காலத் தேர்களும், அம்புகளும் செய்யப்பட்டன என்று நிறுவப்படுகின்றது.
2.	வேதங்களில் மீன்களை பற்றி அதிகம் சொல்லப்படவில்லை. ஆனால் சிந்து வெளியில் காணப்படும் உருவ படங்களில் மீன் சின்னங்கள் அதிகமாக காணப்படுகின்றது.	1. திருக்குறளில் இரும்பு பற்றி கூறப்படவில்லை என்பதால் வள்ளுவர் காலத்தில் தமிழ்நாட்டில் இரும்பே இல்லை என்பதா? 2. பரிசுத்த வேதாகமத்தில் யோவான் சுவிசேஷத்தில் அன்னை மேரியின் பெயரே குறிப்பிடப்படவில்லை என்பதால், அன்னை மேரி ஓர் கற்பனை பாத்திரம் என்று கூறலாமா?
3.	சிந்துசமவெளி நாகரிக காலத்தில் அங்கு வாழ்ந்த மக்களுக்கு குதிரையைப் பற்றி தெரியாது. எனவே அதற்கு முந்தைய வேதபுராண காலத்தில் குதிரை பூட்டிய தேர்கள் இருந்ததாக கூறப்படுவதும் அஸ்வமேதயாகம் செய்யப்பட்டதாக கூறப்படுவதும் பிற்காலத்தில் எழுந்த கற்பனையே.	1. தற்போதைய சிந்துவெளி அகழ்வுகளில் குதிரையின் எலும்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது (ஆனால் அன்னிய வரலாற்றாசிரியர்கள் அதனை குதிரை எலும்பு அல்ல என்றும், கோவேறு கழுதையின் எலும்பு என்றும் பிடிவாதம் செய்கின்றனர்).

		2. கிமு 2000க்கு முன்னரே அஸ்வமேதயாகம் செய்தமை மேற்கு சைபீரியாவின் அன்டரோனா நகரிலும் (Andronona), ரோமாபுரியிலும், ஐரோப்பாவின் அயர்லாந்து நாட்டிலும் காணப்பட்டுள்ளமை, வேதகால - கங்கைவெளி நாகரிகத்தின் மேற்கு நோக்கிய விரிவாக்கம் எனலாம். மேற்கு சைபீரியா மொழியும் சமஸ்கிருதம் கலந்த (பார்க்கவும் Wikipedia - Vedic period) மொழியே.
4.	சிந்துவெளியில் சிவலிங்க வழிபாடு இருந்துள்ளது. சிவலிங்கங்கள் நிறையக் கிடைத்துள்ளன.	கிடைத்தவை சிவலிங்கங்கள் அல்ல. அவை எடைக் கற்களே. சிந்துவெளி மக்களுக்கு உருவ வழிபாடு கிடையாது.
5.	ஆரியர்கள் நகர வாழ்க்கை தெரியாதவர்கள்.	கங்கைச் சமவெளியில் நகரங்கள் பல இருந்தன.
6.	ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து (துர்க்மெனிஸ்தான், கசாக்கிஸ்தான்) இந்தியா வந்து குடியேறிய வந்தேறிகள்.	‘ஆர்ய’ என்றால் பெருமை மிக்க மனிதன் எனப் பொருள். அது ஓர் இனப்பெயர் அன்று.
		வானரனாகிய சுக்ரீவன், தாசியின் மகனான விதுரன் ஆகியோர் ஆரிய எனவும், துரோணரை வஞ்சித்துக் கொன்ற பாண்டவர்கள் ‘ஆரியர் அல்லாதவர்’ என்றும் (அனாரியர்) மகாபாரதம் கூறுகின்றது. சாதியில் தாழ்ந்தவனும் பகவான் பெயரைத் தொடர்ந்து உச்சரிப்பதன் மூலம் ஆரியன் ஆகலாம் (பாகவத புராணம் 3:33-7).

இவற்றிலிருந்து இராமாயணம், மகாபாரதம் ஆகியவை கற்பனைக் கதைகள் அல்ல என்பதும்; வேதங்களுக்கும் புராணங்களுக்கும், சிந்து நாகரிகத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளமையும் காணப்படுகின்றன. ஆரிய இன பேதமும் உண்மைக்குப் புறம்பானவை என நிரூபிக்கப்படுகின்றது.

சிந்துவெளி நாகரிகத்தைப் போல் அழிந்துபட்ட நாகரிகம் துவாரகையில் காணப்படுகின்றது. கங்கைவெளி நாகரிகத்தை

வெளிச்சத்திற்குக் கொண்டுவர அகழ்வுகள் மேற்கொள்ள முடியாததை முன்பே பார்த்தோம். எனினும் கங்கைவெளியின் மகாபாரத காலத்திற்கு வலுவூட்டும் துவாரகையில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நகரம் மகாபாரதத்திலும், ஸ்கந்த புராணத்திலும், விஷ்ணு புராணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நகர் குஜராத் மாநில மேற்குக் கோடியில் பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் உள்ளது. புராதன துவாரகையை (பெட் துவாரகை) மகாபாரத முடிவில் கிமு 2500 வாக்கில் கடல் கொண்டபின் பல்லவ அரசர்களால் (கிபி 600ல்) அதன் நினைவாகக் கடற்கரை அருகில் கட்டப்பட்டுள்ளதே இன்றைய துவாரகை. துவாரகை, மெலுக்கா (Malukha) எனும் (சிந்து சமவெளி) நாட்டின் துறைமுகமாக அன்று விளங்கியது. மகாபாரத காலத்தில் யாதவ குல அரசர்களால் இந்நகர் நிர்மாணிக்கப்பட்டது. மகத நாட்டு அரசன் 'ஜராசந்தா'விற்குப் பயந்து ஓடிவந்த யாதவ அரசர்கள் இதனை நிர்மாணித்தனர். எனினும் பாண்டவர்களின் - பீமனால் இவ்வரசன் (ஜராசந்தா) ராஜகிரியில் (பீகாரில் உள்ளது) வதம் செய்யப்பட்டான் என்பது புராண வரலாறு. துவாரகையின் அரசர்களாக விளங்கியவர்களில் சத்யகி, கிரிட்டவர்மா, கிருஷ்ணர், பலராமன், உத்தவன், அக்ரூரர் ஆகியோர் முதன்மையானவர்கள். துரோணாச்சாரியர் வாழ்ந்த ஊரும் இந்நகரே. இந்நகர் தொன்மைக் காலத்தில் மாட மாளிகைகளுடனும், ஆழமான அகழிகளுடனும், குளங்களுடனும் பூந்தோட்டங்களுடனும் விளங்கியது.

மகாபாரத யுத்தம் முடிவுற்று 36 வருடம் சென்றபின் துவரகை கடலால் கொள்ளப்பட்டது. அழிந்துபட்ட இந்நகரில் 1981 முதல் கடலுக்கடியில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்போது கடலுக்கடியில் துறைமுகமும், பல மாளிகைகளின் எச்சங்களும் காணப்பட்டன. அங்கு, கப்பலின் நங்கூர கற்களும், வெள்ளை சங்குகள் மேல் பதிக்கப்பட்டிருந்த (engraved) மூன்று தலைகொண்ட மிருகத்தின் சித்திரங்களும், செம்பு உலோகத்தால் ஆன மீன் கொக்கிகளும் காணப்பட்டன. இவ்வாறு கடலுக்கடியில் சேகரிக்கப்பட்ட பொருள்கள், பெரும் பொருட்காட்சியாகத் தற்கால துவாரகையில் வைக்கப்பட்டுள்ளன.

துவாரகையில் இன்றுள்ள கோவிலை இந்தியா - பாகிஸ்தான் யுத்தத்தின்போது 7.9.65ல் பாகிஸ்தான்

கடற்படையினர் தாக்கி, 20 நிமிடம் குண்டுமாரி பொழிந்தனர். எனினும் அக்குண்டுகளில் ஒரு சிலவற்றைத் தவிர மற்றவைகள் வெடிக்காததால் புதிய துவாரகை மீண்டும் ஒரு பேரழிவிலிருந்து தப்பியது என்பது ஈண்டு குறிப்பிடப்படுகின்றது.

வேதகால - கங்கை சமவெளி நாகரிகம் இருந்தமையையும், அக்காலத்தில் இந்தியா முழுமையும் நாகரிக செழிப்புடன் இருந்ததையும், வேதங்களும், புராணங்களும் குறிப்பிடுவதைப் பார்க்கலாம்.

	குறிப்புகள்	ஆதாரங்கள்
1.	சவிதாவின் தேர் (பாண்டிய நாட்டு) முத்துக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.	ரிக் வேதம் I :33.4
2.	குதிரைகளும் அரசனின் தேரும் முத்துக்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தன.	ரிக் X: 68.11 மற்றும் 1264, அதர்வணவேதம் IV- 10.6
3.	காவிரிபூம்பட்டினமும், திருவெண்காடும் சொல்லப் பட்டிருப்பது.	வால்மீகிராமாயணம் - ஆரண்ய காண்டம் சருக்கம் - 30; மற்றும் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டம் சருக்கம் 41
4.	சோழநாடு, பாண்டியநாடு காவிரி ஆறு, தாமிரபரணி, கபாடபுரம், பாண்டிய நாட்டு முத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன.	வால்மீகி ராமாயணம், கிஷ்கிந்தா காண்டம் சருக்கம் 41
5.	சீதையைத் தேடுவதற்கு 'மேற்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள முசிறி பட்டிணம், ஜதிபுரம், அவந்திபுரம் குறிப்பிடப்பட்டுள்ளன.	கிஷ்கிந்தா காண்டம், 42வது சருக்கம்
6.	மகாபாரத யுத்தத்தின் போது பாண்டிய அரசன், அஸ்வத்தாமாவினால் கொல்லப்பட்ட விவரம்.	வியாச பாரதம், கர்ண பர்வம், அத்தியாயம் 44, 56,57.
7.	மணலூர்புரம் (மதுரை) அரசன் மகள் சித்திராங்கியை அர்ஜுனன் மணந்தது, அத்துடன் அவன் மூன்று மாதகாலம் பாண்டிய நாட்டில் வாழ்ந்தது.	வியாச பாரதம், கர்ணபர்வம் அத்தியாயம் 63 மற்றும் அத்தியாயம் 235
8.	துரோபதி சுயம்வரத்தில் பாண்டிய அரசன் கலந்து கொண்டது.	வியாசபாரதம், சுயம்வர பர்வம், அத்தியாயம் 202
9.	பாபநாசத்திலுள்ள அகஸ்தியர் தீர்த்தத்தில் அர்ஜுனன் நீராடியது.	வியாசபாரதம், வனவாச பர்வம், அத்தியாயம் 236

இதுபோன்ற பல குறிப்புகள் வேதங்களிலும் - இதிகாசங்களிலும் கூறப்பட்டுள்ளமை, இன்றைக்குக்கூட யதார்த்தத்திற்குப் பொருந்துவதாக அமைந்துள்ளது. எனவே வேதங்களும், புராணங்களும் தோன்றிய காலத்தில்:

1. இந்தியா முழுமையும் நாகரிகம் நிறைந்து இருந்தமையும்,

2. சிந்து சமவெளி நாகரிக காலத்திற்கு முன்னரே தென்னாடு சிறந்து விளங்கியதையும்,

3. மகாபாரத காலத்தில் துவாரகை இருந்தமையிலிருந்தும், ராமாயண மகாபாரத நிகழ்ச்சிகள் யதார்த்தமாக தமிழகத்துடன் ஒன்றியிருப்பதிலிருந்தும், மகாபாரத நிகழ்வுகளும், அதற்கு முந்தைய ராமாயண நிகழ்வுகளும், கங்கைச் சமவெளியில் உண்மையில் நடந்தவை என அறிந்து கொள்ளலாம்.

எனினும் புராண காலத்திற்குப் பிந்தைய சிந்துவெளி நாகரிகத்தின்போது இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் நாகரிகம் நிலவியது எத்தகையது என்பதை இனி காணலாம்.

6:5. இந்தியர்களின் முதல் புலப்பெயர்ச்சி

கிமு 2500 ஆண்டுவாக்கில் குருக்ஷேத்திரத்தில் நடைபெற்ற மகாபாரதப் போரில் நாகரிகமடைந்த உலகப் பகுதிகள் அனைத்திலும் இருந்த அரசர்கள் மாண்டுபட்டனர். (பூமியின் பாரம் குறைக்கப்பட்டது). நகரங்கள் சிதைந்தன. வன்மம் மேலோங்கி நின்றது. அறிஞர்களும், மக்களும் கங்கைச் சமவெளி மற்றும் குருக்ஷேத்திரத்திலிருந்தும் நாலாபுரமும் சிதறி ஓடினர். பலர் கைபர் - போலன் கணவாய் வழியாக மத்திய ஆசியா, மேற்கு ஆசியா, ஐரோப்பா, மற்றும் திபெத், சைனா நாடுகளுக்கும் சென்றனர்.[9] மற்றொரு பகுதியினர் சிந்துவெளிப் பகுதியில் குடியேறினர். சிந்துவெளிப் பகுதியில் குடியேறிய மக்கள் கங்கைச் சமவெளி நகர நாகரிகத்தையும் வேதங்களையும் பின்பற்றினர், ஆனால் தங்கள் புலம் பெயர்ந்தமைக்குக் காரணமான அரச பதவியை வெறுத்தனர். அதன் விளைவாகத் தோன்றியதே மொகன்-ஜ-தாரோ,

ஹரப்பா ஆகிய அரசன் அற்ற சிந்துவெளி நாகரிகம். (இது போன்று அரசனற்ற நாடு கி.மு.538ல் பாலஸ்தினத்தில் பரந்திருந்தது. அடிமையாயிருந்த யூதர்களை விடுதலை செய்வதற்கும், யூத அரசர்களால் தனது பெர்சிய - கிரேக்க நாட்டிற்கு வருங்காலத்தில் ஆபத்து வராமலிருக்கவும், யூதர்கள் இனி அரசனில்லாத நாட்டில் தான் வசிக்கவேண்டும் என அவர்களுக்கும், பெர்சிய அரசன் சைரஸ் ஆகியோருக்கு மிடையே செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் வகை செய்யப் பட்டிருந்தது என்பது சுட்டிக்காட்டப்படுகிறது). போரின் விளைவாகப் பல நாட்டிற்கும் ஓடியவர்களே, ஹிட்டிஸ், சுமேரியர்கள், ரோமானியர்கள், ஜெர்மனியர்கள் ஆகியோர். ஹிட்லர் தம்மை ஒரு சுத்த ஆரியர் என்று அறிவித்ததுடன் சிந்துவெளி நாகரிக சமய சின்னமான சுவஸ்திக் சின்னத்தைத் தனது போர்ச் சின்னமாக உபயோகித்ததும் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றது.[10] வீரமாமுனிவர் எனும் ரோமானிய பாதிரியார் தன்னை ரோமானிய பிராமணர் என்று அழைத்ததையும், 1849ம் ஆண்டு அமெரிக்காவில் குடியேறிய அயர்லாந்து மக்கள் தங்களை அயர்லாந்து பிராமணர்கள் எனக் கூறிக் கொண்டதும் ஈண்டு குறிப்பிடப்படுகின்றன.[11]

மகாபாரத யுத்தம் காரணமாகப் புலம் பெயர்ந்தவர்களில் பிராமணர்கள் உட்பட இந்தியாவின் அனைத்துச் சமுதாய மக்களும், தமிழ் பேசும் மக்களும் இருந்தனர்.

1. அஸ்வத்தாமா வழிவந்தவர்கள் Dutta எனும் அரேபியர்கள்.

2. காலனல் அல்காட் (Colonel Alcott) என்பவரும் Dr. Brugshbe என்பவரும் எகிப்தியர்கள் இந்திய இந்துக்களே என்றும், நைல் நதி - நீலம் எனும் தமிழ்வார்த்தையின் திரிபுவே என்றும் கூறியுள்ளார். இந்த இந்து மக்களே சுமேரியாவிற்கும் எகிப்துக்கும் நாகரிகத்தை வழங்கியவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

3. பாலஸ்தீனத்தில் அன்று பேசிய மொழி தமிழ் மொழியே. யேசு பேசிய மொழி(?) அரமிக் (Aramic). அரவம் எனும் தமிழ்ச் சொல்லிலிருந்து பிறந்ததே அரமி. தமிழர்கள் இந்தியாவின் பல பகுதிகளில் இன்றுகூட அரவம் என்றே அழைக்கப்படுகின்றனர். யேசு சிலுவையில் உயிர்விட்ட

போது 'ஏலி ஏலி லாமாசபக்தானி' (மத்தேயு 27:46) என அலறினார். அதன் பொருள் என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டார் என்பதாம். ஆனால் உண்மையில் அவ்வாக்கியம் 'ஏலே, ஏலே லாமா சபிக் தா நீ' எனும் தமிழ்வாக்கியம் 'ஏண்டா, ஏண்டா என்னை சபிக்கலாமா நீ' என்பதே அதன் பொருள்.

4. யேசு பேசிய அரமிக்மொழியில், தகப்பன் "Abba" - அப்பா என்றே அழைக்கப்படுகின்றார்.

5. பைபிளில் கூறப்படும் லெவியர்கள், பிராமண பூஜாரிகளே. (பார்க்கவும் Jews Indian origin, By Godfrey Higgins-1772-1833, University Books, NY 1965).

6. அபிசினிய நாட்டு மொழி, தமிழும் சமஸ்கிருதமும் கலந்த கூட்டு மொழியே. அந்நாட்டின் நகரங்கள், மலைகள், ஆறுகள் ஆகியவற்றின் பெயர்கள் தமிழ் / சமஸ்கிருத பெயர்களே - Vide article by Bishop. Frumenteus & Mr. Ferguson as quoted by G.D. Savarkar.

7. கிரேக்க நாட்டை ஆண்ட அரசர்களுக்குப் பாண்டியன் I, பாண்டியன் II (Pandian) என்ற பெயர் இருந்தது. இப்பெயர்களை ஷேக்ஸ்பியரும் தன் கவிதைகளில் குறிப்பிட்டுள்ளார்.

8. A.C. Blacklondon எழுதியுள்ள The Holy Land எனும் புத்தகத்தில் இதுபோன்ற பல ஒற்றுமைகள் கூறப்பட்டுள்ளன. இவற்றைச் சர்வார்க்கர் G.D. என்பவர் எழுதியுள்ள "Jesus the Christ was a Hindu" எனும் புத்தகத்தில் காணலாம்.

இவ்வாறாக மகாபாரத யுத்தம் முடிவில் அதன் கொடுமைகளைக் கண்ட மக்களும், துவாரகை அழிந்தபின் அதன் மக்களும் உலகின் நாலாபக்கங்களிலும் சிதறி ஓடி ஆங்காங்கே குடியேறினர். இதனை முதலாவது புலம் பெயர்தல் Exodus I என நாம் குறிப்பிடலாம்.[12]

பார்க்கவும் :

1. Shrikant Talageri "Aryan Invasian theory", Voice of India, (2003), New Delhi.

2. Jean Markale, The Druids-Cetlic Priests of Nature; Inner Traditions International, (1999), Rochesta, USA

3. Winn.M.M, Heaven Heroes and Happiness - The Indo European Roots of Western Indology, University Press of America - Lanham, Newyork (1995).

6:6. சிந்து சமவெளி நாகரிகம் அழிந்தமையும் இந்தியர்களின் இரண்டாவது புலப்பெயர்ச்சியும்

மகாபாரத யுத்தம் மற்றும் துவாரகை அழிந்தபின் அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் சிலர் (அவர்கள் பேசிய மொழி தமிழும், சமஸ்கிருதமும்) சிந்து சமவெளிகளில் குடியேறினார்கள் என்பதை ஏற்கெனவே கண்டோம். அவர்கள் மொகன்ஜதாரோ, ஹரப்பாவில் 2000 வருடகாலம் வரை வாழ்ந்தனர். அந்நாகரிகம் கிமு. 1900ம் ஆண்டு வாக்கில் அழிந்துபட்டது. அழிவுபட்டதற்கான காரணங்கள் வெவ்வேறு வரலாற்று ஆசிரியர்களால் வெவ்வேறு விதமாகக் கூறப்படுகின்றன. அவைகளைக் காணலாம்:

1. மத்திய ஆசியாவிலிருந்து புலம் பெயர்ந்துவந்த ஆரியர்களால் அழிக்கப்பட்டது. பிரபலமாயிருந்த இக்கோட்பாடு தற்காலத்தில் நிராகரிக்கப்பட்டு விட்டது.

2. சிந்துவெளி நாகரிக இடங்கள் பெரும்பாலும் கக்கர் ஆற்றுப் பகுதியிலே (சரஸ்வதி ஆறு) இருந்தன. காலக்கிரமத்தில் இவ்ஆற்றின் நீர்வரத்துக் குறைந்தமையால் இந்நாகரிகம் அழிந்தது. (மொகன்ஜதாரோ சிந்துநதி அருகில் உள்ளது. அவ்ஆறு இன்றும் பெரும் நதியாகவே உள்ளது. எனவே அங்கிருந்த ஊர்களும் அழிந்ததற்கு 'நீர் வரத்துக் குறைந்தது' எனும் கொள்கை ஏற்புடையதாய் இல்லை).

3. நிலநடுக்கம்.

4. காலநிலைமாற்றம். இப்பகுதி மழைக்குறைவினால் காலப்போக்கில் பாலைவனமாகிவிட்டது.

பன்னிரெண்டு லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பில் வியாபித்திருந்த நாகரிகம் விரைந்து அழிய வேண்டுமெனில் வலுவான காரணங்கள் தேவை. இவ்வளவு பெரிய பகுதியில்

பரந்து விரிந்துகிடந்த ஒரு பெரிய சமுதாயத்தை ஆடுமேய்த்து இந்தியாவிற்குள் நுழைந்த கூட்டம் அழிந்திருக்க வாய்ப்பில்லை. இதற்கான காரணத்தை ஆய்விடுவதற்குமுன்பு, இதுபோன்ற ஆற்றுவெளி நாகரிகங்கள் சமீபகாலம்வரை எவ்வாறு திகழ்ந்தன எனக் கூர்ந்து நோக்கல் அவசியம்.

தாமிரபரணி நதிக்கரை மக்களையும், அதன் கால்வாய்க் கரைகளின் மக்களையும் இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புவரை காலரா எனும் கொள்ளை நோய் பீடித்துக் கொன்றது. நீரினால் பரவும் இந்நோய் ஆற்றுஓர கிராமங்களில், அதன் மக்கள் தொகையில் பத்துச் சதவீதத்திற்கும் மேல் ஆண்டுதோறும் கொன்று தீர்த்தது. இந்நோய்க்கு அன்று மருந்து கிடையாது. நோயுற்றவர்கள் 24 மணிநேரத்திற்குள் இறந்து படுவார்கள். வழக்கமாக இத்தொற்றுநோய் மார்கழி மாதத்தில் வருடந்தோறும் ஊர்களைத் தாக்கி அழித்தது. திடீர் எனத் தோன்றிய இவ்வியாதி 20-30 நாள் வரையே ஒரு ஊரில் நிலைத்திருக்கும். அதன்பின் இந்நோயின் தாக்கம் திடீர் என நின்றுவிடும். இந்நோய் காரணமாகப் பல ஊர்களில் மக்கள், வீட்டைக் காலி செய்துவிட்டு ஆறுகள், வாய்கால்கள் இல்லாத ஊர்களுக்குச் செல்லுவது வழக்கம். இன்றைக்கு 150-200 வருடங்களுக்கு முன்பு தூத்துக்குடி மாவட்டம் அகரம் கிராமத்தில் வசித்த வேளாளர்கள் இந்நோய் காரணமாக ஊரைக் காலிசெய்து வெளிஊர்களுக்குப் புலம் பெயர்ந்ததை உதாரணமாகக் கொள்ளலாம். இதன் காரணமாகவே ஒருவரிடம் உனக்கு எத்தனை குழந்தைகள் உள்ளன என்று கேட்டால் ‘மார்கழி முடியட்டும் சொல்கிறேன்’ என்று பதில் கூறும் பழக்கம் இன்றைக்கு 50 வருடங்களுக்கு முன்புவரை பழக்கத்திலிருந்தது. இதுபோலவே ஐரோப்பாவிலும் பிளேக் நோயால் பல நகரங்கள் அழிந்துள்ளன.

ஆனால் தாமிரபரணி தீரத்தில் இந்நோய் பிராமணர்களைத் தாக்குவதில்லை. அதனால் ‘காலரா பிராமணக் குடிக்குப் போகாது’ என்ற பழமொழி தூத்துக்குடி பகுதியில் சமீபகாலம் வரை பழக்கத்திலிருந்தது. காலராவில் இறந்த பிராமணர்களை ஈண்டுக் கண்டதும் இல்லை கேட்டதுமில்லை. பிராமணர்கள் ஹோமம் செய்வதால் இந்நோய் தாக்காமல் இருந்திருக்கக் கூடும் அல்லது பிராமணர்களுக்கு இயற்கையாகவே

இந்நோய்க்கு எதிர்ப்புச் சக்தி இருந்திருக்கக் கூடும். (உணவுப் பழக்கங்களும் ஒரு காரணம்).

பலவருடமாக நீடித்த இந்நோயினால் சிந்துசமவெளி மக்கள் பெரிதும் துன்பத்திற்கு உள்ளாகியிருப்பார்கள். இந்நோயினைத் தடுத்திடுவதற்காக ஹரப்பா, மொகன்ஜதாரோ நகரின் பொது இடங்களில் ஹோம குண்டங்களை அமைத்து அங்கு வாழ்ந்த மக்கள் வழிபாடு செய்துள்ளதை அங்குள்ள நாகரிக எச்சங்களில் காணலாம். எனினும் நோய் தாக்கம் குறையாததால் இச்சமவெளி மக்கள் நாலாதிசையிலும் ஓடியுள்ளனர். அதனில் பலர் ஆறுகள் இல்லாத மலைகளுக்கும் (அவர்களே இன்று வடகிழக்கு மாநிலங்களில் காணப்படும் முண்டா இனத்தவர்) காடுகளுக்கும், மலை உச்சிகளுக்கும், ஆறுகள் இல்லாத தீவுகளுக்கும் ஓடினர். ஆற்றுப்பகுதி என்றாலே அவர்களுக்குப் பயம் கொண்டு விட்டது.[13] பலர் பீகார் மலைப்பகுதிகளுக்கும், சிலர் அரேபியாவிற்கும், இன்னும் சிலர் கடல் கடந்து போர்னியோ காடுகளுக்கும், இன்னும் சிலர் பசிபிக் பெருங்கடலின் தீவுகளுக்கும், மெக்ஸிகோ மற்றும் தென் அமெரிக்கா மலைப் பகுதிகளுக்கும், வணிகத்திற்கு உபயோகப்படுத்திய தங்களின் கப்பல்கள் மூலம் சென்றடைந்தனர்.[14] அவர்களே பின்னர் மாயன், அஸ்டெக், இன்காஸ் நாகரிகங்களை உண்டாக்கிய மக்களாயினர்.[15] இந்நாகரிகங்கள் இந்து நாகரிகமே என்பதை முன்பே பார்த்தோம். இவ்வாறு இந்துசமவெளி மக்கள் குடியேறிய தீவுகளில் ஒன்று பசிபிக் பெருங்கடலில் தென்அமெரிக்காவின் சிலி நாட்டைச் சார்ந்த ரெங்கோ - ரெங்கோ என அழைக்கப்படும் ‘ஈஸ்டர் தீவுகள்’ (ஐரோப்பியர்கள் ஓர் ஈஸ்டர் பண்டிகை நாளில் இத்தீவைக் கண்டுபிடித்து காலடி வைத்ததனால் அதற்கு இப்பெயர் சூட்டப்பட்டது).[16] இத்தீவு பூகோள உருண்டையில் சிந்து பிரதேசத்திற்கு மறுமுனையில் 15000 மைல் தொலைவில் பசிபிக் கடலில் உள்ளது. இத்தீவிற்கு சிந்து சமவெளி மக்கள் குடும்பத்தோடு செல்ல வேண்டுமெனில் பல மாதங்கள் பயணித்திருக்க வேண்டும். அதற்கு உணவு தண்ணீர் ஆகியவற்றிற்கு என்ன செய்தனர் என்பது பெரும் அவிழ்க்க முடியாத முடிச்சாகவே உள்ளது. இத்தீவில் வாழும் மக்கள் சிந்துவெளியிலிருந்து குடியேறியவர்கள் என்பதை எவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதை அடுத்துக் காணலாம்.

1. இத்தீவில் காணப்படும் சித்திர எழுத்துக்கள் சிந்து சமவெளி நாகரிக எழுத்துக்கள் போல் உள்ளன.

2. வர்ண பிரிவுகள் இங்கும் இருந்தன.

3. இம்மக்கள் இந்து கலாச்சாரத்தை (இன்கா மக்களின்) அய்யர் என்று அழைக்கப்படும் கலாச்சாரத்தைப் பின்பற்றினர்.

4. குடியேற்ற காலம் கிமு 1500 - 1200.

இத்தீவிற்கு ஐரோப்பியர்கள் வருகை தந்தபோது காணப்பட்ட காட்சிகள் கீழ்க்கண்டவாறு வர்ணனை செய்யப்பட்டுள்ளன (Eugene Eyrand, 1860)

1. கடற்கரையிலும், தீவின் மலைஉச்சியிலும் நூற்றுக் கணக்கான கற்சிலைகள் காணப்பட்டன. அவைகளில் ஒரு சிலவற்றைத் தவிர மற்றவை தீவின் உள்பகுதியை நோக்கி இருந்தன. இச்சிலைகள் ஒவ்வொன்றும் 10மீட்டர் வரை உயரமும் எண்பத்தி இரண்டு டன் வரை எடையுள்ளவையு மாக இருந்தன.[17] இவைகள் மாவோய் (Moai) என அழைக்கப் பட்டது. சிலைகள், பெருத்த தலையும், நீண்ட நெடிய காதுகளும், நீண்ட வளைந்த மூக்கும், தடித்த புருவங்களும், சுருங்கிய தோலும் (சில சிலைகளில் கைகள் வயிற்றில் வைத்தபடியும்) உள்ளதாக வடிக்கப்பட்டுள்ளது. இச்சிலைகள் குஷ்டரோகிகளின் சிலை என ஐரோப்பியர்களால் வரலாற்றில் எழுதப்பட்டுள்ளன.

2. ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் ஹரப்பா எழுத்துக்கள் எழுதிய பலகைகள் இருந்தன. ஒரு வீட்டுப் பலகைக்கும் அடுத்த வீட்டுப் பலகைக்கும் மிக நுணுக்கமான வேறுபாடே இருந்தன. அவ்வெழுத்துக்களை அங்கு வாழ்ந்த மக்களில் ஒருவர் ‘டச்’ நாட்டுப் பாதிரியர்களுக்கு வாசித்துக் காண்பித்தார். ஆனால் வாசித்தவரால் அதற்குப் பொருள்கூற முடியவில்லை.

3. அங்கிருந்த மக்களில் மூன்று வகை நிறத்தினர் இருந்தனர். - கருப்பு, சிவப்பு, புதுநிறம் (Wheatish). ஐரோப்பியர் வருகையின் போது ராஜவம்சத்தினரும், ஐயர்களும் இருந்தனர். ஆனால் குடியேறிகளின் அட்டகாசத்தினால் இவ்விரண்டு வம்சத்தினரும் பின்னர் இறந்துபட்டனர்.

4. அங்கிருந்த புராதன மக்கள், இந்தத் தீவின் தொன்மை பெயர் “Te pito ote kainga a hau maha” ‘ஹவா மகாவின் சிறிய தீவு’ என்று கூறினர்.


I
II
III
IV
V
VI
VII
VIII

சிந்து சமவெளி மற்றும் ஈஸ்டர் தீவின் சித்திர எழுத்துக்களில் உருவ ஒற்றுமை – நான்கு ஜோடிகள் காண்பிக்கப்பட்டுள்ளன

ஈஸ்டர் தீவுகளுக்கும், அதன் மூலதாரமான இந்தியாவிற்கும் இடையிலான தொடர்பு பல வரலாற்று அறிஞர்களால் ஆய்விடப்பட்டு நூல்வடிவில் வெளியிடப் பட்டுள்ளன.

1. America once ruled by India - by Gene D Matlok.

2. India and Amerindians - by Dr. Chakravarti.

3. Ayar, Incas - By Miles Poindexter, Published by Horace Lineright, New york 1930, (இப்புத்தகத்தின் பக்கம் 260ல் ஹரப்பா எழுத்துக்களுக்கும் இத்தீவின் எழுத்துக்களுக்கும் உள்ள ஒற்றுமைகள் விளக்கப்பட்டுள்ள). மேலும் இது சம்பந்தமான விபரங்கள் அறிய "B.G. Sidharth BM. Birla Science Center, Hyderbad எழுதியுள்ள "The Astronomical Link Between India and Mayans" (en.wikipedia) கட்டுரை பார்வையிடவும்.

இத்தீவின் கலாச்சார எச்சங்களிலிருந்து கீழ்க்கண்டவற்றை நாம் அறியலாம்.

1. ஹரப்பா நாகரிகம் அழிந்த பின் மக்கள் நாலாபுறமும் புலம் பெயர்ந்தனர். சிலர் மடகாஸ்கர் தீவிற்கும் (மடகாஸ்கரின், ஊர்கள், நகரங்களுக்கு ராமாயண பெயர்கள் உள்ளன) சிலர் போர்னியோ, நியூகினியாவிற்கும், மற்றும் பலர் தென் அமெரிக்கா, மெக்ஸிகோ பகுதிக்கும் சென்றுள்ளனர்.[18]

2. மாவோய் சிலைகள் ஐரோப்பிய வரலாற்றாசிரியர் கூறுவது போன்று குஷ்டரோகிகள் சிலையல்ல. அவை காலரா நோய் பாதித்த மக்களின் உருவகங்கள் (நோய்களிலிருந்து விடுதலை பெற இவ்வாறு சுட்ட மண் / கற்சிலை அய்யனார் கோவிலில் வைக்கும் பழக்கம் தென் தமிழகத்தில் இன்றும் உள்ளது). பெருத்த தலையும், சுருங்கிய தோலும், வயிற்றைத் தொட்டுள்ள கைகளும் இந்நோயைக் குறிப்பிடுகின்றன (A study done by Appalachian State Uninversity USA, on Skeletal remains found in IV civilisation sites, had proved that diseases also played a part in collapse of IV civilisation)

3. சிந்துவெளி மக்கள் பெரும்பாலோர் நீண்ட, வளைந்து மூக்கு உள்ளவர்கள் (கிறித்துவ சமயத்தை சார்ந்த வரலாற்று ஆசிரியர்கள் கூறுவது போல் சப்பை மூக்கினர் அல்லர்).

அவர்களின் பலர் நிறம் கறுப்பாக இருந்துள்ளது. சிலர் நீக்ரோ உடல் அமைப்புக் கொண்டவர்களாயும் இருந்துள்ளனர்.[19]

4. தொற்றுநோயான காலராவிற்கு அஞ்சிப் புலம் பெயர்ந்தவர்களில் அனைத்து இந்து சமுதாயத்தினரும் இருந்துள்ளனர்.

5. [20]ஹரப்பா நாகரிகம் அனைத்து இன மக்களின் கலப்பு நாகரிகம். இதுபோன்ற கலப்பு மக்களின் நாகரிகம் திருநெல்வேலி அருகிலுள்ள ஆதிச்சநல்லூரில் இருந்தமையை ஆராய்ச்சியாளர் - பத்மநாதன் ராகவன் (அவருடைய பெயரில் உள்ள இணைய தளத்தைப் பார்க்கவும்), 2004-05ல் ஒரு கட்டுரையில் வெளியிட்டுள்ளார். அவர் ஆய்ந்த 100க்கும் மேற்பட்ட மண்டை ஓடுகளின் முடிவுகள் கீழ்க்கண்டவாறு உள்ளன.

'இக்கபால ஓடுகள் 10000 வருடத்திற்கும் மேற்பட்டவை. அவற்றின் பல்வேறு குணாதிசயங்களை அளவிட்டபின் அவற்றில் ஆதிநீக்ரோக்கள், ஆஸ்திரேலியர்கள் (கறுப்பர்கள்) மங்கோலியர்கள் முக அமைப்புக் கொண்டவை 95 சதவீதமும், திராவிட குணாதிசயங்களைக் கொண்டவை 5 சதவீதம் மட்டுமே உள்ளன' என்று குறிப்பிட்டுள்ளார். எனவே சிந்துவெளி பகுதியிலும் இதுபோன்ற இனக்கலவையுள்ள மக்கள் இருந்திருக்கக்கூடும் (இன்று நாம் இந்தியர்களாக - இந்துக்களாகக் காணும் நம் நாட்டு மக்கள் இக்கலப்பினத்திலிருந்து உருவானவர்கள் எனக் கொள்ளலாம்). இக்கலப்பின மக்களே, வெவ்வேறு நாடுகளுக்கு இந்து சமயத்தையும் கலாச்சாரத்தையும் கொண்டு சென்றனர் என உறுதியுடன் கூறலாம்.[21, 22]

6:7. சிந்துவெளிநாகரிகம் ஆடு மேய்த்து வந்தவர்களால் அழிக்கப்படவில்லை

வீரத்திற்கும், தீரத்திற்கும், வணிகத்திற்கும் பெயர் பெற்ற நாகரிகத்தின் உச்சியில், பன்னிரெண்டு லட்சம் சதுர கிலோமீட்டர் பகுதியில் வாழ்ந்துவந்த திராவிடர்களைக் கையில் கோலுடன் ஆடு மாடு மேய்த்து வந்த ஓர் நாடோடிக் கும்பல்

போரிட்டு வென்றிருக்க முடியாது. நாடோடி மக்களுக்கு ஆடுகளைக் காப்பதற்கே நேரம் போதாதே. மேலும் அவ்வப்போது புலம் பெயர்ந்து செல்லும் கும்பலுக்குப் படையேது, படைக்கலன்கள்யாது, படைக்கலப் பயிற்சி யாது? புதிதாகச் செல்லுவோர், பாரம்பரியமாக ஓரிடத்தில் குடியிருப்போரை அதுவும் ஆடு மேய்த்துக் செல்வோர் எப்படி வென்றிருக்க முடியும் (பக்கம் 637 லட்சுமி நாராயணன் அவர்களின் தமிழக அந்தணர் வரலாறு). இவ்வாரியர் படையெடுப்புச் சித்தாந்தத்தைப் பற்றிக் குருகுலத் தென்றல் பத்திரிகையின் ஆசிரியர் டாக்டர் சிவசக்தி பாலன் கூறுவதைப் பார்ப்போம்.

'ஆடுமேய்ப்பவர்கள் ஓர் ஊரில் 4-5 குடும்பங்களுக்கு மேல் இருக்க முடியாது. அவர்கள் பரவலாக இருந்தால்தான் ஆடு மேய்க்கப் போதிய இடம் கிடைக்கும். ஒரு சில ஆடுமேய்ப்பவர்கள் ஒரு ஊரை அழிக்க முடியாது. அவ்வாறிருக்க, பல லட்சம் சதுர கிலோ மீட்டரில் பரந்து விரிந்து விளங்கிய 1000க்கும் மேற்பட்ட கிராமங்களையும், கோட்டை கொத்தளங்கள் உள்ள நகரங்களையும் அழித்திருக்க முடியாது. மேலும் போரினால் அழிந்துபட்ட நகரங்கள் உலகில் மிக அரிது. அயோத்தி, மதுரா, குருஷேத்திரா, ஜெருசலேம், ரோம் ஆகிய நகரங்கள் சந்திக்காத பெரும் யுத்தத்தையா சிந்து நதிதீர நகரங்கள் எதிர்கொண்டுவிட்டன. எனவே ஆடு மேய்ப்பவர்களால் அழிந்துபட்டது. அழிக்கப்பட்டது என்பது திராவிடர்களுக்குத்தான் அவமானம்.'

மேலும் ஆடுமேய்ப்பவர்களுக்கு ஆட்டின் மாமிசத்தை வாங்கி உண்ணும் பெரும் வாடிக்கையாளர்களின் சமுதாயம் தேவை. ஆடு வளர்ப்போர் தங்களது வாடிக்கையாளர்களுடன் சார்ந்து வாழ்வார்களே அன்றி, அவர்களை அழிக்க ஒருகாலும் முற்படமாட்டார்கள். இன்றுகூட அத்தகைய இடையர் பெருமக்கள் எல்லாச் சமுதாய மக்களுடனும் நன்கு பழகி அன்னியோன்னியமாய் இருப்பதைக் காணலாம். இன்றைக்கு 30 ஆண்டுகளுக்கு முன்புவரை ஆடு மேய்க்கும் இடையர்கள், எந்த ஊரிலும், எந்தச் சமுதாய மக்கள் வீட்டிற்குள்ளும் சென்று மசாலா அரைக்கலாம் என்ற வழக்கம் இருந்ததும் ஈண்டுப் பதிவுசெய்யப்படுகின்றது. எனவே சிந்துசமவெளி நாகரிகத்தை ஆரிய இடையர்கள் அழித்தார்கள் என்பது

எவ்வகையில் ஆய்ந்தாலும் உண்மையாய் இருந்திட வாய்ப்பில்லை.

ஆராய்ச்சிகளும், யூகங்களும் (Theories) உள்ளூர் கலாச்சாரம் மற்றும் பழக்கவழக்கங்கள் ஒட்டியே அமைய வேண்டுமே தவிர கிறித்துவ கண்ணோட்டத்திலோ, அல்லது ஐரோப்பிய (படையெடுப்பு) கலாச்சாரத்தையோ சார்ந்து இருக்கக் கூடாது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஆனால் ஆச்சரியம் என்னவென்றால் சிறந்த சைவர்களும் இந்த ஆரியப் படையெடுப்புக் கதையை ஏற்றனர். வேதகாலம் கிமு 1200 என பின்னுக்குத் தள்ளப்பட்டு, அதற்கு முன்பே சிந்துவெளியிலும், பின்பு தென்னாட்டிலும் சிவவழிபாடு போற்றப்பட்டது என்று சொல்லிவிட்டால், சைவர்கள் தங்கள் சமயம் வேதத்திற்கும் முற்பட்டது, தனித்தன்மை வாய்ந்தது என்று எண்ணிப் பெருமைப் படலாம். அங்ஙனம் பெருமைப்படவும் செய்தனர். இத்தகைய போலி பெருமையை உருவாக்கத் தானே ஜான் மார்ஷல், பாதிரியார் ஹீராஸ் ஆகியோர் தங்கள் வலையைப் பின்னி வைத்தனர். அதில் பெரும்பான்மையான சைவ சமய வல்லுநர்களும் தொப்பென்று விழுந்தனர். காலஞ்சென்ற பேராசிரியர் க. வெள்ளை வாரணன் அவர்களே வெள்ளையர் விரித்த இந்த ஆரியப் படையெடுப்புக் கொள்கையில் வீழ்ந்து சிக்கிக் கொண்டாரே! அவர் நிலையே இதுவானால் மற்றவர் நிலை பற்றி கூறவும் வேண்டுமோ! (பார்க்கவும் பக்கம் 638.... 'தமிழக அந்தணர்கள்...' T.N. ராமச்சந்திரனின் கட்டுரை)

6:8. சிந்து சமவெளிக்கு பிந்தைய வரலாறு

சிந்துவெளி நாகரிகத்திற்கு முன்பே தோன்றிய மகாபாரத காவியத்தில் குனிண்டா (Kuninda) பகுதியை (தற்போதைய ஹிமாச்சல் பிரதேசம், உத்தரகாண்ட் பகுதியை உள்ளடக்கியது) ஆண்ட அரசர்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வரசர்களின் வழித்தோன்றல்கள் கிமு 100ம் ஆண்டு

வாக்கில் வெளியிட்டுள்ள செம்பு மற்றும் வெள்ளி நாணயங்கள் இன்றைக்கு 15 ஆண்டுகளுக்கு முன்பாக சண்டிகாரில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அந்நாணயங்களின் ஒரு முகத்தில் அதனை வெளியிட்ட அரசன் பெயர் சமஸ்கிருதத்தில் பிரம்மி - கரஸ்ட்டி எழுத்துக்களிலும், மற்றொரு முகத்தில் சிந்து சமவெளி சித்திர எழுத்துக்களும் காணப்படுகின்றன (பார்க்கவும் பக்கம் 526-537, S.Kalyanaraman-Indian Hieroglyphs). இதன்மூலம் சிந்து சமவெளி நாகரிகம் வடஇந்தியாவில் தொடர்ந்து வந்துள்ளது நிரூபிக்கப்படுகின்றது.

ஹரப்பா நாகரிகம் சிதைந்தபின், ஆங்காங்கே பல அரசுகள் தோன்றின. கிமு. 521ல் புராதன இந்தியாவின் வடமேற்குப் பகுதியைப் பெர்சிய (ஈரான்) அரசன் தாரஸ் என்பவர் கைப்பற்றினார். அவர்களது ஆட்சி கிமு 486 வரை நீடித்தது. அதன்பின்னர் கிமு 326ல் மாவீரன் அலெக்ஸாண்டர் இப்பகுதியில் தனது படையைச் செலுத்திப் போரஸ் எனும் அரசனை வென்றான். பின்னர் மௌரியர்களின் ஆட்சியும் (கிமு 321-84), குப்தர்களின் ஆட்சியும் (கிமு 280-கிபி 550 வரை) நீடித்தது. மௌரியர்கள் காலத்திலிருந்தே இந்தியா முழுமையிலும் சமண - புத்த சமயங்கள் தோன்றிப் பரவின. எனினும் தென்னிந்தியாவில் இவ்விரு சமயங்களும் இந்து சமயக் குரவர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர் மற்றும் மாணிக்கவாசகர், ஆழ்வார்கள் ஆகியோர் எழுப்பிய சமயத் தீயில் பட்டொழிந்தன. வட இந்தியாவில் பிரபலமாயிருந்த இந்த இரண்டு சமயத்தைச் சார்ந்த அரசர்களும் புலால் மற்றும் மீன்கள் உண்ணாமையை மக்களிடம் வலியுறுத்தினர். இத்தகைய உணவுக் கட்டுப்பாட்டிற்கு பெரும் எதிர்ப்பு, குறிப்பாக வங்காள மக்களிடம் நீறுபூத்த நெருப்பாக அமைந்திருந்தது. இஸ்லாம் உலகம் முழுவதும் வெடித்து அதன் அரசர்கள் வடமேற்கு இந்தியாவின் சமண - பௌத்த அரசர்களை வென்றதும், ஊன்உண்ணும் வடமேற்கு - வடகிழக்கு இந்திய மக்களில் சிலர் அதனை இருகைகொண்டு வரவேற்று இஸ்லாமியராக முதலில் மதம் மாறினர்.

‘பதினான்காம் நூற்றாண்டின் முதற்பகுதியில் தென்னிந்திய பகுதிகளை அரசாண்ட மன்னர்கள், முகம்மதியர் களுடைய பெரும் படையை எதிர்கொள்ள முடியாமல்

தோல்வியடைந்தனர். கிபி 1295ல் அலாவுதீன் கில்ஜியின் படையெடுப்பாலும், 1311-14ல் மாலிக்காபூரின் பெரும் படையெடுப்பாலும், 1321ல் துக்ளக்கின் படையெடுப்பாலும் தென்னிந்தியப் பகுதிகள் பெரும் இன்னலுக்குள்ளாயின. மக்கள் பீதியுற்று ஊர்களைக் காலி செய்து ஓடினர். வேளாண்மை அழிந்தது. பஞ்சம், பசி, பட்டினி தாண்டவ மாடின. அதன் பின்னர் டில்லி பாதுஷாவிற்கு உட்பட்ட இஸ்லாமிய ஆட்சியாளர்கள் சிலர், தங்களைச் சுல்தானாக அறிவித்து மதுரையிலிருந்து (1323-1371) ஆட்சி செய்தனர். அவற்றில் ஒருவர் ஜியாசுதின் - இபின் - பட்டுடா. இவர் செய்த கொடுமைகளை இடான் - பட்டுடா எனும் இஸ்லாமிய அறிஞர் மிகவும் விபரமாகவும் பரிதாபத்துடனும் அவரது பயணக் குறிப்புகளில் எழுதியுள்ளார். மதுரை சுல்தான்களின் ஆட்சியின்போது மதுரை மீனாட்சியம்மன் ஆலயம், திருவானைக்கா சிவன் ஆலயம், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் ஆலயம் ஆகியவை பலவந்தமாக மூடப்பட்டன. வைகை ஆற்றில் அந்தணர்கள் நீராடும் போது சந்தனம் கரைந்தோடுவதற்குப் பதிலாக மனித இரத்தம் ஓடியதாக மேற்கண்ட அறிஞர் கூறியுள்ளார். திருவானைக்காவில் தமிழும் சமஸ்கிருதமும் பேசப்படுவதற்குப் பதிலாக பாரசிகம் பேசப்பட்டதாகவும், மதுராவிஜயம் எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மதுரை சுல்தான்களை வீழ்த்திக் கோவில்களையும், மக்களையும், தமிழையும், விடுவித்த பெருமை விஜயநகர பேரரசர் புக்கரின் மகன் குமார கம்பண்ணர் மற்றும் அவரது தளபதி சாளுவ மாங்கு ஆகியோரைச் சாரும். இவ்வரலாறுகள் சோழ அரசன் மகளும், கம்பண்ணரின் மனைவியுமான கங்கா தேவியினால் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட 'மதுரா விஜயம்' எனும் நூலில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூலைத் திருச்சி ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ கிருஷ்ணமாச்சார்யர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். மீனாட்சி அம்மன் கோவில் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுக்காலமாக வழிபாடின்றி மூடிக்கிடந்ததை, கோவிலின் முதல் வடக்கு உட்பிரகாரத்தில் 'கம்பண்ணர் கண்ட காட்சி' எனும் தலைப்பில் எழுதியுள்ளதையும் இன்றும் காணலாம். இதே காலகட்டத்தில் ஸ்ரீரங்கம் கோவிலின் உற்சவர், மாற்றார் கையில் சிக்கிவிடாமல் தடுப்பதற்காக அவை காடுகளிலும், குகைகளிலும் ஒளித்து வைக்கப்பட்டன. இதற்கு அழகர் கோவில் மலைப்பகுதியில்

வாழ்ந்த கள்ளர் சமுதாய மக்கள் பெரிதும் உதவியுள்ளனர். அதன்பொருட்டு அச்சமுதாய மக்களுக்கு அழகர் மதுரை நோக்கிச் சித்திர பௌர்ணமி அன்று ஊர்வலமாக வரும்போது இன்றும் மரியாதை செய்யப்படுகின்றது. இதன் விபரங்களை மேலும் தெரிந்திட விரும்புவோர் 'நம்பெருமாள் வனவாசம்' எனும் நூலில் காணலாம். நூலின் ஆசிரியர் ஸ்ரீரங்கம் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ கிருஷ்ணமாச்சார்யர்.

இந்தியாவில் மொகலாயர்களின் ஆட்சி தளர்ந்த (ஜகாங்கீர் காலத்தில் ஆரம்பித்து) 1757ஆம் ஆண்டு முதற்கொண்டு பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிக - பொருளாதார - அரசியல் கெடுபிடிகளும், பின்னர் ஆங்கிலேயர்களின் நேரடி ஆட்சியும் இந்தியாவில் படிந்ததை நாம் எல்லோரும் அறிவோம். இவ்வாட்சி, இந்திய கலாச்சாரத்தை வேருடன் அழிப்பதாக விளங்கியது. இக்காலப் பொழுதில் இந்திய வேதங்களைக் கிறித்துவ சமயக் கருத்துக்களுடன் மொழிபெயர்த்தல், இந்திய சரித்திரத்தைக் கொச்சைப்படுத்துதல், ஜாதிப் பிரிவினையை உண்டு பண்ணல், இந்தியச் செல்வங்களைச் சுரண்டுதல் ஆகியவை சற்றும் வெட்கமின்றிச் செயல்படுத்தப்பட்டன. இதற்கு உதவிடும் பொருட்டு இந்தியாவிற்கு ஏராளமான அன்னிய பாதிரிகள் வருகை ஊக்குவிக்கப்பட்டது. இதற்கான நிதி ஆதாரங்கள் கிறித்துவ அரசுகளால் (பிரிட்டிஷ், பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுக்கல், டச்) வழங்கப்பட்டன. எனவே இஸ்லாமிய ஆட்சிக்குப்பின் இந்தியாவில் நடைபெற்ற 300 ஆண்டு கால வெள்ளையர்களின் காலனியாதிக்க ஆட்சி கிறித்துவர்களின் ஆட்சியே!

* * *

பகுதி - 7

அன்னிய மதகுருமார்கள் - இந்தியா அடிமையாதல்

பகுதி - 7 பொருள்

பக்கம்

7.1 யேசு சபை 297

7.2 புனிதர் பிரான்ஸிஸ் சேவியர் 299

7.3 காலனியாதிக்கமும் இந்திய சுயமரியாதையும் 301

7.4 ராபர்ட் நொபிலி 304

7.5 பாதிரியர் துபாயிஸ் 307

7.6 மாக்ஸ் முல்லர் 309

7.7 புனிதர் பிரான்ஸிஸ் சேவியர் 314

7.8 வீரமாமுனிவர் 315

7.9 போப் ஐயர் 317

7.10 பிஷப் கால்டுவெல் 320

7.11 சார்லஸ் பிலிப் பிரவுன் 334

7.12 பிரான்ஸிஸ் ஒயிட் எல்லிஸ் 336

7.13 சார்லஸ் கிராண்ட் 337

7.14 பார்த்தலோமஸ் சிஜன்பக் 337

7.15 இதர திருமறையாளர்கள் - காலனியவாதிகள் 341

7.16. புனிதர் தாமஸ் 344

7.17 பாண்டிச்சேரி வேதபுரி ஈஸ்வரன் கோவில் 350

7:1. யேசு சபை[1]

பதினைந்தாம் நூற்றாண்டில் ஐபீரியன் தீபகற்பத்தில் இஸ்லாமியருக்கும், கிறித்துவர்களுக்குமிடையே பெரும் யுத்தம் நடந்ததையும் அதில் இஸ்லாமியப் படை தோற்கடிக்கப்பட்டதையும் முன்பே கண்ணுற்றோம். வெற்றிக் களிப்பில் ஐரேப்பா முழுமையும் மூழ்கியது. ஐபீரியாவில் நடந்தது போன்று கிறித்தவத்திற்கு மேலும் ஒரு சோகம் ஏற்பட்டு விடக் கூடாது என்றும், இன்னும் பல்வேறு சூழ்நிலைகளை எதிர் கொள்ளவும் 1534ம் ஆண்டில், போப் மூன்றாம் பால் ஆட்சியின் போது லயோலா இக்னேஷீயஸ் என்பவர் தலைமையில் கத்தோலிக்க திருச்சபைக்குள் யேசு சபை (Society of Jesus) எனும் ஓர் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இச்சபையில் மிகவும் கற்ற, புத்தி கூர்மையுள்ள, இனிமையாகப் பேசும் வல்லமையுள்ள பாதிரியர்கள் மட்டும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இச்சபையின் நோக்கங்கள் வருமாறு:

1. புரட்டஸ்டன்ட் சமயப்பிரிவு பரவுதலைத் தடுத்தல், அவர்களுக்கு எதிராகப் பிரசுரங்களையும் பிரச்சாரங்களையும் மேற்கொள்ளுதல். கத்தோலிக்க சமயத்தைப் பிளவுறச் செய்த மார்ட்டின் லூத்தருக்கு எதிரான உண்மைகளை மக்கள் முன் கொண்டு செல்லல். இச்சபையின் நடவடிக்கைகள் தமிழகத்திலும் எதிரொலித்தது. ''கரும்பாம்பின் விஷக்கடிக்கு மருந்து'' எனும் ஓர் நூல் புதுச்சேரி ரோமன் கத்தோலிக்க சபையில் 1848ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இப்பிரசுரம் முழுமையிலும் புரட்டஸ்டன்ட் சமயத்தினரையும், மார்ட்டின் லூத்தரையும் விலாவாரியாக விமரிசித்து எழுதப்பட்டுள்ளது. புரட்டஸ்டன்டுகள் நரக அக்னி சூளையில் வெந்துபடுவார்கள் (பக்கம் 32) என்றும் இதில் குறிப்பிடபட்டுள்ளது.

2. மேற்கு ஆசியா பகுதிக்குச் சென்று அங்கு வாழும் இஸ்லாமியர்களை மதம் மாறச் செய்வது.

3. இனிமையாக பேசி செல்வமிக்க கத்தோலிக்க - வாரிசுகள் அற்ற விதவைப் பெண்களின் நம்பிக்கையைப்

பெற்று, அவர்களின் செல்வங்களை வேதக் கோவிலுக்குப் பெறுதல்.

4. குழந்தைகள் அற்ற புறச் சமயச் செல்வந்தர்களை அடையாளம் கண்டு, அவர்களிடம் இனிமையாகப் பேசி, அவர்களது நில புலன்களைத் தங்களின் சபைக்குப் பெறுதல், அவர்களைக் கொண்டு ஞாபகார்த்தமாக வேத கோவில்களைக் கட்டித் தரச் செய்தல்.

5. போப் ஆண்டவரின் ஒற்றர்களாகச் செயல்படுதல், மற்றும் ரகசிய அறிக்கை அனுப்புதல். (யேசு சபையின் பாதிரியார்களைக் கண்டு சாதாரண கத்தோலிக்க பாதிரியார் களும், கான்வெண்டிலுள்ள கன்னியாஸ்திரிகளும் மிகவும் அச்சப்படுவது இன்றுகூடக் காணக் கிடக்கின்றது.) இச்சபையை சார்ந்த பாதிரியர்கள் இதர சமயப் பிரமுகர்களிடம் அன்பாகப் பேசி, அவர்களின் நம்பிக்கையைப் பெற்று, உளவு பார்த்தல்.

6. சமுதாயங்களுக்கிடையேயும், நாடுகளுக்கிடையேயும் கசப்புணர்ச்சியைத் தோற்றுவித்து, போரிடும் இரு குழுக்களுக் கிடையேயும் பின்புறமாக நின்று போரினை உக்கிரமாக நடத்திட, தார்மீக மற்றும் நிதி உதவிகளை வழங்கிடல். இப்போர்கள் கல்வி, அறிவு நிறைந்த புறச் சமய நாடுகளில் நடத்தப்பட்டு இரத்தம் சிந்தவைக்கப்பட வேண்டும். இறுதியில் ஏற்படும் சமாதன உடன்படிக்கையின் போது இரு குழுக்களுக்கும் முன்நின்று கையெழுத்திடுபவராக யேசு சபை பாதிரியார்கள் விளங்க வேண்டும். இதன் மூலம் போரிட்ட இரண்டு நாடுகளிலும் கத்தோலிக்க சமயம் வேகமாகப் பரவிடக்கூடும்.

இச்சபையினரின் சூதுவாதுகளைப் பற்றி மேலும் அறிந்திட wikepedia/The Society of Jesus (Jesuits) - The Oath of Induction எனும் வலைதளத்தை பார்வையிடலாம்.[2]

இலங்கையில் சமீபத்தில் நடைபெற்ற போர் இது போன்றதே. கூர்ந்து கவனித்தால் மட்டுமே இச்சதித் திட்டத்தை உணரமுடியும்.

இத்தகைய பெரும் பின்னணியை கொண்ட யேசு சபையை உருவாக்கிட இக்னேஷியஸ் (Ignatius of Loyala) எனும் பாதிரியாருடன் சேர்ந்து பணியாற்றியவர் பிரான்ஸிஸ்

சேவியர். இவர் ஸ்பெயின் நாட்டின் அரச குடும்பத்தைச் சார்ந்தவர். அக்காலத்திலே பாரிஸ் நகர் சென்று படிப்பு முடித்தவர். இவருடைய பணிக்களமாக மேற்கு ஆசியா (அரேபிய நாடுகள்) ஒதுக்கப்பட்டது. எனினும் இவர் தனது மன மாறுதல் காரணமாக இந்தியாவின் கோவா வந்து சேர்ந்தார். போப் ஆண்டவரின் சமயப் பிரதிநிதியாகவும், போர்ச்சுகீஸிய அரசனின் ராஜபிரதிநிதியாகவும், பெரும் செல்வாக்குடனும், நிதியுடனும் இந்தியா வந்து இறங்கினார்.

7:2. புனிதர் பிரான்ஸிஸ் சேவியர் (1506-1552)

கிறித்துவ சமயத்தை இந்தியாவில் பரப்ப வருகைதந்த முதல் பாதிரியார் எனும் பெருமை பெற்றவர் சேவியர். இந்தியாவிற்கு வருகை தந்தபோது மொகலாயர்களின் ஆட்சி (ஷெர்சா-ஹூமாயுன்) நடைபெற்று வந்தது. எனினும் அவ்வாட்சி திறம்பட இன்மையால் அதன் நிர்வாகம் ஆக்ரா, டில்லி என்ற அளவிலே நின்றது. தென்னிந்தியாவில் பல சிற்றரசர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். மத்திய இந்தியாவின் அகமத்நகர், பிஜாபூர், கோல்கொண்டா பகுதிகளில் சுல்தான்களும், துங்கபத்ரா நதி கரையில் விஜயநகரப் பேரரசும் (ராமராயர் ஆட்சிக்காலம்) ஆட்சி புரிந்து வந்தன. அதன் நிர்வாகமும் தென்கோடிவரை முழுமை பெற்றிருக்கவில்லை. இக்காலத்தில் தடியெடுத்தவன் தண்டல்காரன் எனும் பழமொழிக்கு ஏற்ப, கடலோர வர்த்தகம் முழுமையும் இஸ்லாமியர் வசமே இருந்தன. கடற்கரையோர மக்கள் பரதர் என அழைக்கப்பட்டனர். கடல் தொழிலிலும், உடல் வலிமையிலும் இம்மக்கள் சிறந்தவர்கள். பிற்காலச் சோழர்களான ராஜராஜன், ராஜேந்திரன் ஆகியோர் காலத்தில் மிகச் சிறப்பாய் விளங்கிய கடற்கரையில் போர் வீரர்களாகவும் தீவிர இந்துக்களாகவும் விளங்கினவர்கள். தூத்துக்குடி அருகிலுள்ள பழைய காயல் எனும் மீனவர் கிராமத்திலிருந்து தான் முன்னாட்களில் மதுரை மீனாட்சியம்மன் கோவில் திருவிழா கொடியேற்றத்திற்கு, மீன் சின்னம் பொறித்த கொடி

கொண்டு செல்லப்படும் என்பது இப்பகுதி மக்களிடையே இன்றும் கர்ண பரம்பரையாய் விளங்கிவரும் செய்தி.

இத்தகைய சூழலில் பிரான்சில் சேவியர் போர்ச்சுக்கீசிய காலனியாக விளங்கிய கோவாவிற்கு 1541ல் வந்து சேர்ந்தார். அவ்வமயம் தென்னிந்தியாவின் தெற்கு, தென்மேற்குப் பகுதிகளில் திருவிதாங்கூர் அரசின் ஆட்சி நடைபெற்று வந்தது. இவ்வரசன் கடலோர மக்களின் நல்வாழ்வைக் கவனிக்க தவறிவிட்டார். மீன், கருவாடு வர்த்தகத்தில் பெரும் திறமைமிக்க இஸ்லாமியர்கள் கடல் பொருள்களுக்குச் சரியான விலை கொடுத்து வாங்காததோடு, மீனவ மக்களின் இல்லற வாழ்விலும் தலையிட்டுச் சீரழித்தனர். எனவே இம்மக்கள் ஆயிரக்கணக்கில் ஒன்று சேர்ந்து, அவ்வமயம் மலபார் பகுதியில் முகாமிட்டிருந்த பிரான்சிஸ் சேவியர், தங்களுக்குப் போர்ச்சுகீஸியரைப் பாதுகாப்பு வழங்கச் செய்யவேண்டும் என்றும், அதன் பொருட்டுக் கிறித்துவ சமயத்திற்கு மதம் மாறவும் தயார் என அறிவித்தனர். அவ்வாறே போர்ச்சுகிஸிய கடற்படை இம்மக்களுக்குப் பாதுகாப்பளித்துத் துன்பத்தைக் களைந்தது. இவ்வாறாக மதம் மாறிய மீனவர்களின் தமிழ்ப் பெயர்கள் முற்றிலுமாக மாற்றப்பட்டு போர்ச்சுகீஸிய பெயர்கள் சூட்டப்பட்டன. அச் சமுதாயத்தின் பெயரும் பரதர் என்பதிலிருந்து பெர்னான்டோ (Fernando) என மாற்றம் செய்யப்பட்டது.

சற்றும் எதிர்பாராத இந்நிகழ்ச்சிகளால் பெரும் உற்சாகமடைந்த சேவியர் தனது பணிகளை இந்தோனிஷியா, மலாக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கும் விரிவு படுத்தத் திட்டமிட்டார். இவரின் வழிச்செலவு முழுமையும் போச்சுகீசிய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்நாட்டின் ராஜபிரதிநிதி என்ற வகையில், எந்த நாட்டிற்குச் சென்றாலும் சிவப்புக் கம்பள வரவேற்புப் பெற்றார். எனினும் ஒருதடவை சைனா நாட்டிற்குப் பயணம் செய்தபோது குவாண்டுங் தீவில் கப்பலுக்காகக் காத்திருந்த போது தீராத காய்ச்சல் காரணமாக உயிரிழந்தார். கிறித்துவ சமயத்திற்கு இவர் ஆற்றிய சேவையை நினைவு கூறும் பொருட்டு இவரது பூதஉடல் கோவா கொண்டு வரப்பட்டு, அங்குள்ள பிரபல வேத கோவிலில் கண்ணாடி பேழைக்குள் வைக்கப்பட்டு இன்றுவரை பராமரிக்கப்பட்டு வருகிறது.

7:3. காலனியாதிக்கமும் இந்திய சுயமரியாதையும்

பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்து நாட்டிற்கு உலகெங்கும் பல அடிமை நாடுகள் இருந்தன. எனினும் இந்தியா மிகச் செழுமையான நாடாக அவற்றில் விளங்கியது. (பல நூறு ஆண்டுகளாக இஸ்லாமியரின் ஆட்சி இருந்தபோதிலும் நாடு பொருளாதாரத்தில் தாழ்ந்து விடவில்லை. இஸ்லாமிய ஆட்சியாளர்கள் இங்குள்ள கோவில்களின் செல்வத்தைச் சூறையாடுவதையே குறிக்கோளாய்க் கொண்டிருந்தனர். இங்குச் சுரண்டிக் கொண்டுபோவதற்கு அவர்களுக்கு வேறு நாடும் இல்லை, நேரமும் இல்லை). எனவே செல்வவளமிக்க இந்தியா, பிரிட்டனின் அடிமை நாடுகளில் மணிமகுடம் போன்றது (Jewel of Britain) என வர்ணிக்கப்பட்டது.

இரண்டாயிரத்து முன்னூறு வருடங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு வந்திருந்த கிரேக்க வரலாற்று ஆசிரியர் மெகஸ்தனிஸ் - இந்தியாவில் பெரும்பான்மை நிலங்கள் பாசனவசதி பெற்றிருந்ததாகவும் அதனால் வருடத்திற்கு இரண்டுபோகம் விளைச்சல் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.[3] 1850ம் ஆண்டில் சென்னை மாகாணத்தில் 50000க்கும் மேற்பட்ட ஏரிகள் இருந்ததாகப் பிரிட்டிஷ் நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர். 1760ம் ஆண்டில் செங்கல்பட்டு பகுதியில் ஏக்கருக்கு 1 முதல் 2 டன் வரை நெல் உற்பத்தி இருந்துள்ளது. எனவே நம்மில் பலர் நினைப்பது போன்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இங்கு வரும்முன்னர் இந்தியா பொருளாதாரத்திலும் தொழில்களிலும், கல்வியிலும் ஏழ்மையாக இருக்கவில்லை. உலகின் பொருள் உற்பத்தியில் (GDP) 1750ம் ஆண்டில் 24.50 சதவீதம் இந்தியாவில் இருந்தது. பிரிட்டனின் பங்கு வெறும் 1.90 சதவீதமே. ஆனால் 1900ம் ஆண்டு கணக்கின்படி இந்தியாவின் உற்பத்தி 1.70 சதவீதமாகவும் பிரிட்டன் உற்பத்தி 18.50 சதவீதமாகவும் மாறியது. (இதனைப் பற்றி பற்றி மேலும் விபரமாகக் காண விரும்புவோர் பேராசிரியர் ப. கனகசபாபதி எழுதியுள்ள ‘பாரத

பொருளாதாரம் அன்றும் இன்றும்' எனும் புத்தகத்தைக் கண்ணுறவும்).

இவற்றிற்கெல்லாம் காரணமென்ன? இந்தியா பொருளாதார ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் துன்புறுத்தப் பட்டு ஆட்சியாளர்களால் கொள்ளையடிக்கப்பட்டது. இதனை முன்னின்று நடத்தியவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள், பின்னின்று நடத்தியவர்கள் 'தேவனின் குருமார்கள்' - அன்னிய பாதிரியார்கள். இவர்கள் இருவரும் எத்தகைய கொடியவர்கள்?

கொலைமேற் கொண்டாரின் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்துஒழுகும் வேந்து - குறள் 551

முறையற்ற செயல்களில் குடிமக்களைத் துன்புறுத்தும் ஆட்சியாளன் கொலையாளியை விடக் கொடியவன்.

வேலோடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலோடு நின்றான் இரவு - குறள் 552

செங்கோல் ஆட்சி செய்ய வந்தவன் முறையில்லாத வழிகளில் குடிமக்களிடம் பொருள் பறிப்பது, கையில் வேல் தாங்கிய வழிபறிக் கள்ளன், பயணிகளிடம் 'பொருளைக் கொடு' என்று பயமுறுத்துவது போன்றது.

ஆட்சியாளன் இவ்வாறு கொடுங்கோலனாய் இருந்த போதிலும் நம்நாட்டுமக்கள் சூது, வாது போன்ற எந்தவிதப் பண்புகளும் இல்லாமல் ஏமாளியாய் இருந்துள்ளனர்.[4] அதற்குக் காரணம், நாம் ஆயிரக்கணக்கான காலமாய் இவ்விதமாய் ஒன்றுமறியா அப்பாவியாக இருந்து வந்துள்ளோம் என்பதே! நமது அப்பாவித்தனத்தின் இலக்கணம் திருக்குறளில் வகுக்கப்பட்டுள்ளது.

பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறைஒருங்கு நேர்வது நாடு - குறள் 733

பிறநாட்டிலிருந்து வந்து குடியேறுபவரின் சுமையைத் தாங்கி கொண்டு, தன்னை ஆட்சி செய்கின்றவருக்கு ஆட்சியைத் திறமையாக நிர்வகிக்கப் போதுமான வரிப்பொருளை குறையாமல் வழங்குவதே சிறந்த நாடு (மொழிபெயர்ப்பின் உரையாசிரியர் பூவை அமுதன் - 2000ம் ஆண்டு).[5] வள்ளுவர் வகுத்ததுபோன்று வெள்ளையருக்குத்

தன் செல்வத்தை எல்லாம் ஈந்து இந்நாடு ஏழ்மையாய் விட்டது.

இந்தியா, ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டதின் காரணம்:

1. இந்தியாவின் அளவுகடந்த செல்வத்தின் கவர்ச்சி.

2. செல்வத்தைக் கட்டிகாக்கப் போதிய ஆளுமை அற்ற அரசுகள்.

3. நவீன ஆயுதங்களைப் பற்றிய ஞானம் இன்மை.

எனினும் இந்தியாவைச் சமய ரீதியாகக் காலனியாதிக்க கிறித்துவத்தால் வெல்ல முடியவில்லை அதற்கான காரணங்கள் பல.

1. பல்வேறு மொழிகள் கொண்ட நாடாக இருந்தமையால் அன்னிய மதகுருமார்கள் உள்ளூர் மொழியைக் கற்றுக் கொள்ளுவதில் பெரும் நேரம் வீணானது.

2. மக்களிடையே பல்வேறு பிரிவுகள், ஜாதிகளின் அடிப்படையில் இருந்தமையால் மதம் மாற்றுவதற்கு ஒரு பொதுவான யுக்தியைக் கிறித்துவத்தால் வகுக்க முடியவில்லை.

3. உலகில் வேறு எங்கும் கிறித்துவத்தால் எதிர் கொண்டிராத சமய - கலாச்சார - இலக்கிய நாகரிகம் இந்தியாவில் இருந்தமையால், அந்நாகரிகத்தைக் கிறித்துவத்தால் எதிர்கொள்ள முடியாமை.

எனவே 'இங்கிலாந்தின் கனமான கடமை கீழ்த்திசையில் உள்ள இந்தியாவில்தான் உள்ளது. அங்கே நாம் உலகத்திற்கே தலைமையான நிலையை வெல்லவோ, இழக்கவோ முடியும்' எனக் காலனியாதிக்கவாதிகளும் அவர்களுக்கு ஆன்மிக - சமய ஆதரவு அளித்த மதவாத குருமார்களும் நம்பினர். இந்தியாவை வென்று விட்டால் அவன் உலகத் தலைமையை வென்றவனாகி விடுவான். இந்தியாவை வெல்வதற்கும், வெற்றியைக் கட்டிக் காத்திடவும் அவர்கள் இரண்டுயுக்திகளைப் பயன்படுத்த திட்டமிட்டனர்.

1. இந்து சமயத்திற்கு அடிப்படையாக விளங்கும் வேதங்கள் மீதும் அதன் துணை நூல்கள்மீதும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைச் சீரழிப்பது.

2. பரிசுத்த வேதாகமத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வினியோகம் செய்வது.

இவ்விரு முயற்சிகளையும் செயல்படுத்திட அன்று இந்தியாவை ஆண்ட லண்டன் கிழக்கிந்தியக் கம்பெனியின் பங்குதாரர்களிடம் பெரும் நிதி திரட்டப்பட்டது. அதிக முதலீடு இன்றி இந்தியாவை நிலையான அடிமை நாடாகவும், சுரண்டலுக்கான நாடாகவும் நீண்டகாலம் வைத்திருக்கலாம் எனும் பேராசையால் வணிகர்களிடமிருந்து பெரும் செல்வம் திரண்டது. இந்தியாவின் வேதங்களுக்கு எதிராகப் புரட்டுக் கருத்துக்களைத் தயாரிக்கும் பணி முடுக்கி விடப்பட்டது. ஒரு நாசகரமான இலக்கை நோக்கி நடத்தப்பட்ட ‘சமயம் சார்ந்த இந்த அரசியல்பணி’ மிகவும் சாதுர்யமாக வாழைப்பழத்தில் ஊசி இறக்குவதுபோன்று செய்யப்பட வேண்டுமென்றும் அவர்கள் எண்ணினர். எனவே இந்திய தொல்லியல், மொழியியல் என்ற பெயரிலும், அதில் பணிபுரியும் அன்னியரின் உண்மையான நோக்கத்தை எவரும் சந்தேகிக்காதவாறு திரைமறைவுத் திட்டங்கள் செயல்படுத்திட வேண்டும் என்றும் எண்ணினர். இதன்பொருட்டு இந்தியாவிற்குப் பணியாற்றவரும் பிரிட்டிஷ் நிர்வாகிகள் மற்றும் கிறித்துவப் பணிவிடையாளர்களுக்கு இந்தியாவைப் பற்றியும், அதன் மக்கள் பற்றியும் மதமாற்றம் செய்வதற்கு உபயோகிக்க வேண்டிய அணுகுமுறைகள் பற்றியும் அறிமுகக் கல்வி அளித்திட லண்டன் நகரில் பயிற்சி நிலையங்கள் பல நடத்தப்பட்டன.

7:4. ராபர்ட் நொபிலி

சமய மாற்றத்தை இந்தியாவில் செய்திட ரோமன் கத்தோலிக்க சபையினர்போல் வேறெவரும் செயல்பட வில்லை எனக் கூறலாம். அவர்களில் இத்தாலி நாட்டினரான ராபர்ட் டி நொபிலி (Robert De Nobili) -*1577 - 1656* முதன்மையானவர். மதமாற்றம் செய்திடப் பல தந்திரங்களை அவர் மேற்கொண்டார். அவர் பணியாற்றிய மதுரை நகரிலுள்ள இந்துக்களைக் கிறித்துவத்தை ஏற்கச் செய்ய

போலியான வேதபுத்தகம் ஒன்றைத் தயாரித்தார். பிராமணர்கள் ஓதும் நான்கு வேதத்திற்கு அப்பால் ஒரு வேதம் உள்ளது என்றும், அதனைப் பிராமணர்கள் தந்திரமாக மறைத்து வைத்துள்ளனர் என்றும், மக்கள் கடைத்தேற்றம் பெறுவதற்கும், நித்திய ஜீவன் அடைவதற்கும் அந்த வேதம் அவசியம் என்றும், அதுதான் ஏசுர் வேதம் என்றும், அது தன்னிடம் ரகசியமாகச் சிக்கியுள்ளதாகவும் செய்திகளைப் பெரும் செலவில் பரப்பினார். ஏசுர் வேதம் எனும் போலி நூலையும் அவர் தயாரித்தார். அக்காலத்திய சமயப் பரப்பாளர்கள் அனைவரும் ஏசுர்வேதம் என்பது உண்மை என்றே நம்பினர். ஐரோப்பிய நாடுகளில் இச்செய்தி பெரும் பரபரப்புடன் பேசப்பட்டது. இதன்மூலம் இந்தியர்களை யேசுவின் பக்கம் முழுமையாகச் சாய்த்து விடலாம் என காலனியாதிக்கவாதிகள் பெரிதும் நம்பினர். ஏசுர் வேதம் பல இந்திய மொழிகளிலும் அன்னிய மொழிகளிலும் பரபரப்புடன் மொழிபெயர்க்கப்பட்டது.[6] மோசடி வேலையை முழுமைப் படுத்திட நொபிலி அவர்கள், தலையை மழித்துக் கொண்டு குடுமியுடனும், பூணூலுடனும், காவி உடையுடனும் காட்சியளித்தார். பூணூலின் ஒரு நுனியில் மட்டும் ஒரு சிறிய சிலுவையைத் தொங்க விட்டுக் கொண்டார். நெற்றியில் சந்தனம் அணிந்து கொண்டார். தினமும் காலையிலும் மாலையிலும் பூஜையில் இருப்பதுபோன்று தன்னைக் காட்டிக் கொண்டார். இவர் தன்னைத் திராவிடக் கலப்பு அற்ற தொன்மையான ரோமானிய பிராமணர் என்று மதுரையில் நடைபெற்ற பிராமணர்கள் கூட்டம் ஒன்றில் கூறினார் (பார்க்கவும் பக்கம் 13. Indian - An Historical Sketch by Rev. George Trevor). இவரிடம் மயங்கி மதம்மாறியவர்களுக்கு சைவ - வைணவ பாரம்பரியத்தில் செய்வது போன்று தீட்சையும் அளித்தார். எனினும் இவரது செய்கை கர்த்தரின் போதனைகளுக்கு எதிரானது என அப்போதைய கோவாவின் தலைமைக் கிறித்துவ குருவாகவிருந்த பேராயர் வெஸ்போவா என்பவர் கண்டித்ததுடன் போப் ஆண்டகை கிரிகரி (Gregary XV) என்பவர் கவனத்திற்கும் கொண்டு சென்றார். நொபிலி மீது கீழ்க்கண்ட குற்றசாட்டுகள் சுமத்தப்பட்டன.

1. உங்களது தலைமயிரைச் சுற்றி ஒதுக்காமல் இருக்கக்கடவாய் (உபாகமம் 19:27) என்ற பைபிளின்

கட்டளையை அப்பட்டமாக நொபிலி மீறித் தலையை மொட்டையடித்துக் கொண்டார்.

2. தாடியின் ஓரங்களைக் கத்தரிக்க வேண்டாம் (என்ற கட்டளையையும் மீறினார்) - லெவியர் 19:27

3. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேரும்போது, அந்த ஜாதிகள் செய்யும் அருவருப்புகள்படி செய்யக் கற்றுக் கொள்ள வேண்டாம். - உபா 18:9

4. கலப்புக் கூடாது - உபா 22: 9-11

5. கண்டுபிடித்ததாகக் கூறப்படும் - ஏசுர் வேதம் போலியானது.

எனவே, நொபிலிக்கு, கிறித்துவ சமயத்தின்மீது துரோகம் இழைத்தமைக்குக் கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் அவரைத் தப்பவிடக் கூடாது என்றும் பேராயர் வாதாடினார். எனினும் போப் அவர்கள் நொபிலி மீது நடவடிக்கை யாதும் எடுக்காமல் தப்பவிட்டார் (பக்கம் 205, A Pearl to India - By Vincent Cronin).

மோசடிகளின் மொத்த உருவமாக விளங்கிய நொபிலி இந்தியாவில் தான் புரிந்த 42 ஆண்டு சேவைக்குப் பின்னரும், எல்லோராலும் கைவிடப்பட்டுச் சென்னை மயிலாப்பூர் தூயர் தாமஸ் திருத்தலத்திற்கு அருகினில் ஓர் மண்குடிசையில் வசித்து, அங்கேயே காலமானார். காலமான போது ஒரு கிறித்துவர்கூட அவருடன் துணைக்காக இருக்கவில்லை. எனினும் நொபிலியின் சில மோசடிவேலைகள் ரோமன் கத்தோலிக்க சமயத்தினரிடையே செல்வாக்குப் பெற்றது.[7]

1. பைபிளின் பெயரை 'வேதாகமம்' என மாற்றியது.

2. சர்ச் எனும் பெயரை வேதக்கோவில் என மாற்றியது.

3. பிரசாதம், பூஜை, உபவாசம் எனும் பைபிளில் இல்லாத சமஸ்கிருத சொற்களைக் கிறித்துவ சமயத்தில் உபயோகித்தல்.

4. கொடிமரம் நடல், தேர் இழுத்தல், காவி உடை அணிதல் போன்ற பழக்கவழக்கங்கள் பைபிளுக்கு எதிரானது என்றாலும், அவை கிறித்துவத்தில் உபயோகத்திற்கு வந்தமை.

இதற்கிடையே இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனி யினர் 1795ம் ஆண்டில் 'சமயக் கழகம்' ஒன்றை அமைத்தனர்.

மதம் மாற்றத்தைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய பணிகளை மேற்கொள்வதே இக்கழகத்தின் பணியாகும். இதுவே பின்னர் லண்டன் மிஷன் சொஸைட்டி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1799ம் ஆண்டில் சீராம்பூர் மிஷன் எனும் மதம் மாற்றும் கழகம் ஒன்றும் கம்பெனியர்களால் நிறுவப்பட்டது. இதில் 1818ல் வில்லியம் ஆதம் (William Adam) என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் ராஜாராம் மோகன்ராயுடன் சமய விவாதம் செய்து, ஞானம் பெற்று, மூவொருமைக் கோட்பாடு தவறு எனவும், இந்து சமயமே உண்மையானது என்றும் அறிவித்து இந்துவாக மாறினார். அறுவடை செய்யவந்தவரே அறுப்புண்டுபோனது அந்நிய கிறித்துவர்கள் மத்தியில் பெரும் அதைரியத்தை ஏற்படுத்தியது.

7:5. பாதிரியார் துபாயிஸ்

பிரான்ஸ் நாட்டுச் சமயப் பரப்பாளர் துபாயிஸ் (Abbe Dubois) என்பவர் இந்தியாவிற்கு 1792ல் வருகை தந்து பாண்டிச்சேரியிலும், பின்னர் மைசூரிலும் தனது மதமாற்ற வேலையைத் தொடங்கினார். இவரும் ராபர்ட் - டி - நொபிலி போன்று கபட வேடதாரியாக வாழ்ந்தார். இந்தியா மீதும் இந்தியர்கள் மீதும் அளவுகடந்த வெறுப்புடன் நடந்து கொண்டார். இவர் அக்கால இந்தியாவை எவ்வாறு வர்ணனை செய்கிறார் என்பதைப் பார்க்கலாம்.

'மனித சமுதாயத்திலே அதிகம் சீரழிந்தவர்கள் இந்தியர்கள். அவர்கள் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள மரம் செடி கொடிகளும் கொடூரமானவையே, அழகு குறைந்தவையே. இங்குள்ள காடுகள்கூட ரசனை இல்லாமல் கரடு முரடாகவும், அழகற்றதாகவும் உள்ளது. இந்தியாவின் யானை, புலி ஆகியவை தவிர இதர மிருகங்கள் அனைத்தும் சீரழிவாகவும், விகாரமாகவும் உள்ளன. இங்குள்ள அனைத்துப் பொருள்களும் அசிங்கமானதே. நிலங்கள் வளம் குன்றியவை. எங்குச் சென்றாலும் அருந்தும் தண்ணீர் உப்பாகவே உள்ளது. பழங்கள் புளிப்பாகவும், சக்கையாகவும் உள்ளன. எல்லாவிடங்களிலும் பாம்புகளும்,

பூச்சிகளும் நடமாடுகின்றன. இந்நாட்டிலுள்ள ஏராளமான செடி கொடிகளும்கூட விஷமானவையே' (பார்க்கவும் இவரின் புத்தகம் "Letters on the State of Christianity in India, மற்றும் Hindu Manners and customs) இவர் மேலும் கூறுவதாவது.

'ஒவ்வொரு இந்துவும் உண்மையை (கிறித்துவத்தை) ஏற்றுக் கொள்ளாதவராய் விளங்குகின்றனர். குறிப்பாகப் பிராமணர்கள், எதிர்ப்பு வேலையில் கைதேர்ந்தவர்களாய் உள்ளனர். உலகிலேயே இவர்கள்தான் பெரிய முட்டாள்கள். இவர்களிடம் நிறைய புத்தகங்கள் உள்ளன. அவற்றில் மோசமான கருத்துகளும் பொய்களும் நிரம்பி யுள்ளன. இத்தகைய பொய்யையே அவர்கள் சாமானிய இந்துக் களுக்கும் போதிக்கின்றனர். பிராமணர்கள் சூது மிக்கவர்கள். அவர்களைக் கையாளுவது மிகவும் சிரமமானது. இவர்கள் மிகக் கோழையானவர்கள். புகழ்ந்து பேசினால் இவர் களிடமிருந்து எதனையும் பெறலாம். இவர்களுக்கு முன் யோசனையும், நன்றியுணர்வும் அறவே கிடையாது.'

மதமாற்றப் பணியில் தோல்வியடைந்த துபாயிஸ் 15.1.1823ல் பிரான்ஸ் திரும்பினார். அவர் இந்தியாவை விட்டுச் செல்லும் முன் மனமுடைந்து கீழ்க்கண்டவாறு கடிதம் ஒன்றை வெளியிட்டார்.

'இன்றைய சூழலில் நாம் எவ்வளவு கிறித்துவுக்காக மதமாற்றப் பணிகள் செய்தாலும், இந்துக்களை மதம் மாற்றிடச் செய்தல் மிகவும் கடினமாய் உள்ளது. காரணம், நமது கிறித்துவ மதத்திற்கு எதிரான பல உண்மையான கோட்பாடுகள் அவர்களிடம் உள்ளன. நாம் இன்று கிறித்துவத்தை இந்தியாவில் பரப்பிடப் பல யுக்திகளையும் பெரும் பணத்தையும் உபயோகிக்கின்றோம். ஆனால் போதுமான வெற்றியை இன்னும் நாம் பெறமுடியவில்லை. இதுபோன்ற வாய்ப்பு வசதிகள் இந்துக்களுக்குக் குறிப்பாகப் பிராமணர் களுக்குக் கிடைக்குமானால் மேற்கு ஐரோப்பா முழுமையை யும் சிவா, விஷ்ணு வழிபாட்டிற்குக் கொண்டு வந்து விடுவார்கள்' (இவரின் கடிதம் நாள் 16.11.1816).

கிறித்துவ சமயப் பரப்பாளர்களும், தேவனின் பணிவிடையாளர்களும் பிராமணர்களை ஏசினாலும், பேசினாலும், ராபர்ட் - டி நொபிலி முதற்கொண்டு துபாயிஸ்

மற்றும் இன்றைய சாது செல்லப்பா, பாதர் பெர்க்மான்ஸ், தேவ நாயகம், போன்றவர்கள் பிராமணர்கள் போன்று வேடம் அணியவும், பழக்கவழக்கங்களை மேற்கொள்வதிலும் தவறுவதில்லை. தங்களின் எதிரியாகக் கருதும் பிராமணர்களை இவர்கள் அன்றாடப் பழக்கவழக்கங்களில் கூடப் பின்பற்றுவது நடுநிலையாளர்களை அதிரவைத்துள்ளது. பிராமணர்களைக் கபடதாரி என்போர், கிறித்துவ சமய பணிவிடையாளர்களான தங்களை 'ஐயர்' எனத் தன் சபையினர் அழைப்பதைக் பெரிதும் விரும்புகின்றனர். இத்தகைய இரட்டை வேடத்தைப் பொதுமக்கள் பலர் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் ஆடம் (William Adam), துபாயிஸ் ஆகியோரின் மதம் மாற்றும் பணிகள் படுதோல்வியில் முடிந்ததால் காலனியாதிக்க சமயவாதிகள் நம்பிக்கை இழந்த நிலைக்குத் தள்ளப்பட்டனர். எனவே அவர்கள் இந்திய 'செயற்களத்திற்கு' 'புதிய யுக்தி' தேவை என்ற முடிவிற்கு வந்தனர். அத்தகைய யோசனையைத் தரவல்ல ஓர் அறிவு ஜீவியை உலகெல்லாம் தேடினர். அவர்களால் 1847ம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட நபரே மாக்ஸி முல்லர் (Frederik Maxi Million Mueller) என்பவர்.

7:6. மாக்ஸ் முல்லர் (1823 - 1900)

உலகிலேயே மிகத் தொன்மையானதும், சற்றும் மாற்றம் அடையாமல் அப்படியே பாதுகாத்து வரப்படும் ரிக் வேதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துவிட்டால் அதில் காணப்படும் பல தெய்வவழிபாடு உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டு விடும் என்றும், அப்போதுதான் அதிலுள்ள விகாரம், நகைப்புக்கு இடம்தரும் தன்மை வெளிக்கொணரப் படும் என்றும் காலனியாதிக்கவாதிகள் நம்பினர். அவ்விதமாகச் செய்து விட்டால் கிறித்துவத்தின் அழகு, செம்மை, உயர்வு ஆகியவற்றை இந்திய மக்களுக்கும் இன்னும் அழுத்தம் திருத்தமாகக் கொண்டு சென்று விடலாம் என்றும் அவர்கள் நம்பினர். எனவே ஆக்ஸ்போர்டு பல்கலைகழக பேராசிரியர்

வில்சனும், புன்சன் (Bunsen) என்பவரும் ரிக் வேதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க ஆகும் செலவைக் கிழக்கிந்தியக் கம்பெனி ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அழுத்தம் கொண்டு வந்தனர்.[8] அக்கம்பெனியின் நிர்வாகத்திலிருந்த லண்டன் வியாபாரிகளிடம் 'இந்தியாவில் அன்னிய ஆட்சியின் அடித்தளத்தை வலுப்படுத்திட எப்படியேனும் இந்தியர்களை கிறித்துவர் ஆக்கிவிட வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது. அன்னிய வியாபாரிகளும், இந்தியாவின் அளவுகடந்த வருவாயினைத் தக்க வைத்துக் கொள்ள, ஆர்வமுடன் இருந்தமையால் வில்சன் மற்றும் புன்ஸன் ஆகியோரின் ஆலோசனை அவர்களுக்கு ஏற்புடையதாகவிருந்தது. இந்த மதமாற்ற அதிசயத்தைச் செய்து காட்டுவதாக உறுதியளித்த கிறித்துவ கழகங்களுடன், கிழக்கிந்தியக் கம்பெனியினர் இணைந்து கொண்டனர்.

ரிக்வேதத்தில் 1017 பாசுரங்கள், 10580 செய்யுள்கள் 153826 வார்த்தைகள் உள்ளன. இவற்றை மொழிபெயர்க்கப் பல ஆண்டுகள் உழைக்க வேண்டியிருக்கும், எனவே இப்பணியினைச் செய்வோர் இளைஞராகவும், அறிவுக் கூர்மை உள்ளவராகவும், ஆரோக்கியமுள்ளவராகவும், சமஸ்கிருதத்தில் ஓரளவாவது அறிவு பெற்றவராகவும் இருப்பது அவசியம் எனக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் விரும்பினர். அவ்வேளையில் லண்டன் நகரில் வேலை தேடித் திரிந்த ஓர் இளமையான நபர் அவர்களால் அடையாளம் காணப்பட்டார். அவரிடம் எதிர்பார்த்த தகுதிகள் இருந்தன. அவர்தான் மாக்ஸ் முல்லர் எனும் 24 வயது ஜெர்மனிய இளைஞர். ஆண்டு சம்பளம் 200 பவுண்ட் (அக்காலத்தில் அது ஒரு பெரிய தொகை) என முடிவு செய்யப்பட்டது. முல்லர் அவர்களுக்கு உதவியாளராக Dr. ஆல்பிரட் (Dr. Alfred) என்பவரும் நியமிக்கப்பட்டார்.

இப்பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட முல்லர் தனக்கென மூன்று வழிகாட்டு நெறிகளை வகுத்துக் கொண்டார்.

1. ரிக்வேத மொழிபெயர்ப்பில், படிப்போர் ஒப்பிட்டுப் பார்க்கும் வண்ணம் ஆங்காங்கே கிறித்துவ கருத்துக்களைச் சேர்த்தல்.

2. பரிசுத்த வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் நிறைந்து காணப்படும் கொடூரமான யுத்தங்கள், நாட்டைச் சுட்டெரித்தல், பலிபீடங்களை உடைத்தல், தோப்புகளை அழித்தல், பெண்கள், குழந்தைகளைக் கொல்லுதல் ஆகியவை இந்து வேதங்களிலும் காணப்படுகின்றது என ஆதாரங்களை (?) தேடித் தெரிவித்தல்.

3. இந்துக்களை மதம்மாற்றத்திற்கு எதிராக ஊக்குவிக்கும் பிராமணர்கள் மீது வெறுப்பினை உண்டாக்கும் பொருட்டு ஒரு தத்துவத்தை உண்டாக்குதல்.

ரிக்வேத மொழிபெயர்ப்பின் ரகசிய காரணத்தை மேக்ஸ்முல்லர் அவர்கள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கின்றார்.

1. இந்தியாவின் பழமையான இந்து சமயம் என்னால் அழிக்கப்படும். அவ்வெற்றிடத்தில் கிறித்துவம் நுழைய வேண்டும்.

2. இந்தியாவில் வாழும் இலட்சக்கணக்கான மக்களின் வளர்ச்சியையும், அந்நாட்டின் தலைவிதியையும் தீர்மானிப்பதற்கு என்னுடைய வேத மொழிபெயர்ப்பு வகை செய்யும். கடந்த 3000 ஆண்டுகளாக வளர்ந்துள்ள அவர்களின் மதத்தின்வேரை, அந்த வேர் என்ன என்பதைச் சுட்டிகாட்டி, அதனைப் பெயர்த்தெறிவதே எனது லட்சியம் (நண்பர் ஒருவருக்கு 1868ல் முல்லர் எழுதிய கடிதம்).

ரிக்வேத மொழிபெயர்ப்பினை 40 வருடகால கடின உழைப்பிற்குப் பின்னர், முல்லர் செய்து முடித்தார். அவரின் ரிக்வேத மொழிபெயர்ப்பு ஆங்கிலத்தில் ஆறுபெரும் புத்தகமாக (Volume), பிராமணர்களின் புனித பாடல்கள் (Sacred Hymns of Brahmanas) எனும் தலைப்பில் ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ் நிறுவனத்தால் 1849-1910 வருட காலத்தில் வெளியிடப்பட்டது. இப்புத்தகத்தில், உலக சமயங்களின் தோற்றம் ரிக்வேதத்திலிருந்துதான் ஆரம்பம் என முல்லர் அவர்கள் கூறியுள்ளது கிறித்துவ சமய பரப்பாளர்களின் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. எனினும் அவர் சமஸ்கிருதத்தை ஆரிய மொழியென்றும், அது, வேறு இந்திய மொழிகளுடன் தொடர்பில்லாதது என்றும் அம்மொழியைப் பேசியவர்கள் ஆரியர்கள் என்றும், அவர்கள் இந்திய பூர்வ குடிமக்களுக்கு வேறுபட்டவர்கள் எனும் ஒரு

கருத்தையும் வெளியிட்டார். மேக்ஸ் முல்லர் அவர்களின் ஆரிய மொழிக் கருத்து, அன்று வாழ்ந்த கிறித்துவ சமயத்தைச் சார்ந்த வரலாற்று ஆசிரியர்கட்கு ஒரு மகிழ்ச்சிகரமான அடித்தளமாக அமைந்தது. முல்லர் 'ஆரியக் கொள்கையை' வெளியிடுவதற்கு முன்பு இந்தியாவின் எந்த இலக்கியத்திலும் ஆரிய இனக் கொள்கை கூறப்படவில்லை. இந்தியர்களைப் பிராமணர்களிடமிருந்து வேறுபடுத்த இக்கொள்கை பின்னர் தோன்றிய கிறித்துவ சமயாச்சாரியார்களால் (பிஷப் கால்டுவெல், G.U. போப் ஐயர், பாதிரியார் ஹெராஸ் போன்றவர்களால்) பெரிதும் உபயோகப்படுத்தப்பட்டது. முல்லர் அவர்களின் ஆரியக் கொள்கை வெளியானபோது 'சிந்து சமவெளி நாகரிகம்' அறியப்படவில்லை. எனினும் 1920ல் இந்நாகரிகம் அகழ்வாராய்ச்சி மூலம் தெரிய வந்ததும், ஏற்கனவே முல்லர் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட ஆரிய கொள்கையுடன் இது பொருத்தப்பட்டு ஆரிய - திராவிட பேதம் கீழ்க்கண்டவாறு புனையப்பட்டது.

1. ஆரியர்கள் சமஸ்கிருதம் பேசுபவர்கள். அவர்கள் ஆரியர் எனும் தனி இனம். அவர்கள் இந்திய பூர்வீகக் குடிகள் அல்லர்.

2. ஆரியர்கள் கைபர் - போலன் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் கிமு 1600 வாக்கில் ஆடு மேய்த்து வந்து குடியேறிய வந்தேறிகள்.

3. அவ்வாறு வந்த ஆரியர்கள் சிந்துசமவெளிப் பகுதியில் மொகன்-ஜ-தாரோ, ஹரப்பா ஆகிய பண்டைய நகரங்களில் மிகவும் பிரசித்தி பெற்றதாய் விளங்கிய திராவிட நாகரிகங்களை அழித்து அங்கு வாழ்ந்த திராவிடர்களைத் தெற்கு நோக்கி அடித்து விரட்டினர்.

இத்தகைய புனைவு மூலம் இந்திய மக்களுக்கு, குறிப்பாக தென்னிந்தியர்களுக்குக் கீழ்க்கண்ட தத்துவத்தைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வழங்கியது.

1. ஆரியர்கள் போல் ஆங்கிலேயரும் அந்நியரே

2. இந்தியர்கள், ஆரியர்களைச் சகித்துக் கொண்டது போல், ஆங்கிலேயர்களும் சகித்துக் கொள்ளப்படத் தகுதிவாய்ந்தவர்களே!

3. சிந்து சமவெளி நாகரிக காலத்தில் எழுதிப் படிக்கத் தெரியாத திராவிடர்களை எழுதிப் படிக்க வைத்து வேதங்களை உங்களுக்கு அளித்து நல்வழி செலுத்திய ஆரியர்கள் போல், நாங்களும் உங்களுக்கு நவீன கல்வியும், அதிக சிறப்பு வாய்ந்த யேசுவின் வேதத்தையும் உங்களுக்கு இனாமாகத் தருகின்றோம், பெற்றுக் கொள்ளுங்கள்!

பெரும் பொருட்செலவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் பரப்பப்பட்ட இத்தத்துவம் காலனியாதிக்கத்திற்கு எதிரான இந்தியர்களின் போராட்டத்தை மழுங்கச் செய்தது. அத்துடன் காலனியாதிக்கவாதிகளுக்கு ஆதரவான பல இந்திய இயக்கங்களைத் தோன்றச் செய்தது (தமிழகத்தின் நீதிக்கட்சி இவ்விதமாகத் தோன்றியதே). ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராகப் போராடிய தேசபக்தர்கள் பலர் பிராமணிய ஆதரவாளர்கள் என முத்திரை குத்தப்பட்டு அவர்களில் பலர் ஓரங்கட்டப்பட்டனர். இதன் காரணமாக இந்தியாவின் விடுதலை, பல வருடங்களுக்கு மேலாகத் தாமதப்பட்டு விட்டது.

இந்தியாவின் மடாதிபதிகளும், சமயாச்சாரியர்களும் இந்து மதப் பெருமையையும், மாற்றுமதத்தின் உண்மையின்மையையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லத் தவறி விட்டனர். இன்றுகூட இந்து சமய இயக்கம் மக்களால் இயக்கப்படும் இயக்கமாக இருப்பதேயன்றிச் சமயாச்சாரியார்களால் இயக்கப்படும் இயக்கமாக விளங்கவில்லை. சிறந்த கோட்பாடுகளையும், சகிப்புத்தன்மையும் கொண்ட இந்து சமய மக்கள், அவர்களைக் காப்பாற்றுவாரின்றி கொடிய விலங்குகளுக்கு இரையாகி வருகின்றனர். காப்பாற்ற முன்வரும் ஒருசில மகான்களும் மதவாதிகள் என பழித்துரைக்கப்படுகின்றனர். சமயாச்சாரியர்கள் பலர் தம்மை நாடிவரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதில் குறியாக இருக்கின்றார்களேயன்றி இந்து சமுதாயத்தினரின் நல்வாழ்வில் அக்கறை கொண்டவர்களாக விளங்கவில்லை. ஆனால் இந்தியாவிற்கு வருகைதந்த அன்னிய குருமார்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் தங்களது மதத்தைப் பரப்புவதில் மட்டுமே குறியாய் இருந்தனர். அவர்களில் பிரபலமான சிலரைக் காணலாம்.

7:7. புனிதர் பிரான்ஸிஸ் சேவியர் (St. Francis Zavier) (1506-1552)

இவரது வரலாற்றை ஏற்கெனவே கண்ணுற்றோம். ஸ்பெயினில் இவர் வாழ்ந்த காலத்தில் கிறித்துவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் பெரும் யுத்தம் நடந்தது. முடிவில் இஸ்லாமியப் படை தோற்கடிக்கப்பட்டு இஸ்லாம், ஸ்பெயின் நாட்டைவிட்டு அகற்றப்பட்டது. இவ்வித வெற்றிக் களிப்பில் வாழ்ந்த காலத்தில், இவர் மத்திய கிழக்குப் பகுதிக்குச் சென்று இஸ்லாமியரை மதம் மாற்றச் செய்யத் திட்டமிட்டிருந்தார். எனினும் இந்தியாவின் துரதிருஷ்டமாக அவர் கோவா வந்து சேர்ந்தார். மேற்கத்திய சமய சித்தாந்தத்தின்படி உலகிற்கு இரட்சிப்பு யேசு கிறித்து மூலமாக மட்டுமே கிடைக்கும் என்பதில் அன்றைய மேற்கத்திய குருமார்கள் உறுதியாக இருந்த நேரம். மேலும் ஐரோப்பியர்களுக்கு யூதம், இஸ்லாம், கிறித்துவம் மதங்களைப் பற்றி மட்டுமே அறிவு உண்டு. இந்து சமயம், பௌத்தம் பற்றிய அறிவோ, அவைகளின் சித்தாந்தங்கள் பற்றிப் போதிய ஞானமோ அவர்களுக்கு இல்லை. உருவ வழிபாடு பெரும் குற்றமானது என அவர்கள் நம்பிவந்தனர். அதனைப் பின்பற்றுவோர் தண்டிக்கப்பட வேண்டும் எனும் கொள்கை ஐரோப்பியரிடையே பிரபலமாக இருந்த சமயம் அது. பொதுவாக இந்தியர்கள் நினைப்பது போல் பிரான்ஸிஸ் சேவியர் பெரும் ஞானியும் இல்லை. கல்விச் சாலைகள் ஏற்படுத்திய பெருமானும் அல்ல. மாறாக இவர் கர்ண கொடுமையான மதவாதி.

பிரன்ஸிஸ் சேவியர் 1543ம் ஆண்டு திருச்செந்தூரில், கோவில் வளாகத்தில் போர்ச்சுகிஸியக் கடற்படை வீரர்களும், மொழி பெயர்ப்பாளர்களும் புடைசூழ பிராமணர்களுடன் 'ஒரு' இறைவன் கோட்பாடு பற்றியும், அத்தகைய இறைவனின் ஒரே பிரதிநிதி தான் என்றும், ஒன்றே மூன்று என்றும், மூன்றே ஒன்று எனும் கிறித்துவ தத்துவத்தை அறிவித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டார். உலகளாவிய இறைவனை மூன்று எனும் எண்ணிற்குள் அடைத்திட வேண்டாம் எனப் பிராமணர்கள் வாதாடினர். இவ்விதமாக

விவாதத்தில் அவர் தோற்கடிக்கப்பட்டு நகைப்புக்குள்ளானர். பிராமணர்கள் மீது அவருக்கு ஆத்திரம் பொங்கியது. பார்க்கவும்:

1. www.bharatabharatiwordpress.com/francisxaviour
2. www.apostlethomasindi.wordpress.com
3. The World of St.Francis Xaviour by Goblerno De Navarra

இவர் போர்ச்சுகீஸிய அரசனுக்கு ராஜ பிரதிநிதியாகவும் விளங்கினார். பயணம் செய்வதற்கும் பிரபலங்களைச் சந்தித்துப் பேசவும் இப்பதவி அவருக்குப் பெரும் உதவிகரமாய் இருந்தது. இவருடைய முயற்சியால் இந்தியா, சைனா, இந்தோனேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் கிறித்துவம் காலெடுத்து வைத்தது. எனினும் இவர் தன் இளம் வயதில் (46) கர்த்தரிடம் நித்திரை அடைந்தது (இளம் வயதில் இம்மகான் இறந்தது) கிறித்துவர்களின் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. 'என்னாலே உன் நாட்கள் பெருகும், உன் ஆயுளின் வருஷங்கள் விருத்தியாகும்' (நீதி 9:11) எனும் கர்த்தரின் வாக்குதத்தம் நிறைவேறாமல் போய்விட்டது. பிரான்ஸிஸ்சேவியர் அவர்கள் இறந்தபின்பு 25.10.1619ல் மகிமைப்படுத்தப்பட்டு, பின்னர் ஏப்ரல் 1622ல் புனிதர் பட்டமும் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்.

7:8. வீரமாமுனிவர்: (1680-1742)
(Constanzo Joseph Beschi)

இவர் இத்தாலியில் பிறந்து இந்தியாவில் சமயப் பணிகளை மேற்கொள்ள வந்த கத்தோலிக்க சமயப் பாதிரியார். இந்தியாவில் 1711ம் ஆண்டில் தனது பணிகளைத் துவக்கினார். திருச்சி அருகில் ஏலாக்குறிச்சி கிராமத்தில் பணியாற்றி அங்கு அடைக்கல மாதா ஆலயம் ஒன்றை நிறுவினார். தூத்துக்குடி அருகில் உள்ள காமநாயக்கன் பட்டியிலும், தஞ்சாவூர் அருகிலுள்ள பூண்டியிலும் மாதா கோயில்களைக் கட்டுவித்தார். காமநாயக்கன்பட்டியில் மாதா

கோவில் கட்டிட நாயக்க அரசர்கள் இடமும் பொருளும் கொடுத்து உதவினர். காமநாயக்கன்பட்டியில் வழிபடும் கிறித்துவர்களை இடையூறு செய்பவர், கங்கை கரையில் காராம்பசுவைக் கொன்றதற்குச் சமமான தண்டனையை அடைவார்கள் எனவும் கல்வெட்டில் நாயக்க அரசர்கள் எழுதி வைத்தார்கள்.

பெஸ்கி, தமிழில் இலக்கண நூல்களையும் (தொன்நூல், சதுரகராதி) காவலூர் கலம்பகம், வேதியர் ஒழுக்கம் ஆகிய நூல்களை எழுதினார். திருக்குறளை மேற்கத்திய லத்தீன் மொழியில் பெயர்ப்புச் செய்தார். இவர் எழுதியதில் ஒன்று 'பரமார்த்த குருவின் கதை' எனும் நூல். இந்நூலில் இந்து சந்நியாசிகளின் அறிவுதிறன் எள்ளி நகையாடப்பட்டுள்ளது. இவர் 'தேம்பாவணி' எனும் மற்றொரு நூலை எழுதினார். இந்நூலில் 'புனிதர் ஜோசப்' அவர்களின் விடுதலை சரித்திரம் Salvation History விவரிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் கிறித்துவத்தைப் பரப்ப இந்துக்கள் போன்று பெண் தெய்வ வழிபாடு பிரபலப்படுத்தப்பட வேண்டும் என நம்பினார். எனவே மேரியன்னை வழிபாடே இந்தியர்களைக் கவருவதற்கு ஏற்றது எனக் கருதினார். மேரி அன்னைக்கு வேத கோயில்கள் கட்டுவதிலும் அதற்குத் தேர்கள் செய்வதிலும் முனைப்புடன் செயல்பட்டார்.[9] இவருக்குப் புரோட்டஸ்டன்ட் கிறித்துவர்கள் மீது எல்லையற்ற கசப்பும், எதிர்ப்பும் உண்டு. இது பற்றிப் பல கதைகளும் கட்டுரைகளும் இவர் எழுதியது உண்டு.

தமிழ்க் கலாச்சாரத்தின்படி முனிவர்கள் (saint) என்போர் உலக வாழ்வில் பற்றற்றவராயும் எல்லோரையும் அன்பாகவும், சமமாகவும் நடத்தி நற்பெயர் பெறுபவராக விளங்க வேண்டும். மேலும் மகான்கள் மது, மாமிசம் ஆகியவற்றை முற்றிலும் ஒதுக்குபவராயும் இருக்க வேண்டும். இத்தகைய இலக்கணத்திற்குப் புறம்பே வீரமாமுனிவர் விளங்கினாலும் அவரை முனிவர் என்று அழைக்கக் கத்தோலிக்க சமயத்தினரும் தமிழ் ஆர்வலர்களும் தயங்கியதில்லை. அன்னாரின் மாறுபட்ட முனித்தன்மையைச் சகித்துக் கொண்டு, தமிழ்மொழிக்கு அவரின் சேவையைப் பாராட்டித் தமிழக அரசின் சார்பில் சென்னை மரினா கடற்கரையில் ஒரு சிலை எழுப்பி மகிமைப்படுத்தப்பட்டுள்ளது.

7:9. போப் ஐயர் (1820-1908)



பிராமண குருக்களை ஐயர் என அழைக்கும் பழக்கம் தமிழகத்தில் உண்டு. பிராமணர்களைக் கிண்டலும் கேலியும் செய்வதுடன் அவர்களைக் கொடுமைப்படுத்தியவர்களில் புனிதர் பிரான்ஸிஸ் சேவியர் முதல் கொண்டு பிஷப் கால்டுவெல் வரை அடங்கும். ஆனால் தூத்துக்குடி அருகில் உள்ள சாயர்புரம் சேகர கிறித்துவர்கள் அங்கு 19ம் நூற்றாண்டில் சமய மாற்றம் செய்து வந்த ஜி.யு. போப் அவர்களைச் செல்லமாக ஐயர் என்று அழைத்தனர். போப் ஐயர் அவர்களுக்கும் இத்தகைய அழைப்பு மகிழ்ச்சியைத் தந்தது. இதனைத் தொடர்ந்து தங்களை அறிவு ஜீவிகள் என அழைத்துச் செயல்பட்ட சைவ சித்தாந்த வல்லுநர்கள் சிலரும் பிற்காலத்தில்- ஜி.யு. போப் அவர்களை ஐயர் என்று அழைத்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர். சைவ சமயத்தையும், அதன் சித்தாந்தத்தையும் காக்கப் பூலோகத்திற்கு வந்த பெருமாளாகவே ஜி.யு. போப் அவர்களைச் சைவர்கள் சிலர் உருவகப்படுத்தினார்கள்.

போப், இந்திய இலக்கியங்களான திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். ஆங்கிலம் சமஸ்கிருதம், தமிழ் தெலுங்கு ஆகிய மொழிகளில் இவருக்கு ஓரளவு பரிச்சயம் உண்டு. தமிழ் நூல்களை மொழிபெயர்ப்பதாகக் கூறி அவைகளில் கிறித்துவக் கோட்பாடுகளைப் புகுத்தினார். எனினும் சூது, வாது, ராஜதந்திரம் அற்ற சில சைவசித்தாந்த வாதிகள் மற்றும் சில சைவ ஆதீனங்கள் இவர் மீது இன்றுகூட பாசமழை பெய்வது வழக்கம்.

1. ‘திருவாசகத்திற்கு உருகாதவர் ஒருவாசகத்திற்கும் உருகார்’ என போப் ஐயர் கூறியதாக வழக்கத்திலிருக்கும் ஓர்

வதந்தி, சைவ சித்தாந்த பண்டிதர்கள் பலரை மனம் நெகிழ வைத்தது.

2. போப், தான் காலமான பின் தன் கல்லறையில் 'இங்கு ஒரு தமிழ் மாணவன் தூங்குகிறான்' எனக் கல்லில் பதிக்கக் கேட்டுக் கொண்டதாகவும் ஒரு வதந்தி தமிழ் அறிவுஜீவிகள் வட்டாரத்தில் பரப்பப்பட்டது. இதன் காரணமாகத் தமிழ் வட்டார அன்பர்கள் மத்தியில் ஒரு கிளர்ச்சியும், எழுச்சியும் ஏற்பட்டன. ஆனால் லண்டனில் உள்ள அன்னாரின் கல்லறையைச் சென்று படம்பிடித்துவந்த சைவசித்தாந்த / அன்பர்களுக்குப் பெரும் ஏமாற்றமே காத்திருந்தது. 'தமிழ் மாணவன் இங்கே தூங்குகிறான்' என்ற வாக்கியம் கல்லறையில் பதிக்கப்படவில்லை. மாறாகப் பைபிள் வாக்கியம் பதிக்கப்பட்டுள்ளதைக் கண்டு ஏமாற்றம் அடைந்தனர். போப் தனக்கு அறிமுகமானவர்களுக்குக் கடிதம் எழுதும்போது கடித முகப்பில் திருவாசகப் பாடல் ஒன்றை எழுதும் வழக்கம் உள்ளவர் என்றும், அவ்வாறு ஒரு தடவை எழுதும் போது திருவாசகப் பாடலுக்கு மனம் உருகிக் கண்ணீர் சிந்தியதின் விளைவாகத் தாளில் எழுதிய அப்பாடலின் வார்த்தைகள் நனைந்து விட்டன எனவும் சைவ சித்தாந்த பண்டிதர்கள் சிலர் ஒரு வதந்தியைப் பரப்பி விட்டனர். போப் ஐயர் இன்னும் சிறிது காலம் சாயர்புரத்தில் இருந்திருந்தால் சைவ சமயத்தை ஏற்று மதம் மாறி இருப்பார் எனவும் மற்றுமோர் வதந்தி பரப்பப்பட்டது. இத்தகைய போப் ஐயரின் ஆதரவாளர்களின் எண்ணக் குவியல்கள் நடுநிலை மக்கள் பலருக்கு ஆச்சரியம் வழங்குவதாயிருந்தது. காலனி ஆதிக்கத்திற்கு ஆதரவாக இந்தியாவில் மதம் மாற்றப் பணிகளை மேற்கொள்ளப் பணமும் பொருளுடனும், ஐரோப்பிய அரசுகளின் ஆதரவுடனும் இங்கு வந்த பாதிரியார், சைவ வழிபாட்டிற்கு மதம் மாறி விடுவார்கள் எனச் சைவசித்தாந்திகள் கற்பனையில் மிதந்தனர். ஆனால் அந்தக் கற்பனை கடைசிவரை நிறைவேறவில்லை.

சாயர்புரம் பகுதியில் பணிபுரியும்போது போப் ஐயர் சாதிப் பிரச்சினையில் சிக்கிக் கொண்டார். அதன் காரணமாகத் தற்காலிகமாக அவர் லண்டனுக்குத் திருப்பி அழைக்கப் பட்டார். போப் ஐயர் இந்து மதத்திற்கு மாறிவிடக் கூடும் என அஞ்சியே அவர் லண்டனுக்குத் திருப்பி அழைக்கப்பட்டார்

எனவும் வதந்திகள் அக்காலகட்டத்தில் உலவியது. இன்றுகூட அக்கருத்துகள் கொண்ட சைவ சித்தாந்த நிபுணர்கள் பலர் இருக்கின்றனர்.

சைவசித்தாந்தம், பற்றிப் போய் ஐயர் அவர்கள் என்ன கூறியுள்ளார் எனப் பார்க்கலாம்:

1. சைவ சித்தாந்தம் கிறித்துவ சமயம் போன்று ஒரே இறைவன் கொள்கையை ஆதாரமாகப் பின்பற்றுகின்றது. அதனைக் கிறித்துவ சமயம் அளவிற்கு உயர்த்துவது அவசியம்.

2. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி எனும் மூன்றாக விரிந்து பின்பு ஒன்றாகக் குவிந்து உள்ளது கிறித்துவ சமயம். அதுபோன்றே சைவ சித்தாந்தமும் பதி, பசு, பாசம் என்னும் மூவொருமைக் கோட்பாட்டையே பின்பற்றுகிறது.

3. மூர்த்தி (உருவ) வழிபாடும், அதனில் பின்பற்றப்படும் வழிபாட்டுச் சடங்குகளும் சைவ சித்தாந்தத்தில் உள்ள ஓர் அருவருப்பான பழக்கம்.

4. திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களில் புனிதர்பவுல் (St. Paul) அடிகளார் மற்றும் அசிசி நாட்டுப் பாதிரியார் புனிதர் பிரான்ஸிஸ் ஆகியோர் வெளியிட்ட இறைக் கொள்கையே விரிந்து காணப்படுகிறது. இத்தாலியில் உள்ள லுக்னோ (Lugano) நகரிலுள்ள 'புனித மரியா' எனும் வேத கோவிலில் போப் விடுமுறையில் சென்றபோது தங்கி இருந்தார். அவர் அங்கிருந்தபோது திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களின் மொழிபெயர்ப்புப் பணியை மேற்கொண்டார். அந்நேரங்களில் திருவள்ளுவர், சமண முனிவர்கள் மற்றும் மாணிக்கவாசக சுவாமிகள் ஆகியோர் அங்குள்ள இயேசு பிரான் சிலுவை முன்பு முழங்காலிட்டுப் பாவமன்னிப்புப் பெற்றதை தான் ஆத்மார்த்தமாக கண்ணுற்றதாகவும் கூறியுள்ளார்.

5. மாணிக்கவாசகர் சுவாமி, உத்தரகோச மங்கை கோவிலில் தங்கியிருந்த காலத்தில் அக்கோவிலில் இருந்த தாசிகளுடன் உறவு கொண்டிருந்தார். இதற்கான சாட்சியம் நீத்தல் விண்ணப்பம் எனும் அவரின் பாசுரங்களில் உள்ளது. அங்கு அவர் செய்த காமக்களியாட்டத் தவறுகளை மன்னிக்க வேண்டிப் பாவ மன்னிப்புக் கேட்டுத் தன்னை ஒப்புக்

கொடுத்ததே இப்பதிகத்திலுள்ள பாடல்கள் என்றும் போப் கூறியுள்ளார் (மாணிக்கவாசகர் சுவாமிகள் உலக இன்பங்களிலிருந்து விடுதலை வேண்டியும், முக்தி வேண்டியும் பாடிய பாடல்களைப் பாவ மன்னிப்புப் பாடல்கள் என போப் ஐயர் கூறியுள்ளார்).

6. மீண்டும் மதுரை சென்றால், தான் செய்த ஏமாற்றுதலுக்கு (நரியை பரியாக்கியதற்கு) பாண்டிய அரசன் தண்டனை வழங்கி விடுவான் என அச்சம் கொண்டு மாணிக்கவாசகர் சுவாமி தனது அந்திம காலம்வரை மதுரைக்கு வருவதைத் தவிர்த்துவிட்டார் என்றும் கூறியுள்ளார்.

போப் ஐயர் அவர்களின் இத்தகைய சேவையை (?) ஆய்விட்ட டாக்டர். முத்துகுமாரசாமி அவர்கள், ஐயர் அவர்களை ஓர் உண்மையற்றவர் என வர்ணித்துள்ளார். அத்துடன் போப் ஐயர் காலத்தில் வாழ்ந்த அருமை நாயகம் என்னும் சட்டாம்பிள்ளை சாணார் ஐரோப்பிய கிறித்தவர்கள் காட்டுத்தனமான தங்களது திருமண நடத்தையினால் இழுக்கைத் தேடுகின்றனர் எனவும் கூறியுள்ளார். (பக்கம் 52 காலசுவடு பத்திரிகை - டிசம்பர் 96). போப் ஐயர் அவர்களும் சாயர்புரம் பகுதியில் களியாட்டங்களில் ஈடுபட்டிருந்தார் எனவும், இவர் தன்னைப் போலவே மாணிக்கவாசகர் சுவாமி அவர்களையும் கற்பனை செய்துள்ளார் எனக் கொள்வதற்கும் இடமுண்டு.

7:10. பிஷப் கால்டுவெல் பாதிரியார்

இவர் கி.பி. 1814ல் இங்கிலாந்தின் ஒரு பகுதியான அயர்லாந்து தீவில் பிறந்தார். இவர் சார்ந்திருந்த சமயம் கிறித்துவ பிராட்டஸ்டன்ட் சமயத்தின் பிரபிட்டீரியன் (Presbyterian) பிரிவு. புராட்டஸ்டன்ட் கிறித்துவ பிரிவில் பெரும்பான்மையாக விளங்குவது மார்ட்டின் லூதர் அவர்களால் தொடங்கப்பட்ட எவாஞ்சலிகல் சர்ச் (Evangelical Church). இப்பிரிவு ஜெர்மனிய நாட்டிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் பிரபலமாக விளங்கியது. ஆனால் கால்டுவெல் சார்ந்திருந்த புராட்டஸ்டன்ட் பிரிவு சற்று வேறுபட்டது.

பதினாறாம் நூற்றாண்டில் உலகிற்குத் தீமையைக் கொண்டு வந்த ஒரு நிகழ்ச்சி அயர்லாந்தில் நடந்தது. கெரார்ட் சாவின் (Gerard Chawin) என்பவருக்கும் ஜெனி (Jeanne Lefronic) என்ற பெண்மணிக்கும் ஒரு குமாரன் பிறந்தார். அவர் பெயர் ஜான் சாவின் (John Chawin). தன்னுடைய பெயரைப் பின்பு ஜான் கால்வின் (John Calvin) என மாற்றிக் கொண்டார்.[10] 16ம் நூற்றாண்டு தொடங்கி உலகில் நடந்த சமயக் கொடுமைகளுக் கெல்லாம் இவரே காரணம் எனலாம். கத்தோலிக்க சமயத்தை இரண்டாகப் பிரித்த பெருமை இவருக்கும் உண்டு. திவ்விய நற்கருணை பெறுதல் சொர்க்கலோக தத்துவம், ஞானஸ்தானம் பெறுதல் ஆகியவற்றில் கால்வினுக்குத் தீவிர நம்பிக்கை இருந்தது. கிறித்துவ மக்கள் என்ன உணவுகளை உண்ண வேண்டும், எவ்வாறான உடை அணிய வேண்டும் என்பதையெல்லாம் இவர் நிர்ணயம் செய்ய முயற்சி செய்தார். மக்களிடையே இவருக்குச் சிறந்த மதகுரு என்ற செல்வாக்கு இருந்தது. இவருடைய தீவிரவாதக் கிறித்துவ கொள்கையை ஏற்காதவர்கள் தீயிலிட்டுக் கொல்லப்பட்டனர். இவ்வாறு கொல்லப்படுவதற்கு முன் அத்தகையோர் சாத்தானின் பிள்ளைகள், பிசாசுவின் சேனையர்கள், நரகத்திலிருந்து தப்பி வந்த பிள்ளைகள், எனப் பல்வேறாகக் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டது. மதகுருக்களின் (பாஸ்டர்) எதிர்வாத நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்தவர்களுக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டது. பாஸ்டர்கள் தங்களை கடவுளின் பிரதிநிதிகள் எனவும் கடவுளின் ஏஜெண்டுகள் எனவும் அறிவித்துக் கொண்டனர். பைபிளில் காணப்படும் வசனங்களுக்குப் பாஸ்டர் கூறும் விளக்கங்களைத் தவிர வேறு வகையில் அதனைப் புரிந்து கொண்டாலும், பேசினாலும் அவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. இவ்வாறு புராட்டஸ்டன்ட் கிறித்துவ மதவாத தீவிர கொள்கை அயர்லாந்தில் தலைவிரித்தாடியது. அத்துடன் அயர்லாந்தில் பிறந்த புரட்டஸ்டன்ட் கிறித்தவர்களுக்குச் சொர்க்கம் நிச்சயம் என்ற கொள்கையும் வழக்கத்திலிருந்தது. இத்தகைய தீவிரவாத புரட்டஸ்டன்ட் பிரிவில் வடக்கு அயர்லாந்தில் 1814ல் பிறந்தவர் ராபர்ட் கால்டுவெல். இவருடைய பெயர் பிற்காலத்தில் பிஷப் கால்டுவெல் எனப் பிரபலமாகியது.

[11]அயர்லாந்தில் மக்கள் புராதன காலத்திலிருந்து ஒற்றுமை யுடனும் சமாதானத்துடனும் வாழ்ந்து வந்தனர். அவர்களுக் கிடையே பிரிவினை இருந்தது இல்லை. எனினும் தீவிர புரொட்டஸ்டன்ட் மதம் (கால்வின் பிரிவு) இங்குப் பரவ ஆரம்பிக்கவும் நிலைமை தலைகீழாக மாறியது. கத்தோலிக்கவாதிகள் தென்பகுதியிலும் புரொட்டஸ்டன்ட்டுகள் வடபகுதியிலும் வாழ்ந்து வந்தனர். கத்தோலிக்கர்களே பெரும்பான்மையானவர்கள். எனினும் அவர்களைப் புரொட்டஸ்டன்ட் ஆட்சியாளர்களும், புரொட்டஸ்டன்ட் மக்களும் கிண்டலும் கேலியும் செய்தனர். கத்தோலிக்கர்களை சாத்தானின் பிள்ளைகள் என அழைத்தனர். கத்தோலிக்கர்களுக்கு நிலஉரிமை கிடையாது, நிலம் வாங்குவது தடைசெய்யப்பட்டது. தேர்தலிலும் ஓட்டளிக்க முடியாது. ராணுவத்திலோ, நீதி நிர்வாகத்திலோ அவர்களுக்கு வேலை கிடையாது எனவும் சட்டம் அமலிலிருந்தது. நிலங்கள் யாவும் புரொட்டஸ்டன்ட் சமயப்பிரிவினருக்கே ஒதுக்கப்பட்டன. கத்தோலிக்கர்கள் குத்தகைதாரராகவும், அடிமைகளாகவும் வேலை செய்தனர். அவர்கள் தீண்டதகாதவர்களாக நடத்தப்பட்டு, நகரங்களிலிருந்து 5 மைல் தொலைவிற்கு வெளியேதான் வசிக்க வேண்டும் எனவும் சட்டம் இயற்றப்பட்டிருந்தது.

அயர்லாந்து தீவு முழுமையிலும் உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டது. அனைத்து மக்களும் உருளைகிழங்கையே மூன்று நேர உணவாக உட்கொண்டனர். இத்தீவில் இருந்த காடுகள் அனைத்தையும் புரொட்டஸ்டன்ட்டுகள் அழித்து, மரங்களை வீடுகட்டும் பொருட்டு லண்டன் கொண்டு சென்றனர். காடுகள் அழிந்ததால் குளிர்காலத்தில் மரங்களின் மேல் வழக்கமாகப் படியும் புகைபோன்ற பனிப்படலம் (வெம்பா) நிலத்தில் பயிர்செய்யப்பட்ட உருளை பயிர்கள் மீது படிந்தது. இவ்விதமாக குளிரும், ஈரப்பதமும் அதிகமானதால் உருளைக்கிழங்கு பயிரை பூஞ்சண நோய்கள் (fungal diseases) தாக்கி அழித்தது. இதன் விளைவாக அயர்லாந்து முழுமையிலும் 1840ம் ஆண்டிலும், 1847-1851ம் ஆண்டுகளிலும் விளைச்சல் இன்றிப் பஞ்சம் தலைவிரித்தாடியது. இப்பஞ்சத்திற்குக் கத்தோலிக்க சமயமும் அதன் உருவ வழிபாட்டு முறைகளுமே காரணம் என்று புரொட்டஸ்டன்டுகளால் குற்றம் சாட்டப்பட்டது. மக்கள், உணவு உண்ண

உருளைக்கிழங்கு இன்மையால் கிடைத்த சிறிதளவு கிழங்குகளைக் கஞ்சியாக்கிக் குடித்தனர். மக்கள் எலும்பும் தோலுமாக ஆனார்கள். காலரா, டைபாய்டு, வயிற்றோட்டம் ஆகிய நோய்கள் மக்களைப் பீடித்தன. மக்களின் உடம்பெல்லாம் பேன் புழுத்து வடிந்தது. தோல் நோய்களும் மிகுந்திருந்தன. குழந்தைகள் உணவின்றி அலறின, அவைகளின் கை, கால்கள் தொங்கின. எலும்பு உருகிக் குழந்தைகள் மெலிந்து செத்தன. இறந்த குழந்தைகளை அடக்கம் செய்யப் பெட்டிகளும் இல்லை, ஆட்களும் இல்லை. சிறிது பள்ளம் தோண்டிப் பூமிக்குச் சில அங்குல ஆழத்தில் சடலங்கள் புதைக்கப்பட்டன. நாய்கள், புதைக்கப்பட்ட குழந்தைகளின் உடலைக் கவ்விக் கொண்டு ஊர்முழுவதும் ஓடின. இவ்விதமான பஞ்சம், பசி, பட்டினி, நோய், அரசு அடக்குமுறை காரணமாக 20 ஆண்டுகளுக்குள் அயர்லாந்து மக்கள் தொகை 3ல் ஒன்றாக குறைந்தது, பஞ்சத்தை விசாரணை செய்ய 11 ஆணையங்களும் (கமிஷன்களும்) 61 குழுக்களும் அமைக்கப்பட்டது. எனினும் பலன் யாதும் இல்லை. கொடுமை தாங்காமல் கத்தோலிக்கர்கள் பலர் கள்ளத் தோணிகளில் சென்று புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்த அமெரிக்காவில் குடியேறினர்.

இத்தகைய நிலையிலிருந்த அயர்லாந்திலிருந்து இந்தியா விற்குப் பஞ்சம் பிழைக்கவும், கிறித்துவத்தைப் பரப்பவும் வந்தவர் கால்டுவெல். பஞ்சத்தில் அடிபட்ட இவருக்கு இந்தியாவில் மூன்று நேர அரிசி உணவும், பனை பொருட்களாகிய நுங்கு, பதநீர், கருப்புக்கட்டி ஆகியன வேண்டியளவு கிடைத்தது. இந்திய கிறித்துவ அரசால் வசதியும் வாய்ப்பும் இவருக்குப் பெருமளவு வழங்கப்பட்டது. எனவே பொதுவாக நாம் எண்ணுவது போல் இவர் கிறித்துவ மதத்தை மட்டும் பரப்ப இந்தியா வரவில்லை. இவரைப் போன்றே 15ம் நூற்றாண்டிலிருந்து 20ம் நூற்றாண்டு வரை இந்தியாவிற்கு அந்நிய பாதிரியார்கள் வருகை பெருமளவில் இருந்தது. இவர்களது நோக்கம் இந்தியாவில் தன்னலமற்ற சேவை செய்வதற்காக அல்ல. மாறாகப் பஞ்சம்பிழைக்க வந்தவர்களே அதிகம். பாதிரியார்களின் வருகையில் இதர நோக்கங்கள் வருமாறு:

1. மாதா மாதம் கிறித்துவ சபையிலிருந்து சம்பளம் பெற வேண்டும்.

2. வருடா வருடம் கோடையில் இங்கிலாந்து சென்று வர சம்பளத்துடன் விடுமுறை வேண்டும்.

3. இந்தியாவில் நல்ல உணவு உட்கொண்டு, ஓய்வு நேரத்தில் தெய்வீக திருக்குமரனின் பரிசுத்த வேதாகமத்தைப் பரப்ப வேண்டும்.

4. வயது முதிர்ந்தபின் ஓய்வு ஊதியம் வேண்டும். (தனது அந்திம காலத்தில் கூடுதலாக ஓய்வு ஊதியம் கேட்டுக் கால்டுவெல் பாதிரியார் போராடியது இங்கு நினைவு கூறப்படுகிறது. பார்க்கவும் பக்கம் 273, Robert Caldvell - A Scholar Missonary by - Vincent Kumaradoss)

கால்டுவெல் அயர்லாந்தில் கழித்த இளம் வயதில் அங்கு நிலவிய மொழிப் பிரச்சினையைச் சற்று ஆய்விடலாம்:

அந்நாட்டில் பெரும்பான்மையாக விளங்கிய கத்தோலிக்க கிறித்தவர்கள் பேசிய தாய்மொழி காலிக் (Gaulic). இம்மொழி ஆங்கிலத்தைவிட எழுத்திலும், பேச்சிலும், தொனியிலும் சிறப்பானது. ஆதியில் கர்த்தர் மனிதனைச் சொர்க்கலோகமாகிய ஏடன் தோட்டத்தில் படைத்தபோது, முதல் குடிமக்களாகிய ஆதாமும் ஏவாளும் பேசிய மொழி காலிக்மொழி என்பது அயர்லாந்து கத்தோலிக்கர்களின் நம்பிக்கை. கத்தோலிக்க மக்களின் இம்மொழி அழிக்கப்பட்டாலே கத்தோலிக்கர்களின் சிலை வழிபாட்டு மூடநம்பிக்கை நீங்கி அயர்லாந்து சுத்தப்படும், மேன்மைபடும், பஞ்சமும் தீரும் எனப் புரொட்டஸ்டன்ட் கிறித்தவர்கள் நம்பினர். எனவே காலிக் மொழி பேசுவதை அயர்லாந்தில் தடைசெய்தனர். அம்மொழி பற்றிப் பல்வேறு இகழ்ச்சி வரலாறுகள் பிரபலப்படுத்தப்பட்டன. ஆங்கிலக் கல்வி கட்டாயமாக்கப்பட்டது. ஐநூறு ஆண்டிற்கு முன்பு 80 சதவீத மக்களால் பேசப்பட்ட காலிக் மொழி இன்று மூன்றுசதவீத மக்களால் மட்டுமே பேசப்படுவது என்பது புரொட்டஸ்டன்ட் சமயத்தாரின் மொழி வெறியை வெளிகாட்டுவதாய் அமைந்துள்ளது. ஆங்கிலம் புகுத்தப்பட்டாலே காலிக் மொழி பேசும் கத்தோலிக்கர், புரொட்டஸ்டன்ட் சமயத்திற்கு மதம் மாறக் கூடும் என்று ஆங்கில ஆட்சியாளர்கள் நம்பினர். கிபி

1618லிருந்து முப்பது வருடகாலமாக ஐரோப்பாவில் நடைபெற்ற முப்பதாண்டு போரில் கத்தோலிக்க - புரொட்டஸ்டன்ட் சமய பிரிவுகளுக்கிடையே பெரும் கொலைவெறி தாண்டவமாடியதை ஏற்கெனவே பார்த்தோம். எனவே புரட்டஸ்டன்ட் ஆட்சியாளர்களாகிய ஆங்கிலேயர்கள் அந்நாட்டிலுள்ள கத்தோலிக்க கிறித்துவர்களைத் தங்களைபோன்ற வெள்ளையர்கள் என்றும் பார்க்காமல் பல அடக்குமுறைகளை அவர்கள் மீது கட்டவிழ்த்து விட்டனர். இதன்பொருட்டுப் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் பல சட்டதிட்டங்கள் இயற்றப்பட்டன. அவற்றில் மிகவும் கொடியது Test Act of 1673 என்பது. இச்சட்டத்தின்படி கத்தோலிக்கர்கள் பிரிட்டிஷ் அரசு பணியில் சேர வேண்டுமெனின் ஏதாவது புரொட்டஸ்டன்டு வேதகோவிலுக்குச் சென்று புரொட்டஸ்டன்டாக மதம் மாறி, தெய்வீக நற்கருணையும், ஞானஸ்தானமும் பெற்று அதற்குரிய சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டும். இத்தகைய சான்றிதழின் பெயர் Test certificate எனப்பட்டது.

இதுபோன்ற சமய, சமுதாய, பொருளாதார மொழி பிரச்சினை தன் நாட்டில் உச்சகட்டத்திலிருந்த காலத்தில் அயர்லாந்து தீவிலிருந்து இந்தியாவுக்குச் 'சமயப் பணியாற்றல்' என்ற போர்வையில் காலனியாதிக்கத்திற்கு வலுசேர்க்க வந்து சேர்ந்தவர் கால்டுவெல் பாதிரியார். இவ்வாறாகப் பிறவியிலே குற்றப் பின்னணி உள்ளவர் கால்டுவெல் என்பதும், அவரின் ஆன்மிக குரு ஜான் கால்வின் எனும் கொடூர திருமறையாளர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடப்படுகின்றது.

இத்தகைய சமயக் கொடுமைகளிலிருந்து விடுபடத் தங்கள் நாட்டை இங்கிலாந்து நாட்டின் பிடியிலிருந்து வேறுபடுத்தித் தனிநாடு அமைக்கக் கத்தோலிக்கர்கள் (இருபதாம் நூற்றாண்டுவரை) துப்பாக்கி ஏந்திப் போராடினர். எனவே தனிநாடு கோரிக்கை எத்தகைய தத்துவங்களிலிருந்தும், சூழ்நிலைகளிலிருந்தும் பிறக்கின்றது என்பது கால்டுவெல் அவர்களுக்கு நன்கு பரிட்சயம் ஆனதே. அதனை இந்தியாவிலும் செயல்படுத்திட சரியான வியூகத்தை வகுத்திட அவர் விரும்பினார்.

கால்டுவெல் 8.1.1838ல் சென்னையில் தனது காலை ஊன்றினார். பின்னர் 28.11.1841ல் நாசரேத் மற்றும்

இடையன்குடி வந்துசேர்ந்து தனது வேலையை ஆரம்பித்தார். இவர் தனக்கென வகுத்துக் கொண்ட பணிகளாவன:

1. பல கோடி இந்தியரை 10-15 கிறித்துவ ஆங்கிலேயர்கள் அடக்கி ஆள்வது கர்த்தரின் ஆசீர்வாதத்தால் (devine plan) மட்டுமே சாத்தியமாகி உள்ளது. அதற்கான உதவிகளைத் தன்னைப் போன்ற பாதிரியார்கள் வழங்க வேண்டும்.

2. தமிழ்மொழியினைச் சமஸ்கிருதத்திலிருந்து தனிமைப் படுத்தி (அதற்கான ஒரு சில ஆதாரங்களைத் தேடி அலைந்து) தமிழர்களின் தனித்தன்மையை (?) வெளிக்கொணருதல்.

3. பிராமணர்களைத் தனிமைப்படுத்துவது.

4. மறவர், நாயக்கர், சாணார் (நாடார்). தலித் மக்களை இழிவுபடுத்திப் பேசுதல், எழுதுதல். அவர்களின் பெருமையைச் சீர்குலைத்தல்.

5. நாடார்கள், ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு வந்து தென்தமிழ் நாட்டில் குடியேறிய ‘வந்தேறிகள்’ என்பது.

6. பண்டைய தமிழர் சமயம் பூத வழிபாடு முறையைச் சார்ந்தது. அது இந்து சமயம் (?) அன்று என்பது.

7. நாடார்கள் (சாணார்கள்) தலைவன் முற்காலத்தில் இராவணனின் தலைமை அமைச்சராக விளங்கினான் எனும் ஆதாரமற்ற வரலாற்றைக் கூறியது.

8. மறவர்களின் வீரகுணம், தமிழர்களின் அமைதி வாழ்க்கைக்குப் புறம்பானது என்பது (இதன் மூலம் தமிழர்களின் வீரத்தை இழிவுபடுத்தி மடக்கி மிதித்து ஆங்கிலேய கிறித்துவர்களின் ஆட்சிக்கு ஊறு சேராத வண்ணம் பார்த்துக் கொள்வது).

9. பிராமணர்கள், வேளாளர்களைச் சூத்திரர்கள் பட்டியலில் சேர்த்துள்ளனர் எனும் பொய்த் தத்துவத்தை வெளிப்படுத்திப் பிராமணர் - வேளாளர், வேதாந்தம் - சித்தாந்தம் கசப்புணர்ச்சிக்கு வழிகோல்வது.

10. இலங்கையில் உள்ள தமிழர்களைத் தனித் திராவிட இனம் எனவும், சிங்களவர்களை ஆரியர்கள் எனவும் அறிவித்து அங்கு உள்நாட்டு இனப்போர் பல நூறு ஆண்டுகள் நடைபெற வித்திட்டது.

11. பிராமணர்கள் எல்லா இனத்தவரையும், எல்லா வழிபாட்டு மக்களையும் தங்களுடன் சேர்த்துக்கொள்வதையே முழு வேலையாகச் செய்து வருகின்றனர். இத்தகைய பிராமணர்களின் ஒன்று சேர்க்கும் முயற்சியை முறியடிக்க வேண்டும் (R. Caldwell - Lecures பக்கம் 42). அதற்கு வேண்டிய பிரிவினைவாதக் கருத்துகளைத் திரட்டுதல் மற்றும் வெளியிடுதல் செய்யப்பட வேண்டும். (இதன் விளைவாக எழுந்ததே தமிழகத்தின் திராவிட இயக்கங்கள் Castes of Mind - Nicholas B. Dirks பக்கம் 143)

கால்டுவெல் - நாடார்களைப் பற்றி

கால்டுவெல் 1849ம் ஆண்டில் 'திருநெல்வேலி சாணார்கள் அவர்களின் மதம் - மனநிலை மற்றும் பழக்க வழக்கங்கள்' (Tinnevelly SHANARS, a Sketch of their Religion and their Moral Condition and Characteristics, as a Caste) எனும் 77 பக்கங்கள் கொண்ட ஒரு சர்ச்சைக்குரிய பிரசுரத்தை ஆங்கில - அரசு ஆதரவுடன் ஆங்கிலத்தில் வெளியிட்டார். அடுத்த ஆண்டில் இது புத்தகவடிவாக லண்டனில் வெளியிடப்பட்டது. இப்புத்தகம் இன்றும் சென்னை கன்னிமாரா படிப்பகத்தில் உள்ளது. அப்புத்தகத்தில் கால்டுவெல் வரிக்கு வரி நாடார்களையும் பக்கத்திற்குப் பக்கம் பிராமணர்களையும், இந்து சமயத்தையும் இழித்தும், பழித்தும் கூறியுள்ளார். நாடார்களைப் பற்றி என்ன கூறுகின்றார் எனப் பார்க்கலாம்.

1. நாடார்களுக்குப் (சாணார்களுக்கு) பனை ஏறுதலும், கருப்பட்டி தயாரித்தலும் முக்கிய தொழில். சிலர் விவசாயிகளாகவும், வியாபாரிகளாகவும் உள்ளனர். (புத்தகத்தின் பக்கம் 4)

2. சாணார்கள் ஸ்ரீலங்காவிலிருந்து தமிழக தென் மாவட்டங்களில் குடியேறிய 'வந்தேறிகள்'. அவர்கள் குடியேற வந்தபோது பனங்கொட்டைகளைத் தமிழகம் முழுவதும் விதைத்தனர். (பக்கம் 4/ பத்தி 3).[12]

3. இராவணனுடைய பிரதம மந்திரி மகோதாரா என்பவன் சாணார் குலத்தவன். (இதற்கு ஆதாரம் ஏதும் கால்டுவெல் பாதிரியாரால் கொடுக்கப்படவில்லை). சாணார்கள் ஆடிமாதம் முதல் தேதியை விடுமுறை நாளாகவும், மிகவும் மகிழ்ச்சி

கரமான நாளாகவும் கொண்டாடுகின்றனர். ஏனென்றால் இதே தேதியில்தான் சீதையை இராவணன் கவர்ந்து சென்றான். இராமனுடைய துயரத்தைச் சாணார்கள் சந்தோஷமான நாளாகக் கொண்டாடுகின்றனர் - பக்கம் 28. (இதற்கான சாட்சியங்களைக் கால்டுவெல்லால் கொடுக்க முடியவில்லை. வெறும் யூகத்தின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. ஆடி மாதம் இறுதி தேதி, கொல்லம் ஆண்டின் கடைசி நாள். இதனை நாடார்கள் மட்டுமின்றித் தென்மாவட்டங்களில் உள்ள மற்றச் சமுதாயத்தினரும் 'ஆடி இறுதி' என மகிழ்வான நாளாகக் கொண்டாடுகின்றனர். கால்டுவெல் ஆடி இறுதி என்பதற்குப் பதிலாக ஆடி முதல் தேதி எனத் தவறாகக் குறிப்பிட்டுள்ளார்.)

4. சாணார்கள் கடவுளுக்குப் பயப்படுகிறவர்கள் அல்லர். பொய் சொல்லுவதற்குத் தயங்காதவர்கள். ஏமாற்று வேலையையும், தாழ்வான குணங்களையும் உடையவர்கள் (பக்கம் 33). இவர்கள் அறிவுபூர்வமானவர்கள் அல்லர். மிகவும் கோழையர்கள் கூட! இவர்கள் நன்றி மறப்பவர்கள். சுயநலவாதிகள், சதிகாரர்கள், ஏமாற்றுக்காரர்கள், வணிக பொருள்களைத் திருடுபவர்கள் (பக்கம் 38, 39), படிப்பறிவு இல்லாதவர்கள் (பக்கம் 52), நிலப்பிரச்சினைகளிலே காலத்தைக் கழிப்பவர்கள் (பக்கம் 54).

5. சாணார்கள் சோம்பேறிகள், மந்தபுத்தி உடையவர்கள், அவர்களின் குழந்தைகள் அல்லது உறவினர்கள் காலரா நோயால் சாகும் தருவாயில் இருந்தால்கூட விழித்திருந்து அவர்களுக்கு ஊழியம் செய்யாமல் தூங்கும் தன்மை உடையவர்கள் (பக்கம் 57).

6. சாணார்கள் சுய சிந்தனை அற்றவர்கள். சுயமாகச் சிந்திக்காமல் தங்களுடைய முன்னோர்கள் செய்த / கூறிய செயல்களுக்கே மதிப்புக் கொடுப்பவர்கள். தங்களின் வாழ்நாளில் பாதியைச் சோம்பேறித்தனமாகவே கழிப்பவர்கள். எந்தத் தொழிலைச் செய்தாலும் இவர்களுக்கு அதனைப் பூரணமாகச் செய்யும் திறமை கிடையாது. கடனில் மூழ்கி இருப்பவர்கள், ஏழைகள் (பக்கம் 58).

மொத்தத்தில் மேற்கிந்திய தீவிலுள்ள நீக்ரோ அடிமைகளை விடச் சாணார்கள் அறிவாற்றலிலும், செயல்திறனிலும் தாழ்ந்தவர்கள் (பக்கம் 62) என்றும் எழுதியுள்ளார்.

கால்டுவெல்லுக்கு மறுப்பு

இக்காலக்கட்டத்தில் இந்துக்களின் ஒரு பிரிவினர் கால்டுவெல் பாதிரியாரின் பொய்ப் பிரச்சாரத்தை உண்மை என நம்பி நாடார்களை (சாணார்களை) இழிந்த சாதியினர் எனவும், அவர்களைத் திருச்செந்தூர் முருகன் கோயிலுக்குள் அனுமதிக்கப்படக்கூடாது எனவும் தடுத்தனர். இது சம்பந்தமாக வழக்கு ஒன்றும் நாடார்களுக்கு எதிராக ஸ்ரீவைகுண்டம் நீதிமன்றத்தில் தொடரப்பட்டது (OS நம்பர் 88 of 1872). அவ்வமயம் ஈரோடு மாவட்டம் பாசூர் எனும் ஊரிலுள்ள மடாதிபதி அய்யாச்சாமி தீட்சிதர் (பிராமணர்) கால்டுவெல் பாதிரியாரின் பொய்ப் பிரச்சாரத்தைக் கடுமையாக எதிர்த்தார்.[13] அதுமட்டுமின்றி நாடார்கள் ஸ்ரீலங்காவிலிருந்து இங்கு வந்து குடியேறிய 'வந்தேறிகள்' அல்லர் என்றும், அதற்கு மாறாக அவர்கள் தமிழகத்தை ஆண்ட பாண்டிய குலத்தைச்சார்ந்தவர்கள், சத்திரியர்கள் எனவும் ஸ்ரீவைகுண்டம் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தார். மடாதிபதியின் சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு நாடார்கள் மீதான ஆலய பிரவேச தடுப்பு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. நாடார்கள் வென்றனர்.

இதுபோன்று தோன்றிய கமுதி மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் ஆலய பிரவேச வழக்கில் (OS 33/1898) நாடார்களுக்காகத் தில்லைவாழ் (தீட்சிதர்) அந்தணர்களும், பாசூர் அந்தணர்களும் மதுரை சார்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தனர். நாடார்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் கால்டுவெல் அவர்களின் பிரசுரங்கள் முன் வைக்கப்பட்டன. இவ் வழக்கினை விசாரித்த அன்றைய நீதிபதி, நாடார்களுக்காகச் சாட்சியம் கூறிய தீட்சிதர்களையும், பாசூர் அந்தணர்களையும் கடுமையான அவமதிப்பிற்கு உள்ளாக்கினர் (பக்கம் 167-170-தோள் சீலைக் கலகம்). நாடார்கள் தண்டிக்கப் பட்டனர்.

நாடார்களுக்கு மட்டும் அல்லாமல், தொண்டை மண்டல வெள்ளாள கவுண்டர் சமுதாயம் ஆகியவற்றிற்கும் பாசூர் மடாதிபதியும் அவ்வூர் அந்தணர்களும் 18, 19, 20ம் நூற்றாண்டில் சமுதாய குருவாகப் பெரும் சேவை ஆற்றி யுள்ளனர். நாடார்களைப் பொறுத்த அளவில் அவர்களின்

ஆன்மீக, வணிக மற்றும் பொது வாழ்விற்கு இவர்கள் பெரும் துணையாய் விளங்கியுள்ளனர். நாடார்கள் வாழும் கிராமங்களைப் பாகூர் அந்தணர்களின் குடும்பம் ஒவ்வொன்றும் தனதாக்கி (தத்தெடுத்தும்) 5-10 ஆண்டுகளுக்கு ஒரு தடவை அக்கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு வேதாந்த சைவத்தை எடுத்து விளம்பி, சிவ தீட்சை வழங்கி, பூணூல் அணிவித்து, சத்திரியர்கள் என அறிவித்து தன்னம்பிக்கையையும் உற்சாகத்தையும் வழங்கினார்கள். நாடார்கள் வசிக்கும் ஊர்களுக்கு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் சிலையைப் பல்லக்கில் தூக்கிச் சென்று (அன்றைய ஆலய பிரவேச தடையை முறியடிக்க) வழிபாடு நடத்திடச் செய்தனர். அதனில் ஒரு விக்ரகம் இன்றும் சேலம் கருமாபுரம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய குருக்கள் வசம் சித்தர் கோவில் உள்ளது[14] (பக்கம் 114, The History of Nadars by S. Sarada Devi).

சிவதீட்சை பெற்றுப் பூணூல் அணிந்த நாடார்கள் சாதிப் பெயர் அன்றி சத்திரியர் எனப் பொதுவாக அழைக்கப்பட்டனர். (இதன் காரணமாகப் பிறந்ததே சத்திரிய வித்தியாசாலைகள்). கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு வரை தென்தமிழகத்தில் சிறு கிராமங்களில் கூட இவ்வாறு பூணூல் அணிந்த நாடார்கள் பலர் காணக்கிடைத்தனர். உதாரணத்திற்கு இந்நூலின் ஆசிரியரின் தந்தையார் உமரிக்காடு (உமரிமாநகர்) சாமி நாடார் அவர்களும், அவரது தமையனார் சத்திரியர் அருணாசல நாடார் அவர்களும் பூணூல் அணிந்திருந்தனர்.

இதன் காரணமாகவே உமரி காசிப்பழ நாடார் அவர்கள் 1987ல் எழுதியுள்ள 'உமரிமாநகர் தல வரலாறு' எனும் நூலில் நாடார்களின் குருக்களாகப் பாகூர் அந்தணர்களைக் குறிப்பிட்டுள்ளதை நாம் காணலாம். பாகூர் அந்தணர்களின் சேவையை மேலும் தெரிய விரும்பினால் www.sishri.org எனும் வலைதளத்தை அல்லது விருதுநகர் வன்னியபெருமாள் மகளிர் கல்லூரி சரித்திரப் பேராசிரியை முனைவர். சாரதாதேவி அவர்களின் நாடார்கள் பற்றிய The History of Nadars எனும் நூலில் காணலாம்.

'பாம்பையும், பார்ப்பானையும் ஒன்றாகக் கண்டால் முதலில் பார்ப்பானை அடி' என்ற ஈவேரா பெரியாரின் பார்ப்பனக் கசப்பு வார்த்தைகளைப் பாகூர் அந்தணர்கள்

திராவிட குரு பிஷப் கால்டுவெல்

கால்டுவெல்லை பொய்யர் என நிறுவிய அருமைநாயகம் என்ற சட்டாம்பிள்ளை சாணார் (நாடார்) கிறித்துவர்

பொய்யென அதற்கு 150 ஆண்டுகளுக்கு முன்பே நிருபித்துள்ளனர். பாம்பையும், பார்ப்பனனையும், அன்னிய பாதிரியையும் ஒரு சேரக் கண்டால் முதலில் அன்னிய பாதிரியையும் பின் பாம்பை மட்டும் அடி என்பதே உண்மையான கருத்தாகும். இந்த உண்மை இன்று வரை மறைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி நாடார்களைக் கேவலமாகச் சித்தரித்த கால்டுவெல் பாதிரியைத் 'திராவிட குருவாக' ஏற்றுள்ள திராவிட அரசியல் இயக்கங்களின் செயல்கள், ஏற்புடையதாகவும் விளங்கவில்லை.

கால்டுவெல்லுக்கு எதிர்ப்பு

சாணார்களைப் பற்றிக் கால்டுவெல் எழுதிய கருத்துக்கள் அக்காலகட்டத்தில் கிறித்துவ நாடார்கள் மத்தியிலும்கூடப் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது. எதிர்ப்பை முன்னின்று நடத்தியவர் அருமை நாயகம் என்ற சட்டாம்பிள்ளை எனும் கிறித்துவ சாணார். இவர் கொற்கை கிராமத்தைச் சார்ந்த பணக்கார சாணார்.[15] இவரைத் தவிர சாமுவேல் சற்குணர், ஞானமுத்து நாடார் ஆகிய கிறித்துவ சாணார்களும் கால்டுவெல் பாதிரியின் கருத்துகளைக் கடுமையாகச் சாடினர். கால்டுவெல் தமிழ்ச் சரித்திரத்தைச் சரியாகப் புரியாதவர். பொய்யர், ஒரு சில நடப்புகளை உலக நடப்பு எனப் பேசக் கூடியவர் எனக் குறிப்பிட்டுள்ளனர்[16] (பக்கம் 197-202, Robert Caldwell: Ascholar - Missionary in Colonial South India - by Vincent Kumaradas)

மேற்கத்திய பாதிரிகள் தங்கள் விருப்பம் போல் உண்மைக்கு மாறாக பைபிளை மொழி பெயர்க்கின்றனர் என்பது சட்டாம் பிள்ளையின் குற்றச்சாட்டு. சிலுவை வணக்கம் ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்றும், இந்திய கிறித்துவர்கைள இந்து கிறித்துவர்கள் என்றே அழைக்கப்பட வேண்டும் என்றும் இவர் வலியுறுத்தினார். சர்ச்சுகளில் பழைய ஏற்பாட்டின் அடிப்படையிலே வழிபாடு நடத்தப்பட வேண்டும் என்றும், மொழி பெயர்க்கப்பட்ட விவிலியம் (புதிய ஏற்பாடு) மேற்கத்திய கிறித்துவர்களின் பொய்யைப் பரப்பக் கூடியது, கற்பனையானது, விளையாட்டுத்தனமானது என்றும் அதனை நிராகரிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

ஒழுக்கக் குறைவான ஐரோப்பிய கிறித்துவ பாதிரிகள் 'எந்த விதத்திலும் தாழ்ந்து போகாத ஒழுக்க முறைகளையுடைய இந்துக்களிடையே மதப் பிரச்சாரம் செய்யத் தகுதியற்றவர்கள்' எனக் கர்ச்சித்தார். இவர் ஜெருசலேம் யூத கோவில்களின் சாயலில் (இவரால் மேற்கத்திய கிறித்துவம் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டுள்ளது என்பது முன்பே குறிக்கப்பட்டுள்ளது) ஒரு சர்ச்சினை முதலாவதாக 1857ல் நாசரேத் அருகிலுள்ள மூக்குபீரி எனும் சிற்றூரில் அமைத்தார். அதில் இந்து முறைப்படி படையல் படைத்தும், சாம்பிராணி தூபமிட்டும் வழிபாடு நடத்தினர் (பக்கம் 49-56, காலச்சுவடு - 16, டிசம்பர் 1996).

கால்டுவெல்லின் திராவிட மொழி ஒப்பிலக்கணம்
- ஓர் அலசல்

ஆதி சமஸ்கிருதமும், தமிழும் இறைவன் சிவபெருமானால் உலகிற்கு வழங்கப்பட்ட இரு மொழிகளாகும். சமஸ்கிருதம் இறைவனை வழிபடத் தேவ மொழியாகவும், தமிழ் தொடர்பு மொழியாகவும் இறைவனால் படைக்கப்பட்டன. இரண்டிலும் உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து, இலக்கணம் உண்டு. வேறு அன்னிய மொழிகளில் இவ்விலக்கணம் கிடையாது. சமஸ்கிருதத்திற்கு 50 எழுத்துகள், தமிழுக்கு 30 எழுத்துகள். மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளுக்கும் 50 எழுத்துகள். இம்மொழிகள் பேச்சுவாக்கில் தமிழையும், எழுதுவதில் சமஸ்கிருதத்தையும் போன்றது. (நன்றி: குருகுலத் தென்றல், ஆகஸ்ட் 2009)

இறைவன் சிவபெருமானுக்கும், சமஸ்கிருதம் மற்றும் தமிழுக்கும் உள்ள தொடர்பைப் பிளவுபடுத்தி, பிரிவினை எனும் நஞ்சைக் கலந்திட, கால்டுவெல் திட்டமிட்டார். அதன் வழியில் உருவாக்கப்பட்டதே 'திராவிட மொழி ஒப்பிலக்கணம்' எனும் நூலாகும். ஐம்பது எழுத்துக்களைக் கொண்ட மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளை 30 எழுத்துக்களைக் கொண்ட தமிழுடன் இணைத்து, இவை திராவிட மொழிக்குடும்பம் எனவும், சமஸ்கிருதத்துடன் திராவிட மொழிக் குடும்பம் சற்றும் தொடர்பு இல்லாதது எனும் உலக மகா பொய்யை

உருவாக்கினார். ஆனால் தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகள் சமஸ்கிருதம் - தமிழ்க் கலப்பால் உருவானவை என்பது இன்று உலகம் ஏற்கும் உண்மை.

கால்டுவெல் பெற்ற பரிசும் பாராட்டும்

காலனி ஆதிக்கமும், கிறித்துவமும் இந்தியாவில் நிலைபெறச் செய்யக் கால்டுவெல் (அவர் மனைவி எலிஸா, மகள் எமிலி) செய்த திரிபுவாத / பிரிவினைவாதப் பணிகளைப் பாராட்டும் முகமாகப் பிரிட்டிஷ் அரசு 1865ம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள உலக்கை அருவி மலைப் பகுதியை அவருக்கு நீண்ட காலக் குத்தகைக்கு (காஃபி எஸ்டேட் அமைக்க) வழங்கிக் கௌரவித்தது. (பக்கம் 144 தோள் சீலைக் கலகம்).

அதுபோலவே தமிழக அரசும் 2009ம் ஆண்டில் பிஷப் கால்டுவெல் அவர்களின் பணிகளைப் (?) பாராட்டி அவர் வாழ்ந்த இடையன்குடி கிராமத்தில் நினைவுச் சின்னம் ஒன்றை அமைத்துள்ளது.

ஆனால் சமூக, சமுதாய ஒற்றுமையை வளர்த்த பாசூர் அய்யாசாமி தீட்சிதருக்கும், நாடார்களின் தன்மானத்தையும், இந்தியர்களின் கௌரவத்தையும் நிலைநிறுத்திட, காலனி ஆதிக்கவாதி பிஷப் கால்டுவெல்லை எதிர்த்துக் கிளர்ந்த இந்து கிறித்துவர் சட்டாம்பிள்ளை ஐயா அவர்களுக்கும், தாழ்த்தப் பட்ட மக்கள் அனைவரையும் என் கண்ணுமக்காள் என அழைத்து ஆன்மீகம் வழங்கி ஒன்றிணைத்த சாமிதோப்புபதி அய்யா வைகுண்டருக்கும் நினைவுச் சின்னம் இதுவரை அமைக்கப்படாதது இங்கு நினைவு கூரப்படுகின்றது.

7:11. சார்லஸ் பிலிப் பிரவுன்
(Charles Philip Brown) (1792 - 1884)

தமிழ்நாட்டில் கால்டுவெல் அவர்கள் தமிழ் திராவிட இனங்களுக்குச் செய்த சேவையைத் தமிழ்கூறும் நல்லுலகம் பாராட்டுவது போல் (?) பிரவுன் (C.P. Brown) தெலுங்கு இலக்கியத்திற்குப் பெரும் சேவை செய்ததாக ஆந்திராவில்

பாராட்டப்படுகிறார். தெலுங்கு மொழியையும், இலக்கியத்தையும் உயிர்ப்பித்ததாக இன்றும்கூட இவருக்குப் புகழாரம் சூட்டப்படுகிறது. இவரது சேவையைப் (?) பாராட்டி இப்பெருமானின் சிலை ஹைதராபாத் நகரில் நிறுவப் பட்டுள்ளது. இவர் பிஷப் கால்டுவெல் காலத்தவர். பிரவுன் தந்தை கல்கத்தாவில் கிழக்கிந்திய கம்பெனியில் அலுவலராகப் பணிபுரிந்தார். பிலிப் கல்கத்தாவில் பிறந்தாலும் இங்கிலாந்தில் கல்வி கற்றார். பின்னர் ஆந்திராவில் கடப்பா, ராஜமுந்திரி மாவட்டங்களில் ஆங்கில அரசின் அலுவலராகப் பணியாற்றியுள்ளார்.

1820ல் சென்னை கவர்னராக இருந்த சர். தாமஸ் மன்றோ என்பவர் எல்லா வெள்ளைய அலுவலர்களும் இந்தியமொழி ஒன்றைக் கண்டிப்பாகக் கற்க வேண்டும் என ஆணையிட்டார். பிலிப் பிரவுன் தான் கற்பதற்குத் தெலுங்கு மொழியைத் தேர்ந்தெடுத்தார். இவர் பணிபுரிந்த காலத்தில் தெலுங்கு மொழிக்குத் தன் சுயநிதியை உபயோகப்படுத்திப் பல சேவைகள் செய்தார் எனப் புகழப்படுகிறார். அவரின் சேவைகள் வருமாறு:

1. நான்கு பள்ளிகளைத் தொடங்கினார்.

2. தெலுங்கு ஓலைச் சுவடிகளைக் கிராமம், கிராமமாகச் சென்று சேகரித்தார்.

3. தெலுங்கு - ஆங்கில அகராதியைப் பதிப்பித்தார்.

4. மறைக்கப்பட்ட பல தெலுங்குக் கவிதைகளை வெளியே கொண்டு வந்தார்.

5. தெலுங்கில் பல கவிதைகளை இயற்றியுள்ளார்.

6. தூங்கிக் கொண்டிருந்த தெலுங்கு சமுதாயத்தை உலுக்கி உசுப்பினார்.

மேற்கண்ட புகழுரைகள் பொய்யானவை அல்லது மிகைப்படுத்தப்பட்டவை என அன்னாரின் பணிகளைப் பற்றி எழுதியுள்ள லெப். கர்னல் K.R. மூர்த்தி கூறியுள்ளார். பிரவுன் காலத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்த பிஷப் கால்டுவெல் அவர்களும், ‘பிலிப் பிரவுன் ஒரு பெருமை பேசக்கூடியவர்’ என்றும் ‘புலமையற்ற அறிவினர்’ என்றும் குறிப்பிட்டுள்ளார். எனினும் பிலிப் இறந்த 100வது ஆண்டு நிறைவு விழாவின் போது அவரைப் பல தெலுங்கு அறிஞர்கள் ‘பிரவுன் துரை’

என்றும் அவர் செய்துள்ள தெலுங்கு மொழி சேவைக்குப் பெரும்பாராட்டினையும் தெரிவித்தனர். வெள்ளையர்கள் எதைச் செய்தாலும் பாராட்டப்படுகின்றனர். ஆனால் கருப்பு இந்தியர்கள் எத்தனை சாதனை செய்தாலும் அவற்றை நம் சமுதாயம் கண்டு கொள்வதே இல்லை. இதற்குச் சிறந்த உதாரணமாய்த் திகழ்பவர் உயர்திரு. உ.வெ. சாமிநாத ஐயர். ஐயர் அவர்கள் ஓலைச்சுவடிகளைக் கிராமம் கிராமமாகச் சென்று அன்று சேகரித்திருக்காவிட்டால் 'புறநானூறு' போன்ற சங்க இலக்கியங்கள் நமக்குக் கிடைக்காமல் போயிருக்கும். ஆனால் இத்தகைய தமிழ் மகான்களுக்கு நம் சமுதாயம் போதிய அளவு நன்றிக்கடனை இன்னும் தெரிவிக்கவில்ல.

7:12. பிரான்ஸில் ஒயிட் எல்லிஸ் (Francis white Ellis) (1777-1819)

இவர் ஆங்கில அரசின் மாவட்ட ஆட்சியாளராக (Collector) ஆந்திரா பகுதியில் பணிபுரிந்தார். அது போது தெலுங்கு மொழியில் பல ஆய்வுகள் மேற்கொண்டார். வழக்கம்போல் இவருடைய ஆய்வும் காலனி ஆதிக்கவாதிகளின் பிரித்தாளும் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. தெலுங்கு மொழி சமஸ்கிருதத்துடன் வேறுபட்டது எனவும் மேற்படி தெலுங்கு, திராவிட மொழிக் குடும்பத்தை சார்ந்தது எனவும் ஓர் ஆராய்ச்சி முடிவை வெளியிட்டார். இதன் அடிப்படையிலே கால்டுவெல் பாதிரியார் ஆரிய - திராவிட மொழி பேதத்தை உருவாக்கினார். பின்னர் மொழி பேதம் ஆரியர் - திராவிடர் என்னும் இனபேதமாக மாற்றப்பட்டது. இனபேதம் பின்பு அரசியல் கொள்கைகளாகப் பரிணாம மாற்றமடைந்தது. திராவிடக் கட்சிகள் தமிழ்நாட்டில் தோன்றுவதற்கும் அவர்களின் பிரிவினைவாதச் சித்தாந்தங்கள் மலருவதற்கும் இவ்வினவாத மொழிக் கொள்கை அடிப்படையாக அமைந்தது. இத்திராவிட மாயையிலிருந்து தமிழகம் கடந்த 80 ஆண்டுகளாகத் தன்னை விடுவித்துக் கொள்ள முடியாமல் வலைப் பின்னலில் சிக்கித் தவித்து வருகின்றது.

7:13. சார்லஸ் கிராண்ட் (Charles Grant)

கிறித்துவ சமயத்தை இந்தியாவில் பரப்பிட வந்த அந்நிய மதபோதகர்களில் இவரும் ஒருவர். இந்தியாவில் தனது படிப்பினையை 'ஆசியாவின் சமூக சமுதாய நிலவரம்' (Observation on the State of the Society among the Asiatic Subjects of India) எனும் ஒரு நூலில் எழுதினார். அதில் இந்தியாவிலுள்ள இந்துசமயம் மூட நம்பிக்கை அடிப்படையிலானது என்றும், ஆதிவாசிகளின் சமயம் இதுவே என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்த இருட்டறையிலிருந்து இந்தியர்களை வெளிக் கொணரவே தேவபிரான் இயேசு, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியினரால் முன் நிறுத்தப்பட்டுள்ளார். இது ஓர் தெய்வ சங்கல்பத்தாலே நடந்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

7:14. பார்த்தலோமஸ் சிஜன்பக் (1682-1719)

இவர் இந்தியாவிற்கு வந்த ஜெர்மன் நாட்டின் புரொட்டஸ்டன்ட் பாதிரியார். புரொட்டஸ்டன்ட் சமயத்தைப் பொருத்த மட்டில் இந்தியாவுக்கு வந்த முதல் மதகுரு இவரே. இவருடைய குடும்பம் ஏழ்மை பட்டதாக இருந்தது. அன்றைய ஜெர்மன்நாடு, கத்தோலிக்க திருமறையாளர்களுடன் நடத்திய 30 ஆண்டு போரில் பெரும் அழிவையும், பஞ்சம், பசி, மற்றும் நோய்களையும் சந்திக்க நேர்ந்தது. போரின் போதும் அதன் பின்பும் ஜெர்மனி நாட்டு மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். அவரில் ஒருவரே சிஜன்பக் பாதிரியார். இவர் தனது திருமறைப் பணிகளைத்

தமிழ்நாட்டில் தரங்கம்பாடியில் தொடங்கினார். திருமறையைத் தமிழகத்தில் பரப்பிட நிதிஉதவி செய்தவர் டென்மார்க் நாட்டு மன்னர் பிரட்ரிக் IV (Frederck). எனவே இவருக்கு நிதி ஆதாரத்திற்குப் பஞ்சமே இல்லை. இவர் இந்தியாவிற்கு கப்பலில் வருகை தரும்போதே தன்னுடன் (அப்போது கண்டுபிடிக்கப்பட்ட) ஓர் அச்சு இயந்திரத்தையும் கொண்டு வந்தார். அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தித் திருமறையை 1713ம் ஆண்டில் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இவர் எழுதி வெளியிட்ட இதரத் தமிழ் நூல்கள் ‘நீதி வெண்பா’, ‘கொன்றை வேந்தன்’ ஆகியவை. ஆனால் இவற்றை உண்மையில் எழுதியவர் கணபதி வாத்தியார் எனும் ஏழைப் பிராமணர். கணபதி வாத்தியார் செய்த தமிழ்ப் பணிகள் எல்லாம் சிஜன்பக் பெயரில் வெளியானது. சிஜன்பக் ஒரு தீவிர திருமறையாளர். கண்ணில் கண்டவர்களையெல்லாம் மதம் மாற்ற முயற்சித்தார். ஒரு சவரத்தொழிலாளியின் விதவைப் பெண்ணிடம் தவறாக நடக்க முயன்றுள்ளார். சிஜன்பக் பாதிரியாரின் இச்செய்கை அக்காலத்தில் பெரும் போராட்டத்தைத் தூண்டியது. இதனை அறிந்த (தரங்கம்பாடி) டேனிஷ் அரச பிரதிநிதி, தங்களது ஆட்சிக்கு இதனால் ஆபத்து வந்துவிடுமோ என அஞ்சி சிஜன்பக் பாதிரியாருக்கு நான்கு மாத சிறை தண்டனை வழங்கினார்கள்.

சிறையிலிருந்து வெளிவந்த பின்பும் இவர் தான் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்தார். இவருடன் பிராமணர்கள் பலர் சமயவாக்குவாதத்தில் ஈடுபட்டனர். கிறித்துவ சமயத்திற்கு எதிராக 608 கேள்விகளை இந்துசமய பிரமுகர்கள் எழுப்பினர். தன்னால் பதில் கூறமுடியாமையால் இக்கேள்விகள் அனைத்தையும் தொகுத்து டென்மார்க் நாட்டிற்கும், கிறித்துவ சபைகளுக்கும் அனுப்பினார். அக்கேள்விகள் சிலவற்றைத் தற்போது பார்க்கலாம். கேட்கப்பட்ட கேள்விகள் இருவகைப்படும். ஒன்று பாதிரியார்களின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றியது, மற்றொன்று கிறித்துவ சமயத்தைப் பற்றியது.

1. பாதிரியார்களின் வாழ்க்கை பற்றியது

நீங்கள் சுத்தம் குறைவானார்கள். மலஜலம் கழிந்தபின் தண்ணீர் மூலம் உடலைக் கழுவுவதில்லை. பாதிரியார்களாக இருந்தாலும் மாட்டுக் கறியையும், பன்றிக் கறியையும்,

மதுபானத்தையும் உண்கின்றீர்கள். புகையிலை சுருட்டினைப் புகைக்கின்றீர்கள். காலை உணவு உண்ணும் முன் பல் துலக்குவதில்லை. வீட்டையும் உடைகளையும் செம்மையாய் வைத்துள்ளீர்கள். ஆனால் வீட்டைச் சுற்றி ஓயாமல் எச்சில் துப்புகின்றீர்கள். எங்களைச் சாத்தான், பேய், பிசாசின் பிள்ளைகள் என ஏசுகின்றீர்கள். ஆனால் உங்களால் மதம்மாற்றப்பட்டவன் கிறித்துவனான பிறகு அவனது வாழ்க்கை சீரழிந்தே போகிறது. அவனுக்கு நல்லொழுக்கமோ, ஆன்மீகபலமோ கிடைப்பதில்லை.

இந்துக்கள் தங்கள் ஊருக்கு வரும் பயணிகளுக்கு உதவியும் வசதியும் செய்து தருவது வழக்கம். அதுபோன்ற வசதியை நாங்கள் உங்களுக்குத் தரங்கம்பாடி வந்ததும் வழங்கினோம். ஆனால் அதுபோன்று இவ்வூருக்கு வரும் இதர பயணிகளை ஆதரிக்கும் பண்பு உங்களுக்கு இல்லை.

கிறித்துவ சமயத்தைப் பற்றியது

கிறித்துவர்களில் கத்தோலிக்கர், புரொட்டஸ்டன்ட் பிரிவினரிடையே மனக்கசப்பும், ஒருவரை ஒருவர் கொல்லுவதும் வழக்கமாக நடைபெற்று வருகிறதே! ஏன் நீங்கள் இருவரும் ஒரே தேவனைத் தானே வணங்குகின்றீர்கள்? இவ்வாறு கொலை பாதகங்கள் உங்களுக்கிடையே நடைபெற்றால் இம்மதத்தைச் சிறந்ததாக நாங்கள் எப்படிக் கருத முடியும்? தன்னைக் காப்பாற்ற முடியாமல் திருடர்களுக்கு மத்தியில் சிலுவையில் கொடூரமாய் உயிரைவிட்ட ஒருவர் (இயேசு) எங்களை எப்படிக் காப்பாற்ற முடியும்? உண்மையான கடவுள் எப்படிச் சாக முடியும்? அவர் உயிர்விடக் காரணமாயிருந்த சிலுவை எனும் கொலைக் கருவியை மகிமைப்படுத்துகின்றீர்கள். இயேசு நல்லவர் என்பதை அறிய அவரது மாமிசத்தைப் புசித்தும், இரத்தத்தைக் குடித்தும் பலன் பெறுங்கள் என்கின்றீர்கள். உங்களின் இந்தத் தத்துவம் மிக மோசமானதாகவும் எங்களுக்குத் திருப்தி அற்றதாகவும் தெரிகின்றது. உங்கள் கர்த்தரின் பிறவியே வழக்கத்திற்கு மாறாக உள்ளது. கல்வி அறிவு அற்றவராகவும் பொதுமக்கள் மத்தியில் மரத்தில் தூக்குண்டவராகவும் உள்ளார். கடவுளும், கடவுளின் மகனும், பரிசுத்த ஆவியும் ஒன்றே என்கின்றீர்கள். (தகப்பனும் கடவுள், மகனும் கடவுள்,

குழந்தை உண்டாக்கிய பரிசுத்த ஆவியும் கடவுள்.) இது எப்படி இருக்க முடியும்? மகன் தன் தாய்க்குக் கணவனாய் எப்படி இருக்க முடியும்?17

இந்து சமயத்தில் ஆதிபாவம் கொள்கை கிடையாது. பாவம் என்பது நாம் செய்யும் தீய செயல்களால் வருவதே தவிர, பிறவியினால் வருவது அல்ல. எங்கள் சமயத்தில் புல், பூண்டு, புழு, பூச்சி, மிருகங்கள் அனைத்திற்கும் ஆன்மா உண்டு. அவைகளுக்கும் மோட்சகதி அடைய வாய்ப்புண்டு. தங்களது சமயத்தில் இரட்சிக்கப்பட்ட மனிதனுக்கு மட்டுமே நற்கதி அடைய வாய்ப்புச் சொல்லப்பட்டு இருக்கிறது. உலகத்திலுள்ள இதர மனிதர்களுக்கும், இதர ஜீவராசிகளுக்கும் முத்தியடைய உங்களது சமயம் வழிகாட்டவில்லை. ஒருவன் ஒரு மதத்தில் சேர்ந்து ஞானஸ்தானம் பெற்ற உடனே சொர்க்கலோக வாழ்வுக்குத் தகுதியுள்ளவன் ஆகிவிடுவான் என்கின்றீர்கள். சொர்க்கம் அல்லது முக்தி அடைவது அவ்வளவு எளிதானது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒருவன் இறைவனடியை அடைய வேண்டும் எனில் பல ஆண்டுகள் நற்செயல்களும், பக்தியும், தவமும் செய்வதாலேயே சாத்தியமாகும். இன்பத்தில் சுயகட்டுப்பாடு, தாய், தந்தையர், சகோதர, சகோதரிகள் ஆகியோருக்கு வாழ்க்கையில் உதவி செய்வதற்காகத் தன்னுடைய உலக சுகங்கள் சிலவற்றைத் தியாகம் செய்தல், ஆகிய நற்கருமங்கள் மூலமே ஒருவன் இறைவனின் கருணையைப் பெற முடியும். இதனை எதுவும் செய்யாத கிறித்தவர்கள் சும்மா, சொர்க்கலோகம் சென்று நித்திய ஜீவன் பெற முடியும் என்பதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மனிதன் இவ்வுலகில் வாழும் நாட்கள் குறைவானது. இத்தகைய குறுகிய வாழ்க்கை காலத்தில் செய்யும் தவறுகளுக்காக எங்களைப்போன்று இரட்சிக்கப் படாதவர்களுக்கு அளவில்லா, எல்லையில்லா நித்திய நரகம் வழங்கப்படும் என்ற கொள்கை எங்களுக்குத் தவறானதாகத் தெரிகிறது. மதம் மாறாததற்கான தண்டனை விகிதாச்சாரப்படி இல்லை. குறுகிய கால வாழ்வில் செய்த தவறுக்கு, நித்திய கால நரகமா? உங்களின் கடவுள் நியாயமான, அளவான, தண்டனை வழங்குபவராகத் தெரியவில்லை.

எங்கள் சமயம் பழமையானது. பல வாழ்ந்து காட்டிய மகான்களை உடையது. இத்தனை தலைமுறை ஆகியும் சிவன், விஷ்ணு வழிபாட்டின் தத்துவங்களையும் காரணங்களையும் எங்களால் பூரணமாக அறிந்துகொள்ள முடியவில்லை. முன்பின் தெரியாத ஒரு மதத்தைப் பற்றி இன்று கூறுகின்றீர்கள். இதனை நாங்கள் எவ்வாறு பகுத்தறிந்து ஏற்றுக் கொள்ள முடியும்?

இதுபோன்ற இன்னும் நூற்றுக்கணக்கான கேள்விகளை இந்துக்கள் சிஜன்பக் முன்வைத்தனர். இக்கேள்விகளுக்குச் சிஜன்பக் பதில்கூற முடியாமல் திணறினார். பிராமணர்கள்தான் மற்றவர்களைத் தூண்டி இக்கேள்விகளை எழுப்புகின்றனர் என்று சிஜன்பக் பாதிரியார் நம்பினார். மனக்குழப்பம் அடைந்து தனது 37 வது வயதில் துர்மரணம் எய்தினார். இதன்மூலம் ‘கர்த்தருக்குப் பயப்படுதல் ஆயுள் நாட்களைப் பெருகச் செய்யும்’ (நீதி 10:27) எனும் வாக்குதத்தம் பொய்த்துவிட்டது.

7:15. இதர திருமறையாளர்கள் - காலனியவாதிகள்

இந்திய சரித்திரத்தைத் திரிபுவாத அடிப்படையில் மாற்றி எழுதிய இதர காலனி ஆதிக்க - திருமறையாளர்கள்:

1. J.C. மார்ஷ்மன் (J.C. Marshmann - *1768-1837*) இந்தியர்கள் மீதான வணிக ஆதிக்கமே இந்தியர்களின் இருதயத்தைப் பரிசுத்த வேதாகமத்தின்பால் திறந்துவிட வல்லது என எழுதினார்.

2. சர் ஜான் மல்கோம் (Sir John Malcolm - *1769 - 1833*) பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு, இந்தியர்களைக் கிறித்துவ மயமாக்க உதவிடும் தார்மீகக் கடமை இருப்பதாகவும், இந்துக்களை அவசரமாக மதம் மாற்ற வேண்டியது பற்றியும் இவர் தீவிர கருத்துக் கொண்டிருந்தார்.

3. கிராண்ட் டப் (J.C. Grant Duff - *1789 - 1858*) மாவீரன் சிவாஜி வழிவந்த மகாராஷ்டிர வீரர்களைக் கல்வி

அறிவற்றவர்கள் என்றும், திருடர்கள், கொள்ளையர்கள் என்றும் தான் வெளியிட்ட நூல்களில் எழுதி வைத்தார்.

4. ஜேம்ஸ் டாட் (James Tod - *1782 - 1835*) இவர் எழுதிய Annals and Antiquities எனும் நூலில் ராஜபுத்திர அரசர்களிடம் நாசுக்காகப் பிரிட்டிஷ்காரர்கள் நடந்து கொள்ள வேண்டும். அப்போது மட்டுமே நாம் இந்தியர்களைப் பிரித்தாள முடியும் என எழுதினார்.

5. மெக்காலே (T.B.Macaulay - *1800 - 1859*) இந்துக்களின் அனைத்து நடைமுறைகளும், பழக்கவழக்கங்களும் போலியானது முடத்தனமானது என்றும், இதற்கு ஒரே தீர்வு கிறித்துவமயமாக்குதலே என்றும் பிரிட்டிஷ் பாராளு மன்றத்தில் அறிக்கையிட்டார். அதற்கு முதற்படியாகத் திண்ணைப் பள்ளிகளையும், கோவில்களில் நடந்த பள்ளி களையும் அழித்து ஆங்கிலக் கல்வி புகுத்தப்பட வேண்டும் எனவும் இவர் நம்பினார். அதுவரை இலவசமாகக் கற்றுக் கொடுக்கப்பட்ட இந்தியக் கல்வி, பணம் கொடுத்துப் பயிலும் தன்மையானதாக மாற்றப்பட்டது. (இப்போது கூட கிறித்துவ - சபையினரால் நடத்தப்படும் கல்விக் கூடங்களில் பெரும் தொகை நன்கொடையாகவும், கட்டணமாகவும் வசூலிக்கப் படுவதைக் காணலாம்). இந்தியர்களின் பாரம்பரியத்தையும் பெருமையையும் குலைப்பதற்காக ஆங்கிலம் கற்ற ஒரு மத்தியதரவர்க்கத்தினரை உருவாக்குவது அவசியம் என இவர் கருதினார்.

6. அலெக்ஸாண்டர் டப் (Alexander Duff - *1806 - 1878*) மற்ற மதங்களைப் பற்றி இந்துக்களுக்குக் கற்பித்தால் அதே அளவு இந்து சமயம் அழியும் எனக் கூறினார். இந்துக்கள் இந்து சமயத்தைத் தழுவி வாழ்வது வேறு சமயங்களைப் பற்றிய அறிவு இன்மையாலே என எண்ணினார்.

7 கன்னிங்காம் (J.D. Cunninghan - *1812 - 1851*) சீக்கியர்கள் தனி இனம் எனவும், அவர்கள் மொழியும், கலாச்சாரமும் தனிமையானது என்றும், அவர்கள் இந்தியர்கள் அல்லர் எனவும் எழுதி வைத்தார். இதன் காரணமாகவே இன்றையளவும் சில சீக்கியர்களிடம் பிரிவினை உணர்ச்சி இருப்பதைக் காணலாம்.

8. வில்லியம் கேயி (William Kaye - *1857*) ஆங்கிலேயர் களுக்கு எதிரான சிப்பாய்க் கலவரம் போன்று மற்றொரு

கலவரம் இந்தியாவில் வருவதைத் தடுப்பதற்கு கிறித்துவ மயமாக்குதலைத் துரிதப்படுத்தி, கிறித்தவர்களைத் தங்களின் அடித்தளமாக்கி, அதன் மீது பலமான ஆங்கில அரசு கட்டப்பட வேண்டும் என்று கூறினார்.

9. பாதிரியார் ஹென்றி ஹீராஸ் (Father Henry Heros - 1888 - 1955) இவர் ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த கத்தோலிக்க பாதிரியார். தன்னை ஓர் அகழ்வாராய்ச்சி நிபுணர் எனவும், வரலாற்று ஆசிரியர் எனவும் நிலை நாட்டிக் கொண்டவர். மும்பை நகரில் அமைந்துள்ள புனித சேவியர் கல்லூரியில் வரலாற்று விரிவுரையாளராகப் பணியாற்றினார். இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கழகத்தினை 1926ம் ஆண்டில் இவர் தொடங்கினார். இவரின் நினைவாக 1981-ம் ஆண்டில் இந்திய அரசு அஞ்சல்தலை ஒன்றை வெளியிட்டு மகிமைப் படுத்தியது. இவரது ஆரிய திராவிட திரிபுவாத வரலாற்றுக் கருத்துகள் அறிஞர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அவைகளாவன:

பாதிரியார் ஹென்றி ஹீராஸ்

1. வேதகால ஆரியர்களுக்கு நகர வாழ்க்கையும், வணிகமும் தெரியாது. அவர்கள் ஆடுமாடு மேய்த்தவர்களே!

2. சிவ வழிபாடும், தேவி வழிபாடும் பண்டையகால ஆரியர்களுக்குத் தெரியாது. அவ்வழிபாட்டு எச்சங்கள் காணப்படும் சிந்துசமவெளி நாகரிகம் ஆரியர் அல்லாதவர்களின் (திராவிடர்களின்) நாகரிகமே!

இவ்விதமாகப் பிற நாடுகளிலும், பிற சமயங்களிலும் வேற்றுமைகள் தோற்றுவிக்கப் பொய் ஆதாரங்களைத் திரட்டி வெளியிட்ட திருமறையாளர்கள், தங்கள் மதத்தை வளர்த்திடவும், பிரபலப்படுத்திடவும், இதைவிடக் கூடுதலான

பொய் ஆதாரங்களை வழங்கிடுவார்கள் என்பதை நாம் உறுதியுடன் நம்பலாம். அத்தகைய போலி வரலாற்று வரிசையில் உருவாக்கப்பட்டதில் ஒருவர் புனிதர் தாமஸ் (St. Thomas).

7:16. புனிதர் தாமஸ்[18]

புனிதர் தாமஸ் என்பவர் இயேசுபிரானின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவர் என்று பரிசுத்த வேதாகமத்திலுள்ள புதிய ஏற்பாடு பகருகின்றது.

1. இயேசுபிரான் சிலுவையில் உயிர் நீத்தபின்னர் அவரின் சீடர்களில் பலர் தங்கள் உயிருக்கு அஞ்சிப் பல்வேறு திசைகளில் (கிபி 32ல்) ஓடியதாகவும் அதனில் தாமஸ் இந்தியாவை நோக்கி ஓடிவந்ததாகவும் கதைகள் புனையப் பட்டன. அக்காலத்தில் இந்தியாவின் வடமேற்கு பகுதியில், (இன்றைய ஆப்கானிஸ்தான் - ஈரான் பகுதிகளில்) பார்த்தியர்கள் என்ற இனத்தவர்கள் ஆட்சி புரிந்ததாகவும், அதன் பிரபலமான அரசன், கொண்டே பர்னஸ் காலத்தில் தாமஸ் அந்நாட்டிற்கு வந்ததாகவும், இம்மன்னனை முதன்முதலாக தாமஸ் கிறித்துவர் ஆக்கினார் என்றும், பின்பு கேரளாவின் கடற்கரையோரம் வந்து, அவ்விடங்களில் பல நம்பூதிரி பிராமணர்கள் உட்படப் பலரை மதமாற்றம் செய்தார் என்றும் கூறப்படுகிறது. அதன் பின்னர் தாமஸ் தமிழ்நாடு வந்து பரங்கிமலை மற்றும் மயிலாப்பூரில் தங்கி மதப் பிரச்சாரம் செய்தார் என்றும் அவ்வமயம் மைலாப்பூரில் வாழ்ந்த திருவள்ளுவர் தாமஸை சந்தித்து இயேசு பிரான் கொள்கைகளைக் கேட்டு அறிந்தார் என்றும் அதன் பின்னரே இயேசுவின் கொள்கைகளை உள்ளடக்கிய திருக்குறள் எழுதப்பட்டது என்றும் கதைகள் புனையப்பட்டன. திருவள்ளுவரும் புனித தாமஸ் அவர்களால் கிறித்துவ சமயத்திற்கு மதம் மாற்றப்பட்டார் எனவும் பிரச்சாரங்கள் தற்போது செய்யப்பட்டு வருகின்றன.[19]

இப்போதைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்பு கூட வரையப்பட்ட திருவள்ளுவர் உருவப்படத்தில் அவர் திருநீறு

பூசியிருந்ததும் பூணூல் அணிந்திருந்ததையும் காணலாம்.[20] தற்போது திருநீறு அழிக்கப்பட்டுப் பூணூல் இருக்கும் பகுதியில் நீண்ட துண்டுடன் திருவள்ளுவர் காட்சி அளிப்பதை காணலாம். ஐம்பது வருட காலத்திற்குள் இந்து சமயக்குருவாக விளங்கிய திருவள்ளுவர் சமயச் சார்பில்லாதவர் ஆகவும் தற்போது கிறித்தவர் எனவும் முறையே தமிழக அரசாலும் திருமறையாளர்களாலும் மாற்றம் செய்யப்பட்டுவிட்டார்.

'தாமஸ் இந்தியாவிற்கு வருகை தந்தபோது பௌத்த சமயமும், சமண சமயமுமே இந்தியாவில் இருந்தது. மேற்படி இருசமயங்களும் கடவுள் மறுப்புக் கொள்கையுடையதாய்



புனிதர் தாமஸ் – யேசுபிரானின் சகோதரர்
ஒருகையில் ஈட்டியும் மறுகையில் பைபிளுடனும்

இருந்ததால் இந்தியர்களுக்குக் குறிப்பாகத் தமிழர்களுக்குக் கடவுள் ஒருவர் உலகில் உண்டு என்ற கொள்கை தெரியாமல் அஞ்ஞானமாய் இருந்தனர். இத்தருணத்தில் தாமஸ் அவர்கள் இந்தியாவிற்கு வருகை தந்து கடவுள் ஒருவர் உலகிற்கு உண்டு எனக் கூறினார். அதற்குப் பின்னரே கடவுளைப் பற்றித் தமிழர்களுக்கு தெரியவந்தது. தாமஸ் கொண்டு வந்த கடவுள் கொள்கை, தமிழ் மக்களிடையே இருந்த கடவுள் அறியாக் கொள்கை, இவை இரண்டும் ஒன்றுசேர்ந்து, பிணைந்து உருவானதே சைவமும், வைணவமும். இதனைத்தான் பின்னர் நாயன்மார்களும், ஆழ்வார்களும் மக்களிடையே தேவாரம், திருவாசகம், பிரபந்தங்கள் எனும் உருவில் கொண்டு சென்றனர். எனவே சைவமும் வைணவமும் புனிதர்தாமஸ் வழிவந்த கிறித்துவ சமயப் பிரிவுகளே! நாயன்மார்களும், ஆழ்வார்களும் தாமஸ் வழி வந்த கிறித்துவத்தின் ஒரு பகுதியினரே.''

இக்கொள்கை தமிழ் ஆர்வலர்கள் மத்தியில் எவ்வித எதிர்ப்புமின்றி, மக்கள் மத்தியில் தற்போது கொண்டு செல்லப்படுகின்றது.

'இத்தகைய பெருமைமிக்க புனித தாமஸ் பலரை இயேசு பிரான் வழிபாட்டிற்கு மதம் மாற்றினார். இதனால் மயிலாப்பூரிலுள்ள பிராமணர்கள் இவர் மீது அடங்காக் கோபம் கொண்டனர். ஒரு நாள் புனித தாமஸ் பரங்கிமலையில் தானே வடித்த ஒரு கல் சிலுவையின் முன்பு அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்தார். அப்போது ஒரு பிராமணன் அவரின் பின்னாலிருந்து தாமஸை ஈட்டியால் குத்திக் கொன்றான். இவரது புனித உடல் சாந்தோம் தேவாலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரைக் கொல்ல உபயோகிக்கப்பட்ட ஈட்டி முனை, காட்சிப் பொருளாய் இன்றும் சாந்தோம் தேவாலயத்திலிலுள்ளது. அவரது கல்லறையும், சென்னையில் இருப்பதை மார்க்கபோலோ என்னும் கடல் பயணியின் பயணக் குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளான். தாமஸ் பிரார்த்தனை செய்த இடத்தில் இருக்கும் சிலுவையில் அவர் இறந்து பல்லாண்டுகள் வரையிலும் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது'. இவ்வாறு தாமஸ் இரத்த சாட்சியாகி, தியாகி ஆகிப் பின்பு புனிதராகவும் ஆக்கப்பட்டு விட்டார். இவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ள மறைசாட்சிக்கு ஆதரவான இரத்த சாட்சி

கதையில், பல குறைபாடுகள் உள்ளன. அவற்றில் சிலவற்றைக் கீழே காணலாம்.

நான்கு சுவிசேஷங்களிலும் இயேசு கிறித்துவின் சீடராக தாமஸ் குறிப்பிடப்படுகின்றார். அப்போஸ்தலருடைய நடவடிக்கையிலும் அவர் பெயர் காணப்படுகிறது. பெயர் உள்ளதே தவிர அவரைப் பற்றிய விபரங்கள் இல்லை. எனினும் யோவான் எழுதிய சுவிசேஷத்தில் இவரைப் பற்றிய இரு கூடுதல் விவரங்கள் காணப்படுகின்றன.

1. இவர் பெயர் திதிமு தாமஸ் (*11:16*).

2. கிறித்துவைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தவர் (*20:4-29; 21: 2*).

இவற்றைத் தவிர, பரிசுத்த வேதாகமத்தில் தாமஸ் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. அப்படியானால் தாமஸ் பற்றிய மேற்படி கதைகள் எங்கிருந்து வந்தன? அக்கதைகள் கிறித்துவ திருமறையாளர்களால் 'பொய்' என்று ஒதுக்கப்பட்டு, தடை செய்யப்பட்ட 'தாமஸின் நடவடிக்கை' (Acts of Thomas) எனும் நூலிலிருந்து தழுவப்பட்டவையாகும்.[21] அதாவது பொய்யிலிருந்து உண்மைக்கதை (?) உருவாக்கப்பட்டுள்ளது.

1. தாமஸ் பெயர் டிடிமஸ் தாமஸ் என யோவான் தனது சுவிசேஷத்தில் குறிப்பிட்டுள்ளார். டிடிமஸ் என்பதின் பொருள் இரட்டையர் என்பதாகும். தாமஸின் சுவிசேஷத்தின்படி இயேசுவுடன் கூடப்பிறந்தவர் இரட்டையர் தாமஸ் (இயேசுவின் இதர சகோதரர்கள் ஜேம்ஸ், ஜோசப், சைமன் ஆகியோர் என அங்கீகரிக்கப்பட்ட சுவிசேஷத்தில் சொல்லப் பட்டுள்ளது). தாமஸ் தச்சு வேலையில் சிறந்தவர், இவரைக் கிழக்கத்திய நாடுகளிலிருந்து வந்த வியாபாரி ஒருவரிடம் அடிமையாக அவரது தலைவர் இயேசு விற்றுவிட்டார். (பார்க்கவும் Apocryphal New Testament).[22]

2. இயேசுவின் கொள்கைகள் ஓர் சமயமாக உருவெடுத்தது கி.பி. 4ஆம் நூற்றாண்டில். எனவே அவர் முதலாம் நூற்றாண்டில் இந்தியாவில் கிறித்துவர்களை எப்படி உருவாக்கி இருக்க முடியும்?[23]

3. கி.பி. 4ம் நூற்றாண்டு வரை சிலுவை ஒரு கொலைக், கருவியாக அருவருக்கப்பட்டது. நான்காம் நூற்றாண்டில், சிலுவை, இயேசு கிறித்துவைக் கொன்ற கருவி எனினும்

மனிதனைப் பாவங்களிலிருந்து விடுதலை செய்வதற்கு இறைவனின் திருக்குமாரனைத் தியாகம் செய்ய உதவியாய் இருந்தமையால் அது மகிமைப்படுத்தப்பட்டது.[24] நிலைமை இவ்வாறு இருக்கத் தாமஸ் கொலைக் கருவி சிலுவையை முதலாம் நூற்றாண்டில் பரங்கிமலையில் வணங்கி இருக்க முடியாது. எனவே வணங்கினார், கொலை செய்யப்பட்டார், புதைக்கப்பட்டார் என்று கூறுபவை உண்மையானதல்ல.

4. புனிதர் தாமஸின் கல்லறை தமிழகம் மற்றும் இந்தியாவில் ஆறு இடங்களில் இருப்பதாகப் பல்வேறு கதைகள் கூறப்பட்டு வருகின்றன. அதில் ஒன்று பழனி அருகிலுள்ள கலயமுத்தூரில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.[25] மேலும் இவரின் கல்லறைகள் வெளிநாடுகளில் 11 இடங்ளில் உள்ளதாகவும் குறிப்புகள் உள்ளன.[26]

இக்கதைகளிலிருந்து கிடைக்கும் உண்மைகள்:

1. புனிதர் தாமஸ் எனும் அப்போஸ்தலர் (இயேசுவின் சகோதரர்) இந்தியாவிற்கு வரவில்லை.

2. இந்தியாவில் சிரியன் கிறித்தவர்கள் வருகை தந்தது கிபி 345ம் ஆண்டில்தான் (தாமஸ் கதையில் கூறப்படுவது போல் கிபி 32ல் அல்ல). இவர்கள் பேரரசன் கன்ஸ்டன்டைன் காலத்தில் இயேசுவைக் கடவுளாக அங்கீகரிக்க மறுத்த பாதிரியார் ஆரியாஸின் 'நாடு கடத்தப்பட்ட சீடர்கள்' எனக் கருதப்படுகிறது. இவர்கள் வந்து இறங்கிய இடம் கேரளாவில் பெரியார் நதி முகத்துவாரத்தில் அமைந்திருக்கும் கிராங்கனூர் எனும் துறைமுகப்பட்டினம். மேற்கு ஆசியாவிலுள்ள பாபிலோன் மற்றும் 'நினேவி' நகர்களிலிருந்து பாரசீக அரசன் 'ஷாபூர்' கொடுமை தாங்காமல் புலம் பெயர்ந்து வந்தவர்களென்றும் இவர்களைப் பற்றி மற்றொரு கதை உள்ளது. சிரியன் கிறித்தவர்கள் அன்று ஏழு குடிகளைச் சார்ந்த 400 அகதிகள். இவ்வகதிகளை இந்தியாவில் கொண்டு சேர்த்தவர் கலானியஸ் தாமஸ் என்னும் ஒரு வியாபாரி என்றும் கூறப்படுகிறது.[27] அத்துடன் பாலஸ்தீனப் பகுதியில் அக்காலத்தில் தாமஸ் என்ற பெயரில் பலர் பைபிளில் அடையாளம் காட்டப்படுகின்றனர். உதாரணம்: இரட்டையர் தாமஸ், நயே தாமஸ், ஜெருசலைம் தாமஸ், தாமஸ் காலானியஸ். இவர்களில்

எவரோ ஒருவராகக் கிராங்கனூர் வந்த தாமஸாக இருக்கக் கூடும்.

புனித தாமஸ் கதை இத்துடன் முடியாமல் இன்னும் பல கொடுஞ்செயல்களையும் உண்டாக்கியது. விஜயநகர சாம்ராஜ்யம் வீழ்ச்சி பெற்றதும் 1566ல் மயிலாப்பூர் போர்ச்சுக்கீசியர் வசமானது. அதுவரை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில் இப்போது சாந்தோம் தேவாலயம் இருக்குமிடத்தில் கடற்கரை ஓரத்தில் இருந்துள்ளது. திருஞானசம்பந்தர் பெருமான் தேவாரப் பதிகங்களில் கபாலிஸ்வரர் ஆலயம் கடற்கரை ஓரத்தில் கிழக்கு நோக்கி - கடலை நோக்கி இருந்ததைக் குறிப்பிட்டுள்ளார். இக்கோவிலை இடித்து அவ்விடத்தில் சாந்தோம் தேவாலயத்தையும் (சர்ச்சினை) ஆயர் மாளிகையையும் போர்ச்சுக்கீஸியர்கள் - கட்டினார்கள். கோவிலை இடிப்பதற்கு 40 வருடங்கள் வரை ஆயின. இடிக்கப்பட்ட கல்கள், தூண்களைக் கொண்டு மயிலாப்பூரில் இப்போது உள்ள இடத்தில் மேற்கு நோக்கி ஒரு புதிய கபாலீஸ்வரர் ஆலயத்தை இந்துகள் கட்டிக் கொண்டனர். இன்றும் கூட, சாந்தோம் சர்ச் வளாகத்திலும், அதன் ஆயர் மாளிகை வளாகத்திலும் சோழர்கள்காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.[28]

சரித்திர ஆதாரம் எதுவுமே இல்லையென்றாலும் இந்தத் தாமஸ் கட்டுக்கதையை மயிலாப்பூர் கிறித்துவ பேராயம் விடுவதாகவில்லை. இதனைத் திரைப்படமாக்கித் தமிழக மக்களிடையே உலவவிட முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. ரூபாய் 50 கோடி பொருட்செலவில் இப்படத்தினைத் தயாரிக்கத் திட்டமிட்டு அன்றைய தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களால் சாந்தோம் சர்ச்சில் ஜூலை 3, 2008ல் ஒரு விழா கோலாகலமாக நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பேராயர்கள் புடைசூழ இந்திய கிறித்துவத்தின் அருள்மகன் பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் கலந்து கொண்டார். அந்நிகழ்ச்சியில் கலைஞர் பேசியதாவது:

‘எங்கள் ஆட்சிக்குச் சிறுபான்மையினர் ஆட்சி என்ற பெயருமுண்டு. சிறுபான்மை சமுதாயத்தைச் சீர்தூக்கி விட வேண்டும், பாதுகாக்க வேண்டும் எனும் எண்ணத்தில் இந்த ஆட்சி நடக்கிறது. உலகத்தில் மூன்று கல்லறைகளில் பெருந்தகையாளர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

உ ரோமாபுரியில் ராயப்பர், ஸ்பெயின் நாட்டில் யாகப்பர், தமிழகத்தில் தோமையார் (தாமஸ்). இவர்களில் தோமையாரை அய்யர் என அன்போடு மக்கள் அழைக்கின்றனர்' (நன்றி: திரு. வேத பிரகாஷ் 'தாமஸ் கட்டுக்கதை தொடர்கிறது' - unpublisihed works). இவ்வாறு தாமஸ் மீது புனையப்பட்ட கதை தமிழகத்தில் பெரும் பொய்யையும், குழப்பங்களையும் ஏற்படுத்தி வருகின்றது.

7:17. பாண்டிச்சேரி வேதபுரி ஈஸ்வரன் கோவில்

பாண்டிச்சேரியில் வேதபுரி ஈஸ்வரன் கோவில் மக்கள் வழிபடும் பிரபல சிவன் கோவிலாக இருந்தது. இக்கோயிலில் அனைத்துச் சமுதாயத்தினரும் வழிபட்டு வந்தனர். இந்திய சுதந்திரத்திற்கு முன்பு பாண்டிச்சேரி பிரான்ஸ் நாட்டின் காலனியாக இருந்தது. அப்பிரதேசத்தில் இருந்த கிறித்துவ அரசின் உத்தரவின் பிரகாரம் இந்துக்கள் மிகவும் இன்னலுற்று வந்தார்கள். அரசின் உத்தரவுப் பிரகாரம் பழுதடைந்த கோவில்கள் புனரமைக்கக் கூடாது, ஞாயிற்றுக் கிழமைகளிலும், கிறித்துவ பண்டிகை தினங்களிலும் இந்துகள் கோவில்களில் விழா எடுக்கக் கூடாது போன்ற உத்தரவுகள் அமுலில் இருந்தன.

வேதபுரி ஈஸ்வரன் கோவில் அருகில் புனித பவுல் ஆலயம் ஒன்றைக் கிறித்தவர்கள் 1740ம் ஆண்டு வாக்கில் கட்டுவதற்குப் பிரான்ஸ் அரசிடம் அனுமதி பெற்றனர். அதனைக் கட்டி முடித்ததும், அங்கிருந்து ஈஸ்வரன் கோவில் உள்ளே குப்பையும், கழிவுப் பொருட்களையும் ஒரு நாள் (மார்ச் 17, 1741) கொட்டினர். பின்னர் டிசம்பர் 31, 1746 அன்று (ஆங்கிலப் புத்தாண்டு விழா தருணத்தில்) மனிதக் கழிவுகளைக் கொட்டினர். 1748ல் பாண்டிச்சேரியைக் கைப்பற்றப் பிரிட்டிஷ் படைகள் முற்றுகையிட்டன. எனவே கோவில் அருகே வசித்த இந்துக்கள் இடம் பெயர்ந்து ஓடினர். அந்தத் தருணத்தில் பாதிரியார்களின் அழுத்தத்தினாலும், அன்று பாண்டிச்சேரிக் கவர்னராக இருந்த, டூப்ளே (Dupleix)

மனைவியின் வற்புறுத்தலாலும் ஈஸ்வரன் கோவிலை இடிக்கும் பணியைச் செப்டம்பர் 8, 1748ல் தொடங்கினர். புனித பவுல் ஆலய தந்தை மற்றும் காரைக்கால் மறைதிரு கார்டக்ஸ் (Coeurdoux) பாதிரியார், உள்ளூர் கிறித்தவர் வஸ்லாம், கவர்னர் டூப்ளேயின் மனைவி ஆகியோர் முன்னிலையில் சிவலிங்கம் உடைத்து நொறுக்கப்பட்டது. அன்றைய தினம் பாண்டிச்சேரி கிறித்துவசமயத்தினர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆனால் இவர்களின் மகிழ்ச்சி அற்ப ஆயுள் உள்ளதாகவே இருந்தது. 1761ல் பிரிட்டிஷ் படைகள் பாண்டிச்சேரியைக் கைப்பற்றி அந்நகரை அழித்தது. (இந்நிகழ்ச்சிகள் டூப்ளேயிடம் மொழிபெயர்ப்பாளராக பணியாற்றிய அனந்தரங்கம் பிள்ளை என்பவரின் நாட்குறிப்பில் விவரிக்கப்பட்டுள்ளது - புத்தகம் எண்.4, பக்கங்கள் 380 - 384.)

பகுதி - 8

இன்றைய இந்தியா

பகுதி - 8 : பொருள்

பக்கம்

8.1 பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை இந்தியா 355

8.2 இந்தியாவின் இருண்டகாலம் 360

8.3 மொழி பேதம்-சித்தாந்தபேதம் உருவாக்கல் 364

8.4 திராவிட இயக்கங்கள்-20ம் நூற்றாண்டு 371

8.5 சுதந்திர இந்தியாவிற்கு எதிராகச் சர்வதேச இயக்கங்களும், அவற்றின் இந்திய பங்குதாரர்களும் 374

8.6 வெறுப்பு ஆவணங்கள் தயாரித்தல் 377

8.7 பிராமணர்கள் யார் 380

8.8 தலித்துகள் யார் - தலித்துகளை இந்தியாவிலிருந்து பிரிக்க முயற்சித்தல் 384

8.9 பிராமணர்களை இந்தியாவிலிருந்து பிரிக்க முயற்சித்தல் 393

8:1. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை - இந்தியா

அல்பெருனி எனும் இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர் இந்தியாவைப் பற்றி 11ஆம் நூற்றாண்டில் கூறியுள்ளது:

'மற்ற நாடுகளில் ஒருமித்ததாக இருக்கும் பொருள்கள் (வழிபாடு, வேதம், கலாச்சாரம், உணவு, உடை, இலக்கியம்), இந்தியாவிலுள்ள இந்துக்களிடம் வெவ்வாறாக இருக்கும். எனவே இந்தியாவிற்கும், மற்ற நாடுகளுக்குமிடையே பெரும் வேறுபாடு உண்டு. இந்தியாவின் கொள்கைகளான பிரபஞ்சத் தோற்றம், இயற்கையைக் கண்ணுறுதல், மனித வாழ்க்கையின் தத்துவம், தர்மம், கர்மா, மறுபிறவி, ஆகியவை வேறு கலாச்சாரங்களில் ஒன்றிணைந்து காண முடியாதவை'.

'இந்திய சமுதாயம் உலகில் எங்கும் காணப்படாத வெளிப்புற வேறுபாடும், உள்புற ஒருமைப்பாடும் கொண்டது. இந்துக்களுக்கு, வாழ்க்கையில் எல்லாச் செயல்பாடுகளும் சடங்குகளாக அமைந்துள்ளன. பிறப்பு முதற்கொண்டு சாகும்வரை, ஏன், அவன் புதைகுழி மூடித் தண்ணீரும், பாலும் வார்க்கும்வரை அனைத்துமே சமயச் சடங்குகளுடன் கூடியது. இந்து, தனது வாழ்நாளின் பெரும்பகுதியை இத்தகைய சடங்குகளுக்கும், தெய்வ வழிபாட்டுக்கும், திருவிழாக்களுக்காகவும் திருத்தலயாத்திரைகளுக்காகவும் செலவிடுகின்றான். அவனுடைய திருவிழாக்கள் அமைதியானது. சோகத்தைத் தெரிவிப்பதோ அல்லது பிறரை இகழ்வதோ அன்று. அவர்களின் திருவிழாக்கள் ஆரவாரமாயும், வாத்தியங்கள் முழங்குவதாயும், ஆடல், பாடல் கலந்ததாகவும் இருக்கும். உலகில் வேறு எங்கும் இத்தகைய மகிழ்வான தெய்வ வழிபாடு இல்லை'.

'வரலாற்றுப் பூர்வமாக ஆய்விட்டால் இந்தியா ஒரு நாடு மட்டுமல்ல, அங்கே ஒரு வேறுபட்ட வாழ்க்கை முறையைக் காணலாம். இந்துக்களின் நாகரிகம் எகிப்து நாட்டில் சூரியன் எனும் நாகரிகம் உதிக்கத் தொடங்கிய (கிமு 4000) காலத்திலும் இருந்தது. சூரியன் எனும் நாகரிகம் கிரேக்க நாட்டில் கிமு 5ம் நூற்றாண்டில் உதித்தபோதும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் 20ம்

நூற்றாண்டில் நொறுங்கி அழிந்தபோதும் தளராமல் இருந்து வந்துள்ளது. 20ம் நூற்றாண்டு வரை உலகைத் தன் வசம் வைத்திருந்த ஸ்பெயின், போர்ச்சுக்கல் போன்ற கொடூர நாடுகள் தற்போது பொருளாதாரத்தில் வீழ்ச்சியுற்ற போதும் இந்துக்கள் நாகரிகம் பெருமையுடன் விளங்குகின்றது. இனி வரும் 10, 20 ஆண்டுகளில் இந்தியாவை, கடந்த முந்நூறு ஆண்டுகளாக ஆட்சி செய்த பிரிட்டிஷ் ஏகாதிபத்திய - மதவாத கூட்டுக் குழுமம் ஆன்மிக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இந்நாட்டிற்கு அடிமையாவது நிச்சயம்' எனப் பல பொருளாதார நிபுணர்கள் ஆருடம் கூறியுள்ளனர்.

இந்திய ஆன்மீகம் மேற்கத்தியர்களுக்குப் பெரும் புதிராக விளங்கியது, இன்றும் விளங்கிக் கொண்டும் இருக்கிறது. வேறு சமயங்களிலெல்லாம் இறைவனை அடையப் பிரார்த்தனை என்னும் மென்பொருள் (Software) மட்டுமே உள்ளது. ஆனால் இந்தியாவில் மட்டுமே Hardware போன்ற மனித செயல்களான யோகா, பிராணாயமம், தவசு, இசை, ஆடல்கலை முதலிய (Physical process) செயல்பாடுகள் இறைவனை அடைவதற்கான வழிமுறைகளாய் உள்ளன. இது அதிசயமே!

மற்ற நாடுகளில் இனச் சண்டை, மதச் சண்டை, சகோதர யுத்தங்கள் போன்ற கொடுமைகளால் பல கோடி மக்கள் இறந்துள்ளனர். பல நாடுகள் அழிவுற்றன அல்லது பிளவுற்றன. (இன்றைய ஜெர்மனி 400 ஆண்டுகளுக்கு முன்புகூட 244 தனித்தனி நாடுகளாக விளங்கியது), பெண்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர். இத்தகைய பெரும் கொடுமைகள் இந்தியாவில் எப்போதும் இருந்ததில்லை. இந்தியர்கள் தொழில் அடிப்படையிலான நான்கு வர்ணங்களாகத் தங்களுக்குள் கொள்வினை கொடுப்பினையுடன் வெவ்வேறு சமாஜமாக வாழ்ந்து வந்தனர். இத்தகைய சமாஜ கூட்டத்தைச் சாதிகளாகப் பிரித்த பெருமை போர்ச்சுகீசியர்களுக்கும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் சாரும். சமாஜங்களுக்கு இடையே வேறுபாடு இருந்துவிடினும் இந்தியாவில் சாதிச் சண்டையினால் பேரழிவு நடந்தது இல்லை. இத்தகைய சாதிகள் தொழில் அடிப்படையில் தோன்றியதால் இந்நாட்டில் 200 ஆண்டுகளுக்கு முன்புகூட சாதித் தலைவர்கள் இல்லை. இன அடிப்படையில் இச்சாதிகள் தோன்றியிருப்பின்

தலைவன் இருந்திருக்கக் கூடும். தலைவன் இருந்திருந்தால் காலனி ஆதிக்க - சமயவாதிகள் அத்தலைவனுக்கு மண் ஆசை, பெண் ஆசை, பொருள் ஆசை அல்லது மது ஆகியவை வழங்கி, அவனையும் அவன் மூலமாக அவன் சமுதாயம் முழுமையையும் மதம் மாற்றியிருப்பார்கள். (இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான நாகர்லாந்து, மீசோரம் ஆகிய பகுதிகளிலிருந்த ஒருசில இனத் தலைவர்களைக் கை கொண்டு பெருமளவில் மதம் மாற்றத் நடந்துள்ளது இங்குக் குறிப்பிடதக்கது).

இந்தியாவின் இன்றைய பின்னடைவு கடந்த 2000 ஆண்டுகளாக, அது அடிமையாய் இருந்ததால் ஏற்பட்டதே ஆகும். பௌத்தம், சமணம், இஸ்லாம், கிறித்துவம் ஆகியவை இந்தியாவைக் கடந்த 2000 ஆண்டுகளாக ஆண்டன. உலகம் முழுவதும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பும், தொழில் புரட்சியும், தொழில் முன்னேற்றம் கண்ட 16, 17ம் நூற்றாண்டு முதல் சுமார் 300 ஆண்டுகளாக இந்நாடு மேல்நாட்டின் கிறித்துவர்களால் அடிமை விலங்கினால் பிணைக்கப்பட்டு இருந்தமையால் தொழில் துறையில் இந்தியா பின்தங்க நேரிட்டுவிட்டது. விடுதலை பெற்று 60 ஆண்டுகளில் இந்நாடு கண்டுள்ள மாபெரும் முன்னேற்றம் இந்நூலில் பிற்பகுதியில் கிராம பொருளாதாரக் கணக்கெடுப்பாகச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளதைக் காணலாம்.

அன்று இந்நாட்டின் செல்வத்தைக் கவரவந்த வெள்ளையர்கள் வெட்டுக்கிளிகள் போல் நாடு முழுவதிலும் பரவினர். அவர்களின் நாட்டை விட, இந்நாடு 50 பங்கு பெரியது, பல மடங்கு செல்வத்திலும், நாகரிகத்திலும், கலை, இலக்கத்திலும் சிறந்ததாய் இருந்தது. இந்தியாவின் அனைத்துச் செல்வங்களும், வாழ்கையும் இவ்வெட்டுக்கிளிகளால் பாதிக்கப்பட்டன. அதன் காரணமாக ஓர் உயர்வான இந்திய சமுதாயம், ஒழுக்கமும், கலாச்சாரமும் அற்ற ஒரு கும்பலால் கூண்டுக்குள் அடைக்கப்பட்டுவிட்டது. இன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன் உலகின் முன்னணியில் இருந்த நாடு எதுவாக இருக்கும் என உங்களால் ஊகிக்க முடிகின்றதா? ஆம் நமது பாரததேசம்தான்! அப்போது உலகின் மொத்த பொருளாதார உற்பத்தி 102.50 மில்லியன் டாலராக இருந்தது. அதில் நம் நாட்டின் உற்பத்தி மட்டும் 33.75 மில்லியன் டாலர்

(அதாவது உலக உற்பத்தியில் சுமார் மூன்றில் ஒரு பங்கு ஆதாரம்: மாடிசன் 2003, பக்கம் 261). இந்தியாவுக்கு அடுத்த நிலையில் சீனா 26.2 சதவீத பங்கை கொண்டிருந்தது. ஆனால் அக்கால கட்டத்தில் மேற்கத்திய கிறித்துவ நாடுகளின் பங்களிப்பு வெறும் 10.80 சதவீதம் மட்டுமே.

நம் நாட்டில் தொன்றுதொட்டு விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டுவரும் ஏர்கலப்பைகூட, கிறித்துவ நாடுகளில் 1662ல்தான் முதன்முதலாக அறிமுகப்படுத்தப் பட்டது. (Alexander Walker 1820ல் எழுதியது)

பதினைந்தாம் நூற்றாண்டில் இந்தியா

பதினைந்தாம் நூற்றாண்டில் இந்தியாவுடன் ஒப்பிடும் போது பிரிட்டன் மிகவும் சிறிய நாடு, புதிய நாடுகூட. அதன் மக்கள் தொகை இன்றுகூடத் தமிழக மக்கள் தொகையை விடக் குறைவு. அக்காலகட்டத்தில் கிறித்துவ நாடுகளில் நிலங்களை ஆக்கிரமித்து, அதன் மூலம் வருமானத்தைப் பெற்ற கூட்டமே தலைவர்களாகவும், ஆளும் வர்க்கமாகவும் இருந்து வந்தனர். அரசின் வருமானம், நில குத்தகையும், அடிமை விவசாயி களிடமிருந்து பெறப்பட்ட கப்பமும் மட்டுமே. பதினைந்தாம் நூற்றாண்டில் கிறித்துவ நாடுகளில் விவசாயமோ, தொழிலோ, வணிகமோ எதுவுமே முறையாகச் செய்யப்படவில்லை. அரசு ஆட்சி முறையும் அன்று சரியாக அமைக்கப்படவில்லை.

பதினேழாம் நூற்றாண்டில் இந்தியா

எந்த உலக நாட்டையும்விட மிக பெரிய தொழில் நாடாகவும், ஏற்றுமதியில் தனித்தன்மை பெற்ற நாடாகவும் இந்தியா விளங்கியது. கிபி 1750ல் இந்தியாவின் தொழில் உற்பத்தி உலக பொருளாதாரத்தில் 24.5 சதவீதமாக இருந்தது. இது 1900ம் ஆங்கில கிறித்துவ ஆட்சி சுரண்டலின் காரணமாக 1.70 சதவீதமாக அழிக்கப்பட்டது. தொழில்கள் அழிந்தபின் விவசாயம் மட்டும்தான் அன்று நம் நாட்டுக்கு வருமானம் தருவதாய் விளங்கியது. அதனால் விவசாயத்தை நம்பி வாழ்வோர் மக்கள் தொகையில் 80 சதவீதமாக அதிகரித்து விட்டனர். அவர்களின் ஆட்சியின்போது விவசாயத் துறைக்கும் பல்வேறு இடையூறுகள் தந்தனர். நெல்லுக்குப் பதில் பருத்தி, சணல், கரும்பு, புகையிலை, அவுரி போன்ற

பிரிட்டனுக்குத் தேவையான வணிகப் பயிர்களைப் பயிரிட விவசாயிகள் வற்புறுத்தப்பட்டார்கள். விளைநிலங்களில் விளைச்சல் நின்று போனது. செங்கல்பட்டு மாவட்டத்தில் 1788ம் ஆண்டுவரை ஒரு ஹெக்டேருக்கு 2.5 டன் நெல் விளைச்சல் இருந்தது. ஆனால் அடுத்து பத்து ஆண்டுகளுக்குள்ளோ விளைச்சல் ஹெக்டேருக்கு 0.63 டன்னாகக் குறைந்தது. மக்கள் பசியாலும் பட்டினியாலும் மடிந்தனர். இவர்கள் ஆட்சிக் காலத்தில் சுமார் 30 பஞ்சங்கள் தோன்றின. மூன்று கோடி மக்கள் வரை பஞ்சத்தால் இறந்துபட்டனர்.

வரிவிதிப்பின் மூலம் தங்களின் வருமானத்தைப் பெருக்குவதே கிறித்துவ ஆட்சியாளர்களின் பிறிதொரு நோக்கமாய் இருந்தது. அக்காலகட்டத்தில் இங்கிலாந்தில் நிலவரி 5 முதல் 20 சதவீதம் மட்டுமே. ஆனால் இந்தியாவில் 30 முதல் 90 சதவீதம் நிலவரியினை ஆட்சியாளர்கள் விதித்தனர். (புள்ளி விவரங்கள் இன்னும் தெரிந்திட, பேராசிரியர் கனகசபாபதி எழுதியுள்ள ‘பாரத பொருளாதாரம் அன்றும் இன்றும்’ எனும் நூலைப் பார்க்கவும்)

பிரிட்டிஷ் ஆட்சியின்போது மேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழில் புரட்சி இந்தியாவிற்கும் கசியத் தொடங்கியது. இந்திய இயற்கை வளங்களைப் பிரிட்டனுக்கு எடுத்துச் செல்ல ரோடுகள், ரயில் பாதைகள், துறைமுகங்கள் ஆதிக்கவர்க்கத்தால் அமைக்கப்பட்டன. ‘இஸ்ரவேலருக்கு அளிக்க வேண்டிய அப்பம் நாய்களுக்கும் ஈயப்படும்’ எனும் பரிசுத்த ஆவியின் வாக்கிற்கு இணங்க, இந்தியாவில் சில அணைக்கட்டுகளும் மின் நிலையங்களும் அமைக்கப்பட்டன. ஆனால் அவ்வாட்சி இறுதியில் நமக்கு விட்டுச் சென்றது வறுமையும், பின்தங்கிய பொருளியல் நிலையும்தான் என்பதை மறுக்க முடியாது. (இந்திய வரலாறு - பண்ணை கைடு - 1997 பக்கம் அ - 80)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மட்டும் பிரிட்டிஷ் அரசு உலகம் முழுவதிலும் 111 போர்களை நடத்தியது. அதற்குரிய செலவும், வீரர்களும் இங்கிருந்தே எடுக்கப்பட்டனர். அந்த அறிவுபூர்வ செயல்களுக்காக ஆங்கிலேய கிறித்துவர்கள் தங்களைத் தாங்களே பாராட்டிக் கொண்டனர். (பக்கம் 72, பாரத பொருளாதாரம் அன்றும் இன்றும்)

8:2. இந்தியாவின் இருண்டகாலம்

வெள்ளையர்களும் அவர்களின் மதகுருமார்களும் இந்திய கலாச்சாரத்தை வேர்புழு போல் குடைந்து பலவீனப் படுத்தினர். அன்றைய பிரிட்டன், செல்வத்தையும், பொருள்களையும் அடையப் பல போர்களையும் வாரிசு யுத்தங்களையும் சுற்றுப்புற நாடுகளுடன் நடத்தியது. அதனால் சுற்றுப்புற நாட்டில் உள்ள அனைத்துச் சமுதாயப் பிரிவினருக்கும் கொடுமைகளும், துயரமும் நிகழ்ந்தன. பிரிட்டிஷ் சமுதாயம், வேறு எந்தச் சமுதாயத்துடனும் எக்காலத்திலும் ஒற்றுமையுடன் வாழ்ந்தது இல்லை. இத்தகைய சமுதாய வாழ்வினை எண்ணி வருந்துவதற்குப் பதில், அவற்றை நாகரிகம் என்னும் போர்வையில் இந்தியாவிற்குக் கற்றுத்தரப் பாதிரியார்கள் முயன்றனர். இந்தியர்கள் அறியாமையால் கட்டுண்டு கிடப்பதாகவும், 'நம்மைக் காப்பாற்ற வந்த விடுதலைப் படைகள் வெள்ளையர்கள்' எனும் தத்துவம் வலுவுடன் பறைசாற்றப் பட்டது. இந்தியர்களை, 'தங்களது முன்னோர்கள் நாகரிகம் அற்றவர்கள், விஞ்ஞான அறிவு இல்லாதவர்கள், மூட நம்பிக்கை உடையவர்கள், பேய், பிசாசுகள், பூதங்கள், சாத்தான்கள் ஆகியவற்றை வணங்குவோர்கள்' எனவும் நம்பவைக்கப்பட்டனர். எனவே இத்தகைய கீழ்த்தனமான சமுதாயத்தை மேம்படுத்த வந்தவர்கள் வெள்ளையர்களும், அவர்களது மதகுருமார்களும் என்றும், அவர்களுக்குக் கருமைநிற இந்தியர்கள் மிகவும் கடமைப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. பலகோடி மக்கள் வாழும் இந்நாட்டை ஒருசில வெள்ளையர்கள் அதுவும் 5000 மைல்களுக்கு அப்பாலிருந்து வந்து ஆட்சி செய்ய முடிகின்றது என்றால் அது தெய்வ (கர்த்தர்) சங்கல்பத்தாலும், அருளினாலுமே சாத்தியப் பட்டுள்ளது எனவும் இந்தியர்கள் மத்தியில் வலுவுடன் கூறப்பட்டது. வெள்ளையர்களும் அவர்களின் வேதமும் இந்தியாவிற்கு வந்தது கர்த்தரின் அளவுகடந்த திவ்விய நற்கருணையால் ஏற்பட்டது என்றும் சொல்லப்பட்டது.

இந்நாட்டின் பழம்பெரும் இலக்கியங்கள் கீழ்த் தரமானவை என்றும், அவர்கள் நாட்டின் நவீனங்களான ஷேக்ஸ்பியர், கிங் ஆர்தர், கெனில் ஒர்த் ஆகியவையே

மிகச்சிறந்தன எனவும் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிற்றுவிக்கப்பட்டன. பள்ளிகளும், கல்லூரிகளும் நடத்தும் உரிமை அவர்களின் மதகுருமார்களுக்கு மட்டுமே வழங்கப் பட்டிருந்தது. அதே வேளையில் இத்தகைய கல்வி நிலையங்களை நடத்திட இந்துக்கள் அறிவற்றவர்கள் எனும் நம்பிக்கை பரப்பப்பட்டது. வெள்ளையர்கள் இந்நாட்டிற்கு வரும்முன் கிராமங்களிலுள்ள பாதி நிலங்கள் கோவில்களுக்கும் அவற்றைச் சார்ந்த பள்ளிகளுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தன. வெள்யைர்கள் இந்நாட்டிற்கு வந்ததும் இத்தகைய நிலங்கள் 5% ஆக குறைக்கப்பட்டன. ஊர்கள், நகரங்கள் ஆகியவற்றின் மையப்பகுதியும், இரயில் நிலையங்களுக்கு அருகிலுள்ள நிலங்களும் கிறித்துவ மதகுருமார்களுக்கு ஒதுக்கப்பட்டன. அதில் வேத கோவிலும், மதகுருமார்களின் வாழ்விடமும் கட்டப்பட்டன. அச்சு இயந்திரம் இந்தியாவில் இறக்குமதியான 300 வருடங்கள் வரை அவற்றை உபயோகிக்கும் உரிமை மதகுருமார்களுக்கு மட்டுமே இருந்தது. பரிசுத்த வேதாகமம் உள்ளூர் மொழிகளில் அச்சிடப்பட்டு வினியோகப்படுத்தப் பட்டன. இதன்மூலம் அறிவற்ற (?) இந்துக்கள் அனைவரும் மதம்மாறிவிடுவார்கள் எனும் எண்ணம் வெள்ளையர்களிடம் இருந்தது. எனவே இப்புத்தகங்களை மொழிபெயர்க்கும் பணியும் அதற்கு உதவிடும் முகமாகத் தமிழ் - ஆங்கில அகராதி தயாரிக்கும் பணியும் முடுக்கிவிடப்பட்டன. இப்பணியை நிறைவேற்றிட ஏராளமான ஏழை பிராமணர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். பிராமணர்களைக் கொண்டு இயேசு பிரான் மீது பாடல்கள் தயாரித்தலும், தமிழ் இலக்கிய மொழி பெயர்த்தலும் 18, 19ம் நூற்றாண்டில் துரிதகதியில் நடை பெற்றது. இந்நூல்கள் பிராமணர்களால் ஆக்கப்பட்டாலும் அவை பாதிரிமார்களின் சாதனையாக வெளியிடப்பட்டது. தொடர்ந்து பல நூற்றாண்டு சுரண்டலினால் இந்தியா ஏழ்மையானது. கல்வி அறிவற்றது. இதற்கான காரணம், சுரண்டல் என்பதற்குப் பதிலாக, கர்த்தரை நம்பாததினால் ஏற்பட்ட பாவத்தினால் ஏற்பட்டது என பிரச்சாரம் செய்யப் பட்டது.[1] மொத்தத்தில் ஆங்கிலேயர்கள் இந்தியாவைப் பிடித்தது பீரங்கி மற்றும் துப்பாக்கிக் கலாச்சாரத்தினால் மட்டும் அல்ல. பிரித்தாளும் கொள்கை, இந்திய மன்னர்களுக்குக் கையூட்டு வழங்குதல், பொய், சதி, சூது ஆகியவற்றுடன்

இந்திய பிரமுகர்களுக்கு வெள்ளைக்காரப் பெண்மணிகளை இணைத்து விடுதல் (ஜவஹர்லால் நேரு - லேடிமவுண்ட் பேட்டன் உறவைப் பார்க்கவும்) ஆகிய யுக்திகளும் பயன்படுத்தப்பட்டன. இந்திய பிரமுகர்களுக்குச் 'சர்' பட்டம், ஜமீன்தார் மற்றும் மிராஸ்தார் பட்டங்களும் வழங்கப்பட்டன. இதன் மூலம் ஆங்கிலம் படித்த இந்தியர்களையும், இந்திய பிரமுகர்களையும்கொண்டு நாகரிகம் என்னும் பெயரால், அவர்களை இந்து சமயத்திற்கு எதிராகத் திருப்பி விடுதல் போன்ற தந்திரங்களும் உபயோகப்படுத்தப்பட்டன. இந்தியாவிலிருந்த பண்டைய கலாச்சாரத்தைப் பற்றிப் பேசுபவர்கள் நாகரிகம் அற்றவர்கள் எனப் பழித்துரைக்கப் பட்டனர்.

வெள்ளையர்கள் நம்மை ஆண்டிருக்காவிட்டால் நாம் இன்னும் மாட்டு வண்டியில்தான் பயணம் செய்திருப்போம் என்று கூறுவோரும் இன்றும் உண்டு. உலகிலே வெள்ளையர்களுக்கு அடிமை ஆகாமல் தப்பித்த ஒருசில நாடுகளில் தாய்லாந்து நாடும் ஒன்று. அந்நாடு வெள்ளையர்களால் நாகரிகம் ஊட்டப்படாவிட்டாலும் இன்று இந்தியாவை விட முன்னேற்றம் அடைந்துள்ளதைத் தற்போது காணலாம்.[2] உதாரணத்திற்கு, இந்தியாவில் நான்கு வழிச்சாலைகள் 2005ம் ஆண்டுவாக்கில் தான் பயன்பாட்டிற்கு வந்தது. ஆனால் தாய்லாந்து நாட்டில் 1982ம் ஆண்டிலேயே (23 ஆண்டுகளுக்கு முன்பே) உபயோகத்திற்கு வந்துள்ளது. எனவே பிரிட்டிஷ் ஆட்சியாளர்களும் அவர்கள் குருமார்களும்தான் இந்தியாவில் நாகரிகத்தை விதைத்தவர்கள் என்பது உண்மைக்கு புறம்பானது. இந்தியாவில் டாக்கா நகரத்தின் மக்கள் தொகை 1757ல் 1½ லட்சமாக இருந்தது. பின் 1840ல், பஞ்சத்தின் காரணமாக 20000 ஆகக் குறைந்தது. இதுபோன்றே சூரத், முஷ்ரதாபாத் மக்கள் தொகையும் வீழ்ந்தது. சாலைகளை இந்தியாவில் அமைக்க, பிரிட்டிஷ் அரசு 1834 முதல் 1848 முடிய 14 வருட காலத்தில் செலவு செய்த நிதி, பிரிட்டிஷ் நாட்டில் மான்செஸ்டர் எனும் ஒரு நகருக்கு தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்குச் செலவிட்டதை விட குறைவானதே. (ஜான் பிரைட் - John Bright என்பவர் 24.6.1828ல் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் பேசியதிலிருந்து அறியலாம்) பண்டைய இந்தியாவை ஆண்ட அரசர்களும்,

சிற்றரசர்களும் அமைத்திருந்த ஏரிகளும், குளங்களும், கால்வாய்களும் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் பராமரிப்பு இன்றித் தூர்ந்து போனதால் இந்தியாவில் தொடர்ச்சியாகப் பல பஞ்சங்கள் ஏற்பட்டன (Thompsos. G. India and Colonies, 1836). இந்தியாவின் மக்கள்தொகை அபரிமிதமாக இருப்பதே இந்தியாவில் ஏற்படும் பஞ்சங்களுக்குக் காரணமாகக் கருதப்பட்டது. ஆனால் உண்மை அவ்வாறல்ல. 1870 - 1910 ஆண்டுகளுக்கிடையே இந்தியாவின் மக்கள் தொகைப் பெருக்கம் 19 சதவீதமே, ஆனால் அதே காலத்தில் பிரிட்டனில் மக்கள்தொகைப் பெருக்கம் 58% இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மட்டும் நம் நாட்டில் (120 வருட பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில்) நிகழ்ந்த பெரும்பஞ்சங்கள் 31, ஆனால் அதற்கு முந்தைய 2000 ஆண்டு காலத்தில் இந்தியா சந்தித்தது 17 பஞ்சங்களை மட்டுமே.[3] ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் நம் நாட்டில் சில புனல் மின்நிலையங்கள் அமைக்கப்பட்டன என்பது உண்மையே. ஆனால் அவைகள் உண்மையில் ஆங்கிலேயரின் நூல் மற்றும் ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகள் அமைப்பதற்கே பெரிதும் உபயோகப்படுத்தப்பட்டன.[4] உதாரணமாகப் பாபநாசம் புனல் மின்நிலையம் அம்பாசமுத்திரத்திலும், தூத்துக்குடியிலும் பருத்தி நூல்களும், ஆடைகளும், உற்பத்தி செய்திட உபயோகப்படுத்தப்பட்டன. இத்தொழிற்சாலைக்கு மூலப்பொருள்களை வழங்கிட அருகிலுள்ள விவசாய நிலங்களில் நெல்லுக்குப் பதிலாகப் பருத்தி மற்றும் அவுரி பயிரிட விவசாயிகள் வற்புறுத்தப்பட்டனர். இங்கிலாந்து அரசின் தேவைகளான பருத்தி, கரும்பு, புகையிலை, எண்ணெய் வகைகள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டுப் பல ஆராய்ச்சி நிறுவனங்களும் வேளாண்மைக் கல்லூரிகளும் நிறுவப்பட்டன. அதுபோன்றே கால்நடை மற்றும் மருத்துவக் கல்லூரிகளும் காலனி ஆதிக்கத்தை வலுப்படுத்துவதற்காகவே ஏற்படுத்தப்பட்டன. குதிரைகள்தான் அன்றைய வெள்ளையர்களின் பயணத்திற்கான வாகனமாய் இருந்தது. எனவே கால்நடைக் கல்லூரிகளில் குதிரைகள் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிக்கு முதலிடம் வழங்கப்பட்டது. இங்கிலாந்து நாட்டிற்கு இன்னும் பெருமளவில் தேவைப்பட்டது சமையலுக்கான உப்பு. ஐரோப்பிய நாடுகளில் இதனை

உற்பத்தி செய்ய முடியாது. எனவே உப்பைப் பிரிட்டனுக்குக் கொண்டு செல்ல உப்பளங்கள் அதிகமுள்ள திருச்செந்தூர், தூத்துக்குடி, வேதாரண்யம் பகுதிகளைத் துறைமுகங்களுடன் இணைப்பதற்கான இரயில் பாதைகள் அமைக்கப்பட்டன.

8:3. மொழிபேதம் - சித்தாந்த பேதம் உருவாக்கல்

காலனி ஆதிக்கவாசிகளுக்கும், அவர் தம் குருமார்களுக்கும் இந்தியாவில் சிம்ம சொப்பனமாக விளங்கியது சமஸ்கிருதமும், தமிழும். இந்தியாவிற்கு அவர்கள் வரும்வரை எப்ரு, லத்தீன் மற்றும் கிரேக்க மொழியே உலகில் பழமையானது, சிறந்தது எனும் எண்ணம் கொண்டிருந்தனர். ஆனால் சமஸ்கிருதம் மற்றும் தமிழில் காணப்பட்ட இலக்கிய இலக்கணங்கள் அவர்களை மிகவும் கவர்ந்தன. சமஸ்கிருத மொழியில் உள்ள உச்சரிப்பு உலகில் எந்த மொழியையும் மற்றும் பெயர்களையும் மிகவும் துல்லியமாய் உச்சரிக்க முடியும் என்பதே அவர்கள் கண்டுபிடிப்பு. உலகிற்குச்சரியான உச்சரிப்பைக் கற்றுக் கொடுத்ததே சமஸ்கிருதம் தான். (நன்றி: டாக்டர். சிவசக்தி பாலன், குருகுலத் தென்றல், சிவகாசி)

உதாரணம்:

Newyork இதனை நியூயார்க், நியூயோர்க், நீய்யோர்க் எனும் பல விதத்தில் ஆங்கிலத்தில் உச்சரிக்கலாம். இதனை நியூயார்க் எனச் சரியாக உச்சரிக்க உலகிற்குச் சொல்லிக் கொடுத்ததே சமஸ்கிருதம் தான்.

சமஸ்கிருதத்தினால் மட்டுமே, வேதங்களும், கலை இலக்கியங்களும், எழுத்துக்கள் உபயோகமின்றியும், மாறுதல் எதுவுமின்றியும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதகுலத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. இம்மொழி மூலமே வேதத்தோற்றமான காலத்திலிருந்தே, மக்களின் எண்ணங்கள் உணர்ச்சிகள் ஆகியவை இன்றும் அதே வடிவில் திரும்பவும் பிறப்பிக்கப்படுகின்றன என்பது ஓர் ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் உள்ளது. இம்மொழியில் மட்டுமே உச்சரிப்பு வார்த்தைகள் தோன்றும் விதம் பாரா, பசியந்தி, மத்யமா,

வைகாரி - (Para, Pasyanti, Madhyama, Vykhari) எனும் நிலைகளாக உயர்த்தப்படுகிறது. உச்சரிப்பின் விருப்பம், உணர்வு, தோற்றம், வெளியேற்றம் ஆகியவையே உச்சரிப்பின் வெவ்வேறு நிலைகளாகக் கூறப்படுகிறன. இத்தகைய இலக்கணம் உலகில் எந்த மொழியிலும் காணக்கிடைக்கவில்லை.

தொல்காப்பியம் தமிழில் உள்ள இன்றைய நூல்களுள் முதல் நூல். எழுத்து, சொல், பொருள் என்ற 3 இலக்கணங்களையும் கூறும் நூல். இதில் எழுத்தின் இலக்கணம் கூறும் பெரும்பிரிவுண்டு. அதில் பெரும்பாலும் ஒலி எழுத்திலக்கணங்களைச் (சமஸ்கிருதம் போல்) கூறுகின்றது. ஒரு சில நூற்பாக்களில் மட்டும் வரிவடிவம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. நூல் மரபில் தனி நின்ற எழுத்து அமைப்புகளையும், மொழி மரபில் சொல்லில் நிற்கும் எழுத்து நிலைகளையும், பிறப்பியலில் ஒலி எழுத்துகளின் பிறப்பினையும் மற்றும் புணரியல், தொகை மரபு, உருபியல் போன்ற எழுத்திலக்கணத்தைத் தெளிவாகக் கூறுகிறது. அதுபோன்றே எழுத்துகளின் சேர்க்கையால் உண்டாகும் சொல்லிணக்கத்தையும், சொற்களின் சேர்க்கையால் ஏற்படும் பொருள் இலக்கணத்தையும் தொல்காப்பியம் பேசுகிறது. பஞ்ச பூதங்களால் ஏற்பட்டுள்ள உலகத்தோற்றம் (நூற்பா 1589), உயிர்கள் வகைப்பாடு, இளமைப் பெயர்கள், வளர்ச்சியடைந்த பிறகு மக்கள் வாழும் வாழ்க்கை முறைகள், அவற்றுள் வீட்டில் வாழும் அகவாழ்க்கை நெறிகள், சமுதாயத்தில் நாட்டாரோடு பொருந்தி வாழும் புறவாழ்க்கை நெறிகள் ஆகியன பற்றியும் தொல்காப்பியம் பேசுகின்றது. இது தமிழ்மொழிக்கே உரித்தான சிறப்பு. எழுத்துகளுக்கு, பெயர் கொடுத்துள்ள முறை எண்ணி இன்புறத்தக்கது. உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள், இவ்விரண்டும் சேர்ந்து உயிர்மெய் எழுத்துகளாதல் எனும் இலக்கணம் இந்திய மொழிக் குடும்பத்திற்கே உண்டான சிறப்பு. தமிழ், சமஸ்கிருதம் மற்றும் அவை வழிவந்த மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில்தான் இவ்விலக்கணம் உண்டு. ஏனைய உலக மொழிகளில் இவ்விலக்கணம் இல்லை.

[5]இத்தகைய சிறப்புமிக்க தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளுக்கிடையே பேதத்தை அந்நியர்கள் உருவாக்கினர். சமஸ்கிருதத்தை அழித்தால் மட்டுமே உருவ வழிபாட்டை

அழிக்க முடியும், அதன் பின்னரே இந்து சமயம் முழுமையையும் அழிக்க முடியும் என மதகுருமார்கள் நம்பினர். இயேசுபிரான் பேசிய தெய்வீக அரமிக்மொழி இன்று அழிந்துவிட்டது. அதனுடன் சமஸ்கிருதத்தையும் ஒப்பிட்டு, அதுவும் இதுவும் இறந்த மொழி எனும் கருத்து ஆங்கிலக் கல்வி கற்றோர் மத்தியில் காலனிய வரலாற்று மதகுருமார்களால் சுற்றுக்கு விடப்பட்டது. சமஸ்கிருதம் இறந்த மொழி என ஒப்புக்குக் கூறப்பட்டதைத் தமிழ் ஆர்வலர்கள் பலர் பெரிதும் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனர். ஆனால் அம்மொழி இன்றும் சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு உபயோகப் படுத்தப்பட்டு வருவது காணக்கிடைக்கின்றது.

இயேசு பிரான் கால அரமிக் மொழி, தமிழ் - சமஸ்கிருதம் மொழிகளுடன் மிகவும் சம்பந்தம் உள்ளது. அதனைச் சற்று இங்கே ஆராயலாம்.

அரேமியா எனும் சொல் அரவம் என்ற சமஸ்கிருத சொல்லில் இருந்து பிறந்தது. தமிழ் மொழிக்கு மற்றொரு பெயர் அரவம். இன்றுகூட ஆந்திர பகுதிகளில் தமிழர்களை (அரவாடு) என்று அழைக்கப்படுதை காணலாம். தமிழ் மொழிக்கும், அரவம் எனும் அரேமியா மொழிக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. (பார்க்கவும் புத்தக எண் 85)

அரேமிய மொழி		தமிழ் மொழி
அப்பா	-	அப்பா
ஆச்சார்	-	ஆச்சாரியா
ஒபேதியா	-	உபாத்தியாயா
மீராரி	-	முராரி
மெரிமுத்	-	மாரிமுத்து
இசாரா	-	ஈஸ்வரா
சீவா	-	சிவா
சம்கர்	-	சங்கர்
ரோதா	-	ராதா
சைமன்	-	ஸ்ரீமான்
கர்மில்	-	கரைமாலை
ரமியா	-	ராமையா
கிலாபத்	-	குலபதி

இவற்றிலிருந்து கிபி முதலாம் நூற்றாண்டில் அதற்கு முன்னும் பாலஸ்தினத்தில் வழக்கிலிருந்து அரேமியா மொழி தமிழ் - சமஸ்கிருதத்தின் கிளை மொழி எனக் கூறலாம்.

பிராமணர்களை மற்றச் சமுதாயத்தினர் முன் அவமானப் படுத்தும் படலம் காலனி ஆதிக்கவாதிகளால் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை தொடர்ந்து, திராவிட - இயக்க அரசியல்வாதிகளால் பின்பற்றப்பட்டு வருகிறது. இந்து சமயத்தில் காணப்படும் குறைபாடுகளுக்கெல்லாம் பிராமணர்கள் பொறுப்பாளராகவும், சிறப்புகளுக்கெல்லாம் ஆங்காங்கே காணப்படும் ஓரிரு பிராமணர் அல்லாத இலக்கிய எழுத்தாளர்களே காரணம் எனவும் கூறப்பட்டது. அத்தகைய பிராமணர் அல்லாத பழம் எழுத்தாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் பிராமணர்களுக்கும், பிராமணியத்திற்கும் (?) எதிராக முட்டிவிடப் பட்டனர்.[6] அத்தகைய இலக்கியவாதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் வீமண்ணா என்பவர்.

வீமண்ணா 16ஆம் நூற்றாண்டில் ஆந்திராவில் வாழ்ந்த சிறந்த புலவர், யோகி மற்றும் சமூக சீர்திருத்தச் சிந்தனையாளர். இவருடைய இயற்பெயர் குமாரகிரி வீமாரெட்டி. வெண்பா வடிவில் மக்களை நல்வழிப்படுத்தும் பலநூறு பாடல்களை இவர் இயற்றியுள்ளார். அதனில் ஒரு பாடலில் 'தன் மனைவி சீதையைக் காட்டில் தவற விட்ட இராமன் ஓர் கடவுளா' என இகழ்வதுபோல் வஞ்சப்புகழ்ச்சியணியில் பாடியுள்ளார். இதனைக் கொண்டு வீமண்ணா, பிராமணர்களின் எதிரி, புரட்சிவாதி எனப் பல்வேறு அடைமொழிகளில் பிரிட்டிஷ் ஆட்சியாளரால் முன்நிறுத்தப்பட்டார். இதனைப் போன்று தமிழ்நாட்டிலும் அங்கு இங்குமாகச் சில பாடல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதனை இயற்றிய புலவர்கள், பிராமணர்களுக்கும், பிராமணியத்திற்கும், இந்து சமயத்துக்கும் எதிராகப் புரட்சி செய்தவர்கள் என மகிமைப்படுத்தபட்டனர். அவர்களே சித்தர்கள் என்றும், இன்று காணாமல் போய்விட்ட தமிழர் சமயம் அல்லது திராவிட சமயத்தைச் சார்ந்தவர்கள் எனவும், அவர்கள் பிராமணர்களை எதிர்த்தவர்கள் என்றும் கதைகள் புனையப்பட்டன. அதனில் ஒன்றிரண்டை இங்குப் பார்க்கலாம்.

தஞ்சாவூர் சரபோஜி மன்னர் காலத்தில் திருநெல்வேலியிலிருந்து வேதநாயக சாஸ்திரி எனும் மதம் மாறிய கிறித்தவர்

தஞ்சாவூர் வந்தார். இவர் திருநெல்வேலி சைவ பிள்ளைமார் சமுதாயத்தைச் சார்ந்தவர். அன்று சரபோஜி மன்னரின் குலகுருவாக ஒரு கிறித்துவ பாதிரியாரான 'ஸ்வார்ட்ஸ்' என்பவர் விளங்கினார். அவருடன் வேதநாயக சாஸ்திரி நண்பரானார். இருவரும் இணைந்து 'சாத்திர கும்மி' எனும் நூலை எழுதினர். அதில் இந்து மற்றும் இஸ்லாமிய சமுதாயத்தை இகழும் பாடல்களும், சைவ சித்தாந்தத்தை அவமதிக்கும் பாடல்களும் நிறைந்திருந்தன. சாத்திர கும்மியை ஓலைச்சுவடிகளில் எழுதி மூன்றாம் நபர் மூலம் சரஸ்வதி மஹால் நூலகத்தில் பழமையான ஓலைச்சுவடி எனச் சேர்க்கப்பட்டது. பின்னர் இந்நூல் அச்சு ஏற்றப்பட்டது. அதில் சாத்திர கும்மி எனும் தலைப்பு நீங்கப்பட்டு 'சித்தர் சிவாக்கியர் பாடல்கள்' என்னும் தலைப்பிட்டுப் புத்தக வடிவில் 1988-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

வியாசர் எழுதிய பவிஷ்ய புராணம் எனும் புராண நூலும் திருடப்பட்டுப் பல இடைச் சேர்க்கைகளுடன் கிறித்துவம் சார்ந்த நூலாக வெளியிடப்பட்டது. வியாசர் எழுதியதாகக் கூறப்படும் இந்நூலில் கல்கத்தா நகர் பற்றியும், முகம்மது நபிகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது என்பது இடைச் செருகலுக்குச் சாட்சியாக விளங்குகிறது. இத்தகைய மோசடியில் சிக்காதவை சமஸ்கிருத இலக்கியங்கள் மட்டுமே எனலாம். அவ்விலக்கியங்கள் பல மனப்பாடம் மூலம் பதிக்கப்பட்டு வந்ததாலும், மூலச்சுவடிகள் பிராமணர்கள் வீடுகளிலும், கோவில்களின் மூலஸ்தானத்திற்கு எதிரில், மாடியிலிருந்த சரஸ்வதி அரங்கத்திலும் இரசியமாகப் பாதுகாக்கப்பட்டதாலும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் அதனில் கைவைக்க முடியவில்லை.

19ம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் சாதிச் சச்சரவுகளோ, வேதங்களுக்கு எதிரான கருத்துகளோ இருந்ததில்லை. இதனைக் காலனி ஆதிக்கவாதிகளும் ஏற்றுக் கொள்கின்றனர். இந்தியாவிற்குப் பண்டைக் காலத்தில் வருகை தந்த அந்நிய நாட்டு யாத்திரிகர்களான ஹுவான் சுவாங், மார்க்கோபோலோ, அப்துல் ரசாக் போன்றவர்கள் இந்தியாவில் சாதி மோதல்கள் இருந்ததாகக் குறிப்பிடவில்லை. அதுபோன்றே சங்ககால இலக்கியங்களிலும் சாதி மோதல்கள் நடந்ததாகக் குறிப்புகள் இல்லை. ஆனால் 19ம் நூற்றாண்டு தொடங்கி இந்தியாவில்,

குறிப்பாகத் தமிழகத்தில் வேளாளர் சமுதாயத்தை, பிராமணர்களுக்கு எதிராகவும், சைவ சித்தாந்தத்தை வேதங்களுக்கு எதிராகவும், சித்த வைத்தியத்தை ஆயுர்வேத மருத்துவத்திற்கு எதிராகவும் அந்நியர்களால் மூட்டி விடப்பட்டது. அத்தகைய கலகத்தை முன்நின்று நடத்தியவர்கள், சைவ சித்தாந்தவாதிகள் சிலர். அத்தகைய சித்தாந்த வாதிகளின் திரிபுவாத கொள்கைகள் வருமாறு:

1. ஆதியில் தமிழில், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு வேதங்கள் இருந்தன. அவற்றைப் பிராமணர்கள் கவர்ந்து சென்று அழித்துவிட்டனர். (இதற்கான பதில் பக்கம் 4, தமிழ் சிவஞானபோதம் முதல் நூலா, வழிநூலா எனும் நூலில் வழங்கப்பட்டுள்ளது - புத்தகம் எண்.16 தமிழ்)

2. இப்போது தமிழகத்தில் இருப்பவைகளில் திருக்குறள் மட்டுமே தமிழ் வேதம். (காமத்துப்பால் அடங்கிய வாழ்க்கை நூல், வழிபாட்டு நூலாகச் சைவ சித்தாந்தவாதிகள் சிலரால் முன்நிறுத்தப்பட்டுள்ளது).

3. ஆகமங்கள், ஆதியில் தமிழில் தான் இருந்தன. அதனைச் சைவர்களிடமிருந்து பிராமணர்கள் பறித்துச் சென்று சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்தனர். பின்னர் தமிழ் ஆகமங்கள் அழிக்கப்பட்டு விட்டன.

4. ஆதியில் திராவிடர்கள் / தமிழர்கள் சமயம் சைவ சித்தாந்தமே. வைதீக சைவம் (வேதங்களின் அடிப்படையிலான சமயம்) தமிழர்களுக்கு ஏற்புடையது அல்ல எனும் கருத்துப் பரப்பப்பட்டது. இதன் மூலம் சைவ சித்தாந்தம் ஒரு தத்துவம் என்பது மறைக்கப்பட்டுச் சமயமாக மாற்றப்பட்டது.

5. சைவ சித்தாந்தத்தின் நோக்கம் சிவ வழிபாட்டை உலகம் முழுவதிலும் பரப்ப வேண்டும் எனும் கொள்கைக்குப் பதிலாக வைதீக சைவத்தை இகழ்ந்துரைக்கவும், சைவ சித்தாந்தம் இந்து சமயம் அல்ல என்ற கோட்பாட்டை உலகம் முழுமையும் பரப்பவும் உபயோகப்படுத்தப்பட்டது.

6. சிவஞானபோதம் எனும் 12ஆம் நூற்றாண்டு தமிழ் நூல், சைவ சித்தாந்த இலக்கணத்தைப் பேசும் மூல நூல் என முன்னிலைப்படுத்தப்பட்டது. இந்நூலின் வாழ்த்துப் பாசுரத்தில் அதில் காணும் இலக்கணங்கள் சமஸ்கிருதத்திலிருந்து தழுவி எழுதப்பட்டன என்று கூறப்பட்டிருந்தும் சைவ சித்தாந்தவாதிகள் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தனர்,

(பார்க்கவும் தமிழ் சிவஞான போதம் முதல் நூலா, வழிநூலா?). இந்த வாழ்த்துப் பாசுரம் பிராமணர்களால் செய்யப்பட்ட இடைச்செருகல் எனவும் கூறினர் இத்தகைய பிரச்சனையை எதிர்பார்த்திருந்த புறச்சமயவாதிகள் சிலர் சிவஞானபோதம் ஒரு கிறித்துவநூல் என உரிமை கொண்டாடினர். இவ்வுரிமை பாராட்டுதலைத் தமிழக சைவசித்தாந்த பண்டிதர்கள் இதுவரை எதிர்த்துப் பேசவில்லை.

7. சைவ சமயத்தில் மறுமலர்ச்சி கண்டிடவும், 20ஆம் நூற்றாண்டில் அதற்கு ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளவும் லண்டன் மெய்கண்டார் ஆசிரமத்தைத் தலைமையிடமாக கொண்டு உலக சைவா கவுன்சில் 29.2.1992ல் தொடங்கப் பட்டது. இதன் கிளைகள் உலகெங்கும் உள்ளன. இக்கவுன்சிலின் சார்பாக இரண்டாண்டிற்கு ஒருமுறை மாநாடுகள் உலகின் பல்வேறு நகரங்களிலும் நடத்தப் படுகின்றன. இம்மாநாடுகளிலும், அவ்வமயம் வெளியிடப் படும் கட்டுரைகளிலும், சைவசமயத்தை எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விவாதிப்பதற்குப் பதிலாக இந்து சமயத்தையும், வேதங்களையும் இந்து சமய தெய்வ அருளாளர்களையும், வேத வியாசர் மற்றும் ஆதி சங்கரர் போன்ற மகான்களையும் இழித்துரைக்கும் செயல்கள் சற்றும் கூச்சமின்றி மேற்கொள்ளப்படுகின்றன.

8. கோயம்புத்தூர் நகரத்திற்கு மிக அருகில் பேரூர் என்னும் தலம் உள்ளது. இது ஒரு வைப்புத்தலம். இதனில் வீரசைவத் திருமடம் ஒன்று தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் என்பவரால் ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன் தொடங்கப் பட்டது. இப்போது இதன் அதிபர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார்.[7] இவர் வேதங்களை ஏற்க மறுப்பதுடன் மடத்தின் செய்திகளைத் தாங்கி வெளிவரும் ‘சிவ சாந்தலிங்கர்’ எனும் இதழில் வேதங்கள் மலிவாக ஏசப்படுகின்றன.

9. திருவாவடுதுறை ஆதீனம் சார்பில் சைவ சித்தாந்தத்தை மக்களிடம் எடுத்துச் செல்ல இரண்டாண்டு நேர்முகப் பயிற்சியுடன் கூடிய ஒரு பயிற்சி நடத்தப்படுகிறது. இப்பயிற்சியில் சேரும் மாணவர்களுக்குச் ‘சைவ சித்தாந்த ரத்தினம்’ எனும் சான்று வழங்கப்படுகின்றது. இப்பயிற்சிக்கு வழங்கப்படும் பாட புத்தகங்களில் இந்துசமயத்திற்கு எதிரான கருத்துகளும், திரிபுவாத கருத்துகளும் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளன.

8:4. திராவிட இயக்கங்கள் - இருபதாம் நூற்றாண்டு

பிரிட்டிஷ் ஆட்சியின் காரணமாக இந்தியா ஏழ்மையடைந்தது. இந்திய மக்களும் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஏழ்மை, மற்றவர்களைச் சார்ந்திருந்த பிராமணர்களை பெரிதும் பாதித்தது. இவ்வாறு ஆதரிப்பாரின்றி ஏழ்மையில் வாழ்ந்தபொழுதில், இந்தியாவில் காலனி ஆதிக்க பிரிட்டிஷ் ஆட்சியின் நிர்வாகத்தைச் செய்திட உள்நாட்டு ஊழியர்கள் தேவைப்பட்டனர். இத்தகைய புதிய சந்தர்ப்பத்தைப் பிராமணர்கள் பெரிதும் பயன்படுத்திக் கொண்டனர். அரசுப் பணிகளில் பிராமணர்களின் பெரும் ஆக்கிரமிப்பு இருந்தது. அறிவுத் திறனுடன் பேராசையும், சமுதாயத்தில் சிறந்தவர்கள் என்ற மமதையும் ஒன்று சேர்ந்ததால் பண்டைய சமுதாய ஒப்புறவிலிருந்து பிராமணர்கள் விலகிச் சென்றனர். ஆனால் அக்காலத்தில் பிராமணர்கள் பலர் ஆங்கிலக் கல்வி கற்றிடப் பிராமணர் அல்லாதவர்கள் நிதியுதவி செய்துள்ளனர். உதாரணமாகப் பூனா நகரில் 1885 - 1895 ஆகிய பத்து ஆண்டுகளில் ஆங்கில கல்வி கற்கும் பொருட்டு ஆயிரக்கணக்கான பிராமணர்களுக்குப் பிணையதாரர்களாக (76% பேருக்கு) இதர ஜாதியினரே உதவியுள்ளனர். கல்விகற்ற பிராமணர்கள் பலர் உதவிக் கலெக்டர்களாகவும், நீதிபதிகளாகவும், வழக்குரைஞர்களாகவும் பணியாற்றினர். அத்துடன் அந்நிய ஏகாதிபத்தியத்தின் ஆட்சியுரிமையுடன் இருந்த இதர காலனிகளின் நிர்வாகத்திலும் பிராமணர்கள் உபயோகப்படுத்தப்பட்டனர். எனவே பிராமணர்கள் மீது உள்நாட்டு மக்களுக்கும், வெளிநாட்டு மக்களுக்கும் பெரும் கசப்பு உணர்ச்சி ஏற்பட்டது. பிராமணர்களைப் பிரட்டிஷ்காரர்களின் ஏஜெண்டுகளாக மக்கள் வெறுப்புடன் கண்டனர்.

எனினும் பிராமணர்களுக்கு அந்நிய ஆட்சியின் மீது அளவுகடந்த வெறுப்பு இருந்தது. சுதந்திரப் போராட்டத்தினைப் பிராமணர்கள் பலர் முன்னின்று நடத்தினர். வெள்ளையர்களுக்கு எதிராகப் பலாத்காரத்தை உபயோகப்

படுத்தி அதனால் குண்டடிபட்டு இறந்தவர்களில் 70% பிராமணர்களே. இத்தகைய சூழலில் பிராமணர்கள் மீது பல பிராமணர் அல்லாதவருக்குப் பெரும் சந்தேகம் எழுந்தது. இந்தியாவிற்குப் பிராமணர்கள் விடுதலை கேட்பது இந்நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றி, பிராமணர் அல்லாதவரை அடிமைப்படுத்துவதற்கே எனத் திராவிட இயக்கத்தினரால் தீராப்பழி சுமத்தப்பட்டது. உள்ளூர் பிராமணர்களால் நாடு ஆளப்படுவதை விட, வெளிநாட்டினர் இந்தியாவை ஆள்வதே சிறந்தது எனப் பிராமணர் அல்லாத உயர் ஜாதித் தலைவர்கள் பலர் முடிவுக்கு வந்தனர். இத்தகையோரில் T.N. நாயர் (1868-1919), தியாகராஜ செட்டியார் (1852-1925), C. நடேச முதலியார் (1875 - 1937) எனக் கற்றறிந்த மூவர் அடங்குவர். இவர்கள் தமிழகம் எங்கும் பயணம் செய்து, பிராமணர் அல்லாதவருக்குச் சமூக நீதியும், அரசுப்பணியும் கிடைக்க வேண்டும் எனப் பல பொதுக் கூட்டங்களையும், மாநாடுகளையும் நடத்தினர். இதன் பொருட்டு 'நீதிக் கட்சி' எனும் ஓர் அரசியல் கட்சியை 1917ல் நிறுவினர். இக்கட்சியினருக்குக் கிறித்துவ குருமார்கள், பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மற்றும் சில வெள்ளாளர்கள், முதலியார்கள், நாயுடு, செட்டியார்கள் போன்ற உயர்வகுப்பினரும், மற்றும் மிட்டா மிராசுதாரர்கள், ஜமீன்தார்கள், நிலப் பிரபுக்கள் ஆகியோரின் ஆதரவுமிருந்தது. இக்கட்சியின் இதர முன்னணித் தலைவர்கள் பெயரை சுப்பு என்பவர் தான் எழுதியுள்ள 'திராவிட மாயை ஓர் பார்வை' என்னும் புத்தகத்தில் (பக்கம்: 44ல்) பட்டியல் இட்டுள்ளார். அவர்கள், சர் பி.டி. ராஜன் (நிலபிரபு), குமார ராஜா முத்தையா செட்டியார் (வட்டி தொழில்), ராவ் பகதூர் வெங்கடரத்தினம் நாயுடு, சர் கே.வி. ரெட்டி, ராவ் சாகிப் வெங்கடரத்தினம் நாயுடு, ராவ் பகதூர் சூரியநாராயண மூர்த்தி நாயுடு, சர். ஏ.பி. பாத்ரோ, மேடைதளவாய் திருமலையப்ப முதலியார் (நிலபிரபு), திவான் பகதூர் கோமதி நாராயண செட்டியார், சர். எ. ராமசாமி முதலியார் ஆகியோர்.

அத்துடன் திவான் பகதூர் சிவஞானம் பிள்ளை, திவான் பகதூர் குமாரசாமி ரெட்டியார், சர். ஏ.டி. பன்னீர் செல்வம், பட்டிவீரன் பட்டி சவுந்திரபாண்டிய நாடார் (காப்பித் தோட்ட உரிமையாளர்) ஆகியோரும் இவ்வியக்கத்திற்கு உதவிக்கரம்

நீட்டினர். இவர்கள் காங்கிரஸ் கட்சியினர் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தையும் சுதந்திரப் போராட்டத்தையும், காந்தியக் கொள்கைகளையும் தீவிரமாக எதிர்த்தனர். நீதிக் கட்சியினர் 1920ம் ஆண்டில் தமிழக சட்ட மன்றத்திற்கு நடந்த உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்றனர். இவர்கள் செய்த தீயவைகள் பல. எனினும் சில நற்செயல்களில் முதன்மையானது, ஜாதி அடிப்படையிலான சமூகநீதி, அரசு பணிகளில் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே. இதனைத் தவிர இக்கட்சியினர் தமிழகத்தில் செயல்படுத்திய சமூக ஒப்புரவு பணிகள் குறிப்பிடத்தக்கதாக எதுவும் இல்லை. இந்திய விடுதலைக்கு எதிராகவும், இந்திய மக்களிடையே குறிப்பாகத் தமிழ் மக்களிடையே சாதி - மொழி பாகுபாட்டைத் தோற்றுவிப்பதிலும் இக்கட்சியினர் ஆற்றிய பங்கு மகத்தானதாக இருந்தது.

அரசியல் இயக்கமாக இருந்த நீதிக்கட்சியை ஒரு சமுதாய இயக்கமாக - திராவிடக் கழகமாக - சுயமரியாதை இயக்கமாக (1944ல்) ஈ.வே.ராமசாமி பெரியார் அவர்கள் மாற்றினார். பின்னர் இவ்வியக்கம் பிளவுண்டு ஒரு பகுதி C.N. அண்ணாத்துரை தலைமையில் திராவிட முன்னேற்ற கழகம் எனும் அரசியல் கட்சியாகத் தமிழகத்தில் உதயமானதை நாம் எல்லோரும் அறிவோம்.

அந்நிய ஆட்சிக்கு ஆதரவு அளித்தவர்களில் இன்னொரு பிரிவினரும் அடங்குவர். அவைகளே சாதிச் சங்கங்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதியிலும், 20ஆம் நூற்றாண்டு ஆரம்பத்திலும் தமிழகமெங்கும் சாதிச் சங்கங்கள் புற்றீசல் போன்று தோன்ற ஆரம்பித்தன. இச்சங்கங்களுக்கிடையே பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை ஆதரிப்பதிலும், அவர்களிடமிருந்து சலுகைகள் பெறுவதிலும் பெரும் போட்டி தோன்றியது. ரத்தினசாமி நாடார் தலைமையில் 1910ம் ஆண்டு தஞ்சை மாவட்டம் பொறையாரில், நாடார் சமுதாயத்திற்குப் பணி செய்வதற்காக 'நாடார் மகாஜன சங்கம்' என்னும் ஒரு நிறுவனம் தொடங்கப்பட்டது. இதன் முதல் மாநாடு பிப்ரவரி 6ஆம் நாள் 1910ல் நடைபெற்றது. அதில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தில் 'பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவாகச் செயல்படும் நாடார்கள் மட்டுமே இச்சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர முடியும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

8:5. சுதந்திர இந்தியாவிற்கு எதிராகச் சர்வதேச இயக்கங்களும், அவற்றின் இந்திய பங்குதாரர்களும்

இயேசுபிரானைப் பற்றியும், அவரது சமயத்தைப் பற்றியும், போதனைகள் பற்றியும் தத்துவ நூல்கள், (Commentries) இன்மையால்; கிறித்துவ சமயம் தன் கோட்பாட்டினைக் கற்றோர்கள் நிறைந்த உலக அரங்கில் தற்போது முன்வைக்க முடியவில்லை. பாவமன்னிப்புக் கோட்பாடு, சாத்தான் கோட்பாடு, சொர்க்கலோக - நித்தியஜீவன் கோட்பாடு ஆகியவற்றை மக்கள் ஏற்றுக் கொள்வதாய் இல்லை. மக்கள் வாழ வேண்டிய நெறிமுறைகள் இச்சமயத்தில் வற்புறுத்தப்படவில்லை. இதன் காரணமாகக் கிறித்துவம் தளர்ந்துவிட்டது. உதாரணமாக இங்கிலாந்து நாட்டில் (2010ல்) தேவாலயங்களுக்குச் செல்லும் மக்கள் 5 விழுக்காட்டிற்குக் குறைவானவரே.[8] தேவாலயங்கள் இந்தியர்களால் வாங்கப்பட்டு இந்து ஆலயங்களாக நிறுவப்பட்டு வருகின்றன.

இத்தகைய சமுதாயச் சிக்கல்களில் மாட்டித் தவிக்கும் மேற்கத்திய கிறித்துவம், தான் அங்கு இழந்து வரும் பின்பற்றுவோர்களை ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் குறிப்பாக இந்தியாவில் புதிய அறுவடை மூலமாக (மதமாற்றம் மூலமாக) ஈடுகட்ட முயற்சி செய்து வருகின்றது. இதனைச் செய்திட உலக அரங்கிலும் இந்தியாவிற்குள்ளும், பல இயக்கங்களைச் சர்வதேச கிறித்துவம் நேரடியாக நடத்தியும், மறைமுகமாக ஆதரித்தும் வருகின்றது.[9] இந்நிறுவனங்கள், தங்களின் கைமாறாக, கிறித்துவ மதத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் பரப்பச் செயல்பட்டு வருகின்றது. இவ்வியக்கங்களுக்கு நிதி வசதியும், அரசியல் ஆதரவும், பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களில் பெரும் துணையும் உண்டு. இதனைத்தவிரச் சாதி மற்றும் மொழி ஆர்வலர்கள், சுற்றுப்புறச் சூழல் மற்றும் மனிதஉரிமை இயக்க ஆர்வலர்கள், கலை இலக்கிய மன்றங்கள், பிரிவினைவாதிகள் எனும் பல்வேறு இயக்கங்களின் ஆதரவும் உண்டு. அவற்றின் சிலவற்றின்

செயல்பாட்டினைக் கீழே கண்ணுறலாம். (Adopted from the book "Breaking India" பக்கம் - 103)

1. ஆசியப் படிப்பக நிறுவனம் (Institute of Asian Studies) சென்னை : இது தமிழ்மக்களின் உள் உணர்ச்சியைத் தூண்டிவிடுவதாகவும், இந்திய ஒற்றுமையைக் குலைப்பதற்குமான பணியைச் செய்துவரும் ஒரு நிறுவனம். இதன் நிர்வாகி ஒரு கிறித்துவர். இதனில் பன்னிரு திருமுறை (சைவ சித்தாந்தம்) தனி சமயமாகவும், இந்து சமயத்திலிருந்து வேறுபட்டதாகவும், கிறித்துவ சமயத்துடன் தொடர்பு உள்ளதாகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. கிறித்துவமும், புத்த சமயமுமே இந்திய சமயங்களில் தமிழர்களுடன் ஒன்றுபட்டது என்றும் இந்து சமயம் தமிழர்களுக்கு அப்பாற்பட்டது எனவும் கூறி வருகின்றது. சிவன் திராவிடக் கடவுளாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளார். ஆனால் இயேசு கிறிஸ்து யூத இனத்தினர் என்பதும் வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்த கடவுளே என்பதும் தந்திரமாக மறைக்கப்பட்டு விட்டது. இந்நிறுவனத்தால், வெளிநாட்டினரைக் கொண்டு இந்து வேதங்களைத் திரிபுவாத அடிப்படையில் விளக்கும் பல நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. இதனால் உற்சாகம் அடைந்த மதகுருமார்கள் பல இந்துப் பண்டிகைகள் கிறித்துவத்தைச் சார்ந்ததே எனக் கூறிவருகின்றனர்.

நவராத்திரியின் இறுதியில் விஜயதசமி அன்று இளம் குழந்தைகளுக்கு முதன்முதலாகக் கல்வி புகட்டும் நிகழ்ச்சி பரம்பரை பரம்பரையாக இந்துக்களால் நிகழ்த்தப்படும் ஒரு சடங்கு. இளம் சிறார்களுக்குக் கல்வி ஊட்டும் இச்சடங்கு கிறித்துவ சமயத்தைச் சார்ந்தது எனவும், அன்று தான் யூத - கிறித்துவ சமய கடவுளான யகோவா இயேசு கிறிஸ்துவுக்கு ஞானம் ஊட்டிய நாள் எனவும் கேரளாவின் கோட்டயத்திலுள்ள கிறித்துவ குருமார்கள் கூறிவருகின்றனர். அது போன்றே மகா சிவராத்திரி எனும் சிறப்பான இந்து பண்டிகை மெஸையா ராத்திரி (Messiah night) என்பதின் திரிபு என்றும், அந்நாள் இயேசு தன்னுடைய சீடர்களை இரவில் தூங்காமல் காவல் காக்க ஆணையிட்ட நாள் எனவும் கூறிவருகின்றனர். ஆனால் யேசு கிறித்துவின் பிறந்த நாளையே தெரியாத கிறித்துவ சமய குருமார்களுக்கு விஜயதசமி கொண்டாடும் நாளும், சிவராத்திரி நாளும் எவ்வாறு தெரியவந்தது; அதிசயமே!

2. கலை காவிரி கல்லூரி

17ம் நூற்றாண்டு முதல் கிறித்துவ அமைப்புகள் பரத நாட்டியத்தை கேலி செய்தும், அவமானப்படுத்தியும் பேசியும், எழுதியும் வந்தனர். அந்நடனத்தின் சிறப்பைத் தற்போது உணர்ந்த கிறித்துவ அமைப்புகள் அதனை கிறித்துவம் ஆக்கும் முயற்சியில் சர்வதேச அளவில் இறங்கியுள்ளனர். அமெரிக்காவில் மேரிலண்ட் ஊரில் வசிக்கும் ராணி டேவிட் எனும் இந்தியர், கலை ராணி நாட்டிய சாலை எனும் நடனப்பயிற்சி நிறுவனத்தை நடத்தி வருகிறார். இவர் இந்து சமய எச்சங்களைப் பரத நாட்டிய நடனங்களிலிருந்து நீக்குவதற்கு உறுதிகொண்டுள்ளார்.

கர்நாடக சங்கீதத்திலும், கிறித்துவ ஊடுருவல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் மக்கள் டிவியில் இந்திய 'மண்ணின் வாசனை' நிகழ்ச்சியில், ஓர் கத்தோலிக்க பெண் துறவி (Nun) வெள்ளை உடையில் மிருதங்கம், வயலின், கஞ்ச்சரா ஆகியவை புடைசூழ இயேசு கிறிஸ்துவை கர்நாடக சங்கீதம் மூலமாக மகிமைப்படுத்தும் நிகழ்ச்சி சமீபத்தில் (ஏப்ரல் - மே 2013ல்) ஒளிபரப்பப்பட்டுள்ளது.

3. ஐக்கிய நாடுகள் சபையில் இனப்பாகுபாடு பற்றிய கருத்தரங்கம் (United Nations World Conference against Racism Racial Discrimination, Zenobhobia and Intolerence) 2001ம் ஆண்டு தென்ஆப்பிரிக்காவின் டர்பன் நகரில் நடைபெற்றது. அம்மாநாட்டில், கிறித்துவ சமயத்தினரால் உலககெங்கும் கடந்த 2000 ஆண்டுகளாக இஸ்லாமியர் மற்றும் யூதர்களின் மீதான இனப்படுகொலைக்குக் காரணம், ஆரிய பிராமணர்களின் ஜாதிய வேறுபாடு கிறித்துவ சமயத்தில் ஊடுருவியதால் நிகழ்ந்தவையே என்றும், அவை கிறித்துவ சமயத்தில் உள்ளடங்கிய குறைபாடு அல்ல என்னும் கருத்துப் பரிமாறப்பட்டது.

4. சென்னையில் வாழ்ந்த தேவகலா என்பவர் கிறித்துவப் பாதிரியார்களுக்குப் பயிற்சிக்காக எழுதிய ஒரு நூலில் கேள்வி -பதில் வடிவில் அமைந்துள்ள ஒரு பகுதியைக் கீழே காணலாம்

கேள்வி : சமஸ்கிருதம் தோன்றிய காலம் எது ?

பதில் : சமஸ்கிருதம் இயேசுவின் காலத்திற்குப் பின்னர் கிபி. 150ஆம் ஆண்டு வாக்கில் தோன்றியது.

கேள்வி : சமஸ்கிருதம் எவ்வாறு தோன்றியது?

பதில் : தமிழ், பாலி, எப்ரு, கிரேக்கம், லத்தீன், பெர்சியன், அரமிக் மொழி ஆகிய ஏழு மொழிகளின் கலவையினால் உண்டானவை.

கேள்வி : சமஸ்கிருத மொழியைத் தோற்றுவித்தவர் யார்?

பதில் : புனிதர் தாமஸ் - இயேசுவின் சீடர் மூலம், இந்தியாவில் குடியேறிய கிறித்தவர்களால் தோற்றுவிக்கப் பட்டது. இந்தியாவில் தமிழ் பேசாத பகுதிகளில் சமஸ்கிருதம் கிறிஸ்துவர்களால் பரப்பப்பட்டது.

கேள்வி பதிலைப் பார்த்தால் ஒன்று மட்டும் எல்லோருக்கும் புரியும். தங்களது கிறித்துவ சமயத்தைப் பரப்பிட வரலாற்றை எவ்வளவு தொலை சென்றும் வளைத்திடத் தயார் எனச் செல்வி தேவகலா என்னும் கிறித்துவ நங்கை நிரூபித்துள்ளார். சமஸ்கிருத வரலாறு தமிழர் சமய வரலாறு ஆகியவற்றைப் பற்றிப் பொய் வரலாறு எழுதுவது இவர்களின் வாடிக்கையாகிவிட்டது.

5. தமிழ் ஈழம் எனும் பிரிவினை இயக்கத்தை ஆத்மார்த்த மாகத் தூண்டிவிட்டு இறுதியில் அதனை ஒரு பயங்கரவாதமாக மாற்றி, பிரபாகரன் அவர்களின் கொடிய மரணத்திற்கும் எண்ணற்ற ஈழ மக்கள் இன்னலுக்கும் காரணமாக விளங்கியது மதகுருமார்கள் மற்றும் அவர்களின் சிந்தனையாளர்கள், அந்நிய ஆதரவாளர்கள் ஆகியோரே! சர்வதேசத் தமிழ் ஈழ ஆராய்ச்சி மன்றம், சுவிட்சர்லாந்து நாட்டைத் தலைமையிட மாகக் கொண்ட தமிழ்க் கூட்டமைப்பு மற்றும் கலிபோர்னியா பல்கலைக்கழகம் நடத்திய ஒரு கருத்தரங்கில் தமிழ் ஈழப் பிரிவினைக்கு, தார்மீக - வரலாற்று பூர்வமான ஒரு தத்துவம் உருவாக்கப்பட்டது. இக்கருத்தரங்கில் ஈழத் தமிழர்களின் தனித்தன்மையும், பெருமையும் வெகுவாகப் புகழப்பட்டது. ஈழப் போர் காஷ்மீர் பிரிவினைப்போர் போன்றதே என்றும் நியாயப்படுத்தப்பட்டது(?).

8.6. வெறுப்பு ஆவணங்கள் தயாரித்தல்

இந்தியாவில் ஆங்காங்கே நடைபெறும் துயர நிகழ்ச்சிகள் பற்றிய பத்திரிக்கை, தொலைக்காட்சி செய்திகள் ஆகியவை

ஒன்றுசேர்க்கப்பட்டு ஆல்பம் வடிவில் இந்தியாவிற்கு எதிரான கசப்பு ஆவணமாகத் (hate literature) தயாரிக்கப்பட்டு அவை இந்தியாவுக்கு எதிரான அடிப்படை ஆவணமாகச் சர்வதேச மனித உரிமைக் கழகம் முன்பும், ஐக்கிய நாடுகள் சபையின் வெவ்வேறு கிளை நிறுவனங்கள் முன்பும் வைக்கப்படுகின்றன. இச்செயலைச் செய்திடுவோர் இந்திய மதகுருமார்களும் அவர்களின் தொண்டு நிறுவனங்களுமாகும். தாங்கள் வசிக்கும் இந்தியா, சர்வதேச அரங்கில் அவமானப்படுத்தப்பட்டாலும் பரவாயில்லை. அந்நாடு தூள் தூளாகச் சிதறுண்டு போனால் போதும் என்பதே அவர்களின் திட்டம். இந்தியாவில் மக்களின் அடிப்படை உரிமைகள் ஒடுக்கப்பட்டு இருப்பதாகவும் அதனைத் தடுத்திட ஈராக் நாட்டில் ஐ.நா. சபையை முன்நிறுத்தி மேற்கத்திய நாடுகள் தலையிட்டது போன்று இங்கும் அவ்வாறே செய்திட வேண்டும் என இவர்கள் சர்வதேச அரங்கில் கூறி வருகின்றனர். இதன் மூலம் ஈராக், எகிப்து, லிபியா, சிரியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் 'மேற்கத்திய கிறித்துவ ஏகாதிபத்தியம்' செய்துள்ள ஊடுருவலை நியாயப்படுத்திட மதகுருமார்களும் அவர்களின் தொண்டு நிறுவனங்களும் இரவு பகலாய்ப் பாடுபட்டு வருகின்றனர். இத்தகைய ஊடுருவல் தெற்காசியப் பகுதியில் - ஸ்ரீலங்காவில் முதன்முதலாகப் பரிட்சாத்தமாகத் தொடங்கப்பட்டது. ஆனால் அம்முயற்சி தோல்வியில் முடிந்தது. இந்தியாவைப் பொறுத்தளவில் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி அவர்கள் ஆட்சியின் போது குஜராத் 'மக்கள் அரங்கம்' (Civil Society) எனும் பெயரில் 'வெறுப்பு அறிக்கை' தயாரிக்கப்பட்டது. எனினும் இந்தியா மீது மேற்கத்திய நாடுகளால் போதுமான நெருக்கடி கொடுக்க முடியவில்லை. அவ்வாறு நெருக்கடி கொடுத்தால் எதிர் விளைவுகளை அவை தோற்றுவிக்கக் கூடும். தீவிர இந்து சார்பு ஆட்சியாளர்கள் டெல்லியில் ஆட்சிக்கு வரக்கூடும் எனவும் அஞ்சினர். அவ்வாறே நிகழ்ந்தும்விட்டது. இத்தகைய நிகழ்வு, உலக அரங்கத்தில் கிறித்துவ சமயத்திற்குப் பெரும் ஆபத்தாய் முடியும் எனவும் கருதுகின்றனர். எனவே இந்தியாவை அழிப்பது சாத்தியமில்லை எனவும். அதற்குப் பதிலாக அதனைத் சாதி வாரியாகவும், மொழிவாரியாகவும் உடைப்பதே சிறந்தது என முடிவுக்கு வந்துள்ளனர். அதன்

முன்னோடியாக இந்நாட்டின் இந்துத் தன்மை அழிக்கப்பட வேண்டும் என்பதே இவர்களின் திட்டம்.

இந்தியாவில் பெரும்பான்மையினராக விளங்கும் இந்துகளின் தனித்தன்மையை அழிக்க 'இந்தியாவின் சிறுபான்மையினர், சர்வதேச பெரும்பான்மையினருடன்' (இஸ்லாம், கிறித்துவம்) கைகோர்த்துள்ளனர். இம்முயற்சிக்கு மாவோ தீவிரவாதிகள் ஆதரவும் உண்டு. இந்தியாவைச் சின்னாபின்னம் ஆக்குவதற்குத் தலித் அமைப்புகளை பயன்படுத்துவதற்கும் சர்வதேச பிரிவினை வாத - சமய இயக்கங்கள் தயங்குவதில்லை. இந்தியாவில் சாதியுணர்வுகள் தலைவிரித்து ஆடுவதாகவும், இந்தியாவும் இந்து சமயமும் ஒன்றுபட்டு இருக்கும்வரை தலித் மக்கள் விடுதலை பெற முடியாது என்றும் ஒரு தத்துவம் சர்வதேச அரங்கில் பல தொண்டு நிறுவனங்கள் மூலம், முன்வைக்கப்படுகின்றது. தலித் மக்களை இந்தியாவில் காப்பாற்றும் உரிமை சர்வதேச சமுதாயத்திற்கு உண்டு எனவும் அதனை வற்புறுத்த இந்தியாமீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும் என்றும் உள்ளுணர்வு ஊட்டப்படுகிறது. இந்திய தலித் இயக்கங்கள் சில, சர்வதேச இந்திய எதிர்ப்பு வலையில் வீழ்ந்துள்ளன. இஸ்லாமிய ஆட்சியின் போது இந்திய மக்கள் மீதும் குறிப்பாகத் தலித் மக்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடுமைகள் அனைத்தையும் தற்போது பிராமணர்கள் மீது சுமையாக வைக்கும் தன்மை காணப்படுகிறது.[10] சமீபத்தில் ஒரு தலித் பத்திரிகையில், திருமணம் ஆகும் தலித் பெண்களை முதல் இரவில் அனுபவிக்கப் பிராமணர்கள் வற்புறுத்துகின்றனர் என்ற பெரும் குற்றச்சாட்டு கொஞ்சமும் வெட்கப்படாமல் கூறப்பட்டுள்ளது. தமிழக தலித் இயக்கங்கள் சிலவற்றிற்கு வேதகோவில் நிர்வாகிகள் தங்களது ஆதரவைக் காட்டவும் தயங்கியதில்லை. இதற்குக் கைம்மாறாக ஒரு தலித் அரசியல் கட்சி சமீபத்தில் தனது இரு நாள் அரசியல் மாநாட்டில் முதல்நாளைக் கிறிஸ்துமஸ் விழாவாகக் கொண்டாடியதும் நினைவு கூறத்தக்கது.

தமிழின் பெயரை உச்சரித்துக் கொண்டே தமிழர்களைச் சுயமரியாதை இழக்க வைக்கும் செயல்களும் வேதகோவில் நிர்வாகிகளால் செய்யப்பட்டு வருகின்றன. ஒரு மதம் மாறிய கிறித்தவர் தெய்வநாயகம் என்பவர் 'திருவள்ளுவர் ஒரு கிறிஸ்தவர்?' எனும் கேள்வியுடன் ஒரு புத்தகத்தை

வெளியிட்டார். இந்நூலுக்கு அணிந்துரை எழுதியவர் அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள். திருவள்ளுவர் சுய ஞானம் அற்றவர், அவருடைய வெண்பாக்களின் கருத்துகள், புனிதர் தாமஸ் மூலம் பைபிளிலிருந்து (பரிசுத்த வேதாகமத்திலிருந்து) எடுத்துக் கையாளப்பட்டுள்ளது என்பது போன்று இந்நூலில் கூறப்பட்டுள்ளது. இப்புத்தகத்திற்கு 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்னும் தத்துவத்தை வெளியிட்டுக் கொண்டே இருக்கும் கலைஞர் அவர்கள் அணிந்துரை எழுதியது நல்ல உள்ளம் கொண்ட உண்மையான தமிழ் ஆர்வலர்களுக்கு அதிர்ச்சியை அளித்தது. தங்களுக்குப் பலவகையிலும் ஆதரவு அளிப்பவர்களுக்கு தங்கள் ஆதரவைப் பல வகையிலும் அளிப்பதில் தமிழக அரசியல்வாதிகள் பலர் வல்லவரே! அதனால் திருவள்ளுவரும், தமிழ் இனமும் தன் சுயமரியாதையை இழந்தால் அவர்களுக்கென்ன கவலை?

8.7. பிராமணர்கள் யார்?

காலனியாதிக்க அன்னிய பாதிரியார்கள் தங்களுடன் துணைபோகாத இந்திய சமுதாயத்தை வந்தேரிகள் என அழைப்பது வழக்கம். அகில இந்திய அளவில் பிராமணர்களும், தமிழகத்தில் நாடார்களும் (சாணார்களும்) பாதிரியார்களின் விஷமத்தனமான நடவடிக்கைகளுக்கு அன்று துணைபோக மறுத்தனர். எனவே இவ்விரு சமுதாயங்களையும் வந்தேரிகள் என அவர்கள் உருவகப்படுத்தினர். பிராமணர்கள் கைபர், போலன் கணவாய் வழியாகவும், நாடார்கள் ஸ்ரீலங்காவிலிருந்து கடல் வழியாகவும் வந்து குடியேறியவர்கள் என்னும் கருத்துப் பரப்பப்பட்டு வருகின்றது. இச்சமுதாயத்தினர்கள் மீது வன்முறையையும், வெறியையும் தூண்டிவிடப், பிரான்ஸிஸ் சேவியர் முதற்கொண்டு பிஷப் கால்டுவெல் வரை அன்றே திட்டமிட்டனர். பிராமணர்கள் யார்?, நாடார்கள் யார்?, பாதிரியார்கள் கூறியுள்ளது போல் அம்மக்கள் அந்நியர்களா? திராவிடக் கட்சியினர் கூறுவதுபோல் கால்டுவெல் ஒரு தமிழ் அறிஞரா, அவர் எழுதியுள்ள 'திராவிட மொழி ஒப்பிலக்கணம்'

எனும் நூல் உண்மையின் அடிப்படையில் எழுதப் பட்டுள்ளதா? அல்லது பிரிட்டிஷ்காரர்களின் (தங்களின்) பிரித்தாளும் கொள்கைக்கு உரமூட்டுவதற்காகத் தயாரிக்கப் பட்டதா என்பதை ஆராய்வது அவசியம். மேலும் இந்நூல், தமிழர்களின் மரபினைப் பின்பற்றி எழுதப் பட்டுள்ளதா எனவும் ஆய்ந்து, திராவிட - இயக்கங்களுக்குச் சரியான பதில்கள் அளிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்தாலே பிராமணர்கள், நாடார்கள் ஆகியோரின் புழுக்கம் அடைந்த உள்ளம் சமாதானம் பெறும் என்பதே தற்கால முடிவு. பிராமணர்கள் யார், அவர்கள் அன்னியரா என்பது பற்றி இலக்கியம் கூறுவது யாது என்பதைப் பார்க்கலாம்.

தமிழ் மொழியில் நமக்குக் கிடைத்துள்ள நூல்களில் பழமையானது தொல்காப்பியம் என கொள்ளப்படுகிறது. கந்தசாமி எனும் வரலாற்று ஆசிரியர் தொல்காப்பியத்தின் காலம் கிமு. 1460 என குறிப்பிட்டுள்ளார்.[11] எனினும் காலனி ஆதிக்க மதவாதிகளால் இதன் காலம் கிபி 1300 வரை கீழ்நோக்கிக் கொண்டு செல்லப்படுகின்றது. ஆனால் தமிழ் அறிஞர்கள் பலர் இதன் காலம் கிமு. 500 என மேல்நோக்கிக் கொண்டு சென்றுள்ளனர்.[12] இதற்கு முன் வழக்கத்திலிருந்த இலக்கண நூல்கள் பல போர்ச்சுகீஸியர்களால் யாழ்ப்பாணம் (நல்லூர்) நூலகத்தை 1625ல் தீவைத்தபோது எரிந்து அழிந்தது. எனவே தமிழக அந்தணர்கள், நாடார்கள், தமிழ் மொழி வரலாறு ஆகியவற்றை நிலைநாட்டிடும் நூல்கள் தமிழகத்தில் இன்று இல்லாமல் சுத்தமாக அழிக்கப்பட்டுவிட்டன.

தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் அந்தணர்கள் (பார்ப்பனர்கள்) மற்ற தமிழ்க் குடிகளுடன் சேர்ந்தே வாழ்ந்துள்ளனர் (பார்க்கவும் தொல்காப்பிய சூத்திரம் 1021).[13] சூத்திரம் எண் 1139, மனிதனின் உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதவர்கள் என பன்னிருவர்களைக் குறிப்பிடு கின்றது. பன்னிருவர்களாகத் தாய், பார்ப்பான், பாங்கன், இளைஞர் (தோழன் (அ) தோழி), விருந்தினர் ஆகியோரைப் பேசுகின்றது. அரசனைப் போன்று அந்தணர்களுக்கு அறிவுநூல், கமண்டலம், முக்கோல் ஆகியனவும் சிறப்பாக இருக்கை பலகையும் உண்டெனக் கூறப்பட்டுள்ளது (சூத்திரம் 1570, 1572). ஆனால் பார்ப்பனர்கள் நெடுந்தகை, செம்மல் எனும் பட்டத்திற்கும், ஆளும் அரச பதவிக்கும் உரியவர்கள் அல்லர் எனவும் (சூத்திரம் 1573, 1574), இவர்களின் தொழில்

ஆறுவகைத் திறன் பட்டது, அதாவது ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பவையே அவ்அறுவகைத் திறன்கள் எனவும் கூறப்பட்டுள்ளன. மறைமொழிதானே மந்திரம்! (சூத்திரம் 1420). மறைமொழி கிளந்த மந்திரந்தான் (சூத்திரம் 1421) எனவும் பார்ப்பனர்கள் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சங்க காலம் தமிழ் இலக்கியத்தின் பொற்காலம். கி.மு. 500 முதல் கி.பி. 100 வரையிலான காலம் சங்ககாலம் எனக் கருதப்படுகின்றது. சங்க காலத்தில் பத்துபாட்டும், எட்டுத் தொகை நூல்களும் எழுந்தன. திருமுருகாற்றுப்படை, பொறுநர் ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநெல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய நூல்கள் பத்துப்பாட்டுகள். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியன எட்டுத்தொகை நூல்களாகும். இவற்றில் அந்தணர்கள் பற்றியும், நான்கு வேதங்களைப் பற்றியும், வேள்விகள் பற்றியும் வெகுவாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றைக் காணலாம்.

1. ‘நெய், பெய் தீயின் எதிர்கொண்டு’ - குறுந்தொகைப் பாடல் 106

2. ‘எழுதாக் கற்பு’ - எழுதாமல் கற்றுக் கொடுக்கப்பட்டது வேதம். - குறுந்தொகை 156

3. ‘பகைவர் புல்லார் பார்ப்பார் ஓதுக’ - ஐங்குறுநூறு வேட்கைபத்தில் 4வது பாடல்.

4. ஆறு புரிந்தொழுகும் அறம்புரி அந்தணர் - பதிற்றுப்பத்து மூன்றாம் பத்தில் 4வது பாடல்.

5. நாவல் அந்தணர் அருமறைப் பொருளே - பரிபாடல் கடவுள் வாழ்த்துப்பாடல்.

6. ஐயர் அவிர் அழல் எடுப்ப - கலித்தொகை நெய்தல் திணை 13ம் பாடல்.

7. நான்மறை முதுநூல் முக்கண் செல்வன் - அகநானூறு 181வது பாடல்.

8. புறநானூறில் பார்ப்பன வாகை எனும் ஒரு துறையே உள்ளது. எனினும் அந்தணர் பற்றிய செய்திகள் அதன் 1, 6,

9, 26, 34, 93, 122, 126, 200, 224, 361, 362, 367, 397ம் பாடலிலும், யாகங்கள் செய்யப்பட்ட செய்திகள் 15, 122, 166, 224, 400 ஆகிய பாடல்களிலும் கூறப்பட்டுள்ளன.

9. சிலப்பதிகாரம், கண்ணகியின் உற்றதோழி தேவந்தியும் அவளுடைய கணவன் சாத்தனும் பிராமணர்களே.[14]

10. பெரும்பாணாற்றுப்படையில் அந்தணர்கள் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதைச் 'செழுங்கன்று யாத்த சிறு நாட்பந்தர்' எனத் தொடங்கும் பாடல் விவரிக்கின்றது. 'அந்தணர்களின் வீட்டு வாசலில் சிறு பந்தல் அமைக்கப் பட்டிருக்கும். அதில் புஷ்டியான கன்று கட்டப்பட்டிருக்கும். வாசலுக்கு வெளியே தரை, சாணத்தால் மெழுகப்பட்டிருக்கும். வீடு, வழிபடும் தெய்வங்கள் உடையதாக அமைந்திருக்கும். அந்தணர் வீடுகளில் கோழி, நாய் ஆகியவை வளர்க்கப்படா. ஆனால் கிளிகள் இருக்கும். அவையும் வேதங்களைக் கற்றுக் கொள்ளும். ஐயர் பெண்கள் சாத்துவிக உணவைச் சமைப்பார்கள். யாகங்களில் 'ஆஹுதி' செய்வதற்கு மிகவும் ஏற்ற நெற்சோற்றையும் அவர்கள் தயாரிப்பார்கள். வீட்டில் விருந்தினராகச் சென்று சாத்துவிக உணவை அன்புடன் உண்ணலாம்.'

11. 'கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான் முக்கோல், அசைநிலை கடுப்பு' - முல்லைப்பாட்டு நப்பூதனார் பாடியது. (இதன் பொருள்: அந்தணர்கள் அவர்களது ஆடையை தாங்களே கல்லில் தோய்த்து கொள்வார்கள், காவிக்கல் நிறத்தில் அவர்கள் ஆடை விளங்கும். அவர்கள் தவக்கோலத்துடன் விளங்குவார் என்பதாம். படிவம் = தவக்கோலம்). இதுபோன்று 'சங்க இலக்கியங்களும், அந்தணர்களும்' என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதும் அளவிற்குச் செய்திகள் நிரம்பியுள்ளன. எனினும் இந்நூலுக்கு அத்துணை தரவுகள் தேவையில்லை என்பதால் இத்துடன் விடப்படுகின்றது.

எனவே அந்தணர்கள் (பார்ப்பனர்கள்) சில தலித் இயக்கங்களும், கம்யூனிஸ்ட் சிந்தனையாளர்களும், தேவனின் பணிவிடையாளர்களும் கூறுவது போல அந்நியர்களும் அல்லர் கொடியவர்களும் அல்லர். அதற்கு மாறாக அவர்கள் சமுதாயத்தில் ஓர் அங்கமாய் வாழ்ந்து, இந்து தர்மத்தையும் வாழ்க்கை முறைகளையும் உலகம் முழுவதும் கொண்டு சென்ற நல்லோர்கள் என ஈண்டு குறிப்பிடப்படு

கின்றது. சந்திரகுப்த அரசர் காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த மெகஸ்தனிஸ் எனும் அன்னியப் பயணி, சிந்து நதிதீரத்திலிருந்து பாடலிபுத்திரம் (பாட்னா) வழியாக கன்னியாகுமரி வரை பயணம் செய்து பிராமணர்களை பற்றியும், அவர்களின் பெருமை பற்றியும் விவரமாகக் குறிப்பிட்டுள்ளார். அத்தகையோர் மீது தற்போது எண்ணற்ற கொடுஞ்சொல் கூறுவோர், ஒப்புறவு வாழ்வுக்கு எதிரானவர்கள் என்பது நிறுவப்படுகிறது. இதுபோன்று குறைகளைக் கூறின் உலகில் எந்தச் சமுதாயமும் தப்பாது எனவும் ஈண்டு குறிப்பிடப்படுகின்றது.

8:8. தலித்துகள் யார் - தலித்துகளை இந்தியாவிலிருந்து பிரிக்க முயற்சித்தல்

மெகஸ்தனிஸ், இந்தியாவில் பிராமணர்களில் விலக்கப்பட்டோர் இருந்தனர் என்றும், அதுபோன்று அரசர்களிலும் (க்ஷத்திரியர்கள்) விலக்கப்பட்டவர்கள் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அறுதொழில் செய்வதில் தவறியவன் விலக்கப்பட்ட பிராமணர் எனவும், நாட்டையும் மக்களையும் காப்பாற்றத் தவறிய அரசன் (சத்திரிய தர்மத்தைப் பின்பற்றாதவன்) விலக்கப்பட்ட சத்திரியனாகவும் அழைக்கப்பட்டனர். அத்தகைய தவறு இழைத்தவர்களைத் திராவிடர்கள் என அழைக்கப்பட்டதாக மனுசாஸ்திரம் குறிப்பிடுகின்றது. மேலும் திராவிடர்கள் விலக்கப்பட்ட சத்திரியனான விர்ஸபனுடைய மகனான திராவிடன் என்பவன் வழிவந்தவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்ற பல குழப்பங்கள் திராவிட எனும் சொல்லுக்குப் பொருள் காண்பதில் காணக்கிடைக்கின்றன. மொத்தத்தில் விலக்கப்பட்டவர்களா, ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களா எனக் கருதாமல் தென்னிந்தியர்களைத் திராவிடர்கள் என அழைக்கும் முறைமை 2000 வருடத்திற்கு முன்பே வழக்கத்தில் இருந்துள்ளது. பாகவத புராணம் ‘சத்திய விரதனை’ திராவிட அரசன் எனக் குறிப்பிடுகிறது. ஆதி சங்கரர் தனது ‘சவுந்தரிய லகிரி’ எனும் தோத்திர நூலில் 75வது சுலோகத்தில் தம்மை ஓர் ‘திராவிடசிசு’ என அடையாளம் கண்டுள்ளார். பேரரசன்

சந்திரகுப்தன் அவையில் அமைச்சராக இருந்த சாணக்கியன், திராவிடன் எனக் குறிப்பிடப்படுகின்றான். (பார்க்கவும் பக்கம் 11-44 'சங்க இலக்கியங்களில் ஆரியர் - திராவிடம்' கே.வி. ராமகிருஷ்ண ராவ் - திராவிடச் சான்றோர் பேரவை, சென்னை, 2009).

திராவிடர்கள் (தலித்துகள் உட்பட) மத்திய ஆசியாவி லிருந்து கைபர், போலன் கணவாய் வழியாக, ஆரியர்களுக்கு முன்பாக இந்தியாவிற்கு வந்து குடியேறியவர்கள் எனப் பிஷப் கால்டுவெல் நம்புகிறார். மேற்கு ஆசியாவிலிருந்து (சுமேரியா, பாலஸ்தீனம்) வந்ததாகவும், திபெத் பகுதியில் தோன்றி இவர்கள் இந்தியாவிற்குள் உள் நுழைந்தனர் எனவும் பல்வேறு கருத்துகள் கூறப்படுகின்றன. தேவனின் பணிவிடையாளர்கள் மற்றும் அன்னிய வரலாற்று ஆசிரியர்கள் கருப்பு நிறம் கொண்ட திராவிடர்கள் சபிக்கப்பட்ட ஹேம் சந்ததியினரின் ஒரு பகுதியினர் எனக் கூறுவதை ஏற்னெவே பார்த்தோம்.

ஆரியர்கள் என்றதும் பிராமணர்களை மட்டும் குறிக்கும் சொல்லாகவும் (அவர்களுடன் இந்தியாவிற்குள் நுழைந்ததாகக் கூறப்படும் சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்களை நீக்கி விட்டு) திராவிடர்கள் என்பது - அவர்களுடன் தென்னிந்தியாவில் வாழ்ந்த சத்திரியர்கள், வணிகர்கள், வேளாளர்கள் ஆகியோரை நீக்கிவிட்டு, ஆதிதிராவிடர்களை மட்டும் குறிப்பிடும் சொல்லாகவும் உபயோகப்படுவதைத் தற்போது காணலாம்.[15] தென்இந்தியாவில் வாழும் ஆதிதிராவிடர்களையும், ஆரியர்களுடன் இந்தியாவிற்குள் நுழைந்த (?) சூத்திரர் எனும் பிரிவினரையும் ஒன்றுசேர்த்து தலித் என்னும் ஒரு புதிய ஜாதி தேவனின் பணிவிடையாளர்களாலும் அவர்தம் ஆதரவாளர்களாலும் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. (தலித் எனும் சொல் தலம் என்னும் சமஸ்கிருத சொல்லிலிருந்து எடுக்கப்பட்டதாக தெரிகின்றது). இதன் மூலம் ஆரிய - திராவிட இனவாதக் கொள்கை, அடிமட்டத்தில் தலித் என ஆரிய - திராவிட சூத்திரர்களை இணைத்தும், உலகளாவிய நிலையில் நீக்ரோ எனும் கருப்பர் சமுதாயத்தோடு மேல் மட்டத்தின் ஓர் இணைப்பு ஏற்படுத்தியும், சூத்ராய்டு (Sudhroid) எனும் சூப்பர் இனம் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கொள்கை மேலும் பரிசுத்த வேதாகம - வாணாசிரம இனவாத கொள்கையோடு

இணைக்கப்பட்டு உள்ளூர் பிரச்சினை, உள்நாட்டு பிரச்சினையாகி, உலகளாவிய சமயம் சார்ந்த பிரச்சனையாக மலர்ந்து விட்டது.

பரிசுத்த வேதாகமத்தின்படி ஜாதி - இனத் தோற்றம் எவ்வாறு ஏற்பட்டது என்பதை ஆதி: 6:2ல் கண்டோம். அதன் சுருக்கம் கீழே!

சாதி - இனத்தோற்றம் பரிசுத்த வேதாகமத்தின்படி:


ஆதியாகமம்
ஆதம் ஏவாள் கதை
10வது சந்ததி நோவா
(பெரும் வெள்ளம் ஏற்பட்ட காலம்)
நோவாவின் மகன் ஐப்பித் வெள்ளையர்கள் (மிக உயர்ந்த இனம்)
மற்றொரு மகன் ஹேம் (கருப்பர்கள்)
கடைசி மகன் செம் (சுமேரியர்கள், இரானியர்கள், மஞ்சள் நிறத்தவர்)
குஷ் கருப்பர்கள் -நீக்ரோக்கள்
மிஸ்ரைன் எகிப்திய அரேபியர்கள்
புட்
லிபியா நாட்டின் மக்கள்
கானானியர் (சபிக்கப்பட்ட மக்கள்) லெபனான், சீரியா, ஜோர்டான், இஸ்ரேலியர் (ஓர் பகுதி) மக்கள்

மேற்கண்ட பரிசுத்த வேதாகம இனப் பிரிவின்படி 2000 வருடத்தின் முன்பு வாழ்ந்த யூத - கிறிஸ்துவ குருமார்களுக்கு இந்தியாவிலுள்ள ஆரிய - திராவிட இனபேதம் பற்றி யாதும் தெரியாததால் கர்த்தரால் வழங்கப்பட்ட நிறத்தின் அடிப்படையிலான இனவாத பிரிப்பின்போது இச்சமுதாயங்கள் பற்றி எதுவும் குறிப்பில்லாமல் போய்விட்டது. எனினும் நிலைமையைச் சரிகட்ட 19-20ம் ஆண்டில் வாழ்ந்த

மதகுருமார்கள் கைபர் - போலான் கணவாய் வழிவந்த ஆரியர்கள் கானானிய மக்களின் ஒரு பிரிவினராகிய காணாமல் போன ஆடுகளின் ஒரு கூட்டத்தைச் சார்ந்தவர் என இந்திய சாதியினரைப் பைபிளுடன் இணைந்தனர். (ஆனால் ஹிட்லர் ஆரியர்களை சுத்தமான ஜப்பித் இனத்தினர் எனவும், தானும் அவ் ஆரிய இனத்தைச் சார்ந்தவர் எனினும் நம்பினார்.) ஒன்றுபட்ட திராவிடர்களுக்கு ஒரு தனிப்பெயரோ, வாழ்விடமோ குறிப்பிடாமல் ஐரோப்பிய குருமார்கள் நம் நாட்டை விட்டுச் சென்று விட்டனர். இந்த வெற்றிடத்தை நிரப்பும் முயற்சியில் தற்காலக் கிறித்துவ சபையும் - தலித் - சூத்திர - நீக்ராய்டு இயக்கங்களும் மும்முரமாய் உள்ளனர். இவ்வியக்கங்களில் தலித் இயக்கங்களும் "Dalit Freedom Network, DFN மற்றும் 'தலித் வாய்ஸ்' எனும் மக்கள் இயக்கத்திலும், தலித் என்பவர் யார்? என்பது பற்றிக் கூறுவதைக் காணலாம்.

'உலகில் உள்ள ஏழைகளிலும் ஏழையினர், மனிதத் தன்மை மறுக்கப்பட்டு, வாழும் உரிமையும் சம உரிமையும் மறுக்கப்பட்டு வாழ்க்கையெனும் ஏணியில் அடிப்பாகத்தில் இருப்பவர்கள். இவர்கள் தீண்டப்படாதோர் என விலக்கி வைக்கப்பட்டவர்கள். தலித்துகள் உலகில் அடிமையாயும் அடிமைப் பொருளாகவும் நடத்தப்பட்ட உலகின் மிகப் பெரிய இனம்'.

இவ்விலக்கணத்தைக் கண்ணுற்றால் ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிக்கா நிலப் பகுதியில் கிறித்துவர்கள் அங்குள்ள பூர்வீக குடிகளை வர்ணனை செய்த தோற்றம் படிந்திருப்பதைக் காணலாம். உலகிலேயே ஏழ்மையான மக்கள் வாழும் நாடுகளாகக் குறிப்பிடப்படுவது காங்கோ, லைபீரியா, ஜிம்பாப்வே, புருண்டி, எரிட்டீரியா, நைஜர், சிரியாலோன், மாலாவி, டோகோ, சோமாலியா போன்ற நாடுகள். ஆனால் தலித் வாய்ஸ் இந்தியாவிலுள்ள தலித் மக்களை ஏழைகளிலும் ஏழைகள் எனக் குறிப்பிடுவது உண்மைக்குப் புறம்பானதாகும். தீண்டப்படாதவர்கள் என அமெரிக்காவில் உள்ள கருப்பர்களையும், ஆஸ்திரேலியாவிலுள்ள பழங்குடி இனத்தவரையும் பல நூறு ஆண்டுகளாக நடத்தியவர்கள் கிறித்துவர்கள். வடக்கு அயர்லாந்தில் 19ம் நூற்றாண்டில் கத்தோலிக்கர்களைத் தீண்டாதவர்களாக நடத்தியது

புரொட்டஸ்டன்ட் சமயத்தினர்.[16] இவ்விலக்கணத்தில் முன்பகுதியில் உள்ளதை நாம் ஓரளவு ஏற்றுக் கொண்டாலும், பின்பகுதியில் குறிப்பிட்டுள்ளவாறு அடிமைப்பொருளாக இந்தியாவில் எந்தச் சமுதாயமும் மற்றொரு சமுதாயத்தை நடத்தவில்லை என இங்குக் குறிப்பிடப்படுகின்றது.

இந்தியாவில் எந்தச் சமுதாயமும் மற்றச் சமுதாயத்தின் வாழ்க்கையில் தலையிடுவதில்லை. உதாரணமாக இந்தியாவில் காணப்படும் மலைவாழ் மக்களின் வாழ்க்கையில் வேறு எந்த இந்திய சமுதாயமும் தலையிட்டதில்லை. மற்ற நாடுகளில் இவ்வாறு மலைவாழ் பூர்வகுடி மக்களை விட்டு வைத்திருப் பார்களா என்பது ஆய்வுக்குரியது. அந்தமான் தீவுகளில் இன்றும் கலப்படமற்ற பூர்வகுடிமக்கள் இருப்பதை அறிந்து மகிழலாம். அது போன்றே தலித்துகள் வாழ்க்கையிலும் மற்றச் சமுதாயங்கள் தலையிடவில்லை. ஒவ்வொரு சமுதாயமும் தங்களது முயற்சியால் மட்டுமே முன்னேற்றமடைய வேண்டும் என்பதே இந்திய குடியுரிமையில் எழுதப்படாத சட்டமாயிருந்தது. இதனைச் சற்று விவரமாக ஆய்விடலாம்.

தென் தமிழகத்தில் தமிழர்கள் தாம் வாழ்ந்த தமிழகத்தை ஐந்து நிலங்களாகப் பிரித்து அங்கு வாழ்ந்த மக்களையும் ஐந்து வகையாகப் பெயரிட்டு வாழ்ந்து வந்தனர். அதில் மருத நிலத்தவர் மள்ளர் என அழைக்கப்பட்டனர்.[17] அரசும், படைகளும், நெல் நாகரிகமும், பண்பாடும், மொழியும், சமயங்களும், மள்ளர்களால் வளர்க்கப்பட்டன. ஒன்றாய், ஒரு நாடாய் வாழ்ந்த மள்ளர் குலம் பற்றிப் பண்டைய தமிழ் இலக்கியங்களில் பல குறிப்புகள் காணப்படுகின்றன. பெருமைமிக்க இப்பெரும் சாதிபிரிவினர் சூத்திரர்களாகத் தற்போது சில ஜாதியவாதிகளால் குறிப்பிடப்படுகின்றனர்.

புறநானூற்றுப் பாடல்கள் 77-81, 219, 399 ஆகியவற்றில் மள்ளர்கள், மூவேந்தர்களாகவும், சிற்றரசர்களாகவும் காணப்படுகின்றனர். அகநானூறு பாடல்கள் 21, 144, 185, 189 ஆகியவற்றில் மள்ளர்கள் போர் மறவராகக் காட்சியளிக்கின்றனர். பெரும்பாணாற்றுப்படை பாடல் 454-456ல் மள்ளர் மன்னன் இளந்திரையன் குறிப்பிடப்படுகின்றான். இவைபோன்ற பல உன்னதக் குறிப்புகள் இதர சங்க இலக்கியங்களிலும், கம்பராமாயணத்திலும், சங்கரநாராயணர் கோவில் புராணம், பெரிய புராணம், திருவிளையாடல்

புராணம் ஆகியவற்றிலும் காணப்படுகின்றன. எனினும் கிபி 1200க்குப் பின்பு தோன்றிய இலக்கியங்களில் மள்ளர் எனும் பெயர் குடும்பர், பள்ளர் எனும் பெயராக மாறுதலடைந்து விட்டது.[18] கிபி 1800ல் தோன்றிய பேரூர் புராணத்தில் சிவன், பார்வதி, முருகன், இந்திரன், இந்திராணி மற்றும் தேவகணங்கள் பள்ளராக உழவுத் தொழில் செய்தனர் என்று கூறப் பட்டுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவில் பலம் பெற்ற பின்னர் வந்த இலக்கியங்களில் பெருமைமிக்க மள்ளர்கள், பள்ளர்கள், தீண்டத்தகாத சாதியினர் எனச் சித்திரிக்கப்பட்டு, அவ்வாறே நடத்தபட்டும் வந்துள்ளனர்.

தமிழகத்தில் இன்று காணப்படும் பல சாதிகளின் பெயர், சங்க இலக்கியங்களில் இல்லை. எனவே இச்சாதியினர் மள்ளர் சாதியின் கிளை சாதிகள் எனச் சொல்ல இடமுண்டு.[19]

தென்தமிழகத்தில் சிறப்பாகத் திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்டங்களில் 300 ஆண்டுகளுக்கு முன்பு வரை நன்செய் புன்செய் நிலங்களும், பனைகளும் இதர வாழ்வாதாரங்களும் பெரும்பான்மையாகத் தலித் மக்களின் கைவசமாகவே இருந்தன. அதுபோன்றே கிராமக் கோவில்களும் தலித் மக்களின் நிர்வாகத்திலே இருந்தன.[20] இது சம்பந்தப்பட்ட வரலாறுகள் தற்போது கூடக் கர்ணபரம்பரைக் கதையாக இம்மாவட்டங்களின் பல்வேறு சமுதாய மக்களிடம் பேசப்படுவதைக் காணலாம். மற்றச் சாதியினரெல்லாம் சமண சமயத்தில் இணைந்தபோது தலித் சமுதாயம் மட்டும் மதமாற்றத்தை எதிர்த்துத் தனிமையாய் நின்றது.[21] இன்று கூட உமரிக்காடு, சிறுத்தொண்ட நல்லூர், ஏரல் ஆகிய ஊர்களிலுள்ள கிராமக் கோவில்கள் தலித்துகள் நிர்வாகத்தில் முன்பு இருந்துள்ளன. ஆனால் இன்று அவ்வாறு இல்லை. தலித்துகளின் வீழ்ச்சி ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு வந்த பின்னரே ஏற்பட்டது எனலாம். ஐரோப்பியர்களுக்கு அவர்களின் எல்லாக் காலனிய நாடுகளிலும் அடிமை வேலை செய்வதற்கு ஏதாவது ஒரு சமுதாயத்தைத் தயாரிப்பது வழக்கம். அதுபோன்று தமிழகத்தில் அடிமை வேலை செய்வதற்கு நாடார் சமுதாயம் மறுத்ததால் அச்சமுதாயத்தினை அவமானப்படுத்துவதற்குத் திருநெல்வேலி சாணார்கள் எனும் ஒரு புத்தகத்தை எழுதிப் பிஷப் கால்டுவெல் வெளியிட்டார். அக்காலத்தில், தலித் மக்களிடம் ஒற்றுமையுணர்ச்சி

போதுமானதாக இன்மையால் ஐரோப்பியர்களுக்குச் சேவை செய்ய நேர்ந்தது. அதிலிருந்து தலித் மக்களின் பெருமையும், சமுதாயச் செல்வாக்கும் சரிவடைய நேர்ந்தன. ஒவ்வொரு ஐரோப்பியரும் தனக்கு ஏடுபடி வேலைகள் செய்ய இந்தியாவில் 100க்கு மேற்பட்ட வேலையாட்களை உபயோகப்படுத்தினர்.

ஜாதிக் குறிப்புகள் தொல்காப்பியம் காலம் தொட்டே இருந்தபோதிலும் அதனை முன்னிட்டுத் தமிழ்நாட்டிலோ, இந்தியாவிலோ கலவரங்களோ, கொலைகளோ, கற்பழிப்புகளோ நடைபெற்றதாக வரலாறுகள் யாதும் இல்லை. எனினும் கடந்த 1000 வருடத்திற்கும் மேலாக இந்தியாவில் நடைபெற்ற இஸ்லாமிய - கிறித்துவ ஆட்சிகள், வழக்கதிலிருந்த சிறிய சமுதாய வேறுபாடுகளை அகற்றுவதற்கு முயற்சி செய்யாமல் தூபம் இட்டு வளர்த்து வந்தனர். ஆனால், இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் ஆங்காங்கே காணப்படும் சாதிச் சச்சரவிற்குத் தமிழ்நாட்டை - ஏன் இந்தியாவையே ஆண்டு வந்திராத இந்து சமயமும் - பிராமண சமுதாயமும் பொறுப்பு எனத் தந்திரமாக காலனியாதிக்க கிறித்துவ வரலாற்றாசிரியர்களால் பழிபோடப்பட்டது. ஏசு நாதரைச் கொன்றது, ரோமானிய உயர் ஜாதியினர் (நோவாவின் மகன் ஜப்பித் பரம்பரையினர்) எனினும் ஹேம் பரம்பரையினரான கானானியர் என்ற யூதர்கள் மீது தந்திரமாக பழி போடப்பட்டு விட்டது. ஐரோப்பியர்கள், ராஜதந்திர யுக்தியுடன், யூதர்கள் மீது சுமத்தப்பட்ட பழியின்போது பின்பற்றப்பட்ட வழிமுறைகள், இந்தியாவிலும் பிராமணர்கள் மீது வெற்றிகரமாக உபயோகப்படுத்தப்பட்டன.[22]

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் தலித்துகள் (பள்ளர், பறையர்) மற்றும் சாணார்கள் (நாடார்கள்) சமுதாயத்தின் ஒன்று போலவே ஒரே தாழ்ந்த தட்டில் இருந்தனர். எனினும் நாடார் சமுதாய மக்கள் விவசாயத்தை முற்றிலும் நம்பியிராமல் சேவைத் தொழிலும் (வியாபாரம்) ஈடுபட்டதால் அவர்கள் சமுதாய மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஆச்சரியப்படும்படி அமைந்துள்ளது. ஆனால் தமிழக தலித்துகள் கம்யூனிச அரசியல்வாதிகளின் செல்வாக்கின் கீழ் வந்தனர். கம்யூனிஸ்டுகள் 'நிலவுடைமையே' தலித்துகளின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக விளங்க முடியும் எனும் தத்துவத்தைப் பிரசங்கித்து மற்ற உயர்

வகுப்பினர், மற்றும் வழிபாட்டுத் தலங்களின் நிலங்களைக் கைப்பற்றவே உற்சாகப்படுத்தினர். தலித்துகளும் இன்றுவரை நிலவுடைமைத் தத்துவத்திலேயே மூழ்கி உள்ளனர். சேவைத் தொழில்களில் (வணிகத்தில்) ஊழியர் பற்றாக்குறை தமிழகத்தில் நிலவி வருகின்றது. வணிக நிறுவனங்களில் பணியாற்றச் சிப்பந்திகள் பெருமளவில் தேவைப்படுகின்றனர். எனினும் வணிகத்திலுள்ள சமுதாயத்தினர் தலித்துகளைப் பெரும்பாலும் இப்பணிக்கு அமர்த்துவதில்லை. ஏன் என்றும் இதனை அறிய முடியவில்லை. தொழில்கள் ஒருபக்கம் பணியாளர்கள் பற்றாக்குறையினாலும் அதே நேரத்தில் தலித்துகள் மத்தியில் வேலைவாய்ப்பு இன்மையினாலும் இந்திய பொருளாதாரம் பாதிக்கப்பட்டு வருகின்றது. இதனில் பெரும் பொருளாதாரச் சரிவு தலித்து மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அம்மக்களுக்கு வணிகம் செய்வதிலும், சிறுதொழில் செய்வதிலும் அனுபவம் கிடைக்காமல் உள்ளது. எனவே அச்சமுதாய மக்கள் தற்காலத்தில் தங்களின் முன்னேற்றத்திற்கு ஆட்சியாளர்களையும், ஒரு சில அரசியல் தலைவர்களையும், சில தொண்டு நிறுவனங்களையும் மட்டுமே சார்ந்திருக்க வேண்டிய கட்டாயத்திற்குள் உட்படுத்தப்பட்டு விட்டனர். இதன் விளைவாக ஏற்பட்டுள்ள தனிமை என்னும் விரக்தி அச்சமுதாயத்தின் ஒரு சில தலைவர்களின் பேச்சிலும் செயலிலும் வெளிப்படுவதைக் காணலாம். இந்தியாவில் தலித் மக்களுக்கென வெளிவிடப்படும் பத்திரிகையில் முதன்மையானது ‘தலித் வாய்ஸ்’. இதன் ஆசிரியர் V.T. ராஜசேகர். இவர் இதற்கு முன்பு - ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ பத்திரிகையின் செய்தியாளராகப் பணிபுரிந்து அனுபவம் பெற்றவர். தலித்து மக்களைச் சமூக - பொருளாதார நிலையில் மேம்படுத்திட இவர் முன்வைக்கும் தத்துவங்களையும், பரிந்துரைகளையும் கீழே காணலாம்.

‘இந்தியாவின் ஆட்சியாளராகப் பிராமணர்களே இருந்தனர். (இஸ்லாமிய - கிறித்துவர்கள் தான் முந்தைய ஆட்சியாளர்கள் என்ற உண்மை மறைக்கப்படுகிறது). பிராமணர்கள் மேற்கு ஆசியாவின் துன்பத்திற்குக் காரணமாய் விளங்கும் யூதர்கள் போன்றவர்கள். பிராமணர்களும், யூதர்களும் தங்களின் எதிரியாக இஸ்லாமியர்களைக்

காண்கின்றனர். இஸ்ரேல் நாடு தன்னைச் சுற்றிப் பெரும்பான்மையாக விளங்கும் இஸ்லாமியர்களையும், அதன் முன்னணி நாடான ஈரான் நாட்டையும் தனக்கு எதிராகக் கருதுகின்றது. அதுபோன்று பிராமணர்களும் இந்தியாவின் மற்றச் சமுதாயத்தினரை எதிரியாகவே கருதுகின்றனர். யூதர்களும், பிராமணர்களும், மிகவும் விரும்புவது யுத்த களத்தையே, யுத்தகளமே அவர்களின் உணவு. அதனை விட்டால் அவர்களுக்கு வாழ்வில்லை. சர்வதேச யூதர்களும், இந்திய யூதர்களான பிராமணர்களும் அமெரிக்க அதிபர் ஒபாமாவைத் தங்களது செல்வாக்கின் கீழ் கொண்டு வந்து விட்டதை எண்ணி மகிழ்கின்றனர். ஆனால் காலம் இனி பொறுக்காது. சர்வதேச அளவில் யூதர்களுக்கு எதிராகவும், பிராமணர்களுக்கு எதிராகவும் பெரும்போர் நிகழ இருக்கின்றது. வரப்போகும் இவ்யுத்தத்தில் கூட்டணியினராக சைனா - பாகிஸ்தான், இதர இஸ்லாமிய புரட்சிப் படைகள், ஈரான், பாலஸ்தீனம் மற்றும் இந்திய பூர்வீக குடிகளான தலித்துகள் ஆகியோர் ஓரணியில் நிற்பர். இப்பேரணிக்கு முன்பு யூத - பிராமண சிறுபான்மையினர் நிற்க முடியாமல் சிறுமைப் படுவர்.'

இதுவே திரு. V.T. ராஜசேகர் காணும் நிழற்படம். இந்தியாவின் இரண்டு சதவீத பிராமணர்களைச் சிறுமைப் படுத்தி இந்தியா எனும் பாத்திரத்தை உடைத்திடவும் சைனா - பாகிஸ்தான் - ஈரான் அச்சு நாடுகளுடன் கூட்டணி அமைத்திடவும் அவர் மனதளவில் தயாராகிவிட்டார். ஆனால் Genome Research Journal (May 8, 2001 பத்திரிகையின்படி) இந்திய பிராமணர்களும், தலித்துக்களும் மரபணு வாரியாக ஒரே இனத்தையும் குணங்களையும் உடையவர்கள் என நிரூபித்துள்ளது. எனவே சகோதரனை அழிக்க எதிரிகளை அழைக்கும் கலாச்சாரத்தைப் பின்பற்றிட ராஜசேகர் அவர்கள் தாயராக இருப்பது தெரிய வருகின்றது. ஆனால் இந்தியாவின் மற்றைய மக்கள் இவருக்கு கைகொடுப்பார்களா என்பது சந்தேகமே. எனினும் ராஜசேகர் போன்றோருக்கு நம்பிக்கையும் தளரவில்லை. காரணம், இந்தியாவில் பிரச்சினைகளுக்குப் பஞ்சமில்லை. ஒவ்வொரு நாளும் இத்தகையோருக்கு ஊடகங்கள் வாயிலாகப் புதிய தீனி கிடைத்துக் கொண்டே வருகின்றது.

8:9. பிராமணர்களை இந்தியாவிலிருந்து பிரிக்க முயற்சித்தல்

கிபி. 1600க்கு பின் இந்தியாவுடன் வணிகத் தொடர்பு மூலமும், பின்னர் காலனி ஆதிக்க ஆட்சி மூலமும் ஐரோப்பியர்களுக்கு உலகிலே சிறந்த இந்திய நாகரிகத்துடன் தொடர்பு ஏற்பட்டது. இந்தியர்களின் உடல் சுத்தம், அவர்களின் கலாச்சாரம், வழிபாட்டு முறை, வேதங்கள், தர்ம சாத்திரங்கள், மொழிகள் (சமஸ்கிருதம், தமிழ்) ஆகியவை இங்கு வந்த ஐரோப்பியர்களுக்குப் பெரும் அதிர்ச்சியாய் இருந்தன. இதற்கு முன்பு வரை கிறித்துவ வழிபாட்டு முறையும் அதன் நூல்களும் மட்டுமே உலகில் சிறந்தது என எண்ணி வந்த ஐரோப்பியர்களுக்கு இந்தியாவின் சமஸ்கிருதமும், வேதங்களும், பகவத் கீதையும், மக்களின் ஒழுக்கமும், செல்வமும் பெரும் அதிர்ச்சியை அளித்தன. எனவே தங்களது வழிபாட்டு முறைக்கும், நாகரிகத்திற்கும், வேத நூல்களுக்கும் பல ஆயிரம் ஆண்டாகச் சார்ந்திருந்த யூத வேதங்களையும், வழிபாட்டு முறைகளையும் சற்றே தள்ளிவைத்துத் தங்களின் வேர்களை இந்தியாவிலிருந்து ஆராய்ந்து (?) கண்டுபிடிக்கச் சிலர் முயன்றனர். யூதர்களின் மூலம் தாங்கள் பெற்ற ஒரே இறைவன், ஒரே புத்தகம், ஒரே மதம் எனும் குறுகிய மொட்டைப் பாதையில் பல நூற்றாண்டாகச் சிக்கி, புழுங்கி, மூச்சு திணறிய ஐரோப்பியர்களுக்கு இந்து சமயமும், அதன் பல்வேறு வேதங்களும், வியாக்கியானங்களும், பல்வேறு வகையான கடவுள் வழிபாடும் இயற்கைக்கு ஏற்புடையதாக இருப்பதை உணர்ந்தனர்.

எனினும் பரிசுத்த ஆவியால் வழங்கப்பட்ட பைபிளையும், யூத - கிரேக்க - ஐரோப்பிய நாகரிகமும் உலகிலே சிறந்தது என்ற கொள்கையையும் அவர்களால் எளிதில் கைவிடமுடியவில்லை. இதனைச் சமாளிக்க இருமுனை தந்திரங்களை மேற்கொள்ள முயன்றனர்.

1. யூத, கிறித்துவ வேதம், மொழி மற்றும் வழிபாட்டு முறையுடன் ஆரியர்களையும் - பிராமணர்களையும், சமஸ்கிருதத்தையும் இணைக்க முயன்றனர்.

2. சமஸ்கிருத நூல்களான வேதங்களையும் பகவத் கீதையையும், மனு சாத்திரத்தையும், ஆங்காங்கே திரிபுவாத கருத்துக்களுடன் பெரும் பொருட்செலவில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கத் தலைப்பட்டனர். வேதங்களில் உள்ள தத்துவங்களும், நெறிகளும் அவர்களைச் சிந்திக்க வைத்தன. இவை தொடர்பாக சமயம் சாராத சில ஐரோப்பிய சமய - மொழி அறிஞர்களின் கூற்றினைக் காணலாம்.

1. Johann Gott-Fried Herder (*1744 - 1803*) ஹெர்டர் எனும் இவர் ஒரு ஜெர்மனிய எழுத்தாளர். உலக மக்கள் சிந்தனைக்குச் சமஸ்கிருதம் பெரும் பங்காற்றியிருப்பதாகவும், அம்மொழி இந்திய - ஐரோப்பிய மொழிக் குடும்ப மூலத்தை அளித்துள்ளது எனவும் கருத்து தெரிவித்தார். இந்தியாவிலிருந்த காலனி ஆதிக்க சிந்தனையாளர்கள் பலர் சமஸ்கிருதத்தை ஆடு மேய்ப்பவர்களின் மொழி என இழித்துரைத்தது இதன் மூலம் மறுக்கப்பட்டது.

2. Karl William Friedrich Schlegel (*1772 - 1829*)

சீகல் எனும் ஜெர்மனிய அறிஞர் சமஸ்கிருதத்தை ஆர்வமுடன் கற்றார். இவர் இந்திய நாகரிகத்தை ஜெர்மானிய நாகரித்துடன் இணைக்க முயன்றார். இந்நாகரிகம் கிரேக்க - ஆங்கில நாகரிகங்களை விடச் சிறந்தது எனவும், மிகவும் தொன்மையானது எனவும் நிரூபிக்க தனது சமஸ்கிருத அறிவினால் முயன்றார். மதங்களில் சிறந்தது எனக் கிறித்துவத்தை முன்நிறுத்தினாலும், உலகளாவிய கலாச்சாரத்தில் சிறந்தது இந்திய - ஜெர்மானிய கலாச்சாரமே என அவர் நிரூபித்தார். அவருடைய சித்தாந்தத்தைக் கீழே காணலாம்.

சமஸ்கிருதமே இந்திய - ஐரோப்பிய மொழி
குடும்பத்தின் தாய்

↓

உலகின் அனைத்து உன்னதமான நாகரிகங்கட்கும் பிறப்பிடம்
இந்தியாவே - பிராமணர்களே

↓	↓
இந்திய ஆரியர்கள் (பிராமணர்கள்) ஜெர்மானிய நாட்டில் குடியேறினர்	**இந்திய பிராமணர்களும் வீரர்களும் இந்தியாவிலிருந்து மத்திய தரைக்கடல் நாடுகளில் (சுமேரிய, ரோம்) குடியேறினர்.**
↓	↓

மூலாதார சமஸ்கிருத நாகரிகத்தின் சுத்தமான வடிவமே ஜெர்மனியர்கள்.	சுமேரிய-கிரேக்க ரோமானிய நாகரிகம் ஆரிய நாகரிகத்தின் கலப்படம்
↓	↓
சமஸ்கிருதத்தையும் இந்திய கலாச்சாரத்தையும் கற்றல் மிகவும் அவசியம்.	ஜெர்மானிய நாகரிகத்தை விடச் சுமேரிய கிரேக்க ரோமானிய நாகரிகங்கள் தரத்தில் குறைவானவையே.

3. Ernest Renan: (ரெனான்) - 1823-1892

இயேசு காலத்தில் வழக்கிலிருந்த மற்றொரு மொழியான எப்ருவை படித்தேறிய நிபுணர். ஒரே இறைவன் எனும் கொள்கை மனித சிந்தனையை மூடிப் புழுங்க வைக்கும் தத்துவம் எனவும், இந்தியர்களின் பல தெய்வக் கொள்கை இயற்கை போன்று பல வடிவமாய்க் காட்சியளித்துச் சிந்தனையை தூண்டவல்லது எனவும் கூறினார். ஐரோப்பாவில் குடியேறிய ஆரியர்கள், தங்கள் பல தெய்வ வழிபாட்டை யூத சமயத்துடன் இணைத்து ஒரே இறைவன் கொள்கையை உருவாக்கினார்கள் எனவும் கூறினார். இதன் விளைவாகக் கிறித்துவத்தை, யூத சமயத்திலிருந்து (பழைய ஏற்பாட்டிலிருந்து) பிரித்திட ஆரிய பிராமணர்கள் உதவினார்கள் எனவும் அபிப்பிராயம் கொண்டார். இயேசுவை ஆரியராகச் சித்தரிக்க இவரது கோட்பாடுகள் பெரிதும் உதவின. கிறித்துவம் ஆரிய மதத்தின் ஓர் உன்னதமான படைப்பு என்றும் இவர் முழங்கினார்.

4. Adolphe Picket (1799-1875) பிக்கட்

இவர் சுவிட்சர்லாந்து நாட்டின் ஒரு மொழி அறிஞர். ஐரோப்பியர்கள் பிராமணர்களே (ஆரியர்களே) என இவரும் நம்பினார். இவர்கள் இருவரும் (ஐரோப்பியர்களும், ஆரியர்களும்) ஒரே இறைவனை வணங்குவோர்களே எனவும் கருதினார். எனினும் இந்திய பிராமணர்கள் பல தெய்வ வழிபாடு எனும் குழியில் விழுந்துவிட்டனர் என்றும் கூறினார். எனவே பிராமணர்களையுப் அவர்கள் மூலம் இந்தியர்களையும் பல தெய்வ வழிபாடு எனும் குழியிலிருந்து வெளிக்கொணர இந்தியாவிற்குப் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கம் மிகவும் தேவை எனவும் கூறினர். ஐரோப்பிய ஆரியர்கள் யூதர்களின் ஒரே இறைக் கொள்கையைப் பின்பற்றியுள்ளதால்

அவ்வினமே வருங்காலத்தில் உலகை ஆள வல்லது எனவும் இவர் நம்பினார்.

5. Joseph Golineau (1816-1882) கோலினார்

இவர் ஓர் பிரான்ஸ் நாட்டு அறிஞர். உலகில் உயிரினங்களின் தோற்றம் பற்றிச் சார்லஸ் டார்வின் அவர்கள் எழுதியுள்ள Survival of the fittest 'திறமையான உயிரினங்களே இனி உயிர் வாழ முடியும், மனித இனங்களில் நாகரிகம் அடைந்த சமுதாயம் உலகிலுள்ள இதர கீழ்நிலை சமுதாயத்தை அழித்து விடும்', என்பதாக ஓர் உயர் இனவாத கொள்கையை உருவாக்கினார். ஆரிய வெள்ளையர்களே உலகில் மிகவும் உயர்ந்த இனம் எனவும் அவர்களுக்கே இவ்வுலகம் பொருத்தமானது எனவும், வேறு இனங்கள் காலக்கிரமத்தில் அழிந்துபடும் எனவும் தனது கொள்கையை வெளியிட்டார். இதன் விளைவாகத் தோன்றியதே ஹிட்லரின் 'மேன்மை பெற்ற ஆரியர்கள்' எனும் தத்துவம். ஆரியர்களே அதிலும் ஜெர்மனியர்களே, உலகை ஆளப் பிறந்தவர்கள் எனும் நம்பிக்கை கோபினாரின் ஆராய்ச்சி முடிவினால் தோன்றியது. ஆரிய இனம் சிறந்தது எனும் தத்துவத்தின் காரணமாகப் பல ஜெர்மனிய யுத்தங்களும், உலகளாவிய இரு பெரும் போரும் உலகை வாட்டி வதைத்தன. சிந்து சமவெளி நாகரிக பகுதியில் காணப்பெற்ற ஸ்வஸ்திக் சின்னம் ஆரியர்களின் பெருமையை வெளிப்படுத்துவது என ஹிட்லர் நம்பினார். எனவே அச்சின்னத்தைத் தனது போர்க்கலங்களிலும், கொடிகளிலும் பொறித்தார்.

இதுவரை பார்த்த மொழி அறிஞர்கள் அனைவரும் கிறித்துவ சமயக் குருக்கள் அல்லாதவர்கள். இவர்கள் சமஸ்கிருதம் மற்றும் பிராமணர்களின் வல்லாண்மையை அறிந்து அவர்களை இந்திய சமுதாயத்திலிருந்து வேறுபடுத்தி வெள்ளையர்களுடன் இணைக்க முயற்சி செய்தனர். எனினும் பிராமணர்கள் தங்கள் முன் விரிக்கப்பட்ட இவ்வலையில் விழுந்துவிடத் தயார் இல்லை. அத்துடன் பிராமணர்கள் வெள்ளையர்களையும், அவர்களது காலனி ஆதிக்கத்தையும் தகர்ப்பதற்கு முன்னணியில் நின்றனர். இதனைக் கண்டு அதிர்ச்சியுற்ற மேற்கத்திய மதகுருமார்கள், பிராமணர்களை இந்தியர்களிடம் இருந்தும், ஜெர்மனிய ஐரோப்பியர்களிடமிருந்தும் தனிமைப்படுத்த முயன்றனர்.

பகுதி : 9

பிரிவினைவாதம்

பகுதி : 9 பொருள்

பக்கம்

9.1 சாமானியர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட காலனியாதிக்க-மதகுருமார்களின் பிரித்தாளும் கொள்கை 399

9.2 யூதர்கள், கிறித்துவர்கள்-இந்துசமயம் 403

9.3 இந்தியாவின் பெரும் பொருளாதார முன்னேற்றம் 411

9.4 மேற்கத்தைய நாடுகளின் சீரழிவு - ஸ்பெயின் நாட்டின் உதாரணம். 418

9:1. சாமானியர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட - காலனியாதிக்க - மதகுருமார்களின் பிரித்தாளும் கொள்கை

பொதுவாக நமது பாரத மக்கள் சூதுவாது அறியாதவர்களாய் விளங்கி வந்தனர். உலகையெல்லாம் அடிமைப்படுத்தி ஆண்ட வெள்ளைக்காரன் நம் நாட்டினுள் காலடி எடுத்து வைத்த அன்றே சூதும் வாதும் அவனுடன் கூடவே நுழைந்தன.

அவனது நடை, உடை, பாவனைகளைக் கண்டு பிரமித்த நம் மக்கள் அவனுக்கு அளவுக்கு அதிகமாகவே மரியாதை செலுத்தினர். அந்தப் பிரமிப்பு ஏற்படுத்திய பிரமை காரணமாகவே அவனால் நமது நாட்டை மிக எளிதாய் அடிமைப்படுத்த முடிந்தது. மிகப்பெரிய அறிவாளி, மிகப் பெரிய விஞ்ஞானி, எதையும் நுணுக்கமாய் ஆராய்ந்து அறிபவன், எதையும் சட்டப்படி செய்பவன், என்றெல்லாம் அவன் நம்மிடையே ஒரு நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டான்.

அத்தகைய பிரமையைக் கொண்டு நயவஞ்சகமாய் அவன் நம் மீது திணித்த கட்டுக்கதையே ஆரியம், திராவிடம் ஆகும். நம்நாட்டு அறிவு ஜீவிகள், மதகுருமார்கள் உட்பட பலரும் நயவஞ்சக ஆரிய திராவிட, கட்டுக்கதைகளை அமைதியாய் ஏற்றுக் கொண்டது புரியாத புதிராகவே இருக்கின்றது. பெரிய பெரிய அகழ்வாராய்ச்சிகள் மூலமாய் இதைக் கண்டறிந்ததாய் அவன் பறைசாற்றிக் கொண்டதாலும், ஆட்சியும், அதிகாரமும், அச்சடிக்கும் இயந்திரமும் அவன் கையில் இருந்ததாலும் எவ்வித எதிர்ப்பும் இன்றி, விஷமத்தனமான இக்கட்டுக்கதைகளை அவனால் மிக இலகுவாய்ப் பரப்பிட முடிந்துள்ளது என்றே எண்ண வேண்டியுள்ளது.

அகழ்வாராய்ச்சி சரித்திர ஆராய்ச்சி, கல்வெட்டு ஆராய்ச்சி, மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் என்றெல்லாம் ஆழமாய்த் தேடிப் போகாமல் பாமரத்தனமான கேள்விகளை

எழுப்புவதன் மூலம் முதல் சுற்றிலேயே ஆரிய - திராவிட, கட்டுக்கதையை முறியடித்து அதை விஷமத்தனமானது, நயவஞ்சகத் தனமானது என்பதை நிரூபிக்க முடியும். இதனைப் பற்றி சிவகாசி டாக்டர் குருகுலத் தென்றல் சிவசக்திபாலன் MBBS, Dc. CH என்ன கூறுகின்றார் பார்க்கலாம்.

ஆடு மாடுகளை மேய்க்கும் கதை

பைபிள் பழைய ஏற்பாட்டின்படி மத்திய ஆசியாவில் வாழ்ந்த யூத மக்கள் நீண்ட நெடுங்காலமாய் ஆடு மாடுகளை மேய்க்கும் தொழிலினை மட்டுமே மேற்கொண்டிருந்தனர். சாப்பிடக்கூடாத கனியைச் சாப்பிட்ட காரணத்தினால், தேவனின் கோபத்திற்கு ஆளான ஆதாமும் ஏவாளும் தேவனால் ஏடன் நந்தவனத்திலிருந்து அடித்துத் துரத்தப் பட்டார்கள். அதன்பின் அவர்கள் பிள்ளைகளைப் பெற்றுப் பல்கிப் பெருகத் தொடங்கினார்கள்.

பைபிள் பழைய ஏற்பாட்டினைத் தெளிவாய் ஆராய்ந்து பார்த்தால் ஆதாமும் ஏவாளும் நந்தவனத்திலிருந்து அடித்து விரட்டப்பட்டு ஏறத்தாழ 6000 ஆண்டுகள் ஆனது திட்ட வட்டமாய் தெரிகின்றது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இயேசு கிறிஸ்து காலம் வரை, அம்மக்கள் ஆடு மாடுகளை மேய்க்கும் தொழிலினைத் தவிர்த்து வேறு ஏதும் அறியாதவர்களாய் இருந்தவர்கள் என்பது பைபிள் பழைய ஏற்பாட்டின் மூலம் தெள்ளத் தெளிவாய்ப் புலப்படுகின்றது. இயேசு கிறிஸ்துவைக் கூட அவர்கள் நல்ல மேய்ப்பானாகவே நோக்கினார்கள். காணாமல் போன ஆடுகளைத் தேடி வந்ததாகக் கூட இயேசு கிறிஸ்துவும் தன்னை தானே கூறியுள்ளார்.

பைபிள் பழைய ஏற்பாட்டில் ஆபிரகாம், லோத் ஆகிய இருவருக்கும் ஆடு மேய்ப்பதில் தகராறு ஏற்பட்டதாயும் இதனால் அவர்கள் வலமாயும் இடமாயும் பிரிந்ததாய்க் கூறப்பட்டுள்ளது. மேலும் அதன்பின் கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, அவனைத் தகப்பனாய் ஆக்குவதாயும், அவன் சந்ததியினரைப் பூமி முழுவதும் பெருகப் பண்ணுவதாயும் கூறியதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்கிப் பெருகிய ஆபிரகாமின் வழித் தோன்றல்கள் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு உலகின் நாலாபுறமும் பிரிந்து சென்றார்கள் என்று பைபிள் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

மொகன்ஜதாரோ, ஹரப்பா அகழ்வாராய்ச்சிக்குப் பின் பாரத வரலாற்றினை எழுதத் துவங்கிய கிறித்துவப் பாதிரியார்கள் திட்டமிட்டு நம் நாட்டின் வரலாற்றில் திணித்த அப்பட்டமான பைபிள் கதையே ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு கைபர் போலன் கணவாய் வழியே மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரியர் என்பதாகும்.

பைபிள் பழைய ஏற்பாட்டின் ஆடு மாடுகள் மேய்க்கும் கதையை எந்த அடிப்படையில் எந்த ஆதாரத்தைக் கொண்டு, எந்த உரிமையில் பாரத வரலாற்றினில் கிறித்துவ பாதிரியார்கள் திணித்தார்கள்? அதை எந்த அடிப்படையில், எந்த ஆதாரத்தைக் கொண்டு, எந்த முகாந்திரத்தில் நம் நாட்டு அறிவுஜீவிகள் ஏற்றுக் கொண்டார்கள்?

இராமாயணம் - மகாபாரதம்

நமது பாரதத்தின் பழம்பெரும் இதிகாசங்கள் இராமாயணம், மகாபாரதம் ஆகும். நமது நாட்டின் பதினெட்டு மொழி இலக்கியங்களிலும் அதன் தொன்மை பற்றியும் பெருமை பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

தந்தை சொல்லை மதிப்பது, ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்வது, சகோதரனுக்காகத் தனது சுகத்தையெல்லாம் விட்டுக் கொடுப்பது, ராம ராஜ்ஜியத்தை நடத்திக் காட்டுவது என்று இராமாயணம் உலக வாழ்க்கையின் உன்னதமான நாகரிகத்தை எடுத்துரைக்கின்றது. ராஜாங்க விஷயங்களையும், ராஜ தந்திரங்களையும், போர் முறைகளையும், தத்துவ உபதேசங்களையும் மகாபாரதம் வாரி வழங்குகின்றது.

ஆடு மாடுகளை மேய்ப்பதைத் தவிர்த்து வேறு எதையுமே அறியாத பைபிள் பழைய ஏற்பாடு எங்கே? மானிட இனத்தின் அருமை பெருமைகளை எடுத்துரைக்கும் இராமாயணம், மகாபாரதம் எங்கே?

ஆடு மாடுகளை மேய்ப்பதைத் தவிர்த்து வேறு எதையுமே அறியாத இனமாய்ப் பைபிள் பழைய ஏற்பாட்டில் சித்தரிக்கப்படும் மத்திய ஆசியாவில் வாழ்ந்த யூத இனம் கைபர்

போலன் கணவாய் வழியே பாரதத்திற்குள் நுழைந்து ஆரிய இனம் என உருமாற்றம் பெற்று மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகத்தை அழித்து, அதில் வாழ்ந்த எழுதப் படிக்க தெரியாத திராவிடர்களைத் தெற்கு நோக்கி அடித்து விரட்டினார்கள். அதன் பின்பே ஆரியர்கள் அறிவிற் சிறந்த நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும், உபநிஷதங்களையும், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் தத்துவங்களையும், 64 கலைகளையும், 96 தத்துவங்களையும், ஆகமங்களையும், சரியை, கிரியை, யோகம் என்னும் மார்க்கங்களையும் எடுத்துரைத்தார்கள் என்பதை ஒரு வாதத்திற்காககூட ஏற்றுக் கொள்ள முடியுமா?

'ஆரியர்களிடையே' பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என நான்கு வர்ணங்கள் இருந்ததைப் பல்வேறு இலக்கியங்கள் மூலம் அறியலாம். நாம் பள்ளியில் படிக்கும்போது கூட இதைத் தான் சொல்லித் தந்தார்கள். ஸ்ரீமத் பகவத் கீதையில் நான்கு வர்ணங்களின் தன்மைகள் பற்றித் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளது.

ஆக, நான்கு வர்ணங்களை உள்ளடக்கியதே ஆரிய இனம் என்பதில் எந்தவொரு ஐயப்பாடும் யாருக்கும் கிடையாது என்பது உறுதி. சமீபத்தில் கூடத் தென்னகத்தின் மீது படையெடுத்து வந்த ஆரிய மன்னன் என்று ஸ்ரீராமபிரானை நமது தமிழகத்து அரசியல் வாதிகள் வசை பாடியதை நாம் அறிவோம். மேலும் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டு இதிகாசங்களும் சத்தியர்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினைகளைக் குறித்தே அதிகமாய் விவாதிக்கின்றன.

உண்மைகள் இவ்வாறு இருக்க, பிராமணர்களை மட்டுமே வந்தேறிகள் என்றும் கைபர் போலன் கணவாய் வழியே வந்து திராவிடர்களை விந்திய மலைக்குத் தெற்கே விரட்டியடித்த மோசக்காரர்கள் என்றும் வசைபாடுவதன் உள் நோக்கம் என்ன? பிராமணர்கள் மட்டுமே ஆரியர்கள் என்பது போன்ற எண்ணம் உருவாக்கப்படுவதன் அர்த்தம் என்ன? ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்ந்த ஸ்ரீராமபிரான், பகவத் கீதை வழங்கிய ஸ்ரீகிருஷ்ண பகவான் (இருவரும் கருத்த நிறத்தினர்)[1], சகோதரபாசத்திற்கு எடுத்துக்காட்டாகிய பஞ்ச பாண்டவர்கள் போன்ற சத்திரியர்கள் ஆரியர்கள் தானா? ஆரியர்கள் தான் என்றால் அவர்களின் வம்சாவளியினர் இன்று எங்கிருக்

கின்றார்கள்? சத்திரிய நாடார்கள், வைசிய செட்டியார்கள் போன்ற ஜாதிகள் தமிழகத்திலும் இன்றும் இருக்கின்றதே அவர்கள் ஆரியர்களா - திராவிடர்களா?

9:2. யூதர்கள் - கிறித்துவர்கள் - இந்து சமயம்

குருகுலத் தென்றல் டாக்டர் சிவசக்திபாலன் மேலும் கூறுவதைப் பார்க்கலாம். யூதர்கள் இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தார்கள் என்கின்ற ஒரே ஒரு காரணத்தினால் யூத இனத்தையே பூண்டோடு அழிக்கும் கொடூரமான செயல்களில் கிறிஸ்தவர்கள் ஈடுபட்டார்கள் என்பதை உலக வரலாறு கூறுகின்றது. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட சம்பவத்தை மிக உன்னதமான தியாகமாய் இன்று சித்தரிக்கும் இதே கிறிஸ்தவர்கள் முன்பெல்லாம் ஒரு யூதரைக் கொன்றால் அக்கொலையாளிக்குச் சொர்க்கத்தில் இடம் ரிசர்வ் செய்யப்படும் என்று வாக்குறுதிகள் வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

17.3.2005 குமுதம் ரிப்போர்ட்டர் இதழில் பா. ராகவன் எழுதிய நிலமெல்லாம் ரத்தம் என்னும் தொடரில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டுள்ளது.

'ஒரு யூதரைக் கொன்று விட முடியுமானால் அந்தக் கிறிஸ்தவருக்குச் சொர்க்கம் நிச்சயம் என்று அப்போது சொல்லப்பட்டது. முதலில் கண்ட இடத்தில் வெட்டித்தள்ளிக் கொண்டிருந்தவர்கள் கொலை பழகிவிட்டதும் சித்ரவதை செய்து கொல்லலாம் என்று முடிவு செய்து, கழுத்தில் கத்தியை வைத்து அறுத்து அப்படியே சதையை இடுப்பு வரை வரித்தெடுப்பது, விரல்களைத் தனித்தனியே வெட்டி எடுத்து ஒரு ரம்பத்தால் அறுப்பது, ஒவ்வொரு முடியாகப் பிடுங்கி முழுத்தலையையும் ரத்த காயமாக்கி விட்டு அதன்மேல் கொதிக்க கொதிக்க வெந்நீரை ஊற்றுவது என்று குரூரத்தின் பல்வேறு எல்லைகளை அவர்கள் திறந்து காட்டினார்கள். பிரொட்டஸ்டன்ட் மதத்தின் காரண கர்த்தாவாகவும், பெருந்தலைவராகவும் அடையாளம் காணப்பட்ட ஜெர்மன்

பாதிரியார் மார்ட்டின் லூதர் என்பவர் 1543ம் ஆண்டு தம்மைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதினார். கடிதக் கட்டுரைக்கு "The Jews and their lies" என்று தலைப்பு வைத்தார்கள். அதில் யூத தேவாலயங்களை எரித்து விட வேண்டும். இதைக் கடவுளுக்காக மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கையாக நினைக்க வேண்டும். யூதர்களின் வீடுகளை இடித்து அவர்களை ஜீப்ஸிக்கள் போல் திரிய வைக்கச் செய்ய வேண்டும் என்பது போன்ற கட்டளைகள் இடப்பட்டிருந்தன என்பதை முன்பே பார்த்தோம். கிபி 1648ம் ஆண்டு கொசாக்குள் என்று அழைக்கப்பட்ட கிழக்கு ஐரோப்பியப் புரட்சியாளர்களின் தலைவரான பொக்டான் ஷெமீயில் நிகி என்பவர் இதைவிடக் கொடூரமான கட்டளைகளை விடுத்தார். இவரது சொல்லால் உந்தப்பட்ட கிறித்தவர்கள், லித்துவேனியா, போலந்து, உக்ரைன் போன்ற நாடுகளில் யூதர்களைக் கூட்டம் கூட்டமாகக் கொத்துக் கொத்தாகக் கொன்று தள்ள ஆரம்பித்தார்கள்.'

அப்பப்பா.... எழுதவே கைநடுங்கும் அளவிற்குக் கிறிஸ்தவர்கள் ஐரோப்பிய நாடுகளில் கொடூரமான வெறியாட்டம் ஆடிக் கொண்டிருந்த அதே காலகட்டத்தில் தான் பாரதநாடு அவர்களிடம் அடிமைப்பட்டது.

இதுவே பாரத வரலாற்றில் நுழைக்கப்பட்ட ஆரிய - திராவிட கட்டுக்கதையின் மூலக்கதையாகும். ஐரோப்பிய நாடுகளில் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த யூதர்கள் மீதான கொலைவெறி தாக்குதல்கள் பாரத மண்ணிலும் பிராமணர்கள் மீது அரங்கேற்றப்பட வேண்டும் என்கிற மிக உன்னதமான சதித் திட்டத்தின் அங்கமாகவே, கைபர் போலன் கணவாய் வழியே பாரதத்திற்குள் நுழைந்த மத்திய ஆசிய நாட்டு யூதர்கள் (ஆரியர்கள்), சிந்து சமவெளியில் வாழ்ந்து கொண்டிருந்த திராவிட மக்களை விந்திய மலைக்குத் தெற்கே அடித்து விரட்டினார்கள் என்றும் ஆரிய, திராவிட இன மக்களிடையே தீராப் பகை நிலவி வந்தது என்றும் எவ்வித ஆதாரமும் இன்றிப் பாரத வரலாற்றினில் கட்டுக்கதையைத் திணித்தார்கள்.

யூத இலக்கியங்களில் யூதர்கள் உயரமானவர்களாயும், சிகப்பு நிறத்தவர்களாயும் விளங்கினார்கள் என்று கூறப் பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு ஆரியர்கள் உயர மானவர்களாயும், சிகப்பு நிறத்தவர்களாயும், திராவிடர்கள்

குள்ளமானவர்களாயும், கருப்பு நிறத்தவர்களாயும் இருந்தார்கள் என்றெல்லாம் கதை அளந்தார்கள்.

ஏறத்தாழ ஐநூறு வருடங்களுக்கு முன் ஆங்கிலேயர்கள் பாரதத்திற்குள் நுழைந்தார்கள். ஏறத்தாழ ஆயிரம் வருடங்களுக்கு முன் இஸ்லாமியர்கள் பாரதத்திற்குள் நுழைந்தார்கள். இவர்களெல்லாம் நம்மை அடிமைப்படுத்திச் செய்த கொடுமைகளும், கொன்று குவித்த மக்களும் ஏராளம். அவர்கள் மீதெல்லாம் இல்லாத பகையை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் நுழைந்தவர்களாய்க் கதை அளக்கப்பட்ட பிராமணர்கள் மீது மட்டும் இன்று வரை திட்டமிட்டுப் பகை வளர்க்கப்படுவதன் உள் நோக்கம் என்ன?

ஹிந்து இலக்கியங்கள்

எந்தவொரு நாட்டின் வரலாறும் அங்கே மக்களிடையே தொன்று தொட்டு இருந்து வரும் இலக்கியங்களை ஆதாரமாய்க் கொண்டே எழுதப்படும். அப்படித்தான் எழுதப்பட வேண்டும். அது தான் சரியானதாய் இருக்க முடியும்.

பாரதத்தின் வரலாறு மட்டும் பைபிள் பழைய ஏற்பாட்டின் ஆடு மாடுகளை மேய்க்கும் கதைகளைக் கொண்டும், யூதர்களைத் தேடிப்பிடித்துச் சித்திரவதை செய்து கொல்லும் கிறிஸ்தவர்களின் கொலைவெறியை மையமாய்க் கொண்டும் எழுதப்பட்டது. ஸ்ரீ ராமபிரான் இராவணனுடன் போரிட்டு வதம் செய்த இராமாயணப் போரை கொண்டு, தென்னகத்தின் மீது படையெடுத்து வந்த முதல் ஆரிய மன்னன் ராமன் என்றும் இராவணனே சுத்தமான திராவிடன் என்றும் ஆரியமாயை என்னும் நூல் எடுத்துரைக்கின்றது.[2] ஸ்ரீராமபிரானோ சத்திரியன், பிராமணன் அல்ல, கருப்பு நிறத்தவன், அதேபோல் இராவணனோ ஆஜானுபாகுவாய் உயரமானவன், சிகப்பு நிறத்தவன், இமயமலையில் சிவனை நோக்கி அமர்ந்து தவம் புரிந்தவன். உண்மைகள் இவ்வாறெல்லாம் இருக்கையில் அதற்குப் புறம்பாக எவ்விதத்திலும் பொருந்தாத பொய்யுரைகள் புனையப்பட்டன.

இதன் காரணமாய் ஹிந்து வேதங்களையும் பதினெட்டுப் புராணங்களையும் தமிழர்களுக்குச் சம்பந்தமே இல்லாத விஷயங்கள் என்றும் தமிழர்கள் பகிஷ்கரிக்க வேண்டிய

தீண்டத்தகாத விஷயங்கள் என்றும் இன்று வரை பிரச்சாரங்கள் மும்முரமாய் நடத்தப்பட்டு வருகின்றன. திராவிடர்கள் உருவ வழிபாட்டை வெறுத்தார்கள் என்றும் பின்னாளில் சிவலிங்க வழிபாட்டை மேற்கொண்டு சைவர்கள் எனப்பட்டார்கள் என்றும் ஆரியர்கள் உருவ வழிபாட்டை மேற்கொண்டார்கள் என்றும் பாமர மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டு ஹிந்து மதத்தில் பிரிவினைகள் வளர்க்கப்படுகின்றன. பகவத் கீதை ஆரிய நூல் என்றும் எனவே அதைத் தவிர்க்க வேண்டும் என்றும் (காமத்துப்பால் கொண்டுள்ளதாய் இருந்தாலும்) திருக்குறளே பொதுமறை என்றும் பறைசாற்றப்படுகின்றன.

இந்தக் கட்டுக்கதைகளெல்லாம் எந்த அடிப்படையில், எந்த ஆதாரங்களைக் கொண்டு உருவாக்கப்படுகின்றன என்பது கூறப்படுவதே இல்லை. அதிலும் மிகப்பெரிய ஆன்மீகவாதிகளும், பண்டிதர்களும், மடாதிபதிகளும், தத்துவ ஞானிகளும், நூல் ஆசிரியர்களும் என பலரும்கூட இதை ஆமோதித்துப் பெரிய பெரிய வியாக்கியானங்கள் கொடுப்பது வியப்பாய் இருக்கின்றது.

ஆனால், ஆரிய இலக்கியங்கள், புராணங்கள் பாரதத்தை மையமாய்க் கொண்டே, அதிலும் குறிப்பாகத் தென்னகத்தை மையமாய்க் கொண்டே எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மத்திய ஆசிய யூத நாடுகளைப் பற்றிய சிறிய குறிப்புகள் கூட அதில் இல்லை.

உண்மைகள் இவ்வாறு இருக்க, கிறிஸ்தவர்கள் யூதர்கள் மேல் நடத்திய கொலை வெறித் தாக்குதலைப் பாரதத்திலும் அரங்கேற்றவே பிராமணர்கள் ஆரியர்கள் என்ற வாதம் பாரத சரித்திரத்தில் திணிக்கப்பட்டது. பிராமணர்கள் எனும் ஆரியர்கள் சமஸ்கிருதம் எனும் மொழியைத் திணித்துத் தமிழை அழிக்கப் பார்த்தார்கள் என்று சமஸ்கிருதத்திற்கும் தமிழுக்கும் தீராப்பகையை இன்றுவரை மக்கள் மனதில் திணித்து வருவதன் மர்மம் என்ன? தமிழர்களுக்கும் ஹிந்து மதத்திற்கும் ஆதியிலிருந்து எவ்விதத் தொடர்பும் கிடையவே கிடையாது என்று ஹிந்து மதத்தினுள் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் பிரச்சாரங்கள் பாமரமக்கள் மத்தியில் நடத்தப்படுவதன் உள்நோக்கம் என்ன? அதன் பின்னணியில் இருப்பது யார்?

ஐம்பத்தாறு தேசத்து மன்னர்கள்

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏதாவது ஒரு மன்னன் அசுவமேதயாகம் நடத்தி தம்மைப் பாரதத்தின் ஏக சக்கர வர்த்தியாய் அறிவித்துக் கொள்வது தொன்று தொட்டு பாரதத்தில் கடைபிடிக்கப்பட்டு வந்த மரபு என்பதும் புலனாகின்றது. ஆரம்ப காலத்தில் அசுவமேதயாகத்தால் தீர்மானிக்கப்பட்ட ஏகச் சக்கரவர்த்திப் பட்டம், பின்னாட்களில் போர்களின் மூலம் நிலை நாட்டப்பட்டது என்பதையும் சரித்திரம் மூலம் அறிகின்றோம்.

ஆனால் எந்தவொரு காலகட்டத்திலும் தமிழகத்தின் ஏக சக்கரவர்த்தியாய் எந்த மன்னரும் தன்னை அறிவித்துக் கொண்டதில்லை. இன்றைய தமிழகத்தின் பகுதிகளை முன்பு சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் ஆண்டு வந்ததை நாம் சரித்திரம் மூலம் அறிகின்றோம். இந்த சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் நாம் தமிழர்கள் என்கின்ற உணர்வுடன் எந்தக் காலகட்டத்திலும் கைகோர்த்துக் கொண்டதாகவோ அல்லது தென்னகத்து மன்னர்கள் ஒன்றாய்த் தம்முள் கூடி வடக்கே இருந்து வந்த ‘பார்ப்பன இயக்கத்தையும்’, ஆரிய ஊடுருவலையும், ஆரியப் படையெடுப்பையும் முறியடிக்க நாம் திராவிடர்கள் என்று தம்முள் இணைத்துப் பணியாற்றியதாகவோ எந்தவொரு குறிப்பும் பாரத வரலாற்றில் இல்லை.

வடக்கே படையெடுத்துச் சென்ற ஓரிரு சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் ஏனைய தமிழ் மன்னர்களை ஒரு கை பார்த்துப் போட்டுத் தள்ளி விட்டுத்தான் வடக்கே படையெடுத்துச் சென்றதையும் அறிகின்றோம்.

அ.ஆ.இ.ஈ - யாருக்குச் சொந்தம்

ஐயாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து வந்த ஆரியர்கள் கொண்டு வந்த மொழி சமஸ்கிருதம் என்று கூறுகின்றார்கள். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஐயாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து வந்த ஆரிய இனமும், அவர்களால் அடித்து விரட்டப்பட்ட திராவிட இனமும் அ, ஆ, இ, ஈ தொடங்கும் உயிர் எழுத்துகளையும், க், ங், ச், ஞ்.... என்று தொடங்கும் மெய் எழுத்துகளையும்,

உயிர் எழுத்துகளும் மெய்எழுத்துகளும் புணர்வதால் உண்டாகும் உயிர்மெய் எழுத்துக்களையும் ஒன்று போல் கொண்டிருந்தார்கள் என்பதை ஒருவாதத்திற்காக கூட ஏற்றுக் கொள்ள முடியவே முடியாது.

இத்தகைய பாமரத்தனமான கேள்விகளை மக்கள் முன் எழுப்புவதன் மூலமே திராவிட இனம், ஆரிய இனம் என்று பாரத மக்களைப் பிரித்தாளும் சூழ்ச்சியை முறியடிக்க முடியும் என்று உறுதியாக நம்பலாம். ஏனெனில் நம்மிடையே உள்ள ஜாதி வேறுபாடுகளைப் பயன்படுத்தியும் பார்ப்பன எதிர்ப்பு இயக்கம் நடத்தியும் ஆரியதிராவிட மாயையை நம் மக்கள் மனதில் ஆழமாய்ப் பதிய செய்து விட்டார்கள். அதை வேரோடு பிடுங்கி எறிந்தால்தான் நாம் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் விதையை விதைக்க முடியும். இவ்வாறு டாக்டர் சிவசக்திபாலன் கூறியுள்ளார்.

கலாச்சார ஊடுருவலும் தனதாக்குதலும்

கர்த்தராகிய யேசு கிறிஸ்து, கிறித்துவர்களை, புறஜாதியினர் பழக்கவழக்கங்களைப் பின்பற்ற வேண்டாமென்றும், அப்படியும் பின்பற்றினால் பூமியின் முகத்திலிருந்து நீங்கள் அழிக்கப்படுவீர்கள் என எச்சரித்துள்ளார். எனினும் கலாச்சார அபகரிப்பு சார்ந்த பிரிவினைவாதம் சற்றும் வெட்கமில்லாமல் நடைபெற்று வருகின்றது. இதனைப்பற்றி பாண்டிச்சேரி ஸ்ரீவைணவச் சுடராழி டி.ஏ. ஜோசப் என்ன கூறுகின்றார் என்பதை பார்க்கலாம்.

ஸ்ரீ வைணவச் சுடராழி டி.ஏ. ஜோசப் – கூறுகின்றார்:-

உலகின் மிகத் தொன்மையான மதம் இந்துமதம் தான் என்று ஒப்புக்கொண்டு அகில உலகக் கல்விக்கழகம் (UNESCO) மனித இனத்தின் முதல் இலக்கியம் - அதாவது காலத்தால் முதல் இலக்கியம் - 'ரிக்வேதம்' தான் என்று சமீபத்தில் அறிக்கை விட்டுள்ளது. அதன் பிரதியையும் தன் நூலகத்தே வைத்துப் பாதுகாக்கிறது. உலகின் முதல் கண் அறுவைச் சிகிச்சை செய்தவர் சுஸ்ருதர் என்று கூறி மருத்துவத்தின் முன்னோடி இந்தியாவே என்று அலோபதி மருத்துவர்களே ஒப்புக் கொண்டுள்ளார்கள். கிமு 3000 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட

எகிப்திய பிரமிடுகளில் இந்திய நாட்டுச் சூரிய வழிபாட்டுமுறை, ஜோதிடம் ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன என்று அகழ்வாராய்ச்சி வல்லுனர்கள் உறுதி செய்துள்ளார்கள். இந்தியா வந்து திரும்பிய அலெக்ஸாண்டர் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் ஆன்மீகம் முழுவளர்ச்சி அடைந்துள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறான். அவனுடைய சேனை வீரர்களுக்குப் பாம்புக்கடி ஏற்பட்ட போது இந்தியர்கள் மந்திரம் ஜபித்தே அவர்களைக் குணப்படுத்திய செய்தியும் வரலாற்றில் காணப்படுகிறது. இப்படி, கணக்கில்லாத வரலாற்று ஆதாரங்கள் இந்துமதத்தின் தொன்மைக்குச் சாட்சிகளாக அடுக்கிக் கொண்டு போகலாம். ஆனால் சில பிற்கால மதங்கள் தம்மை இந்துமதத்துக்குத் தாயாகக் கூறிக் கொள்கின்றன. இந்தியர்களுக்கு வைத்தியம், பண்பாடு, சிற்பம், நாகரிகம் ஆகியவற்றைக் கற்றுத் தந்ததாகக் கூறிக் கொண்டிருக்கின்றன.

‘புத்தமதத்தைத் தோற்றுவித்தவரும் தோன்றிய காலமும் வரலாற்றில் பார்க்கிறோம். இதேபோல சமணம், இஸ்லாமியம், கிறிஸ்துவம் முதலிய மதங்களுக்கும் தோன்றிய காலம், தோற்றுவித்தவரைப் பற்றிய விவரங்கள் ஆகியவை உள்ளன. ஆனால் உங்கள் இந்துமதத்துக்கு இப்படி ஒரு வரலாறும் இல்லையே!’ என்று ஒரு அமெரிக்கர் ஸ்வாமி விவேகானந்தரைக் கேட்ட போது ‘அதுதான் இந்துமதத்தின் சிறப்பு’ என்று விடையறுத்தார் ஸ்வாமிஜி.

இந்துமதம் காலத்தைக் கடந்தது. அனாதியானது; சரித்திரத்தை வென்றது. காட்டு வெள்ளத்தைக் கைப்பிடிக்குள் அடக்க முயற்சிப்பது போல இன்றைய அறிஞர்கள் சிலர் இந்துமதத்தைக் காலண்டரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயலுகிறார்கள்.

தமிழரை, ஆரியர் அடக்கி ஒடுக்கிக் கோவில்களில் வடமொழி முழங்கச் செய்தார்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் இந்தக் கலியுகத்தின் தொடக்கத்துக்கு முன்பே புழக்கத்தில் இருந்த ஆழ்வார்களின் பாசுரங்களும், நம்மாழ்வாரின் திருவாய் மொழியும், கோவில்களில் ஒலித்த வரலாறும் இன்றும் நம் கையில் உள்ளன. அதை உச்சரித்தவனும் இவர்கள் சொல்லும் ஆரியன் தான்.

பெருமாள் கோவில்களிலே திருவீதி புறப்பாடு நடக்கும் பொழுது தமிழ்வேதம் சேவிப்பவர்கள் முதலிலும், அந்தக் கோஷ்டிக்குப் பின்பு பெருமாள் திருமூர்த்தியும், மூர்த்திக்குப் பின்னால் வடமொழி வேதம் சேவிப்பவர்களும் செல்ல வேண்டும் என்ற வரிசைமுறை எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. வேளாள இனத்தைச் சேர்ந்த நம்மாழ்வார், பிராம்மண ஆழ்வார்களை விட உயர்ந்தவர் என்று சொன்ன இராமானுஜரும், அந்தச் சம்பிரதாயத்தை இன்றுவரை கட்டிக் காத்து வரும் ஆசார்ய பரம்பரையினரும் பிராம்மணர்கள் தான். ஆரியர் ஆதிக்கம் என்பது வெறும் கற்பனையே!

ஜாதியைச் சொல்லி மக்களைக் கொடுமைப்படுத்தியதாக இந்துமதத்தைச் சாடுகிறார்கள் மற்ற மதத்தினர். ஆனால் மீனவப் பெண்ணுக்குப் பிறந்த வியாசரையும், நெசவு நெய்த திருவள்ளுவரையும், செருப்புத் தைக்கும் குலத்தில் பிறந்த அருந்ததியையும், தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்த மாறனார் நம்பியையும், திருமங்கை யாழ்வாரையும் இந்து மதம்தான் வணங்குவதற்குச் சொல்லிக் கொடுத்துள்ளது. வள்ளலாரையும், திருப்பாணாழ்வாரையும், நந்தனாரையும் உயர் சாதிக்காரர்கள் தீயில் போட்டுப் பொசுக்கிவிட்டதாக இன்று பிற சமயத்தினர் சாடுகிறார்கள். அவர்கள் என்ன ஆதாரத்தில் அப்படிப் பேசுகிறார்கள்? அவ்வளவு ஜாதி வெறி இந்த நாட்டு ஆன்மீக வாதிகளுக்கு இருந்திருந்தால் அந்நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் வணங்குவது கூடப் பாவம் என்று சொல்லியிருக்கமாட்டார்களா? தாழ்த்தப்பட்ட இனத்தவரைத் திருக்குலத்தார் என்ற பெயரிலே கோவிலுக்குள் பிரவேசிக்கச் செய்தது ராமானுஜர்தானே?

பெரிய புராணத்து நாயன்மார்களில் மாணிக்க வாசகர் சேர்க்கப்படாமல் விடப்பட்ட காரணம் ஆரியத்தின் ஆதிக்கமே என்று இன்றைய புறச்சமய ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அப்படியானால் பெரிய புராணத்தில் பாடப்பட்ட நாயன்மார்கள் அனைவருமே ஆரியர்களா? அவர்களிலே சலவைத் தொழிலாளி இல்லையா? சாதாரண பணியாளர்கள் இல்லையா?

9:3. இந்தியாவின் பெரும் பொருளாதார முன்னேற்றம்

இந்திய நாடு கடந்த 1000 ஆண்டுகளுக்கு மேலாக இந்து சமயத்திற்கு வேறானவர்களால் ஆளப்பட்டு வந்துள்ளது என்பதை ஏற்கனவே கண்ணுற்றோம். பல படையெடுப்புகளாலும், அடிக்கடி தோன்றிய பஞ்சம், பசி, பட்டினி ஆகியவற்றாலும் மக்கள் பலர் மாண்டுபட்டனர். அடிமையில் அகப்பட்ட இந்தியாவினால், ஐரோப்பிய வெள்ளையரே உயர்ந்தவர், அவர்களே உலகை ஆளப்பிறந்தவர்கள் என்ற இனவாத கொள்கையை சர்வதேசச் அளவில் எதிர்கொள்ள முடியாமல் ஆகிவிட்டது. அவர்களின் திருச்சிலுவை யுத்தத்தையோ அல்லது அமெரிக்கா, ஆஸ்திரேலிய நாடுகளில் பூர்வகுடிமக்கள் கொன்று குவிக்கப்பட்ட போதும் தனது எதிர் சக்தியை இந்தியா வெளிப்படுத்தி அப்பேரழிவுகளைத் தடுக்க முடியாமல் போய் விட்டது. இத்தகைய பேரழிவு வேறு வடிவங்களில் (உதாரணம்: மனித உரிமை இயக்கம் என்ற பெயரில்) உலகில் மீண்டும் தலையெடுத்தால் தடுப்பதற்கு இந்தியாவின் பொருளாதாரமும் ஆன்மீகமும் சக்தி வாய்ந்ததாக அமைய வேண்டும். அத்தகைய பெரும் பொருளாதார - ஆன்மீக சக்தியை இந்தியா விரைந்து உருவாக்கிவிட முடியுமா? கூர் நோக்குதல் அவசியம்! அதன் பொருட்டு ஒரு கிராமத்தையும் ஒரு மாவட்டத்தையும் தேர்ந்தெடுத்து அதன் கடந்தகால நிலவரத்தையும் நாட்டின் விடுதலைக்குப் பின் தற்போது கண்டுள்ள முன்னேற்றத்தையும் ஆய்விட்டு, வருங்காலம் இந்தியாவிற்கு எவ்வாறு வளமுள்ளதாக அமையும் எனக் கூறலாம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமம் : உமரிக்காடு (தூத்துக்குடி மாவட்டம்)

சமுதாய அமைப்பு : அனைவரும் இந்து நாடார்கள்

மக்கள் தொகை (2013) : 2500

இக்கிராமத்தில் கிறித்துவர்களோ, இஸ்லாமியர்களோ, பிராமணர்களோ, வேறு சாதியினரோ இன்மையால் இக்கிராம முன்னேற்றம் வெளிப்புறத்தாரின் ஊடுருவல் இன்றிச் சுயமாக

ஏற்பட்டுள்ளது என நிரூபிக்க முடியும். இக்கிராமம் 1947-ல் இந்தியா விடுதலை பெற்றபோது எப்படி இருந்தது, தற்போது (2013-ல்) எவ்வாறு உள்ளது என்பதைப் பார்ப்போம்.

அன்று 1947ல்

இக்கிராமத்தில் பெரும்பான்மையான மக்கள் ஒரு நாளைக்கு ஒரு தடவை மட்டுமே நெல்சோறு உண்டனர். மற்ற நேரங்களில் கம்பு, கேப்பை, சோளம் ஆகியவற்றின் கஞ்சியை உண்டனர். ஆண்களில் 10 சதவீதத்தினரும், பெண்களில் 50 சதவீதத்தினர் மட்டுமே மேல்சட்டை / ரவிக்கை அணிந்திருந்தனர். பெண்கள் மஞ்சள் கயிற்றுடன் மாங்கல்யத்தை இணைத்து அணிவார்கள். தண்டட்டி, பாம்படம், பதக்கம், நெத்திசுட்டி, ஒட்டியாணம், காசுமாலை ஆகியவை பெண்களின் ஆபரணமாக இருந்தன. பெண்கள் சராசரியாக 40 பவுன் நகைகள் அணிந்திருந்தனர். திருமணங்களுக்கு மாப்பிள்ளை வீட்டார் மாடு கட்டிய வில்வண்டியில் செல்வதுண்டு. திருமணங்கள் மாலை 7 - 7½ மணியளவில் நடத்தப்படுவது வழக்கம். புரோகிதர் இன்றி அக்னி சாட்சியாகத் திருமணங்கள் சமுதாயத்தில் மூத்தவர்களால் நடத்தி வைக்கப்பட்டன. சரல் விரித்த சாலைகளோ, பஸ் வசதியோ, மின்சாரமோ இக்கிராமத்திற்குக் கிடையாது. பள்ளியில் 8ஆம் வகுப்பு வரை மட்டும் உண்டு. காலரா நோயும் வைசூரியும் மக்களை வாட்டி வதைத்தது. மார்கழி மாதத்தில் காலரா நோய் பரவும். ஒரு தடவை இவ்வூரில் காலரா நோயினால் 101- பேர் ஒரு வாரத்தில் இறந்தனர். திருட்டு, கொலை, கொள்ளை போன்றவை கிராமத்திற்குள் நடைபெற்றது கிடையாது. கள், சாராயம் போன்ற மதுபானங்களை அருந்துபவரை விரல்விட்டு எண்ணி விடலாம். வயதான ஆண்களும், பெண்களும் (65-70 வயதிற்கு மேல்) (ஊட்டச்சத்து குறைவால்) கூனிக் குருகிக் கோல்ஊன்றி நடப்பது சகஜமாகக் காணப்பட்டது. ஊரின் நடுவே சவுக்கை எனப்படும் பொதுக் கொட்டகை உண்டு. அதனில் இராமாயணம், மகாபாரதம், சங்கீதம், மற்றும் மற்போர் (குஸ்தி) பயிற்றுவிப்பதுமுண்டு.

அம்மன் கோவிலில் பூஜாரியாக வெளியூரில் வசித்த ஓதுவார் மூர்த்திகளும், ஐயனார் கோவிலில் குயவர் பெருமக்களும், சுடலைமாட சுவாமி கோவிலில் உள்ளூர்

நாடார் சமுதாயத்தினரும் பூஜாரியாகப் பணியாற்றினர். பெண்களுக்கு அம்மன் கோவில் மண்டபத்திற்குள் சென்று வழிபட அனுமதியில்லை. இவ்வூர் மக்கள் வியாபாரம் நிமித்தமாக இராமநாதபுரம் பகுதிகளுக்குச் சென்றால், அங்குத் தனிக் குவளையிலேயே தண்ணீர் மற்றும் தேனீர் வழங்கப் பட்டது. அருகிலுள்ள முக்காணி, ஆத்தூர் போன்ற ஊரில் பிராமணர்கள் தெருவில் யாதவர் சமுதாயத்தைச் சார்ந்தவரை தவிர மற்றவர்கள் வழக்கமாக நடமாடுவது கிடையாது. கல்வி மற்றும் கோர்ட், போலீஸ் பிரச்சனைகள் ஏற்பட்டால் தீர்வு காண ஆலோசனை கேட்டுப் பிராமணர்கள் வீட்டுக்குப் போகலாம். அங்கு முன் மாடத்தில் போடப்பட்டிருக்கும் ஆசனத்தில் (பெஞ்ச்) உட்கார்ந்து பிராமணர்களுடன் பேசலாம், கட்டுப்பாடுகள் இல்லை. உள்ளூரில், வீடுகளில் திண்ணைகளுண்டு. அதனில் வழிப்போக்கர்கள் உட்காரலாம். சன்னியாசிகளும், குடுகுடுப்பைகாரர்களும், பரதேசிகளும் வீடுகளில் தர்மம் கேட்டு வருவதுண்டு.

நெல் பயிரில் நீண்ட கால வித்துக்களே அன்று இருந்தன. இப்பகுதிக்குப் பொருத்தமான குறுகிய கால நெல் வித்துகள் அன்று இல்லை. பாபநாசம் அணையிலிருந்து இப்பகுதிக்குப் பாசன வசதியுண்டு. எனினும் பிந்திய மழை இல்லாவிடின் பயிர்கள் முற்றிலுமாக அழிந்துவிடும்.

இன்றைய நிலவரம் (2013)

இதனைப் பற்றி விவரமாக எழுதிடத் தேவையில்லை ஒரு சிலவற்றைக் குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும்.

இக்கிராமத்தில் மூன்று வேளையும், அரிசியினால் தயாரிக்கப்பட்ட உணவே உண்ணப்படுகின்றது. பெண்கள் மாங்கல்யத்தைத் தங்கச் சங்கிலியில் கோத்து அணிகின்றனர். சராசரியாகப் பெண்கள் 60 பவுன் தங்க நகைகள் அணி கின்றனர். திருமணங்கள் காலைப் பொழுதில் புரோகிதர்களால் நடத்தப்படுகின்றன. ஊரினைச் சுற்றிலும் சாலைகளுண்டு. பேருந்து சேவை ஒரு நாளில் 100 தடவைக்கு மேல் இவ்வூருக்கு உண்டு. பள்ளியில +2 வகுப்பு வரை தற்போது உள்ளது. காலரா நோயும், வைசூரியும் தற்போது இல்லை. மதுபானங்கள் அருந்துவது இளைஞர்களின் வழக்கமாகி விட்டது. வயதான ஆண்களும், பெண்களும் கூனிக் குறுகுவது கிடையாது (ஊட்டச்சத்து குறைபாடு கிடையாது)

கோல் ஊன்றி நடக்கும் முதியவர்களைக் காண்பது அரிது. களவு, திருடு ஆகிய குற்றங்கள் மலிந்து விட்டன. தற்போது அய்யனார் கோவிலில் பூஜாரிகளாகப் பிராமணர்கள் செயல்படுகின்றனர். கோவிலுக்குள் பெண்கள் தற்போது சென்று வழிபடத் தடையில்லை. சுதந்திரத்திற்குப் பின்னர் விவசாயிகளின் பங்குத்தொகையால் கட்டப்பட்ட மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தினால் பாசனத்திற்கு நீர்ப் பற்றாக்குறை தற்போது ஏற்படுவதில்லை. தெருக்களில் சிமெண்ட் சாலைகளும், கழிவுநீர் வெளியேற்றும் கால்களும், பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்படுதலும் தற்போது உண்டு. மேலும் விவரங்களை கீழ்க்கண்ட பட்டியலில் காணலாம்.

வரிசை எண்.	விபரங்கள்	1947ம் ஆண்டு நிலவரம்	2013ம் ஆண்டு நிலவரம்
1.	மொத்த வீடுகள்	500	910
	அ) கூரை வீடுகள்	326	12
	ஆ) ஓடு வீடுகள்	150	118
	இ) காரை / சிமெண்ட் வீடுகள்	24	780
2.	கல்வி		
	அ) மொத்த பட்டதாரிகள்	4	410
	ஆ) டாக்டர்கள்	இல்லை	12
	இ) கால்நடை டாக்டர்கள்	இல்லை	12
	ஈ) வழக்கறிஞர்கள்	1	7
	உ) பொறியாளர்கள்	2	60
	ஊ) இதர பட்டதாரிகள்	1	319
	எ) பெண் பட்டதாரிகள் மொத்தத்தில்	இல்லை	120
	ஏ) எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்	800	45
3.	வெளிநாட்டில் பணிபுரிவோர்:		
	அ) அரேபிய நாடுகளில்	இல்லை	10
	ஆ) மேற்கத்திய நாடுகளில்	இல்லை	20 குடும்பங்கள்
	இ) ஸ்ரீலங்காவில் வியாபாரம் செய்வோர்	10	3
4.	வெளியூரில் வியாபாரம் செய்வோர்	12 குடும்பங்கள்	470 குடும்பங்கள்

இப்பட்டியலிலிருந்து நாட்டின் விடுதலைக்குப் பின் ஏற்பட்டுள்ள சமூக - சமுதாய - பொருளாதார முன்னேற்றம்

பெரும் மகிழ்ச்சி தருவதாக உள்ளதை காணலாம். எனவே இன்னும் 20 - 30 ஆண்டுகளில் சுவாமி விவேகானந்தர் கனவு கண்டது போன்று உலகின் ஆன்மீக - பொருளாதார சக்தியாய் இந்தியா விளங்கிவிடும் என்பதில் ஐயமில்லை.

இராமநாதபுரம் மாவட்டத்தின் முன்னேற்றம்

அன்றைய இராமநாதபுரம் மாவட்டம், இன்றைய சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மாவட்டங்களை உள்ளடக்கியது. நாடு விடுதலை பெற்ற காலத்திலும் அதன் முன்னர் 300 ஆண்டுகள் வரையிலும் பஞ்சம், பசி, பட்டினி, தண்ணீர்த் தட்டுப்பாடு ஆகியவற்றிற்குப் பெயர் பெற்றது. நாடு விடுதலை பெற்ற பின் 1974ம் ஆண்டுவரை இம்மாவட்டத்தின் மக்கள் எவ்வாறு பஞ்சம், பசியை அனுபவித்தனர் என்பதைப் 'பாஞ்ச ஜன்யம்' எனும் மாதாந்திர பத்திரிகையில், அதன் ஆசிரியர் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ, அ. கிருஷ்ணமாசாரியர் விவரமாக வர்ணித்துள்ளார் (மேற்படி இதழ் எண் 162, நவம்பர் 2012).

'இராமநாதபுரம் மாவட்டத்தை வானம் பார்த்த சீமை என அழைப்பதுண்டு. இங்கு முறையான ஆற்றுப்பாசன வசதி கிடையாது. மழைநீரை அல்லது அவ்வப்போது வைகை யாற்றில் வரும் வெள்ளத்தினைக் கண்மாய்கள் என்று அழைக்கப்படும் பெரிய ஏரிகளில் தேக்கி வைத்து வேளாண்மைக்குப் பயன்படுத்துவார்கள். இரண்டு, மூன்று ஆண்டுகள் வான் பொய்த்தால் பெரும் பஞ்சம் ஏற்படும். 1974ம் ஆண்டில் இத்தகைய பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. பெரும்பான்மையான இப்பகுதி மக்கள் பஞ்சம் பிழைப்பதற் காக வெளியூர்களுக்குச் சென்றனர். மூட்டை முடிச்சுகளுடன் இரயில்களுக்காகக் காத்துக் கிடக்கும் மக்களிடம், 'எங்கே போகின்றீர்கள்' என்று கேட்டால், எங்கே போவது?, பசுமை கண்ட இடங்களில் இறங்கிப் பஞ்சம் பிழைக்கப் போகிறோம் என்று கண்ணீர் மல்கப் பதில் கூறினார்கள். இவர்களைத் தவிர, தங்களது சொந்த ஊரிலே நின்றுபோன மக்கள் எவ்விதம் உயிர் வாழ்ந்தனர் என்பதைப் பார்க்கலாம்.

1. வயல் வரப்புகளிலுள்ள எறும்புப் புற்றுகளைத் தோண்டி எறும்பு சேர்த்து வைத்த புல்லரிசியை எடுத்துக் கஞ்சி காய்ச்சி அருந்தினர்.

2. சாணக்குட்டி கிழங்கை உண்ணுதல்:

இக்கிழங்கு பச்சை, மஞ்சள் நிறத்தில் பூமிக்கு அடியில் 3 அடி ஆழத்தில் தோண்டினால் கிடைக்கும். தோற்றத்தில் அழகாய் விளங்கும் இக்கிழங்கு விஷத்தன்மை கொண்டது. உரித்த கிழங்கு கால், கையில் பட்டுவிட்டால் பயங்கர அரிப்புத் தோன்றும். தோண்டி எடுக்கப்பட்ட இக்கிழங்கை உரலிலிட்டு அறைத்து ஓலை, அல்லது நார்ப்பெட்டியில் வைத்துவிட்டால் விஷத்தண்ணீர் வடிந்துவிடும். மறுநாள் அதனை வெல்லம் அல்லது உப்புச் சேர்த்துக் காய்ச்சி உண்ண உபயோகப் படுத்தினர்.'

ஆனால் இன்றைக்கு 1974ம் ஆண்டிற்குப் பின்பு இராமநாதபுரம் மாவட்டத்தில் பஞ்சம் ஏற்பட்டதில்லை. இதற்குக் காரணமாய் விளங்குவது வேளாண்மை ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்ட குறுகிய கால நெல் வித்துக்களும், வறட்சியைத் தாங்கும் நெல் ரகங்களுமே என்று கூறினால் அது மிகையாகாது. வறட்சி ஏற்படும் காலங்களில் இப்பகுதி மக்களுக்கு அரசின் சார்பில் நஷ்ட ஈடுகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் கடந்த 5 ஆண்டுகளாக இப்பகுதியில் விவசாயப் பெருமக்களின் பேராதரவுடன் பயிர் காப்பீட்டுத் திட்டம் அரசாங்கத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் இயற்கைச் சீற்றத்தால் பயிர் விளைச்சலுக்கு ஏற்படும் குறைபாடுகள் / நஷ்டங்கள் விவசாயிகளுக்கு வேளாண் காப்பீட்டுத் திட்ட நிறுவனத்தால் ஈடுசெய்யப்பட்டு வருகின்றன. இத்தகைய பன்முறைப் பணிகளால் இம்மாவட்டத்தின் பஞ்சம், பசி, பிரச்சினைகள் முற்றிலுமாகத் தீர்க்கப்பட்டு விட்டன. மேலும் இப்பகுதி மக்கள் தற்போது வணிகத்தில் ஈடுபட்டுப் பெரும் பொருள் ஈட்டி வருகின்றனர்.

சாதி சமுதாய அமைப்புகளின் மூலம் பொருளாதார முன்னேற்றம் (ஆடிட்டர் கு. குருமூர்த்தி அவர்களின் கருத்தைத் தழுவியது):-

தொழில் துறையிலும், வணிகத்திலும் ஒருவர் ஈடுபட வேண்டுமெனில், தொழிலைத் தொடங்கிப் பயிற்றுவித்திட வழிகாட்டிட ஆசான்கள் தேவை. இந்தியாவில் தொழில் சார்ந்த கொடுக்கல் வாங்கல் நம்பிக்கையின் அடிப்படையிலேயே செய்யப்படுகின்றன (பேங்க் கேரண்டி மூலம் அல்ல). தொழில்களில் பயிற்றுவித்தலும், கொடுக்கல் வாங்கல்களை

நெறிப்படுத்துதலும் தற்போதுகூட சாதி சமுதாய அமைப்புகள் மூலம் செயல்பட்டு வருகின்றன. இதனில் சிலவற்றை நாம் கண்ணுறுவோம்.[3]

அ) ரெட்டியார் சமுதாயத்தினரின் ஹோட்டல்கள் ஆரியபவனாகவும், வசந்த பவனாகவும், அசோக் பவனாகவும் தமிழகமெங்கும் விரிந்து கிடப்பதைக் காணலாம். இத்தகைய ஹோட்டல்கள் 40-50 ரெட்டியார்களால், ஒரு குழுமமாய்ச் சேர்ந்து நடத்தப்படுகின்றன. ஒருவர் அல்லது இருவர் மட்டுமே நிர்வாகத்தைக் கவனிக்கின்றனர். லாபம் ஆண்டிற்கு ஒருமுறை முதலீட்டின் அடிப்படையில் பிரித்து வழங்கப்படுகின்றது. தொழிலில் ஏற்படும் நிர்வாக - முதலீட்டுப் பிரச்சினைகள் சமுதாயப் பெரியவர்களால் தீர்த்து வைக்கப்படுகின்றன.

ஆ) திருப்பூர் பனியன் தொழிலும், திருச்செங்கோட்டில் அமைந்துள்ள கிணறு துளையிடும் கருவித் தொழிலும், சங்ககிரி போக்குவரத்துத் தொழிலும், நாமக்கல் கோழிப்பண்ணைகளும் நம்பிக்கையின் அடிப்படையில் சாதிய அமைப்புகளின் ஒத்தாசையுடன் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றது. இத்தொழில்களில் தற்போது ஈடுபட்டுள்ளவர்கள் பலர் முன்னாள் விவசாயிகள் (கவுண்டர் சமுதாயத்தினர்) என்பது குறிப்பிடத்தக்கது.

இ) வைர வியாபாரம் - சூரத் - குஜராத் மாநிலம்:

குஜராத் மாநில சூரத் நகரில் வைரத்தொழிலில் தற்போது சாதனை படைத்து வருபவர்கள் காபின் படேல் சமுதாயம். ஐம்பது வருடத்திற்கு முன்புவரை இச்சமுதாயம் வேளாண்மையே நம்பி வாழ்ந்து வந்தது. ஆனால் இன்றைக்கு இந்தியாவில் நடைபெறும் 40 ஆயிரம் கோடி பெருமான வைர வியாபார வணிகம், இச்சமுதாயத்தின் மூலமே நடைபெறுகின்றது எனலாம். வைரத்தினைப் பட்டை தீட்டுவதற்கு வழங்குவதும், திரும்ப பெறுதலும் கடன் கொடுத்தல், வாங்குதலும் நம்பிக்கையின் அடிப்படையில் சமுதாய பெரியவர்களின் மேற்பார்வையில் நடைபெறுகிறது.

இவற்றிலிருந்து இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தை இனி எந்த சக்தியும் தடுப்பதற்கில்லை என வலிந்து குறிப்பிடப்படுகின்றது.[4]

9:4. மேற்கத்திய நாட்டின் சீரழிவு - ஸ்பெயின் நாட்டின் உதாரணம்

மேலை நாடுகளில் அதிகமாகப் பயன்படுத்தவது மூன்று பழமொழிகள் 'கர்த்தரை நம்புகிறவனே செழிப்பான். இந்த காரியம் கர்த்தரால் வந்தது', 'உன்னைச் சகல ஜாதிகளை விடச் செழிக்கவைப்பான்' என்பதே அப்பழமொழிகள். தங்களது செல்வச் செழிப்பையும் காலனியாதிக்கத்தையும் வளர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்த பிரிட்டிஷ் கிறித்துவ ஆட்சியாளர்கள் இந்தியாவில் தங்களது காலைப் பதித்த பின்னரே, அவர்களுக்கு எதிராக இந்தியாவில் ஆன்மிக பலத்தை மக்களுக்கு வழங்கும் ஒரு பெரும் இந்து சமயம் இருப்பதை அறிந்தனர். அதனைப் பின்பற்றி இவர்கள் தங்களது கிறித்துவ சமுதாயத்தைச் சற்றுச் சீரமைக்கத் தொடங்கினர். அவற்றில் முதன்மையானது பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தங்கள் நாட்டில் சட்ட பூர்வமாகத் தடுத்து நிறுத்தியது. எனினும் மேற்கத்திய நாடுகளில் இச்சட்டம் ஆண் பெண் உரிமைப் பிரச்சினையாகத்தான் உருவாகி உள்ளதே தவிரப் பெண்மைக்குப் பெருமை அளிக்கக் கூடிய, அதாவது பெண்மையையும், தாய்மையையும் உயர்வாகக் கருதும் மேன்மையான மனித சிந்தனையை அவர்களிடம் உருவாக்கவில்லை. பெண்மையைப் போற்றும் முயற்சிகள் கூட இதுவரை அந்நாடுகளில் தொடங்கப்படவில்லை. மொத்தத்தில் பெண்ணுக்குச் சம உரிமை இருந்தாலும் பெண்களுக்குத் தாய்மை எனும் தனி மரியாதையோ, மதிப்போ அந்த சமுதாயத்தில் இன்றுவரை இல்லை. காரணம் என்ன? ஒரு சில ஐரோப்பிய நாடுகளின் வரலாற்றைக் கண்ணுற்றால் இதற்கான காரணத்தைப் புரிந்து கொள்ளலாம்.

ஐரோப்பிய நிலப்பகுதியில் அமைந்துள்ள குட்டி நாடுகளில் ஒன்று ஸ்பெயின். இது ஒரு கத்தோலிக்கக் கிறித்துவ நாடு பெண்களை அடிமையாக நடத்தி அவர்களை மந்திரவாதிகள் எனத் தீயிலிட்டுக் கொளுத்திய முதல் உலக நாடும் இதுவே. திருச்சிலுவை யுத்தத்தையும், கிறித்துவ மதத்தை நம்பாதவர்கள் மீது சமய விசாரணை நடத்தித் தன்

மதத்தைச் சாராதவர்களைப் பொசுக்கியதில் முன்னின்ற ஐரோப்பிய நாடும் இதுவே. புரையோடிப்போன மதப் பிரச்சினைகளால் மூச்சுத் திணறிய ஸ்பெயின் மக்கள், இஸ்லாமிய படையெடுப்பையும் அதன் ஆட்சியையும் கிபி. 711ல் இரு கை நீட்டி வரவேற்றனர். எனினும் இஸ்லாமிய ஆட்சி, சில தவறுகளால் 1492ல் இறுதியாகத் தோல்வியுற்றது. யுத்தத்தினால் சீரழிந்தபின் இந்நாடு மத வாத கொடுங்கோலர் களின் கூடாரமாக ஆனது. இதனை முன்பே கண்ணுற்றோம்.

ஸ்பெயின் நாடு தற்போது சமுதாயக் கொடுமைகளின் உறைவிடமாக மாறி விட்டது. உலகிலே படித்த பெண்கள் அதிகமுள்ள இந்நாட்டில், எங்கும் இல்லாதவாறு பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் அதிக அளவில் உள்ளனர். ஆனால் பெண்களுக்கெதிரான வன்முறையும், கொலைகளும் இந்நாட்டில் அதிகம். மூன்றில் ஒரு திருமணம் விவாகரத்தில் முடிகின்றது. இங்கு 54 சதவிகித ஆண்கள் மட்டுமே திருமணம் செய்து வாழ்கின்றனர். தகப்பன் இல்லாத குழந்தைகள் அதிகம். கல்வி கற்போர் தற்போது குறைந்து குற்றவாளிகள் பெருத்து விட்டனர். இந்நாட்டின் பெரும்பாலான பெண்கள் ஆண்களுடன் திருமணம் செய்யாமலே வாழ்கின்றனர். திருமணம் செய்யாமல் வாழும் ஆண்களால் பெண்கள் உதைபடுகின்றனர். இது திருமணம் செய்யாத வாழ்க்கைமுறை என்பதால் பெண்களால் புகார் அளிக்க முடியவில்லை. பாம்பின் வாயில் அகப்பட்ட தவளை போன்று பெண்கள் உயிர் வாழ்கின்றனர். காலனி ஆதிக்க ஆட்சியும் அடிமை வியாபாரமும் தற்போது முடிவுக்கு வந்து விட்டதால் பொருளாதார பிரச்சனையில் சிக்கித் தற்போது இந்நாடு வருமானம் குறைந்து தவித்து வருகின்றது. கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான், உன்னைச் சகல ஜாதிகளைவிடச் செழிக்க வைப்பேன் எனும் (Prosperity theology based on faith) கர்த்தரின் வாக்கு தத்தம் தோல்வியில் முடிவுற்றது. நாட்டின் வடமேற்குப் பகுதியிலுள்ள கட்டோலினியா (Catalonia) மாநிலம் தனிநாடு கேட்டும் போராடி வருகின்றது. கொடூரமான இந்நாடு தற்போது இந்தியா வழங்கியுள்ள கடன் உதவியால் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இந்நாட்டின் ஆண் பெண் திருமண உறவையும், பெண்மையைப் போற்றும் தன்மையையும் சகிப்பு தன்மையையும் வளர்க்க கத்தோலிக்க

சமய குருக்களால் இன்று வரை முடிய வில்லையே. புனித பவுல் அடிகளாரின் சமயக் கொள்கையே இதற்கான காரணம் எனப் பல உலக அறிஞர்கள் கூறியுள்ளனர். அவற்றைக் கண்ணுறலாம்.

பகுதி - 10

நவீன கிறித்துவம்

பகுதி : 10 பொருள்

பக்கம்

10.1 இந்தியாவில் நவீன கிறித்துவம் 423

10.2 பவுல் ஸ்தாபித்த கிறித்துவம் - உலக தலைவர்கள் கருத்துகள் 433

10.3. இந்து - கிறித்துவ சமயம் ஒப்பீடு 436

10.4 கிறித்துவத்தின் தற்போதைய நிலவரம் 438

10.5 இந்தியா யேசுவுக்கே 442

10.6 மேற்கத்திய பிரச்சினைக்குக் கிழக்கத்தியத் தீர்வு 459

10:1. இந்தியாவில் நவீன கிறித்துவம் (Paulin Christianity)

தற்போது உலகளாவிய அளவில் பரந்து விரிந்திருப்பது புனித பவுல் அடிகளாரின் போதனையின் அடிப்படையிலான கிறிஸ்துவ சமயம். இதனை Pauline Christianity என அழைக்கின்றனர். தற்கால கத்தோலிக்கம், புரொட்டஸ்டன்ட், செவன்த் டே அட்வன்டிஸ்ட், பெந்தேகோஸ்தே ஆகிய அனைத்துக் கிறித்துவப் பிரிவும் பாலின் கிறித்துவ நம்பிக்கையிலிருந்து பிறந்தவையே. மற்றொன்றான ஜெருசலேம் கிறித்துவம் அன்னை மரியா காலத்திலே வழக்கொழிந்து கி.பி. 180 வாக்கில் முற்றிலுமாக அழிந்தது.

புனித பவுல் அடிகளார், வழிபடும் முறையை, இயேசுவின் மாமிச உடலுக்குப் பதிலாகப் பரிசுத்த ஆவி பக்கமாகத் திருப்பினார்.[1] பரிசுத்த ஆவியுடன் அவர் தினசரி உறவு வைத்துள்ளதாகவும் கூறினார். எனவே பவுல் அடிகளாரின் காலத்திலிருந்தே கிறித்துவம் பரிசுத்த ஆவியை வழிபடுதலுக்கு மட்டுமே பிரதான இடம் வழங்கின.[2] ஆதி கிறித்துவ பக்தர்களும் தங்களது வழிபாட்டிற்குப் பரிசுத்த ஆவியையே உபயோகப்படுத்தினர். அவர்கள் ஆங்காங்கே ‘எழுப்புதல்’ கூட்டங்களை நடத்தினர். பக்தர்கள் பலரும் பரிசுத்த ஆவியால் கட்டுண்டு அந்நிய பாஷை பேசினர். அந்நிய பாஷை பேசிய நிகழ்ச்சியைத் தங்கள் வீட்டுத் திருமணம் போல் நடத்தி மகிமைப்படுத்தினர் (சமீபகாலம் வரை - 1980ம் ஆண்டு வரை, இத்தகைய அந்நிய பாஷை பேசும் நிகழ்ச்சிகள்பல இந்தியாவிலும் நடைபெற்று வந்தன). எனினும் பவுல் அடிகளார் காலத்தில் சுவிசேஷங்கள் தோன்றவில்லை. இயேசுவின் பிறந்த நாளோ அல்லது இறந்த நாளோ யாரும் அறிந்திருக்கவில்லை. இச்சமயப்பிரிவிற்கு வாழ்க்கைத் தத்துவங்களோ, வழிபாட்டு முறைகளோ ஏற்படுத்தப்படவில்லை. எனவே பவுல் அடிகளாரைப் பின்பற்றிய புறசாதிகளான கிரேக்கர்களும், ரோமானியர்களும் தங்கள் வழிபாட்டுக்கெனப் பல்வேறு வகையான சுவிசேஷங்களை எழுதிக் கொண்டனர். தற்போதைய சுவிசேஷங்கள்

எவையும் இயேசுவின் காலத்தில் பாலஸ்தீனத்திலும் எழுதப்படவில்லை. எனவே அவை எவையும் இயேசுவின் பேச்சு மொழியான அரமிக் மொழியில் எழுதப்படவில்லை. அக்காலத்தில் பாலஸ்தீனத்தில் புழங்கி வந்த எப்ரு (Hebrew) மொழியிலும் எழுதப்படவில்லை. ஆனால் ஜெருசலேம் குழுவினர் பின்பற்றிய சுவிசேஷங்கள் அரமிக் மற்றும் எப்ரு மொழியிலிருந்தன. ஆனால் அவை பரிசுத்த ஆவியால் எழுதப் பட்டதாக அங்கீகரிக்கப்படவில்லை. பாலின் கிறித்துவ சமயத்தினரின் சுவிசேஷங்கள், யூதர்களின் புற ஜாதியினரான கிரேக்க நாட்டினரின் கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளது.

கடந்த 600 வருடமாக இந்தியாவில் கிறிஸ்துவ சமயம் பரப்பப்பட்டு வருகிறது. எனினும் அச்சமயம், மக்கள் முன் இன்னும் பிரபலமாகவில்லை. எனவே இந்து சமயத்தினர் போன்று இறைவனை முன் நிறுத்திப் பிரச்சாரம் செய்தால்தான் கிறிஸ்துவமும் இந்தியர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் பவுலின் பரிசுத்த ஆவி கொள்கை உதவாது எனவும் கிறிஸ்துவ சமயப் பணிவிடையாளர்கள் தற்போது நம்புகின்றனர். எனவே இந்திய கிறிஸ்தவர்கள் பவுல் அடிகளாரின் உருவமற்ற பரிசுத்த ஆவி கொள்கையை முன்னிலைப்படுத்தத் தயங்கி வருகின்றனர். யேசுவின் மாமிச உருவத்தை முன்நிறுத்து கின்றனர். உருவ வழிபாடு கூடாது எனும் கொள்கையையும் காற்றில் பறக்கவிடுகின்றனர்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உருவகப்படுத்தும் தலைப்புகள் சிலவற்றைக் கீழே பார்க்கலாம்.

1.	இயேசு கிறிஸ்து கர்த்தர்	பிலி. 2:11
2.	கர்த்தர் பரிசுத்தர்	ஏசா. 6:3
3.	அவர் சர்வவல்லமையுள்ள தேவன்	ஆதி. 17:1-3
4.	திட்டமிடும் தேவன்	யோபு. 37:5, 14, 15
5.	நம் சந்ததியின் தேவன்	ஏசா 54:13, 59, 21
6.	பூரண சற்குணர்	மத் : 5:45, 48
7.	பாவி மீது பாசமுள்ள பரமபிதா	மார்க் 10: 21, 22
8.	பெலப்படுத்துகின்ற இயேசு	பிலி 4: 13
9.	பொய்யுரையாத தேவன்	I சாமு 15:29
10.	மனதுருக்கும் தேவன்	ஏசா 54 : 10
11.	முன்செல்லும் கர்த்தர்	மீகா 2:13

12.	வழிகாட்டும் கர்த்தர்	நீதி 22:22, 23
13.	வானபிதா	I கொரி 8:6
14.	விட்டு விலகாத கர்த்தர்	யோசுவா 1:5
15.	வீட்டைக் கட்டும் கர்த்தர்	சங் 127 : 1
16.	வீட்டைக் கலக்கும் கர்த்தர்	நீதி 15 : 25

இவ்வசனங்கள் அனைத்திலும் இயேசு மாமிச வடிவில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளாரே தவிர பவுல் அடிகளார் பிரசங்கித்த உருவமற்ற பரிசுத்த ஆவியோ அல்லது இயேசுவின் போதனைகளோ இடம் பெறவில்லை என்பது நோக்கத்தக்கது.

இயேசுவின் படங்கள் மேற்கூறப்பட்டுள்ள வசனங்களுடன் அச்சிடப்பட்டு இந்தியாவின் மூலை முடுக்குகள் எல்லாம் ஒட்டப்படுகின்றன.

பரிசுத்த ஆவியைப் பிரபலப்படுத்துவதற்குப் பதில் இயேசுவின் பூத உருவத்தை முன் நிறுத்தும் உத்தி கிறிஸ்தவர்களால் 1980ம் ஆண்டு தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற கிறிஸ்துவ மாநாட்டில் இறுதிசெய்யப்பட்டது. இம்மாநாட்டில் மதமாற்றம் பற்றிக் கீழ்க்கண்ட தலைப்புகளில் விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன.

1. இந்துக்களிடம் கிறிஸ்துவம் சென்றடைய எளிமையான வழிகள் யாது?

2. இந்துகளை மதம்மாற்ற பைபிள் தத்துவங்களை எவ்வாறு முன்வைக்க வேண்டும்?

3. மதமாற்றுவதற்குப் பின்பற்ற வேண்டிய புதிய விவாத தலைப்புகள் யாவை?

4. வெளிநாடுகளில் பணிபுரியும் கற்றறிந்த பணக்கார இந்துக்களை மதம்மாற்றிடப் பின்பற்ற வேண்டிய தந்திரங்கள் யாவை?

இம்மாநாட்டில் கீழ்க்கண்ட வசனங்களை, மதம் மாற்றத்தின் பொருட்டு அதிகமாக உபயோகப்படுத்த வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

1. யேசுவை நம்புகிறவனே செழிப்பான். யேசுவின் தந்தையாகிய யெகோவாவை நம்புகிறவனே செழிப்பான் என்பது, கர்த்தரை நம்புகிறவன் என்றாகி, யேசுவை நம்புகிறவன் செழித்து விடுவான் என்றாகிவிடடது. (Prosperity

Theology in Faith Tradition *பார்க்கவும் பக்கம் 194* - Strong Religion Zeolus Media by Pradip Ninan Thomas - Sage Publication, Queensland (2008).

(இயேசுவின் மீதான நம்பிக்கையால் ஒருவன் பணக்காரன் ஆக முடியும் என்பது)

2. மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபத்திலிருக்கின்றது மத். *3: 23, 4:17*

(மனந்திரும்பினாலே போதும் என்பது)

3. வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே என்னிடம் வாருங்கள் மத். *11: 28.*

(வேதக்கோவிலுக்குப் போனாலே இரட்சிப்புக் கிடைத்து விடும் என்பது)

4. இயேசுவின் இரத்தம் ஜெயம்.

(இயேசு சிலுவையில் தன் இரத்தத்தைச் சிந்தி நம்மை இரட்சித்து விட்டார். எனவே இனி நீ இவ்வுலகில் வெற்றி பெற எதையும் செய்யலாம் என்பது)

5. என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்.

6. நீ என்னைப் பின்பற்றி வா. மத் *8:22*

(இயேசு நடந்த பாதையில் நடந்தால் போதும் இரட்சிப்புக் கிடைத்துவிடும் என்பது)

7. நீ என்னை விட்டு விலகுவதில்லை. எரோ. *3:19*

எனினும் நவீன கிறித்துவம் பல சத்தியங்களைத் தள்ளுபடி செய்துவிட்டது. தள்ளுபடி செய்யப்பட்ட பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் முதன்மையான சில வாக்கியங்களைக் கீழே காணலாம்:

1. உங்கள் தலைமயிரைச் சுற்றி ஒதுக்காமலும், தாடியின் ஓரங்களைக் கத்தரிக்காமலும் (முழுமையான தாடியுடன்) இருங்கள். லெவி *19:27.*

2. ஓய்வு நாளில் (ஞாயிற்றுக் கிழமையில்) உன் வாசஸ்தலத்தில் நெருப்பு மூட்டக் கூடாது (சமைக்கக் கூடாது) யாத் *35:3*

3. கர்த்தர் கூறியதாவது நான் ஏற்படுத்தியுள்ள ஒரே மேய்ப்பன் (கடவுள்) தாவீது - வேறு மேய்ப்பர்கள் இல்லை. 'நீர் என்னுடைய குமாரன்' சங்கீதம் *2:7*

4. ஆண் பிள்ளைகளின் நுனித் தோலை பிறந்த 8ம் நாளில் விருத்தசேதனம் பண்ண வேண்டும். ஆதி 17:11-13

5. தேவனால் பூமிக்கு அனுப்பப்பட்டவன் யோவான் மட்டுமே (இயேசு அல்ல). யோவான் 1:6

6. ஆபிரகாம் சந்ததிக்கு மட்டுமே இரட்சிப்பு உண்டு. (புற ஜாதியினருக்கு இரட்சிப்புக் கிடையாது) லூக்கா 19:9

இவற்றைத் தவிரத் தற்கால கிறித்தவம் கண்டு கொள்ளாத பல முதன்மையான சத்தியங்களும் உள்ளன. அவற்றுள் சில:

1. விவாகம் பண்ணாதிருக்கவும். - I தீமொத்தேயு 4:2

2. உனக்குக் குழந்தைகளும் வேண்டாம். - எரே 16:2

3. சித்தப்பன், பெரியப்பன் மகனை / மகளைத் திருமணம் செய்யலாம். - எண் 36:11

4. கன்னிகை பெற்ற குமாரன் பெயர் இம்மானுவல். (யேசு அல்ல) - மத் 1:23

5. என் பிறந்தநாள் (கிறிஸ்துமஸ்) சபிக்கப்படுவதாக, என் தாயார் என்னைப் பெற்ற நாள் ஆசீர்வதிக்கப் படாதிருப்பதாக - எரே 20:14

6. நான் பிறந்தது வெட்கமாய்க் கழிகின்றது. - எரே 20:18

7. நான் உலகை நியாயம் தீர்க்க வரவில்லை (நியாயத் தீர்ப்பு உலகிற்குக் கிடையாது) - யோவான் 12:47

உபயோகப்படுத்தாத அல்லது பொய்த்துப் போன சத்தியங்கள் சில:

1. என் பெயர் யேகோவா - எரே 16:21

(இதன்படிக் கடவுளின் பெயரை இயேசு, கிறிஸ்து, கர்த்தர், தேவன், ஆண்டவன் என அழைப்பது தேவகுற்றமாகும். இவ்வார்த்தைகள் கிரேக்க பைபிளில் காணப்படாதவை).

2. ஆபிரகாம் சந்ததியினர் (யூதர்கள்) யாருக்கும் அடிமையாய் இருந்ததில்லை - யோவான் 8:33 (பல தலைமுறைகளாக, கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட யூத சமுதாயம் எகிப்து, ரோமானிய, பாபிலோனிய அரசர்களுக்கு அடிமையாய் இருந்துள்ளனர்).

3. வாத்தியக்காரர்கள் சத்தமும், தொழிலாளியின் சத்தமும் எந்திரத்தின் சத்தமும் இனிக் கேட்கப்படுவதில்லை. விளக்கொளி உன்னிடம் பிரகாசிப்பதில்லை - வெளி 18:22, 23

4. இனி ஜலபிரளயம் கிடையாது. - ஆதி 9:11, 9:15

(கிபி. 2004ம் ஆண்டில் கூட ஜலபிரளயம் - சுனாமி வந்தது)

5. உங்கள் ஆண்களிலேனும், பெண்களிலேனும் மலடிருப்பதில்லை - உபா. 7:14)

(கிறித்துவர்களில் பலர் குழந்தையில்லாமல் உள்ளனர்)

6. கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு நீக்குவார் - உபா 7:15

(கிறித்துவர்களில் சிலர் எல்லோரையும் போன்றே நோயுடன் உள்ளனர்)

7. எத்தியோப்பியர்கள் கொலை செய்யப்படுவார்கள். - செப்பானியா 2:12

8. எருசலேமில் பாலும் தேனும் ஓடும் - யோவேல் 3:18

9. பரலோக ராஜ்யம் சமீபத்தில் இருக்கிறது. - மத் 4:17

வருகிறவர் இன்னும் கொஞ்சகாலத்திலேயே வருவார் தாமதம் பண்ணார். - எபி 10:37

கர்த்தரின் நாள் சமீபத்திலிருக்கிறது. - யோவான் 3:14

(கர்த்தரோ, யேசுவோ, பரலோக ராஜ்ஜியமோ கடந்த 2000 ஆண்டு கடந்த பின்னும் இன்னும் வந்தபாடில்லை).

பரிசுத்த வேதாகமத்தில் எதிரும் புதிருமாகப் பல சத்தியங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவைகளில் சில.

1. புற ஜாதி நாடுகளுக்குப் (சமயத்தை பரப்ப) போக வேண்டாம். - மத் 10:5, 6, 15:24

எதிர்: நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீடர் ஆக்குங்கள், ஞானஸ்தானம் கொடுங்கள் - மத் 28:19

2. நீ பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய், வெளியிலும் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பாய் - உபா 28:3

எதிர்: நீ பட்டணத்திலும் சபிக்கப்பட்டிருப்பாய், வெளியிலும் சபிக்கப்பட்டிருப்பாய் - உபா 28:16

3. உன் கட்டையும், மாபிசைகின்ற உன் தொட்டியும் ஆசிர்வதிக்கப்பட்டிருக்கும் - உபா 28:5

எதிர்: உன் கட்டையும், மாபிசைகின்ற உன் தொட்டியும் சபிக்கப்பட்டிருக்கும். - உபா 28:17

4. நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். நீ போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் - உபா 28:6

எதிர்: நீ வருகையிலும் சபிக்கப்பட்டிருப்பாய். நீ போகையிலும் சபிக்கப்பட்டிருப்பாய். - உபா 28:19

5. கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் உன்னை ஆசீர்வதிப்பார் - உபா 28:8

எதிர்: நீ சுதந்திரிக்கும் (வாழும்) தேசத்தில் கர்த்தர் உன்னை நீர்மூலம் ஆக்குமட்டும் கொள்ளை நோய் உன்னைப் பிடித்துக் கொள்ளப் பண்ணுவார் - உபா 28:21

இதனைத் தவிர கர்த்தர் தன் மக்களை எவ்விதம் அழைக்கின்றார், பார்க்கலாம்?

மாயக்காரர்களே!	மத் 7:5, 15:7, 22:18, 23:5
அற்ப விசுவாசிகளே!	மத் 6:30
பொல்லாதவர்களே!	மத் 7:11
அக்கிரம செய்கைக்காரரே!	மத் 7:23
விரியன் பாம்புக் குட்டிகளே!	மத் 12:34
சர்ப்பங்களே!	மத் 23:33
பொல்லாத விபச்சார சந்ததியினரே!	மத் 12:39
மதிகேடரே, குருடரே!	மத் 23:17

கர்த்தர் உலக மக்கள் அனைவருக்கும் வழங்கிய சாபங்களில் சில:

* சாகவே சாவாய் ஏசேக்கியல் 1:18

* உங்கள் பிரேதங்கள் இந்த வனாந்திரத்தில் விழும். - எண் 14:32

* இங்கே சாவார்கள் - எண் 14:35

* உன் வம்சத்தில் உள்ளவர்கள் எல்லாம் வால வயதில் சாவார்கள் - I சாமுவேல் 2:33

* நீ சமாதானத்தோடு உன் கல்லறையில் சேர்வாய் - II ராஜாக்கள் 22:20

* நீங்கள் செய்கின்ற காரியம் நல்லதல்ல - நேகேமியா 5:9

* இந்தச் சபையை விட்டு விலகிப் போங்கள் - எண் 16:45

* என் சுவாசம் ஒழிகின்றது. என் நாட்கள் முடிகின்றது, பிரேத குழி எனக்கு ஆயத்தமாய் இருக்கின்றது - யோபு 17:1

* நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன் - எசயா 1:15

* இந்த ஜனத்திற்காக, நன்மை உண்டாக விண்ணப்பம் செய்ய வேண்டாம் - எரோமியா 14:11

* குடிகளையும், மனிதரையும் சங்கரிப்பேன் - எரோ 21:6

* புருஷனையும், ஸ்தீரியையும், கிழவனையும், இளைஞர்களையும், வாலிபர்களையும், கன்னிகையையும் நொறுக்குவேன். - எரோ 51:22

* எழுந்திருந்து போங்கள், இது நீங்கள் இளைப்பாறும் இடம் அல்ல, இது தீட்டுப் பட்டது. இது உங்களை நாசப்படுத்தும். - மீகா 2:10

* தேவனைச் சேவிப்பது விருதா - மல்கியா 3:14

* கர்த்தரின் வாசஸ்தலத்தின் கிட்டே வருகிற எவனும் சாகிறான் - எண் 17:13

நவீன கிறித்துவம் இவ்வாறான கருத்துகளைக் கொண்டு பல்வேறு முரண்பாடான சத்தியங்களில் சிக்கித் தவிக்கின்றது.

குழப்பமான இவ்வேத வசனங்கள் மனிதனை வேதத்திலிருந்து பிரித்தது. கர்த்தரை நம்பாதவர்கள் சாத்தானின் பிள்ளைகள் எனும் தத்துவத்தின் மூலம் மனிதனை, மனிதனிடமிருந்து பிரித்தது. இறைவன், மனிதனுக்கு வெளியே மேகத்திடையே பரமண்டலத்தில் இருக்கின்றார், வானுலகில் வாழ்கின்றார் என்ற தத்துவத்தின் மூலம் மனிதன் கடவுளிடமிருந்தும் பிரிக்கப்பட்டான். இதனைப் பற்றி பால் சி ஜோங் எனும் கொரிய நாட்டு கிறிஸ்துவர் அங்கலாய்ப்பதைப் பார்க்கலாம்:

1. 'இயேசுவானவர் அவரைப் பின்பற்றுவோரை உலகின் வெளிச்சம் என்றார். ஏனெனில் இயேசுவால் மட்டுமே கொடுக்கக்கூடிய வெளிச்சத்தை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். ஆனால் இக்காலத்தில் கிறித்துவர்களிடம் இவ்வெளிச்சம் இல்லை.'

2. 'இதன் பலனாகக் கிறித்துவம் வெறும் மதமாகி விட்டது.'

3. இக்காலத்தில் அதிகப்படியான கிறித்துவர்கள் உலகில் வாழ்ந்தாலும் அவர்கள் அனைவரும் இரட்சிக்கப் பட்டவர்கள் இல்லை. வேதாகமத்தை அவர்கள் படித்தாலும், உண்மை அவர்களை எட்டுவதில்லை. அவர்கள் மதம் தரும் கபட வாழ்வினில் உருண்டு புரள்கின்றனர். அவர்கள் மனம் பேதமையிலும் குழப்பத்திலும் ஆழ்ந்திருக்கின்றது.

4. 'இச்சீரழிவு, வேதபோதனைகளில் காணப்படும் தவறுகளில் முளைவிட்டது. கிறித்துவ மத வரலாற்றில் அவ்வப்போது இருந்த மதகுருக்கள், மாமிசத்தின் படியும், அவர்கள் மனசிந்தனைபடியும் கடவுளின் வார்த்தைகளை எழுதினர், போதித்தனர். கிறித்துவின் சபையில் பிரிவினைகளை உருவாக்கி, அவர்களின் போதனையை ஏற்றுக் கொள்ளும் குழுக்களை அவர்கள் ஆண்டனர். அவர்கள், தவறான போதனைகளைச் சரி என்று வாதித்தனர். பொதுவாக அறியப்படும் வேதபோதனைகளைக் குறித்து இம்மதகுருக்கள் அவர்களைப் பின்பற்றுவோரைப் பயிற்றுவித்தனர். போலி மனிதர்கள் தங்களைக் கடவுள் போல் காட்டி கொள்கின்றனர். ஆனால் அவர்களிடம் வல்லமை இல்லை (2 தீமோத்தெயு 3:5). எவ்வளவு அழகாகக் கடவுள்போல் அவர்கள் காட்சியளிக்கிறார்கள். கிறித்துவம் 'கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கின்றது (மத்தேயு 23:25)'. முறை தவறிய இக்கிறித்துவம் நல்லதுபோல் காட்சியளிக்கின்றது. இது நன்மையை நாடுவோரை மனம் கலங்கச் செய்கின்றது. அவர்கள் இயேசு சிலுவையில் சிந்திய இரத்தம் பாவங்களைக் கழுவிவிடுவதாக வாதிடுகிறார்கள். இது ஒரு பொய்ச் செய்தியாகும். ஆகவே, கிறித்துவம் இன்று மங்கிப்போய் உண்மையிலிருந்து வழுவிப் போய்க் கொண்டிருக்கிறது.'

அத்துடன் இயேசு கிறிஸ்து மக்களிடையே தெரிவித்த பல கொள்கைகள் நவீன கிறித்துவத்தால் மறைக்கப்பட்டு விட்டன அவையாவன:

1. கடவுளை நேசி புற ஜாதியினரையும் அதுபோலவே நிபந்தனைகள் யாதுமின்றி நேசி (யோவான் 13:34, 35). புற ஜாதியினரைச் சாத்தான், பேய், பிசாசு, சாத்தான் பிள்ளைகள் என நிந்திப்பது மனப்பூர்வமாக நிறுத்தப்பட வேண்டும் என்பது.

2. மற்றவர்களிடம் குறைகள் காண்பதை நிறுத்திவிடு, முதலில் உன் குறைகளைக் கவனி.

‘உன் கண்ணிலிருக்கின்ற உத்திரத்தை எடுத்துப்போட்ட பின் உன் சகோதரன் கண்ணில் உள்ள தூசியைப் பற்றி நினை’ - மத் *7:3-5*

3. எல்லோரிடமும் அன்பு கூறு, வாழ்க்கையில் ஏற்படும் தவறுகளை மன்னித்து விடு - யோவான் *8:3-6*

4. நான் உன்னைக் குறை கூறமாட்டேன், தவறுகளின்றி இனியாவது வாழ்ந்து விடு. - யோவான் *8:10-11*

இயேசு கிறித்துவின் இத்தகைய நற்கொள்கைகள் ஏற்கப்பட்டிருந்தால் (ஜெருசலம் குழுவினரின் கிறித்துவம் ஏற்கப்பட்டுப் புனித பவுலின் தத்துவங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தால்) கடந்த 2000 வருடகாலம் மனித குலத்திற்கு பெரும் பயனுள்ளதாய் இருந்திருக்கும், மக்களும் ஒருவருக்கொருவர் உதவியாய் இருந்திருப்பார். மக்களிடையே போட்டி, பூசல், மற்றவர்களை அழித்தல் ஆகியன நடந்திருக்காது. உலகம் முழுவதும் ஓர் ஒப்புரவான சமுதாயம் உருவாகியிருந்திருக்கும். மக்கள் இறைவனை அடைந்திட அவரவர்களுக்கு வசதியான வழிமுறைகளைப் பின்பற்றியிருப்பர். மனிதர்கள் இறைவனிடம் இன்னும் நெருங்கி இருப்பர். பிரார்த்தனை, ஆழ்நிலை தியானம், இறைவனை உள்ளுணர்தல், நியாய செயல்கள் ஆகியவை மலிந்திருக்கும். மற்றச் சமயத்தினரின் வழிபாட்டு முறைகள் ஆழ்ந்து உணரப்பட்டிருக்கும். வெள்ளையர்களைத் தவிர மற்ற மக்களும் மனிதனாய் மதிக்கப்பட்டிருப்பார்கள். பூமியில் சமாதானம் நிலைத்திருந்திருக்கும். மக்கள், இறைவனை உணர சங்கீதத்தையும், நடனத்தையும், ஆடல் பாடல்களையும் உலகளாவிய அளவில் ஏற்றுக் கொண்டிருப்பர். சிலர் இறைவனை ஐந்து வேளை தொழுவதையும், உருவ வழிபாட்டையும், அங்கீகரித்து ஒருவருக்கொருவர் இணைந்திருக்கக்கூடும். பலவிதமான வழிகளில் கடவுளை வணங்குவது மக்களின் இயல்புகளை வெளிக்காட்டுகிறதே தவிர இறைவனின் தன்மைப் பற்றி அல்ல எனும் தத்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும். மக்கள் இறைவனை வணங்கும்விதம் வேறுபட்டால் என்ன? இறைவன் ஏற்றுக் கொள்ள மாட்டானா என்ன?, எனும் கொள்கைகள் மலர்ந்திருக்கும். காலனி ஆதிக்கமும், அடிமை வியாபாரமும் பல கற்பழிப்பும், கொலைகளும் நடந்திருக்காது. உலகளாவிய

யுத்தமும், பனிப்போரும், இராணுவ ஆயுதங்கள் தயாரிப்பும் நடந்திருக்காது. எனவே 16, 17ம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில் புரட்சி அதற்குப், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டிருக்கக் கூடும். மனிதகுலம் இன்னும் மேம்பட்டதாய்த் தற்போது இருந்திருக்கும்.

நான் வணங்கும் தெய்வம் மட்டுமே உண்மை. நான் வணங்கும் முறை மட்டுமே சரியானது. நாங்கள் மட்டுமே தேவனின் பிள்ளைகள் என்பதின் மூலமாகவே வேறுபாடுகளும், கசப்பு உணர்ச்சிகளும், பிரிவினை வாதமும் மக்களிடையே வழங்கப்படுகின்றன. இயேசுபிரான் போதித்த அன்பும், சகோதரத்துவமும் இவ்வுலகில் வளர வேண்டுமானால் புனித பவுல் அடிகளாரால் போற்றி வளர்க்கப்பட்ட அமைப்பு ரீதியான வேதகோவில்களும் அதன் நிர்வாக அமைப்பும் மாற்றப்பட வேண்டியது அவசியம். மற்றும் நவீன கிறித்துவத்தால் பிரபலப்படுத்தப்படும் சாத்தான், பிசாசு, நியாய தீர்ப்பு, நிலையான நரகம், நிலையான சொர்க்க லோகம் ஆகிய தத்துவம் மறைய வேண்டும். அப்போது மட்டுமே இவ்வுலகில் இயேசுபிரான்(?) போதித்த உண்மையான அன்பும், சமத்துவமும், சகோதரத்துவமும் மலரக் கூடும். இத்தகைய மாற்றம் அனைத்து சமய வேதங்களுக்கும் ஏற்புடையனவே. அத்தகைய கொள்கை மலர்ச்சி இயேசு பிரானின் இரண்டாவது பதிப்பாக உலக மக்கள் அனைவராலும் சமய வேறுபாடு இன்றி ஏற்றுக் கொள்ளப்படும் என்பதில் ஐயமில்லை. இது போன்ற இரண்டாவது பதிப்பின் வருகை விரைவில் நிகழட்டும். அனைவரும் எதிர்பார்ப்போமாக![3]

10:2. பவுல் ஸ்தாபித்த கிறிஸ்துவம் - உலக தலைவர்களின் கருத்துக்கள்

1. இயேச பிரானின் ஆன்மீகத்தைக் கட்டிக் காத்த ஜான், பீட்டர், இயேசு பிரானின் சகோதரர் ஜேம்ஸ், ஆகியோரின் முயற்சிகள் புனித பவுல் அவர்களால் தோற்கடிக்கப்பட்டு விட்டன. வெளிச்சத்தை இருட்டு தோற்கடித்துவிட்டது- Rev. V.A. - Holomes Gore

2. புனிதர் பவுல் கிறித்துவ சமயத்தைப் பவுல் சமயமாகத் தலைகீழாக மாற்றிவிட்டார். இயேசுபிரானின் வாழ்க்கையையும் போதனையையும் பின்பற்றச் சொல்வதற்குப் பதிலாகப் பாவ மன்னிப்புத் தத்துவம் முன்நிறுத்தப்பட்டு விட்டது. கிறித்துவ மதத்தைத் சீர்திருத்தம் செய்த மார்ட்டின் லூத்தர் அவர்களும் இதனைக் கவனிக்கத் தவறி விட்டார். இயேசுவின் போதனைகள் நான்கு சுவிசேஷங்களில் இருந்து மட்டுமே எடுத்துக் கையாளப்பட வேண்டுமே தவிர பவுல் அடிகளார் எழுதிய கடிதங்களிலிருந்து அல்ல. பவுல் அடிகளாரின் கடிதங்கள் ஆன்மீக வளர்ச்சிக்கும், சுய சிந்தனைக்கும் இடர்ப்பாடாய் உள்ளது. - சமய ஆய்வாளர் Soren Kierkegaerd - "The Journals"

3. பவுல் அடிகளார் இயேசுபிரான் போதித்த நன்னடத்தைகளைக் கிறிஸ்துவத்திலிருந்து நீக்கி, நம்பிக்கைக் கோட்பாட்டை முன் நிறுத்தியுள்ளது, உலகிற்குக் கிடைத்துள்ள பெரும் சாபம். Will Durant in his Caesar and Christ

4. கிறிஸ்துவ சமயத்திலிருந்து கிறிஸ்துவைத் தூக்கி எறிந்தவர் புனிதர் பவுல் அடிகளார். கவனம் தேவை! Robert Frost - Winner of pulitzer in his "A Mosque of Mercy".

5. தற்காலத்தில் திகழும் வேத கோவில்களை உருவாகச் செய்தவர் புனிதர் பவுல் அடிகளார். அவற்றிற்கு இயேசுபிரான் ஆலயம் என்னும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஆனால் இவ்விரண்டிற்கும் சம்மந்தம் இல்லை. - James Baldurin - in his "The Fire Next Time".

6. இயேசு பிரானின் மலைப் பிரசங்கம் பவுல் அடிகளார் முன் நிறுத்தியுள்ள கிறித்துவத்திற்கு முற்றிலும் எதிரானது. Martin Buber - Jewish Philosopher in his book " The Two Types of Faith".

7. பிதா, சுதன், பரிசுத்த ஆவி எனும் மூன்றும் ஒன்றே எனவும், ஒன்றே மூன்று எனவும் பிரசங்கித்த பவுல் அடிகளாரே இயேசு பிரான் கொள்கையை முதன்முதலாகத் துருப்பிடிக்கச் செய்து மங்கச் செய்தவர். - Thomas Jefferson, the third president of USA.

8. பவுல் அடிகளார் பிரபலப்படுத்தியுள்ள கிறித்துவத்தில் இயேசு பிரானின் போதனைகள் இல்லை. George Bernard Shaw in his book. "Androcles and the Lion"

9. கிரேக்க, கத்தோலிக்க மற்றும் புரோட்டடஸ்டன்ட், கிறித்துவ இறைத் தத்துவங்கள் பவுல் அடிகளின் சுவிசேஷத்திலிருந்து (?) எடுக்கப்பட்டுள்ளதே தவிர இயேசுபிரானின் சுவிசேஷத்திலிருந்து அல்ல. - Allbert Schweitzer in his book 'The Quest for the Historical Jesus and his Mysticism of Paul.

10. தற்கால சமயப் பூசல்களுக்கும், இறைக் கொள்கை முரண்பாடுகளுக்கும் காரணகர்த்தா பவுல் அடிகளாரே. - William Wredi in his book 'Paul'.

11. அர்த்தமற்ற வார்த்தைகளை ஒருவன் கூறலாம். ஆனால் அவற்றை ஒருவன் நம்பத் தேவையில்லை. அதுபோன்றே இறைவன் ஒரே நேரத்தில் ஒன்றாகவும், மூன்றாகவும் இருக்கிறான் எனத் தத்துவமுள்ளது. நம்பினால் இதனை நம்புங்கள் நம்பாவிட்டால் போங்கள். என்னைப் பொருத்த அளவில் இதை நான் நம்பவில்லை. - Leo Tolstoy

12. 'மந்திரவாதிகளும், சூனியகாரிகளும் உலகின் ஆரம்ப காலத்திலே இருந்ததாக வேதாகமம் கூறுகின்றது. பூமியின் முகத்திலிருந்து அவர்கள் அழிக்கப்பட வேண்டும் எனவும் வேதம் கூறுகின்றது. அவ்வாறே 900 வருட காலமாக மேற்கத்திய உலகில் நடத்தப்பட்ட வேட்டையில் கோடிக் கணக்கான அத்தகையோர் கண்டுபிடிக்கப்பட்டுத் தீயிலிட்டும், ஆணி அடித்தும் வதை செய்தும் கொல்லப்பட்டனர். ஆனால் அவ்வாறு செய்தது தவறு எனத் தற்போது கிறித்துவ சமயத்தினர் சிலர் உணர்ந்து விட்டனர். ஆனால் கொல்வதற்குக் கட்டளையிட்ட வாசகம் இன்னும் வேத புத்தகத்தில் உள்ளது. இது தவறல்லவா? அதுபோன்றே பிரைவி கவுன்சில் (Praivy Council, London) தீர்ப்பின்படியும் யேசுவை நம்பாதவர்களுக்கு 'நிரந்தர நரகம்' எனும் கொள்கையைப் பிரச்சாரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதனைப் போதிக்கும் வாக்கியங்கள் இன்னும் வேத புத்தகத்தில் உள்ளது. இன்று இந்த நாட்டில் பெண்களையும், குழந்தைகளையும்

கொல்லுவதற்குக் கொடுக்கப்பட்டுள்ள போதனை தற்போது பின்பற்றப்படவில்லை. ஆனால் வேதபுத்தகத்தில் அவை நீக்கப்படாமல் உள்ளது. இத்தகைய கபடத்தை என் என்பது Mark Twain - U.S. Author (*1835-1910*)

வேதக்காரன் யார் (கிறித்துவன் யார்)?

> **'பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளவை அனைத்தும் இறைவனின் வார்த்தைகள். அவை தனக்காகக் கூறப்படவில்லை. பக்கத்து வீட்டுக்காரனின் ஆன்மீக முன்னேற்றத்திற்காகக் கூறப்பட்டவை என நம்புகிறவனே ஓர் சுத்தமான வேதக்காரன்.'**

அதாவது 'விரியன் பாம்பு குட்டிகளே என வேதத்தில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது; அவை தன்னைச் சுட்டி காட்டவில்லை' என்றும், 'பக்கத்து வீட்டில் வசிக்கும் மாற்றுமதக்காரனுக்காக - அவனின் ஆன்மீகத் தேவைக்காகக் கூறப்பட்டுள்ளது என நம்புகிறவனே சுத்தமான கிறிஸ்தவன்'. - Ambrose Bierce (*1842-1914*), அமெரிக்க எழுத்தாளர்.

10:3. இந்து - கிறித்துவ சமயம் ஒப்பிடு

கிறித்துவ சமயம், உலக சிருஷ்டியில் ஆரம்பித்துப் பரலோக வாழ்விலும், ஆதாம், ஏவாள் கதையில் ஆரம்பித்துக் கிறித்துவின் சிலுவை ஏற்றத்திலும், இனம் புரியாத பரிசுத்த ஆவியின் விதையில் (Seed) ஆரம்பித்து எல்லையில்லாக் காலமாக இரண்டாம் வருகையை எதிர்நோக்கியும் வாழ்ந்து வருகின்றது. இந்தியாவில்தான் இச்சமயத்தின் வாழ்வும் அல்லது தாழ்வும் தீர்மானிக்கப்படும். ஏனெனில் இங்குத் தான் கிறித்துவ சமயத்தை எதிர்நோக்கும், பல வேத வாக்கியங்களும், துணை வேதங்களும் தத்துவங்களும் உண்டு. அதனுடன் ஒப்பிடுகையில் கிறித்துவ சமயம் பல சமய அங்கங்கள் இல்லாமல் இருப்பதை உணரலாம்.

இவ்விரு சமயங்களுக்குமிடையே பல தத்தவ வேறுபாடுகளும் உண்டு, அவற்றையும் பார்க்கலாம்!

	சமய அங்கங்களும் தத்துவங்களும்	இந்து சமயம்	கிறித்துவ சமயம்
1.	வேதங்கள்	உண்டு	உண்டு
2.	துணை வேதங்கள்	உண்டு	இல்லை
3.	கொள்கையின் அந்தம்	மோட்சகதி அடைதல்	நித்தியஜீவன் அடைதல்
4.	இறைவன் இவ்உலகிற்க்கு வருகை தருவதின் நோக்கம்	நல்லவர்களை பாதுகாக்க	பாவிகளை பாதுகாக்க (பாவிகளை ரட்சிக்க)
5.	இறைவனைப் பற்றிய தத்துவ நூல்கள் (உபநிஷதங்கள் போன்றவை)	உண்டு	இல்லை
6.	வேதவிரிவுரை நூல்கள்	உண்டு (பிரம்ம சூத்திரம்) போன்றவை	இல்லை
7.	நீதி நூல்கள்	உண்டு (பகவத் கீதை, திருக்குறள், மனுநீதி சாத்திரம் போன்றவை)	இல்லை
8.	இறைவனுடன் ஒன்றும் முறை	உண்டு (அறம், பொருள், இன்பம், வீடு எனும் தத்துவம்)	சொல்லப்படவில்லை
9.	சுயநீதி	வற்புறுத்தப்படுகிறது.	வற்புறுத்தப் படவில்லை
10.	இறைவனை அடையச் சாதனங்கள் (Physical process)	உண்டு (கர்ம யோகம், ராஜ யோகம், ஞான யோகம், பக்தி யோகம் போன்றவை)	இல்லை
11.	இறைவனை உணரச் சாதனங்கள்	உண்டு (யோகா, பிராணாயமம் தியானம், பூஜைகள், தீர்த்த யாத்திரை, 63 கலைகள் ஆகியவை)	சொல்லப்படவில்லை
12.	இறந்துபட்ட முன்னோர்களுடன் தொடர்பு	சிராத்தம் (திவசம்) செய்வதின் மூலமாகத் தொடர்பு பராமரிக்கப் படுகிறது	இயேசுவின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்தும்,

			முன்னோர்களைப் பூதஉடலுடன் சந்திப்பதை எதிர்பார்த்தும், கல்லறைகள் வெள்ளை யடிக்கப்பட்டு பராமரிக்கப்படுதல்.
13.	சித்தாந்தம் (இறுதி கொள்கை)	பாவத்தின் சம்பளம் மீண்டும் பிறத்தல்	பாவத்தின் சம்பளம் மரணம்

இந்து சமயத்துடன் ஒப்பிடுகையில் கிறித்துவ சமயத்திற்குத் ‘துணை போன்ற வலுச் சேர்க்கும் விழுதுகள்’ இல்லை, அகன்று விரிந்த ஒற்றை மரமாக திகழ்கின்றது. ஆங்காங்கே கிளைகள் ஒடிந்து விழுந்தவண்ணம் உள்ளது. இதனைச் சரிசெய்ய இந்துசமய நூல்களையும், விழாக் களையும், பண்டிகைகளையும், தனதாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. இந்து சமய சாதனங்களைக் கிறித்துவ சமயம் சார்ந்தவை எனக் கூறிக் கைப்பற்றுவதற்கு அரசியல் பலம், ஆள்பலம் ஆகியவை உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது.[4] கலாச்சார ஊடுருவுதலை செய்திடப் பெரும் பணமும், நேரமும் செலவிடப்பட்டு வருகிறது.[5] இம் முயற்சிகள் வெற்றியில் முடியுமா, தோல்வியில் முடியுமா அல்லது சுய அழிவில் முடியுமா என்பது இங்கேயே, இந்தியாவிலேயே, தீர்மானிக்கப்படும், அதுவும் அதிவிரைவில் எனலாம்.

10:4. கிறித்துவத்தின் தற்போதைய நிலவரம்

மேற்கத்திய நாடுகளில் கிறித்துவம் வீழ்ச்சியடைந்து விட்டது. பாவ மன்னிப்புப் கோட்பாட்டையும் பரிசுத்த ஆவி கோட்பாட்டையும் யாரும் நம்புவதாக இல்லை. பல வேத கோவில்கள் தானியக் கிட்டங்கியாக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. அவற்றில் பல இந்துக் கோவில்கள் அமைத்திட வாங்கப்பட்டு வருகின்றன. கற்றறிந்த மேலைநாட்டு மக்கள்

இந்து சமயம் போதிக்கும் யோகா, தியானம், மூச்சுப்பயிற்சி ஆகியவற்றின்மீதும் மனதை ஒருமுகப்படுத்துவதற்கு உருவ வழிபாடு தேவை என்றும் அவற்றின்மீது தங்களது ஆர்வத்தையும் காட்டி வருகின்றனர். சமீபத்தில் ஐக்கிய நாடுகளின் பொது மன்றமும் (UNGA) தனது 11-12-2014ம் தேதிய தீர்மானம் மூலம் ஒவ்வொரு ஆண்டிலும் ஜூன் 21ம் தேதியினை அனைத்து நாடுகளின் யோகா தினமாக கொண்டாட முடிவு செய்துள்ளதும் - இங்கே குறிப்பிடதக்கது. கிறித்துவ சமயம் ஒரு மதவாத இயக்கமாகத் தன்னை முன்நிறுத்தி வருகின்றது. அது மனிதன் தன்னைத்தானே உணரும் தன்மையே போதிக்கும் ஆன்மீக இயக்கம் அல்ல. மக்களை நல்வழிப்படுத்திடும் இயக்கமாகவும் அது விளங்கவில்லை. எனவே கிறித்துவமும், வேதகோவில்களும், மனிதர்களைக் கவர்ந்து தன்பால் இழுக்கமுடியவில்லை. எனவே இச்சமயம் நிலைபெற வேண்டுமெனில் அரசின் ஆதரவு தேவை. ஆனால் மேலை நாடுகளில் தற்போதைய அரசுகள் வேதகோவில்களுக்கு நேரடியாக உதவிடுவதில்லை. மேலும் அந்நாடுகள் பெரும் பொருளாதாரச் சீர்கேட்டின் காரணமாகவும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் பொருட்டும் பல்வேறு நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றன. எனவே கடந்த 2000 வருடமாக அரசு ஆதரவில் வளர்ந்த கிறித்துவம், இன்றைய பொழுதில் ஆதரிப்பார் இன்றித் தவிக்கின்றது. எனவே வேதகோவில் நிர்வாகிகள் மற்றும் அதன் சகோதரர்கள் ஆகியோர் தங்களது சமய வாழ்விற்கு அரசியல் மற்றும் செல்வம் (பணம்) சார்ந்த விஷயங்களில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றனர். தங்களிடம் வருவோர் எண்ணிக்கையும், காணிக்கை வசூலையும் இவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டியுள்ளது. ஆன்மாக்களைக் காப்பாற்றும் விஷயம் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. அதுபோன்றே கூடங்குளம் அணுமின் நிலைய, பிரச்சினையிலும், ஈழத் தமிழர் பிரச்சினையிலும் தலையிட்டு, அரசியலில், அரசியல் கட்சிகளின் ஆதரவை எதிர்பார்த்து நிற்கின்றது. இதுபோன்ற அரசியல் சார்ந்த நடவடிக்கைகள் மூலம் தனக்குத் தேவையான ஆன்மாக்கள் எண்ணிக்கையைப் பெருக்குதலும், காணிக்கையையும் கூட்டிவிடலாம் என்று நினைக்கின்றது.

'கிறித்துவ வேதம் அன்பைப் போதிக்கிறது'. வேத கோவில்கள் சகிப்புத் தன்மையின் உறைவிடமாக உள்ளது

என்னும் கோட்பாட்டைத் தற்போது பெருமளவில் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்தி வருகின்றது. இக்கொள்கை உண்மைக்குப் புறம்பானது என மேலைநாட்டுக் கிறித்தவர்களுக்குத் தெரியும். மேற்கத்திய கிறித்துவம், ஏன் இந்திய கிறித்துவமும் விசுவாசம் எனும் ஒற்றைக் காலில் மட்டுமே தற்போது நிற்க வேண்டியுள்ளது. அதனிடம் அரசியல் செல்வாக்குக் குறைந்து வருவதுடன் நிதி வசதியும் குறைந்து வருகின்றது. உதாரணமாகப், பல ஆண்டுகளாகக் குடும்பப் பெண்கள், சன்னியாசிப் பெண்கள் (Nuns), குழந்தைகள் ஆகியோரிடம் பாலியல் கொடுமைகளில் ஈடுபட்டதாகப் பல நீதிமன்றத் தீர்ப்புகளின்படி பலகோடி டாலர் இழப்பீடாக வேதகோவில் நிர்வாகிகள் உலகெங்கிலும் வழங்க வேண்டியுள்ளது. எதிர்பாராத இச்செலவுகளை ஈடுகட்டத் தன் அசையாச் சொத்துக்களை வேதகோவில்கள் விற்க வேண்டியுள்ளது. (பார்க்கவும் தினமலர், திருநெல்வேலி 8.5.2014)

ஆனால் இந்தியக் கிறித்துவத்திற்கு இதுபோன்ற தொல்லைகள் இல்லை. இங்குள்ள அச்சமய மக்களுக்குத் தங்களின் சமயம் கடந்த 2000 வருடகாலமாக உலகெங்கும் நடத்திய கொடுமைகள் தெரிந்திட வாய்ப்பில்லை. இந்தியக் கிறித்துவம் தாங்கள் நடத்தும் நற்செய்திக் கூட்டங்களில் பெரும்பானான நேரத்தை 'விசுவாசத்தைக்' கற்பிப்பதிலே செலவிடுகின்றன. மீதமுள்ள நேரத்தைச் சாத்தான் கொள்கையைப் பேசுவதிலும், பிசாசுவின் சேனைகளைத் தாக்குவதிலும் செலவழிக்கின்றனர். அச்சமய மக்கள், தங்களது சேகர குருக்களும், பிரச்சார சகோதரர்களும் எவ்வளவுக்கு எவ்வளவு சாத்தானையும், பிசாசுகளையும் தாக்குகின்றனரோ அவ்வளவுக்கு அவ்வளவு மகிழ்ச்சியுற்றுக் காணிக்கையை அள்ளி வழங்கி வருகின்றனர். வேதகோவில் பணிவிடையாளர்களுக்குக் 'சாத்தான்' காரணமாகக் கிறித்துவ மக்களிடையே பெரும் செல்வாக்கு ஏற்பட்டு வருகின்றது. செல்வாக்கையும், காணிக்கையையும் மேலும் மேலும் பெருக்கிடத் தேவனின் பணிவிடையாளர்கள் தாங்கள் நடத்தும் நற்செய்திக் கூட்டங்களில் ஆன்மீகத்தைப் பற்றிப் பேசாமல் (இயேசுவின் போதனைகளைப் பற்றி) சாத்தானைப் பற்றியே பேசுகின்றனர். இதற்கு ஒருசில காரணமுண்டு.

புதிதாக மதம் மாறியவர்கள் புதிய சமயத்தில் சுற்றுப்புற மற்றும் குடும்ப சூழ்நிலைகள் மாறுபட்டிருப்பதைக் கண்டு

பிரமை பிடித்தவர்கள் போல் மிரண்டு இருக்கின்றனர். ஆண்டாண்டுக் காலமாக அவர்கள் பின்பற்றிய வழிபாட்டு முறை மற்றும் கலாச்சாரத்திலிருந்து தாங்கள் திடீர் என விடுபட்டுவிட்டதை உணர்ந்து அஞ்சுகின்றனர். இவர்களின் அச்சத்தைப் போக்குவதற்கும், புதியவர்களை நிலைநிறுத்தவும் பல்வேறு யுக்திகள் பின்பற்றப்பட்டு வருகின்றன.

1. சாத்தானிடமிருந்தும், பிசாசிடமிருந்தும், மதமாறிகள் விடை பெற்று வந்துவிட்டதால், சாத்தானும், பிசாசும் அவன் மீது கடும் கோபத்தில் இருக்கும். அவை மதமாறியின் உள்ளத்திலும், வாழ்க்கையிலும் பல குழப்பங்களை ஏற்படுத்தும். எனவே அவர்கள் அஞ்சாமல், மேலும் மேலும் வேதாகமத்தைப் படிப்பதுடன் இயேசுவின் ஆடை நுனியை ஆத்மார்த்தமாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் எனவும் போதிக்கப்படுகின்றனர்.

2. மதமாறியை நிலைநிறுத்துவதற்காகப் புனிதர் பவுலின் கதை போதிக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் கிறித்துவத்தைக் கடுமையாக எதிர்த்த பவுல் இறுதியில் தேவனின் வெளிப் படுத்துதலால் கிறித்துவராய் மதம்மாறி விட்டார். அதுபோன்ற மதமாறிகளை எதிர்க்கும் கூட்டமும் விரைவில் இப்பக்கமாக வந்துவிடும். எனவே மதம்மாறியவர்கள் செய்த செய்கை சரியானதே, இன்று இவன் மாறியுள்ளான், நாளை மற்றவனும் மாறி வருவான் எனும் போதனை முடுக்கி விடப்படுகிறது.

3. மதம் மாறிய ஒருவன் தேவ பிள்ளையாய் உருமாற்றம் பெற்றுவிட்டதாகவும், இனி அவன் வேறுபட்ட மனிதன் எனவும், அவன் இதுவரை செய்தது போன்று இதர தெய்வங்களுக்குப் படைக்கப்பட்ட பிரசாதங்களை உண்பதற்கு ஏற்கக்கூடாது எனவும் போதிக்கப்படுகின்றான். இதன் காரணமாக மதமாறிக்கும் அவன் இதுகாறும் வாழ்ந்துவந்த சமுதாயத்திற்கும் இடையிலான தொடர்பு முற்றிலும் துண்டாக்கப்பட்டு விடுகின்றது. இதுவரை வெளிப்படையான மனிதனாக இருந்த அவன், சொன்னதைக் கூறும் கூண்டுக் கிளியாக உருமாற்றப்பட்டுவிட்டான். இதன் மூலம் சமுதாயத் தொடர்பு சீரழிக்கப்படுகின்றது. பிரிவினை வாதம் விதைக்கப்படுகின்றது. எனவே மதமாற்றத்தினால் ஒருவனுக்கு ஆன்மீக முன்னேற்றம் எதுவும் ஏற்படுவதில்லை. மாறாக அவனுக்கு மற்றச் சமயத்தினர் மீது, குறிப்பாகத் தான்

கடந்து வந்த சமயத்தின் மீது கசப்புணர்ச்சிதான் வளர்க்கப் படுகின்றது.

4. மதம் மாறிய கிறித்தவர்களுக்கு உள்ளூர் அரசியலும், சர்வதேச அரசியலும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அதன் பிரகாரம், விரைவில் இஸ்லாமிய பயங்கரவாதத்திற்கும் (?) அன்பு வழிக் கிறித்துவத்திற்கும் இடையில் உலகளாவிய ஒரு பெரும் யுத்தம் அர்மகேதான் எனும் இடத்தில் (வெளி 16:16) ஏற்படும் எனவும், அதனில் கிறித்துவம் பெரும் வெற்றி அடையும் எனும் கசப்புணர்வு - போதிக்கப் படுகின்றது.[6]

இவ்வெற்றி எவ்வாறு சாத்தியம்? மேற்கத்திய நாடுகளில் கிறித்துவ சமயத்தினர் எண்ணிக்கை தேய்ந்து வருகின்றது. அவ்வாறெனில் சர்வதேச கிறிஸ்துவம், சர்வதேச இஸ்லாத்தை எப்படி எதிர்கொள்ள முடியும்? எனவே கிறிஸ்துவத்தின் வெற்றிக் கனவு, ஊமை கண்ட கனவு போன்றதே! இதுபோன்ற உலகளாவிய பிரச்சினைகள் எதிர்நோக்கக் கிறித்துவத்திற்கு ஆன்மீக பலமும் இல்லை, கலாச்சார பலமும் இல்லை, அவர்களின் புத்தகத்திலும் இதற்கான வழிமுறைகள் கொடுக்கப்படவும் இல்லை. எனவே தற்கால பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு இது ஒரு வணிக நிறுவனம் போன்று செயல்படவேண்டியுள்ளது. தீர்வுகளைப் பெறுவதற்காகப் பணபலம், அரசியல் பலம் ஆகியவற்றை நம்ப வேண்டியுள்ளது. அதாவது ஆன்மீகப் பிரச்சனைகளுக்காக மதம் சார்ந்த ஆன்மீக வழியை நாடாமல் மதச் சார்பற்ற அரசின் ஆதரவு மற்றும் தன்னுடைய பணபலம் ஆகியவற்றை அது நாட வேண்டியுள்ளது. இது அதன் துரதிருஷ்டமே!

10:5. இந்தியா யேசுவுக்கே

ரோமாபுரியின் ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளின் சமய-வரலாற்றில் 'திரித்தும், மறைத்தும், சேர்த்தும்' ஆதாரங்களைத் தயாரித்த மகான்கள் இந்தியாவையும் விட்டுவைக்கவில்லை.

1. சிவகெங்கை மாவட்டம் கானாடுகாத்தான் எனும் கிராமத்தில் பிரபல இசை வல்லுனர்களின் குடும்பத்தில் பிறந்தவர் கணேஷ் ஐயர்[7] (1920-2005). இவர், பாதிரியார்கள் மைக்கேல் மற்றும் மரியதாஸ் மூலம் அன்றைய சென்னை

கத்தோலிக்கப் பேராயர் அருளப்பாவிடம் (1912-1996) அறிமுகமானார். அன்றைய காலகட்டத்தில் இந்து வேதங்களும், இலக்கியங்களும் கிறித்துவ சமயத்திற்குக் கடன்பட்டவை என்றும், இயேசுபிரான் உலகமக்களை இரட்சிக்க வானிலிருந்து மண் உலகத்திற்கு இறங்கி வந்தது முன்கூட்டியே இந்து வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் நிரூபிக்க பேராயர் அவர்கள் பல இந்து சமய ஆராய்ச்சி மையங்களை நிறுவி, அதில் பல (போலி) ஆராய்ச்சியாளர் களையும் பணியிலமர்த்தியிருந்தார்.

மே 1975ல் கணேஷ் ஐயர், பேராயரைச் சந்தித்துத், தான் மதம் மாறிவிட்டதாகவும், தனது இரட்சிக்கப்பட்ட பெயர் ஜான் கணேஷ் என்றும் தான், சமஸ்கிருத, வேத ஆராய்ச்சியில் விற்பன்னர் என்றும், யேசு கிறித்துவின் வருகை பண்டைய சமஸ்கிருத நூல்களில் கூறப்பட்டுள்ளது என்றும் பேராயரிடம் கூறினார். அந்நூல்களைச் சேகரிக்க தான் நெடிய, தொடர் பயணம் செய்ய வேண்டியுள்ளதாகவும், அதற்கான நிதிவசதியைத் தனக்கு அளித்தால், அந் நூல்களைத் தான் சேகரிக்க முடியும் என்றும் கூறினார். பிராமணர் ஒருவர் (மதம் மாறியவர்) தனக்குக் கிடைத்துள்ளது பற்றியும், ஐயர் அவர்களின் நாவன்மையும், தோற்றமும், பேராயர் அவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியை அளித்தது. ஐயர் அவர்களுக்கு வீடு வாங்கிடவும், பெண் பிள்ளைகளின் திருமணச் செலவிற்கும், சுவடிகள் சேரிக்கப் பயணம் மேற்கொள்ளவும், ரூபாய் 14 லட்சம் வரை (இன்றைய காலத்தில் அத்தொகை 2 கோடிக்கு மேல் பெருமதியானது) வழங்கப்பட்டது.

காலக்கிராமத்தில் போலியாகச் சுவடிகள் தயாரிக்கப் பட்டுப் பேராயர் அவர்களிடம் வழங்கப்பட்டன. ஆதியில் மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவில் கிறித்துவ சர்ச்சாகத்தான் இருந்தது என்பது போன்ற ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடவும் செய்யப்பட்டது. இதன் பொருட்டு மகிழ்ச்சி யுற்ற பேராயர், தனக்குக் கிடைத்த பெரும் பொக்கிஷமான ஐயர் அவர்களைப் போப் ஐயர் அவர்களிடம் அறிமுகப்படுத்தி இன்பமுற எண்ணினார். பேராயர், ஐயர் அவர்களுடன் ஐரோப்பாவிற்குப் பயணம் செய்து பல கிறித்துவ பிரமுகர்களைச் சந்தித்து மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டார்.

இறுதியாக 1977ல் போப் ஆண்டவரையும் சந்தித்து ஐயர் அவர்களை அறிமுகப்படுத்தினார்.[8] போப் ஐயர் அவர்களும் பெரும் மகிழ்ச்சி கொண்டார். அவர்கள் இவ்வாறு ஐரோப்பியப் பயணத்தின் இறுதியை எட்டியபோது, சென்னை கத்தோலிக்க குருமார்கள், கணேஷ் ஐயர் சேகரித்து வழங்கியுள்ள ஆவணங்களைப் பரிசீலித்து அவை போலியானவை என்ற முடிவுக்கு வந்தனர். ஆர்ச் பிஷப் சென்னை திரும்பியதும் கணேஷ் ஐயர் மீது மோசடி வழக்கு பேராயர் அவர்களால் தொடரப்பட்டு, ஜான் கணேஷ் ஐயர் அவர்கள் சிறையிடப்பட்டார். இவ்வழக்கு விவரங்கள் Indian Express 14.2.1986ல் வெளியாகியுள்ளது. பின்னர் Illustrated Weekly எனும் பத்திரிகையிலும், வெளியாகியுள்ளது. (சென்னை வேதபிரகாஷ் அவர்களின் கட்டுரை ஒன்றிலும் இவ்விபரங்கள் காணப்படுகின்றன. இதைப் பற்றி மேலும் அறிந்திட "Christianity in a Different Light" எனும் புத்தகம் பக்கம் 233-236 (வால்யூம் 2) பார்க்கவும்.

2. ஆர்ச்பிஷப் அருளப்பாவின் மற்றொரு தலைசிறந்த ஆராய்ச்சியாளர் (?) தெய்வநாயகம் எனும் ஒரு கத்தோலிக்கர். சிந்து சமவெளி நாகரிகம் தமிழர் நாகரிகமே என்றும், சிந்து சமவெளி தமிழர்களின் சமயம் நாத்திகமே என்றும், யேசு பெருமான் காலத்திற்குப் பின்னர் அவருடைய சீடர் தாமஸ் தென் இந்தியாவிற்கு வந்து யேசு பெருமானைப் பற்றிப் பிரசங்கம் செய்த பிறகே தமிழர்களுக்கு இறைக் கோட்பாடு பற்றித் தெரியவந்தது என்றும், திருக்குறள் ஒரு 'கிறித்துவ சமயம் சார்ந்த சைவ சித்தாந்த நூல்' என்பது போன்று பல கட்டுரைகளையும் ஆராய்ச்சி நூல்களையும் எழுதியுள்ளார். 'திருக்குறள் - விவிலியம் ஓர் ஒப்பாய்வு' எனும் ஆய்வு நூலைத் தெய்வநாயகம் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்பித்து முனைவர் பட்டமும் பெற்றுள்ளார். அன்னார் தனது நூல்கள் மூலம் தமிழக மக்கள் முன் வைத்துள்ள சமய - கலாச்சார கருத்துகள் பின்வருமாறு:

1. நெற்றியில் திருநீறு, குங்குமம், நாமம் ஆகியவை அணியும் பழக்கம் முதலில் தமிழகத்திற்கும் பின்னர் இந்தியா முழுமைக்கும் பரவியது பைபிளிலிருந்து உருவான பழக்கவழக்கமே!

2. திருஞானசம்பந்தர் பாடியுள்ள திருநீற்றுப் பதிகத்தில் குறிப்பிடப்படும் வேதம் என்பது பைபிளில் உள்ள நான்கு

சுவிசேஷங்களைத்தான் குறிப்பிடுகின்றது. (ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களைக் குறிப்பிடுவது அன்று)

3. சைவம், வைணவம் எனும் சமயப்பிரிவுகள் யேசுவின் சீடர் புனிதர் தோமையார் தமிழர்களுக்கு அளித்த கிறித்துவக் கொள்கைகளின் அடிப்படையில் பிறந்தவைகளே. எனவே சைவர்களும் வைணவர்களும் தோமாவழி கிறித்துவர்களே!

4. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி எனும் மூவொருமை தத்துவத்திலிருந்து பிறந்ததே திருக்குறளிலுள்ள, கடவுள், நீத்தார், வான், ஆகிய இயல்புடைய மூவர்.

5. பைபிளில் கூறப்படும் யாக்கோபு நாட்டிய நினைவுதூண் சைவத்தில் சிவலிங்கம் என அழைக்கப்படுகிறது.

இதுபோன்று இதுவரை யாரும் வெளிப்படுத்தாத பல கருத்துக்களைத் தெய்வநாயகம் வெளியிட்டுள்ளார். இவை உண்மைக்குப் புறம்பானவை அல்லது விபரீதத் தத்துவங்கள் எனத் தள்ளுபடி செய்வதற்கும் இல்லை. தெய்வநாயகம் கருத்திற்குப் பின்னுக்கு நிற்பவர் யார் என்பதையும், அவர்கள் சொல்லவிரும்பும் செய்தி என்ன என்பதையும் நோக்குதல் அவசியம்.

முன்பு குறிப்பிட்டுள்ள கணேஷ் ஐயர், பேராயர் அருளப்பா உறவினைப் போன்றதே தெய்வநாயகம் மற்றும் பிற்காலப் பேராயர் A.M. சின்னப்பா ஆகியோருக்கு இடையிலான தொடர்பு எனலாம். இவ்விருவரும் (கூட்டு) தலைமை ஒருங்கிணைப்பாளராக அமர்ந்து, 2008 ஆகஸ்ட் 14-17ஆம் நாட்களில் ‘தமிழர் சமயஉலக முதல் மாநாடு’ எனும் நிகழ்வை, மேற்படி உயர் மறை மாவட்டத்தின் அருட்பணி மையத்தில் நடத்தினர். அம்மாநாட்டில் பங்குபெற்றோரில் முதன்மையானவர்கள் பேராயர் சிசில் சந்திரன் - சிங்கப்பூர், முனைவர் ச.வெ. சுப்ரமணியன்; பெருங்கவிகோ முனைவர் வா.மு. சேதுராமன், சுவாமி சதாசிவானந்தா, முனைவர் முத்தையா ஆகியோர் (பார்க்கவும் திராவிடர் சமயம், செப்டம்பர் 2008 இதழ்). இம்மாநாட்டில் முன்நிறுத்தப்பட்ட கட்டுரைகளின் கருப்பொருள் சிலவற்றைக் காணலாம்.

1. ‘தமிழர் சமயம் - தமிழ் ஆன்மவியல்’ எனும் ஒரு புதிய கோட்பாட்டை உருவாக்குதல்.

2. தமிழர் ஆன்மவியல் தத்துவத்தைப் பைபிளுடன் இணைத்தல்.

3. ஆன்மா என்பது இறைபேரொளியின் ஒரு துகள் என்பதற்குப் பதிலாக அதனை மனிதம் அல்லது உள்ளம் என அறிவித்தல். (இவ் ஆன்மவியல் கோட்பாட்டை மேற் குறிப்பிட்டள்ள மாநாட்டுப் பங்கேற்பாளர்கள் பெரிதும் புகழ்ந்துள்ளனர் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது).

4. பைபிளின் புதிய ஏற்பாட்டில் 'உயிருள்ள கல்' என்பதும், யேசு சாவை வென்று உயிர்த்தெழுந்ததும், சைவத்தில் மயானத்தில், சாவிற்குக் காரணமாகிய முயலகன் மீது நடத்தப்பட்ட சிவநடனமும் தொடர்புடையனவே!

5. அந்நியரே ஆரியர் - அவர்களே பிராமணர்கள்.

6. தந்தை, பரிசுத்த ஆவி, மகன் எனும் கிறித்துவத்தின் மூவொருமை கோட்பாடே, அதற்குப் பிந்தைய காலத்தில் தோன்றிய சிவபாகம், விஷ்ணுபாகம், பிரம்மபாகம் எனும் மூவொருமைக் கோட்பாடு.

7. சமஸ்கிருத காப்பியங்களை எழுதிய வால்மீகி, வேதவியாசர், காளிதாசர் போன்றோர் திராவிட ஞானிகளே.⁹

8. 'வேதம்' என வியாசர் பெயரிட்டு வழங்கியுள்ளவை நாடோடிப் பாடல்களே.

9. தேவார வைப்பு முறையில், வயதில் மூத்தவரும், சைவ சமயத்தை முதன்முதலில் அரச சமயமாக மாற்றியவருமான திருநாவுக்கரசர் பாடல்களுக்குப் பதிலாக, திருஞானசம்பந்தர் பாடல்களுக்கு முதன்மை கொடுத்திருப்பதற்கான வரலாற்று பின்னணி.

10. சிவஞானபோதம் எனும் சைவசித்தாந்த நூல் ஒரு மொழி பெயர்ப்பு நூல் அன்று. மாறாகச் சைவ சித்தாந்தத்தில் தோன்றிய முதல் நூல்.

மதங்களுக்கிடையே பரவியிருக்கும் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்காகக் கூட்டப்பட்ட மாநாடு எனும் போர்வையில் நடத்தப்பட்ட தமிழர் சமய மாநாடு உண்மையில் இந்து சமயமும், சமஸ்கிருதமும், சைவமும், வைணவமும் கிறித்துவத்திற்குப் பின்தோன்றியதே என நிரூபிக்கவும், இந்து இலக்கியங்கள் கிறித்துவத்தின் வழிவந்த நூல்களே என நிரூபிக்கவும், இந்து சமயத்தில் பல்வேறு

வேறுபாட்டினைப் புதிதாகப் புகுத்திடவும் உபயோகப் படுத்தப்பட்டது. (பார்க்கவும் திராவிட சமயம் இதழ் மே - ஜூன் 2008 - வெளியிட்டாளர் தெய்வநாயகம்)

இன்றைக்கு 500 - 600 வருடங்களுக்கு முன்பு இந்தியாவிற்கு வருகைதந்த அன்னிய மதகுருமார்கள் ஒரே இறைவன், ஒரே புத்தகம் (Solo scripture) எனும் கொள்கை யோடு இந்தியாவிற்கு வந்தனர். கருத்த தடித்த பைபிள் எனும் அந்நூலினுள் உலகம் முழுமைக்குமான தீர்வு உள்ளது என்றும் அதுவே உலகில் தோன்றிய சிறந்த நூல் எனவும் பெருமை யுடன் இந்நாட்டிற்கு அதனைக் கொண்டு வந்தனர். பைபிள் போன்று இன்னொரு நூல் உலகிற்குத் தேவையில்லை, மற்றவை பொய்யானவை என உலகமுழுமையிலுள்ள மாற்றுச் சமய நூல்கள் கிறித்துவத்தால் அழிக்கப்பட்டன. பைபிளிற்குப் பொருள்கூறும் (உரை) நூல்கள் அன்று உலகில் இருந்தவை தேவையற்றது (superfluous) என அவைகளும் அழிக்கப்பட்டன. எனவே கடந்த 2000 வருடமாக ஒற்றை மரமாக விளங்கும் பைபிளுக்குத் துணை நூல் (தத்துவநூல்) தேவையென தற்போதைய கத்தோலிக்க குருமார்கள் விரும்பினர். அத்தகைய தத்துவ நூல் ஒன்று இல்லாமை, இந்துக்களை மதம் மாற்றுவதற்கு பெரும் தடங்கலாய் உள்ளது எனவும் உணர்ந்தனர். எனவே உரைநூல் ஒன்று, பைபிளின் துணைநூலாக எழுதப்பட்டு ஜூன் 28, 2008ல் New Community Bibile எனப் பெயரிடப்பட்டு பம்பாயிலும், 20 இதர நகரங்களிலும் வெளியிடப்பட்டது. வெளியிட்டோர் உயர்திரு ஆஸ்வால்டு (Oswald Cardinal Gracius) எனும் மும்பை நகர ஆர்ச்பிஷப். புத்தக வெளியீட்டு விழா பெரும் பகட்டுடன் மும்பையின் Holy Name Cathedral ல் நடைபெற்றது. பைபிளுக்கான உரை எழுதுவதற்கு இந்திய வேதங்களி லிருந்தும், உபநிடதங்களிலிருந்தும் அதன் பாஷ்யங்களிட மிருந்தும், பிரம்ம சூத்திரத்திலிருந்தும், இதிகாசங்களிலிருந்தும் மேற்கோள்கள் எடுத்துத் தாராளமாக உபயோகப்படுத்தப் பட்டுள்ளன. அதாவது பரிசுத்த ஆவியால் எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமத்தை உண்மை என நிறுவிவிடச் சாத்தானால் (?) எழுதப்பட்ட இந்து வேத சாத்திர நூல்கள் உபயோகப்

படுத்தப்பட்டுள்ளன. கத்தோலிக்க சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் இது ஓர் அவமானச் செயல் என அந்தச் சமயத்தினர் பலர், மைக்கேல் பிரபு போன்ற கத்தோலிக்க குருமார்கள் தலைமையில் குரல்கொடுத்தும், கிறித்துவ சமயகுருக்கள் அஞ்சுவதற்கோ இல்லை!

இவ்வாறு கலாச்சார ஊடுருவல் மற்றும் இந்து சமயக் கலாச்சாரப் பிரிவினையைத் தோற்றவிப்பதில் கத்தோலிக்கம் ஆற்றியிருக்கும் பெரும் பங்கிற்கு நாங்களும் சற்றும் குறைந்தவர் அல்லர் என்பதைப் புரட்டஸ்டன்ட் சமய பிரிவினரும் நிரூபித்துள்ளனர். அவர்களில் விழுப்புரம் பாஸ்டர் A.N. பவுல் அடிகளாரும், சென்னை தாயப்பன் என்பவரும் தற்போது முன்னிலை வகிக்கின்றனர். மேற்படிப் பவுல் அடிகளார் அக்டோபர் 2012ல் வெளியிட்டுள்ள ‘இந்து ஆலயங்களில் இயேசு கிறிஸ்துவுக்கு மறைமுகமான ஆராதனை’ எனும் துண்டுப் பிரசுரத்தின் பிரதி ஒன்றினை 449ம் பக்கத்தில் காணலாம். இப்பிரசுரத்தில் இந்து வேதங்களிலும், சமஸ்கிருத இலக்கியங்களிலும் யேசுநாதரை பற்றிக் கூறப்பட்டுள்ளது என இல்லாத ஒன்றை நிரூபிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் நாகாலாந்து மிஸோரம், மேகாலயா ஆகியவை முற்றிலும் கிறித்துவ மயமாக்கப்பட்டுவிட்டன. இதர மாநிலங்களான மணிப்பூர், திரிபுரா, அருணாச்சலபிரதேசம், அஸ்ஸாம் ஆகியவை கிறித்துவ மாநிலமாக மாறி வருகின்றன. இம்மாநிலங்களில் யேசுபிரான் போதித்த (?) அன்பு, சமாதானம் ஆகியவைக்கு பதிலாகப் பிரிவினைவாதமும், பயங்கரவாதமும், போதைப் பொருள்களின் உபயோகமும் மேலோங்கி நிற்கின்றன. திரிபுரா விடுதலைப்படை மற்றும் MNF, MSCN, NNCT ஆகிய பயங்கரவாத இயக்கங்கள் இந்தியாவிலிருந்து இம்மாநிலங்களைப் பிரிவினை செய்து யேசு ராஜ்யம் நிறுவிடத்துப்பாக்கி ஏந்திக் கடந்த 30-40 ஆண்டுகளாக போராடி வருகின்றனர். இவற்றில் NLFT எனும் திரிபுரா விடுதலைப்படை 2013ம் ஆண்டில் சரஸ்வதி பூஜை கொண்டாட்டங்களை திரிபுராவில் தடை செய்தது. துப்பாக்கி முனையில் இந்துக்களை மதமாற்றம் செய்து வருகின்றது. அரசின் எவ்விதத் தடங்கலுமின்றி இச்செயல்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இப்பகுதி

மக்கள் பேசும் மொழியை எழுதுவதற்கு இந்தி (தேவநாகிரி) எழுத்துக்களுக்குப்பதிலாக ரோமானிய எழுத்துக்களை உபயோகிக்க கிறித்துவ மதபோதகர்கள் மக்களை வற்புறுத்தி வருகின்றனர்.

இந்து ஆலயங்களில் இயேசு கிறிஸ்துவுக்கு மறைமுகமான ஆராதனை

ஆ, உ, ம் என்பதே ஓம்

ஆ - என்பது சிருஷ்டி கர்த்தர்

உ - என்பது இரட்சகர்

ம் - என்பது காக்கிறவர்

1. ஓம் ஸ்ரீ பிரம்புத்திராய நமக (யோவான் 3:14)

தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை அனுப்பி உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

2. ஓம் ஸ்ரீ கன்னி சுத்தாய நமக (மத்தேயு 1: 23)

கன்னியின் கர்ப்பத்தில் பிறந்தவரே போற்றி.

3. ஓம் ஸ்ரீ உமாத்தாய நமக (லூக்கா 1:35)

பரிசுத்த ஆவியினால் பிறந்தவரே போற்றி.

4. ஓம் ஸ்ரீ சிபிவிஷ்டாய நமக (தீமத்தேயு 3:16)

தன்னுடைய மாம்சத்தில் வெளிப்பட்டவரே போற்றி.

5. ஓம் ஸ்ரீ விருஷசூல அருதாய நமக (மத்தேய 26:2)

சூலம் போன்ற மரத்தில் தன்னைப் பலியாக்கினவரே போற்றி.

6. ஓம் ஸ்ரீ மிருத்தயும் ஜெயாய நமக (மத்தேயு 28:6)

மரணத்தை வென்றவரே போற்றி.

மனிதனால் உண்டாக்கப்படுவது நிச்சயம் கடவுளாக முடியாது. மனிதன் கடவுளை உண்டாக்க முடியாது. கடவுள்தான் மனிதனை உண்டாக்கினார். இதை அறிந்து கடவுளைக் கடினப்படுத்தாமல் செயல்படுவோம் அன்பானவர்களே.

- A.N. பவுல்

வடகிழக்கு மாநிலங்களில் இவ்வாறாக பயங்கரவாதம் மூலம் இந்தியாவை உடைத்து யேசு ராஜ்யம் நிறுவிட மதகுருமார்கள் முயன்று வருகின்றனர். அதே நேரத்தில் தென்னிந்தியாவில் நாட்டின் ஒற்றுமைக்காக யேசு சமயத்தினர் பெரும் ஜெப கூட்டத்தை நடத்தி வருகின்றனர். இவ் இரட்டை நிலைப்பாட்டை என் சொல்வது? பிள்ளையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டி விடுகின்றனர் என்பதைத் தவிர (பார்க்கவும் Kunal Ghosh புத்தகம் பக்கம் 11, 40, 43).

விழுப்புரம் பவுலைப் போன்று தீவிர சமய பரப்பாளராக விளங்குபவர் தாயப்பன் என்பவர். சாத்தூரை பிறப்பிடமாகக் கொண்ட இவர், வைராக்கியமான இந்துவாய் ஆரம்பத்தில் இருந்ததாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறார். இவர் இந்திய விமானப் படையில் பணியாற்றிப் பணி நிறைவு பெற்றவர். இவரது மகன் சிங்கப்பூரிலும் பின்னர் அமெரிக்காவிலும் மாதம் 2½ லட்சம் சம்பளத்தில் பணிக்குச் சேர்ந்ததாகவும், அப்போது பெரும் வியாதியால் அவன் பீடிக்கப்பட்டதாகவும், பையனைக் கருணை கொலை செய்யத் தாயப்பன் முயற்சி செய்ய எத்தனித்த நேரத்தில், கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து ஜெபங்களைச் சொறிதல் செய்ததின் மூலம் அவன் உயிர் பிழைத்ததாகவும், அதன்பின்னர் குடும்பத்துடன் புரொட்டஸ்டன்ட் சமயத்தில் சேர்ந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். கிறித்துவ சமயத்தில் சேர்ந்த ஒரு சில வருடத்திற்குள் ஒன்பது புத்தகங்கள், 5 லட்சத்து 75 ஆயிரம் பிரதிகள் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். அதனைத் தவிர 2 லட்சத்து 75 ஆயிரம் குருந்தட்டுகளையும் (VCD) யேசு பிரான் மீதும் இந்து சமயத்திற்கு எதிராகவும் வெளியிட்டுள்ளார். பல நற்செய்திக் கூட்டங்களை நடத்தி அவற்றில் கர்த்தரை மகிமைப்படுத்தியுள்ளதாயும், 1500க்கும் மேற்பட்ட திருச்சபைகளில் தேவ சாட்சி பிரகடனபடுத்தியுள்ளதாயும் கூறியுள்ளார். இவற்றின் மூலம் இந்து சமயக் கடவுள் கொள்கையில் பெரும் ஊடுருவல்கள் செய்திடவும், அதனைக் கிறித்துவ மயமாக்குதலுக்கும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளார். இவரது மற்றொரு முதன்மையான நோக்கம், இந்துக்களை நித்திய நரகத்தைக் காட்டிப் பயமுறுத்துவதே ஆகும். இதன் பொருட்டுப் ‘பாவத்தின்

சம்பளம் நரகம்' எனும் ஓர் நூலையும் எழுதியுள்ளார். அப்புத்தகத்தின் தலைப்பில் 'பலவீனமான இருதயம் உடையவர்கள் இந்த நூலைப் படிக்க வேண்டாம்' எனவும் எச்சரித்துள்ளார்.

இங்கிலாந்து நாட்டின் பிரைவி கவுன்ஸில் (Praivy Council) நித்திய நரகத்தைக் காட்டிப் பொது மக்களைப் பயமடைய செய்தலைத் தடைசெய்துள்ளதை ஏற்கனவே பார்த்தோம். அத்துடன் (Michael R Burch) மைக்கேல் என்பவர் தனது வலைத்தளம் www. thehypertexts.com என்பதில் பைபிளில், நரகம் என்ற வார்த்தை பொது மக்களுக்கு எதிராக உபயோகப் படுத்தவே இல்லை என ஆணித்தரமாகக் கூறியுள்ளார். மொத்தமுள்ள 40 வகைப் பைபிளில் 27 பைபிள்களில் நரகம் பற்றிக் கூறப்படவில்லை எனவும் அவர் அறிவித்துள்ளார். உதாரணத்திற்குச் சில:

நரகம் பற்றிய குறிப்பு

	பழைய ஏற்பாட்டில்	புதிய ஏற்பாட்டில்	மொத்தம்
KJV பைபிளில்	31	23	54
புதிய KJV பைபிளில்	19	13	32
New Indian National version. Best selling Bible	0	13	13
American Standard version Bible	0	13	13
New American Bible	0	0	0
Revised Edition- Roman Catholic Bible	0	0	0

இத்தனை பிரச்சினைகளுக்கும் காரணம் எப்ரு மொழியிலுள்ள Sheol என்பதையும் கிரேக்க மொழியிலுள்ள Hades என்பதையும் நரகம் என வேண்டுமென்று மொழிபெயர்த்ததால் வந்த வினையே. எனினும் II பீட்டர் 2:4ல் நரகம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அவ்வசனம் நிலைதடுமாறிய தேவலோக தூதர்களைப் பயங்கொள்ளச் செய்ய உபயோகிக்கப்பட்டுள்ளதே தவிர மனிதர்களைப் பயங்

கொள்ள செய்ய அல்ல என்பது இங்கே சுட்டி காட்டப் படுகின்றது.

இந்துக்களை வேண்டுமென்றே பீதியடையச் செய்யும் பணியைப் படுவேகமாக செய்யும் மற்றொருவர் தூத்துக்குடி மாவட்டம் நாலுமாவடியில் யேசு விடுவிக்கிறார் எனும் திருச்சபையை நடத்தும் சகோதரர் மோகன் சி. லாஸரஸ்.[10] இவர் 2004 நவம்ர் 4, 5, 6, 7 தேதிகளில் திருப்பதியில் நடத்திய ஓர் விடுதலை பெருவிழாவில், திருப்பதியில் விரைவில் தேவனின் அக்கினி விழும் என்று இந்துக்களைப் பீதி கொள்ளுமாறு பிரசங்கித்துள்ளார் (பார்க்கவும் லாசரஸ் அவர்கள் வெளியிட்டுள்ள பத்திரிகை 'யேசு விடுவிக்கிறார்' ஜனவரி 2005). இவ்வாறு எம்பெருமான் வெங்கடாசலபதியை அவமதித்தவர் எட்டு வருடம் கழிந்தபின்னர் நவம்பர் 29, 2013ல் சத்தியம் TV யில் நடத்திய ஓர் நற்செய்தி நிகழ்ச்சியில் கிறித்துவசமயத்தில் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே வைகுண்டம் கிடைக்கும் எனவும் பிரசிங்கித்துள்ளார். இந்துக்களைப் பயங்கொள்ள செய்ய அன்று திருப்பதியில் அக்கினி விழத் தோத்திரங்கள் செய்வதும், இன்று கிறித்துவ பெருமக்களை தக்க வைத்துக்கொள்ள அவர்களுக்கு மட்டுமே (திருப்பதி வெங்கடாசலபதி சுவாமியின்) வைகுண்டம் கிடைக்கும் எனவும் பேசியுள்ளார். எத்தகைய இரட்டை வேடம் பூண்டுள்ளார்? உண்மைக்குப் புறம்பாய்ப் பேசவும், ஆசை காட்டுதலுக்கும் இவர் அஞ்சுவதே இல்லை! கூச்சப்படுவதும் இல்லை. தங்களுக்குக் காணிக்கை நிறைந்தால் போதும். மக்களின் மனது எவ்விதமாக ஊசலாடினாலும் கவலை யில்லையே! இதைத்தானே 2000 ஆண்டுகளுக்கு முன்னர் பவுலும் அவர் வழிவந்தோரும் செய்தனர். அவர்கள் பைபிளில் இதுவரை செய்துள்ள கூட்டல், கழித்தல் வேலைகளை கீழே காணலாம்.

மொழிபெயர்ப்பில் வேறுபாடு

1. கர்த்தர் தனது ஒரே குமாரரான யேசுவை உலகிற்கு வெளிப்படுத்தினார். (யோவான் 1:18, 3:16) எனக் கிறித்துவத்தில் பிரபலமாய்ப் பேசப்படுவதை நாம் கண்ணுருகின்றோம். அதனை எதிர்த்து மைரோன் பெல்ப்ஸ் (Myron H. Phelps) எனும் கிறித்துவர் மார்ச் 1911ல் ஜாப்னா

(Joffna) கத்தோலிக்க ஆயர் ஜானபிரகாசர் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் காணலாம்.

"The isolation of the spirit from every traces of worldiness and fleshy bonds is known in India as 'Kaivalyam" and the state of unspeakable repose or rest consequent upon this isolation or spiritual freedom is called Santi *(சாந்தி)* or peace.

In Greek (from which English Bible was translated), this isolation or alone becoming (தனித்திரு) of the soul is termed monogenia, the adjective of which monogenes is wrongly rendered in the English version of the Bible as "only begotten"

It is this mistaken view of Jesus Christ being the only begotten son of God which has killed the teachings of Jesus"

'உலக பந்தங்களிலிருந்து விடுபட்டு ஆன்மா தனித்திருத்தல் அல்லது அவற்றைத் தனியாக வைத்திருந்து அதன் மூலம் கிடைப்பதே சாந்தி எனும் பேரின்பம். அவ்வாறு ஆன்மா தனித்திருப்பது (சமஸ்கிருதத்தில்) இந்தியாவில் 'கைவல்யம்' எனப்படும். தனித்திருத்தல் எனும் தத்துவத்தை விளக்க பைபிளில் உபயோகப்படுத்தப்பட்ட சொல் 'மானோஜீன்ஸ்' எனும் கிரேக்க வார்த்தை. ஆனால் இச்சொல் 'தனிமகன்' - 'இறைவனின் ஒரே மகன்' என மாற்றி ஆங்கிலத்திலும் பின்னர் தமிழ் பைபிளிலும் (புதிய ஏற்பாடு) மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

Monogenes எனும் சொல், கிரேக்க மொழியிலுள்ள புராதன பைபிளில் ஒன்பதுதடவை காணப்படுகிறது. லூக்காவின் சுவிசேஷத்தில் மட்டும் மூன்று தடவை காணப்படுகின்றது (7:12, 8:41, 9:38). இவற்றிலெல்லாம் Monogenes, கடவுளின் ஒரே மகன் என மொழிபெயர்க்கப்படவில்லை. ஆனால் யோவான் 3:16ல் இதனைக் 'கடவுளின் ஒரே குமாரன் யேசு' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது மோசடி வேலை அல்லவா?

யேசுநாதருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததாக நம்பப்படும் தாவீது அரசன் (King David) கடவுளின் மகன் என நேரிடையாகக் கூறப்பட்டிருந்தாலும் (பார்க்கவும் சங்கீதம் 2:7) அவரைக் கிறித்துவ மக்கள் கடவுளாக வழிபடவில்லை. இதுவும் தவறல்லவா?

எப்ருமொழியில் (Hebrew) உள்ள புராதன பைபிளின் பழைய ஏற்பாட்டில் யேசு என்பவர் ஒரு கன்னிக்குப் பிறப்பார் (மத் 1:23) என ஆரூடம் கூறப்பட்டுள்ளதாகப் பிரசிங்கப் படுகின்றது. ஏசையா 7:14ல் அவ்வாறு முன்னறிவிப்புச் செய்யப் பட்டுள்ளதாகவும் பெருமையுடன் பேசப் படுகின்றது. எப்ரு மொழியிலுள்ள கீழ்க்கண்ட சொற்றொடரி லிருந்து மொழி பெயர்ப்பின் மூலம் இக்கருத்து எடுக்கப் பட்டுள்ளது.

'ஹிநே ஹா அல்மா ஹரஹ்வே எல்டத்
பென் வேகரத் ஷெம் இம்மானுவேல்'

இதன் பொருள்: 'இதோ பாருங்கள் அந்த இளம்பெண் கருவுற்றிருக்கின்றாள் - அவள் ஒரு மகனைப் பெற்று அவனுக்கு இம்மானுவேல் என்று பெயரிட்டு அழைக்கிறாள்'. இதனில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள எப்ரு மொழி வசனம் 'அல்மா' என்ற சொல்லுக்கு இளம்பெண் என்றுதான் பொருள். கன்னி என்பது பொருளல்ல. கன்னி என்பதற்கு ஹிப்ரு மொழியில் 'பெட்டுவா' என்பார்கள். எனவே தம் மதத் தலைவருக்கு அதிசயம் சேர்ப்பதற்காக மூல பைபிளில் சொல்லப்பட்டுள்ள 'இளம் பெண்ணுக்கு பிறப்பார்' என்பதைக் கன்னிக்குப் பிறப்பார் எனப் பொருள் மாற்றம் செய்துள்ளனர்.[11] இதுபோன்ற திரிபுவாத பொருளாக்கத்தி லிருந்து பிறந்ததே உலகமகா வாக்கியம். 'இறைவன் தன்னுடைய ஒரே மகனான யேசு கிறித்துவைப் பாவிகளை இரட்சிக்க உலகிற்கு அனுப்பி வைத்தான்' எனும் (?) தேவ வாக்கியம். (யோவான் 3:16)

பைபிளின் சங்கீதம் 38ம் அத்தியாயத்தில் கர்த்தரின் கோபத்தினால் தாவீது எனும் அரசன் பாடிய பாடல் எண் 7ல் For my loins are full of inflamation எனும் ஆங்கில வசனம் 'எனது ஆண் குறியானது எரிபந்தமாய் எரிகின்றது' எனத் தமிழில் மொழிபெயர்க்கப்படுவதற்குப் பதிலாக 'என் குடல்கள்

எரிபந்தமாய் எரிகின்றது’ எனத் தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

எசயா அத்தியாயம் 20 வசனம் நான்கில் “with their buttocks uncovered” எனும் ஆங்கில மூல வசனத்தை ‘நிர்வாணமாய் இருந்தான்’ என்பதற்குப் பதிலாக ‘இருப்பிடம் மூடப்படாதவராய்’ எனத் தமிழ் பைபிளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பைபிள் எழுதப்பட்ட கடந்த 1700 வருடங்களுக்கும் மேலாகப் பல்வேறு நகலெடுத்தல், மொழிபெயர்த்தல் ஆகியவை மூலம் பல்வேறு திரிபுவாத சொற்றொடர்கள் பைபிளுக்குள் நுழைந்த விட்டன. மேலும் கிரேக்க - எப்ரு மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கும், ஆங்கிலத்திலிருந்து பல உள்ளூர் மொழிகளுக்கும் எழுதியதில்- பைபிள் தன்னுடைய உண்மையான கருத்தையும், அதன்மூலம் பரிசுத்த ஆவி அருளிய ஜீவ வார்த்தைகளையும் இழந்து விட்டது. ‘கர்த்தாவே உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கின்றது’ (சங்கீதம் 119:89) எனும் வேத வாக்கியம் களங்கப்படுத்தப்பட்டுவிட்டது.

கடவுளின் பெயரை மாற்றல்: - கிறித்துவத்தைத் தவிர வேறு எந்தச் சமயத்திலும் கடவுளின் பெயர் மொழிபெயர்க்கப்படுவதில்லை.[12] உதாரணமாகக் கீழ்க்கண்ட ரிக்வேத வாக்கியத்தை எடுத்துக் கொள்ளலாம்.

‘இந்த்ரம் மித்ரம் வருணமக்னி மாஹுரதோ்....’

-ரிக்வேதம் 1:164:46

இந்தச் சுலோகத்தில் இந்திரன், மித்திரன், வருணன், அக்னி ஆகிய தெய்வங்கள் குறிப்பிடப்படுகின்றன. எந்த மொழியில் வேதம் மொழிபெயர்க்கப்பட்டாலும் தெய்வத்தின் பெயர்கள் மாறுபடுவதில்லை. அதுபோன்றே ‘திருகுர்ரானிலும்’ ‘அல்லா’ எனும் கடவுள் பெயர் மொழிபெயர்ப்பில் மாறுபடுவதில்லை. ஆனால் பைபிளில் அதுபோன்று பின்பற்றப்படவில்லை. ‘எப்ரு’ பைபிளில் கடவுளின் பெயர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1. யகோவா (எப்ரு மொழியில் உயிரெழுத்து இன்மையால் YAHOWA என்பது YHWH என எழுதப்பட்டுள்ளது). இப்பெயர் எப்ரு பைபிளில் 6500 தடவைக்கும் மேலாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணம்: யாத் 3:13, 14

2.எலோகிம் (Elohim) 2600 தடவைக்கும் மேலாக பைபிளில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆதி 1:1, ஜோசுவா 24:19

3. அடனொய் (Adonai) : 439 தடவை உபயோகப் படுத்தப்பட்டுள்ளது.

4. எல் (El) - 238 தடவை உபயோகப்படுத்தப் பட்டுள்ளது.

5. எல்சடை (Elshaddai) ஆதி 17:2, 3

எப்ரு பைபிளிலுள்ள (OT) கடவுளின் இப்பெயர்கள் Lord என ஆங்கில பைபிளிலும், டியூஸ் (Deus) என லத்தீனிலும், Gott என ஜெர்மனியிலும், ஜுமாலா என பின்லாந்து மொழியிலும், அப்பா (Abba) என அரமிய மொழியிலும், கிரியோஸ் (Kyrios) என கிரேக்கத்திலும் கர்த்தர், தேவன், ஆண்டவர் எனத் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவ்விதமாக ஆண்டவன் பெயரையே மொழிக்கு மொழி மாற்றி எழுதுவது முற்றிலும் சாஸ்திர சம்மதமில்லாத செய்கை என்பதில் ஐயமில்லை.

அரபு மொழிபெயர்ப்பு பைபிளில் கர்த்தர் (Lord) என்பதற்கு 'அல்லா' என்ற சொல்லைப் பயன்படுத்து கின்றனர். அதுமட்டுமின்றிப் புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு அத்தியாய தொடக்கத்தையும் குர்- ஆனின் சொற்றொடரான 'பிஸ்மில்லா இர்ரஹ்மான் ரஹிம்' (அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையவனும் திருப்பெயரால்) எனும் சுலோகத்தைக் கொண்டு தொடங்குகின்றனர். இவ்வித மொழிபெயர்ப்பும், கூட்டி எழுதுதலும் மலேசியா, இந்தோனேஷியா நாடுகளில் மொழியாக்கம் செய்யப்பட்ட பைபிள்களில் பின்பற்றப்பட்டு வருகின்றன. ஆகவே நாட்டிற்கு நாடு, நேரத்திற்கு நேரம், கிறித்துவ மிஷனரிகளின் வேதமும், கொள்கையும், கோட்பாடும் மற்றும் கடவுள் பெயரும் மாறுதல் அடைகின்றன (பார்க்கவும் 'இயேசுநாதர் - மறைக்கப்பட்ட உண்மைகள்' கேப்டன் அமீருதின் (2010), சஜிதா புக்சென்டர், சென்னை, பக்கம் 103).

இவ்வாறு கடவுளின் பெயரை இஷ்டத்திற்கு மொழி பெயர்த்துள்ளதன் காரணமாக மூல பைபிள் குறிப்பிடும்

கடவுளின் உண்மையான பெயர் கிறித்துவ மக்களுக்குத் தெரியாமல் மூடிமறைக்கப்பட்டுவிட்டது. கடவுளின் பெயரை இஷ்டத்திற்கு மொழிபெயர்ப்பது பைபிளின் 'சகரியா' வேத வசனம் 14:9ல் கூறப்பட்டுள்ள வழிகாட்டுதலுக்கு முற்றிலும் மாறுபட்டதாய் உள்ளது.

> 'கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார், அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்'

சகரியா 13:3ல் பைபிளைக் கூட்டிக் குறைத்து எழுதுவதற்கு விதிக்கும் தண்டனை.

> .... நீ கர்த்தருடைய நாமத்தைக் கொண்டு பொய் பேசுகிறபடியால் நீ உயிரோடிருக்கப்படாது...

பரிசுத்த வேதாகமத்தின் கடைசி வசனங்கள் இக்கூட்டல், கழித்தல் பற்றிக் கடும் எச்சரிக்கைகளைக் கீழ்க்கண்டவாறு வழங்கியுள்ளது.

> 'இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கின்ற வாதைகளைத் தேவன் அவன்மேல் கூட்டுவார்.'
>
> -வெளி 22:18

> 'ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால் (நீக்கி விட்டால்) ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும் (சொர்க்கலோகம்) இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும் அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார்... கர்த்தராகிய யேசுவே வாரும்! நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறித்துவின் கிருபை உங்கள் அனைவருக்கும் இருப்பதாக, ஆமென்!
>
> வெளி : 22:19-21

பரிசுத்த வேதாகமத்தில் இதுபோன்ற எச்சரிக்கைகள் பரிசுத்த ஆவியால் வழங்கப்பட்டிருந்தும், 'திருமறை' பணியாளர்களால் கூட்டல், கழித்தல் வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே வருகின்றன.

தற்போது பரப்பப்படும் கிறித்துவம் அன்பினால் அல்லது உயரிய ஆன்மீக கொள்கைகளை உள்ளடக்கியதா என்பதையும் ஆய்விடலாம்.

> ‘அவர்களுடைய பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டிப் போடுங்கள்’ - யாத் 34:13

> ‘கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவர் என்பது: அவர் எரிச்சலுள்ள தேவனே ஆகையால் அந்நிய தேவனைப் பணிந்திட வேண்டாம்.’ - யாத் 34:14

கர்த்தர் கூறுகிறார்:

> பூமியின் மீது சமாதானத்தை அனுப்ப வந்தேன் என்று எண்ணாதிருங்கள். சமாதானத்தையல்ல பட்டையத்தையே (அரிவாள்) அனுப்ப வந்தேன் எப்படியெனின், மகனுக்கும், தகப்பனுக்கும், மகளுக்கும், தாய்க்கும், மருமகளுக்கும், மாமிக்கும் பிரிவினை உண்டாக்கவே வந்தேன்.
>
> ஒரு மனுஷருக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே. தகப்பனையாவது, தாயையாவது என்னிறும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. மகனையாவது, மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்லன். - மத் 10:34-37

> ‘நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்க வந்தேன் என்று நினைக்கிறீர்களோ? சமாதானத்தையல்ல பிரிவினையையே உண்டாக்க வந்தேன். எப்படியெனில் இன்றுமுதல் ஒரே வீட்டில் ஐந்து பேர் பிரிந்திருப்பார்கள். இரண்டுபேருக்கு விரோதமாய் மூன்று பேரும், மூன்று பேருக்கு விரோதமாய் இரண்டு பேரும் பிரிந்திருப்பார்கள். தகப்பன் மகனுக்கும், மகள் தாய்க்கும், மாமி மருமகளுக்கும், மருமகள் மாமிக்கும் விரோதமாய்ப் பிரிந்திருப்பார்கள்.’
>
> -லூக்கா 12:51-53

இதுபோன்ற எதிர்மறையான சமய, சமூக, சமுதாய கருத்துகளை முன்நிறுத்திக் கிறித்துவம் ஆரம்பகாலம் முதற்கொண்டு வளர்க்கப்பட்டதின் காரணமாக உலகெங்கும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, காலனியாதிக்கம், போர் ஆகியன மலிந்தன. இக்குற்றங்களுக்குச் சமயத்தின் ஆதரவும்

நியாயப்படுத்துதலும் கிடைத்தன. சமுதாயக் கொடுமைகளுக்கு உறைவிடமாக மேற்கு ஐரோப்பிய நாடுகள் திகழ்ந்தன. ரோமானிய பேரரசின் பேகான் சமயம் (Pagan religion) கிறித்துவ சமயத்தால் கிபி. 300ல் தொடங்கி முற்றிலுமாக அழிக்கப்பட்டது, அதனைப் பின்பற்றிய மக்கள் பலரும், சமய ஆச்சாரியர்களும், பூஜாரிகளும் கொடூரமாய்க் கொல்லப்பட்டனர். அதுவரை ஐரோப்பிய மக்களிடையே பரவியிருந்த சமய - சமுதாய ஒப்புரவு, நல்லிணக்கம், சிந்திக்கும் ஆற்றல், சமுதாய மகிழ்ச்சி ஆகியன முற்றிலுமாக மறைந்தன. தமிழகம், மலபார், குஜராத் பிரதேசங்களுடன் ரோமாபுரிக்கிருந்த வர்த்தக, கலாச்சார உறவுகள் முற்றிலுமாக மறைந்தது. மக்கள் இத்துயரங்களிலிருந்து விடுபட 1300 வருடங்கள் ஆயின. பெரும் துயருக்கு உட்பட்ட இவ் ஆயிரத்து முன்னூறு ஆண்டுகள் ஐரோப்பாவின் வரலாற்றில் இருண்ட காலம். இருண்ட காலத்தின் பின் விளைவுகள் மேற்கத்தைய நாடுகளில் இன்றும் எதிரொலிக்கின்றன. அவற்றை காணலாம்

10:6. மேற்கத்திய பிரச்சினைக்குக் கிழக்கத்தைய தீர்வு

பொருளாதாரச் சரிவு

அமெரிக்காவில் கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வசிக்கும் - வீடுகளின் விலையில் பெரும் ஏற்றம் காணப்பட்டது. இதன் காரணமாக மக்களில் பலர் தங்களுக்குத் தேவையில்லாதபோதும்கூட வங்கியில் கடன் பெற்று வீடுகளை வாங்கினர். கடன் வாங்கியோரின் திருப்பித்தரும் தன்மையை அளவிடாமல் வங்கிகள் தாராளமாய் நிதி உதவி செய்தன. உயர்வைச் சந்தித்துவந்த வீட்டு விலைகள் 2005-2006 வாக்கில் தனது உச்சியிலிருந்து நழுவத் தொடங்கியது. விலைகள் சரிய ஆரம்பித்ததும் லாப நோக்கில் வீடு வாங்கியவர்களும், தேவையின்றி வாங்கியவர்களும் வீடுகளை விற்க முயன்றனர். வீடுகளை வாங்குவதற்கு நபர்கள் இன்மையால் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்தாமல்

கடன்தாரர்கள் தலைமறைவாயினர். வீட்டிற்காக வழங்கப் பட்ட கடன் வாராக்கடனாக ஆனது.

கடன் வழங்கிய வங்கிகளும், மறுநிதி வழங்கிய நிதி நிறுவனங்களும் திவால் ஆனது. இந்தியாவைப் பொறுத்த வரையில் வீடுகள் விற்பனை பொருட்கள் அன்று. ஆனால் அமெரிக்காவில் வீடுகள் விற்பனைப் பொருளாக மாறியதும், வங்கிகள் திவால் ஆனதும் பொருளாதாரச் சரிவு ஏற்பட்டுள்ள விதமும், மேற்கத்திய நாடுகள் முழுமையும் இதனால் பாதிக்கப்பட்டுள்ள தன்மையும், நம் அனைவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது.

விளைவுகள்

மேற்கத்திய பொருளாதார வீழ்ச்சி இந்தியா சைனா போன்ற நாடுகளையும் ஓரளவு பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது. உலக வங்கியும் அதன் கிளை நிறுவனங்களும் தற்போதைய உலக பொருளாதாரத்தின் வளர்ச்சி விகிதத்தை வெகுவாகக் குறைத்து மதிப்பீடு செய்துள்ளது. பணக்கார நாடுகளில் பல தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டு விட்டன. வேலை யில்லாதோர் பட்டியல் நீண்டு வருகின்றது. நாடுகளின் பொருளாதாரம் மந்தத்திற்கு உட்பட்டு விட்டது.

பொருளாதாரச் சரிவினால் முதல் பேரழிவு 'லீமென் பிரதர்ஸ்' எனும் அமெரிக்காவின் பெரிய வங்கியைத் தாக்கத்திற்குள்ளாக்கியது. பின்னர் நிதி மற்றும் காப்பீட்டு நிறுவனங்களான - 'கோல்டுமென் சாச்', 'மார்கன் ஸ்டான்லி', 'மெரில் லிஞ்ச்' ஆகியவற்றிற்கும் மற்றும் பல காப்பீட்டு நிறுவனத்திற்கும் பரவியது. இப்பொருளாதாரச் சீரழிவு சுனாமி போன்று ஐரோப்பிய நாடுகளுக்கும், பின்னர் ரஷ்யா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவிப் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது.

சரிந்த நிறுவனங்களை மீட்க அமெரிக்க அரசு ரூ. 700 பில்லியனை (ரூ 32,20,000 கோடி) செலவிட்டுள்ளது. எனினும் சிக்கல் தீர்ந்தபாடில்லை. ஆங்கில அரசு ரூ 50 பில்லியனையும் ஸ்பெயின் ரூ 30 பில்லியனையும் ஜெர்மனி ரூ 150 பில்லியன் நிதியையும் வங்கிகளுக்கு உதவியாக வழங்கியுள்ளது. இத்தகைய பெரும் பொருளாதாரச் சீர்கேட்டில் இந்தியாவின் ஏற்றுமதி வாய்ப்புகள் பாதிப்பிற்கு

உள்ளாகியுள்ளது. இந்திய பங்குச் சந்தையும் இழப்பினைச் சந்திதது. இதுபோன்ற பாதிப்புகள் சைனா நாட்டிலும் ஏற்பட்டுள்ளது. இந்திய - சைனா நாடுகளின் சமூக - சமுதாய கூட்டமைப்பு மேற்கத்திய நாடுகளின் அமைப்பிற்கு முற்றிலும் வேறுபட்டதாய் இருப்பினும், பொருளாதாரத் தாக்கங்கள் ஆங்காங்கே உணரப்பட்டன.

அமெரிக்காவின் முன் அனுபவம்

அமெரிக்காவில் இதுபோன்ற பொருளாதாரச் சிக்கல் முன்பு 1929ம் ஆண்டிலும் ஏற்பட்டுள்ளது. ‘பெரும் பொருளாதார மந்தம்’ என இதற்குப் பெயர் சூட்டப்பட்டது. அப்போது அமெரிக்கர்களை ஏழ்மை வாட்டியது. மக்கள் வேலையிழந்தனர். உணவின்றித் தவித்தனர். தொண்டு நிறுவனங்கள் இலவசமாக வழங்கிய சிக்கன் சூப்பினை உண்டு உயிர் வாழ்ந்தனர். பங்குச் சந்தை வீழ்ந்தது. மக்கள் வீடுகளை இழந்து வேன்களிலும், திறந்த வெளியில் கூடாரம் அமைத்து வாழ்ந்தனர். வேளாண் உற்பத்தி 50 சதவீதமும், தொழில் உற்பத்தி 40 சதவீதமும் குறைந்தது. பிறப்பு விகிதம் குறைந்து தற்கொலைகள் உயர்ந்தன. அந்நிலைமை 1933ம் வருடம் வரை நீடித்தது.

தற்போதைய பொருளாதார சரிவிற்கான காரணம் - ஓர் அலசல்

அரசியல் நிபுணர்களும், பொருளாதார வல்லுனர்களும் இதன் காரணங்களை வெவ்வேறாகக் கூறுகின்றனர். அவற்றில் சில.

1. அமெரிக்காவில் வீடுகளை வாங்கியோர் அதனைத் தனது குடும்பம் வசிப்பிற்குப் பயன்படுத்துவதற்குப் பதிலாக வியாபார பேரத்தின் கருவியாக உபயோகித்தனர்.

2. உலக பொருளாதாரத்தை ஒன்றுசேர்க்க முயற்சி செய்த முதலாளித்துவம் ஒருங்கிணைந்த கட்டுப்பாடுகளை நிதி நிறுவனங்கள்பால் விதிக்கத் தவறிவிட்டது.

3. சர்வதேச நிதி நிறுவனங்களான ‘உலக வங்கி’ “IMF” போன்றவை தங்களது மேலாண்மை பணியினைச் சரிவரக் செய்திடத் தவறிவிட்டன.

4. மேற்கத்திய உலகம் அளவுகடந்த நுகர் நாகரீகத்தில் திளைத்துவிட்டது.

5. முதலாளித்துவதின் பரிணாம வளர்ச்சியே பொருளாதார சீர்கேட்டிற்குக் காரணம் - இது தவிர்க்க முடியாத ஒன்று.

இதுபோன்ற பல காரணங்கள் வியாதியின் அடையாளத்தைக் காண்பதற்கு உதவிடுகின்றது. எனினும் இவை வியாதியின் மூலாதாரத்தைக் கண்டு கொள்ள மறுக்கின்றது அல்லது பயப்படுகின்றது என்பதே உண்மை. உண்மையை ஆய்விட வேண்டுமெனில் சில கேள்விகளுக்கு நாம் பதில் கண்டு ஆகவேண்டும்.

1. வீடுகள் வசிப்பதற்குப் பதிலாக விற்பனைப் பொருளாக, ஏன் ஆனது ?

2. வீடுகளுக்கான வங்கிக்கடன் ஏன் வாராக் கடனாக ஆனது ? அது ஏன் பூதாகரமாகி உலகப் பொருளாதார வீழ்ச்சிக்கு வழிகோலியது ?

3. பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள, ஏன் மேற்கத்தியர்கள், வாழ்விற்கு இன்றியமையாததாய்க் கருதப்படும் வீடுகளை விற்கின்றனர்?

இவற்றிற்குப் பதில் காணவேண்டுமெனின் இரண்டு நடைமுறைகள் மீது நாம் கவனத்தைச் செலுத்துவது அவசியம்.

1. மேற்கத்திய கலாச்சாரம் மற்றும் வாழ்க்கை முறை.

2. மேற்கத்திய நாடுகள் பின்பற்றும் சமயமும் அதன் கோட்பாடுகளும்.

மேற்கத்திய மற்றும் இந்திய வாழ்க்கையும் சமயக் கோட்பாடும் - ஓர் ஒப்பாய்வு

அ) வாழ்க்கை முறை: சைனாவும் இந்தியாவும், பண்டைய நாகரீக பெருமை படைத்தது. விவிலிய சமயத்திற்கு அப்பாற்பட்டது. இந்நாடுகளில் இல்வாழ்க்கையில் குடும்பம், வாரிசு, வம்சாவழி, பங்காளி, குலம், கோத்திரம், பூர்வீக இருப்பிடம் போன்ற விசாலமான சுற்றங்கள் உண்டு. இந்நாடுகளில் பின்பற்றப்படும் சமயங்களும் இதனையே வலியுறுத்துகின்றன. பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்படும் திருமணங்களே பெரிதும் நடைமுறையில் உள்ளன. விவாகரத்து என்பது மிகவும் அரிது. விவாகரத்து ஒரு சமுதாய இழிச்செயலாகவும் கருதப்படுகின்றது. திருமணமான பெண்

கணவன் வீட்டில் வாழ்வதும், ஆண்கள் தங்களின் விசாலமான குடும்ப நலத்திற்காகத் தனது திருமண வாழ்வின் பெரும்பகுதியைத் தியாகப்படுத்துவதும் ஓர் அன்றாட நிகழ்வு. ஒருவர் கல்வி கற்று, தொழில்புரிவது தனது குடும்பத்திற்கான கடமைகளை நிறைவேற்றுவதற்காகவே தவிர, சுதந்திர வாழ்விற்கும், மனம் போன போக்கில் செயல்படுவதற்காகவும் அன்று. இந்நாட்டினர் தங்களது காலஞ்சென்ற முன்னோர்களுடனும் திவசம் போன்ற சமயச் சடங்குகள் மூலம் தொடர்ந்து தொடர்பு வைத்திருப்பதும் காணக்கிடக்கின்றது. இந்தியர்கள் தங்களின் கணிசமான நேரத்தை இறைவழிபாடு, கூட்டுவழிபாடு, சமயச் சடங்குகள், திருவிழாக்கள், யோகா, பிராணயாமம், ஆன்மீக பயணங்கள், சுற்றுலாக்கள் ஆகியவற்றில் செலவிட்டு மகிழ்ந்து, நிறைவுடன் வாழ்கின்றனர். மொத்தத்தில் இவர்களுக்கென இறைவழிபாட்டுடன் கூடிய வீட்டில் வாழும் அகவாழ்க்கை நெறிகள் உண்டு.

ஆனால் மேற்கத்திய நாடுகளில், வாழ்க்கைக்கான நெறிமுறைகள் யாதும் இல்லாமல் போய்விட்டது. வம்சாவழி, பூர்வீகம் ஆகியவை பராமரிக்க முடியவில்லை. திருமணம் என்பது ஆண், பெண் இருவருக்கிடையே ஒப்பந்தமாகவே கருதப்படுகின்றது. திருமணமான ஆண், பெண் இருவரும் சுதந்திரமாய் வாழ்கின்றனர். விரிவுபட்ட குடும்பம், சமூகம், சுற்றம் இல்லை. உள்ளூரில் கூட, ஒரு நெடிய ஆழமான பாதுகாப்பிற்கு, சமுதாயத்திற்குப் புறம்பில் உள்ள Club, Association போன்றவற்றைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. ஆனால் சைனாவிலும், இந்தியாவிலும் மணமக்கள் தங்கள் பாதுகாப்பிற்கும் மற்றும் சமூக தேவைகள், அந்தஸ்து, பெருமை, என அனைத்திற்கும் தங்களது விரிவுபடுத்தப்பட்டுள்ள குடும்பத்தை மட்டுமே சார்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆ. சமயக் கோட்பாடு: இந்தியா, சைனா ஆகிய நாடுகளில் குறிப்பாக இந்து சமயத்தில், தாய் தந்தை, குரு மற்றும் இறைவன் மீது செலுத்த வேண்டிய நடைமுறைகளான பக்தி, ஞானம் ஆகிய கிரியைகள், மேற்கத்தியர்களின் வாழ்க்கை வெற்றிபெற முன் நிபந்தனையாக விதிக்கப்படவில்லை. தங்களது மதத்தினை ஏற்றுக் கொண்ட அனைவருக்கும்,

சொர்க்கம் (நித்திய ஜீவன்) உண்டு. பாவ மன்னிப்பு உண்டு, செழிப்பும் உண்டு என வியம்புகின்றது. இதன்மூலம் எப்படியும் வாழலாம் என்ற கோட்பாடு வலுப்பெற்றுவிட்டது. பலி நிறைவேற்றப்பட்டுவிட்டது என்பதால் ரட்சிப்பு தானாகவே வழங்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கையும் உள்ளது. மேற்கத்திய வாழ்க்கை முறையை பாதிக்கும், சில பைபிள் கோட்பாடுகளையும் நாம் இங்குக் கூர்நோக்குதல் அவசியம். இக்கோட்பாடுகள்:-

1. மனிதனைத் தான் வாழும் சமுதாயத்திலிருந்து தனிமைப்படுத்துகின்றது.

2. சாத்தான் கொள்கையினை முன்னிறுத்தித் தனிமைப் படுத்தப்பட்ட மனிதனை பயமுறுத்தித் தன்பால் நிலைநிறுத்திக் கொள்ள முயலுகின்றது.

பல நூற்றாண்டுக் காலமாக விவிலிய சமயத் தாக்கத்தால் இவ்வாறு தங்களது பூர்வீகம், சமூகம், சமுதாயம், குலம், கலாச்சாரம், பண்பாடு, குலதெய்வம் ஆகிய வேர்களை இழந்த மேற்கத்தியர்கள் தற்போது இல்வாழ்க்கையையும் இழந்து தவிக்கின்றனர். அமெரிக்காவில் 47 சதவீத குழந்தைகள் மாற்றாந்தாய், தகப்பன் ஆகியோரிடம் வாழ்கின்றனர். எட்டிலிருந்து பத்து சதவீத வீடுகளில் திருமணம் ஆகாத ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்கின்றனர் (Source: Census Bureau, National Center for Health Statistics). ஸ்வீடன் நாட்டில் 54.90 விழுக்காடும், அமெரிக்காவில் 45.80 விழுக்காடும் இங்கிலாந்தில் 42.60 விழுக்காட்டுத் திருமணங்கள் விவாகரத்தில் முடிகின்றன (Source: Americans for Divorce Reforms). ஸ்வீடன் நாட்டில் 5.00 விழுக்காடு குழந்தைகள் மட்டும் திருமணத்தின் மூலம் பிறக்கின்றன என்பது மிகவும் அதிர்ச்சியூட்டும் தகவல். இத்தகைய இல்வாழ்க்கை சீர்கேட்டில் சிக்கித் தவிக்கும் பெரும்பான்மையான மக்களுக்கு வசிப்பதற்கான வீடு ஒரு தேவையில்லாத பொருளாய் ஆனதில் வியப்பில்லை. எனவே பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால் வீட்டினை விற்பதும், சரண்டர் செய்வதும் அவர்கட்கு ஒரு பொருட்டல்ல. கார்களிலும் வேன்களிலும் திறந்தவெளிக் கூடாரங்களிலும் வாழ்வது அவர்களுக்குச் சிரமமாய்

தெரிவதில்லை. வீடுகளுக்குக் கடன் வழங்கிய வங்கிகள் தான் 'வாராக்கடனால்' சிரமத்தால் சிக்கித் தவிக்கின்றன.

பாதிக்கப்பட்டோருக்கு மருந்து

தமிழின் முதல் நூலாகிய தொல்காப்பியத்தில் மக்கள் வாழ வேண்டிய வாழ்க்கை முறைகள், அவற்றுள் வீட்டில் வாழும் அகவாழ்க்கை நெறிகள், சமுதாயத்தில் வாழும் புறவாழ்க்கை நெறிகள், ஆடவர்க்குரிய பண்புகள், பெண்டிற்குரிய பண்புகள், இருவருக்கும் உரிய குணநலன்கள் போன்ற மக்களினத்திற்குத் தேவையான செயல்கள் போன்றவற்றைத் தொகுத்துக் கூறுகின்றது. நம் ரிஷிகள் ஞானிகள் மற்றும் மகான்கள் நமக்கு வேத, உபநிடத, புராண, திருமுறை மற்றும் பிரபந்தங்கள் மூலம் வழங்கியுள்ள வாழ்க்கைநெறி ஆகியவை, பாதிக்கப்பட்டுள்ள மேற்கத்தைய சமுதாயத்தினருக்கு வழங்கிடப்பட வேண்டும். தியாகத்தின் மூலம் இன்பம் அனுபவித்தல் எனும் தத்துவமும், மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோரை வணங்கிடும் வாழ்க்கைத் தத்துவமும் மாமருந்தாய் அவர்களுக்கு அமைந்திட வேண்டும்.

உலக வாழ்வில் இன்பம் நுகர்வது இந்து சமயத்தில் மறுக்கப்படவில்லை. ஆனால் அதற்கு முன்னால் தியாகம் வரவேண்டும். தியாகம் இல்லாத போகம் கொச்சையானது, இழிவானது; மோகம் என்ற நுகர்வு மேம்படுத்தப்பட்ட தியாக பாவனையில் புனிதமுற வேண்டும், கல்வி கற்பதும், பொருள் ஈட்டுவதும், அனுபவிப்பதும் வாழ்வின் விரும்பத்தக்க இலக்குகளே, ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை உண்டு. இவை அனைத்தும் தர்ம - நியாயங்களின் அடிப்படையில் பெறப்பட வேண்டும், செய்யப்பட வேண்டும் என்பதே அது. இத்தகைய கொள்கை மேற்கத்திய மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டாலே அவர்களின் இல்லற, சமுதாய, பொருளாதார இடர்ப்பாடுகள் முடிவுக்கு வரும். இதற்கு முதன்மையானதாக இதுகாறும் அவர்கள் பின்பற்றி வரும் கடவுள் கொள்கையிலிருந்து அவர்கள் விடுபட வேண்டும். இந்திய ஆன்மீக செல்வர்கள் இதற்கு உதவிட வேண்டும்.

இந்தியர்களின் கடமை என்ன?

'வாழ்க்கையின் தர்மம் ஈஸ்வர வழிபாடே, அதனிருந்து வந்த வேதங்களும் உபநிடதங்களும் பாசுரங்களும்,

பிரபந்தங்களுமே வாழ்வு: இந்து வாழ்க்கை முறையே உலகின் ஒளி', ஆகிய ஆதாரக் கொள்கைகள் பேரத்திற்கும் சமரசத்திற்கும் அப்பாற்பட்டதாக விளங்க வேண்டும். 'யாம் பெற்ற பேறு உலகெலாம் பெறட்டும்' என்ற கோட்பாடு வழிகாட்டும் நெறியாய் விளங்க வேண்டும். உலக மக்கள் அனைவரிடமும் குறிப்பாக மேற்கத்தியர்களிடம் அமைதி, ஒற்றுமை, இசைவு, தியாகம், இந்து வாழ்க்கை, வழிபாட்டு முறை ஆகிய கொள்கையினைக் கொண்டு சேர்க்கும் முயற்சியில் முனைந்திட வேண்டும். 'பாரதமே விழித்தெழு! ஆன்மீகத்தால் உலகத்தினை வெற்றிகொள்' என்று சுவாமி விவேகானந்தர் இதைத்தான் கூறினார்.

⁂

வரலாற்றில் நெருடல்கள்

1. கர்த்தர் மோசேக்கு தன் கைப்பட கற்பலகையில் எழுதி வழங்கியதாக கூறப்படும் பத்து கட்டளைகள் அடங்கிய நியாய பிரமாண சாசனம் தற்போது காணோம்.

2. பரிசுத்த ஆவி உந்துதலால் கிரேக்க மொழியில் எழுதி வழங்கப்பட்ட புதிய ஏற்பாட்டின் மூல பிரதிகள் காணாமல் போய்விட்டன!

3. பவுல் எழுதியதாக கூறப்படும் கடிதங்கள், பைபிளில், பரிசுத்த ஆவியால் எழுதப்பட்டதாக வழிபாட்டிற்கு வைக்கப் பட்டுள்ளது. ஆனால் எடிசா நகர அரசனுக்கு யேசுபிரான் தன் கைப்பட எழுதிய கடிதம் (?) பைபிளில் வழிபாட்டிற்குரிய தாக சேர்க்கப்படவில்லை. அது போன்றே யேசுவை நேரில் (?) பார்த்த ரோமானிய கவர்னர் பூப்ளியஸ் மற்றும் பிலாத்து ஆகியோர் அந்நாட்டின் செனட் சபைக்கு எழுதிய கடிதங்களும் வழிபாட்டிற்குரியதாக சேர்க்கப்படவில்லை.

4. யேசு சிலுவையில் அடிக்கப்பட்டு நொந்து தொங்கிய பல மணி நேரத்தில், அவர் இறைவனை நோக்கி ஜெபம் யாதும் சொல்லவில்லை. இன்று எதற்கெடுத்தாலும் ஜெபம் செய்யும் பழக்கம் யேசுபெருமான் காட்டியுள்ள வழிகாட்டு நெறிக்கு எதிரானது என கொள்ள இடமுண்டு.

5. புனிதர் பவுல் எழுதியதாக அட்டவணையிடப்பட்டுள்ள நிருபங்களில் பல இடைச்சேர்க்கைகள் என நிரூபிக்கப் பட்டுள்ளன.

6. மார்க் எழுதிய சுவிஷேஷத்தில் 16:9-20 (உயிர்த்தெழுதலை குறிப்பிடுபவை) பண்டைய பைபிள்களில் இல்லை. இவை பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவையே!

7. விபச்சாரம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட பெண்ணை யேசு காப்பாற்றியதாக கூறப்படும் வசனம் (யோவான் 8:3-10), ஆரம்ப கால பைபிள்களில் இல்லை.

8. காலத்தால் முந்தையது எனினும் மார்க் சுவிஷேஷம் பைபிளில் இரண்டாவதாக வைக்கப்பட்டுள்ளது. பவுல் கடிதங்களுக்கு பின்தோன்றிய சுவிஷேஷங்கள் அவற்றிற்கு முன்னதாக வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வைப்பு முறையில் செய்துள்ள மாற்றங்கள் வரலாற்று ஆசிரியர் களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

9. பவுல் எழுதிய கடிதங்களில் சுவிஷேஷங்களைப் பற்றிய குறிப்போ, சுவிஷேஷங்களில் பவுல் பற்றிய குறிப்போ இல்லை. இவ்வாறு சம்மந்தமில்லாமல் இருந்த போதிலும், அவை ஒரே வரலாற்றை பற்றி பேசுவதாக பைபிளில் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது.

10. இந்திய பேரரசர் அசோகர் (கி.மு 304 - 232) இன்றைய ஆப்கானிஸ்தானில் (காந்தகார், லம்பாயர்) காணப் பெற்றுள்ள கல்வெட்டுகளை, புத்த சமயத்தை பரப்பிட அரமிக் மொழியில் செதுக்கியுள்ளார். ஆனால் பாலஸ்தீனத்தில் அதன் பின் தோன்றிய யேசு சமய நூல்கள் (பைபிள் புதிய ஏற்பாடு) யேசு பேசிய அரமிக் மொழியை தள்ளுபடி செய்துவிட்டு கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளன!

11. அசோகர் கல்வெட்டுகளில் பாலஸ்தீன - எகிப்திய அரசர்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வரசன் அசோகர் சபைக்கு டையோனிஸியஸ் (Dionysious) எனும் தூதுவரை அனுப்பி சிறப்பு பெற்றான். இத்தகைய இந்திய - பாலஸ்தினிய உறவு யேசு வாழ்ந்ததாக கூறப்படும் காலத்திற்கு முன்பே சிறப்புற்றிருந்தும், யேசுபிரான் பிறந்தது, வாழ்ந்தது, வீழ்ந்தது பற்றிய வரலாற்று செய்திகள், ஐரோப்பாவின் இருண்டகாலம் முடியும் வரை இந்தியாவிற்கு வந்து சேரவில்லை.

12. போப் பிரான்சிஸ் சமீபத்திய தனது தென் அமெரிக்க சுற்று பயணத்தின்போது பொலிவியா நாட்டில் (இந்நாடு 600 - 700 ஆண்டுகளுக்கு முன்பு இன்காஸ் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது - பார்க்கவும் புத்தகத்தின் பக்கம் 228 - 237) நடத்திய பிரார்த்தனை கூட்டத்தில் - 09.07.2015ல் பேசும்போது கூறியதாவது : -

'சில நூற்றாண்டுகளுக்கு முன்பு ஐரோப்பிய கிறித்தவர்களும், கத்தோலிக்க பேராயமும் இணைந்து உங்கள் நாட்டின் பூர்வகுடி மக்களுக்கு எதிராக (இன்காஸ்) கர்த்தரின் பெயரில் நடத்திய கொடூரங்களுக்காகவும், சுட்டெறித்தலுக்காகவும் நான் மன்னிப்பு கோருகின்றேன்" (இச்செய்தி 11.07.2015ம் தேதியில் அனைத்து ஆங்கில தினசரிகளிலும் விபரமாக பிரசுரிக்கப்பட்டுள்ளது)

மன்னிப்பு கேட்கப்பட்டுவிட்டது. கிறித்துவத்தின் மீதான பாவக்கறை நீக்கப்பட்டுவிட்டது. ஆனால் இத்தகைய கொடூரங்களை செயல்படுத்திட தூண்டும் பைபிள் வேத வசனங்கள் நீக்கப்படாமல் உள்ளது.

எனது உரை

வரலாறு போரில் வென்றவர்களால் எழுதப்படுகின்றது எனும் வாக்கியம் உலகம் முழுமையிலும் வழக்கத்திலுள்ளது. எந்த வரலாறும் ஒரு பக்கச் சார்பில்லாமல் எழுதப்படுவதில்லை என்பதும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அதிலும் உங்கள் கையிலுள்ள இந்நூல் கிறித்துவத்தில் இதுவரை தமிழில் காண்பிக்கப்படாத மற்றோர் பகுதியைப் பற்றியது என்பதால் இதன் எழுத்துக்கள் ஓரவஞ்சனையானது எனச் சிலரால் கூறப்படலாம். இது தவிர்க்க முடியாதது. ஆனால் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் மற்றும் கருத்துகள் போதிய ஆவண ஆதாரங்களின் அடிப்படையிலானது என்பது ஈண்டு, மீண்டும் குறிப்பிடப்படுகின்றது.

தொன்மையில், உலகத்தோற்றம், ஆதம்-ஏவாள் கதையில் தொடங்கிய கிறித்துவ சமய வரலாறு, தற்காலச் சமய நிலவரம், அதில் இந்தியாவின் பங்குயாது என்றளவில் முடிவுக்கு வந்துள்ளது. கர்த்தரின் பெயரால், மனித சமுதாயத்தை ஆசிர்வதிக்கப்பட்டவர்கள், ஆசீர்வதிக்கப் படாதவர்கள் என இரண்டாகப் பிரித்த மதவாதிகளின் செயலையும், அதன் காரணமாக உலகம் முழுவதிலும் 2000 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற கொடுஞ் செயல்களையும் இதுகாறும் கண்ணுற்றோம். கிறித்துவம் அல்லாத நாடுகளின் பெருமையைக் குலைக்கும் முகமாக வரலாறுகள் திருத்தப்பட்டதும், திரிக்கப்பட்டதும், மற்றும் மறைக்கப் பட்டதையும் கண்டோம். நோவா எனும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட மகான் மூலமாக உலக சமுதாயம் வர்ணத்தைக் கொண்டு பல்வேறு இனமாகவும், சாதியாகவும், கோத்திரமாகவும், பிரிக்கப்பட்டு ஏற்றத் தாழ்வுகள் கற்பிக்கப் பட்டதையும் பார்த்தோம். ஒரு சில நூறு வெள்ளையர்கள், சூதுவாது, கள்ளம், கபடமற்ற கோடிக்கணக்கான உள்ளூர்

மக்களை 300 ஆண்டுகாலமாக ஆளுமை செய்ததையும், அதன்பொருட்டு உபயோகப்படுத்தப்பட்ட தந்திர மந்திரங்களையும் கண்டோம். நற்செய்திக் கூட்டங்கள் என்ற பெயரில் விதைக்கப்படும் நச்சு விதைகளையும், பரிசுத்த வேதாகமத்தின் குறைபாடுகளை நிவர்த்திக்க மதகுருமார்கள் ‘சாத்தானின் வேதம்’ என்று அவர்களாலே வர்ணிக்கப்படும் இந்து வேத நூல்களை உள்வாங்கி அவற்றைக் கிறித்துவ மயமாக்கும் முயற்சியையும், யேசு பிரானை வரலாற்று நாயகர் ஆக்கிட அன்னாரின் வரலாற்றிலும், அன்னாரின் சீடர்களின் வரலாற்றிலும் புதிய கதைகள் தொடர்ந்து புனையப் படுவதையும் கண்ணுற்றோம். இந்தியத் திருநாட்டைச் சின்னாபின்னமாக்கிட துணிந்துள்ள சமய - சாதீய குருமார்களின் கூட்டு சதித்திட்டத்தையும் உணர்ந்தோம்.

மனித நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்து, இன்றுவரை சமயத்தின் பெயரால் பல்வேறு தேசிய இனங்கள் மீதும், பெண்கள், குழந்தைகள் மீதும், பொய், சூதுவாது, கபடம், மறைத்தல், மாற்றல் ஆகிய உத்திகளை மேற்கொண்டு பல்வேறு கொடுமைகளைச் செய்த மேற்கத்திய சமயம், இன்று மனித உரிமைகள், பெண்களின் உரிமைகள், மதசுதந்திரம், சாதியை ஒழித்தல், நிறவேறுபாடுகளை களைதல், அணு ஆயுதங்களை அழித்தல், சுற்றுப்புறங்களை பாதுகாத்தல் எனும் போர்வையில் தங்களின் முந்தைய காலனிய நாடுகளில் மீண்டும் காலூன்ற பெரும் முயற்சிகள் செய்து வருகின்றது. பல தொண்டு நிறுவனங்களுக்கு இதன் பொருட்டு நிதிஉதவிகளும் அளித்து வருகின்றது. இந்நடவடிக்கைகள் மூலம் புதிய வரலாறு எழுதவும் துடிக்கின்றது.

பரிசுத்த வேதாகமத்தின் சமய நம்பிக்கைகளின் அடிப்படையிலான அழித்தல், அடிமையாக்கல், சுரண்டல், உடைத்தல், பிரித்தல், சுத்தப்படுத்துதல், நோவா கற்பித்த சாதி வர்ண வேறுபாடுகளை நிறுவுதல், தான் கட்டாத வீட்டையும், நடாத திராட்சை தோட்டத்தையும் கைப்பற்றி அனுபவிக்க அனுமதித்தல் ஆகிய வேத வசனங்கள் பரிசுத்த வேதாகமத்தில் இன்றும் நீக்கப்படாமல் அப்படியே உள்ளன.[1] எந்த நேரத்திலும் அவைகள் மீண்டும் முழு வீச்சில் புதுப்பிக்கப் படக்கூடும். அத்தகைய மேலாண்மையை புதுப்பிக்கும்

மேற்கத்திய கிறித்துவத்தின் ஒரு ஆரம்பகால முயற்சியே இன்று ஈராக், சிரியா, எகிப்து, லிபியா ஆகிய நாடுகளில் நாம் சந்திக்கும் துயரங்கள் எனலாம்.

இதுபோன்ற துயரங்கள் களையப்படவேண்டுமெனில் பரிசுத்த வேதாகமத்தின் முடநம்பிக்கைகளும், கொள்கைகளும் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படவேண்டும்.[2] அதன் பொருட்டு புதிதாக வரலாறுகள் எழுதப்படவேண்டும்.

> 'சிங்கங்கள் தங்கள் வரலாறுகளைப்
> பதிவு செய்யாதவரை, வரலாறுகள் அனைத்தும்
> வேட்டைக்காரன் பெருமைகளைத்தான்
> பேசிக்கொண்டு திரியும்!'

-பக்கம் 251 குற்றப் பரம்பரை அரசியல்,
எண் 59- தமிழ் துணை நூற்பட்டியல்

* * *

பிற்சேர்க்கை–1 (பார்க்கவும் பக்கம் – 89)

FATHER EUSEBIUS – FORGER

Christianity-Revealed.com

Who was Father Eusebius? He was just about the most important man in the early history of the Christian church. Some say he was the "yeast" and his history of the Church was the "bread" on which Christianity was formed.

Eusebius, Bishop of Caesarea was born in 260 CE and died in 339. He wrote the famous *"Historia Ecclesiastica,"* which was published in 325 CE, seventy-two years before the New Testament was canonized. His book has been referred to as the *History of the Church,* which laid down the course of Christianity that is still in effect today. It was with Eusebius' help that his close friend, pagan-turned-Christian Roman Emperor Constantine the Great, won the crown. His close relationship with Constantine, then made it easy to bring about the Edict of Milam in 313 CE which removed penalties for professing Christianity. It was not until Theodosius I, on February 27, 380 CE, declared "Catholic Christianity" the only legitimate imperial religion. Until this time the New Testament as we know it today did not exist. What did exist were various writings and notes written by unknown authors. Constantine with Eusebius at his right hand presided over the Church Council of Nicaea in 325 CE. It was there that the cardinal principle of the trinity was invented and canonized. From that time until the Reformation in the 16th Century there was only Catholic Christianity¯that which Eusebius engineered.

Eusebius wrote, *"the names of Jesus and Christ were both known and honored by the ancients"*. (Hist. Eccl. lib. i. ch. iv). Eusebius, who is Christianity's chief guide for the early history of the Church, confesses that he was by no means scrupulous (giving careful attention to what is right or proper), to record the whole truth concerning the early Christians in the various works that he has left behind him. (Eusebius, Hist. Eccl., ch.8 p. 21).

The book *"Rise and Fall of the Roman Empire"* states that: *"Eusebius indirectly* confesses that he had included stories that would do credit to the glory of Christianity and he had suppressed all that could tend to discredit Christianity. The carefulness of the historian has exposed his own character of censorship" *(Eusebius and the Christian Martyrs,* Chapter 16, pg. 197).

Edward Gibbon, speaking of Eusebius wrote:

> "The gravest of the ecclesiastical historians, Eusebius himself, indirectly confesses that he has related what might rebound to the glory, and that he has suppressed all that could tend to the disgrace, of religion. Such an acknowledgment will naturally excite a suspicion that a writer who has so openly violated one of the fundamental laws of history has not paid a very strict regard to the observance of the other; and the suspicion will derive additional credit from the character of Eusebius, which was less tinctured with credulity, and more practiced in the arts of courts, than that of almost any of his contemporaries" (Gibbon, Rome, vol. ii., Philadelphia, 1876).

Gibbon also wrote:

> "It must be confessed that the ministers of the Catholic Church imitated the profane model which they were impatient to destroy. The most respectable bishops had persuaded themselves that the ignorant rustics would more cheerfully renounce the superstitions of Paganism if they found some resemblance, some compensation, in the bosom of Christianity. The religion of Constantine achieved in less than a century the final conquest of the Roman empire; but the victors themselves were insensibly subdued by the arts of their vanquished rivals" (Gibbon, Rome, vol. iii. p. 163).

Dr. Robert L. Wilken, first Protestant scholar to be admitted to the staff of Fordham University recently wrote:

> "Eusebius wrote a history of Christianity in which there is no real history. Eusebius was the first thoroughly dishonest and unfair historian in ancient times". *(The Myth of Christian Beginnings, History's Impact on Belief,* Chapter III: The Bishop's Maiden: History Without History, p73, p57)

Another scholar, Joseph Wheless charged that Eusebius was one of the most prolific forgers and liars of his age in the church, and a great romancer; in his hair-raising histories of the holy Martyrs, he assures us "that on some occasions the bodies of the martyrs who had been devoured by wild beasts, upon the beasts being strangled, were found alive in their stomachs, even after having been fully digested"! *(FORGERY IN CHRISTIANITY: A Documented Record of the Foundations of the Christian Religion,* 1930;

quoted Gibbon, History, Ch. 37; Lardner, iv, p. 91; Diegesis, p. 272)

After reading the above, one should ask two questions:

1. Just how genuine/honest are the writings in the New Testament? And
2. Are Christians following just another man-made Abrahamic Derivative Religion (ADR)?

Paul L. Maier (1999) wrote:

> "They cannot deny their crime: the copies are in their own handwriting, they did not receive the Scriptures in this condition from their teachers, and they cannot produce originals from which they made their copies. Some have even found it unnecessary to emend the text but have simply rejected the Law and the Prophets, using a wicked, godless teaching to plunge into the lowest depths of destruction. They have not been afraid to corrupt divine Scriptures, they have rescinded the rule of ancient faith, they have not known Christ, they ignore Scripture but search for a logic to support their atheism. If anyone challenges them with a passage from Scripture, they examine it to see if it can be turned into a common syllogism. Abandoning the holy Scripture of God, they study "geometry" [earth measurement], for they are from the earth and speak of the earth and do not know the One who comes from above." (*Eusebius: The Church History,* from Book 5 section 28)

After reading how the Church Historian, Eusebius altered early writings to fit his own idea and concept of how he believed Jesus was, could the Christian truly believe that Jesus said all the things credited to him? Are Christians willing to put their souls on the line? Those who will never question what has been written and use "blind faith" as their logic will always dismiss any claims, evidence and facts that have been produced to show that this religion is faulty and could never had happened in the way the New Testament presents it. Like the old saying goes: "Don't confuse me with the facts, my mind's already made up!" Are you one of them?

Paul Maier continues:

> "Many manuscripts are available because their disciples zealously made copies of their "corrected" – though really corrupted – texts. This sinful impudence can hardly have been unknown to the copyists, who either do not believe the Scriptures were inspired by the Holy Spirit and are unbelievers or deem themselves wiser than the Holy Spirit and are possessed."

The Catholic Encyclopedia, published with the imprimatur of the Roman Catholic authorities, tell us that the decision to have four gospels instead of just one is credited to the early church father St. Irenaeus, who was the first writer to mention the four gospels by name.

St. Irenaeus wrote:

> "It is not possible that the gospels be either more or fewer than they are. For since there are four zones of the world in which we live, and four principle winds, while the Church is scattered throughout the world and the pillar and ground of the Church is the

> gospel, it is fitting that we should have four pillars breathing out immortality on every side" (Catholic Encyclopedia vol. VI, pg. 659).

As for the writings of Paul, the Encyclopedia Biblica states categorically:

> "With respect to the Canonical Pauline Epistles, none of them are by Paul. They are all, without distinction, pseudographia (false writings). The group (ten epistles) bears obvious marks of a certain unity, of having originated in one circle, at one time, in one environment, but not of unity of authorship" (*Encyclopedia Biblica* III pg. 3625-26).

The father of Christianity appears to be Paul and the father of the history of the Christian Church appears to be Eusebius. Both never knew or walked with Jesus - according the Christian scriptures, but primarily because there was no real Jesus. The Jesus man-god character is simply fictitious. Yet, Christians today believe everything these two men -Paul and Eusebius -want them to believe. Christians believe every word they read and hear to be the words from God- their *Invisible Friend* in the Sky!

And they are betting their earthly beliefs, behavior and living on these manmade words. Why? To obtain some imagined eternity in a heavenly condo in the sky. How sad!

"Faith is believing something you know ain't true."
- Samuel L. Clemens/Mark Twain (1855-1910)

* * *

பிற்சேர்க்கை–2 (பார்க்கவும் பக்கம் – 89)

HOW CHRISTIANITY WAS INVENTED: THE TRUTH!

Emperor Constantine

Christianity is a copycat religion created by Emperor Constantine (for political purposes) based upon a myth (The Persian savior god Mithra, crucified 600 B.C. ? 400 B.C.?), which was based on other similar myths, all the way back to Chrishna of India (a mythical god that some claim was "crucified" around 1200 B.C.). There were 16 mythical crucifixions before Christ. The belief in the crucifixion of Gods was prevalent in various oriental or heathen countries long prior to the reported crucifixion of Christ. Of the 16 crucifixions, **most were born of a virgin and about half of them on December 25th.**

At Amazon.com, take a look at the book "Beyond All Religion-Beyond religious SCRIPTURES and practices that support intolerance violence and even war, A PEACEFUL WORLD AWAITS". Website: http://www.beyondallreligion.net/ Included: How is this for religious intolerance? Rabbi Yaacov Perrin said, "One million Arabs are not worth a Jewish fingernail." Muhammad married a 6 year old girl. Joseph Smith, the founder of Mormonism had 24 wives, one was 14 years old. Smith was convicted of fraud (of being an "imposter"- a con man), in a court of law.. Then he wrote "The Book of Mormon..". The story of Moses is patterned after the story of Sargon the Great. Moses did not exist. Christianity was invented for political purposes

by the Roman Emperor Constantine ("The Great") in 325 A.D. based on the myth of Mithra (Persian savior god born on December 25th). Look at "Compassion Center" on Facebook. A wonderful alternative to religion.

There were too many religions in Rome in 325 A.D. A Council was called in an endeavor to amalgamate the many religions of the Roman Empire into one. Christianity plagiarized older myths and legends historicized to suit the Roman Catholic Church while combining the numerous religions existing at the time (Krishna, Horus, Mithraism, Osirian, Isis, and many other mystery religions). For unity and to stop all the conflicts between the numerous religions...

Christianity was INVENTED

Eusebius (Bishop of Caesarea in Palestine "Father of Church History") attended the Council of Nicaea in 325 A.D. and was a friend of Emperor Constantine, who also attended and made the keynote speech. Constantine instructed Eusebius to organize the compilation of a uniform collection of new writings developed from primary aspects of the religious texts submitted at the council. Eusebius has been described as follows: Jacob Burckhardt (19th century cultural historian) dismissed Eusebius as **"the first thoroughly dishonest historian of antiquity"**. He has been also described as "a political theologian". He favored doctoring his history in his own words to "be useful first to ourselves and afterwards to posterity". Edward Gibbon (18th century historian –"The Decline and Fall of the Roman Empire") dismissed his testimony on the number of martyrs and impugned his honesty

At first, there was controversy about the new religion at the Council of Nicaea. Some claimed it was a fiction and Christ was a fiction, but they did not prevail.

http://www.mountainman.com.au/essenes/Council%20of%20Nicaea.htm.

(To be clear on this matter, I say don't trust Eusebius's reports of the Apostles or how the Apostles died, and be suspicious of all of his writings.) - Author Samuel Butler

Eusebius then arranged for scribes to produce fifty sumptuous copies to be written on parchment in a legible manner, and in a convenient portable form, by professional scribes thoroughly accomplished in their art (ibid.).

Bishop Eusebius

These orders, said Eusebius, were followed by the immediate execution of the work itself we sent him [Constantine] magnificently and elaborately bound volumes of three-fold and four-fold forms (Life of Constantine, vol. iv, p.36). They were the New Testimonies, and this is the first mention (c. 331) of the New Testament in the historical record. With his instructions fulfilled, Constantine then decreed that the New Testimonies would thereafter be called the word of the Roman Saviour God (Life of Constantine, vol. iii, p. 29) and official to all presbyters sermonising in the Roman Empire.

He then ordered earlier presbyterial manuscripts and the records of the council burnt and declared that any man found concealing writings should be stricken off from his shoulders **(beheaded).**

NONE OF THESE 50 NEW TESTAMENTS EXIST TODAY OR ARE ADMITTED TO EXISTING!

THIS NEW TESTAMENT WAS THE OFFICIAL BOOK OF THE NEW UNIFIED RELIGION OF CONSTANTINE NOT THE BIBLE!

ALL OTHER BOOKS TO BE BURNED ,THAT WOULD INCLUDE THE TORAH/OLD TESTAMENT

IT INCLUDED BURNING THE GREAT LIBRARY OF ALEXANDRIA IN EGYPT 391 A.D.

In 391 A.D., Christian Emperor Theodosius I ordered the destruction of all pagan ("heathen" they were also called) temples. The Christian Patriarch Theophilus of Alexandria (Egypt) complied with this request. Seizing this opportunity, Theophilus exerted himself to the utmost to expose the pagan mysteries to contempt, the Serapeum also he showed full of extravagant superstitions, (and) the commander-in-chief of the troops in Egypt, assisted Theophilus in demolishing the heathen temples (and) then he destroyed the Serapeum. -Historia Ecclesiastica

The Serapeum housed the Great Library of Alexandria.

http://en.wikipedia.org/wiki/Library_of_alexandria

Why there are no records of Jesus Christ?

Federic William Farrar

It is not possible to find in any legitimate religious or historical writings compiled between the beginning of the first century and well into the fourth century any reference to Jesus Christ and the spectacular events that the Church says accompanied his life. This confirmation comes from Frederic Farrar (1831-1903) of Trinity College, Cambridge:

"It is amazing that history has not embalmed for us even one certain or definite saying or circumstance in the life of the Saviour of mankind … there is no statement in all history that says anyone saw Jesus or talked with him. Nothing in history is more astonishing than the silence of contemporary writers about events relayed in the four Gospels." (The Life of Christ, Frederic W. Farrar, Cassell, London, 1874)

This situation arises from a conflict between history and New Testament narratives. Dr Tischendorf made this comment:

"We must frankly admit that we have no source of information with respect to the life of Jesus Christ other than ecclesiastic writings assembled during the fourth century." (Codex Sinaiticus, Dr Constantin von Tischendorf, British Library, London)

There is an explanation for those hundreds of years of silence: the construct of Christianity did not begin until after the first quarter of the fourth century, and that is why Pope Leo X (d. 1521) called Christ a "fable" (Cardinal Bembo: His Letters…, op. cit.), and later Pope Paul III expressed similar sentiments, saying that there was no valid document to demonstrate the existence of Christ. He confessed that Jesus never existed, adding that he was no other than the sun, adored in its Mithraic sect…"

BUT WAIT, WHAT DOES THE CATHOLIC CHURCH SAY ABOUT THIS?

You will be surprised:

From: http://www.bibliotecapleyades.net/biblianazar/esp_biblianazar_40.htm :

What (your local) Church doesn't know and/or wouldn't want you to know, if they knew.

It has often been emphasized that Christianity is unlike any other religion, for it stands or falls by certain events which are alleged to have occurred during a short period of time some 20 centuries ago. Those stories are presented in the New Testament, and as new evidence is revealed it will become clear that they do not represent historical realities.

The Church agrees, saying:

"Our documentary sources of knowledge about the origins of Christianity and its earliest development are chiefly the New Testament Scriptures, the authenticity of which we must, to a great extent, take for granted." (Catholic Encyclopedia, Farley ed., vol. iii, p. 712)

The Church makes extraordinary admissions about its New Testament. For example, when discussing the origin of those writings, "the most distinguished body of academic opinion ever assembled" (Catholic Encyclopedias, Preface) admits that the Gospels "do not go back to the first century of the Christian era" (Catholic Encyclopedia, Farley ed., vol. vi, p. 137, pp. 655-6).

This statement conflicts with priesthood assertions that the earliest Gospels were progressively written during the decades following the death of the Gospel (sic) Jesus Christ. In a remarkable aside, the Church further admits that, "the earliest of the extant manuscripts [of the New Testament], it is true, do not date back beyond the middle of the fourth century AD"– (Catholic Encyclopedia, op. cit., pp. 656-7).

That is some 350 years after the time the Church claims that a Jesus Christ walked the sands of Palestine, and here the true story of Christian origins slips into one of the biggest black holes in history. There is, however, a reason why there were no New Testaments until the fourth century: they were not written until then, and here we find evidence of the greatest misrepresentation of all time. It was British-born Flavius Constantinus (Constantine, originally Custennyn or Custennin) (272-337) who authorized the compilation of the writings now called the New Testament.

Yes, but what about references to the four Gospels supposedly before the 3rd Century A.D.?

For example: What about Tacitus, Roman Historian, who wrote about the persecutions of the early "Christians"?

Regarding Tacitus, (Senator and Historian of the Roman Empire) these writings supporting the persecution were mysteriously found in the 15th century in the forests of Germany, following a reward offered by Leo X for old writings, and following a history of forgeries in Catholicism: In any case, there has been serious questions about the integrity of the famous passage about Christians.

From: http://www.earlychristianwritings.com/tacitus.html

Gordon Stein denied the authenticity of this passage, arguing:

(1) no corroborating evidence that Nero persecuted the Christians

(2) there was not a multitude of Christians in Rome at that date

(3) Christian was not a common term in the first century

(4) Nero was indifferent to various religions in his city

(5) Nero did not start the fire in Rome

(6)· Tacitus does not use the name Jesus

(7) Tacitus assumes his readers know Pontius Pilate

Yes, but what about Josephus?

His reference to Jesus in Testimonium Flavianum has been claimed as a later addition, (Forgery-Author) not questioning the authenticity of the main work.

See: http://www.truthbeknown.com/josephus.htm

Yes, but what about Pliny the Younger's letter to Emperor Trajan 112 A.D. (Pliny was not a contemporary of Jesus, and he never mentions "Jesus"?) Pliny the Younger (c.61 – c. 112), the provincial governor ofPontus and Bithynia, wrote to Emperor Trajan c. 112 concerning how to deal with Christians, who refused to worship the emperor, and instead worshiped "Christus".

What about that?

Charles Guignebert

Charles Guignebert, who does not doubt that Jesus of the Gospels lived in Gallilee in the 1st century, nevertheless dismisses this letter as acceptable historical evidence:

"Only the most robust credulity could reckon this assertion as admissible evidence for the historicity of Jesus" – http://en.wikipedia.org/wiki/Historicity_of_Jesus

Nevertheless, I was concerned about the possibility of far older Gospels when I was stating that Christianity was invented around 325 A.D., but the research thread leads back to Eusebius, the FORGER, ("Papias, quoted by Eusebius...").

Eusebius was the dishonest Church Father historian of antiquity who made up a lot of Church history. "we shall introduce into this history in general only those events which may be useful first to ourselves and afterwards to posterity". The research thread (about older Gospels) also leads to the "spurious" writings of Irenaeus: http://www.sodahead.com/united-states/gospels-late-forgeries/blog-249881/.

THE RELIGIOUS QUICKSAND OF EARLY CHRISTIAN WRITINGS.

A SCHOLAR AND YOU WILL BE QUICKLY SWALLOWED UP IN QUICKSAND RESEARCHING SO-CALLED "PRE-NICENE" WRITINGS.

What about pre-nicene so-called "Early Christian" (Gnostic?) writings? They disagreed with each other, were riddled with conflict and forgeries, of questionable and confusing timing and origin , had conflicting opinions about supposed truths, and were not coherent enough for an organized religion. So the myth of Mithra, the Persian Savior God, was chosen by Emperor Constantine and Bishop Eusebius as the model to create the new religion , Christianity. What if there are references to Christ and/or Jesus in pre-nicene writings? That doesn't mean Jesus or Christ existed. What if there are references to "fairies" in pre-nicene literature? That wouldn't mean fairies existed, prior to the Council of Nicaea in 325 AD or later, even if the Council claimed the existence of fairies and made it doctrine, with severe penalties for those who denied their existence.

Yes, but what about Church father Justin Martyr's purported use of the New Testament gospels?

From Acharya S., Biblical scholar: (http://www.freethoughtnation.com/contributing-writers/63-acharya-s/679-does-justin-martyr-quote-the-gospels.html)

"No verbatim quotes or unambiguous citations from the canonical gospels as we have them appear anywhere in Justin's extant works."

Matthew, Mark and Luke are never named by Justin; nor is John.

Nor does Justin Martyr name any of the evangelists in any known text

In any case, the Catholic Encyclopedia itself supports the thesis that the Gospels of Christianity were written no earlier than the 4th Century: "the earliest of the extant manuscripts [of the New Testament], it is true, do not date back beyond the middle of the fourth century AD"– (Catholic Encyclopedia, op. cit., pp. 656-7).

Retired Episcopal Bishop says Hell is an invention of the church to control people with fear:

http://www.youtube.com
watch?NR=1&feature=endscreen&v=5BkP9-HG8-I
http://en.wikipedia.org/wiki/John_Shelby_Spong

* * *

துணை நூற்பட்டியல் - ஆங்கிலம்

1. Abbe JA: Dubois - Hindu Manners, Customs and Ceremonies, Rupa Co, New Delhi (2011).
2. Adolf Hitler; Mein Kampf (Translation by Jonchim C.Fest), Jaico Publishing House, Mumbai (2012).
3. Alain Danielou; A Brief History of Inida, Inner Traditions, India Publication Rochester, USA (2003).
4. Alalasundaram.R; The Colonial Word of Ananda Ranga Pillai 1736-1761 Published by the author at Pandichery (1998).
5. Anand Amaladass et al "The Indian Christiad, Gujarat Sahitya Prakash, Anand, Gujarat (1995).
6. Anwar Shaikh, Islam the Arab Imperialism, Hindu Writer Forum New Delhi (1998)
7. Anwar Shaikh, The Vedic Law, Bharatiya Gyandeep (UK), 1999
8. Arun Shorie, Our Harvesting Soul, Missionaries Their Design, Their Claims, ASN Publications (2000)
9. Babu Suseelan, Hindu Rashtra An Ideal Nation, State, Why and How? Ohm, Publishers, PA 7050, USA (2013)
10. Bartolome De Lascasus; Devastation of the Indies, The Johns Hopkins University Press, London (1992)
11. Basham.A.L., The Wonder That was India, Picador Publication, London (2004)
12. Caldwell R. Tinnevelly Shanars a Sketch of Their Religion and Their Moral condition and characteristics as a Caste, Christian knowledge Society Press, Vepery, Chennai (1849)
13. Catechism of the Catholic Church, Published by Theological Publication of India, New Delhi (2009).
14. Chamanlal, India Mother of Us All; Akshaya Prakasham, New Delhi, (2013)
15. Charles R.Swidoll, Strong Reproofs for a Scandalous Church, Insight; Living Publication (1988).
16. Daniel Jonah Goldhagen, A Moral Reckoning; Alfred A Knopf Publishers, New York (2002).

17. David E. Stannard, The conquest of the New World, American Holocaust, Oxford University Press, New York (1992).

18. David E.Stannard, American Holocaust, Oxford University press, New York (1993)

19. David Frawley & Rajaram N.S; Hidden Horizons; Swamynarayan, Amdavad (2008).

20. David Leeming, Jealous Gods, Chosen People; Oxford University Press, New York (2004).

21. David Mills, Atheist Universe; Ulysses Press, Canada (2006)

22. Dharampal, The Beautiful Tree; Biblia Impex (p) Ltd New Delhi, (1983)

23. Earle Ellis.E; The Old Testament in Early Christianity; Baker Book House, Michigan (1992).

24. Eleanor Herman, Mistress of the Vatican; Harper Collins E-Books.

25. Elizebeth Clare Prophet, Lost years of Jesus; Jaico Publishing House, Mumbai (2011).

26. Foote, G.W; and Wheeler, J.M; Crimes of Christianity; E-text; http://www.ftarchives.net.

27. Francis X.Clooney, S.J. The Truth the Way, the Life, Christian commentary on the three Srivaishnava Hindus"; Willam B.Eerdmans Publishing Company, Michigan (2008).

28. Henry H Halley, Halleys Bible Hand Book; OM Books Publishers, Secunderabad (2001)

29. Harischandra Lalsingh, The Treasury of Hinduism; Robin Books, New Delhi (2002)

30. Herma Briffault - The Devastation of the Indies. The Johns Hopkins University Press, London (1992)

31. Henry Kamen, The Spanish Inquisition; Phoenix Giant Publication, London (1998).

32. Holger Kersten; Jesus Lived in India; Penguin Books, New Delhi (2001).

33. Ian Wilson ; Murder at Golgotha; St.Martin Griffin, New York (2006).

34. Ian Wilson "Jesus, The Evidence"; Pan Books, London (1985).

35. Indian Path to Become Global Super Power, Swadeshi Awareness Movement, Coimbatore.
36. Ishwar Sharan; The Myth of St.Thomas and the Mylapore Shiva Temple; Voice of India New Delhi (2010).
37. Issac et al, Muziris Attimariyude Reethisasthram; Muziris Paithruka Parirakshana Vedi, Kochi (2011).
38. Itihasa Bhusana; The Study of Indian History and Culture Vol:VIII; Bhisma Publication, Thane (1993).
39. John Julius Norwich - The Popes; Vintage Books, London (2011)
40. Kalyaraman.S; Indian Hieroglyphs; Saraswati Research Center, Chennai (2012).
41. Kalyaraman.S; Rastram; Saraswati Research Center, Chennai (2011).
42. Karen Armstrong, "The Bible The Biography"; Manjul Publishing House, Bhopal, (2009).
43. Kenneth Humphreys, Jesus Never Existed, Condensed Version; Hindu Voice Publication, Mumbai.
44. Krishnan P, Facets of Saiva Siddhanta, Dept. of Saiva Siddhanta, Universty of Madres, Chennai (2000)
45. Kulkarni, S.D.; Brahman, The Fountain of Eternal Human Culture; BHISHMA Publication Bombay (1991), Vol.12.
46. Kunal Ghosh, Separation in North East India; Suruchi Prakasam Publishers, New Delhi (2008)
47. Lal K.S, Growth of Scheduled Tribes and castes in Medieval India; Aditya Prakasham, New Delhi (1995)
48. Maanoj Rakhi, Christianity in a Different Light Vol II; Maanoj Rakhit Publishers, Mumbai (2005)
49. Maanoj Rakhit, Judaism Christianity Islam Hinduism; Maanoj Rakhit Publishers, Mumbai (2008)
50. Maanoj Rakhit; Monstrous Oath St.Xavier Took; Published by Maanoj Rakhit, Mumbai (2009).
51. Mahalingam.N; Ancient India; International Society for the Investigation of Ancient Civilization, Chennai (1998).
52. Mallya M.R., Ancient India Search for a True Chronology; Chaitanya Publication Bangalore (2005).

53. Martin Luther, On the Jews and Their Lies; www.humanitas-international-ord/Showcase/Chronography/documents/luther-jews.htm.

54. Masih.Y: A comparative Study of Religion; Motilal Banarsidass, New Delhi (2005)

55. Matilda Joslyn Gage - Woman, Church and State; The Truth Seeker Company Publication, New York, Republished by Voice of India, New Delhi (1997)

56. Micheal Baigent et al; Holy Blood, Holy Grail; Dell Publishers New York (1983).

57. Minhaz Merchant, The New Clash of Civilizations; Rupa Publication, Mumbai (2013).

58. Murty. K.R., CP Brown. A Colonial Legacy; Published by K.R.Murty.

59. Nicolas Notovitch, The Unknown Life of Jesus Christ, Translated in English by J.H.Connelly and others; Hachette Book Publishers, India (2013)

60. Nilakanta Sastri - A History of South India; Oxford University Press, New Delhi (2009)

61. Padmaja Ashok, The Social History of England; Orient Black Swan Publication, Chennai (2011)

62. Paliwal K.V. The Composition and Infallibility of Bible; Hindu writers Forum, New Delhi (2005)

63. Panikkar K.M, Malabar and The Portuguese; Voice of India, New Delhi (1997).

64. Panikkar, Malabar and the Portuguese Voice of India Publication, New Delhi (1929)

65. Paul Johnson 'A History of the Jews'; Harper Perennial Publishers, New York (1988).

66. Paul Johnson "A History of Christianity"; Published by Simon and Schuster New York (1995).

67. Rajaram N.S. "From Harappa to Ayodhya"; Sahitya Sindhu Prakashana, Bangalore (1997)

68. Rajayyan K; History in Theory and Method; Ratna Publications, Madurai (2009).

69. Rajayyan.K., The History of the United States; Ratna Publication, Madurai (2000)

70. Rajiv Malhotra and Aravindan Neelakandan; Breaking India; Amaryllis Publishing House, New Delhi (2011)

71. Rajiv Malhotra, Indras Net; Herper Collins Publishers India (2014)

72. Ram Swarup; Hinduism and Monotheistic Religion; Voice of India (2009)

73. Ramachandran T.N.Saiva Siddhantam an Explication and Assessment by Scholars The world over; Dharmapuram Adeenam (1984)

74. Ramachandran.T.N., Saiva Siddhantam (Vol III), An assessment by International Scholars; - International Institute of Saiva Siddhanta Research, Dharmapuram (1994)

75. Readers Digest, Vanished Civilization; Published by Readers Digest Association Ltd, London (2002).

76. Rjayyan.K.Treachery and Terror against Indian Tribes of U.S.A.; Ratna Publications, Madurai (2004)

77. Robert H.Eisenman et al, The Dead Sea Scrolls Uncovered; Penguin Books, New York (1992).

78. Robert Korzybski, Buddhas Big Foot, 2007.

79. Robert Van De Weyer; 366 Readings from Hindusim; Jaico Publishing House, Mumbai (2005)

80. Russel Bertrand, Why I am not a Christian; Rouledge Classics, London and New York (2004)

81. Sam Harris, The End of Faith; Norton and Company, New York (2005).

82. Samtharris, "Letter to a Christian Nation"; Borzai Book Publishers, New York (2006).

83. Sarada Devi, The History of Nadars; Vanalhi Maheswaran Publication, Coimbatore (2010)

84. Satyarth Prakash, Blue and Koran, Published by Devraryana Arya (2005).

85. Savarkar G.D. Jesus The Christ was a Hindu; Veda Vidyana Mandal Publication, Pune (March 2013)

86. Second International Confernce "The History of Early Christianity in India; Souvenir, Institute of Asian Studies, Chennai (Conference held during January 13-16,2007).

87. Semetic Religions and their Horrors of Fundamentalism; Writers Forum, New Delhi (2005)

88. Shribad Kulkarni, India Abroad; Bhisma Publication, Bombay (1995).

89. Srinivasan Dr. M.S. Conversion to Christianity Agression in India - First Public Protection Trust, Chennai (2000).

90. Sita Ram Goel, History of Hindu, Christian Encounters; Voice of India, New Delhi (2010)

91. Sita Ram Goel, Pseudo - Secularism Christian Missions and Hindu Resistance; Voice of India (1998).

92. Subrahmanian. N, Original sources for the History of Tamilnad; Ennes Publications, Udumalpet (1994)

93. Sullivan W.K., On the Manners and Customs of the Ancient Irish - E.Book.

94. Sunder - Yesuvadian (a) Mankad, M.S; India is a Christian Nation.

95. Swami Dayananda Saraswati, Do all the Religions Have the Same Goal; Arsha Vidya Centre, Chennai (2009)

96. Swami Prajanananda, Christ the Saviour and Christ Myth; Ramakrishna Vedanta Math Publication, Kolkatta (2006).

97. Thathagatanandu; Journey of the Upanishads to the West; Advaita Ashrama Publication, Mayavathi, Himalayas (2005).

98. Theodor Griesinger Dr.Mysteries of The Vatican Vol II, W.M.H.; Allen & Co London (1864), Translation from Germans to English.

99. Thomas Paine, The Age of Reason; Hindu Writers Forum, New Delhi (2008)

100. Timothy Freka et al "The Jesus Mysteries"; Thorson Publication, London (2000).

101. Ulick Joseph Bourke, Aryan Origin of the Gaelic Race and Language; (London 1875) - E.book.

102. Ulick Joseph Bourke, Pre Christian Ireland (Dublin, 1879) E-Book.

103. Umesh Patri Problems in Paradise; Kiti Nagar, Shri Santam Dharmsabha, New Delhi (1999)

104. Umesh Patri; Problems in Paradise, Hindu Writers Forum, New Delhi (2002).

105. Venkataraman.R.; History of Science and Technology; Ennes Publication, Udumalpet (1997).

106. Vincent Kumaradoss, Robert Caldwell, A Scholar Missionary in Colonial South India; ISPCK publication, Delhi (2008)

107. Vishnu Vardhan, Jesus Christ - A Myth, Bible - Not the world of God - Christianity - A political Expansionism; Published by Vishnu Vardhan, Chennai (2010)

108. Viswanathan, Am I a Hindu?; Rupa & Co, New Delhi (2009)

109. Vivekananda Kendra Prakashan; Expression of Christianity with a Focus on India; Vivekananda Kendra Patrika Vol. 35, No.1.

110. Wells G.A, "The Historical Evidence for Jesus"; Prometheus Books, Buffalo, New York (1982).

111. Thomas Asbridge, The First Crusade; The Free Press, London (2005)

112. Jeyakumar, Indus Valley Civilisation; Albright Publications, Chennai (2009)

113. Kalavai Venkat, Basics of Christian Theology - a Guide to Hindus.

114. Godfrey Higgins (1772-1833), Jews Indian Origin, University Books, Newyork (1965).

115. Rajaram N.S., The Dead Sea Scrolls And the Crisis of Christianity, Minerva Press, London (1997).

துணை நூற்பட்டியல் – தமிழ்

1. சுப்பு: திராவிட மாயை ஓர் பார்வை, திரிசக்தி பப்ளிகேஷன்ஸ், சென்னை (2011).
2. சிவஜெயப்பிரகாஷ், சிவ, மூவேந்தர் மள்ளர் குலத்தை மூடிபுதைக்கும் தேவேந்திர குலம்?; மள்ளர் சங்கம், திருநெல்வேலி (2011)
3. ஈஸ்வர் சரண், புனிததாமஸ் கட்டுக்கதையும் மயிலை சிவாலயமும்; திராவிட சான்றோர் பேரவை, சென்னை (2009)
4. எப்ஸி தாம்ஸன், மறை தேன்துளிகள்; Mrs.Hepzie Thompson Publisher, Neyyoor (2010)
5. கந்தசாமி, தொல்காப்பியம் வரலாற்று நோக்கில்; ராமையா பதிப்பகம், சென்னை (2010)
6. கேப்டன் அமிருத்தீன், இயேசுநாதர் மறைக்கப்பட்ட உண்மைகள்; சாஜிதா புக்சென்டர், சென்னை (2010).
7. அஹமது அலி பழனி பாபா, புனித பைபிள் ஆண்டவனால் அருளப்பட்டதா?; ஸாஜிதா புக் சென்டர், சென்னை (2006)
8. ஜைனுல் ஆபீதின். P. இயேசு சிலுவையில் அறையப்படவில்லை, நபீலா பதிப்பகம், சென்னை (2010)
9. கோலப்பன், தூங்கியது போதும்; கோலப்பன் வெளியீடு, நாகர்கோவில் (2013)
10. காசிப்பழம் என்ற சின்னாடார்.பி., உமரிமாநகர் தலவரலாறு; மிராசுதார் காசிப்பழநாடார் வெளியீடு, உமரிமாநகர் (1987)
11. கலீல் அஹ்மது எம், முஸ்லீம்களின் எதிர்காலம்; அஹமதிய்யா முஸ்லிம் ஜமா அத், சென்னை (2000)
12. கிருஷ்ணமாசாரியார்.அ, பாஞ்சஜன்யம் (மாத இதழ்), வெளியிட்டவர் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ, திருச்சி 6.
13. ஹஸ்ரத் மவ்லானா அபுல் அதா ஜலந்திரி, சிலுவையில் மரணம்?; அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமா அத், சென்னை (2010)
14. தாயப்பன். சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே! மற்றும் பல நூல்கள்; வெளியிட்டோர் எஸ்.தாயப்பன். 12, ஜி.டி.நாயுடு தெரு, பாலாஜி அவென்யு, சென்னை 1 (2012)
15. அரவிந்தன் நீலகண்டன் மற்றும் மற்றவர்கள், சாதிகள் ஒரு புதிய கண்ணோட்டம்; தமிழ் ஹிந்து வெளியீடு, நாகர்கோவில் (2010)

16. ராமச்சங்குப் பாண்டியன், தமிழ்ச் சிவஞானபோதம் முதல் நூலா? வழி நூலா?; ராமச்சங்குப் பாண்டியன் வெளியீடு, திருமந்திரநகர் தூத்துக்குடி – (1984)

17. சத்தியமூர்த்தி, சேதுபந்தனன், ''கிறித்துவம் மலர்ச்சி, வளர்ச்சி, தளர்ச்சி'', திராவிடச் சான்றோர் பேரவை, சென்னை (2009)

18. லட்சுமி நாராயணன்.கே.சி; தமிழக அந்தணர் வரலாறு; எல்.கே.எம்.பப்ளிகேஷன், சென்னை (2008)

19. பிள்ளை.கே.கே, தென் இந்தியா வரலாறு தொகுதி–II; பழனியப்பா பிரதர்ஸ், சென்னை (2007)

20. கந்தையா பிள்ளை ந.சி; சிவன்; நாம் தமிழர் பதிப்பகம், சென்னை (2008)

21. வேதபிரகாஷ், இந்தியாவில் செயின்ட் தாமஸ் கட்டுக்கதை; மேனாட்டு மதங்கள் ஆராய்ச்சிக் கழகம், சென்னை (1989)

22. வானமாமலை, நா; தமிழகத்தில் சாதி சமத்துவ போராட்டக் கருத்துக்கள்; அலைகள் வெளியீட்டகம், சென்னை (2008)

23. கிருஷ்ணமாசார்யர்.அ, கங்காதேவியின் மதுராவிஜயம்; ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ வெளியீடு, ஸ்ரீரங்கம் (2010)

24. சத்தியமூர்த்தி, சேதுபந்தனன், செம்மொழித் தமிழ்ச்சமயக் கருத்தரங்கக் கட்டுரைகள்; திராவிடச் சான்றோர் பேரவை, சென்னை (2010)

25. கனகசபாபதி.ப; பாரதப் பொருளாதாரம் அன்றும் இன்றும்; கிழக்குப் பதிப்பகம், சென்னை (2009)

26. வேலுப்பிள்ளை.ஆ, தமிழர் சமய வரலாறு; பாரி புத்தகப் பண்ணை, சென்னை (1985)

27. சுந்தரம், பி.எம், பேரறிஞர் மாக்ஸ் முல்லர் ஒரு மீள்பார்வை; கலாசம்ரஷண சங்கம், தஞ்சாவூர் (2004)

28. பிரபுபாதா சுவாமி – கிருஷ்ண உணர்வும், கிறிஸ்த்துவமும், பக்தி வேதாந்த அறக்கட்டளை, சென்னை (2010)

29. மிஷல் தனினோ (தமிழில் கிருஷ்ணமூர்த்தி) கிழக்கு பதிப்பகம், சென்னை (2012)

30. லட்சுமி நாராயணன். கே.சி, தலித்துகளும் பிராமணர்களும்; எல்.கே.எம்.பப்ளிகேஷன், சென்னை (2009)

31. தெய்வநாயகம், மு., திருநீறா? சிலுவையா?; திராவிட ஆன்மீக இயக்கம் வெளியீடு, சென்னை (2008)

32. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு, திருமயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோவில் தலவரலாறு, தமிழ்நாடு அரசு, சென்னை (2005)

33. தேவாசீர் இம்மானுவேல் எல். லரி; ஆதிபலி பிரமாணம்; ஹவிலா வெளியீடு, சீயோன் – சத்தியநகரம் (2007)

34. ராகவன்.பா, நிலமெல்லாம் ரத்தம்; கிழக்கு பதிப்பகம், சென்னை (2005)

35. ஹசன், மேற்குவானம்; புதுயுகம் பப்ளிகேஷன், சென்னை (2007)

36. அப்துல் ஹமீது (மூலம் அலெக்ஸ் ஹேலி), வேர்கள்; இலக்கியச்சோலை, சென்னை (2005)

37. மகாத்மா காந்தி – சுயசரிதை சத்திய சோதனை; நவஜீவன் பிரசுநாலயம், அகமதாபாத் (2008)

38. சகோதரர் அகத்தியன், இந்து சகோதரர்களின் 100 கேள்விகளும் பதில்களும்; We are one publications, Chennai.

39. கேப்டன் குட்டி, எஸ்.பி, ஸ்ரீமத் பகவத்கீதை எளிய தமிழில்; எஸ்.பி.குட்டி வெளியீடு, நாகர்கோவில் (2012)

40. தேவகீதை, ஸ்ரீலஹரி கிருஷ்ணா வெளியீடு; மனுஜோதி ஆசிரமம், சத்திநகரம் (2000)

41. பால் சி.ஜோங், நீர் மற்றும் பரிசுத்த ஆவியின் நற்செய்திக்கு திரும்புதல்; எப்சி பா.பிரசுராலயம், சீயோல், கொரியா (2003)

42. சுப்ரமணியன்.ச.வே; தொல்காப்பியம் தெளிவுரை; மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை (2003)

43. வா.வூ.சி.பஃறுளியிலும் அதற்கப்பாலும் பழந்தமிழ்ச் சங்ககால நாகரிகமும் பண்பாட்டு ஏகாதிபத்தியமும்; Genss Publishers, Urapakkam Chennai (2011)

44. இளமாறன் & மற்றவர்கள், அறியப்படாத தமிழ் உலகம்; பாரதி புத்தகாலயம், சென்னை (2011)

45. இராமன் D. அய்யா வைகுண்டரும் ஆங்கிலேயன் சூழ்ச்சியும்; T. ரோகினிஸ் வெளியிடு, நாகர்கோவில் (1996)

46. வேதபிரகாஷ் மதம் மற்றும் தத்துவங்களில் தென்னிந்தியாவின் பங்கு; திராவிட சான்றோர் பேரவை, சென்னை (2009)

47. தோழர் S. குருசாமி, நான் ஏன் கிறிஸ்துவனல்ல – பெட்ரண்ட் ரஸல்; பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை (2012)

48. மெர்வின், காசு இங்கே, இயேசு எங்கே?, மெர்வின் வெளியீடு, சென்னை (2014).

49. இலக்குவன்.கி, உலகை குலுக்கிடும் பொருளாதார நெருக்கடி; பாரதி புத்தகாலயம், சென்னை (2010)

50. ஜ்யார்ஜ்; கிறிஸ்துவர்கள் சிந்தனைக்கு; பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை (2011)

51. அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன், சென்னை, இயேசுவும் இன்றைய கிறித்துவமும்.

52. ஆசீர்வாத பிரிசார், கரும்பாம்பின் விஷக்கடிக்கு மருந்து, புதுச்சேரி சனம விக்கிராகனி, மாதாகோவில் அச்சகம், (கத்தோலிக்க சர்ச்) 1860

53. லட்சுமி நாராயணன், கே.சி. பேரூர் வீர சைவ ஆதீன ஆதின குரு முதல்வரின் வழிபாட்டு கொள்கை எது? ரம்யா பதிப்பகம், சென்னை (2010)

54. இரத்தினவேல், பா.தமிழ் வழக்கும் அயல் வழக்கும்; சைவசித்தாந்த சபை, ஈரோடு (2007)

55. தயானந்த சரஸ்வதி, மும்மதம்; சென்னை ஆரிய சமாஜம், சென்னை (1995).

56. சிவா (எ) சிவன் சுவாமிகள், ஏணிப்படிகளில் மாந்தர்கள்; நர்மதா பதிப்பகம், சென்னை (2010).

57. சிவகுமார். வெ, கருப்பு மாளிகை, ஞாலமாற்று நடுவம், சென்னை.

58. அரவிந்தன் நீலகண்டன் & மற்றவர்கள், பண்பாட்டை பேசுதல்; தமிழ் ஹிந்து வெளியீடு, நாகர்கோவில் (2009).

59. முகில்நிலவன் (தமிழாக்கம் தேவதாஸ்); குற்றப்பரம்பரை அரசியல்; பாலை வெளியீடு, மதுரை (2010).

60. டான் அபாட்டியல்லோ & மற்றவர்கள், வெளியாக்கப்பட்ட மறைபொருள்"; The Comforter Publications கூனூர், நீலகிரி (2004).

61. நாமக்கல் கவிஞர்; ஆரியனாவது, திராவிடனாவது; விஜயபாரதம் பதிப்பகம், சென்னை (2012).

62. சிவசுப்பிரமணியன்.ஆ, கிறித்தவமும், சாதியும்; காலச்சுவடு பதிப்பகம், சென்னை (2011).

63. கிருஷ்ணப்ரேமி, அத்யாத்ம பாரதம்; ப்ரேமிகக்ரந்த சபா, பரனூர்.

64. பிரபாகரன், குமரிக்கண்டமா, சுமேரியமா, கிழக்கு பதிப்பகம் சென்னை (2012)

65. அறிஞர் அண்ணா, ஆரிய மாயை, திராவிடர் கழக வெளியீடு, சென்னை (2012).

* * *

ஆதாரக் குறிப்புகள்

குறிப்பு எண்	துணைநூற் பட்டியல் எண்	பக்கம்	விபரங்கள்
திறப்பின் வாசல்			
1	92	329–335	
	86	26, 57	
2	92	339	
	29	129	
பகுதி – 1			
1	59	215	
	88	11	
2	48	145	
3	64	153	
4	45	368	
	97	25	
5	40	522	
6	28	751	
7	100	330	இந்நூலகத்தில் 7 லட்சம் நூல்கள் இருந்தன.
	26	82	
8	88	11	
9	88	11	
10	65	98	
11	–	66, 67	Venkadachari, Sundararajan's book, "The Attacks on Vedas and Sanatana Dharma, RNR Printers, Chennai (2009)

12	28	33 (Para- 1)	As per the book, man suddenly appeared on earth, 6000 years ago.
	66	413	
13	60 – தமிழ்	47	
14	94	38	
பகுதி – 2			
1	19	101	
2	59 – தமிழ்	பின் அட்டை	
3	64 – தமிழ்	56	
4	112	100	
5	28	50	
6	19	85	
7	19	125	
8	112	129	
9	28	54, 55	
10	28	52, 53	
11	30	106–108	
12	51	184	
13	58 – தமிழ்	183	
14	20	91	
15	28	56	
16	20	107	
17	42	14	
18	28	128	கர்த்தரால் தனது விரலால் எழுதப்பட்டு மோசேக்கு வழங்கப்பட்ட 10 கட்டளைகள் அடங்கிய பலகைக்கல் தற்போது காணாமல் போய்விட்டது.

19	100	91	
20	42	30	
		பகுதி – 3	
1	104	94	இவ்வாறான கன்னி பிறப்புகள் பற்றி பாலஸ்தீனத்தில் பல கதைகள் முன்பே உலாவி வந்துள்ளன.
2	20	114, 115	
3	மத்தேயு	9:35 10:17	
4	15	2	
5	65	40	
6	65	44	
7	66	5, 93	
8	56	372	
9	42	43	
10	42	46	
	56	324	
11	65	40	
	100	299, 302, 303	
	56	375	
	65	122	
12	39	411	
	56	325	
	65	122	
13	65	15 – 19	
14	78	62	
	3	91	
	65	122	

15	65	123	
16	77	150, 166–175	கும்ரான் குகை எண்.4, சாசன எண்.542ல் எஸ்ஸின் கொள்கைகள் விவரிக்கப் பட்டுள்ளன. அதில் உண்மை, நேர்மை, நியாயம் அடிப்படையில் ஆப்பிரகாம், யாக்கோப்பு வழியில் நடந்திடுக என குறிப்பிடப் பட்டுள்ளது
17	32	92	
18	100	110	
19	100	328	
20	66	5	
21	65	53	
	100	37	
22	65	139	
23	100	244	
24	104	94	கூடுதல் விளக்கங்களுக்கு பார்க்கவும்
	20	93	
25	100	5	
	100	106	
26	43	32	
27	100	331	
28	65	20	
29	66	42	
29A	56	317	
30	36	375, 376	
31	92	257–265	
32	92	339	
	3	358	

33	11	231	
34	3	76	அக்காலத்தில் பாண்டிய அரசனின் மெய்காப்பாளராக கிரேக்க – ரோமானியர்கள், யவனர்கள் எனும் பெயரில் பணிபுரிந்துள்ளனர்.
35	11	231	அந்நாட்களில் ரோமானிய அரசர்களின் சமையல்காரராக இந்தியர்கள் பணிபுரிந்துள்ளனர்.
36	32	23	
37	26	136	
38	110	18	
39	100	189	
40	32	22, 23	
41	32	22, 23	
42	55 தமிழ்	4–8	
43	26	138	
44	26	140	
45	26	129–131	
46	33	18	1774–1824ல் ஜெர்மன் கன்னியாஸ்த்திரி Annie Catherine என்பவர் கண்ட கனவில் யேசுவின் உருவம் இவ்வாறு (வெள்ளைக் காரர் போல்) சித்தரிக்கப் பட்டுள்ளது. ஆனால் அவர் யூதர் என்பதால் பழுப்பு நிறத்தில், கருப்பு தலைமுடியுடன், மத்திய உயரத்தில், கருப்பு கண்களுடன் விளங்கியிருக்கக்கூடும்.
47	43	50	
	26	129	
48	43	50	கூடுதல் விளக்கங்களுக்கு பார்க்கவும்.

49	100	293	
50	28	745	
51	28	750	
52	28	745	
	100	188–293	
53	11	488	
	26	92, 93	
54	65	140, 141	
	78	57	
55	65	53	
56	100	73	
57	26	98	
58	26	92	
59	65	141	
	104	50	
60	66	58, 94	
61	65	53	எகிப்திலிருந்த ஞானமார்க்க மக்களையும், சர்ச்சையும் முதலாவதாக கிறித்துவ மயமாக்கியவர் எனும் பெருமை பெற்றவர் ஒரிகன்.
	26	94	
62	100	286	
63	26	95	
64	26	99	
65	56	368	
66	60	127	
67	65	130	
68	56	318	
69	28	754	

70	100	184	
71	42	200–208	
72	60 – தமிழ்	40, 41	இந்திய கிறித்துவமும் இக்கோட்பாட்டைத்தான் பிரபலபடுத்துகின்றது.
73	60 – தமிழ்	5 – 10	
74	23	4	
75	28	747, 748	அக்கீகரிக்கப்படாத சுவிஷேஷங்கள் பட்டியலை இதனில் காணலாம்.
76	32	207	
77	37	50	
78	66	68	
79	110	20	
80	32	28	
81	32	29	
82	15	2	
83	33	16	
84	32	89	
85	66	3–5	
86	32	233	
87	15	18, 19	
88	110	–	கூடுதல் விளக்கங்களுக்கு பார்க்கவும்
89	100	185	
90	56	366	
91	109	38–44	
	66	97	
92	26	88	

93	56	368	
94	39	16	
95	56	368	
96	56	367	
97	31 – தமிழ்	5, 6	
	பகுதி – 4		
1	26	134	
2	23	141	
3	65	46	
4	100	34	
5	60	63	
6	33 – தமிழ்	–	
7	60 – தமிழ்	54, 55	
8	60 – தமிழ்	37–41	
9	38 – தமிழ்	–	
10	60 – தமிழ்	3	
11	28	750	
12	56	317–322	பைபிள் முரண்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.
13	8	126–133	
14	110	9–12	
15	99	57	
16	28	778	
17	31	214–216	
18	30	13	
19	65	245–246	
20	26	323	
21	26	322–350	கூடுதல் விளக்கங்களுக்கு பார்க்கவும்

22	34	–	
23	100	184	
24	72	345	
25	66	312	
26	31	208	
27	66	312	
	31	–	
28	28	774–778	
29	28	768	புனிதர் பீட்டர் முதலாவது போப் என்பதை பல வரலாற்றாசிரியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.
30	28	778, 779	
31	39	60	
32	26	231	
33	26	232	
	39	74	
	28	774	
34	28	774	பத்தி 4
35	39	206	பத்தி 1
36	39	206	பத்தி 2
37	39	207	
38	28	795	
39	65	280	
40	28	787	பத்தி 1
41	65	281	
42	28	787	பத்தி 3
43	53	64	

பகுதி – 5

1	30	15	
2	63	21, 80	
3			en.wiipedia/Vasco-Da Gama
4	29	171	
	88	171	
4A	29	157, 172, 174	
	88	171	
5	88	173	
6	14	109	
	88	157	
7	14	96–106	
8	29	174	
9	30	79–85	
10	29	170	
11	88	159–166	இன்காஸ் கலாச்சாரம் பற்றி அறிய பார்க்கவும்
12	30	114	
13	30	31	
14	30	41, 42	
15	30	16–24	
16	76	–	கிறித்துவர்கள், செவ்விந்தியர்களை அழிக்க செய்த கொடூரங்களை இந்நூலில் காணலாம்.
17	72	126–129, 132	
18	69	77	
19	57 – தமிழ்	170, 171	

20	41	451	
	பகுதி – 6		
1	92	341, 342	
2	19	43	
3	–	–	ரிக்வேதம் 5–60–50
4	45	21	
5	94	135	மூக்கு விகித தத்துவத்திற்கு இந்திய கிறித்துவம் ஆதரவு வழங்கியுள்ளதை காணலாம்.
6	19	120–125	
7	51	36	
	80	14	
8	112	82	
9	29	128–138	
10	2	261	
	66	484	
11	93	101, 102	நானூறு வருடங்களுக்கு முன்புகூட, அயர்லாந்து மக்கள், தாங்கள் சிந்து சமவெளி பகுதியிலிருந்து ஆதியில் புலம் பெயர்ந்து வந்தவர்கள் என வலுவுடன் கூறினார்கள்.
12	19	79	
13	64 – தமிழ்	57	
14	88	102, 197	
	19	79	
15	3	6, 16	
16	88	124	
17	29	124	

18	93	–	1794 – 1892ல் வாழ்ந்த அயர்லாந்து கிறித்துவ அறிஞர் Eugene-o-Curry அவர்களின் உரைக் கோவைகளில் இக்கருத்து கூறப்பட்டுள்ளது.
	29	131	
19	19	85	
20	55 – தமிழ்	18	
21	–	–	மேலும் விபரங்களுக்கு Jean Markala - Rochester - USA எழுதியுள்ள "The Druids - Celtic Priests of Nature எனும் புத்தகம் பார்க்கவும்.
22	–	–	Winn, M.M. எழுதியுள்ள Heaven, Heroes and Happiness - The Indo European Roots of Western Ideology, University Press of America, Newyork - (1995) புத்தகத்தை பார்க்கவும்.
பகுதி – 7			
1	28	780	
	50	5–15	
2	50	5–7	
3	3	105	
4	28 – தமிழ்	98–101	இந்தியர்கள் ஏமாளியாய் இருந்துள்ளனர். வெளிநாட்டினரை வரவேற்று உபசரித்துள்ளனர்.
5	77	150	வெளிநாட்டுக்காரனுக்கோ அவனது பரிசு பொருளுக்கோ அடிமையாகாதே (உப்புக்கடல் சுருள் 4Q542) எனும் யூதர்கள் வசனத்துடன் முந்தைய வசனத்தை ஒப்பிடவும்.

6	5	4	
7	5	48	
8	97	26	ரிக்வேதம் கிமு 1200 வாக்கில் தோன்றியது என மாக்ஸ்முல்லரும், கி.மு.4500 வாக்கில் தோன்றியது என Harmann Jacob எனும் அறிஞரும் வேறுபாட்டுடன் கூறியுள்ளனர்.
9	5	48	
10	65	287	
11	14	159 – 161	
12	12	–	
	83	34	
13	83	277, 278	
14	83	114	
15	83	107	
16	106	197–202	
17	104	100	
18	36		கூடுதல் விபரங்களுக்கு இப்புத்தகங்களை பார்க்கவும்.
	21 – தமிழ்		
19	36	159	1873–ல் வெளிவந்த Edward Jewitt Robinson எழுதியுள்ள Tamil Wisdom, Tradition, Concerning Hindu Sages எனும் புத்தகத்திலுள்ள திருவள்ளுவர் படம் பூனூலுடனும் திருநீறுடனும் கையில் ஜெபமாலையுடனும் இருப்பது காணக்கிடக்கின்றது.
20	–	–	

21	94	70.73	தாமஸ் பற்றி தழுவப்பட்ட கதை, பரிசுத்த ஆவியால் எழுதப்படாத சுவிஷேஷத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளதை சர்வதேச கிறித்துவம் ஏற்றுக் கொண்டுள்ளது.
	86	10	
22	33 – தமிழ்	16	
23	33 – தமிழ்	16	
24	30 – தமிழ்	5	
25	36	122	
26	36	123	
27	36	59	
28	31 – தமிழ்		மேலும் விபரங்களுக்கு பார்க்கவும்
	பகுதி – 8		
1	Strong Religion Zeolous Media and Christian Fundamentalism		பிரதீப் நைனன் தாமஸ் எழுதியுள்ள இப்புத்தகத்தில் கர்த்தரை நம்புகிறவனை செழிப்பான் எனும் "Prosperity Theology Based on Faith" கண்டிக்கப்பட்டுள்ளது.
2	41	381	
3	41	357, 365, 378	
4	41	381	
5	46	522	தமிழும், சமஸ்கிருதமும் ஒரே மூலங்கள் கொண்டவையே.
6	94	161	
7	53 – தமிழ்		தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளாரைப் பற்றி மேலும் அறிய இப்புத்தகத்தை பார்க்கவும்.

8	66	409	
9	37	45	
10	42 – தமிழ்	–	
11	5 – தமிழ்	67	
12	64 – தமிழ்	18	
13	61 – தமிழ்	32	
14	61 – தமிழ்	32	
15	94	78	
16	101, 102	–	புரட்டஸ்டன்டுகள், கத்தோலிக்கர்களையும் அவர்களது காலிக் மொழியையும் தீண்டத்தகாதவை என எவ்வாறு நடத்தினார்கள் என்பதற்கு பார்க்கவும்.
17	2 – தமிழ்	44	
18	2 – தமிழ்	84	
19	2 – தமிழ்	83	
20	2 – தமிழ்	84	
21	–	–	தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் இஸ்லாமிய படையெடுப்பை எதிர்த்து நின்றனர். பார்க்கவும் பக்கம் 402, 403 Decolonising Hindu Mind, Rupa and Co., New Delhi (2001)
22	43	95	
பகுதி – 9			
1	64 – தமிழ்	153	
2	65 – தமிழ்	56	
3	41	211	
4	57	36	

பகுதி – 10			
1	65	44	
2	32	28	
3	32	29	
4	94	–	
5	58 – தமிழ்	104	
6	42	200–208	
7	36	143–150	
8	36	156	
9	94	80	
10	48 – தமிழ்	17–19	
11	81	95	
12	100	91	
வரலாற்றில் நெருடல்கள்			
1	20	111	
2	110	21	
எனது உரை			
1	உபாகமம்	6:10,11	
	யோசுவா	24:13	
2	16	275	

குறிப்புகள்

அகத்தியன் 165
அகஸ்தின் 181
அடிமை வியாபாரம் 198
அத்தினா 129
அந்தோணி 96
அருளப்பா பேராயர் 442, 443
அல்கோடிம் 35
அலிசோன் 189
அலெக்ஸாண்டர் 39, 62, 11, 292
அலெக்ஸாண்டிரியா 11, 94, 95
அஸ்டெக்ஸ் 231, 235
ஆகஸ்டஸ் 2, 98
ஆதாம் 17
ஆப்பிரகாம் 51, 52, 109
ஆர்டிமிஸ் 125
ஆரிய படையெடுப்பு 255, 312
ஆஸ்திரேலியா 243
ஆசிய படிப்பக நிறுவனம் 375
இந்து 46
இரண்டாவது புலப்பெயர்ச்சி 255, 289
இரவு விருந்து 92
இராமநாதபுரம் 415
இன்க்காஸ் 230, 234, 468
இஸ்ரேலியர்கள் 51
இஸ்ரேலியர்கள் அரசர்கள் 38, 58
இஸ்ரேலியர்கள் சந்ததி 54
இஸ்ரேலியர்கள் வம்சாவளி 55
இஸ்லாம் 1, 173, 176, 379
ஈசுபியஸ் 90
ஈஸ்ட்டர் தீவு 285
உமரிக்காடு 152, 330, 411
ஊழி காலங்கள் 12
எகிப்திய நாகரிகம் 37
எடிசா 90
எதிர் மறையான கருத்துகள் 168

எல்சடை 456

எலோகிம் 456

எஸ்ரா 61

எஸ்ஸின்ஸ் 75, 77, 114

ஏவான் 18

ஏரோது 80, 81

ஐபீரியன் 174, 182

ஓரிகன் 94

ஓஸிரிஸ் 79

கங்கை சமவெளி 274, 275

கணேஷ் ஐயர் 442

கர்ல்சாசன் 14

கலிகுலா 86

கலை காவிரி கல்லூரி 376

கன்ஸ்டன்டைன் 2, 89, 111, 123

காசிப்பழம் நாடார் 152, 330

கார்த்தேஜ் 139

கால்டுவெல் 257, 268, 320

காலிக் மொழி 324

கானான் 261

கிரிஸ்டோபர் கொலம்பஸ் 228

கிறித்துவம் 2, 50, 96

கும்மு ராபி 33

கேப்ரல் 226

கொடுக்கப்பட்ட சாபங்கள் 19

கோப்ரா 14

கோலினார் 396

கோவா 300

சத்திய வேதம் 112

சதுர்சேயர்கள் 74, 114

சட்டாம் பிள்ளை 332

சவுல் 58, 114

சாத்தான் 144, 145, 440

சார்லஸ் கிராண்ட் 337

சார்லஸ் பிலிப் பிரவுன் 334

சாலமன் 59

சிக்குரட் 32

சிந்துசமவெளி நாகரிகம் 25, 255, 272, 283, 289
சிரில் பிஷப் 127
சிலுவையின் மரணம் 156
சிலுவையேற்றம் 155
சின்னப்பா பேராயர் 445
சிவசக்திபாலன் 290, 364, 403
சிவப்பிந்தியர்கள் 239
சீகல் 394
சுமேரிய நாகரிகம் 31
செராபிஸ் 11
சைரஸ் 61
டம்டிவர்ரஸாஸ் 199
டயோனிஸஸ் 79
டாகர் 199
டாலெமி 84
டெக்கும்சே 239
டைபிரியஸ் 2
தப்பணா நம்பூதிரி 226, 227
தலித்துகள் 384
தாமஸின் வேதம் 110, 117
தாமஸ்—புனிதர் 344
தாயப்பன் 448
தாவீது 59
திராவிட இயக்கங்கள் 371
திராவிடர்கள் 255, 256, 271
திருச்சிலுவை யுத்தம் 177
துபாயிஸ் 307
தெய்வநாயகம் 444
தெய்வீக விசாரணை 192
தேவ கலா 376
தேவாசிர் லாரி 169
தொல்காப்பியம் 5, 365, 381
நரேந்திரமோடி 378
நவீன கிறித்துவம் 423
நாகாலாந்து 47
நித்திய நரகம் 451
நித்திய ஜீவன் 163

நியாய தீர்ப்பு 160
நீரோ 85, 96
நெடுஞ்சுவர் 41
நைசியா 131
நைல் 37
நோவா 21, 252, 386
பர்மோஸஸ் 204
பரிசுத்த வேதாகமம் 99, 109
பரிசுத்த ஆவி 424
பரிசேயர்கள் 74
பலிசெலுத்துதல் 146
பவிஷ்ய புராணம் 368
பவுல் 70, 114, 121, 186, 423, 433
பாரூர் 329
பாபிலோன் 22, 31, 39
பார்த்தலோமஸ் சிஜன்பக் 337
பாப்பிரஸ் 10
பா. ராகவன் 403
பிக்கட் 395
பிரளயம் 21, 251
பிராமணர்கள் 314
பிரான்ஸிஸ் ஓயிட் 336
பிரான்ஸிஸ் சேவியர் 184, 299, 314
பிரிஸ்டர் ஜான் 221
பிலாத்து 2, 62, 73
பிளிமத் குடும்பத்தினம் 166
பிளைனி 85
பூப்ளியஸ் 89
பெண்வேட்டை 186
பெர்டினான்டு 175
பைலோ 86
போப் அர்பன் 178
போப் ஆண்டவர் 99, 202
போப் கிரிகரி 177
போப் தியோபிலஸ் 11
போப்ஜயர் 312, 317
மக்தோனா மரியா 66, 100, 117, 118

மகாத்மா காந்தி 166
மஞ்சள் நதிதீர நாகரிகம் 41
மதாயி 227
மரணமுகாம் 127
மரோஜியா 205
மாக்ஸ்முல்லர் 309
மார்ட்டின் லூதர் 211
மாயன்கள் 230
மித்ரா 99
மிர் கப்பல் 227
மிலான் பிரகடனம் 125
முதல் புலப்பெயர்ச்சி 280
முப்பதாண்டு போர் 216
மெக்காலே 342
மெசியா 62, 66,
மெலுக்கா 278
மேரி 65, 79, 101
மேரியின் வேதம் 110
மோகன் சிலாசரஸ் 452
யுதேயா 62
யூதர்கள் 1, 51, 67, 215
யெகோவா 2, 455
யேசு 2, 65, 71, 65, 78, 83, 102
யேசு சபை 297
ராபர்ட் நொபிலி 304
ராஜசேகர் 391
ரிக் 13, 14
ரிஸ்லே 263
ரெனான் 395
ரோம் 2, 89, 95, 97
லிசினியஸ் 125
லூசிபர் 144
லூசியஸ சினேகா 87
லெவியர்கள் 282
வல்னி 86
வாஸ்கோடகாமா 223
விசுவாசம் 106, 136, 440

வில்லியம் ஜோன்ஸ் 262
விவேகானந்தர் 466
வீமண்ணா 367
வீரமாமுனிவர் 315
வெறுப்பு ஆவணங்கள் 377
வேதபுரி ஈஸ்வரன் கோவில் 350
வைஷ்ணவச் சுடராழி ஜோசப் 408
ஸ்ட்ரோபோ 7
ஸெல்ஸஸ் 157
ஜப்பித் இனம் 260
ஜான் கால்வின் 321
ஜியாலட்ஸ் 74, 77, 114
ஜீடாஸின் உபதேசம் 171
ஜீயஸ் 79
ஜூலியான் 126
ஜெருசலேம் 1, 33, 62, 66, 77, 183
ஜெருசலேம் குழு 117, 121, 432
ஜேம்ஸ் 78, 82
ஜேம்ஸ்மில் 6
ஜைனுல் ஆபிதீன் 70
ஜோன் ஆப் ஆர்க் 189
ஜோசப் 65
ஜோவான் 203
ஜோஸ்பியஸ் 79, 86
ஹால்டேன் 15
ஹிப்போ 139
ஹிப்டிஸ் 34
ஹிபாட்டியா 127
ஹெர்டர் 394
ஹெரார்டு 65
ஹெலன் சமயம் 87, 131
ஹென்றி ஹிராஸ் 343
ஹேம் இனம் 260



கிறித்துவ வரலாற்றில்

மறைக்கப்பட்டனவும் மாற்றப்பட்டனவும்...

உலகளாவிய தாக்கமும்

-உமரி காசிவேலு

யேசு கிறித்து ஒரே நேரத்தில் கடவுளாகவும், மனித குமாரனாகவும், இறைவனின் மகனாகவும் விளங்கினார். பரிசுத்த ஆவியால் பிறந்த இம்மகான் தெரிந்தே, வேண்டுமென்றே இறைவனின் திட்டப்படி சிலுவையில் பலியிடப்பட்டார். தடை செய்யப்பட்ட ஒரு பழத்தை ஆசையுடன், பெண் உண்டதற்காக உலக மக்கள் அனைவருக்கும் சாபம் ஏற்பட்டதாகவும், அதனை நீக்கிட இவ்வுயிர்ப்பலி நிகழ்த்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. தற்போது இவை பெரும் பொருள் செலவினாலும், முயற்சியினாலும், விற்பனைக்கான வணிகப்பொருள் போல் பிரபலப்படுத்தப்படுகின்றன. புதிய புதிய நாடுகளைக் கைவசப்படுத்துவதற்கும், பெரும் வருமானத்தைக் கைகொள்ளவும் இவை செய்யப்படுகின்றன. மக்களைத் தங்கள் பாரம்பரியத்தை விட்டு விலகி இச்சமயத்தை ஏற்றுக்கொள்ள உற்சாகப்படுத்தவும், அச்செயல்களை நியாயப்படுத்துவதற்கும் இக்கதைகள் 'நற்செய்திகள்' எனும் போர்வையில் மக்கள் முன் வைக்கப்படுகின்றன. ஆனால் இச்சமயம் கடந்து வந்துள்ள வரலாற்றுப் பாதை பெரும் முரண்பாடுகள் மற்றும் கொடூரங்கள் நிறைந்தனவாகவும் இருந்து வந்துள்ளன / இருந்து வருகின்றன.

சத்தியமானதென்று பேசியும், எழுதியும், ஆனால் அசத்தியங்களே நிறைந்த வரலாற்றைப் பற்றி பேரறிஞர்கள் எழுதியுள்ள நூல்களில் இருந்து சான்றுகள் திரட்டி இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. யேசுவின் வரலாறு, சமயம் ஆகியவற்றின் மீது மறுசிந்தனையையும், மறுமதிப்பீட்டையும் செய்திடத் தூண்டுவதாக இந்நூல் விளங்குகின்றது.

ISBN:978-81-930624-1-8
9 788193 062418

VARSHAN PRASHURAM
T. Nagar, Chennai-17